# டாக்டர் ச.வே.சுப்பிரமணியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

159

UGC. 159

# அடியார்க்கு நல்லார் உரைத்திறன்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
அடையாறு, சென்னை-600 020.

Aṭiyārkku Nallār Uraittiṟaṉ

Dr. S. V. SUBRAMANIAN M.A., Ph.D.
Director and chief professor
I. I. T. S, MADRAS-20.

© International Institute of Tamil Studies
Publication No. 8
First Published in March 1976.

Copies can be had from the Institute

Price :
Rs. 12-00 $ - 3
Outside India
US 3 or Rs. 24-00

Printed at Novel Art Printers, Madras-600 014.

திரனிறை 76. பரியாயம் 77. சிலேடை 78. நல்லாரின் இலக்கண உரைநடை 79. வழக்கு 81. கால வழக்கு 84. இலக்கண மேற்கோள்கள் அட்டவணை 86.

3. இசைப் புலமை 97

இசைக்குப் பிறப்பிடம் 98. ஆளத்தி 98. பண் 100. செம்பாலையுட் பிறக்கும் பண் 100. நோதிறம் 101. ஆசான் என்னும் பண்ணியல் 101. பண்ணீர்மை 101. ஆதியிசை 101. வட்டப்பாலை 102. பன்னிரு பாலை பிறக்குமாறு 104. இசைப் பாடல்கள் 105. இசைப்பாவகை 106. தேவபாணி 107. இசைக்கருவிகள் 109. யாழ் 109. சகோடயாழ் 111. செங்கோட்டியாழ் 111. யாழ் வாசிக்கும் முறை 112. இருக்கை வகை 112. யாழைக் கைக்கொளல் 113. பகை நரம்பு புகாமல் நீக்கல் 113. நரம்புகளைக் கட்டுதல் 114. குழல் 115. தோற்கருவிகள் 117.

4. கூத்துக்கலைப் புலமை 120

இருவகைக் கூத்தாவன 122. சாந்திக் கூத்து 122. அவிநயக் கூத்து 123. நாடகம் 123. வசைக் கூத்து 124. விநோதக் கூத்து 124. துணங்கைக் கூத்து 125. தேசிக் கூத்து 125. மார்க்கக் கூத்து 126. பதினோராடல் 126. வரிக் கூத்து 127. பல்வகைக் கூத்து 129. இருவகைக் கூத்தின் இலக்கணம் 131. அறுவகைநிலை 132. ஐவகைப் பாதம்132. அங்கக்கிரியை பதினாறு132. வருத்தனை நான்கு132. நிருத்தக்கை முப்பது 132. விலக்குறுப்பு 132. பொருள் 133. யோனி 134. விருத்தி 134. சந்தி 134. சுவை 135. சாதி 137. குறிப்பு 137. சத்துவம் 138. அவிநயம் 138. சொல் 143. சொல்வகை144. வண்ணம்144. வரி144. சேதம்144. உரு144. ஆடல் 145. பாணி 146. தூக்கு 147. அவிநயம் செய்யும் முறை 147. கை147. பிண்டி அல்லது இணையாவினைக்கை 149. பிணையல் 158. கூத்து நிகழும் முறை 162. ஆடரங்கம் 162. இடம் 162. அரங்கம் அளக்கும் கோல் 164. அரங்க அளவு 164. அரங்க அமைப்பு 164. விதானம் 165. விளக்கு 165. திரை 165. தலைக்கோல் 166. அரங்கிற் புகுந்து ஆடுகின்ற வியல்பு 167.

5. பிறதுறைப் புலமை 169

காப்பியக் கொள்கை 169. ஐந்திணை 172. உடற் கூற்றமைப்பு 177. பழங்கதை 182. பழந்தமிழகமும் முச்சங்க

# பொருளடக்கம்


முன்னுரை

FOREWORD i

அடியார்க்கு நல்லார் xiii

சுருக்க விளக்கம் xxix

1. இலக்கியப் புலமை 1

சங்க இலக்கியம் 2. காப்பியங்கள் 4. பெருங்கதை 5. மணிமேகலை 6. சூளாமணி 7. வளையாபதி 7. சீவகசிந்தாமணி 8. பதினெண் கீழ்க்கணக்கு நூற்கள் 9. சிற்றிலக்கியங்கள் 10. பஞ்சதந்திரம் 10. இலக்கிய மேற்கோள்கள் அட்டவணை 12.

2. இலக்கணப் புலமை 48

புணர்ச்சி 49. பெயர் 53. பெயர்ச்சொல் 54. பெயர்த்திரிசொல் 54. தொழிற்பெயர் 54. இருபெயரொட்டுப்பெயர் 55. ஆகுபெயர் 55. வினை 56. இடை 58. அசைநிலை 57. சாரியை 58. இடைச்சொல் 59. உரிச்சொல் 64. திணை, பால், இடம் 64. தொகை 65. விளிவேற்றுமை 67. வியங்கோள் 68. எச்சம் 68. மயக்கம் 69. விகாரம் 70. மரூஉ 71. இடக்கர் 71. ஒப்பில்போலி 71. அருத்தாபத்தி 72. மெய்ப்பாடு 73. அணி 74. உவமை 74. உருவகம் 75.

# முன்னுரை

உரையாசிரியர்களின் வாயிலாகத் தமிழ் மக்களின் இலக்கியம், கலை, மரபு, பண்பாடு இவைகளைப் பற்றி நம்மால் உணர இயலு கின்றது. இறையனார் களவியல் உரையால், முச்சங்கங்களின் வரலாறு பற்றிய கற்பனை கலந்த சில செய்திகள் கிடைக்கின்றன. தமிழ் இலக்கியங்களை முழுநிலையில் புரிந்து கொள்வதற்கு உரைகள் மிகவும் பயன்படுகின்றன. தோண்டத் தோண்டச் சுரங்கம் போன்று பொருள் ஆழமும் கருத்து வளமும் உடைய நூல்களுக்குப் பல உரைகள் தோன்றுகின்றன. அதற்குத் திருக்குறள் ஒரு சான்று.

சிலம்பாகிய முத்தமிழ்க் காப்பியத்திற்கு உரையெழுதுதல் எளிதன்று. முத்தமிழ் வித்தகர், தமிழ்க் களஞ்சியம் அடியார்க்கு நல்லார் போன்றவரால் தான் எழுத இயலும். அவ்வுரையை நுணுகிப் பல கோணங்களில் பார்த்து, அதனைப் பிறரும் அறிய இந்நூல் துணையாக அமையும். ஒரு தனிப்பட்ட உரையாசிரியர் பற்றி இத்தனை பக்கங்களில் ஒரு நூல் வந்ததில்லை. இந்நூலே அவ்வகையில் முதல் நூலாக அமைகின்றது. அடியார்க்கு நல் லார் உரைத்திறன் பற்றி இன்னொரு தொகுதியும் வெளியிடலாம்; வாய்ப்புக் கிடைத்தால் இரண்டாம் தொகுதியும் வெளிவரும். இந் நூல் அவ்வுரையைத் தொகை வகை மட்டுமே செய்து தந்துள்ளது.

இந்நூல் உருவாவதற்குத் துணையாயமைந்த என் மாணுக்கர் திருமதி. பகவதி, திரு. காசிராஜன் இவர்கட்கு என் மனம் நிறைந்த நன்றி.

இந்நூலின் அச்சுப்படிவங்களைப் பார்த்துத் தந்த மாணுக்கர் திரு. காந்திக்கு என் ஆசிகள்.

நிறுவனத்தின் எல்லா வெளியீடுகளுக்கும், பல நிலைகளில் ஊன்று கோலாய் நின்று துணைபுரிகின்ற கண்காணிப்பாளர் திரு. தென்னவன் அவர்கள் எல்லா நலமும் பெறுவாராக.

ச. வே. சு.

வரலாறும் 190. அணிகலவகை 195. வயிரம் 200. மரகதம் 210. மாணிக்கம் 202. நீலமணி 203. முத்து 204. கொடிப் பவளம் 204. கனுநூல் 204. களவு நூல் 206. சமயமும் தத்துவமும் 206. தொழில் வகை 210. பிற செய்திகள் 211.

6. உரைநயம் 213

உரைவகை 214. கவிதை நடை 223. திறனாய்வு நெஞ்சம் 225. கதை நிகழ்ச்சியும் கட்டுக் கோப்பும் 226. காலவுணர்வு 229. பாத்திரப் பண்பு 233. கதையும் பாடல் யாப்பும் 238. வாசகர் மனநிலை 243. முன்பின் நோக்கி உரை வகுத்தல் 246. காரண காரிய முடிபு கூறல் 249. முடிப்புரை 254. சொல் வருவித்துப் பொருள் கோடல் 255. சொற்பொருள் 258. பல் பொருள் 318. பாடபேதம் 326.

7. அடியார்க்கு நல்லாரும் அரும்பதவுரையாரும் 337

உரைவேறுபாடு 345. பாடபேதம் 355. அரும்பத உரைச் சிறப்பு 364. பின்னிணைப்பு - I-371. பின்னிணைப்பு - II-374. பின்னிணைப்பு - III-385.

அடியார்க்கு நல்லார் உரையகராதி 395

பயன்பட்ட நூற்கள் 493

பிழைதிருத்தம் 494

# Foreword

O. Cilappatikāram is the first and the best epic in Tamil This is the only original epic that deals with the three aspects of Tamil, viz., Iyal, Icai and Kūttu. The imagery, diction and rhyme are unique. The melodious folk songs of Tamil Nāṭu which are absent in the other Tamil epics, find a remarkable place in Cilampu (Cilappatikāram). The combination of various metres, songs and characters in beautiful sweet style captivates the heart and soul of every reader. It became the source of inspiration for the creation and development of many later literatures. It has all the epic qualities appreciated by the Eastern as well as the Western critics.[1] In short it is a store house of information on art, music, dance and other cultural aspects of the ancient Tamils.

O.1. Aṭiyārkkunallār is one of the commentators of Cilappatikāram. Before Nallār, one anonymous commentator known by the name Arumpatavuraiyāciriyar[2], has written word meanings and some explanations to difficult passages.

1.1. Commentators are of different kinds.[3] Some like Cēṉāvaraiyar have written commentary only for grammatical works. Very few have written for both grammar and literature like Naccināṟkkiṉiyar. Few have done it only for literature. Among them, Nallār has to be placed in the first rank, because of his encyclopaedic knowledge on a wide variety of subjects like grammar, local usage of place and time, dance, music, drama and dream theories of the ancient Tamils. Nallār's commentary on Araṅkēṟṟu kātai is a treasure house of information, which is of immense value not only to the students of Tamil, but also to musicians, dancers, dramatists, directors, instrumentalists, instrument makers, theatre constructors, decor-

ators, etc. He is a critic as well as a physiologist and psycho-analyst. Each and every line of his commentary shows the highest intellectual attainments of Nallār.

1.2. We are not fortunate enough to have the commentary of Nallār for the whole of Cilampu, though it seems that he has thought of writing it for the whole.[4] At present, his comme-ntary is available only upto to the patikam, Uraiperu kaṭṭurai and the first 19 cantos except kāṉalvari.

2.0. As an erudite scholar, he quotes many passages from various literatures. His quotations are very clear in the sense that he gives the names of the books from which he quotes. But this is not the practice of most of the commentators who simply quote passages without proper reference to the works or their authors.[5]

2.1. Regarding Eṭṭuttokai he cites references from Kuṟun-tokai (one), Patiṟṟuppattu patikam (one), Akappāṭṭu, i.e., Akanāṉūṟu (eleven) and Puṟam or Puṟappāṭṭu (twenty).

2.2. He refers Pattuppāṭṭu as 'Pāṭṭu', and gives passages from Tirumurukāṟṟuppaṭai (one), Porunarāṟṟuppaṭai (three), Perumpāṇāṟṟuppaṭai (one), Mullaippāṭṭu (one), Maturaikkāñci (eight), Neṭunalvāṭai (three), Paṭṭiṉappālai (three) and Malai-paṭukaṭām (two).

2.3. Of Patiṉeṇkīlkkaṇakku[6], Nālaṭiyār (four), Nāṉma-ṇikkaṭikai (one), Kuṟaḷ (sixteen), Tirikaṭukam (two) and Paḷamoḷi (one) are referred to.

2.4. From among the epics, he gives twelve references from Maṇimēkalai, two from Cūḷāmaṇi, five from Vaḷaiyāpati, eight from Peruṅkatai and forty-six from Cintāmaṇi.

2.5. Regarding other literatures, he refers to Muttoḷḷā-yiram (one), Tirucciṟṟampalak kōvaiyār (three) and a poem from Uttarakāṇṭam.

2.6. The above mentioned list of works, which Nallār quotes helps us to place him after the twelfth century, since all

the works referred belong to a period before the 12th century A. D.

2.7. He quotes these literatures and their passages in suitable places for the clear understanding of the epic.

2.7.1. When he explains the passage,

'mācaṟu poṉṉē valampuri muttē
kācaṟu viraiyē karumpē tēṉē' (2:73—74),

he rightly quotes the following Tirukkuṟaḷ :

'kaṇṭu kēṭṭu uṇṭu uyirttu uṟṟaṟiyum aimpulaṉum
oṇṭoṭi kaṇṇē uḷa' (1101)

2.7.2. The term 'ārañar' (P. 42), meaning great distress, is taken to denote the distress caused by widowhood and is explained with a poem from Uttarakāṇṭam. The cited verse reveals that widowhood is the most painful of all loses.

3.0. Nallār mentions Tolkāppiyar as 'āciriyar'[7] which shows his high regard and respect for that famous grammarian. Sixty-eight sutras from Tolkāppiyam are referred to. As examples, he points out compounds also. Vēṟṟumaittokai (eight). Viṉaittokai (twelve), Paṇputtokai (ten), Uvamaittokai (three), Ummaittokai (fourteen) and Aṉmoḻittokai are given. Ākupeyar is pointed out in twenty places. Following the tradition, vēḷ, mēṉi and mēḷi are called ākupeyar. The two words 'kuṟuṅkaṇ' and 'alarvēmpaṉ' are also labelled as ākupeyar. Even phrases like 'koṉṟaiyañcaṭaimuṭi' have been given as ākupeyar. According to him, 'aruntiṟal' is 'aṉmoḻittokai ākupeyar'. He analyses the changes in twenty-one places as 'vikāram' and in two contexts as 'kīlamayakkam'. He points out iṭaiccol (non-root morphemes or clitics) and elucidates its function in seventy-eight places. Case signs and their changes and inflextional increments are also given.

4.0. At the end of every kātai, he explains the particular type of the metre in which that canto is composed, such as mayaṅkicaik koccakak kalippā, nilaimaṇṭila āciriyappā, pakṟāḷiçaik koççakak kalippā, etc.

4.1. He mentions about ticaiccol also (8:8—13).
tekkaṇam — vaṭacoṟṟiripu (14:81).

4.2. He accepts the five fold classification of land, viz., mullai, kuṟiñci, marutam, neytal and pālai and explains them with examples from the epic itself.

4.3. His ideas on poetics (aṇiyilakkaṇam) are also given in five places

1:1 - 3 Itu paṇpum payaṉum kūṭiya uvamam.
1:21—24 Iṭai nilai viḷakku.

Here, we have to appreciate his interest in changing the name of the system 'mattimatīpam' into the pure Tamil form, viz., 'Iṭainilai viḷakku'.

2:26—27 Itu utāram.
14:12 Pariyāya alaṅkāram.
16:42 Kumari vāḷai — Itu peyariṉ vanta Camāti eṉṉum alaṅkāram.

4.4. Nallār gives some verses and sutras from Puṟapporuḷ-veṇpā mālai and some passages from Tivākaram nikaṇṭu.

4.5. Facts regarding meyppāṭu are also given in certain places (18:20—23; 19:39—42).

5.0. Nallār has a good knowledge of the local usages peculiar to regions other than and far from his own. He has also recorded the rare usages of his period.

He gives three types of usages.

5.1. Dialectal usage is one among them. He explains the word 'paṉittu' as the dialectal usage of Kuṭanāṭu. Likewise, the words 'teḷittal', 'ciṟumiyar' and 'putaittal' have been denoted as the usage of the 'country of hills' (Malai nāṭu).

5.2. Usage of time (kāla vaḷakku) is another kind. Words send to become obsolete when they displease the speakers and

hearers. Before some fifty years, the vocative 'natā' was used in dramas to call a husband, and now it is replaced by 'attāṉ'. In the same manner, 'pālakaṉ', meaning boy, has been denoted as the 'usage of time', as it might have become obsolete in Nallār's time. Similarly 'tuṟaipaṭital' has been used in that period to mean bathing. and 'naṅkai' to mean the wife of one's son, i.e. daughter-in-law (16:9–14). The explanation of the phrase, 'pacanteṉṟār' is also interesting in the same manner. The evening sun (light) is described as 'pacuveyil' in an earlier period and as 'kāṭukiḷāḷveyil' in Nallār's times.

5.3. Usages like proverbs and popular sayings are handled by Nallār to illustrate certain oft spoken words and phrases found in Cilampu.

5.3.1. Explaining 'mutirviṉai', he states this. 'Iṉi mutirviṉaiyāl ivai muṭintaveṉṉa vaḷakkāṟākkiṉum amaiyum.'

5.3.2. Viḷaiyāṭṭiṉuḷ (8 : 14) is explained with the following statement. 'Viḷaiyāṭṭup pūcal viṉai yāyiṟṟu eṉṉum valakkup paṟṟi.'

5 3 3. Orumakaṉ āṇai is illustrated thus. 'Tiruvāṇaikku mēlāya āṇai illai yeṉpatu vaḷakku.'

5.3.4. When explaining 'ilampāṭu naṇuttaru meṉakku' (9 : 71), he notes it as an idiomatic usage. 'Iṉṟu nāṇuttaru meṉṟatu keṭṭāl mati tōṉṟum eṉṉum vaḷakku.'

5.3.5. When Kavunti disclosed that she was also bound to the city of Maturai, Kōvalaṉ said,

Aṭikaḷ nīrē aruḷutir āyiṉ
Toṭivaḷait tōḷi tuyar tīrttēṉ (10:62).

Nallār explains this satement that 'nīyirē itu ceyvīrāyiṉ' is a usage.

5.3.6. Now–a—days we often speak as, 'I've said; do as you please' (Nāṉ colliviṭṭēṉ; uṉ viruppam). Nallār gives this as 'coṉṉōm coṉṉōm eṉṉum vaḷakku', while he explains the

words of the Goldsmith, 'maruntir paṭṭirāyin yāvarum perumpeyar maṉṉaṉiṟ perunavaippaṭṭir' (16:170—171), which tell about the medicinal aspects of the thief.

5.3.7. 'Vaḷarkkum eṉṉum vaḷakku' is another illustration (19:54—56).

5.3.8. 'Paṇiviṭai eṉṉum vaḷakkumatu' is yet another' (8:13).

6.0. Though unities of time, place and action are not essential for an epic as they are for the dramas, Nallār tries to find the three in Cilampu. Intira viḷā began on Cittirai month, Cittirai day which was a full moon day and was celebrated for twenty - eight days. The festival came to a close in the month of Vaikāci. Immediately Kōvalaṉ along with Kaṇṇaki started to Maturai. Maturai was burnt on Friday, when the waning moon was in its eighth phase in the month of Āṭi. Here Nallār tries to co - relate the time, place and action.

'அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய திங்கட் செல்வன்' (8:58) என்ற பகுதிக்குரிய விளக்கம்: ஆகவே நாடு காண் காதையுள் வைகறை யாமத்து...நெடுங்கடை கழிந்து (10:1—8) ஆடித் திங்கள் பேரிருட் பக்கத்து அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண (23:133—135) என்பதனோடும் பிறவற்றோடும் மாறுகொள்ளு மாதலான் அவ்வாறு கூறுதல் பொருந்தாதென உணர்க. இனி இந்திர விழாவின் முதலும் முடிவும் கடலாட்டும் புலவியும் புறப்பாடும் வழிச் செலவும் பொறையுயிர்த் திருப்பும் நிறைபதிப் புகலும் தீதுறு நாளும் ஊர்தீப்பாடும் முதன் நடு இறுதியாகக் கட்டுரைக் காதையுள் விரியக் கூறுவாம். அதனுட் கண்டு கொள்க (10:1-3; 13:36; 13:52). பாசிலை என்றார் இளவேனிற்கட் செந்தளி ராயது முதுவேனிற்கு முற்றிப் பாசிலை யாயிற் றென்பது தோன்ற (14:70; 14:76—82; 14:215).

7.0. Nallār explains in his own way about muttamil in the appropriate places. As he traces the history of 'māyōṉpāṇi' (6:35), he elucidates his ideas of muttamil also.

அது முத்தமிழ்க்கும் பொது. அஃது இயற்றமிழில் வருங்கால் கொச்சக ஒருபோகாய் வரும். இனி, இசைத்தமிழில் வருங்கால், முகநிலைக் கொச்சகம் முரி என்ப ஒருசா ராசிரியர். அன்றி

இசைப்பா இசையளவுபா என்னும் இரு பகுதியுள் இஃது இசைப் பாவின் பகுதி என்ப. அது பத்துவகைப்படும் ..என்றார் இசை நுணுக்க முடைய சிகண்டியார் – இன்னும் சுத்தம் சாளகம் தமிழென்னும் சாதியோசைகள் மூன்றினுடனும் கிரியைகளுடனும் பொருந்தும் இசைப் பாக்கள் ஒன்பது வகை என்ப...என்றார் பஞ்ச மரபுடைய அறிவனார் என்னும் ஆசிரியர் என்க. இனி, நாடகத் தமிழில் தேவபாணி வருங்கால் பெருந்தேவபாணி பல தேவரையும் சிறுதேவபாணி வருணப் பூதரையும் மூவடி முக்கால் வெண்பாவால் துதிக்கின்றுழி, அவரணியும் தாரும் ஆடையும் நிறனும் கொடியும் துதித்து அவராற் பெற வேண்டுவனவும் துதிக்கப்பெறும்...என்றார் மதிவாணனாரென்க.

From this piece of commentary we also come to know of two works on icaittamil. In the same way fruitful information regarding many useful books, which are now lost, are known from the whole commentary.

7.1. When he explains about col in kūttu, he refers to three kinds of words, viz,, uṭcol, puṟaccol and ākāyac col. From this we understand that peyar, viṉai, iṭai, uri and iyaṟcol, tiricol, ticaiccol and vaṭacol are of iyal tamil.

8.0. As a physiologist also, Nallār wins the minds of the readers.

8.1. When explaining miṭaṟu (throat), he refers to the body as a lute, cārīra viṇai. He explains the composition of the body and its qualities and how and where sound is produced. He speaks of the ten vital airs of the body, which move inside it as well as give it its due motion. Man cannot exist without air. Now-a-days, we have x-ray plants to examine our flesh, bones, intestines, etc., and implements to test our blood and other things. But it seems, that in the Modern Scientific age, 'the science of the vital air' has not developed as it had been in ancient days.

8.2. Nallār gives a very vivid picture of the hand gestures, poses, dances, etc., when he deals with the dance Master, āṭalāciriyaṉ.

9.0. In the explanations about the lute (yāl) and the flute (kulal) he speaks of the wood which can be selected for the

purpose, the process of making it and the ways of handling it. He gives similar explanations to different kinds of musical instruments, viz., stringed, hollowed or leathered ones with their available varieties. He furnishes a fund of information with minute details on their manufacture and process.

10.0. Aṭiyārkkunallār's profound knowledge on many other spheres is also revealed in the commentary.

10.1. His account of the construction of a dance theatre reveals his thorough knowledge of the histrionic. The preliminaries of the construction of the dance theatre outlined by him are the selection of a good site, soil test, etc. The breadth and height of the theatre, lighting arrangements and the screen movements are also explained by him.

10.2. In this context, his explanation of the measuring rod 'kōl' is worth mentioning. The length of the 'kōl is said to be of 'twenty-four thumb measures' (Peruviral aḷavu). Here, the thumb-measure may seem some what arbitrary. But it was carefully standardised in olden days. The procedure to decide the standard measure is also given by Nallār. It is quite interesting. 'Eight aṇu (atom) make one tērttukaḷ (dust). Eight such tērttukaḷ form one immi. Eight immi join to make an eḷḷu. Eight such eḷḷu come together to form a nellu. And eight nellu make one peruviral'.

10.3. He mentions some of the ancient Tamil treatises on Dance, Drama and Music, which were neither available to him nor to us.

10.4. He had, it seems thorough knowledge in identifying the best gold and the nine gems. They have been elaborately discussed in his commentary to Ūrkāṇkātai.

11.0. Freud found two ways of interpreting dreams (Interpretation of Dreams, pp. 129-130). They are (1) The symbolic and (2) The decoding methods. In the symbolic method, the content of the whole dream has to be replaced by another content which is intelligible and in certain respects

analogous to the original one. This method can explain the dream of Vicaiyai in Cīvaka Cintāmaṇi. The decoding method treats dreams, as a kind of cryptography in which a sign can be translated into another sign having a known meaning, in accordance with the fixed key.

11.1. Dreams play a good part in Cilampu. There are altogether three dreams. The second one is Kōvalaṉ's. He dreams of riding on a horned animal (kōṭṭumā). Horned animal may mean an elephant, a pig, a buffalo or any other animal with lengthy teeth or horns. In explaining the 'horned animal', Nallār follows the decoding method. He interprets the horned animal as buffalo, as it suits the circumstances. If a man dreams of riding on an elephant, he achieves good things in his life. And if he dreams of riding a pig, that will cause him some suffering through the king; And if he dreams of riding on a buffalo, it denotes his death, because, Yama, the God of death has buffalo as his vehicle. In Kōvalaṉ's dream, the horned animal may be interpreted either as buffalo or pig. Nallār prefers the buffalo. In support of his interpretation, he quotes three stanzas from the Kaṉānūl, a book on dreams and their interpretations. It can be used as a key-book for interpreting any dream.

12.0. The essential duty of a literary critic is valuation (Cassell's Encyclopaedia of Literature, p. 124).

12.1. Nallār rightly considers Cilampu as an epic. This opinion is confirmed in different parts of the commentary.

12.1.1. 'Ākavē ik kāppiyattiṟkum tōl eṉpatu oru collalaṅkāramākāvē yuṇarka...' Uraippāyiram.

12.1.2. 'In nāṭakak kāppiyattiṉuḷ...' Uraippāyiram.

12.1.3. 'Ivaṟṟāṟ colliyatu avippali eṉṉum puṟapporuṭ pakutiyum kāppiyattukku aṅkamāṉa navaccuvaiyuḷ vīraccuvai avinayamu meṉka ..' 5:76-88.

12.2. He interprets certain texts in two or three ways; It increases the beauty of the poem.

'Iṭṭut talai eṇṇum eyiṉar allatu
Cuṭṭut talai pōkāt tolkuṭi......' (12:(1) 20–21).

This passage is explained in three ways.

'Tām cuṭṭiya pakaivar talaiyai tāmē aṟuttiṭṭu eṇṇuva tallatu pakaivar cuṭṭi eṇṇutal avariṭattu muṭivu pōkāmaikkuk kāraṇamākiya eyiṉar tolkuṭi'.

'Talaikaḷ arintu vaikka vaikkap piṟar eṇṇappaṭuvatallatu, imattiṟ cuṭappaṭṭu avam pōkāk kuṭi.'

'Aracaṉ cuṭṭiya māṟṟaracar talaiyaip piṟariṭattup pōkaviṭākkuṭi.'

13.0. Aṭiyārkku nallār is a good reader of characters.

13.1. He is undoubtedly right when he comments that Kavunti cannot predict the future but only curse bad people (10:55).

13.2. He derives that Poṟkollaṉ is a thief from his own words. When explaining the phrase, 'kaṇṭaṉaṉ piṟaṉōr kaḷvaṉ kaiyeṉa' (Patikam—26), he gives the following interpretation—Being himself the thief, the Goldsmith says that he found the anklet with 'another thief.'

14.0. Textual criticism is an important aspect in the study of Literature. Aṭiyārkkunallār excels in this aspect also.

14.1. Cilappatikāram was first published in the year 1872. It was in palmyrah leaf for so many years. Different copies of these palmyrah leaves give various readings to certain portions of the text. The exact text is fixed by comparing various manuscripts. Nallār was also aware of the variations in the texts found in his time. He points them out in more than thirty seven places.[8]

14.1.1. Mācāttuvāṉ, the father of Kōvalaṉ gives generously to the needy and poor. The line which conveys this, 'varuniti piṟarkkārttum mācāttuvāṉ' has textual variations. Ṇallār's commentary helps us in this. Piṟarkku means those who are not wealthy. It may include the unwealthy and those

who have done good deeds. 'Palarkku' is another reading. It means, many who do not have anything.

14.1.2. In another context, Nallār points out the better text. In 'Teyva mālvarai tirumuṉi aruḷa' (3:1) he thinks that 'Aruḷal' will be better.

14.1.3. In the same way. 'Tēcikam eṉṟivai āciṉṟu ṇarntu' is considered better than 'Tēcikam eṉṟivai āci ṉuṇarntu' (3:47).

14.1.4. 'Āṟṟā vuḷḷa vāḷkkaiyi rātaliṉ' is considered. better than 'Māṟṟā vuḷḷa vāḷkkai yeṉātaliṉ' (16:80) by Nallār.

Nallār's commentary is a store house of knowledge in all the fields of Tamil Studies. Among the commentators, to my opinion, he stands first. He is the only person who is competent enough in writing a commentary to the muttamiḻk kāppiyam, Cilappatikāram. This is the only epic that reflects wholly the culture of the Tamils. In a similar manner, Nallār's commentary to it goes in accordance with the author in all respects, portraying and clarifying the various facts.

## FOOT NOTES

1. The structure of epic is often like a great arch through which on one side the past may be seen, on the other the future-Cassell's Encyclopaedia of Literature-Page-197.
2. 5:157-160. Eṇpē rāyam—Iṉi cāntu pū......avaik kaḷattār aintu eṉak kāṭṭuvār Arumpatā Uraiyāciriyar.
3. Uraiyāciriyarkaḷ — Vittuvāṉ Mu. Vai. Aravintaṉ — Maṇivācakar nūlakam, Citamparam.
4. (a) P. 62-63. Avai tattam muṭiviṟ kūṟutum.
   (b) 3:13. Avaṟṟiṉ Pakuti yellām kāṉal variyiṟ kūṟutum.
   (c) 3:106-107. Aḷaṟpaṭu kātaikkaṇṇē virittuk kūṟutum.
   (d) 8:27-28. Atu muṉṉar āṇi (7:1-3) eṉpataṉuṭ kūṟiṉām.
   (e) 8:45-71. kaṭṭuraik kātaiyuḷ viriyak kūṟuvam.

5. 'Mikat teḷivāka mēṟkōḷai iṭañcuṭṭi viḷakkukiṟār. Ēṉaiya uraiyāciriyarkaḷiṭam illāta paṇpu itu'—Uraiyāciriyarkaḷ-P-265.

6. 'In Parimēlaḷakar's commentary also we find only these works of Patiṉeṇkīḷkkaṇakku and no reference has been given either from Tēvāram or Tiruvācakam'—N. Bālucāmi—Parimēlaḷakar'. AITTU-Madurai Conference article—1970.

7. (a) Uraippāyiram (b) 4:3-4 (c) 8:45-71.

8. Piratipēta Ārāycci—Mu. Irāmakiruṭṭiṉaṉ-1960.

S. V. S.

# அடியார்க்கு நல்லார்

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்பு மையத்தைத் தோற்றுவித்தது சிலப்பதிகாரம். தமிழர்களின் இலக்கிய வாழ்வில் தனிப்பாடல்களினின்றும் காப்பியத்திற்குச் சென்று மகிழ்ந்த நிலையைச் சிலம்பு காட்டுகின்றது. சிலம்பு முதல் காப்பியம்; முதன்மையான காப்பியம்; முத்தமிழ்க் காப்பியம். சிலம்பிற்குப் பின்பு இன்றுவரை அதனை ஒத்துத் தமிழ் இனத்தின் கலை, பண்பாடு இவைகளைப் பிரதிபலிக்கும் மற்றொரு காப்பியம் தோன்றவில்லை.

தஞ்சையில் இராஜராஜன் கட்டிய கலைக்கோவில் இராஜராஜேச்சுரம் தமிழர்களின் சிற்பத் திறனையும் கலைத்தன்மையையும் காட்டிச் செம்மாந்து சீரும் சிறப்பும் பெற்று நிற்கின்றது. ஆயின் அதைக் கட்டிய இராஜராஜ சோழன் வாழ்ந்த இடம் எது, எவ்வாறு வாழ்ந்தான் போன்ற செய்திகள் வரலாற்று நிலையில் கூட முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை. அதே போன்றுதான் இளங்கோவடிகள் நமக்குத் தம் சொல்லாற்றலால் செதுக்கித் தந்த முத்தமிழ்ச் சொற்கோவிலாகிய சிலப்பதிகாரம் உலக இலக்கியங்களில் முன்னிடத்தைப் பெறும் நிலையில் பெருமிதத்தோடு பீடுநடை போட்டு நிற்கின்றது; நிற்கும். ஆயின், அதைத் தோற்றுவித்த இளங்கோவடிகளின் வரலாறு, காலம், சமயம் போன்றவை நமக்கு இன்றுவரை தெளிவாக்கப் படாமலே இருக்கின்றன. கவிஞர்களின் தன்னலமற்ற தன்மை இதிலும் பிரதிபலிக்கின்றது. தமிழகம் பற்றி, தமிழர் பற்றி, தமிழ் வேந்தர் பற்றிப் பேசியுள்ள இளங்கோ தன்னைப்பற்றிப் பேச விரும்பவில்லை, முழுநிலையில் பேசவில்லை.

தமிழிலக்கிய வரலாற்றில் பலருடைய காலங்களும் இத்தகைய நிலையில் தான் அமைகின்றன. இன்னும் அவற்றை ஆழ்ந்து ஆய்ந்து அறுதியிடும் நிலை வருதல் வேண்டும்.

இலக்கியப் படைப்பாசிரியர்களேயன்றி அவரை ஒத்த முந்து நூற் புலமையும் கற்பனை வளனும் ஆய்வு வன்மையும் படைப்புத் திறனும் மிக்க இலக்கண இலக்கிய உரையாசியர்களின் வரலாறும் நமக்குக் கிடைக்காது போயின.

முத்தமிழ்க் காப்பியமாகிய சிலம்பிற்கு உரையெழுத முத் தமிழையும் முழுதுணர்ந்த வித்தகர் ஒருவரால் தான் இயலும் அவ் வொருவரே அடியார்க்கு நல்லார். எவ்வாறு சிலம்பு தமிழரின் கலைவாழ்வை, சமுதாயத்தை, முத்தமிழைப் பிரதிபலிக்கின்றதோ அதே போன்று நல்லார் உரையும் மூலத்திற்கேற்படி தமிழினத்தின் பிரதிபலிப்பாக அமைகின்றது. அவருரை ஒரு கலைக்களஞ்சியம் கவிதையூற்று. பல்துறை அறிவுமிக்க இவ்வறிஞரின் காலமும், சமயமும் பற்றிய செய்திகள் வெளிப்படையாக எங்கும் தரப் படாமையால் இன்றும் இவைபற்றிக் கருத்து வேறுபாடுகள் நிலவு கின்றன.

தமிழின் ஈடு இணையற்ற காப்பியம் படைத்த சேர இளவல் இளங்கோவடிகளின் காலம், கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுவரை கொண்டு செல்லப்படுகின்றது. இன்றுள்ள சிலர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே அடிகள் வாழ்ந் திருக்க வேண்டுமென்கின்றனர். இம் முத்தமிழ்க் காப்பியத்திற்கு உரைகண்ட உரைச் செல்வர் முத்தமிழ் வித்தகர் அடியார்க்கு நல்லாரின் காலத்தையும் கி.பி.12-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டுவரை கொண்டு செல்கின்றனர்.

இலக்கிய ஆசிரியர்களின் காலந்தான் இவ்வாறெனில் அன்னார் தம் சமய ஆராய்ச்சியும் இதே நிலையில் தான் செல் கின்றது. குறிப்பிட்ட ஒரு சில ஆசிரியர்கள் தவிர ஏனையோரின் சமயம் பற்றித் தெளிவாகக் கூற இயலவில்லை. இத்தகைய நிலை ஏற்படுவதற்கு அவர்தம் வரலாறு தெளிவாக எழுதப் படாமை ஒரு அடிப்படைக் காரணமாகும். கிடைக்கின்ற ஒரு சில சான்று களைக் கொண்டு ஆராய்கின்ற ஆராய்ச்சி வல்லுநர்களின் விருப்பு வெறுப்பு மற்றொரு காரணமாகும். பழைய இலக்கிய ஆசிரியர் களைத் தம்முடைய சமயத்தைச் சார்ந்தவர்; தம்முடைய நாட்டைச் சார்ந்தவர் என்று கூறுவதிலேயே அவர்கள் மிகுந்த கவனம்

செலுத்துகின்றனரே ஒழிய, உண்மை காண வேண்டுமென்ற நோக்கம் அருகி விடுகின்றது. எனினும் நடுநிலையில் சிந்தித்துப் பல ஆய்வு முடிவுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இந் நிலையிலேயே அடியார்க்கு நல்லாரின் கால, சமய ஆராய்ச்சியும் செல்கின்றது.

*பெயர்*

முதன்முதலில் அடியார்க்கு நல்லான் என்ற பெயரை அவர் உரைக்கு அமைந்த சிறப்புப்பாயிரத்தில் காண்கிறோம். இப்பாயிரப் பாடலை இயற்றியவர் இன்னாரென்பது தெரியவில்லை. இப்பாயிரப் பாடல்கள் ஒவ்வொரு காதையிலும் உரையின் இறுதியில் இருந்த தாகவும், பண்டைக் காலத்தைச் சார்ந்தவை என்றும் பதிப் பாசிரியர் டாக்டர் உ.வே சாமிநாதையரவர்கள் குறிப்பிடுகின்றார்.[1] இவ்வுரைச் சிறப்புப் பாயிரப் பாடல்கள் வருமாறு:

1. 'பருந்து நிழலுமெனப் பாவு முரையும்
பொருந்துநெறி யெல்லாப் பொருளும்-தெரிந்திப்
படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னூல்
அடியார்க்கு நல்லானென் பான்'

2. 'ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவகுத்துச்
சேரன் றெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொருள்
ஆருந் தெரிய விரித்துரைத் தானடி யார்க்குநல்லான்
காருந் தருவு மனையா னிரம்பையர் காவலனே'

3. 'காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்தக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமற் கால
மெனும்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர்
கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்
வித்ததே'

இம்மூன்று பாடல்களே அடியார்க்கு நல்லாரின் வரலாற்றை ஊகித்தறிய ஓரளவு துணை செய்வன. இப்பாடல் வழி அறியப் படும் செய்திகளாவன:

*1.* சேர இளவல் இளங்கோவடிகள் யாத்த முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்திற்கு விரித்துரை எழுதியவர் அடியார்க்கு நல்லார் என்னும் புலவர்.

---

1. சிலப். பக்: 11, 8-ஆம் பதிப்பு, 1968.

C

2. இவர் மழை போன்றும் கற்பகத்தரு போன்றும் சிலம்பிற்கு உரை வளம் நல்கினர்.

3. இவருக்கு நிரம்பையர் காவலர் என்ற மற்ருெரு பெயரும் உண்டு.

4. இவரை ஆதரித்து உரை செய்வித்தவன் ஆற்றல் மிக்க பொப்பண்ண காங்கெயர் கோன் என்னும் புரவலனுவான்.

இவையே இவ்வுரைச் சிறப்புப் பாயிரத்தால் அறியப்படும் நல்லார் வரலாறு பற்றிய செய்திகள்.

'அடியார்க்கு நல்லார்' என்ற பெயர் இடுகுறிப் பெயரா? அல்லது காரணப் பெயரா? இக் கேள்விக்கு விடைகாணும் முயற்சியில் முதல்துணையாக விளங்குகின்றது தேவாரம். திருஞான சம்பந்தர் தேவாரத்தில் வரும்,

*'கண்ணு ளார்கரு வூருள் ஆனிலை*
*அண்ண லார்அடி யார்க்கு நல்லரே'*

(திருக்கருவூரானிலைப் பதிகம், 1766)

என்ற அடி சிவபிரானைக் குறிக்கும். எனவே சிவபிரானைக் குறிக்கும் இப் பெயர் கொண்ட இவர் சைவர் என்பர்.[1] மேலும், பெற்ருன் சாம்பானுக்கு முத்தியளிக்கும்படி சிற்றம்பலவர் உமாபதி சிவாசாரியருக்கு எழுதியதாக வழங்கும் பாட்டில் 'அடியார்க் கெளியன் சிற்றம்பலவன்' என அவர் கையெழுத்து காணப்படுகிறது. கி.பி. 15-ஆம் நூற்ருண்டில் கந்தரலங்காரம் பாடிய அருணகிரி நாதர் முருகனை 'அடியார்க்கு நல்ல பெருமாள்' (33) எனக் குறிப்பிடுகின்ருர். இவ்வாறு இலக்கியங்களில் 'அடியார்க்கு நல்லர்', 'அடியார்க் கெளியன்', 'அடியார்க்கு நல்ல பெருமாள்' எனும் சொல்லாட்சிகளை எடுத்துக் காட்டுகின்ருர் மு. அருணசலம் அவர்கள்.[2]

அடியார்க்கு நல்லார் என்ற பெயர் சிவனை மட்டும் அல்லது வைதீகக் கடவுளரை மட்டும் குறிக்கும் எனக் கொள்வதைக் காட்டிலும், பொதுநிலையில், அனைத்திற்கும் மூலமான இறைவன் எனப் பொதுமையைக் குறிக்கும் என்பதே பொருந்தும். உலக நிலையில் இறைவன் ஒருவனே. அவன் அவனுடைய அடியார்க்கு என்றும் நல்லவன். இந்நிலையில் அடியார்க்கு நல்லார் என்பதனை இறைவனைக் குறிக்கும் பொதுப் பெயராகவே கொள்ளலாம்.

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி: 1, பக்: 47.
2. மு. அருணசலம், தமிழிலக்கிய வரலாறு, 12-ஆம் நூற்ருண்டு, பக்: 520.

இனி நிரம்பையர் காவலர் என்ற பெயர் இவருக்கு எவ்வாறு வந்தது என்பதில் அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொள்கின்றனர். டாக்டர் உ. வே. சா. அவர்கள், 'இவருக்கு நிரம்பையர் காவலன் என்னும் பெயர் ஊரால் வந்தது என்றும், நிரம்பை என்னும் ஊர் கொங்கு மண்டலத்தில் குறும்பு நாட்டில் பெருங்கதை ஆசிரியராகிய கொங்குவேளிர் பிறந்த விசயமங்கலத்தின் பக்கத்தில் உள்ள தென்றும் கொங்கு மண்டல சதகம் தெரிவிக்கின்றது' என்பர்[1]. கொங்கு மண்டல சதகமும் இதற்குச் சான்ருக அமைகின்றது.

'குருவை யுணர்ந்த இளங்கோ வடிகளுட் கொண்டு சொன்ன
தருவை நிகருஞ் சிலப்பதி காரத் தனித்தமிழுக்
கருமை யுரைசெய் அடியார்க்கு நல்லார் அவதரித்து
வருமைப் பொழில்நிரம் பைப்பதி யுங்கொங்கு மண்டலமே'
(95)

நிரம்பை என்னும் ஊர் இன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெருந்துறையை அடுத்துள்ளது என்பர்.[2] எனவே அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்தில் உள்ள நிரம்பை என்னும் ஊரினர் என்பது தெரிகின்றது.

இதற்கு மாறுபாடான கருத்தும் உண்டு. து.அ.கோபிநாத ராவ் அவர்கள் 'அடியார்க்கு நல்லார் கொங்கு நாட்டினர் அல்லர்; தீபங்குடி யருகே யுள்ள நிடும்பரைத் தீர்த்தத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். இந் நிடும்பரைத் தீர்த்தமே பாயிரத்தில் நிரம்பை எனத் திரிந்திருக்க வேண்டும்; தீபங்குடி, திருவாரூர் அருகில் முன்னெரு காலத்தில் சைனர் குடியிருப்பாய் இருந்தது. அன்றி, இன்றும் சைனர் அதிகமாய்க் குடியிருக்கின்ற பிரதேசமாகிய திண்டிவனம் பக்கத்தில் ஒரு தீபங்குடி உள்ளது; எனவே தீபங்குடி அருகில் உள்ள நிடும்பரைத் தீர்த்தத்தில் நல்லார் வாழ்ந்திருக்க வேண்டும்' எனக் கருதுகின்ருர்.[3]

திரு. பொ.செகந்நாதன் அவர்கள் அடியார்க்கு நல்லார் கொங்கு நாட்டிலுள்ள நிரம்பையூரில் பிறந்தார் என்று ஏற்றுக் கொள்கிருர். எனினும், நல்லார் நிரம்பையில் வாழ்ந்து அங்கேயே தம் உரையையும் இயற்றினுர் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு அவர் சான்ருகக் கொள்வது இரண்டு குறிப்புக்கள். ஒன்று உரைச்சிறப்புப் பாயிரத்தில் நல்லார் 'நிரம்பையர் காவலர்' எனக்

---

1. சிலப் உ.வே சா, 3-ஆம் பதிப்பின் முகவுரை, பக்: xiii.
2. மு.வை. அரவிந்தன், 'உரையாசிரியர்கள்', பக்: 245.
3. மு. அருணுசலம்-'தமிழ் இலக்கிய வரலாறு' 12-ஆம் நூற்ருண்டு, பக்:536.

குறிக்கப்படுவது. இரண்டாவது, கொங்கு மண்டலத்தில் வாழ்ந்த புலவர்தம் வரலாற்றை விரிவாகக் கூறும் கொங்குமண்டல சதகம் 'அடியார்க்கு நல்லார் அவதரித்தது கொங்கு மண்டலம்' என்பதை மட்டும் குறிப்பிட்டு எஞ்சியுள்ள உரைச்சிறப்புப் பாயிரச் செய்திகளை விட்டு விடுவது. இதனால் அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்தில் வாழவும் இல்லை; அங்கிருந்து உரை செய்யவும் இல்லை என்கிறார். மேலும் நல்லார் நிரம்பையில் வாழ்ந்திருந்தால் அவர் நிரம்பையர் காவலர் என அழைக்கப் பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அவர் நிரம்பையை விட்டு வேறு ஒரு இடத்தில் காவலர்க்குரிய சிறப்போடு வாழ்ந்தமையான் அவ்வூரவர்களால் 'நிரம்பையர் காவலர்' என அழைக்கப்பட்டார் எனக் கருதுகின்றார்.

இவ்வாறு கூறி இவர் அடியார்க்கு நல்லார் வரலாற்றை இலங்கைச் சிங்கை நகர வரலாற்றோடு தொடர்பு படுத்துகின்றார். 'வட இலங்கையில் கி. பி. 1242-1450-க்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த தலைநகரான சிங்கையில் கி.பி. 1324-1371-க்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த குணபூஷணசிங்கையாரியன் என்னும் அரசன் காங்கேயன் என்னும் போர் வீரனைத் தொண்டை நாட்டிலிருந்து வரவழைத்துத் தன் சேனாதிபதி யாக்கினான்; அடியார்க்கு நல்லார் என்னும் பண்டித மணி வாயிலாகக் கல்வி விருத்தி செய்தான். அவரைக் கொண்டு ஆரியன்குளம், அடியார்க்கு நல்லார் குளம் என்னும் இருகுளங்களை வெட்டுவித்தான், என ஈழ நாட்டுத் தமிழ்ப் புலவர் வரலாற்றாளர் குறிப்பிடுகின்றார். இலங்கை வரலாற்று ஆசிரியர்களும் இதனைக் குறிப்பிடுகின்றனர். எனவே, அமைச்சராய அடியார்க்கு நல்லாரே உரையாசிரியர்; இவர் கொங்கு மண்டலத்திலிருந்து குணபூஷணனால் அழைக்கப்பட்டவர்; இவர் இலங்கைச் சிங்கை நகரில் அமைச்சராய் இருந்த காலத்தில் உரை இயற்றினார்; இவரை ஆதரித்த பொப்பண்ண காங்கெயர் குணபூஷணனுக்குச் சேனாதிபதியாக இருந்த காங்கேயனே என நிறுவுகின்றார்.[1]

தமிழகத்தில் இருந்த பல வழக்குகளைத் தெளிவாகக் குறிப்பிடும் நல்லார்,[2] ஈழ நாட்டில் வாழ்ந்திருந்தால் அந்நாட்டு வழக்கையும் தம் உரையில் ஒரிடத்திலாவது குறிப்பிட்டிருக்க வேண்டும். அங்ஙன மின்மையின் நல்லார் சிங்கை நகரில் வாழ்ந்து உரை செய்தார் எனக் கொள்வதற்குத் தடை ஏற்படுகிறது. அன்றியும் அடியார்க்கு நல்லார் சிங்கை நகரில் வாழ்ந்த காலத்தில்

1. பொ. செகந்நாதன், அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி.
2. அடியார்க்கு நல்லாரின் இலக்கணப் புலமை - வழக்குகள்—பார்க்க.

உரை இயற்றினர் எனின் அவ்வுரை இலங்கைப் பகுதிகளிலேயே மிகுதியான செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும். மேலும், நல்லார் உரைப் பிரதிகள் இலங்கைப் பகுதிகளிலேயே மிகுதியும் கிடைத்திருக்க வேண்டும். அங்ஙன மின்மையின் நல்லார் சிங்கை நகரில் இருந்து உரை செய்தார் என்று கொள்ள முடியவில்லை. 'அடியார்க்கு நல்லார் வறம்பு,' 'அடியார்க்கு நல்லார் குளம்' என்பன இன்றும் இருப்பதாலும், அடியார்க்கு நல்லார் என்னும் அமைச்சர் வாழ்ந்தார் என்பதாலும் இவ்வாராய்ச்சியினைச் செய்துள்ளார் ஆசிரியர் பொ.செகந்நாதன். இது மேலும் ஆராயப் படவேண்டிய ஒன்று.

### *சமயம்*

அடியார்க்கு நல்லாரைச் சைவர் என்று ஆய்வோர் கருதுகின்றனர். அதற்கு அவர்கள் தருகின்ற காரணங்களாவன:

*1.* அடியார்க்கு நல்லார் என்ற பெயர் சிவபிரானைக் குறிக்கும் பெயராக வுள்ளது.

*2.* அடியார்க்கு நல்லார் சிவபிரானைக் குறிக்கும் இடங்களில் எல்லாம் 'இறைவன்' என்றே குறிப்பிடுகின்றார். எனவே நல்லார் சைவர் என்பது அவர்தம் கருத்து.[1]

*3.* துறவறத்தைக் கூறுமிடத்து, 'அதன் துறை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன; சரியை அலகிடல் முதலியன; கிரியை பூசை முதலியன; யோகம் எண்வகைய; அவை இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என்பன', என்று கூறி எட்டையும் விளக்கும் எட்டு நூற்பாக்களை எடுத்துரைக்கிறார். இவர் கூறும் இக்கருத்துக்கள் சைவ சமயக் கருத்துக்கள்.

*4.* திருக்கோவையார்த் தொடர்களை மேற்கோளாகத் தந்தும் உரைநடையாகவே வைத்தும் எழுதுகின்றார். இவற்றால் இவர் சிறந்த சைவர்; சிவபிரானையே பரம்பொருளாகக் கொண்டவர் என்பது தெளிவு என எழுதுகின்றார்.[2]

இங்குக் குறிப்பிடப்பட்ட நான்கு கருத்துக்களும் ஆராயப்பட வேண்டியவை. இறைவனாகிய சிவபிரானைக் குறிக்கும் 'அடி

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி 1-பக்:47.
-மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், பக்:246.
-மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 12-ஆம் நூற்றாண்டு, பக்:532.
2. மு.அருணாசலம். ,, ,,

யார்க்கு நல்லார்' என்ற பெயரையே தமக்குப்பெயராகக் கொண்டுள்ளார் என்பதை விட, நாம் முன்பு நினைத்தவண்ணம், பொதுவாக இறைவனைக் குறித்த தொடரைத் தம் பெயராகக் கொண்டுள்ளார் என்பது பொருந்தும். சம்பந்தர் தேவாரம் தவிரப் பிற இடங்களில் இத்தொடர் சிவபிரானைக் குறிக்க வழங்கியதாகத் தெரியவில்லை. சிவன் கோயில்களில் அடியார்க்கு நல்லார் என்ற பெயரில் சிவ பெருமான் குறிக்கப்படுகிறார் என்பதற்குச் சான்றுகள் கிடைத்த தாகத் தெரியவில்லை.

அடுத்து, இறைவன் என்ற பொதுப்பெயர், எல்லாக் கடவுளரையும் குறிக்கும். இறைவன் என்ற சொல்லைச் சிவனுக்கு மட்டுமன்றி, அருகதேவரையும் குறிக்க நல்லார் பயன்படுத்து கிறார்.

> உருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்
> பெருமகன் றிருமொழி பிறழா நோன்பும்
> உடையீ ரென்னே வுறுக ணாளரிற்
> கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென (10:46-49)

என்னும் வரிகளுக்கு உரையெழுதும் போது, இந்நிலை அமை கின்றது.

பெருமகன் என்ற சொல்லுக்கு 'அருகதேவன்' என்று பொருள் கூறி, திருமொழியை 'அவன் அருளிச் செய்த ஆகமம்' எனக் குறித்து, 'இறைவனூலிற் கூறிய விரதந் தப்பாமை' என்பதால், அருகதேவனை இறைவன் என்றே குறிக்கின்றார் நல்லார்.

நல்லார், அருகனைப் போற்றுகின்ற அளவு சிவபிரானைப் போற்றுகின்றாரென்பது ஐயமே. மதுரைப் பயணத்தின் போது கவுந்தியடிகள் அருகனைப் போற்றுகின்றபோது, அடிகள் 48 பெயர்களைக் குறிப்பிடுகின்றார். இதற்கு நல்லார் உணர்ந்து பொருள் எழுதுவதை நோக்க அவர் அருகக் கடவுளை எந்த அளவு உயர்வாகப் போற்றுகின்றார் என்பது தெரியும்.[1] மேலும் மதுரைக் காண்டத்தின் தொடக்க காதையான காடுகாண் காதையின் முதல் நான்கு வரிகட்கு நல்லார் எழுதுகின்ற உரை இங்குக் குறிப்பிடத் தக்கது.

'முக்குடையாவன : சந்திராதித்தம், நித்திய விநோதம், சகல பாசன மென்பன.... 'கோதைதாழ் பிண்டி' என்றார் அவன் பிண்டி கடவுட்டன்மையான் எஞ்ஞான்றும் மாலையாகப் பூக்கு

1. சிலப். பக்: 279-82. உரை பார்க்க,

மாதலின். ஆதியில் தோற்றத் தறிவனென்றது ஆதியின் மையைத் தோற்றமாகவுடைய னென்றதாம்; எனவே இனஞ் செப்பி அந்தமின்மையை முடிவாக வுடையனென்பதூஉமாம்; ஆகவே ஆதியும் அந்தமும் இல்லாதவ னென்றவாறும்; எனவே தனக்குப் பிறிதொருவர் முதலாதலில்லாதவ னென்பதாம். இன்னும் இதற்கு, யாவர்க்கும் தானே முதலாய வனென்றுரைப் பினும் அமையும். ஆதியிற் றோற்றம் பாடமாயின், ஆதிக்காலத் தினும் முற்றோன்றியவ னென்க என்ற கருத்து காலத்தின் முற்றோன்றும் பொருள்கள் யாவுமின்மையின், அதனினும் முற் றோன்றியவ னென்பதாம்'[1] என மிகவிரிவாக – அருகனையே முழு முதற் கடவுளாகக் கொண்டு உரை எழுதுகின்றார். எனவே நல் லார் சிவபெருமானையும் அருகனையும் பற்றிப் பேசுகின்ற இடங்களை ஒப்பிட்டு நோக்கினால் சிவபிரானை விட அருகனையே மிகுதியாகப் போற்றிப் பாராட்டுகிறார் என்று துணிந்து கூறலாம். எனவே நல்லாரைச் சைவர் என்பதைக் காட்டிலும், சமணச் சார்புடை யவர் என்று கூறுவதே பொருந்தும்.

யோகம் பற்றி நல்லார் தரும் கருத்துக்களைச் சைவ சமயக் கருத்துக்களாக நாம் ஏற்றுக் கொள்வோம். இவ்வோரிடத்து மட்டும் சைவ சமயக் கருத்துக்களை நல்லார் கூறி விட்டதால் அவர் சைவர் எனக் கூறுவது பொருந்துமா? அவ்வாறானால் அவர் மிகுதியான இடங்களில் சைன சமயக் கருத்துக்களை மிகத் தெளிவாக விளக்கிச் செல்கின்றார். நல்லார் தருகின்ற மூவகைக் கன்மம், ஞானம் ஐந்து, விரதம் மூன்று, குணம் எட்டு, ஆகமம் மூன்று, அதிசயம் மூன்று, முக்குடை, பஞ்ச மந்திரம், பஞ்ச பர மேட்டிகள் பற்றிய அனைத்துக் கருத்துக்களுமே[2] சைன சமயத்தைச் சார்ந்தவை என்பதை நினைவு கூர வேண்டும். கோவலன் கண்ணகியரை மதுரைக்கு வழிப் படுத்துகின்ற கவுந்தி யடிகளின் கூற்றுக்களை விளக்கிய நல்லார், 'இதனாற் சொல்லியது: நமது தரிசனத்துக் கடியப் பட்ட வற்றால் தேனுண்டலைப் பரிகரிக்க வென்றதாம். எனவே ஊனையும் உடன் கூறிற்றாம்; மேலும் இவ்வாறு வருவன கொள்க'[3] என்றும், 'இதனாற் சொல்லியது உயிர்க் கொலை புகாமற் பரிகரிக்க வென்பதாம்' என்றும் சைன சமயக் கொள்கைகளை உளப்பாட்டுத் தன்மைப் பன்மையில் தனியே எடுத்துக் காட்டிச் செல்கின்றார். எனவே சமயக் கொள்கைகளை விளக்கிச் செல்வதிலும் சமண சமயத்திற்கு முக்கியத்துவம் தருகின்றார்.

---

1. சிலப். பக்; 298.
2. நல்லார் கூறும் பிற செய்திகள் - பார்க்க.
3. சிலப். பக்; 273.

இனி நான்காவது கருத்தை ஆராய்வோம். 'திருக் கோவையார்த் தொடர்களை மேற்கோளாகத் தந்தும் உரை நடையாகவே வைத்தும் எழுதுகின்றார். இவற்றால் இவர் சிறந்த சைவர், சிவபிரானையே பரம்பொருளாகக் கொண்டவர் என்பது தெளிவு' எனக் குறிப்பர். நல்லார் தம் உரை முழுவதிலும் திருக் கோவையாரை எடுத்தாளுகின்ற இடம் நான்கே. இந்நான்கு இடங்களிலும் மூன்று பாடல்களையே நல்லார் சுட்டிச் செல்கின்றார். ஆயின் சமண இலக்கியங்களிலிருந்து எத்தனை மேற்கோள்கள் காட்டுகின்றார் என்பதைக் காணுதல் வேண்டும். சங்க இலக்கியங்களையும் திருக்குறளையும் சமயப் பொது நூற்கள் எனக் கொண்டு அமையலாம். அதே நேரத்தில் சமணக் காப்பியங்களான பெருங்கதை, சூளாமணி, வளையாபதி, சீவக சிந்தாமணி ஆகியவற்றையும், பதினெண் கீழ்க்கணக்கில் அடங்கும் அறநூற்களான நாலடி, நான்மணிக்கடிகை, திரிகடுகம், பழமொழி நானூறு ஆகியவற்றையும் சமயப் பொதுநூற்கள் என்று கொள்ளவோ அல்லது சைவ நூற்கள் என நிறுவவோ இயலாது. பெருங்கதை வரிகளை ஒன்பது இடங்களிலும், சூளாமணிப் பாடல்களை ஈரிடங்களிலும், வளையாபதிச் செய்யுட்களை ஐந்திடங்களிலும், சிந்தாமணிப் பாடல்களை 48 இடங்களிலும் மேற்கோளாக எடுத்தாளுகின்றார். மேலும் நாலடியாரை நான்கிடங்களிலும் நான்மணிக்கடிகை, பழமொழி ஆகியவற்றை முறையே ஒவ்வோரிடத்தும், திரிகடுகத்தை ஈரிடங்களிலும் மேற்கோள் காட்டுகின்றார்.[1] இவை யெல்லாம் நல்லாரின் சமண இலக்கியப் பயிற்சியைத் தெற்றெனக் காட்டுகின்றன.

மேலும் ஒரு கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த பெரும் புலவர் ஆகிய அடியார்க்கு நல்லார்க்கு ஏன் சைவ இலக்கியங்களில் மிகுந்த பயிற்சி இல்லை என்ற வினா எழுகின்றது. நல்லார் காப்பியத்திற்கு உரை எழுதியதால் சமய இலக்கியங்களை மேற்கோளாகக் காட்டவில்லை; சிலப்பதிகாரம் போன்ற காப்பிய இலக்கியங்களிலே இருந்துதான் மேற்கோள் காட்டுவது முறைமை என்று சமாதானம் கூறலாம். அங்ஙனமாயின் சைவர்களால் மிகுதியும் போற்றப்பட்ட காப்பியமான பெரிய புராணத்தில் நல்லாருக்கு ஏன் பயிற்சி இல்லை என்று கேட்கத் தோன்றுகிறது. அதோடு மிகச் சிறந்த வைணவக் காப்பியமான கம்பராமாயணத்தை ஓரிடத்தில் கூட எடுத்துக் காட்டினாரில்லை நல்லார். எனவே நல்லாரை வைதீக

1. நல்லாரின் இலக்கியப்புலமை, இலக்கிய மேற்கோள்கள் அட்டவணை - பார்க்க.

சமயத்தைச் சார்ந்தவர் என்று கொள்வதற்கில்லை. மேற் கூறிய சான்றுகளிலிருந்து அடியார்க்கு நல்லார் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பது போதரும். இவரை ஆதரித்த பொப்பண்ண காங்கெயர்கோனும் சமண சமயத்தைச் சார்ந்தவன் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.[1] எனவே சமண சமயத்தைச் சார்ந்தவனான காங்கெயர் கோன், தன் சமயத்தைச் சார்ந்த அடியார்க்கு நல்லாரைக் கொண்டு சிலப்பதிகாரத்திற்கு உரை செய்வித்தான் எனக்கொள்வது பொருத்த முடையதாகத் தோன்றுகிறது.

**காலம்**

அடியார்க்கு நல்லார் எட்டாவது காதையின் முதலிரு வரிகட்கு எழுதிய உரையில், கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம்பூரண வடிகள் முகவுரையானும், பிறவாற்றானும் பெறுதும்' எனக் குறிப்பிடுகின்றார். இதனால் நல்லார், உரையாசிரியர்களாய நக்கீரர் காலத்துக்கும் இளம் பூரணர் காலத்துக்கும் பிற்பட்டவர் என்பது தெளிவு. மேற்குறித்த இரு உரையாசியர்களில் இளம்பூரணரே காலத்தால் பிந்தியவர். இவர்தம் காலம் கி.பி. 1070-95 எனக் கருதுவர் மு. அருணாசலம் அவர்கள். எனவே நல்லாரின் காலம் 11-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்பது தெளிவு.

ஐந்தாவது காதை, 157-160-ஆம் வரிகளுக்கு உரை எழுதப் புகுந்த நல்லார் எண்பேராயம் என்பதற்கு விளக்கம் தந்து விட்டு 'இனி, 'சாந்துபூ..... அவைக்களத்தா ரைந்து' எனக் காட்டுவர் அரும்பதவுரையாசிரியர்' எனச் சுட்டுகின்றார். எனவே அடியார்க்கு நல்லார் அரும்பதவுரையாசிரியருக்குப் பிற்பட்டவர் என்பது தெளிவு. அரும்பதவுரையாரின் காலம் கி.பி. 1025 எனக் கருதுவர். எனவே நல்லார் இதற்குப் பிற்பட்டவர் என்பது விளங்கும்.

கலிங்கத்துப்பரணிப் பாடல்களை மூன்று இடங்களில் மேற்கோள் காட்டுகின்றார் நல்லார். இக் கலிங்கத்துப் பரணி கொண்ட குலோத்துங்க சோழன் காலம் கி.பி.1070-1120. கலிங்கப் போரின் காலம் கி.பி. 1112-க்குப் பின் என்பர்.[2] எனவே இதற்குப் பின்னரே கலிங்கத்துப் பரணி பாடப் பட்டிருக்க வேண்டும். இப்பரணி நூலை மேற்கோள் காட்டும் நல்லார் 1120-க்குப் பிற்பட்டவர் எனலாம்.

1. மு.அருணாசலம் -'தமிழ் இலக்கிய வரலாறு'-12 ஆம் நூற்றாண்டு; பக்:535
2. K.A. Nilakanda Sastri, The Colas,p. 321 (About 1110 A.D)

அடியார்க்கு நல்லாரை ஆதரித்த வள்ளல் பொப்பண்ண காங்கெயர் கோன் என்பது அறிந்ததே. இவன் கங்க வமிசத்தில் பிறந்த ஒருவன். இவன் இராமானுசரால் வைணவ மதத்துக்கு மாற்றப்பட்ட போசள விஷ்ணுவர்த்தன மன்னனின் மந்திரியும் படைத்தலைவனுமாகிய கங்கராசனின் புதல்வன். இவன் கன்னட நாட்டினன். சமயத்தால் சைனன் என்பர். அன்றியும் இராமானுசர் பரமபதித்தது 1137 ஆதலால் இதற்குப் பிற்பட்ட காலமே பொப்பண்ண காங்கேயன் காலம் என்பர்.[1]

இனி அடியார்க்கு நல்லார் வரலாறு கூறப் போந்த டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்கள், 'இவருடைய வருணம், சமயம், காலம் ஆகிய இவற்றுள் ஒன்றும் புலப்பட வில்லை. ஆனாலும் நச்சினார்க் கினியரால் மறுக்கப் படுவனவற்றுள் சில இவருடைய கொள்கையாக இருத்தல் பற்றி இவரது காலம் நச்சினார்க்கினியருடைய காலத்திற்கு முந்தியதாக இருக்கலாமென்று ஊகிக்கப் படுகின்றது'[2] என்பர்.

'தொடர்நிலைச் செய்யுள் என்பதனைக் காப்பியம் என்று வழங்கலாம் என்ற அடியார்க்கு நல்லார் கருத்தை (சிலப். பாயிரவுரை) நச்சினார்க் கினியர் சீவக சிந்தாமணி யுரையின் தொடக்கத்தில் மறுப்பதால் அவருக்கு இவர் பிற்பட்டவர் என்பது விளங்கும்' என எழுதுகின்றார் மு.வை.அரவிந்தன் அவர்கள்[3]. ஆயின் இங்குக் காப்பியம் என்ற சொல் பற்றி இருவுரையாசிரியர்கள் கூறும் கருத்தையும் ஒப்பிட்டு நோக்கும் போது யார், கருத்தை யார் மறுக்கின்றார் எஃறு தெளிவாகக் கூறமுடியவில்லை. மேலும் ஒருவர் கருத்தை மற்றவர் மறுக்க வேண்டும் என்ற நோக்கில் உரை எழுதியதாகவும் தோன்றவில்லை. இதனைத் தெளிவு படுத்த அன்னார் தம் உரைகளைத் தருவது நலம். அவ்வுரைப் பகுதிகள் வருமாறு:

''முந்து நூல்களிற் காப்பியமென்னும் வடமொழிப் பெயர் இன்றேனும் ..... சொற்றொடர்நிலை பொருட்டொடர்நிலை யென்னும் தொடர்நிலைச் செய்யுட்கும் காப்பிய மென்று பெயர் கூறுதலும் ஆசிரியர் கருத்தென வுணர்க', என எழுதுகின்றார் அடியார்க்கு நல்லார்.[4]

நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணியின் கடவுள் வாழ்த்து உரையில் 'முந்து நூல்களிற் காப்பிய மென்னும் வடமொழியால்

1. மு.அருணாசலம் - தமிழிலக்கிய வரலாறு, 12 ஆம் நூற்றாண்டு, பக்:535.
2. சிலப், உ.வே.சா. முகவுரை, பக்: xviii.
3. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், பக்: 162.
4. சிலப். உரைப்பாயிரம், பக்: 6-8.

தொடர்நிலைச் செய்யுட்குப் பெயரின்மையும், இதற்குப் பின்பு கூறிய நூல்கள் இதற்கு விதியன்மையும் உணர்க'[1] என எழுதுகின்றார்.

எனவே இவ்விரு வுரைப்பகுதி கொண்டு அடியார்க்கு நல்லார் கருத்தை நச்சினார்க் கினியர் மறுக்கிறார் என்றோ, நச்சினார்க்கினியர் கருத்தை நல்லார் மறுக்கிறார் என்றோ கூறமுடியாது. இதனைச் சான்றாகக் கொண்டு நச்சினார்க் கினியர்க்கு நல்லார் முற்பட்டவர் எனக் கூறுவது பொருந்தாது.

*நல்லார் உரை செய்த பகுதி*

சிலப்பதிகாரம் தவிர நல்லார் பிற நூல்களுக்கு உரை இயற்றியதாகத் தெரியவில்லை. சிலப்பதிகாரத்திற்கும் நல்லார் உரை முழுவதும் கிடைக்கவில்லை. *19*-வது காதையாகிய ஊர்சூழ்வரி வரை நல்லாரின் உரை கிடைத்துள்ளது. இடையில் கானல்வரிக்கு நல்லாரின் உரை கிடைக்கப் பெறவில்லை. அடியார்க்கு நல்லார் நூல் முழுவதற்கும் உரை எழுதி அது நமக்குக் கிடைக்காது போயிருத்தல் வேண்டும். அல்லது முழுவதற்கும் உரை எழுத நினைத்திருந்து அது நிறைவேறுவதற்கு முன்பே காலமாகியிருக்கலாம். இதற்குச் சில சான்றுகள் அவர் உரையுள்ளேயே நமக்குக் கிடைக்கின்றன.

அரங்கேற்று காதையின் *13*-ஆம் வரிக்கு உரை விரிக்கும் போது 'வரி எட்டு வகைப்படும்; கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள் வரியென...... அவற்றின் பகுதி யெல்லாம் கானல்வரியிற் கூறுதும்'[2], என்று கூறுகின்றார்.

எட்டாவது காதையில் *27-28* ஆம் வரிகட்குப் பொருள் எழுதும் போது 'அது முன்னர் ஆணி என்பதனுட் (*7:1*) கூறினாம்'[3] என்கின்றார். இவ்விரு சான்றுகளால் நல்லார் கானல்வரிக்கு உரை எழுதியுள்ளார் என்பது தெரிகின்றது.

அரங்கேற்றுகாதை *106-107* வரிகட்கு உரை விரிக்கும் போது, 'இப்பூத நான்கின் உண்டியும் அணியும் ஆடையும் மாலையும் சாந்தமும் பொழுதும் செயலு முதலிய வெல்லாம் அழற்படுகாதைக் கண்ணே விரித்துக் கூறுதும்'[4] என்று கூறுகின்றார். இதனால்

1. *சீவக சிந்தாமணி, உரை, நச், பக்: 2.*
2. *சிலப். 3:11, உரை, பக்: 88.*
3. *சிலப். 8:27-28, உரை, பக்:231.*
4. *சிலப். 3:106-107, உரை, பக்:115.*

நல்லார் அழற்படுகாதைக்கும் உரை யியற்றி யிருத்தல் வேண்டு மென்பது தெரிகின்றது.

வேனிற்காதை 45-71 வரிகட்கு உரை எழுதிய நல்லார், 'இனி இவ்விழாவின் முதலும் முடிவும் கடலாட்டும் புலவியும் புறப் பாடும் வதிச் செலவும் பொறையுயிர்த்திருப்பும் நிறைபதிப் புகலும் தீதுறு நாளும் ஊர்தீப் பாடும் முதனடு விறுதியாகக் கட்டுரைக் காதையுள் விரியக் கூறுவாம்; அதனுட் கண்டு கொள்க'[1] எனக் கூறுகின்றார். இதனால் அடியார்க்கு நல்லார் கட்டுரைக் காதைக் கும் உரை எழுதியிருத்தல் கூடுமெனத் தெளியலாம். இங்ஙனம் நல்லார் புகார்க் காண்டம் தொடங்கி மதுரைக் காண்ட இறுதி வரை எழுதியதற்கான குறிப்புக் கிடைக்கின்றது. இடையிலுள்ள வழக்குரை காதை, வஞ்சினமாலையாகிய இரண்டிற்கும் நல்லார் உரை எழுதியது பற்றிய குறிப்புக் காணக் கிடைக்க வில்லையாயி னும் அதற்குப் பின்னுள்ள காதைகட்கு உரை எழுத எண்ணிய செய்தி அறியப்படுதலின் இவ்விரண்டிற்கும் உரை எழுதியிருத் தல் கூடுமென ஊகிக்கலாம். வஞ்சிக் காண்டத்திற்கு நல்லார் உரை எழுதியதற்கான சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயின் பதிகத்தின் உரையை நோக்கும் போதும், வஞ்சிக் காண்ட வரிகளை மிகுதியாக மேற்கோளாக எடுத்தாளுவதைக் காணும் போதும் நல்லார் சிலப்பதிகாரக் காப்பியம் முழுவதற்கும் உரை எழுத எண்ணி அது யாது காரணத்தாலோ மதுரைக் காண்டத் தோடு நின்றுவிட்டது என ஊகிக்கலாம்.

### *சிலம்பிற்குப் பிறவுரை உண்டென்பதற்கு நல்லார் காட்டும் சான்றுகள்*

சிலம்பிற்கு அடியார்க்கு நல்லார் உரைக்கு முன் அரும்பத வுரை உண்டென்பதை நல்லாரே குறிப்பிடுகின்றார். இது தவிரப் பிறவுரைகாரரின் கருத்துக்களையும் உரை வேறுபாடுகளையும் சுட் டிச் செல்கின்றார்.

1. இந்திரவிழவூ ரெடுத்த காதை 235-40 ஆம் வரிகட்கு உரை எழுதிய நல்லார், 235-வது வரியில் வரும் 'தாதுறைப்ப' என்ற சொல்லுக்குத் 'தாதெறிப்ப' என்று பாடமோதித் தாது ஒளி விட வெனப் பொருள் உரைப் பாருமுளர்'[2] எனக் குறிப்பிடுகின் றார்.

---

1. சிலப். 8:45-71, உரை. பக்:235.
2. சிலப். 5:235, உரை. பக்:172.

2. நாடுகாண்காதை 94-97 வரிகளின் உரையில் 'வயலும் சோலையுமென்பன வற்றைக் கூறிய முறையானே எதிர் நிரனிறை யாகக் கொள்வாருமுளர்'[1] என எழுதுகின்றார்.

3. 16-வது காதை 9-14ஆம் வரிகட்கு உரைவிரித்த நல்லார் 'இனி வந்தாய்க் கெனவும் (வந்தீர்க்கு என்பது) காணினெனவும் (காணீர்) பாடங் கூறுவாருமுளர்'[2] எனப் பிற உரைகாரர் கொண்ட பாடபேதத்தைச் சுட்டுகின்றார்.

4. இதே காதை 117-20 ஆம் வரிகட்கு விரித்துரைகூறிய அடியார்க்கு நல்லார் 'குடைச்சூல் - குடைபடுதல் என்பாருமுளர்'[3] எனப் பிறவுரையார் கொண்ட பொருள் வேறுபாட்டையும் எடுத்துக் காட்டுகின்றார்.

5. மேற்கண்ட அதே பகுதி உரையில் 'புரிந்துடன் நோக்கி (16:120) யென்பதற்குப் பணியும் விலையும் நோக்காது அவனை இடுவந்தி யிடுவதற்கு இசைந்து தான் வஞ்சித்துக் கொண்ட சிலம் போடு ஒக்கும் படியைப் பார்த்தென்பாரும் உளர்'[4] எனப் பிற வுரையையும் காட்டிச் செல்கின்றார்.

6. கொலைக்களக் காதை 142-47 வரிகட்கு உரை கூறிய நல்லார், 'கவைக் கோல்' என்பதற்குக் 'கொடிற்றுக் கோல்; ஆவது படைக்கல், இட்டிகை முதலியவற்றைப் பறிக்குங்கருவி' எனப் பொருள் கூறி, 'குத்துக்கோ லென்பாருமுளர்'[5] எனப் பிற உரையார் கொண்ட பொருள் வேறுபாட்டையும் சுட்டிக் காட்டுகின்றார்.

7. துன்ப மாலை 2-7 வரிகட்குப் பொருள் விளக்கம் செய்த ஆசிரியர் 'ஆடிய சாயலாளெனச் சேர்த்து அசைந்த சாயலா ளென்பாருமுளர்'[6] எனப் பிற நூலார் கொண்ட பொருள்கோளையும் தந்து செல்கின்றார்.

8. மேற்கண்ட அதே காதை 25-28 ஆம் வரிகளுக்கு உரை விரித்த நல்லார் ''இதனை ஐயை கூற்றென்பாரு முளர்''[7] எனப் பிற உரையாரின் கருத்து வேறுபாட்டையும் சுட்டிச் செல்கின்றார்.

---

1. சிலப். 10:94-97, உரை, பக்: 274.
2. சிலப். 16:9-14, உரை, பக்:425.
3. சிலப். 16:117-20, உரை, பக்:431.
4. சிலப். 16:117-20, உரை, பக்:431.
5. சிலப். 16:142-47, உரை, பக்:432.
6. சிலப். 18:2-7, உரை, பக்:461.
7. சிலப். 18:25-28, உரை, பக்: 462.

இங்ஙனம் எட்டு இடங்களில் அடியார்க்கு நல்லார் பிற உரையாரின் கருத்துக்களைச் சுட்டிக் காட்டுகின்ருர். இவை அரும்பதவுரையார் கொண்ட பொருள்கோளினும் வேறுபாடானவை.எனவே சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை தவிரப் பிற உரையும் எழுதப்பட்டிருக்க வேண்டுமென ஊகிக்கலாம். ஆயின் அவை நமக்குக் கிடைக்கவில்லை.

இதுகாறும் கண்டவற்ருன் அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்திலுள்ள நிரம்பை என்னும் ஊரினர் என்பதும்,இவருக்கு இப்பெயர் வழங்கக் காரணம் அவர் இறைவணங்கிய சிவபெருமான் பெயரைச் சூட்டிக் கொண்டார் என்பது பொருந்தாது என்பதும், சமயத்தால் சைனர் என்பதும், காலம் கி.பி. 14-ஆம் நூற்ருண்டு என்பதும் பெறப்பட்டன. மேலும் இவர் நூல் முழுமைக்கும் உரை எழுதக் கருதி மதுரைக் காண்டம் 1!)-ஆம் காதை வரை உரை எழுதி முடித்துள்ளார் என்பதும், இவர் உரை வழிச் சிலம்பிற்குப் பிற வுரை உண்டென்பதும் அறியப் படுகின்றன. அடியார்க்கு நல்லார் இலங்கைச் சிங்கை நகரிலிருந்து உரை செய்தார் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் இதனை முற்றிலும் ஒதுக்கி விடுவதற்கில்லை. தொடர்புடையவர்கள் இதனை மேலும் ஆராய்ந்தால் புதிய பல உண்மைகள் கிடைக்க வழியுண்டு.

# சுருக்க விளக்கம்

| | |
|---|---|
| அகம் | -அகநானூறு |
| இ.வி | -இலக்கண விளக்கம் |
| உ.சி.பா | -உரைச்சிறப்புப் பாயிரம் |
| உ.பா | -உரைப்பாயிரம் |
| உ.பெ.க | -உரை பெறு கட்டுரை |
| க | -கட்டுரை |
| கலிங் | -கலிங்கத்துப்பரணி |
| கலி | -கலித்தொகை |
| கவிச் | -கவிச்சக்கரவர்த்தி |
| குறள் | -திருக்குறள் |
| குறுந் | -குறுந்தொகை |
| சிந்தா | -சீவகசிந்தாமணி |
| சிலப் | -சிலப்பதிகாரம் |
| சிறுபாண் | -சிறுபாணாற்றுப்படை |
| சூளா | -சூளாமணி |
| தண்டி | -தண்டியலங்காரம் |
| திரி | -திரிகடுகம் |
| திருச்சிற் | -திருச்சிற்றம்பலக் கோவையார் |
| திருமுருகு | -திருமுருகாற்றுப்படை |
| திவா | -திவாகரம் |
| தொல் | -தொல்காப்பியம் |
| நன் | -நன்னூல் |
| நாலடி | -நாலடியார் |
| நான்மணிக் | -நான்மணிக்கடிகை |
| நெடுநல் | -நெடுநல்வாடை |
| பக் | -பக்கம் |

| | |
|---|---|
| பட்டினப் | -பட்டினப்பாலை |
| பதி,ப | -பதிகம் |
| பதிற் | -பதிற்றுப்பத்து |
| பழ | -பழமொழி |
| பாக | -பாகவதம் |
| பிங் | -பிங்கலந்தை |
| புகார்க்.க | -புகார்க்காண்டம் கட்டுரை |
| பு.வெ | -புறப்பொருள் வெண்பாமாலை |
| புறம் | -புறநானூறு |
| பெருங் | -பெருங்கதை |
| பெரும் | -பெரும்பாணாற்றுப்படை |
| பொருந | -பொருநராற்றுப்படை |
| மணி | -மணிமேகலை |
| மதுரைக் | -மதுரைக்காஞ்சி |
| மலைபடு | -மலைபடுகடாம் |
| முத்தொள் | -முத்தொள்ளாயிரம் |
| முல்லை | -முல்லைப்பாட்டு |
| வளை | -வளையாபதி |
| வெ | -வெண்பா |

# இலக்கியப் புலமை

ஓர் இலக்கிய அல்லது இலக்கண உரையாசிரியருக்குத் தாம் உரை எழுதப்போகும் நூலில் மட்டும் நன்கு பயிற்சி இருந்தால் போதாது. அதற்கு முன்னர் எழுந்த இலக்கியம், இலக்கணம், உரை நூல், நிகண்டுகள் ஆகியவற்றிலும் நன்கு பயிற்சி இருத்தல் வேண்டும். இத்தகைய பயிற்சியின்றேல் மூலநூலை நன்கு உணரவும், மூல நூலாசிரியரின் உட்கோளைத் தெளிவுபடுத்தவும் முடியாது. நம் பழந்தமிழ் இலக்கிய இலக்கண உரையாசிரியர்கள் இத்தகைய பயிற்சி மிக்கவர்கள் என்பதை அன்னார்தம் உரையைப் பார்த்த அளவில் அறிந்துகொள்ள முடியும். சிலம்பிற்கு உரை கண்ட அடியார்க்கு நல்லார் பல்கலைச் செல்வராக மிளிருகின்றார். பிற உரையாசிரியருக்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு நல்லாருக்கு உண்டு. அதுதான் அவருடைய இசை நாடகப் புலமை. அதோடு தாம் மேற்கோளாக எடுத்தாளும் நூற் பெயரையும் பாடல் எண்ணை யும் பெரும்பாலும் குறிப்பிட்டுக் காட்டுவது நல்லாரின் தனித் தன்மையாக அமைகின்றது. இலக்கணப் புலமை, இலக்கியப் பயிற்சி, நிகண்டாராய்ச்சி, கலைஞானம் மிக்க நல்லார் கணுநூற் புலமையும், வானநூல் வன்மையும், உளநூல் அறிவும் மிக்கவர் என்பது அவர்தம் உரைவழித் தெரிய வருகின்றது.

அடியார்க்கு நல்லாரின் இலக்கணப் புலமை முற்கட்டுரையில் விளக்கப் பட்டது. இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் சங்க இலக்கியம், காப்பியம், பதினெண் கீழ்க் கணக்கு நூற்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியங்கள் ஆகியவற்றில் நன்கு புலமைப் பெற்றிருந்தார் என்பது அவர்தரும் மேற்கோளால் விளங்கும்.

**சங்க இலக்கியம்**

பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் சங்க இலக்கியங்களாகக் கருதப்படுவன. பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருந ராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப் பாலை, மலைபடுகடாம் ஆகிய ஒன்பது பாட்டு நூற்களிலிருந்து மேற் கோள் காட்டுகின்றார். பத்துப் பாட்டில் குறிஞ்சிப்பாட்டு மட்டுமே நல்லாரால் மேற்கோளாக எடுத்தாளப் படவில்லை. தொகை நூற்களில் குறுந்தொகை, பதிற்றுப்பத்து, கலித்தொகை, அக நானூறு, புறநானூறு ஆகிய ஐந்து நூற்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். இங்கும் நற்றிணை, ஐங்குறுநூறு, பரிபாடல் ஆகிய மூன்று நூற்கள் மேற்கோளாக எடுத்தாளப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

திருமுருகாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற் றுப்படை, முல்லைப் பாட்டு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து ஆகியன முறையே ஒவ்வோரிடத்து எடுத்துக்காட்டப்படுகின்றன. மலைபடுகடாம் ஈரிடத்து மேற்கோள் காட்டப்படுகிறது. பொருந ராற்றுப்படை, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய மூன்றும் முறையே மும்மூன்றிடங்களில் மேற்கோளாக எடுத்தாளப் படுகின்றன. மதுரைக்காஞ்சியிலிருந்து ஏழும், அகநானூற்றி லிருந்து எட்டும், கலித்தொகையிலிருந்து ஒன்பதும், புற நானூற்றிலிருந்து இருபதும் மேற்கோளாக எடுத்தாளப்படு கின்றன.[1]

மேற்கோள் பாடல்களும் வரிகளும் பெரும்பாலும் சொற் பொருள் விளக்கம் செய்கின்றபோது நல்லாரால் எடுத்தாளப் படுகின்றன. இன்ன சொல் இதே பொருளில் இன்ன இலக்கியத் தில் ஆளப்பெற்றுள்ளது எனக் காட்டிச் செல்கின்றார். விளையுள், பாகல், கொடுவாய்க் குயம், கூவியர், மாய்தல், பசந்து, யாமம், நாழிகைக் கணக்கர், காரிருள், வான்கேழ் வட்டம், அகில், வகுந்து, தன்றெறல் வாழ்க்கை, அதிராச் சிறப்பு, முதிர்தல்,

---

1. அட்டவணை பார்க்க.

பெருந்தோள், இறுத்த, குறியா, உரிது, காழியர், நொச்சி, தோல், வீழ்குடி, கோட்டுமா, கோளி, முழுநெறிக் குவளை, புகைக் கொடி, இந்திரர், கொடுங்காய், பூவல், நொடை, குழவித் திங்கள், வால் வெண் முதலான சொற்களுக்குப் பொருள் கூறிய நல்லார் இச் சொற்கள் இதே பொருளில் சங்க இலக்கியங்களில் ஆட்சி பெறுவதை எடுத்துக் காட்டுகின்றார். வேற்றுமை உருபு வருகை, உருபு மயக்கம் ஆகியவற்றிற்கும் சங்க இலக்கியத்திலிருந்து எடுத்துக் காட்டுக்கள் காட்டி விளக்குகின்றார். முதலுக்குச் சினை அடையாக அமைவதை எடுத்துக்காட்டி (மலர்க்குறிஞ்சி) இதற்குச் சங்க இலக்கியத்திலிருந்து (கனி விளவு) எடுத்துக்காட்டுத் தருகின்றார். இவை, நல்லாரின் சொற்பயிற்சித் திறனுக்குச் சான்றாக அமைகின்றன.

பொருளாராய்ச்சியும் பல விடங்களில் செய்கின்றார் நல்லார். முருகனைச் 'செவ்வேள்' என அடிகள் குறிக்க (1:36-39) அதற்கேற்ப அவன் நிறம் சிவப்பு என்பதைத் திருமுருகாற்றுப்படை கொண்டு விளக்குகின்றார். 'பேராச்சிறப்பின் புகார் நகர்' (பதி:15) என அடிகள் கூற, நல்லார் பிற பெயரும் சிறப்புடையன எனக் கூறி 'வஞ்சியும் வறிதே', 'மதுரையும் வறிதே', 'உறந்தையும் வறிதே' என்ற சிறுபாணாற்றுப்படை வரிகளைச் சான்று காட்டுகின்றார். கள்வர்தம் இயல்பை அடிகள் வழிநின்று விளக்கிய நல்லார் அதற்கு மேலும் ஒரு விளக்கமாக மதுரைக்காஞ்சி வரிகளை எடுத்துக் காட்டுகின்றார். மாலைக்காலத்தில் நெல்லும் முல்லை மலரும் தூவி இல்லுறை தெய்வத்தை மகளிர் வணங்கும் வணக்கத்தை அடிகள் குறிப்பிட அது சங்க காலத்தும் வழக்கிலிருந்தமையை நெடுநல்வாடை வரிகளை எடுத்துக் காட்டி விளக்குகின்றார் நல்லார்.

'அரும்பொருள்' என்று மட்டும் இளங்கோ குறித்துச் செல்ல அவை இவையிவை எனப் பட்டினப்பாலை வரி கொண்டு விளக்குகின்றார். குலத்திற்குன்றாக் கொழுங்குடிச் செல்வர் (வணிகர்,2:8) என்ற வரிக்கு உரை எழுதிய நல்லார் குலத்திற்குன்றா வணிகரியல்பு இதுவெனப் பட்டினப்பாலை வரிகொண்டு தெளிவிக்கின்றார். 'முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து ..பாலையென்பதோர் படிவங்கொள்ளும்' (11:64-66) என்பதற்கிணங்க முல்லை திரிந்து பாலையானதற்கு அகநானூற்றுப் பாடலையும், குறிஞ்சி திரிந்து பாலையானதற்குக் கலித்தொகைப் பாடலையும் காட்டி விளக்குகின்றார். மேலும் நீரின்மையாகிய பாலையின் இயல்பை விளக்குதல், காம மயக்கத்தால் மகளிர் வண்டினம் கடிதல் இயலாமை, குடைச் சிறப்புக் கூறல், முரசுநாட் கோடல்,

இம்மை மறுமைபற்றிய விளக்கம், உயவற் பெண்டிரின் கைம்மை நோன்பு ஆகியவற்றிற்கும் சங்க இலக்கியத்தில் இருந்து காட்டுக்கள் தந்து விளக்குகின்ருர். இங்ஙனம் பொருள் விளக்கம் செய்கின்றபோது தம் கருத்துக்கு ஏற்பச் சான்று காட்டியும், ஒப்புடைய சங்க நூற் கருத்துக்களை எடுத்துக்காட்டியும் விளக்கிச் செல்கின்ருர் நல்லார்.

பிற நூலார் கருத்தை மறுக்க ஓரிடத்துச் சங்க இலக்கியப் பாடலைச் சான்று காட்டுகின்ருர் நல்லார். 'கொன்றை' என்பது ஒரு 'பண்' என்ற பிற நூலார் கருத்தை மறுத்து அது பண் அல்ல; ஒரு கருவியே என நிறுவிய நல்லார் அதற்குச் சான்ருகக் கலித் தொகைப் பாடல் ஒன்றை எடுத்துக் காட்டுகின்ருர். இங்ஙனம் சொல்லாராய்ச்சி, பொருளாராய்ச்சி செய்வதற்கும், பிறநூலார் கருத்துக்களை மறுத்து எழுதுவதற்கும் உரிய ஆற்றலையும் துணிவை யும் அளித்தது நல்லாரின் சங்க இலக்கியப் புலமை என்பின் அது மிகையாகாது.

**காப்பியங்கள்**

காப்பியங்களில், தாம் உரை எழுத எடுத்துக்கொண்ட சிலப் பதிகாரத்தில் ஆழ்ந்து தோய்ந்து அழுந்தியவர் அடியார்க்கு நல்லார் என்பது தெரிகின்றது. தம் உரையில் கிட்டத்தட்ட 168-இடங்களில் 250-க்கும் மேற்பட்ட வரிகளை எடுத்துக்காட்டு கின்ருர். அடுத்து, பெருங்கதை, மணிமேகலை, வளையாபதி, சூளா மணி, சீவக சிந்தாமணி ஆகிய சமண பௌத்த சமயக் காப்பியங் களிலிருந்தும் பலவரிகளை மேற்கோளாக எடுத்தாளுகின்ருர். பெருங்கதையின் 20-வரிகள் ஒன்பது இடங்களில் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன. மணிமேகலைத் தொடரைப் பதின்மூன்றிடங் களில் மேற்கோளாகக் கையாளுகின்ருர் நல்லார். 27-வரிகள் இதிலிருந்து கொள்ளப்பட்டுள்ளன. சூளாமணிப் பாடல் இரண்டு முழு நிலையில் ஈரிடங்களில் எடுத்தாளப் படுகின்றன. வளையாபதிப் பாடல்கள் ஐந்தினை முழுநிலையில் ஐந்திடங்களில் மேற்கோளாக எடுத்தாளுகின்ருர் அடியார்க்கு நல்லார். 48-இடங்களில் சிந்தா மணிப் பாடல்கள் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன. சிந்தா மணியின் 107-வது பாடல் மூன்றிடங்களிலும், 932-வது பாடல் ஈரிடங்களிலும் எடுத்துக் காட்டாக அமைகின்றன. சிந்தாமணி 672-வது பாடல் உரையில் நச்சினுர்க்கினியர் மேற்கோள் காட்டிய பாடல் ஒன்றும் இங்கு இடம் பெறுகின்றது. இராமாயணம் உத்தர காண்டத்திலிருந்து ஒரு பாடல் எடுத்துக் காட்டப்படுகிறது. 'கவிச்சக்கர வர்த்தி' என்ற நூலிலிருந்து ஒரு பாடலும் எடுத்துக் காட்டாக அமைகின்றது. இது எத்தகைய நூல் என்பது தெரிய வில்லை.

பதிகத்தின் முதலிரு வரிகட்கு எழுதிய உரையில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலையாகிய ஐந்நிலங்கட்குரிய முதல், கரு, உரிப் பொருட்களைக் குறிப்பிட்டு அவற்றிற்குக் காட்டாகப் பல வரிகளைச் சிலம்பிலிருந்து மேற்கோள் காட்டுகின்றார். இங்குச் சில வரிகள் இருவேறு நிலங்கட்கு முதற் பொருளாகவும், கருப் பொருளாகவும், உரிப் பொருளாகவும் அமைவதையும் காட்டு கின்றார் நல்லார். கானல்வரி 50-வது பாடல் முல்லைக்கும் நெய்த லுக்கும் சிறு பொழுதாகக் காட்டப்படுகிறது. அது போன்று 49-வது பாடலின் முதல் இருவரிகள் முல்லை, நெய்தலுக்குரிய உரிப் பொருளாகக் காட்டப்படுகின்றது. 11-வது காதையின் 78-வது வரி 'நீர் நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்' என்பது முல்லை, பாலைக்குரிய விலங்காகக் கொள்ளப்படுகின்றது. 'ஆய் கொடிக் கவலை' (11:82) முல்லைக்கும் பாலைக்கு முரிய வார்கொடியாகக் காட்டப்படுகிறது.

மேலும், புகார்க் காண்ட இறுதிக் கட்டுரையில் அமையும் ஒவ் வொரு தொடருக்கும் காதை நிகழ்ச்சிகளைப் பொருத்திக்காட்டும் போது பல வரிகள் மேற்கோளாக எடுத்தாளப்படுகின்றன. மேலும் பல்வேறு நோக்கங்களுடன் சிலம்பு வரிகள் ஆங்காங்கே மேற் கோளாகின்றன. இவை அட்டவணையில் விரிவாகத் தரப்பட் டுள்ளன. இவற்றை எல்லாம் நோக்க, அடியார்க்கு நல்லார் சிலம்பு முழுமையையும் மிகத் தெளிவாக அறிந்து, அதனை முழு நிலையில் கற்றுத் தோய்ந்தவர் என்பதும், சிலம்பிற்கு முழுவதும் உரை எழுதக் கருதியிருத்தல் வேண்டும் என்பதும், அது எக் காரணத்தாலோ மதுரைக் காண்டத்துடன் நின்று விட்டது என்பதும் பெறப்படுகின்றது. மேலும் தற்காலத்தார் சிலர் கருதுவது போல அடியார்க்கு நல்லார் வஞ்சிக் காண்டத்தைப் பிற்சேர்க்கை என்றோ, அதனை அடிகள் பாடவில்லை என்றோ கருதவில்லை என்பதும் புலப்படுகின்றது.

**பெருங்கதை :** பெருங்கதையை உதயணன் கதை என்றும், பெருங்கதை என்றும், கதை என்றும் பெயர் சுட்டுகின்றார். "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச் சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவின் பாண்டியன் அவைக்களத்து அகத்தியனாரும், தொல்காப்பிய னாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியாரும், வெள்ளூர்க் காப்பியனாரும், சிறுபாண்டரங்கனாரும், மதுரையாசிரியன் மாறனா ரும், துவரைக் கோமானும், கீரந்தையாரும் என்றித் தொடக்கத் தார் ஐம்பத்தொன்பதின்மர் உள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர் தம்மாற் பாடப்பட்ட கலியும் குருகும் வெண்டாளியு முதலிய

செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை'[1] எனப் பெருங்கதையைச் சிறப்பிக்கின்ருர் நல்லார். சிலம்பில் ஆளப்படும் சொற்கள் பெருங்கதையிலும் ஆளப்படுதலே எடுத்துக்காட்டும் நோக்கில் ஆறு இடங்களில் பெருங்கதை வரிகள் மேற்கோளாகக் காட்டப் பெறுகின்றன. அதோடு ஒன்பது வகை இருக்கைகள் பற்றி விளக்கும்போதும், பேரியாழின் அமைப்பைப் பேசும்போதும் பெருங்கதைத் தொடர்கள் நல்லாரால் மேற்கோளாகக் காட்டப் படுகின்றன.

மணிமேகலே : நல்லார் மேற்கோள் காட்டும் காப்பியங்களில் மணிமேகலேயும், உத்தர காண்டமும் தவிர ஏனையவை சைன சமயக் காப்பியங்கள் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. பௌத்த சமயக் காப்பியமான மணிமேகலேயில் நல்லாருக்குச் சிறந்த பயிற்சி இருந்திருக்க வேண்டுமென்பது தோன்றுகிறது. இந்த அளவு இராமாயண உத்தர காண்டத்தில் பயிற்சி உடையவர் நல்லார் என்று கூற முடியாது. இதனுலேயே நல்லாரைச் சமணர் எனக் கூறத் தோன்றுகிறது. சமண சமயத்தைச் சார்ந்த ஒருவர் மணிமேகலேயில் மிக்க பயிற்சியுற்றிருந்தமைக்கு அடிப் படைக் காரணம் இருகாப்பியங்கட்கும் கதையமைப்பில் உள்ள தொடர்பே. அதோடு இரண்டும் சமகாலத்தில் இயற்றப்பட்ட தென்பதும், அடிகள் சிலம்புபாடச் சாத்தனுர் கேட்டார் என்றும், சாத்தனுர் மணிமேகலே பாட அடிகள் கேட்டார் என்றும் இரு காப்பியப் பதிகம் கூறுதலானும், நல்லார் மணிமேகலேயைக் கற்றுத் தேர்ந்திருக்கலாம் எனக்கொள்ள இடமுண்டு.

காப்பியப் பொருண்மை நான்கில் அறனும் வீடும் பயப்பச் செய்யப்பட்ட ஒரு காப்பியம் மணிமேகலே என்பது நல்லாரின் கொள்கை.[2] மேலும் சிலப்பதிகாரமும் மணிமேகலேயும் சேர்ந்ததே ஒரு பெருங்காப்பியம் என்றும் அவர் கருதுகின்ருர்.

மணிமேகலே வரிகளும் பெரும்பாலும் 'சொல்லாட்சி'யை விளக்கவே எடுத்துக்காட்டப் படுகின்றன. கெடுத்து, உண்பதோர் வினே, வசி, காப்பியம், இறும்பூது, மகன் ஆகிய சொற்கள் மணி மேகலேயில் பயன்படுமாற்றை எடுத்துக்காட்டுகின்ருர். முந்தை என்பது முத்தை என விகாரமாகச் சிலம்பில் ஆளப்படுதலேச் சுட்டி அது மேகலேயிலும் அவ்வாறு அமைவதை ஓரிடத்துச் சுட்டுகின்ருர். புகாரில் 28-நாட்கள் இந்திரவிழா நடந்தது என விளக்கிய நல்லார்

---

1. சிலப்பதிகாரம்—உரைப்பாயிரம்—பக் : 6-8.
2. சிலப்பதிகாரம்—உரைப்பாயிரம்—பக் : 11.

சான்ருக மணிமேகலை வரியைக் காட்டுகின்ருர். மக்கள் கண்க ளுக்குத் தெய்வ யாக்கை புலப்படாது என விளக்கிய ஆசிரியர் அதற்கு மணி மேகலையைத் துணைக்கொள்கின்ருர். காமன் ஆடிய பேடிக்கூத்தை அடிகள் வழி விளக்கிய நல்லார் அவன் பேடிக் கோலம் எவ்வாறிருந்தது என்பதற்கு மணிமேகலை வரிகளை எடுத்துக் காட்டுகின்ருர். மேலும் கதை வேறு—காப்பியம் வேறு என்று பிரித்துக் காட்டவும் மணிமேகலை சான்ருக அமைகின்றது.

'இலவந்திகையி னெயிற்புறம் போகின்' என்ற சிலம்பு வரி அப்படியே மணிமேகலையில் எடுத்தாளப்படுவதை ஓரிடத்தில் சுட்டிச் செல்கின்ருர் நல்லார்.

**சூளாமணி :** சூளாமணிப் பாடல்கள் இரண்டினை மட்டுமே காட்டிச் செல்கின்ருர். இவற்றில் ஒரு பாடல் 'முதலை'யை விலங்கு எனக் கொள்ளும் இளம்பூரணர் முதலான உரையாசிரியர் கூற்றை மறுக்குமுகனுக எடுத்துக் காட்டப்படுகிறது. எனவே இப்பாடலை நல்லார், உரையாசிரியர்களின் உரை நூலிலிருந்தே எடுத்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. அடுத்த பாடல் வெள்ளியம்பலம், பொன்னம்பலம் பற்றி விளக்கக் கையாளப் படுகிறது. பிற வகையான் இந்நூல் நல்லாரால் எடுத்தாளப்படவில்லை. எனவே நல்லார் சூளாமணிக் காப்பியத்தில் மிக்க புலமையுடையவர் எனக் கூற வியலாது. ஆனுல் அதை அவர் கற்றிருக்க வேண்டு மெனத் தெளியலாம்.

**வளையாபதி :** அடியார்க்கு நல்லாரால் பெயர் குறிப்பிடப் பட்டு இன்று நமக்குக் கிடைக்காத காப்பியம் வளையாபதி. இதுவும் ஒரு சமணக் காப்பியமே. இதன் ஐந்து பாடல்கள் முழுமையாக நல்லாரால் எடுத்துக் காட்டப்படுகின்றன. நிக்கந்தக் கோட்டம் என்பதற்கு 'அருகன் கோயில்' என உரை கூறிய நல்லார் தன் கூற்றுக்கு ஆதாரமாக வளையாபதிப் பாடல் ஒன்றைக் காட்டு கின்ருர். இதே போன்று 'பாசண்டம்' என்ற சொல்லுக்கும் 96-வகைச் சமய சாத்திரம் என உரை கூறிச் சான்று விளக்கத் திற்கு ஒரு வளையாபதிப் பாடலைத் தருகின்ருர். இன்னொரு பாடல் மூலம் நாகாத்தலின் முக்கியத்துவம் விளக்கப்படுகின்றது. 'கொன்றையம் பூங்குழல்' என அடிகள் பயன்படுத்திய அதே உவமை வளையாபதியில் பயன்படுத்தப் படுவதை ஓரிடத்து எடுத்துக்காட்டுகின்ருர். அடுத்து ஒரு பாடல் 'கொன்றை' என்பது முற் கூறியவாறே பண் அல்ல; அது ஒரு கருவி என்பதற் குச் சான்ருகக் காட்டப்படுகிறது.

**சீவகசிந்தாமணி :** கிட்டத்தட்ட 48-இடங்களில் 44 பாடல்களை நல்லார் எடுத்துக்காட்டாகத் தரினும் நான்கு பாடல்களே முழு நிலையில் எடுத்துக் காட்டப்படுகின்றன. பெரும்பான்மையும் பாடல்களின் ஓரிரு வரிகளே தரப்பட்டுள்ளன. பெரும்பாலான பாடல்கள் சொல்லாட்சியை எடுத்துக்காட்டுவன. தேவு, திளைத்தவர், புறம்பணை, இந்திரர், நாறும், கறை, நிழல், பழுது, மடவார், பின்னை, கோதை, முழுமெய்யும், இணையணை, தொடி, பிறழா, ஆடு, ஓசனித்தல் போன்ற சொற்கள் சிலம்பில் பயன் படுத்தப்பட்ட அதே முறையில் சிந்தாமணியிலும் பயன்படுத்தப் பட்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றார். உறவுப் பெயராகிய 'மகன்' என்பதை ஆண்பாற் பெயர் எனச்சுட்டிய நல்லார் 'மகள்' என்ற பெண்பாற் பெயர் சிந்தாமணியில் பயன்படுத்தப் பட்டிருப் பதையும் எடுத்துக் காட்டுகின்றார். 'மாயிரு' என்ற சொற் புணர்ச்சியைச் சிந்தாமணியில் வரும் 'கோயில்' என்ற சொற் புணர்ச்சியோடு ஒப்பிடுகின்றார். 'மென்றுகில் அல்குல்' என்பதில் துகில் அல்குற்கு அடை என விளக்கிய நல்லார் அதுபோல் 'தொண்டைச் செவ்வாய்' என்ற அடைமொழி சிந்தாமணியில் அமைவதை எடுத்துக் காட்டுகின்றார். இங்ஙனம் சொற் பயன், சொல்லமைப்பு முதலானவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்கிய ஆசிரியர் பொருளடிப்படையிலும் ஒப்புடைய சிந்தா மணிச் செய்திகளை மேற்கோள் மூலம் எடுத்துக் காட்டுகின்றார்.

மதிலில் அமைந்த பல்வேறுபட்ட பொறிகளை இளங்கோ அடைக்கலக் காதையில் பேசுகின்றார். சிந்தாமணி ஆசிரியரும் இதனைப் பேசுகின்றார். இவ்விரு இலக்கிய ஆசிரியர்கள் தரும் மதிற்காட்சியை ஒப்பிட்டு ஆராய வாய்ப்பாக நல்லார், தம் உரையில் சிந்தாமணிப் பாடல்களை மேற்கோள் காட்டுகிறார். துன்பத்தால் கைகளைத் தலைமேல் வைத்தலை (துன்பமெய்ப்பாடு) அடிகள் காட்ட, நல்லார், துன்பத்தால் வயிறதுக்குதலைக் குறிக்கும் சிந்தாமணிப் பாடலை எடுத்துக் காட்டுகின்றார். கடையாமத்தில் கண்ட கனவு உடனே பலிக்கும் என்பதை விளக்கிய நல்லார் சிந்தாமணியில் வரும் விசையையின் கனவைக் காட்டுகின்றார். காமனது ஆட்சி புகாரில் இரவு முழுவதும் நடந்ததை அடிகள் வழிநின்று விளக்கிய நல்லார் அது பற்றிய சிந்தாமணிச் செய்தி யையும் எடுத்துக் காட்டுகின்றார். குலமகள் காமனைத் தொழுதல் இல்லை என்ற சிலம்புச் செய்தி சிந்தாமணியிலும் குறிக்கப்படுவதை நல்லார் உரை வழி அறிகின்றோம்.

அணிவகையில் ஒப்புடைய சில உவமைகள் நல்லாரால் எடுத்துக் காட்டப்படுகின்றன. காமனின் வில் புருவத்திற்கு

உவமையாவதும், முருகனின் வேல் கண்ணுக்கு உவமையாவதும் சிலம்பு வழி அறியப்படுவன. இதே உவமைகள் சிந்தாமணியிலும் ஆளப்படுவதை நல்லார் உரையால் அறிய முடிகிறது. 'குழலும் யாழும் அமுதும் குழைத்தது போன்ற இனிமை மிக்க மழலைமொழி மிக்கவள் கண்ணகி' என்பதை இல்பொருள் உவமை என விளக்குவர் நல்லார். இதே இல்பொருள் உவமை யமையும் 'கரும்பும் தேனும் அமுதும் பாலுங் கலந்த தீஞ்சொல்' என்ற சிந்தாமணி வரியை எடுத்துக் காட்டுகின்றார். இங்ஙனம் காப்பியங்களைப் பொறுத்தமட்டில் தொட்ட தொட்ட இடமெல்லாம் சிந்தாமணியை நல்லார் மேற்கோள் காட்டுகின்றார். இது நல்லாரின் சிந்தாமணிப் புலமையை நன்கு வெளிக்காட்டும். கி. பி. 14-ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த நல்லார் சைவத் திருமுறைகளையும், சைவ சமயக் காப்பியமான பெரிய புராணத் தையும் மேற்கோளாக எடுத்தாளாதது வியப்பாக வுள்ளது. காரணம் அக் காலத்தில் சைவ இலக்கியங்கள் மக்கள் மத்தியிலும் புலவர்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இக் காலத்தில் வாழ்ந்த நல்லார் சிறப்புமிக்க சைவ இலக்கியங்களையும், மிகச் சிறந்த வைணவக் காப்பியமான கம்பராமாயணத்தையும் மேற்கோள் காட்டாமையான் இவர் சைவ வைணவ சமயங்களைச் சார்ந்தவராக இருக்க முடியும் என எண்ணத் தோன்றவில்லை. சமண இலக்கியப் பயிற்சியே மிகுதியும் உடைமையின் இவரைச் சமணர் எனக் கொள்வதே ஏற்புடையதாகும். இங்ஙனம் நல்லாரின் சமயத்தை ஓரளவு அறிவதற்கும் அவருடைய இலக்கிய அறிவு துணை செய்கிறது எனலாம்.

'ஆரஞர்' என்ற சொல்லுக்கு, 'பெரிய வருத்தம்; ஆவது கணவனை இழத்தல்' என உரை கூறி அதற்குச் சான்றாக ஒரு உத்தரகாண்டப் பாடலை எடுத்துக் காட்டுகின்றார். இதே போன்று புகாரில் வீர மறவர்கள் தம் தலையை அரிந்து பலிகொடுக்கும் செய்தி 'கவிச்சக்கரவர்த்தி' நூலிலும் இடம் பெறுவதை எடுத்துக் காட்டுகின்றார். இவை அவரது பல் இலக்கிய அறிவைச் சுட்டுகின்றன.

### பதினெண் கீழ்க்கணக்கு நூற்கள்

பதினெண் கீழ்க்கணக்கு நூற்களில் திருக்குறள், நாலடியார், பழமொழி, நான்மணிக் கடிகை, திரிகடுகம் ஆகியவற்றிலிருந்து மேற்கோள் பாடல்களை எடுத்துத் தருகின்றார் நல்லார். இவற்றில் திருக்குறளிலிருந்தே மிகுதியான குறள்மணிகள் மேற்கோளாக எடுத்தாளப் படுகின்றன. திருக்குறளிலிருந்து பதினோரு குறள்கள்

மேற்கோளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை பெரும்பாலும் சொற்பொருள் விளக்கவே எடுத்தாளப் படுகின்றன. 'அல்லவை செய்தார்க்கு அறங்கூற்ற மாகும்', 'புகழ் இம்மைக்கும் மறுமைக் கும் இன்பம் தருவது' என்ற இரு கருத்துக்கட்கு விளக்கமாக இரு குறள்கள் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன. பெண் ஐம்புல னுக்கும் இன்பம் தருபவள் என்ற கருத்தமைந்த குறளும் இடத் திற்கு ஏற்ப மேற்கோளாக எடுத்தாளப் படுகிறது.

நாலடியாரிலிருந்து நான்கு எடுத்துக் காட்டுகள் தரப்படு கின்றன. இவற்றில் மூன்று சொல்லாட்சியை நோக்கமாகக் கொண்டன. எஞ்சிய ஒரு பாடல் வினைப்பயனை விளக்கும் நோக்கில் எடுத்தாளப்படுகின்றது. பழமொழி நானூறு, நான்மணிக் கடிகை ஆகியவற்றிலிருந்து முறையே ஒவ்வொரு எடுத்துக் காட்டுக்கள் அமைகின்றன. திரிகடுகப் பாடல் இரண்டு எடுத்தாளப் படுகின் றன. இவையனைத்தும் சொல்லாட்சியை விளக்கும் நோக்க முடையன.

**சிற்றிலக்கியங்கள்**

சிற்றிலக்கிய வகையில் கலிங்கத்துப்பரணி மட்டுமே மேற் கோளாக எடுத்தாளப்படுகிறது. நான்கிடங்களில் இந்நூல் பாடல்களை மேற்கோள் காட்டுகின்றார் நல்லார். இவற்றில் இரண்டு கரிகால்வளவன் இமயத்தில் புலி பொறித்த வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்துரைக்கும் நோக்கமுடையன. ஒன்று மறவர் தம் தலையைத் தாமே அரிந்து பலிக்கொடை செய்வதை விளக்கு வது. மற்றது 'சூர்த்து' என்னும் சொல் (சிலம்பில் இடம் பெறுவது) கலிங்கத்துப்பரணியில் வருவதைச் சுட்டும் நோக்க முடையது. முத்தொள்ளாயிரப் பாடல் ஒன்றும் இந்நோக்கில் எடுத்தாளப் படுகிறது.

நான்கு இடங்களில் மட்டுமே திருச்சிற்றம்பலக் கோவையார் மேற்கோளாக எடுத்தாளப்படுகிறது. பாடல் என்று நோக்கும் போது மூன்று பாடல்களே. கிடைக்கக் கூடிய சான்றுகளைக் கொண்டு விருப்பு வெறுப்பற்ற நிலையில் நல்லாரின் இலக்கியப் புலமையை உண்மையாக உணர்ந்து அவ்வழி அவர் சமயத்தைக் காண முற்படுவார்க்கு, அவர் சமணராகவே இருந்திருக்க வேண்டும் என்பது எளிதில் விளங்கும்.

**பஞ்ச தந்திரம்**

பஞ்ச தந்திரம் என்பது வடமொழியில் எழுதப்பட்ட ஒரு பழங்கதைத் தொகுதி நூல். நாட்டு மக்கள் வழக்கில் உள்ள

பல பழங்கதைகள் இதன்கண் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்றே கீரிப்பிள்ளை-பார்ப்பனி கதை. இக் கதை சிலம்பிலும் அடிகளால் எடுத்தாளப்படுகிறது. இவ்விடத்திற்கு உரை எழுதிய நல்லார் இதனோடு தொடர்புடைய பஞ்ச தந்திரச் சுலோகம் ஒன்றை மேற்கோள் காட்டுகின்றார். இது நல்லாரின் வடமொழி இலக்கியப் பயிற்சியைக் காட்டும்.

இங்ஙனம் பெயர் குறிப்பிடப்படும் இலக்கியங்களன்றிப் பெயர் குறிப்பிடப்படாத சில இலக்கியப் பாடல்களும் நல்லாரால் எடுத்துக்காட்டப் படுகின்றன. இவற்றில் குறிப்பிடத் தக்கன ஊர்வசி-சயந்தன் சாப வரலாறு பற்றிய பாடல்களும், நாளங்காடிப் பூத வரலாறு பற்றிய பாடலுமாகும். இவை இலக்கியங்களிலிருந்து எடுக்கப் பட்டனவா? அல்லது இசை நாடகக் கலை நூற்களிலிருந்து எடுக்கப் பட்டனவா? எனத் தெளிவாக அறிய முடியவில்லை. எவ்வாறுயினும் நல்லார் காட்டும் மேற்கோள் பாடல்களைக் காணுகின்றபோது அவர்தம் பரந்துபட்ட இலக்கியப்புலமை தெற்றெனப் புலப்படுகின்றது. இத்தகைய சிறந்த இலக்கியப் பயிற்சி உடைமையாலேயேதான் இன்றும் அவர்தம் உரை இலக்கியஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயனளிக்கிறது.

# இலக்கிய மேற்கோள்கள்

| எண் (1) | பாடலடி (2) | எடுத்தாளப்படும் இலக்கியம் (3) | எடுத்தாளப்படும் இடம் (சிலம்பில்) (4) | நோக்கம் (5) |
|---|---|---|---|---|
| | **சங்க இலக்கியம்** | | | |
| 1. | ‘ஞாயிறு கடற்கண் டாஅங்கு’ | திருமுரு: வரி-2 | 1:36-39, பக்: 39-40 | முருகனின் நிறம் குறிக்க |
| 2. | ‘வேலி யாயிரம் விளையுட் டாக’ | பொருந : 246-47 | 6:28-34, பக்:187 | சொற் பொருள்-‘விளையுள்’ |
| 3. | ‘பைம்பாகற் பழந்துணரிய செஞ்சுளைய கனிமாந்தி’ | ,, 191-92 | 16:22-28, பக்:426 | ,, -‘பாகல்’ |
| 4. | ‘கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து’ | ,, 242 | 16:30, பக்:426 | ,, -‘கொடு வாய்க்குயம்’ |
| 5. | ‘‘காரகற் கூவியர் பாகொடு பிடித்த’ | பெரும்: 377 | 5:24, பக்:154 | ,, -‘கூவியர்’ |
| 6. | ‘வஞ்சியும் வறிதே’ ‘மதுரையும் வரிதே’ ‘உறந்தையும் வறிதே’ | சிறுபாண்:50, 67, 83 | பதி:12-20, பக்:20 | புகாரின் பேராச் சிறப்புக் குறிக்க |
| 7. | ‘கனிவிளவின் காய்’ | முல்லை: இறுதி வெண்பா | 14:89, பக்:373 | முதலுக்கு சினை அடை -‘மலர்க் குறிஞ்சி’ |
| 8. | ‘களிறு மாய்க்குங் கதிர்க்கழனி’ | மதுரைக்:247 | 9:2, பக்:247 | சொற் பொருள்-‘மாய்தல்’ |
| 9. | ‘செல்சுடர்ப் பசுவெயிற் றேன்றி யன்ன’ | ,, 411 | 4:5, பக்:129 | ,, -‘பசந்து’ |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | ‘நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்<br>மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்<br>நிலனக ழுளியர் கலனசை இக் கொட்கும்<br>சுண்மா ருடவ ரொடுக்க மொற்றி’ | மதுரைக்: 639-42 | 16:204-11, பக்:436 | கள்வரியல்பு |
| 11. | ‘மற்றை யாமம் பகலுறக் கழிப்பி’ | ,, 653 | 4:81, பக்:135 | சொற் பொருள்-‘யாமம்’ |
| 12. | ‘சூதர் வாழ்த்த மாகதர் நுவல<br>வேதா ளிகரொடு நாழிசை யிசைப்ப’ | ,, 670-71 | 5:49, பக்:157 | ,, -நாழிகைக் கணக்கர் |
| 13. | ‘கொல்லேற்றுப் பசுந்தோல் சீவாது போர்த்த<br>மயிர்க்கண் முரச மோவில கறங்க’ | ,, 732-33 | 5:88, பக்:160 | ,, -‘மயிர்க் கண் முரசு’ |
| 14. | ‘குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற்<br>றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்கம்’ | ,, 195-96 | 10:3, பக்:267 | ,, -‘காரிருள்’ |
| 15. | ‘நெல்லு மலருந் தூஉய்க் கைதொழுது<br>மல்ல லாவண மாலை யயர’ | நெடுநல்: 43-44 | 9:1-3, பக்:245 | மாலைக்கால வழிபாடு (மகளிர்) |
| 16. | ‘வடவரை தந்த வான்கேழ் வட்டம்’ | ,, 51 | 4:37, பக்:131 | சொற் பொருள்-‘வான் கேழ் வட்டம் |
| 17. | ‘இருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்ப’ | ,, 56 | 4:36, பக்:131 | ,, ‘அகில்’ |
| 18. | ‘இருகாமத் திணை யேரி’ | பட்டினப் : 39 | 9:59, பக்:250 | சோம குண்டம், சூரிய குண்டம் விளக்கம் |
| 19. | ‘நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்<br>காலின் வந்த கருங்கறி மூடையும்<br>வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்<br>குடமலைப் பிறந்த வாரமு மகிலும் | | | |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | தென்கடன் முத்துங் குணகடற் றுகிரும்<br>கங்கை வாரியுங் காவிரிப் பயனும்<br>ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்<br>அரியவும் பெரியவும்’ | பட்டினப் : 185-92 | 2:5, பக்:47 | அரும்பொருள் |
| 20. | ‘நெடு நுகத்துப் பகல்போல<br>நடுவு நின்ற நன்னெஞ்சினோர்<br>வடுவஞ்சி வாய்மொழிந்து<br>தமவும் பிறவு மொப்ப நாடிக்<br>கொள்வதூஉ மிகைகொளாது<br>கொடுப்பதூங் குறைகொடாது’ | பட்டினப் : 206-210 | 2:8, பக்:47 | குலத்திற்குன்றுமை- விளக்கம் |
| 21. | ‘வரைசேர் வகுந்திற் கானத்துப் படினே’ | மலைபடு: 242 | 15:17, பக்:400 | சொற்பொருள்–‘வலிந்து’ |
| 22. | ‘மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்<br>வெல்போர்ச் சேஎய் பெருவிற லுள்ளி<br>வந்தோர் மன்ற வளியர் தாமென’ | ,, 492-94 | 15:195, பக்:408-09 | ,, –‘தன்றெறல் வாழ்க்கை’ |
| 23. | ‘மாக்கட னடுவ ணெண்ணாட் பக்கத்துப்<br>பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்<br>கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்’ | குறுந் : 129 | 2:38-41, பக்:50 | பிறை நுதல்-விளக்கம் |
| 24. | ‘வடவ ருட்கும்’ | பதிற்: 5-ஆம் பத்து-பதிகம் | பதி:1-2, பக்:12 | இளங்கோ துறவு-விளக்கம் |

| | | | |
|---|---|---|---|
| 25. 'சீறருங் கணிச்சியோன் ......—<br>வரைபிளந் தியங்குநர்<br>ஆறுகெட விலங்கிய வழலவி ராரிடை' | கலி: 2:6-8 | 11:60-67, பக்:302 | குறிஞ்சி திரிந்து பாலையாதல் |
| 26. 'துள்ளுநர்க் காண்மார்' | ,, 4:5 | 2:49-52, பக்:51 | முருகன் செயலுக்கு ஒப்புமை |
| 27. 'மரையா மரல் கவர' | ,, 6:1 | 11:77, பக்:303 | விலங்கு சுவைத்தலால் 'மரல்' திரங்குதல் |
| 28. 'நீர்முற்றி மதில் பொரூஉம்' | ,, 67:4 | பதி:39, பக்:23 | சொற் பொருள்-அதிராச் சிறப்பு |
| 29. 'நீர்முற்றி மதில் பொரூஉம்' | ,, 67:4 | 2:30, பக்:49 | ,, -'முதிர்தல்' |
| 30. 'ஒருத்தி<br>கணங்கொண் டவைமூசக் கையாற்ருள் பூண்ட<br>மணங்கமழ் கோதை பரிவுகொண் டோச்சி' | கலி : 92:45-46 | 14:134-45, பக்: 371 | மகளிர் (மயக்கத்தில்) வண்டினம் கடிதல் இயலாமை |
| 31. 'ஒருத்தி<br>இறந்த களியா னிதழ்மறைந்த கண்ணள்<br>பறந்தவை மூசக் கடிவாள் கடியும்<br>இடந்தேற்ருள் சோர்ந்தனள் கை' | கலி : 92:48-50 | ,, | ,, |
| 32. 'கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்<br>இமிழிசை மண்டை யுறியொடு தூக்கி<br>ஒழுகிய கொன்றைத் தீங்குழன் முரற்சியர்<br>வழூஉச்சொற் கோவலர் தத்த மினநிரை<br>பொழுதொடு தோன்றிய கார்கனே வியன்புலத்தர்' | கலி : 106:1-5 | 17:21, பக்:452 | கொன்றை, ஆம்பல், முல்லை என்பன கருவி என்பதற்குச் சான்று |

| (1) | (2) | (3) | (4) | (5) |
| --- | --- | --- | --- | --- |
| 33. | ‘அகலல் குரேள்கண்ணென மூவழிப் பெறுகி’ | கலி:108:2 | 3:6, பக்:78 | சொற்பொருள்-‘பெருந்தோள்’ |
| 34. | ‘சேணே யிறுத்த வாய்போல’ | கலி : 108:1 | 4:12, பக்:129 | ,, -‘இறுத்த’ |
| 35. | ‘அறுநீர்ப் பைஞ்சுனை யாமறப் புலர்தலின் உகுநெற் பொரியும் வெம்மை’ | அகம் : 1 | பதி:1-2, பக்:18 | நீரின்மையாகிய பாலை இயல்புக்குச் சான்று |
| 36. | ‘குறியா வின்ப மெளிதினின் ... எய்தும்’ | அகம் : 2 | 2:37, பக்:49 | சொற்பொருள்-‘குறியா’ |
| 37. | ‘...... உரிதினிற் கொண்டாங்குப் பெயர்தல் வேண்டும்’ | அகம் : 10 | 2:40, பக்:50 | ,, -‘உரிது’ |
| 38. | ‘காழியர் கௌவைப் பரப்பின வெவ்வுவர்ப் பொழிய’ | அகம்: 89:7-8 | 5:24, பக்:154 | ,, -காழியர் |
| 39. | ‘தெறுகதிர் ஞாயிறு நடுநின்று காய்தலின்’ | அகம்:89:1 | 14:215, பக்:386 | ஞாயிறு காய்தல் |
| 40. | ‘வான மூர்ந்த வயங்கொளி மண்டிலம் நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட் டிலையி லமர்ந்த முகையி லிலவம்’ | அகம் : 11:1-3 | 11:60-67, பக்:302 | முல்லை திரிந்து பாலையாதல் |
| 41. | ‘நொச்சி வேலித் தித்த னுறந்தை’ | அகம் : 122:21 | 10:242, பக்:285 | சொல்வருகை-‘நொச்சி’ |
| 42. | ‘மணற் கீன்ற’ | அகம் : 212 | 9:15, பக்:159 | உருபு மயக்கம் |
| 43. | ‘மழை யென மருளும் பஃறோல்’ | புறம் : 17:34 | 5:81, பக்:159 | சொற்பொருள்-‘தோல்’ |
| 44. | ‘பகடு புறந்தருநர் பார மோம்பிக் குடிபுறந் தருகுவை யாயின்’ | புறம் : 35 | 5:43, பக்:156 | ,, -‘வீழ்குடி’ |

| | | | |
|---|---|---|---|
| 45. ‘கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை<br>வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய<br>குடிமறைப் பதுவே’ | புறம் : 35:19-21 | 15:9-10, பக்:399 | குடைச்சிறப்புக் கூறல் |
| 46. ‘களிறுமேற் கொள்ளவுங் காழக நீப்பவும்<br>கனவி னரியன காணு’ | புறம் : 41:9-11 | 15:98, பக்:404 | சொற்பொருள்- ‘கோட்டுமா’ |
| 47. ‘வரிசைக்கு வருந்தும்’ | புறம் : 47:6 | பதி:5, பக்:19 | சொற்பொருள்-‘கு’ உருபு |
| 48. ‘மாசற விசித்த ......ஈங்கிது செயலே’ | புறம் : 50 | 5:89-94, பக்:161 | முரசு நாட்கோடல் |
| 49. ‘இவணிசை யுடையோர்க் கல்ல தவண<br>துயர்நிலை யுலகத் துறையு ளின்மை<br>விளங்கக் கேட்ட மாறுகொல்’ | புறம் : 50:14-16 | 11:112-17, பக்:305 | இம்மை மறுமை-விளக்கம் |
| 50. ‘வலியொத் தீயே வாலி யோனை’ | புறம் : 56:12 | 5:171, பக்:167 | பலராமன் பற்றிய செய்தி |
| 51. ‘கோளி யாலத்து’ | புறம் : 58:2 | 16:24, பக்:426 | சொற்பொருள்-‘கோளி’ |
| 52. ‘முந்நீர் நாப்பட் டிமிற்சுடர் போலச்<br>செம்மீ னிமைக்கு மாக விசும்பின்’ | புறம் : 60:1-2 | 6:142, பக்:198 | ‘திமில்விளக்கு’-சான்று |
| 53. ‘தீநீர்ப் பெருங்குண்டு சுனைபூத்த<br>குவளைக் கூம்புவிடு முழுநெறி’ | புறம் : 116 | 2:14, பக்:48 | சொல்-‘முழுநெறிக்குவளை’ |
| 54. ‘மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்<br>தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்’ | புறம் : 117:1-2 | 10,102, பக்:275 | சொற்பொருள்-‘புகைக் கொடி’ |
| 55. ‘இந்திர ரமுத மியைவ தாயினும்’ | புறம் : 182:1-2 | 16:173, பக்:434 | சொல்-‘இந்திரர்’ |
| 56. ‘நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்’ | புறம் : 189:3 | 4:81, பக்:134 | செயல்-‘அரையிருள் யாமத் தும் பகலுந் துஞ்சார்’ |
| 57. ‘அணில்வரிக் கொடுங்காய்’, | புறம் : 246:4 | 16:25, பக்;426 | சொல்-‘கொடுங்காய்’ |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 58. | ‘வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட வேளை வெந்தை வல்சியாகப் பரப்பெய் பள்ளிப் பாயின்று வதியும்’ | புறம்:246:7-9 | 18:34-37, பக்:463 | உயவற் பெண்டிரின் கைம்மை நோன்பு |
| 59. | ‘பூவற் படுவிற் கூவற் றோண்டிய’ | ,, :319:1 | 16:5, பக்:424 | சொல்-‘பூவல்’ |
| 60. | ‘மீனெடுத்து நெற்குவைஇ’ | ,, :343 | 5:24, பக்:154 | சொல்-‘நொடை’ |
| 61. | ‘அப்பிறை பதினெண் கணனு மேத்தவும் படுமே’ | ,, :கடவுள் வாழ்த்து | 2:38, பக்:50 | ‘குழவித் திங்கள்’ |
| 62. | ‘ஊர்தி வால்வெள் ளேறே’ | ,, : ,, | 16:35, பக்:427 | சொல்-‘வால்வெண்’ |

## சிலப்பதிகாரம்

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1. | ‘யானறி குவனது பட்டதென்று’ | பதி:11 | உ.சி.பா, பக்:10 | காப்பியம் எழுந்த வரலாறு |
| 2. | ‘நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்’ | ,, :60 | ,, | ,, |
| 3. | ‘முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது’ | ,, :61 | 17:31, பக்:455 | மூவேந்தரையும் ஒப்ப நோக்கும் அடிகளின் பண்பு |
| 4. | ,, | ,, : ,, | 4:9, பக்:129 | சொல்-‘கெழு’ |
| 5. | ‘நீரே அருளுக’ | ,, :62 | உ.சி.பா. பக்:10 | காப்பியம் எழுந்த வரலாறு |
| 6. | ‘கொங்கிளங் கோசர்’ | உ.பெ.க. 2 | 12:45-50, பக்:322 | கண்ணகியின் தெய்வத் தன்மை |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | 'புகாரே யாயினும்' | 1:16 | புகார்க்-கட்.4,பக்:286 | பழவிறல் மூதூர்-விளக்கம் |
| 8. | '.. .. திருமுனி யருள எய்திய சாபத் திந்திர சிறுவனொடு தலைக்கோற் ருனத்துச் சாப நீங்கிய' | 3:1-3 | 3:1-7, பக்:78 | 'திருமுனி'-அகத்தியன் என்பதற்குச் சான்று |
| 9. | '....... இந்திர சிறுவனொடு தலைக்கோற் ருனத்துச் சாப நீங்கிய' | 3:2-3 | 6:18-25, பக்:187 | சயந்தன் சாப வரலாறு |
| 10. | 'ஆடலும்......தூக்கும்' | 3:16 | புகார்க்-கட்.10,பக்:286 | சொல்-'ஆடல்' 'தூக்கு' |
| 11. | 'ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி' | 3:70 | ,, 14,பக்:287 | ,, 'ஈரேழ் சகோடம்' |
| 12. | 'நூனெறி மரபி னரங்கம்' | 3:99 | புகார்க்.கட்:10,பக்:286 | சொல்-'அரங்கம்' |
| 13. | 'தோற்றிய வரங்கில்' | 3:106 | ,, | ,, - ,, |
| 14. | 'சீரியல் பொலிய' | 3:135 | ,, கட்:16,பக்:287 | ,, -'ஒளியுடைப்பாணி' |
| 15. | 'விடுத லறியா விருப்பினன்' | 3:174 | பதி:1-2, பக்:16 | மருதத்திணை ஒழுக்கம் -ஊடல் நிமித்தம் |
| 16. | 'துயிலெடுப்பி' | 4:49 | 5:133, பக்:164 | சொல்-'குரலெடுப்பி' |
| 17. | 'இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக் கொடுவரி யொற்றி' | 5:97-98 | புகார்க்.கட்:3,பக்:286 | ,, -'மறன்' |
| 18. | 'மகர வாசிகை......வீதி' | 5;151-156 | ,, :16,பக்:287 | ,, -ஊரகத் தேர் |
| 19. | 'விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டி' | 5:168 | ,, : 5,பக்:286 | ,, -விழவுமலி சிறப்பு |
| 20. | 'அறனோம் படை' | 5:179 | ,, : 3, ,, | ,, -அறன் |
| 21. | 'உருவி லாள னொருபெருஞ் சேனை இகலம ராட்டி யெதிர்நின்று விலக்கி' | 5:224-225 | 8:3-7, பக்:229 | மகளிர்-காமன்சேனை விளக்கம் |
| 22. | 'கண்ணகி கருங்கண்' | 5:237 | 18:32, பக்:463 | 'செங்கண்'என்றதன் விளக்கம் |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 23. | கோநகர் காத்த’ | 6:8 | புகார்க்.கட்:3,பக்:286 | சொல்-‘ஆற்றல்’விளக்கம் |
| 24. | ‘—......நயந்தெரி பாடலும்<br>தோரிய மடந்தை வாரம் பாடலும்<br>ஆயிரங் கண்ணோன் செவியக நிறைய<br>நாடக முருப்பசி நல்காளாகி<br>மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்<br>தங்குக விவளெனச் சாபம் பெற்ற<br>மங்கை மாதவி வழிமுதற் றேன்றிய<br>வங்கர வல்குல்’ | 6:18-25 | 3:1-7, பக்:78 | ‘திருமுனி’-அகத்தியன் என்பதற்குச் சான்று |
| 25. | ,, | 6:39-63 | புகார்க்.கட்:11,பக்:286 | ‘பாரதி விருத்தி’-விளக்கம் |
| 26. | ‘அந்தரத் துள்ளோ ரறியா மரபின் வந்து’ | 6:72-73 | 9:33-36, பக்:248 | தெய்வயாக்கை மக்கள் கண்ணுக்குத் தோன்று -சான்று |
| 27. | ‘அந்தரத் துள்ளோ ரறியா மரபின்<br>வந்து காண்குறூஉம் வானவன் விழவு’ | ,, | புகார்க்.கட்:5,பக்:286 | ‘விண்ணவர் வரவு’ -விளக்கம் |
| 28. | ‘சித்திரப் படத்துள்...குற்ற நீங்கிய யாழ்’ | 7:1-4 | பதி:1-2, பக்:17 | நெய்தல்-யாழ் |
| 29. | ‘சித்திரப் படம்......பட்டடை’ | 7:1-4 | புகார்க்.கட்:13,பக்:286 | யாழின் தன்மை |

| | | | | |
|---|---|---|---|---|
| 30. | ‘கங்கை தன்னைப் புணர்ந்தாலும்’ | 7:2:1 | 13:89, பக்:345 | ‘குலப்பிறப்பாட்டி’ -விளக்கம் |
| 31. | ‘மங்கை மாதர் பெருங் கற்பு’ | 7:2:4 | ,, : ,, | ,, ,, |
| 32. | ‘கடற்றெய்வங் காட்டிக் காட்டி’ | 7:5:1 | பதி:1-2, பக்:16 | நெய்தல்-தெய்வம் |
| 33. | ‘பொறைமலி பூம்புன்னை’ | 7:8:1 | ,, ,, | ,, -மரம் |
| 34. | ‘நறு ஞாழல் கையி னேந்தி’ | 7:9:1 | ,, பக்:17 | ,, -பூ |
| 35. | ‘விலைமீ னுணங்கற் பொருட்டாக’ | 7:10:2 | ,, பக்:16 | ,, -உணவு |
| 36. | ‘எறிவளைக ளார்ப்ப’ | 7:12:1 | ,, பக்:17 | ,, -மக்கள் |
| 37. | ‘கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்’ | 7:17:1 | ,, பக்:16-17 | ,, -செய்தி |
| 38. | ‘பவள வுலக்கை’ | 7:20:1 | ,, பக்:17 | ,, -மக்கள் |
| 39. | ‘அம்மெ னிணர வடும்புகாள்’ | 7:32:3 | ,, ,, | ,, -வார்கொடி |
| 40. | ‘ஈர்ந்தண் துறை’ | 7:35:4 | ,, ,, | ,, -நீர்நிலை |
| 41. | ‘சேரிப்பரதர் வலைமுன்றில்’ | 7:38:2 | ,, ,, | ,, -மக்கள் |
| 42. | ‘அன்னந் துணையோ டாட’ | 7:45:1 | ,, பக்:16 | ,, -புள் |
| 43. | ‘நுளையர் விளரி’ | 7:48:1 | ,, பக்:17 | ,, -பண் |
| 44. | ‘கொளைவல்லா யென்னுவி கொள்’ | 7:48:4 | ,, ,, | ,, -இரங்கல் |
| 45. | ‘ .....பேரருளி னீழல் இருந்தேங்கி வாழ்வார்’ | 7:49:1-2 | ,, ,, | ,, -நிமித்தம் (இரங்கல்) |
| 46. | ‘வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை’ | 7:50:2 | ,, பக்:16 | ,, -பொழுது-மாலை |
| 47. | ‘மாலை நீயாயின்’ | 7:50:3 | ,, பக்:14 | முல்லை- ,, |
| 48. | ‘கடல்புக்கு......சேரல்மட வன்னம்’ | 7:பா:17-23 | புகார்க்.கட்:12,பக்:286 | திணை நிலைவரி -(எடுத்துக்காட்டு) |
| 49. | ‘மகவாய் வளர்க்குந் தாயாகி’ | 7:27:1 | 10:148, பக்:278 | காவிரி-தாய் |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 50. | '..... பேரருளி னீழல் இருந்தேங்கி வாழ்வா ருயிர்ப் புல(ற)த்தாய்' | 7:49:1-2 | பதி:1-2, பக்:15 | முல்லைத்திணை-இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| 51. | ,, | ,, | ,, பக்:17 | நெய்தல்-இரங்கல் நிமித்தம் |
| 52. | 'இன்னிள வேனில் வந்த திவணென' | 8:7 | ,, பக்:16 | மருதம்-பெரும்பொழுது |
| 53. | 'மகர வெல்கொடி மைந்தன் சேனை புகரறு கோலங் கொள்ளு மென்பதுபோல்' | 8:10-11 | 8:3-7, பக்:229 | மகளிர் காமனுக்குச் சேனை |
| 54. | 'அதிரா மரபின் யாழ்கை வாங்கி' | 8:23 | பதி:1-2, பக்:16 | மருதம்-யாழ் |
| 55. | 'குரல்வா யிளிவாய்க் கேட்டனள்' | 8:35 | புகார்க்.கட்:14,பக்:287 | இடனிலைப்பாலை-விளக்கம் |
| 56. | 'குரலீ ருகவும்' | 8:38 | ,, 15 ,, | தாரத்தாக்கம்- ,, |
| 57. | 'அகநிலை மருதமும் புறநிலை மருதமும் அருகியன் மருதமும் பெருகியன் மருதமும்' | 8:39-40 | ,, 15 ,, | தான்றெரி பண்- ,, |
| 58. | ,, | 8:74-108 | ,, 10,பக்:286 | வரிக்கூத்து- ,, |
| 59. | '........ முல்லை நிகர்மலர்' | 9:1-2 | பதி:1-2, பக்:15 | முல்லைத்திணை-பூ |
| 60. | 'சிலம்புள கொண்மென' | 9:73 | ,, பக்:16 | மருதம்-ஊடல் |
| 61. | '........ சென்ற கலனோ டுலந்த பொரு ளீட்டுத லுற்றேன்' | 9:74-75 | 10:50-51, பக்:270 | வரை பொருள்-விளக்கம் |
| 62. | 'வினைகடைக் கூட்ட வியங்கொண்டான்' | 9:78 | 14:56, பக்:371 | வல் வினை- ,, |

| | | | |
|---|---|---|---|
| 63. ‘வான்கண் விழியா வைகறை யாமத்து’ | 10:1 | பதி:1-2, பக்:16 | மருதம்-சிறுபொழுது |
| 64. ‘......... வைகறை யாமத்து<br>மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்<br>காரிரு ணின்ற கடைநாட் கங்குல்<br>ஊழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப<br>நெடுங்கடை கழிந்து’ | 10:1-8 | 8:45-71, பக்:235 | கால வுணர்வு |
| 65. ‘ஊழ்வினை கடைஇ உள்ளந் துரப்ப’ | 10:4 | 14:56, பக் 371 | வல்வினை |
| 66. ‘ஆறைங் காதம்’ | 10:42 | 11:8-9, பக்:299 | காலவுணர்வு |
| 67. ‘உரிய தன்றீங் கொழிக’ | 10:55 | 10:170-71, பக்:279 | வல்வினையின் ஆற்றல் |
| 68. ‘அறிவனை யேத்த...ஒன்றிய வுள்ளமுடையேன்’ | 10:57-9 | 13:191-96, பக்:351 | கவுந்தி புறஞ்சிறை புக்க காரணம் |
| 69. ‘பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி’ | 10:78 | பதி:1-2, பக்:16 | மருதம்-நீர்நிலை |
| 70. ‘கரியவன்...ஒலிக்கும்’ | 10:102-109 | புகார்க்.கட்:7-8,பக்:286 | காவிரியின் சிறப்பு |
| 71. ‘கம்புட் கோழியுங் கனைகுரல் நாரையும்’ | 10:114 | பதி:1-2, பக்:16 | மருதம்-புள் |
| 72. ‘கழாமயிர் யாக்கைச் செங்கட் காரான்’ | 10:121 | ,, ,, | ,, -விலங்கு |
| 73. ‘குமரிக் கூட்டிற் கொழும்பல் லுணவு | 10:123 | ,, ,, | ,, -உணவு |
| 74. ‘குமரிக் கூட்டிற் கொழும்பல் லுணவு<br>கவரிச் செந்நெற் காய்த்தலைச் சொரிய’ | 10:123-24 | புகார்க்.கட்:7, பக்:286 | கூழின் பெருக்கம்-விளக்கம் |
| 75. ‘கருங்கை வினைஞருங் களமரும்’ | 10:125 | பதி:1-2, பக்:16 | மருதம்-நிலமக்கள் |
| 76. ‘சின்மொழிக் கடைசியர்’ | 10:130 | ,, ,, | ,, ,, |
| 77. ‘ஏரொடு நின்றோர் ..<br>அரிந்து கால் குவித்தோர்’ | 10:135-36 | ,, ,, | ,, -செய்தி |
| 78. ‘தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த’ | 10:138 | ,, ,, | ,, -பறை |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 79. | ‘மழைக்கரு வுயிர்க்கு மழற்றிக ழட்டில் மறையோர்’ | 10:143-44 | புகார்க்.கட்:9,பக்:286 | வானம் புதுப்புனல் பொழிதல் |
| 80. | ‘இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர்’ | 10:149-50 | ,, 5,பக்:286 | குடி |
| 81. | ‘காவத மல்லது கடவா ராகிப் பன்னாட் டங்கிச் சென்னா ளொருநாள்’ | 10:154-55 | 11:8-9, பக்:299 | காலவுணர்வு |
| 82. | ‘.........ஒளியுறி னல்லது போதார் பிறவிப் பொதியறை யோர்’ | 10:190-91 | 11:5-8, பக்:298 | சாரணர் வாய்மொழி |
| 83. | ‘வம்பப் பரத்தை வறுமொழி யாளனொடு சென்றோர் காமனுந் தேவியும் போலு மீங்கிவரார்’ | 10:219-22 | 14:17-20, பக்:368 | நெறியின் நீங்கிய நீர்மை |
| 84. | ‘உடன்வயிற் றோர்க ளொருங்குடன் வாழ்க்கை கடவது முண்டோ’ | 10:227-28 | ,, | ,, |
| 85. | ‘அன்றவ ருறைவிடத் தல்கின ரொடுங்கி’ | 11:9 | 11:8-9, பக்:299 | காலவுணர்வு |
| 86. | ‘வேனிற் கிழவனொடு வெங்கதிர் வேந்தன் தானலந் திருகித் தன்மையிற் குன்றி’ | 11:62-63 | பதி:1-2, பக்:17 | பாலை-பொழுது-வேனில் |
| 87. | ‘..... வெங்கதிர் வேந்தன் தானலந் திருகி’ | ,, | ,, | ,, -தெய்வம் |
| 88. | ‘முல்லையும் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப் | | | |

| | | | |
|---|---|---|---|
| பாலை யென்பதோர் படிவம் கொள்ளும் காலை யெய்தினிர்’ | 11:64-67 | ,, | ,, -நிலமுதற் பொருள் |
| 89. ‘அலறுதலை மராமு முலறுதலை யோமையும்’ | 11:75 | ,, | ,, -மரம் |
| 90. ‘மானின்று விளிக்கும்’ | 11:78 | பதி:1-2, பக்:17 | பாலை-விலங்கு |
| 91. ‘நீர் நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்’ | 11:78 | ,, பக்:18 | ,, -நீரின்மை |
| 92. ,, | ,, | ,, பக்:15 | முல்லை-விலங்கு |
| 93. ‘ஐவன வெண்ணெலும்...கொய்பூந் தினையும்’ | 11:80-81 | ,, ,, | குறிஞ்சி-உணவு |
| 94. ‘கொய்பூந் தினையும்’ | 11:81 | ,, ,, | ,, -செய்தி |
| 95. ‘ஆய்கொடிக் கவலையும்’ | 11:82 | ,, ,, | முல்லை-வார்கொடி |
| 96. ,, | ,, | ,, ,, | பாலை ,, |
| 97. ‘புடைநெறிப் போயோர் பொய்கையிற் சென்று’ | 11:169 | ,, ,, | முல்லை-நீர்நிலை |
| 98. ‘ஆரிடை யத்தத் தியங்குந ரல்லது மாரி வளம்பெரு வில்லே ருழவர்’ | 11:209-10 | ,, பக்:17 | பாலை-உணவு |
| 99. ‘வடிவே லெறிந்த வான்பகை பொருது பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள’ | 11:18-20 | 8:1-2, பக்:228 | குமரியாறு இருந்தமை -சான்று |
| 100. ‘கடுங்கதிர் திருகலின்’ | 12:1 | பதி:1-2, பக்:17 | பாலை-தெய்வம் |
| 101. ‘ஐயை கோட்டத் தெய்யா வொருசிறை’ | 12:4 | ,, ,, | ,, |
| 102. ‘கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன’ | 12:3:2 | ,, பக்:18 | பாலை-பூ |
| 103. ‘பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கு’ | 12:3:3 | 10:69, பக்:272 | சொல்-‘பொங்கர்’ |
| 104. ‘காயா மலர்மேனி’ | 12:12:4 | பதி:1-2, பக்:15 | முல்லை-பூ |
| 105. ‘கொற்றவையுங் கொடுமரமுன் செல்லும்’ | 12:14:4 | பதி:1-2, பக்:17 | பாலை-தெய்வம் |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 106. | ‘இளமா வெயிற்றி’ | 12:15:1 | ,, பக்:18 | பாலை-மக்கள்-எயினர் |
| 107. | ‘துண்ணென் றுடியோடு’ | 12:22:1 | ,, பக்:17 | ,, -மறை |
| 108. | ‘கண்ணி லெயினர்’ | 12:22:2 | ,, பக்:18 | ,, -மக்கள்-எயினர் |
| 109. | ‘பொருள் கொண்டு புண்செயின்’ | 12:23:1 | ,, பக்:17 | ,, -செய்தி |
| 110. | ‘படுகதி ரமயம் பார்த்திருந் தோர்க்கு’ | 13:16 | ,, ,, | ,, -பொழுது-நண்பகல் |
| 111. | ‘ஆரிடை யுழந்த மாதரை நோக்கி’ | 13:30 | ,, பக்:18 | ,, -போக்கு |
| 112. | ‘தொடிவளைச் செங்கை தோளிற் காட்டி’ | 13:33 | ,, ,, | ,, ,, |
| 113. | ‘கான வாரணங் கதிர்வர வியம்ப’ | 13:137 | ,, பக்:17 | ,, -புள் |
| 114. | ,, | ,, | ,, பக்:15 | முல்லை-புள் |
| 115. | ‘வடியா....... போற்றி’ | 13:88-92 | 13:95-97, பக்:345 | மாதவி மடல் குரவர்க்குப் பொருந்துதல் |
| 116. | ‘செந்திறம் புரிந்த செங்கோட் டியாழின்’ | 13:106 | பதி:1-2, பக்:17 | பாலை-யாழ் |
| 117. | ‘ஆசான் றிறத்தின்’ | 13:112 | ,, ,, | ,, -பண் |
| 118. | ‘வைகறைப் பாணியும்’ | 13:148 | ,, பக்:16 | மருதம்- ,, |
| 119. | ‘புறஞ்சிறைப் பொழிலும்’ | 14:1 | 10:245-48, பக்:285 | சொற்பொருள்-புறஞ்சிறை |
| 120. | ‘நெறியி னீங்கியோர் நீர்மையே ளுகி’ | 14:17 | 14:17-20, பக்:368 | நெறியின் நீங்கியமை-விளக்கம் |
| 121. | ‘நெறியி னீங்கியோர் நீர்மையே ளுகி ....... சிறுமை யுற்றேன்’ | 14:17:20 | 14:50-57, பக்:371 | ,, |
| 122. | ‘மருதோங்கு முன்றுறை’ | 14:72 | பதி1:-2, பக்:16 | மருதம்-மரம் |
| 123. | ‘வெண்பூ மல்லிகை...தண்செங் கழுநீர்’ | 14:78-79 | ,, ,, | ,, -பூ |

| | | | |
|---|---|---|---|
| 124. ‘மலைச்சிற கரிந்த வச்சிர வேந்தற்கு’ | 14:94 | ,, ,, | ,, -தெய்வம் |
| 125. ‘கோதை மாதவி’ | 14:113 | ,, ,, | ,, -வார்கொடி |
| 126. ‘போதி யறவோன் – அளிப்பவும்’ | 15:103-104 | உ.பா, பக்:10 | காப்பியப் பொருண்மை-வீடு |
| 127. ‘.........தன்குல வாணர்<br>அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு<br>கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்<br>உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும்<br>இடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்’ | 15:126-30 | 10:55, பக்:271 | கவுந்திக்குக் காலவுணர்ச்சி யின்மை |
| 128. ‘தாயு நீயே யாகித் தாங்கு’ | 15:36 | ,, | ,, |
| 129. ‘கற்புக் கடம்பூண்டவித் தெய்வ மல்லது<br>பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்’ | 15:143-44 | 19:24, பக்:472 | கண்ணகியின் தெய்வீகத் தன்மை |
| 130. ‘வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது<br>நீணில வேந்தர் கொற்றம் சிதையாது<br>பத்தினிப் பெண்டி ரிருந்த நாடு’ | 15:145-47 | 19:1-4, பக்:470 | கண்ணகியின் இகழ்ச்சியுரை |
| 131. ‘தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினு<br>மிகப்பே ரின்பந் தருமது கேளாய்’ | 15:149-50 | 15:1-92-97, பக்:408 | அடைக்கலச் சிறப்பு |
| 132. ‘மிகப்பே ரின்பந் தருதும கேளாய்’ | 15:150 | 10:55, பக்:271 | கவுந்திக்குக் காலவுணர்ச்சி யின்மை |
| 133. ‘அளைவிலை யுணவின்’ | 16:3 | பதி:1-2, பக்:15 | முல்லை-உணவு |
| 134. ‘இளைசூழ் கோவலர்’ | 16:4 | ,, | ,, -நிலமக்கள் |
| 135. ‘நாத்தூ ணங்கை’ | 16:19 | 16:14, பக்:425 | சொல்-‘நங்கை’ |

| (1) | (2) | (3) | (4) | (5) |
| --- | --- | --- | --- | --- |
| 136. | ‘போற்ரு வொழுக்கம் புரிந்தீர்’ | 16:81 | பதி:1-2. பக்:16 | மருதம்-ஊடல் நிமித்தம் |
| 137. | ‘குடமுதல்.. வேண்டிய பெயரே’ | 17:13 8-10 | ,, பக்:15 | முல்லை-யாழ் |
| 138. | ‘கொல்லைப் புனத்துக் குருந்தொசித் தான்’ | 17:17:4 | ,, | ,, -மரம் |
| 139. | ‘முல்லைத் தீம்பாணி யென்ருள்’ | 17:17:5 | ,, | ,, -பண் |
| 140. | ‘கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்’ | 17:19:1 | ,, | ,, -தெய்வம் |
| 141. | ‘கோகுல மேய்த்து’ | 17:29:4 | ,, | ,, -செய்தி |
| 142. | ‘நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்’ | 19:4 | 19:9-14, பக்:471 | கண்ணகி வஞ்சினம் |
| 143. | ‘கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று’ | 20:64 | பதி:30, பக்:21 | கொல்லச் சிலம்பு-விளக்கம் (கொன்ற) |
| 144. | ‘ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்<br>தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்றும்<br>வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண<br>உரைசான் மதுரையோ டரசுகே டுறுமெனும்<br>உரையு முண்டு’ | 23:132-26 | 8:45-71, பக்:235 | காலவுணர்வு-நல்லார் |
| 145. | ‘தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்<br>தெய்வந் தொழுந்தகைமை திண்ணமால்<br>(திண்ணிதால்)’ | 23-இ-வெண்பா | 19:23-24, பக்:472 | கற்புத்தெய்வம்-கண்ணகி |
| 146. | ‘குன்றத்துச் சென்று வைகியும்’ | 24:1:1 | பதி:1-2, பக்:15 | குறிஞ்சி-பொழுது நள்ளிருள் யாமம் |
| 147. | ‘அருவி யாடியும் சுனைகுடைந்தும்’ | 24:1:2 | ,, ,, | ,, -நீர்நிலை |

| | | | |
|---|---|---|---|
| 148. ‘குன்றவருங் கண்டு நிற்க’ | 24:1:9 | ,, ,, | ,, -நிலமக்கள் |
| 149. ‘தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின் | 24:1:16 | ,, ,, | ,, -பறை |
| 150. ‘குறிஞ்சி பாடுமின்’ | 24:1:18 | ,, ,, | ,, -பண் |
| 151. ‘விரவுமலர் தூவுமின்’ | 24:1:20 | ,, பக்:16 | ,, -பூ |
| 152. ‘அஞ்ச லோம்பென்று நலனுண்டு நல்காதார்(ன்)’ | 24:3:2 | ,, பக்:15 | ,, -புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| 153. ‘நீலப் பறவைமேல்...புதல்வன் வரும்’ | 24:15:2-3 | ,, ,, | ,, -தெய்வம் |
| 154. ‘அருவி யொலிக்கு...மலைகாண்குவம்’ | 25:6-7 | ,, ,, | ,, -கூதிர் |
| 155. ‘கோங்கம் வேங்கை’ | 25:17 | ,, ,, | ,, -மரம் |
| 156. ‘நறவுக் கண்ணுடைத்த’ | 25:27 | ,, ,, | ,, -செய்தி |
| 157. ‘புலியொடு பொருஉம் புகர்முகம்’ | 25:29 | ,, ,, | ,, -விலங்கு |
| 158. ‘ஏல வல்லியு மிருங்கறி மூடையும்’ | 25:41 | ,, ,, | ,, -வார்கொடி |
| 159. ‘கானக் கோழியுந் தேன்மொழிக் கிள்ளையும் | 25:54 | ,, ,, | ,, -புள் |
| 160. ‘தவந்தரு சிறப்பிற் கவுந்தி .. உண்ணு நோன்பொ டுயிர்ப்பதிப் பெயர்த்ததும்’ | 27:79-83 | 10:55, பக்:271 | முக்காலவுணர்வு கவுந்திக்கு இன்மை |
| 161. ‘மாதவி.. போதித் தானம் புரிந்தறங் கொள்ள’ | 27:103-108 | உ.பா, பக்:10 | காப்பியப் பொருண்மை -வீடு |
| 162. ‘குறத்தியர் பாடிய’ | 27:224 | பதி:1-2, பக்:15 | குறிஞ்சி-நிலமக்கள் |
| 163. ‘அந்தீங் குறிஞ்சி’ | 28:35 | ,, ,, | ,, -யாழ் |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 164. | ‘அருந்திற லரசர் முறைசெயி னல்லது<br>பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது’ | 28:207-208 | 19:1-4, பக்:470 | கண்ணகி இகழ்ச்சி |
| 165. | ‘மாதவி தன்றுறவுங் கேட்டாயோ தோழீ’<br>மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழீ | 29:7:4-5 | உ. பா, பக்:10 | காப்பியப் பொருண்மை -வீடு |
| 166. | ‘தென்னவன் தீதிலன் றேவர் கோமான் கோயில்’<br>(கோன்றன் கோயில்) | 29:10:1-2 | பதி:27-30, பக்:21 | பாண்டியன் பண்பு |
| 167. | ‘தொல்லை வினையாற் றுயருழந்தாள் கண்ணினீர்<br>கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன்’ | 29:13:1-2 | பதி:31-36, பக்:22 | கண்ணகி துயர் |
| 168. | ‘.. ......மணிமே கலையார்<br>யாதவ டுறத்தற் கேதுவீங் குரையென’ | 30:4-5 | உ.பா, பக்:10 | காப்பியப் பொருண்மை -வீடு |
| 169. | ‘மையீரோதி .....<br>போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்’ | 30:10-28 | ,, பக்:10-11 | ,, |
| 170. | ‘பருவ மன்றியும் பைந்தொடி நங்கை<br>திருவிழை கோல நீங்கினள்’ | 30:35-36 | ,, பக்:11 | ,, |

## பெருங்கதை

| | | | |
|---|---|---|---|
| 1. 'பன்னுள் கழிந்த பின்னர் முன்னுள்<br>எண்மெய்ப் பாட்டினு ளிரக்கமெய்ந் நிறீஇ<br>ஒண்வினை யோவியர் கண்ணிய விருத்தியுள்<br>தலையத னும்பர்த் தான்குறிக் கொண்ட<br>பாவை நோக்கத் தாரணங் கெய்தி' | பெருங்:1:35:<br>44-48 | 8:23-26, பக்:230 | ஒன்பது வகை இருக்கை |
| 2. 'தவழும் புதல்வரை யொருகையாற் றழீஇப்<br>பவழஞ் சேர்ந்த பல்கா ழல்குலர்' | ,, 1:43:45-6 | 4:27-34, பக்:131 | சொற்பொருள்-'மேகலை' |
| 3. 'அப்புப் புதையு மணிவரிச் சிலையும்' | ,, 1:52-16 | 15:212, பக்:410 | ,, '-புதை' |
| 4. 'கூத்திய ரிருக்கையுஞ் சுற்றிய தாகக்<br>காப்பிய வாசனை கலந்தவை சொல்லி' | ,, 4:3:41-42 | உ.பா, பக்:9 | பேரியாழ்-அமைப்பு |
| 5. 'தலமுத லூழியிற் றுனவர் தருக்கறப்<br>புலமக ளாளர் புரிநரப் பாயிரம்<br>வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச்<br>செலவுமுறை யெல்லாஞ் செய்கையிற் றெரிந்து<br>மற்றை யாழும் கற்றுமுறை பிழையான்' | ,, 4:3:51-5 | ,, பக்:6 | சொல்லாட்சி-'காப்பியம்' |
| 6. 'மரகத மணிக்கயத் தங்க ணுறிய<br>அழனிறப் பொன்னித ழாயிரம் விரித்து' | ,, | 4:73, பக்:134 | சொற்பொருள்-'நாறும்' |
| 7. 'பொதியிலு மிமயமும் புணர்முலை யாக' | ,, | 5:1, பக்:152 | ,, -'மலை' |
| ௮ 'நீர்வார் நிகர்மலர் கடுப்ப' | ,, | 9:2, பக்:245 | ,, -'நிகர்' |
| 9. 'சீப்புப் படியுறின்' | ,, | 15:215, பக்:410 | சொல்-'சீப்பு' |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | **மணிமேகலை** | | | |
| 1. | ‘நாலேழ் நாளினும்’ | மணி: 1:8 | 10:1-3, பக்:267 | 28-நாட்கள் இந்திர விழா நடந்தது |
| 2. | ‘கரந்துரு வெய்திய கடவுளாளரும்’ | ,, 1:15 | 9:33-36, பக்:248 | மக்கள் கண்ணுக்குத் தெய்வ யாக்கை தோன்று |
| 3. | ‘தேவரு மக்களு மொத்துடன் றிரிதரு<br>நாலேழ் நாளினும்’ | ,, 1:66-67 | ,, ,, | ,, |
| 4. | ‘இலவந் திகையி னெயிற்புறம் போகின்<br>உலக மன்னவ னுழையோ ராங்குளர்’ | ,, 3:45-46 | 10:31, பக்:269 | தொடர்-‘இலவந்..போகின்’ |
| 5. | ‘சுரியற் றுடி மருள்படு பூங்குழல்<br>பவளச் செவ்வாய்த் தவள வொண்ணகை<br>ஒள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக்<br>கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதல்<br>காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை<br>அகன்ற வல்கு லந்நுண் மருங்குல்<br>இகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து<br>வாணன் பேரூர் மறுகிடை நடந்து<br>நீணில மளந்தோன் மகன்முன் னாடிய<br>பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்’ | ,,:116-125 | 6:56-7, பக்:192 | பேடிக் கோலம் |

| | | | |
|---|---|---|---|
| 6. ‘எற்கெடுத் திரங்கி’ | ,, 5:36 | 4:8, பக்:128 | ‘சொற்பொருள்-‘கெடுத்து’ |
| 7. ‘ஊழ்வினை வந்திவ னுயிருண்டு கழிந்தது’ | ,, 6:152 | 19:50, பக்:473-74 | ,, -‘உண்பதோர் வினை’ |
| 8. ‘வகித்தொழி லுதவ மாதிரங் கொழுப்ப’ | மணி:14:57 | 5:73, பக்:159 | சொற்பொருள்-‘வசி’ |
| 9. ‘முத்தை முதல்வி யடிபிழைத்தாய்’ | ,, 19:13 | 17:15:4, பக்:450 | விகாரம்‘முந்தை-முத்தை’ |
| 10. ‘நாடகக் காப்பிய நன்னூ னுனிப்போர்’ | ,, 19:80 | உ.பா. பக்:8 | சொல்லாட்சி-‘காப்பியம்’ |
| 11. ‘நாடகக் காப்பியம்’ | ,, ,, | ,, பக்:9 | கதை-காப்பியம் இரண்டும் வேறு |
| 12. ‘இரும்பூது சான்ற’ | ,, 20:55 | பதி:9, பக்:19 | சொல்லாட்சி-‘இரும்பூது’ |
| 13. ‘நினக்கிவன் மகனாய்த் தோன்றி யதூஉம்<br>மனக்கினி யாற்குநீ மகளா யதூஉம்<br>பண்டும் பண்டும் பலபிறப் புளவாற்<br>கண்ட பிறவியே யல்ல காரிகை’ | மணி: 21:29-32 | 16:17, பக்:425 | சொற்பொருள்-‘மகன்’ |

## சூளாமணி

| | | | |
|---|---|---|---|
| 1. ‘கெண்டை யஞ்சினை மேய்ந்து கிளர்ந்துபோய்<br>முண்டகத் துறை சேர்ந்த முதலைமா<br>வண்டல் வார்கரை மாமகரக் குழாம்<br>கண்டு நின்று கனலும் கழியெலாம்’ | சூளா.நாட்டு-22 | பதி:1-2, பக்:16 | முதலையை விலங்கு என்பார் கூற்றை மறுத்தல் |
| 2. ‘கண்ணெலாங் கவர்வன கனக கூடமும்<br>வெண்ணிலாச் சொரிவன வெள்ளி வேயுளும்<br>தண்ணிலாத் தவழ்மணித் தலமுஞ் சார்ந்தரோ<br>மண்ணினு லியன்றில மதலை மாடமே’ | ,, நகர:7 | பதி:38-54, பக்:23 | வெள்ளியம்பலம், பொன்னம்பலம் பற்றிய செய்தி |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | **வளையாபதி** | | | |
| 1. | ‘துக்கந் துடைக்குந் துகளறு காட்சிய<br>நிக்கந்த வேடத் திருவடி கணங்களை<br>ஒக்க வடிவீழ்ந் துலகியல் செய்தபின்<br>அக்கதை யாழ்கொண் டமைவரைப் பண்ணி’ | வளை. | 9:13, பக்:246 | சொற்பொருள் -‘நிக்கந்தக்கோட்டம்’ |
| 2. | ‘பண்ணுற் றிறத்திற் பழுதின்றி மேம்பட்ட<br>தொண்ணூற் றறுவகைக் கோவையும் வல்லவன்<br>விண்ணு றியங்கும் விறலவ ராயினும்<br>கண்ணுறி நோக்கிக் கடுநகை செய்வான்’ | ,, | 9:15, பக்:246-47 | ,, -பாசண்டம் |
| 3. | ‘ஆக்கப் படுக்கு மருந்தளைவாய்ப் பெய்விக்கும்<br>போக்கப் படுக்கும் புலைநகரத் துய்ப்பிக்கும்<br>காக்கப் படுவன விந்திய மைந்தினும்<br>நாக்கல்ல தில்லை நனிவெல்லு மாறே’ | ,, | 10:241-45, பக்:285 | நா காத்தலின் முக்கியத்துவம் |
| 4. | ‘கொன்றைப் பழக்குழற் கோதையர்’ | ,, | 17:11, பக்:448 | உவமை-‘கொன்றையம் பூங்குழல்’ |
| 5. | ‘அன்றைப் பகற்கழிந் தாளின் றிராப் பகற்<br>கன்றின் குரலுங் கறவை மணிகறங்கக் | | | |

| | | | |
|---|---|---|---|
| கொன்றைப் பழக்குழற் கோவல ராம்பலும் ஒன்றல் சுரும்பு நரம்பென வார்ப்பவும்' | ,, | 17:20, பக்:452 | 'கொன்றை' பண்அல்ல; கருவி என்பதற்குச் சான்று' |

## சீவக சிந்தாமணி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 'தேவாதி தேவனவன் சேவடி' | சிந்: 1 | 9:14, பக்:246 | சொற்பொருள்-'தேவு' |
| 2. | 'கண்போன்ற மாமன் மகள்' | ,, 26 | 16:15-17, பக்:425 | 'உறவுப்பெயர்-'மகள்' |
| 3. | 'திளைத்தவர் பருகிய' | ,, 50 | 5:199, பக்:169 | சொல்லாட்சி- 'திளைத்தவர்' |
| 4. | 'புறம்பணை யியம்பு மோசை' | ,, 85 | 9:12, பக்:246 | ,, -'புறம்பணை' |
| 5. | 'மற்றவர்.. கோண்மா' | ,, 101 | 15:217, பக்:411 | மதிற்பொறிகள் |
| 6. | 'விற்பொறிகள்.. மரநிலையே' | ,, 102 | ,, ,, | ,, |
| 7. | 'செம்புருகு.....பொறியே' | ,, 103 | ,, ,, | ,, |
| 8. | 'கரும்பொனியல்...திருந்தின்றே' | ,, 104 | ,, ,, | ,, |
| 9. | 'துப்புறழ் தொண்டைச் செவ்வாய்' | ,, 107 | 4:48, பக்:132 | அடைமொழியமைப்பு |
| 10. | ,, | ,, | 4:74, பக்:134 | ,, |
| 11. | 'ஒப்பவொன் ருதியாக வாயிரத் தோரெட் டீருச் செப்பி' | ,, | 14:157-59, பக்:379 | நாடகக்கணிகை 1 முதல் 1008 கழஞ்சு பொன் சீராகப் பெறுதல் |
| 12. | 'பூசுசாந் தொருவர் பூசிற் றெழுவர்த மகலம் பூசி மாசன மிடம்பெருது வண்கடை மலிந்த தன்றே' | ,, 116 | 5:224-34, பக்:171 | ஆலிங்கன விகற்பம் |

| (1) | (2) | (3) | (4) | (5) |
| --- | --- | --- | --- | --- |
| 13. | ‘கோயில்’ | சிந்:155 | 2:53, பக்:52 | சொற்புணர்ச்சி-‘மாயிரு’ |
| 14. | ‘இந்திரர்க்கும் புகழ்வரிதே’ | ,, 173 | 16:173, பக்:434 | சொல்லாட்சி-‘இந்திரர்’ |
| 15. | ‘அருமணி மரகதத் தங்க ணுறிய’ | ,, 183 | 4:73, பக்:134 | ,, -‘நாறும்’ |
| 16. | ‘ .. ஆயிடை வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே’ | ,, 219 | 15:95-106, பக்:404 | ,, கடையாமக் கனவு |
| 17. | ‘கோணிலை திரிந்து நாழி...கோல் கோடினென் ருன்’ | ,, 255 | 15:9-10, பக்:399 | கோலின் செம்மை-விளக்கம் |
| 18. | ‘கைச்சிலை கணையோ டேந்திக் காமனிக் கடையைக் காப்பான்’ | ,, 290 | 4:77-84, பக்:135 | காமனின் ஆட்சி-இரவில் |
| 19. | ‘கையால் வயிறதுக்குவார்’ | ,, 295 | 4:9-12, பக்:129 | துன்பத்தால் தலைமேல் கைவைத்தல், வயிறதுக்குதல்-தொழில் நிகழ்ச்சி |
| 20. | ‘கறைபன் னீராண் டுடன்விடுமின்’ | ,, 306 | 4:9, பக்: 129 | சொல்லாட்சி-‘கறை’ |
| 21. | ‘நிழன் மணி’ | ,, 321 | 5:127, பக்:164 | ,, -‘நிழல்’ |
| 22. | ‘திருந்திய நின்மகன் றீது நீங்கினன்’ | ,, 327 | 19:66, பக்:474 | சொற்பொருள்-‘பழுது’ |
| 23. | ‘ஐவர் நலனேம்ப’ | ,, 393 | 16:85, பக்:429 | ,, -‘அடியோர் பாங்கு’ |
| 24. | ‘கலையின தகலமுங் காட்சிக் கின்பமும் சிலையின தகலமும் வீணைச் செல்வமும் | | | |

| | | | |
|---|---|---|---|
| மலையினி னகலிய மார்ப னல்லதிவ் வுலகினி லிலையென வொருவ னுயினன்' | ,, 411 | 1:36, பக்:40 | ,, -'மடவார்' |
| 25. 'நீணிரை நம்பின்னை' | ,, 482 | 17:16, பக்:451 | சொல்லாட்சி-'பின்னை' |
| 26. 'விஞ்சைகள் வல்லேன் விளிந்தநின் றேழரொ டெஞ்சிய வான்பொரு ளெல்லா மிமைப்பினுள் வஞ்சமொன் றின்றி மறித்தே தருகுவன் நெஞ்சிற் குழைந்து நினையன்மி னென்றான்' | சிந்:520 | 15:36, பக்:401 | சொற்பொருள்-'விஞ்சை யிற் பெயர்த்து விழுமம் தீர்த்த' |
| 27. 'கோதை யருவி' | ,, 525 | 5:193, பக்:169 | ,, -'கோதை' |
| 28. 'கண்ணுட் டையாற் சுட்டுநீ ருக்கி' | ,, 807 | 5:84, பக்:160 | ,, -'சுடுநோக்கு' |
| 29. 'முழுமெய்யும் புண்களுற் ருர்க்க' | ,, 819 | 5:226, பக்:171 | ,, -முழுமெய்யும் |
| 30. 'ஐந்து மூன்றடுத்த' | ,, 838 | 4:67, பக்:133 | ,, -இணையணை |
| 31. 'தொடிக்கட் பூவை' | ,, 932 | 10:63, பக்:271 | ,, -தொடி |
| 32. ,, | ,, ,, | 13:33, பக்:342 | ,, ,, |
| 33. 'அண்ணலங் களிற்றை வையா' | ,, 978 | 15:48, பக்:402 | ,, -'ஓய்' |
| 34. 'மெய்கொளப் பிறழ்ந்து முத்தார் மருப்பிடைக் குளித்து, | ,, 983 | 15:52, பக்:,, | ,, -'பிறழா' |
| 35. 'ஒக்கிய முருகன் வைவே லொன்றிரண் டனைய கண்ணாள்' | ,,1291 | 2:49-52, பக்: 51 | உவமை-முருகன் வேலனைய கண் |
| 36. 'இளையார் விளையாட' | ,,1349 | பதி:16, பக்:20 | சொல்-'ஆடிய' |
| 37. 'அருங்கல......அதுக்கினுள்' | ,,1372 | 4:47-57, பக்:133 | பிரிவுத்துயர்' |
| 38. 'மஞ்சுசூழ்... சீறினுள்' | ,,1373 | ,, ,, | ,, |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 39. | ‘பஞ்சிறை கொண்ட பைம்பொற் கலைபுறஞ் சூழ வைத்து<br>நஞ்சிறை கொண்ட நாகப்படம்பழித் தகன்ற வல்குல்<br>வெஞ்சிறைப் பள்ளியாக விழுமுலைத் தடத்து வைகத்<br>தஞ்சிறைப் படுக்க லாதார் தம்பரி வொழிக வென்றுள்’ | சிந்:1538 | 8:66, பக்:234 | -சொற்பொருள்’-தளை வாயவிழ்ந்த’ |
| 40. | ‘கருதுவ தாங்கொன் றுண்டோ காப்பியக் கவிகள் காம<br>வெரியெழ விகற்பித் திட்டார்’ | ,,1585 | உ.பா. பக்:8 | சொல்லாட்சி-‘காப்பியம் |
| 41. | ‘காமனை யென்றுஞ் சொல்லார் கணவற்கை தொழுது வாழ்வார்’ | ,,1598 | 9:64, பக்:250 | குலமகள் (மனைவி) காமனைத்தொழல் இயல்பன்று |
| 42. | ‘ .... அப்பொருள்<br>துன்னுங் காலைத் துன்னுதன வில்லையே’ | ,,1923 | பதி:16, பக்:20 | சொற்பொருள்-‘அரும்பொருள்’ |
| 43. | ‘வானர்...வேண்டினன்’ | ,,2065 | 2:42-45, பக்:50 | உவவை-‘காமன்வில்-புருவம்’ |

44. 'கதையெனக் கருதல் செய்யான் மெய்யெனத்
தானும் கொண்டான்' ,,2144 உ.பா. பக்:9 கதை-காப்பியம் வேறுபாடு

45. 'கரும்புந்தேனு மமுதும் பாலுங்கலந்த தீஞ்சொல்' ,,2438 2:53-61, பக்:52 இல்பொருளுவமை

46. 'உடைதிரை முத்தஞ் சிந்த வோசனிக் கின்ற' ,,2652 14:125, பக்:376 சொல்லாட்சி-'ஓசனித்தல்'

47. 'புனைமருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற
கனைகுர லுருமுச் சீற்றக் கதழ்விடை யுரிவை போர்த்த
துனைகுரன் முரசத்தானைத் தோன்றலைத் தம்பி னென்ருள்
நனைமல ரலங்கற் கண்ணி நந்தனுந் தொழுது சேர்ந்தான்' ,,2899 5:88, பக்:160 சொல்-'மயிர்க்கண்முரசு'

48. 'கூறிய வுறுப்பிற் குறியொடு புணர்ந்தாங்
காடுநர்க் கியற்று மரங்கி னெற்றி மிசை
வழுவில் பூத நான்கு முறைப்பட
எழுதின ரியற்ற லியல்புணர்ந் தோரே' சிந்:672, நச்.மேற். 3:106-107, பக்:115 நால்வகைப் பூதம்

## உத்தர காண்டம்

1. 'மக்க ளிழந்த விடும்பையினு மனையா ளிழந்த விடும்பையினு
மிக்க விடும்பை வேல்வேந்தே விதவை யிடும்பை யென விளம்பித்

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | தக்க வதனுலென்கழுத்திற் ருலி நீதந் தரு ளென்று தொக்க மணிநீண் முடியானைத் தொழுது பின்னு மிவை சொல்லும்’ | உத்.திக்கு:137 | பதி:42, பக்:23 | சொற்பொருள்-‘ஆரஞர்’ |
| | **கவிச் சக்கரவர்த்தி** | | | |
| 1. | ‘மோடி முன்றலையை வைப்ப ரேமுடி குலைந்த குஞ்சியை முடிப்பரே ஆடு நின்றுகுரு திப்பு துத்திலத மம்மு கத்தின் லமைப்பரே’ | கவி. | 5:76-88, பக்:160 | தலையை அரிந்து பலிகொடுத்தல் |
| | **திருக்குறள்** | | | |
| 1. | ‘நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்’ | குறள்:17 | 17:31, பக்:455 | சொற்பொருள்-‘முந்நீர்’ |
| 2 | ‘என்பி லதனை வெயில்போலக் காயுமே அன்பி லதனை அறம்’ | குறள்: 77 | பதி:55, பக்:24 | அறங்கூற்றமாதல் |
| 3. | ‘செவ்வியான் கேடும்’ | ,, 169 | 8:59, பக்:234 | சொற்பொருள்-‘செவ்வியன்’ |
| 4. | ‘ஈத்துவக்கும்’ | ,, 228 | 1:45, பக்:50 | ,, -‘ஈத்து’ |

| | | | |
|---|---|---|---|
| 5. 'ஒன்றாக வுலகத்...தோன்றில்' | ,, 233 | 11:112-117, பக்:305 | புகழ்-இம்மை மறுமைக் கின்பம் தருவது |
| 6. 'அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு' | ,, 247 | 15:100, பக்:404 | சொற்பொருள்-'பிணிப் பறுத்தோர்தம் பெற்றி' |
| 7. 'கொல்லான்......தொழும்' | ,, 260 | 11:158, பக்:307 | -'வாய்மை' |
| 8. 'யாமெய்யா..... பிற' | ,, 300 | ,, ,, | ,, ,, |
| 9. 'மண்ணோ டியைந்த மரத்தனையர்' | ,, 576 | 5:30, பக்:155 | ,, -'மண்' |
| 10. 'போற்றி னரியவை போற்றல் கடுத்தபின் தேற்றுதல் யார்க்கு மரிது' | ,, 693 | 9:45, பக்:249 | ,, -'கடுக்கும்' |
| 11. 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும் ஒண்டொடி கண்ணே யுள' | ,, 1101 | 2:74, பக்:53 | ஐம்புல அறிவு |

## நாலடியார்

| | | | |
|---|---|---|---|
| 1. 'ஏனை வினையுலப்ப' | நாலடி:3 | பதி:45, பக்:23 | சொற்பொருள்- முதிர்வினை |
| 2. 'உறற்பால.... தணிப்பாரு மில்' | ,, 104 | 10:172-73, பக்:279 | வினைப்பயன் விளக்குதல் |
| 3. 'வலவைக ளல்லாதார்' | ,, 268 | 5:74, பக்:159 | சொற்பொருள்-'வலவையின்' |
| 4. 'செவ்விய ரல்லா' | ,, 323 | 8:59, பக்:234 | ,, -'செம்மை' |

## பழமொழி

| | | | |
|---|---|---|---|
| 1. 'உரையா ரிழித்தக்க காணிற் கனு' | பழ: 182 | 9:51: பக்:249 | ,, -'உரையாடேன்' |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | **நான்மணிக்கடிகை** | | | |
| 1. | ‘படியை மடியகத் திட்டான்’ | நான்மணிக் கட:3 | 9:22, பக்:247 | ,, -‘மடி’ |
| | **திரிகடுகம்** | | | |
| 1. | ‘பொறியறை’ | திரி: 15 | 10:1, பக்:267 | ,, சொல்லமைப்பு- ‘அறல்>அறை’ |
| 2. | ‘உழவின்கட் காமுற்று வாழ்தல்’ | ,, 42 | 5:43-45, பக்:156 | ,, சொற்பொருள்- ‘வீழ்குடி’ |
| | **கலிங்கத்துப் பரணி** | | | |
| 1. | ‘நீண்டபலி பீடத்தி லறுத்து வைத்த நெறிக்குஞ்சித்<br>தலையைத்தன் னினமென் றெண்ணி<br>ஆண்டலைப்புள் ளருகணைந்து பார்க்கு மாலோ<br>வணைதலுமச் சிரமச்ச முறுத்து மாலோ’ | கலிங்க. கோயில் :16 | 5:84, பக்:159 | சொற்பொருள்-‘சூர்த்து’ |
| 2. | ‘அடிக்கழுத்தி னுடன்சிரத்தை யரிவ ராலோ<br>வரிந்தசிர மணங்கின்கைக் கொடுப்பராலோ | | | |

| | | |
|---|---|---|
| கொடுத்தசிரங் கொற்றவையைத் துதிக்கு மாலோ<br>குறையுடலங் கும்பிட்டு நிற்கு மாலோ'<br>கலிங்க. கோயில் :15 | 5:76-88, பக்:160 | மறவர்தம் தலையரிந்து பலியூட்டுதல் |
| 3. 'சென்டு கொண்டு கரிகாலனொரு காலிலிமையச்<br>சிமையமால்வரை திரித்தருளி மீள வதனைப்<br>பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்<br>பாய்புலிப் பொறிகுறித்தது மறித்த பொழுதே'<br>கலிங்க. இராச: 1 | 5:95-98, பக்:161 | கரிகாலன் இமயத்தில் புலி பொறித்தமை |
| 4. 'கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவல்<br>மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்-கைச்செண்டு<br>கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்<br>செம்பொற் கிரிதிரித்த செண்டு' ,, ,, | ,, ,, | ,, |

## முத்தொள்ளாயிரம்

| | | |
|---|---|---|
| 1. 'வாரிய பெண்ணை வருகுரும்பை வாய்த்தனபோல்<br>ஏரிய வாயினு மென்செய்யும்-கூரிய<br>கோட்டானைத் தென்னன் குளிர்சாந் தணியகலம்<br>கோட்டுமண் கொள்ளா முலை' முத்தொள். | 10:129, பக்:276 | சொற்பொருள்-'வீறுபெறத் தோன்றல்' |

## திருச்சிற்றம்பலக் கோவையார்

| | | |
|---|---|---|
| 1. 'மண்டலமே பணியாய்' திருச்சிற். :117 | 8:13, பக்:229 | ,, -'பணி' |

| (1) | (2) | (3) | | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 2. | ‘தில்லைசூழ் பொழிற்கு’ | ,, | 167 | 1:11, பக்:37 | உருபுமயக்கம்-‘கு’ |
| 3. | ‘பாணரொக்கல்’ | ,, | 400 | 13:105, பக்:316 | சொல்-‘பாணர்’ |
| 4. | ‘கொன்றையன்’ | ,, | ,, | 16:149, பக்:432 | சொல்லமைப்பு-‘வேந்தன் |

## பஞ்ச தந்திரம்

| | | |
|---|---|---|
| ‘அபரீக்ஷ்ய ந கர்த்தவ்யம் கர்த்தவ்யம் ஸுபரீக்ஷிதம்<br>பர்சாத் பவதி ஸந்தாபம் ப்ராஹ்மணீ நகுலம் யதா’<br>பஞ்சதந்திரம்: 5:8 | 15:54-75, பக்:402-3 | கீரிப்பிள்ளை-பார்ப்பினி கதை |

## பெயர் அறியப்படாத இலக்கியம்

1. ‘திருந்திய பொதியி லருந்திற லகத்தியன்
சுந்தர மணிமுடி யிந்திரன் மகனை
மாணு விறலோய் வேணுவாகென
விட்ட சாபம் பட்ட சயந்தன்
சாபவிடை யெமக்கரு டவத்தோ யென்று
மேவினன் றெழுது மேதக வுரைப்ப

அருந்தவ மாமுனி தமிழ்க்கூத் தியர்க்குத்
திருந்திய தலைக்கோற் ருனந் தீருயென்
றவனினி'துரைப்ப வாகிவந் தனனென்'

2\. 'வயந்த மாமலை நயந்த முனிவரன்
எய்திய வவையி னிமையவர் வணங்க
இருந்த விந்திரன் றிருந்திழை யுருப்பசி
ஆட னிகழ்க பாடலோ டீங்கென
ஓவியச் சேனன் மேவின னெழுந்து
கோலமுங் கோப்பு நூலொடு புணர்ந்த
இசையு நடமு மிசையத் திருத்திக்
கரந்துவர லெழினியொடு புகுந்தவன் பாடலிற்
பொருமுக வெழினியிற் புறந்திகழ் தோற்றம்
யாவரும் விழையும் பாவனை யாகலின்
நயந்த காதற் சயந்தன் முகத்தில்
நோக்கெதிர் நோக்கிய பூக்கமழ் கோதை
நாடிய வேட்கையி னுடனெகிழப்
பாடன் முதலிய பல்வகைக் கருவிகள்
எல்லா நெகிழ்தலினெல்லா முனிவரன்
ஒருதலை யின்றி யிருவர் நெஞ்சினும்
காமக் குறிப்புக் கண்டனன் வெகுண்டு
சுந்தர மணிமுடி யிந்திரன் மகனை
மாணு விறலோய் வேணு வாகென
விட்ட சாபம் பட்ட சயந்தன்
சாப விடையரு டவத்தோய் நீயென

3:1-7, பக்:78 'சயந்தன் சாபம்'

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | மேவினன் பணிந்து மேதக வுரைப்ப<br>ஓடிய சாபத் துருப்பசி தலைக்கட்டும்<br>காலைக் கழையு நீயே யாகி<br>மலையமால் வரையின் வந்து கண்ணுற்றுத்<br>தலையரங் கேறிச் சார்தி யென்றவன்<br>கலக நாரதன் கைக்கொள் வீணை<br>அலகி லம்பண மாகெனச் சபித்துத்<br>தந்திரி யுவப்பத் தந்திரி நாரிற்<br>பண்ணிய வீணை மண்மிசைப் பாடி<br>ஈண்டு வருகெனப் பூண்ட சாபம்<br>இட்டவக் குறுமுனி யாங்கே<br>விட்டன னென்ப வேந்தவை யகத்தென்' | | 6:18-25, பக்:186 | சயந்தன்-ஊர்வசி சாப வரலாறு |
| 3. | 'முன்னா ளிந்திரன்<br>காவ லழித்துச் சேவல்கொண் டெழுந்த<br>வேட்கை யமுத மீட்க வெழுவோன்<br>இந்நகர் காப்போர் யாரென நினைதலும்<br>நேரிய னெழுந்து நீவரு காறும்<br>தார்கெழு மார்ப தாங்கலென் கடனென | | | |

உவந்தனன் கேட்டுப் புகழ்ந்தவிப் பூதம்
நின்வழி யாகென நிறீஇப் பெயர்வுழிக்
கடுவிசை யவுணர் கணங்கொண் டிண்டிப்
பொருதுபோர் தொலைந்தன ராகிப் பெரிதழிந்
தாழ்ந்த நெஞ்சிற் சூழ்ந்தனர் நினைத்து
வஞ்ச மன்றிது வஞ்சத் தல்லது
வேற லரிதெனத் தேறினர் தேறி
வளைத்துத் தொடுத்த வல்வா யம்பின்
அயின்முகங் கான்ற வாரிருள் வெயிலோன்
இருகணும் புதையப் பாய்தலி னொருகணும்
நெஞ்சங் காணு நிற்ப நின்ற
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்' 6:7-13, பக்:184 நாளங்காடிப்பூத வரலாறு

4. 'பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு
காமன் றிரியுங் கருவூரா -யாமங்கள்
ஒன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையும்
ஒன்றுபோ யொன்றுபோயொன்று' 5:49, பக்:157 சொல்-'நாழிகை'

# இலக்கணப் புலமை

பொருளைத் தெளிவு படுத்துவதற்கும், பொருளின் சிறப்பினை உணர்வதற்கும், சொற்களைச் சரியாகப் பிரித்துப் பொருள் கொள்வதற்கும் இலக்கணம் துணைபுரிகின்றது. தொல்காப்பியத்தையே இக் காப்பியத்திற்கு இயற்றமிழ் இலக்கணமாக அமைத்துக்கொள்கின்றார் அடியார்க்கு நல்லார். ''இவ்வியலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற்றமிழ் நூல் தொல்காப்பிய மாதலானும், பிறர் கூறிய நூற்கள் நிரம்பா இலக்கணத்தன வாதலானும் அந்நூலின் முடிபே இதற்கு முடிபென்றுணர்க'' என்று உரைச்சிறப்புப் பாயிரத்துத் தொடக்கத்தே எழுதுகின்றார். இங்குப் பிறர் கூறிய நூல்கள் எனக் கூறுவது வீரசோழியம், நேமிநாதம் போன்றவற்றைக் குறிப்பதாகக் கொள்ளலாம். தொல்காப்பியரை 'ஆசிரியர்' என்றே கூறுகின்றார். ''முந்து நூல்களிற் காப்பியம் என்னும் வடமொழிப் பெயர் இன்றேனும் 'ஆசிரியர்', 'வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே' (தொல். எச்ச.5) என அமைதி காண்பார். நல்லார் தொல்காப்பிய நூற்பாக்களை 65 இடங்களில் எடுத்துக்காட்டியுள்ளார்.

எழுத்துக்களின் புணர்ச்சி, பெயர் வினை இடை உரிச்சொற்களின் தன்மைகள், திணை பால் இடம் பற்றிய குறிப்புக்கள்,

வினை முதலான தொகைகள், விளிவேற்றுமை, வியங்கோள், பெயர் வினை எச்சங்கள், கால இட உருபுமயக்கம், விகாரம், மரூஉ, இடக்கர், ஒப்பில்போலி, அருத்தாபத்தி, மெய்ப்பாடு, அணி, வழக்கு முதலான இலக்கணக் கூறுகளை அடியார்க்கு நல்லார் தம் உரையில் ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றார்.

புணர்ச்சி

பதிகத்தில் முதல் இரண்டு வரிகளுக்கு விரிவாகப் பொருள் கூறும்போது எழுத்துப் புணர்ச்சி இலக்கணத்தை மிகத் தெளிவாகக் கூறுகின்றார். இதுபோன்றே எல்லா விடங்களிலும் விரிப்பின் உரை பெருகு மென்று கருதியே சுருக்கிக் கூறுகின்றார். கிட்டத்தட்ட 20-சொற்களுக்குப் புணர்ச்சி விதி கூறுகின்றார் நல்லார். புணர்ச்சி விதி கூறும்போது பெரும்பாலும் தொல்காப்பிய நூற்பாக்களை எடுத்துக்காட்டியே விளக்குகின்றார்.

குணவாயில்[1] என்பதனைக் குறிப்பிடும்போது-அது ஆகுபெயர் என்று கூறி-குணக்கண் வாயில், குணக்கின்கண் வாயில் எனச் சாரியை பெறுதும் பெற்றும் வரினும் அமையும் எனக் கூறி,

'ஏழ னுருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்
சாரியைக் கிளவி யியற்கையு மாகும்' (தொல். உருபு-29)

என்ற நூற்பாவை எடுத்துக் காட்டுகின்றார். இது போல 'வாயிற் கோட்டம்'[2] (வாயில்+கோட்டம்) என்பது,

'லகார விறுதி னகார வியற்றே' (தொல். புள்ளி-71)

என்பதனால், ஏழனுருபின்கண் வந்த சாரியை லகார வீறு, வருமொழி முதல் வல்லெழுத்து வர னகாரம் வேற்றுமைக்கண் திரிந்து றகாரமாயிற்றே போலத் திரிந்தது என்கின்றார்.

'கோட்டம்' என்ற சொல் 'அரசு' என்ற சொல்லோடு 7-ஆம் வேற்றுமைக்கண் சாரியை பெற்றுக் 'கோட்டத்தரசு[3]' என அமைந்ததற்கான புணர்ச்சி விதியைத் தெளிவாக விளக்குகின்றார் நல்லார். அது,

'மஃகான் புள்ளிமு னத்தே சாரியை' (தொல். உருபு-13)

என்பதனால் ஏழனுருபின்கண் சாரியை பெற்று,

---

1. சிலப். பதி.1-உரை. பக்.12.
2. சிலப். பதி. 1-உரை, பக்: 12.
3. ,, பக்:12-13.

'அத்தே வற்றே யாயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுத றெற்றென் றற்றே' (தொல். புணர்-31)

என்பதனுல் மகரங் கெட்டு,

'அத்தி னகர மகரமுனை யில்லை' (தொல். புணர்-23)

என்பதனுல் அகரங் கெட்டு முடிந்தது.

'அவற்றுள்
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்' (தொல். புணர்-2)

'குற்றிய லுகரமு மற்றென மொழிப' (தொல். புணர்-3)

என்பவற்ருலும்,

'புள்ளி யீற்றுமு னுயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே'
(தொல். புணர்-36)

என்பதனுலும் வருமொழி அகர வுயிரேறிற்று என விளக்குகின்ருர். இங்கு இருமொழிப் புணர்ச்சியாகிய 'கோட்டத்தரசு' என்பதற்கு ஆறு தொல்காப்பிய நூற்பாக்களை எடுத்துக்காட்டி விளக்கியிருக்கும் நயம் நல்லாரின் விரிந்த இலக்கண அறிவைக் காட்டுகிறதெனலாம்.

துறந்திருந்த[1] (துறந்து+இருந்த) என்பதின் நிலைமொழி ஈற்றுக் குற்றுகரமும் முற்கூறியவாறே முடிந்தது (கெட்டது) என்கின்ருர்.

குடக்கோ[2] (குட+கோ) வென்பது,

'அகர விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே' (தொல். உயிர்மயங்-1)

'வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே'
(தொல். உயிர்மயங்-14)

என்பவற்ருல், பெயரொடு பெயர் புணர்ந்து வல்லொற்று மிக்கது என்கின்ருர்.

கோச்சேரல் (கோ+சேரல்) என்பது,

---

1. சிலப்.பதி. 2-உரை, பக்:13.
2. ,, பதி. 2-உரை, பக்: 13.

'ஒகார விறுதி யேகார வியற்றே' (தொல். உயிர்-87)

என்பதனுல், ஒகார வீற்றுப் பெயர்ச் சொல் அல்வழிக்கண் ஏகார வீற்று அல்வழியே போல வல்லெழுத்துப் பெற்று முடிகவென்றலின் வல்லொற்று மிக்கது என்கிருர் நல்லார்.

சேரலிளங்கோ [1] (சேரல் + இளங்கோ) வென்பது, 'புள்ளி யீற்று முனுயிர்' என்பதனுல், லகார வொற்றீற்று நிலைமொழி மேல் வருமொழி முதல் இகரவுயிரேறி முடிந்தது என்கிருர்.

கோவடிகட்கு (கோ + அடிகட்கு) என்பது,

'எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே
உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்'

(தொல். புணர்-38)

என்பதனுல், வகர வுடம்படு மெய்யாயிற்று.

அடிகட் கென்றது (அடிகள் + கு),

'ளகார விறுதி ணகார வியற்றே' (தொல். புள்ளி-101)

என்பதனுல் ணகாரம் வேற்றுமைக்கண் திரிந்து டகார மாயிற்றே போல இதுவும் வேற்றுமைக்கண் திரிந்து டகாரமாயிற்று.[2] இங்ஙனம் பதிகத்தின் முதலிரு வரிகளின் ஒவ்வொரு சொல்லுக்கும் இடையில் அமையும் புணர்ச்சி விதியை விளக்கிச் செல்கின்ருர். பின்னுள்ள பகுதிகட்கு இங்ஙனம் விரிக்காது ஆங்காங்கே சில முக்கியமான சொற்களுக்கு மட்டுமே புணர்ச்சி விதியினைக் கூறிச் செல்கின்ருர் நல்லார்.

பொதியில்[3] (பொது + இல்) என்ற சொற்புணர்ச்சி கூறுமிடத்து உகர வீறு இகரமாய்த் திரிந்து உடம்படுமெய்யும் பெற்று 'கிளந்த வல்ல' (தொல். குற்றியலுகரப்-78) என்னும் அதிகாரப் புறனடை யான் முடிந்தது என விளக்குகின்ருர்.

கெழு[4] வென்னும் சாரியை,

'லனவென வருஉம் புள்ளி யிறுதிமு
னும்முங் கெழுவு முளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்'

(தொல். குற்றியலுகரப்-76)

1. சிலப். பதி. 2-உரை, பக்: 13.
2. ,, பக்: 13.
3. ,, பதி. 40-உரை, பக்: 23.
4. சிலப். பதி. 61-உரை, பக். 24.

என்னும் சூத்திரத்துள், அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி என்பதனுல் அவ்விருபுள்ளியீற்றுச் சொல்லும் அல்லாதனவும் சாரியை பெற்று முடிவனவுள வென்ருராகலின், புள்ளியீறல்லாத வழி வந்த சாரியைச் சொல்லெனக் கொள்க எனச் சாரியைப் புணர்ச்சி பற்றிப் பேசுகின்ருர்.

திங்களஞ் செல்வன்[1] (திங்கள்+செல்வன்) என்ற தொடரில் அமையும் புணர்ச்சி விதியை மிகத் தெளிவுபட விளக்குகின்ருர் நல்லார். 'கால முலகம்' (தொல். கிளவி-58) என்னுஞ் சூத்திரத் துள், ஞாயிறு திங்களென்பன உயர்திணை மேலனவாய்ப் பால்பிரிந் திசையா வெனவும்,

'நின்ருங் கிசைத்த லிவணியல் பின்று' (தொல். கிளவி-59)

எனவே நின்ற முறைமையானே ஈறுபெற்று நின்று உயர்திணையா யிசைத்தல் இவணியல்பின்றெனவும் கூறிய ஆசிரியர்,

'இசைத்தலு முரிய வேறிடத் தான' (தொல். கிளவி-60)

எனக் காலமுதலாகிய சொல் உயர்திணையாயிசைத்தலு முரிய, ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்ட வழி யென்ருராகலின், இதுவும் ஈறு திரிந்து திங்களஞ்செல்வனென்ருயிற்றென்க. மேலும் இவ்வாறு வருவனவற்றிற்கும் இதுவே விதியென்க என விளக்குகின்ருர். இதே விளக்கத்தைத் 'திங்கட் செல்வன்'[2] என்பதற்கும் ஒரு சொல் கூட மாற்ருமல் அவ்வாறே எழுதிச் செல்கின்ருர். இவ்விதியினைக் 'காரரசாளன்'[3] என்பதற்கும் பொருத்திக் காட்டுகின்ருர்.

தீரும் என்ற சொல் 'தீர்ம்'[4] என்று நிற்க அது ஈற்றுமிசை உகரம் கெட்டது என்கிருர். 'இரவு தலைப்பெயரு'[5] மென்பதனை (இரவு+தலைப்பெயரும்) இரவுத்தலையென்ருர்; 'கிளந்த வல்ல' (தொல். குற்றியலுகரப்-78) என்னுமதிகாரப் புறனடையால் 'தடவுத் திரை' போல வல்லெழுத்துப் பெற்றது என்கிருர்.

'ஆறுமுகம்' என்பது,

'மூன்று மாறு நெடுமுதல் குறுகும்'

(தொல். குற்றியலுகரப்-35)

---

1. சிலப். 4:4-உரை, பக். 128.
2. சிலப். 9:59-உரை, பக். 234.
3. சிலப். 14:96-உரை, பக்: 374.
4. சிலப். 9:14-உரை, பக். 246
5. சிலப். 4:50-உரை, பக்: 134-35.

என்பதனுல் 'அறுமுக' மாயிற்று என்று விளக்குகின்ருர்.[1]

'போலும்' என்ற சொல் 'போன்ம்'[2] எனச் செய்யுட்கண் பயன்படுத்தப்படுவதற்கான தொல்காப்பிய விதியை ஓரிடத்து எடுத்துக் காட்டுகின்ருர்.

'செய்யு ளிறுதிப் போலி மொழிவயி
னகார மகார மீரொற் ருகும்' (தொல். மொழிமரபு-18)

என்பதனுற் கொள்க என எழுதுகின்ருர்.

'நோவுதகவு' என்ற சொல், புறனடை விதியான் (தொல். குற்றியல். 78) நோதக[3]வாயிற்று என்கிருர். 'அகங்கை' என்பது 'அங்கை'[4] என்ருகியதற்கு,

'அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே யாசிரி யற்க
மெல்லெழுத்து மிகுத லாவயி னுன'

(தொல். புள்ளிமயங்கு. 20)

என்ற தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக் காட்டுகின்ருர். 'மெல்லொற்று...கிளை யொற்ருகும்' (தொல். குற்றியலுகரப். 9) என்பதனுல் 'அன்பு' என்ற சொல், 'அற்பு'[5] என முடிந்தது என்கிருர். இங்ஙனம் ஒருமொழிப்புணர்ச்சி, இருமொழிப் புணர்ச்சி ஆகிய இருவகைப்புணர்ச்சிக்கும் தொல்காப்பிய நூற்பாக் கொண்டு விளக்கிப் புணர்ச்சிவிதி கூறிய நல்லாரின் இலக்கணப் புலமை தெற்றென விளங்குகின்றது.

*பெயர்*

சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச்சொல் எனப் பகுப்பர் தொல்காப்பியர். பெயர்ச் சொற்கள் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் என மூவகைப்படும். இவை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என் ஐம்பாலையும் உணர்த்தும். இவை வேற்றுமை உருபு ஏற்கும். இங்ஙனம் இலக்கண வரம்புக்குட்பட்ட பெயர்ச்சொற்கள் வருமிடத்து அவற்றை ஐந்து வகையில் சுட்டுகின்ருர் அடியார்க்கு நல்லார்.

1. சிலப். 5:170-உரை, பக். 167.
2. சிலப். 11:183-உரை, பக். 308.
3. சிலப். 16:17-உரை, பக். 425.
4. சிலப். 16:38-உரை, பக். 427.
5. சிலப். 16:77-உரை, பக். 429.

அவை பெயர்ச்சொல், பெயர்த்திரிசொல், தொழிற்பெயர், இரு பெயரொட்டுப் பெயர் ஆகுபெயர் என்பன.

i) *பெயர்ச்சொல்*

பெயர்ச் சொல்லின் பல வகைகளை நல்லார் குறிக்கின்றார். பெயர், இயற்பெயர், சிறப்புப்பெயர், ஆண்பாற்பெயர், பெண் பாற் பொதுச்சொல், பண்புகொள் பெயர், சாதிப்பெயர், உவமப் பெயர் எனக் குறிப்பிடுகின்றார். அவை வருமாறு:

1. மணிவண்ணன் - பெயர் (10:10-உரை, பக்:268).
2. சிறுமலை - பெயர் (11:85-உரை, பக்:303).
3. மாசாத்துவான் - இயற்பெயர் (1:33-உரை, பக்: 39).
.4 மாநாய்கன் - சிறப்புப்பெயர் (1:23-உரை, பக்:38).
5. இருநிதிக்கிழவன் - ,, (1:34-உரை, பக்:39).
6. மகன் - ஆண்பாற்பெயர் (16:17-உரை, பக்: 425).
7. மகடூஉ - பெண்பாற் பொதுச்சொல் (16:36-உரை, பக்: 427).
8. வெள்ளை — வெள்ளையோன் எனப் பண்புகொள்பெயர் (14:9-வரை, பக்:366).
9. எருமை — சாதிப்பெயர் (12: பா: 8-உரை, பக்: 325).
10. பூங்கொடி — உவமப்பெயர் (11:121-உரை, பக்: 305)
11. பகுவாய் (மோதிரம்) - ஒப்பினாகிய பெயர் (6:95-உரை, பக். 195).

ii) *பெயர்த்திரிசொல்*

பெயர்ச்சொற்களின் வடிவம் திரிந்து வழங்கப்பட்டு வருவன வற்றைப் பெயர்த்திரிசொல் என்பர். நல்லார் ஓரிடத்து இப் பெயர்த்திரிசொல் பற்றிக் குறிப்பிடுகின்றார். 'சேரல்' என்ற சொல்லைக் குறிக்கும்போது அது லகார ஈற்றுப் பெயர்ச்சொல். அன்றியும் ‚சேரலன் என்னும் பெயர்த்திரிசொல் எனினும் அமையும் எனக் குறிப்பிடுகின்றார்.[1] 'தெக்கணம்' என்ற சொல்லைக் குறிப்பிடுகின்றபோது அது வடசொற்றிரிபு என்கிறார்.[2]

iii) *தொழிற்பெயர்*

தொழில் பெயர் யாதானுமொரு செயலை அல்லது தொழிலை விளக்கி நிற்கும். மூன்றிடங்களில் தொழிற்பெயரைச் சுட்டிச் செல்கின்றார் நல்லார்.

---

1. சிலப். பதி. 2-உரை, பக். 13.
2. சிலப். 14:81-உரை, பக். 373.

1. விளைத்தோய் - முன்னிலைத் தொழிற்பெயர் (பதி.41-உரை, பக்:23).
2. காண்போன் - தொழிற்பெயர் (6:34-உரை, பக்: 188).
3. பரிமுகம் - முதலியவற்றைத் தொழிற்பெயராக்கினும் அமையும் (13:176-80-உரை, பக்: 350).

iv) இருபெயரொட்டுப் பெயர்

பெயர்ச் சொற்களிரண்டு இணைந்து வருவது இருபெயரொட்டுப் பெயராகும். இரு பெயரொட்டாக அமையும் ஐந்து சொற்களை நல்லார் எடுத்துக் காட்டுகின்றார்.

1. நுழை நுண்கோடி - இரு பெயரொட்டாய் மிகவும் கூர்த்த கோடி என்பதாயிற்று (14:182-உரை, பக்: 382).
2. முழுகினராடி - என இரு பெயரொட்டாக்கினும் அமையும் (5:119-உரை, பக்:163).
3. தாழை முடங்கல் - இருபெயரொட்டுமாம் (8:49-உரை, பக்:234).
4. சாமரைக் கவரி-இருபெயரொட்டு (14:128-உரை,பக்:376).
5. ஓங்கிரு - இருபெயரொட்டு (14:106-உரை, பக்:374).

v) ஆகுபெயர்

ஒன்று மற்றொன்றுக்கு ஆகிவருதல் ஆகுபெயராம். 21-ஆகு பெயர்களை அடியார்க்கு நல்லார் தம் உரையில் சுட்டுகின்றார்.

1. குணவாயில் - (பதி. 1-உரை, பக்:12) - ஓர் ஊர்.
2. கொன்றையஞ் சடைமுடி - ஆகுபெயரான் இறைவன் (பதி. 40-உரை, பக்: 23).
3. வேனில் - ஆகுபெயரான் காமன் (2:26-உரை, பக்: 48).
4. அகிலென்றது ஆகுபெயரான் புகையை (4:36-உரை, பக்: 131).
5. மேனி - என்றார் ஆகுபெயரான் நிறத்தை (5:172-உரை பக்:167).
6. பல பண்டங்களையும் பொதிந்தவற்றைப் பொதி என்றது ஆகு பெயர் (5:112-உரை, பக்:63).
7. புகார் - (6: 32-உரை, பக்:188).
8. பகல் - (9:2:-உரை, பக்: 245)- ஆகுபெயரால் கதிரவன்.
9. வேல் - (9:11-உரை, பக்:236) - ஆகுபெயரால் முருகன் கோயிலைச் சுட்டுகிறது).

10. வைகறை - (10:1-உரை, பக்: 267).
11. ஊரல் - குளுவை; நீர்மேல் ஊர்தலினல் ஆகுபெயர் (10:117-உரை, பக்:275).
12. கேள்வி என்ருர் அதனையுடைய கவுந்தியடிகளை - ஆகு பெயர் (13:33-உரை, பக்:342).
13. அருந்திறல் - அன்மொழித் தொகை ஆகுபெயர் - இராமன் (13:65-உரை, பக்:313).
14. மேழி - ஆகுபெயராற் கலப்பை (14:9-உரை, பக்: 363).
15. இன்பத்தையும் பொருளையும் ஆகுபெயராற் பெண்டிரும் உண்டியுமென்ருர் (14:39-உரை, பக்:339).
16. தகை-ஆகுபெயராற் கொழுநர் (14:84-உரை, பக்:373).
17. அரை - ஆகுபெயரான் மேகலை (14:86-உரை, பக்:373).
18. குறுங்கண் - ஆகுபெயரால் சாளரத்தைச் சுட்டுகிறது (14:101-உரை, பக்:374).
19. முந்நீர் - கடல்-ஆகுபெயர் (17:31-உரை, பக்: 455).
20. ஓதி - கண்ணகி - ஆகுபெயர் (16:56-உரை, பக்·428).
21. அலர்வேம்பு - வேம்பலர் என்க. ஆகுபெயரான் மாலையாயிற்று (16:149-உரை, பக்:432).

மேற்கண்ட சொற்களை ஆகுபெயராக்கி நல்லார் பொருள் எழுதியிருத்தலின் மூலநூலின் கருத்தை நன்குணர முடிகிறது. இங்ஙனம் பெயர்ச்சொற்களை வகைப்படுத்திப் பொருள் கொண்ட நல்லாரின் இலக்கண அறிவு புலப்பட்டுத் தோன்றுவதோடு மூல நூலின் கருத்துக்களை தெளிவுற விளங்கிக் கொள்ளவும் இவை துணை செய்கின்றன.

*வினை*

வினைச்சொற்களின் பொது இயல்பு அவை வேற்றுமைகளை ஏற்கா; காலங்காட்டும். இவை குறிப்பு வினை, தெரிநிலைவினை என்றும், உயர்திணைவினை, அஃறிணைவினை, விரவு வினை எனவும் வகைப்படுத்தப்படும். நல்லார் சில வினைச்சொற்களை முற்று என்றும், வினைத்திரிசொல்லென்றும், எதிர்மறை என்றும், பிறவினை என்றும் சுட்டிப் பொருள் கொள்ளுகின்ருர்.

கூறும் (2:37), கெடுக்கும் (11:138), இல்லை (14.38), இயம்பும் (17:1), விலங்கூடறுத்தது (16:213), உண்ணுமிவ்வூர் (18:53) ஆகிய சொற்களை முற்று என்று சுட்டிச் செல்கின்ருர் நல்லார். அருமைத்து (2:39) என்ற சொல்லை அஃறிணை வினைக்குறிப்பு முற்று என்கிருர்.

வினைத்திரி சொற்கள் இரண்டினைச் சுட்டுகிறார். 'கேட்டி' என்பதை இகர ஈற்று முன்னிலை ஒருமை வினைத்திரிசொல்லாக வும்,[1] 'தாங்குறூஉம்' என்பதை வினைத்திரி சொல்லாகவும்,[2] கொள்ளுகின்றார்.

எதிர்மறைப் பொருளில் வரும் இருவினைச் சொற்களையும் நல்லார் தம் உரையில் குறிப்பிடுகின்றார். 'மூவா' என்பது மூத்த என்னும் பெயரெச்சத்து எதிர்மறை[3] என்றும், 'தீரா' என்பது தீர்தல் என்னும் விடற் பொருண்மை யெதிர்மறை[4] என்றும் சுட்டு கிறார். இரீயினார்,[5] நடுங்க[6] என்ற இரு பிறவினைச் சொற்களையும் நல்லார் குறிப்பிடுகின்றார்.

## இடை

இடைச்சொல்லென்பது தனித்தியங்கும் இயல்பின்றிப் பெயர்ச் சொல்லோடும் வினைச்சொல்லோடும் சார்ந்து வருவது. இவை புணர்ச்சிக் கண்வந்து பொருந்தும் சாரியை, காலங்காட்டும் இடைநிலை, வேற்றுமை உருபு. அசைச்சொல், இசைநிறை எனப் பலவகைப்படும். அடியார்க்கு நல்லார் அசைநிலை, சாரியை, இடைச்சொல் என மூன்று வகையில் இடைச் சொற்களைக் குறிப் பிடுகின்றார். மேலும் பல இடைச்சொற்களை எடுத்துக் காட்டி அவற்றின் பொருளையும் இடத்திற்கேற்ப விளக்கிச் செல்லுகின்றார். நால்வகைச் சொற்களில் இடைச்சொற்களையே நல்லார் மிகுதியும் எடுத்துக் காட்டுகின்றார்.

### 1) அசைநிலை

அசைநிலைச் சொற்களாக நல்லார் குறிப்பன, அந்தில், அன்றே, ஆங்கு. ஆப், ஆல், என், ஏ, ஒடு, கேட்டைக்க, தன், தான், மோ ஆகியன. இவ்வசைநிலைச் சொற்கள் நிற்கும் இடம் வருமாறு :

1. அந்தில் - *11:6-உரை, பக்:298.*
2. அன்றே - *18:13, 17, 21-உரை, பக்:461;*
   *14:59-உரை, பக்:371.*
3. ஆங்கு - *'வைத்தாங்கு' - 13:63-உரை, பக்:110.*
   ,, - *'அறிந்தாங்கு - 3:15-உரை, பக்:90.*
   ,, - *'மறைத்தாங்கு'-6:102-உரை, பக்:195.*

---

1. சிலப். பதி. 38-உரை, பக். 23.
2. சிலப். 19:52-உரை, பக். 474.
3. சிலப். 21:46-உரை, பக். 51· 17-31-உரை, பக்· 455.
4. சிலப். 2:36-உரை, பக். 49.
5. சிலப். 8:1-2-உரை, பக். 228.
6. சிலப். 13:188-உரை, பக். 351.

ஆங்கு - 'கரைப்படுத்தாங்கு'-11:127-உரை, பக்:305.
,, - 'எனவாங்கு' - 12:19-உரை, பக்:321.
,, - 'ஆங்கோர்' - 13:69-உரை, பக்:343.
,, - 'அமர்ந்தாங்கு' - 14:82-உரை, பக்:373.
,, - 'இருந்தாங்கு' - 14:85-உரை, பக்:373.
,, - 'பட்டாங்கு' - 14:160-உரை, பக்:1380.

4. ஆய் - 'கேளாய்' - 15:150-உரை, பக்:407.

5. ஆல் – 'புக்கனளால்' -15:218-உரை, பக்:411.
,, – 'அல்லால்' - 14;44–உரை, பக் 370.

6. என் – 'நனிசிறந்ததுவென்' - 4:84-உரை, பக்:135.

7. ஏ – 'உறுவனே' - 19:6–உரை, பக்:470.

8. ஒடு - 'வேந்தனெடு' –5:182-உரை, பக்:168.

9. கேட்டைக்க - கேட்டை யென்னும் வினையசைச் சொல், உடனடுக்கி வரற்பாலது கேட்டீமினென் பதனேடு மொழியிடையடுக்கி ஈற்றுவியன் கோட் பொருண்மையாற் கேட்க என்னும் பொருட்டாயிற்று.
–18:49-உரை, பக்:464.

10. தன் - 'என்றன்மேல்' - 9:48-உரை, பக்:249.

11. தான் - 'தான்சுரத்தலான்' – 1:9–உரை, பக்:37.
,, - 'மாதவிதானென்' – 8:118-உரை,பக்:238.
,, - 'பூங்குழல்தான்' – 17:8-உரை, பக்:448.
,, - 'மென்முலைதான்' - 17:10-உரை, பக்:448.

12. மோ - 'கேண்மோ' – 10:65-உரை, பக்:272..

ii) சாரியை

சாரியைகள் புணர்ச்சிக் கண்வந்து பொருந்துவன. நல்லார், அத்து, அம், இல், இன், கெழு என்னும் ஐந்து சாரியைகள் சிலம்பில் இடம் பெறுவதைச் சுட்டிச் செல்கின்ருர். அடியார்க்கு நல்லார், 'சாரியையாவது சொல் தொடர்ந்து செல்லும் நெறிக் கண் நின்று அதற்குப் பற்றுக் கோடாகச் சிறிது பொருள் பயந்த தும் பயவாததுமாய் நிற்பது'[1] எனச்சாரியையை விளக்கும் நயம் மகிழ்ந்து இன்புறத்தக்கது.

1. சிலப். பதி. 61-62-உரை, பக்.24.

சாரியைகளும் அவை வருமிடங்களும் :

1. அத்து - 'கோட்டத்து' – பதி:1–உரை, பக்:13.
ஏழன் உருபின்கண் சாரியை பெற்றது.
,, – 'வானத்து' – 4:3-உரை, பக்:128.
ஏழன் உருபின்கண் வந்த சாரியை.
,, 'சூலத்து' – சாரியை நிற்க உருபும் உவமஉருபும் தொக்கன – 11:73–உரை, பக்:302.
,, 'மலையத்து' - 11:105–உரை, பக்:304.
2. அம் – காதலஞ்செல்வரோடு – 14:71–உரை, பக்:372.
3. இல் - முல்லையில் – சாரியை நிற்க உருபு தொக்கது -4:15–உரை, பக்: 129.
4. இன் - 5:54–உரை, பக்:157.
,, – 'விலக்கினில்' - 3:13-உரை, பக்:81.
5. கெழு - பதி:61-உரை, பக்:24.

## iii) இடைச்சொல்

அடியார்க்கு நல்லார் பல இடைச்சொற்களைச் சுட்டி அவை தரும் பொருளையும் இடத்திற்கேற்ப விளக்கிச் செல்கின்றாராயினும் 'இடைச்சொல்' என்று பெயர் சுட்டிச் சில சொற்களையே குறிப்பிடுகின்றார். அ, ஒ, ஓர், ஐ, கொல், மன், மன்னும், மார், ஆயினும், வாழி ஆகியன இடைச்சொற்கள் என நல்லாரால் குறிக்கப்படுகின்றன. இவ்விடைச்சொற்கள் வருகின்ற இடங்களாவன.

1. அ – 'திருவ' - 12:4:4–உரை, பக்:324.
2. ஒ - 'மன்னே' 1:29–உரை, பக்:39.
,, – 'அன்றே' – 14:56–உரை, பக்:371.
3. ஓர் - 'கூறுமோர்' – 2:37–உரை, பக்:49.
4. ஐ - 'அல்லதை' – 16:121–உரை, பக்:431.
5. மன் – 'மன்னே' - 1:29-உரை, பக்:39.
6. மன்னும் - 'பெயர்மன்னும்' – 1:29-உரை, பக்:39.
7. மார் - 'இடனுமாருண்டோ' – 16:177-உரை, பக்:434.
8. கொல் – 'கொல்'லென்னும் இடைச் சொல் வருவிக்க -5:218-23-உரை, பக்:170.
9. ஆயினும் - எண்ணிடைச் சொல் - 1:14:உரை, பக்:38.
10. வாழி – 18:15-உரை, பக்:461.

இங்ஙனம் இடைச்சொற்கள் எனப் பெயர் சுட்டாது கிட்டத் தட்ட பன்னிரு இடைச் சொற்களின் பொருளை மட்டும் ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றார் நல்லார். இம்முறையில் வரும் இடைச் சொற்கள் அ, ஆஅ, இன், உம், எண், ஏ, ஒடு, ஒல், ஓ, கு, கொல், மன் ஆகியன.

1. அ: – 'சொல்ல' –முன்னறி சுட்டு – 16:202-உரை,பக்:435.
2. ஆஅ: - 'எங்கணுஅ' - இரக்கக் குறிப்பு–18:33-உரை, பக்:463.
3. இன்: - பரப்பின் - உவம உருபு-4:79-உரை, பக்:134.
   - மின்னின் - உவம உருபு –11:109-உரை, பக்:304.

உம்: இடைச் சொற்களில் மிகுதியான இடங்களில் நல் லாரால் சுட்டப் பெறுவது 'உம்' என்னும் இடைச்சொல்லே. இது பல்வேறு பொருள்பட வந்தமைகின்றது. இவ்விடைச்சொல் சிறப்பு, இழிவு சிறப்பு, எச்சம், இறந்தது தழீஇய எச்சம், இசை நிறை, ஐயம், முற்று என்னும் பொருளில் அமைகின்றது.

உம்-சிறப்புப் பொருள்

1. 'அரசு' - சிறப்பும்மை விரிக்க - 2:1-உரை, பக்:46.
2. 'திங்களும்' - 5:207-உரை, பக்:170.
3. 'வருதலும்' - 5:211-உரை, பக்:170.
4. 'யாவதும்' - 5:23?-உரை, பக்:171.
5. இறையோனும் - 9:3?-உரை, பக்:248.
6. உருவுங் குலனும் . ஒழுக்கமும்...நோன்பும் - இவ்வும்மைகள் எண்ணுக்குறித்தன வெனினும் சிறப்புப் பொருண்மை தோன்ற நின்றன -10:46-47-உரை, பக்:270.
7. 'அனையையும்' - 14:58–உரை, பக்:371.
8. இன்றியும் - 16:142-உரை, பக்:432.
9. புகையினும் தோன்றினும் படரினு மென்ற உம்மைகள் மழை பெய்தொழில் மாற இவற்றில் ஒன்றே அமையுமாக வும் இவையெல்லாம் சேரினும் கடல்வளனெதிர நெரிக்கு மெனக் காவிரியின் சிறப்பை விளக்கி நிற்றலின் சிறப் பும்மைகள்-10:102-108-உரை, பக்:275.

உம்-இழிவு சிறப்புப் பொருள்

1. மாலதியும் - 9:6-உரை, பக்:245.

2. 'செவியென்ன செவியே' - செவியும் செவியே யென்ற பாடமாயின் செவியுமென்னும் உம்மை இழிவு சிறப்பு - 17:35:3-உரை, பக்:456.

உம்-எச்சம்

1. 'தாங்கவும்' – 'இக் கொலைப்பாவம் ஒன்றுனும் கழுவப் படாது; அதுவேயுமன்றி மறுமைக்கண் நரகத்திலுறும் துன்பமும் நம்மால் தாங்க லாமளவிற்றன்றென்பதனுன், உம்மை எச்சவும்மையாயிற்று. -10:90-93-உரை, பக்:274.
2. 'ஒழிக்கவும்' - 10:173-உரை, பக்:279.
3. 'மூவுலகும்' - 17:35-உரை, பக்:456.

உம்-இறந்தது தழீஇய எச்சம்

1. அன்றியுமென்ற உம்மையும் (5:110), மன்றத்துமென்ற உம்மையும் (5:140) இறந்தது தழீஇய வெச்சவும்மை யாகலானும், -5:149-50 உரை, பக்:165.
2. 'தீங்கும்' - 9:51-உரை, பக்: 249.

உம்-இசை நிறை

1. 'அவளுந்தான்' - 1:25-உரை, பக்:38.
2. 'அவனுந்தான்' - 1:35-உரை, பக்:39.

உம்-ஐயம்

1. 'முட்டினும்' - உம்மையை ஐயவும்மை யாக்கிப் பொருளுரைக்க-10:73-உரை, பக்:272.

உம்-முற்று

1. 'காத நான்கும்' – 5:133-உரை, பக்:164.

எண்: 'எண்' - இலக்கம் – 5:112-உரை, பக்:163.

ஏ: ஏகார இடைச்சொல் இசைநிறை, தேற்றம், எதிர் மறை, எண், பிரிநிலை என்னும் பொருள்களில் சிலம்பில் ஆளப் படுவதைச் சுட்டுகின்றார் நல்லார்.

ஏ-இசைநிறை: 1. 'துடியிடையோயே' - 6:26-உரை, பக்:187.

2. 'நீரே'-ஏகாரத்தை இசை நிறையாக்கலு மொன்று -10:62-உரை, பக்:271.

ஏ-தேற்றம்: 1. 'கடையே' - 11:183-உரை, பக்:308.
2. 'அன்றே' - 16-168-உரை, பக்:433.
3. 'என்றே' யென்ற ஏகாரமிரண்டினும் பிறந்த தேற்றத்தைப் பிரிநிலையால் எதிர் மறுத்துக் கூறினள் - 18:26-27-உரை, பக்-462.

ஏ-எதிர்மறை: 1. 'என்றே' - 13:28-உரை, பக்:341.

ஏ-எண்: 1. மருந்தே,இடனே-16:166, 167-உரை, பக்:433.

ஏ-பிரிநிலை: 1. 'செவியே' - 17:35:4-5-உரை, பக்:456.

ஒடு: ஒடு என்னும் இடைச்சொற்கு எண், ஒருவினை, வேறுவினை, உடனிகழ்ச்சி, ஒப்பலொப்புரை என்னும் பொருளுடைமையைத் தம் உரையில் எடுத்துக் காட்டுகின்ருர் நல்லார்.

ஒடு-எண்: 1. காதையொடு -பதி:85-உரை, பக்:28.
2. 'முல்லையொடு', 'நெஞ்சமொடு' - 4:27, 33-உரை, பக்:131.
3. 'பார்ப்பானொடு' - 9:7-உரை, பக்:245.
4. 'கணவனோடு', 'காவலனோடு' - 9:44, 50-உரை, பக்:249.
5. 'சங்கொடு' - எண்ணொடுவாய்க் கொம்பினொழிபை உணர்த்தி நின்றது -14;13-உரை, பக்:368.
6. 'மூடையொடு' - எண்ணொடுவாய்ப் பின்னும் சில பண்டங்களின் ஒழிபை உணர்த்தி நின்றது -14:210-உரை, பக்:386.
7. 'முன்னினொடு', 'பின்னையொடு 17:28:1-உரை, பக்:454.

ஒடு-ஒருவினை: 1. 'சுரும்பொடு' - 2:21-உரை, பக்:48.
2. கவுந்தியொடு - 10:165-உரை, பக்:279.
3. மனைவியொடு - 13:102-உரை, பக்:346.

ஒடு-வேறுவினை : 1. 'காவலனோடு'-9:50-உரை, பக்:249.

ஒடு-உடனிகழ்ச்சி: 1. 'ஆடலொடு'-3:27-உரை, பக்:107.

2. 'அவளொடு'-பதி:7-உரை, பக்:19.
3. பாற்பயனொடு-16:27-உரை, பக்:426.

ஒடு - ஒப்பலொப்புரை : 1. பதி:85-உரை, பக்:28.

ஒல் : 'ஒல்' என்னும் இடைச்சொல்லை 'அனுகரணம்' என்ற பொருளில் ஓரிடத்து எடுத்துக் காட்டுகின்றார் நல்லார். (19:34-உரை, பக்:472).

ஓ :- 'ஓ' என்னும் இடைச்சொல் இரக்கக்குறிப்பு, பிரிநிலை, இசைநிறை, எதிர்மறை, வியப்பு என்னும் பொருட்களில் ஆளப்படுவதைச் சுட்டுகின்றார் அடியார்க்கு நல்லார்.

ஓ - இரக்கக்குறிப்பு: 1. 'எல்லாவோ'-18:11-உரை, பக்:461.
2. 'வாழியோ'-18:15-உரை, பக்:461.
3. 'கள்வனோ'-18:51-52-உரை, பக்: 464.

ஓ - பிரிநிலை : 1. 'கள்வனோ'-18:51-52-உரை, பக்:464.
2. 'கள்வனோ'-19:7-உரை, பக்:470.
3. 'கிடப்பதோ'-19:48-உரை, பக்:473.

ஓ - இசைநிறை : 1. 'உரையீரோ'-10:240-உரை, பக்:284.

ஓ - எதிர்மறை : 1. 'உண்டோ'-16:17-உரை, பக்:425.

ஓ - வியப்பு : 'குரவையோ'-17: 28:4-உரை, பக்:454.

கு : 'கு' என்னும் இடைச்சொல் 'பொருட்டு' என்னும் பொருளில் ஆளப்படுவது நல்லாரால் சுட்டப் படுகிறது.

'பத்தினிக்கு'-பதி:5-உரை, பக்: 19.

கொல் : 'கொல்' என்னும் இடைச்சொல் 'ஐயம்' என்ற பொருளில் ஈரிடத்து வருவது சுட்டப்படுகிறது.

'கொல்லென'-4:4-உரை, பக்: 128.

உண்டுகொல்-19:57, 59-உரை, பக்: 474.

மன் : கழிவு, ஆக்கம் என்னும் இருபொருளில் 'மன்' என்னும் இடைச்சொல் வருவதை நல்லார் குறிக்கின்றார்.

'மன்பெரும்'-பதி:21-உரை, பக்: 20.

'மன்னுயிர்'-5:163-உரை, பக்: 166.

இங்ஙனம் இடைச்சொல் பற்றி விரிவாகப் பேசிச் செல்கின்றார் நல்லார். இவை நமக்குப் பொருள்தெளிவை ஊட்டுவதோடு நல்லாரின் இலக்கண அறிவையும் தெற்றென விளக்கி நிற்கின்றன.

*உரிச்சொல்*

உரிச்சொல் என்பது பெயருக்கும் வினைக்கும் பொதுவாகி, இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்கட்குத் தாமே உரியவாய் வருவது. ஒரு உரிச்சொல் பலபொருள் தந்தும், பல உரிச்சொற்கள் ஒருபொருள் சுட்டியும் அமையும். சிலப்பதிகாரத்தில் ஈறு திரிந்து அமையும் சில உரிச்சொற்களை மட்டும் நல்லார் சுட்டிச் செல்கின்றார்.

1. நள்ளிருள் (உ. சொல்-நளி)-உரிச்சொல் ஈறு திரிந்தது -பதி: 41-உரை, பக்: 23.

2. நாமநீர் (உ. சொல். நாம்) நாமமென உரிச்சொல் ஈறு திரிந்தது -1:8-உரை, பக்: 37.

3. 'நள்' (நள்ளிருள்) 'நளி' என்னும் உரிச்சொல் ஈறுதிரிபு -15:105-உரை, பக்: 404.

4. 'கடுக்கும்'–கடியென்னு முரிச்சொல் ஈறு திரிந்தது-9:45 -உரை, பக்: 249.

மேற்குறிப்பிட்ட நளி, கடி என்னும் உரிச்சொற்கள் முறையே நள், நாம, கடுக்கும் எனத் திரிந்துள்ளமையை மட்டும் பெயர்சுட்டிச் செல்கின்றார். இவை தவிர வேறு பல உரிச்சொற்கள் சிலம்பில் இடம் பெற்றிருப்பினும் அவற்றை உரிச்சொல் என்று சுட்டாது விட்டு விடுகின்றார் நல்லார்.

*திணை, பால், இடம்*

உயர்திணை, அஃறிணையெனத் திணையிரண்டு; ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனப் பால் வகை ஐந்து ; தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று. இத்திணை, பால், இடம் காட்டுகின்ற சொற்கள் சிலவற்றைச் சுட்டிச் செல்கின்றார் நல்லார்.

1. 'குருதியிர்' - இர் முன்னிலைப் பன்மைக்கண் வந்து ஈண்டு ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியாயிற்று -19:48-உரை, பக்: 473.

2. 'போற்றுதும்' - பன்மைத் தன்மை "'அம்மாம்' (தொல். வினை. 5) என்னும் சூத்திரத்துக் கடதற வால் முடிந்தது-1:1-உரை, பக்: 37.

3. 'நாட்டுதும்' – உயர்திணைக்கண் வந்த இடவழுவமைதித் தனித்தன்மை ; அஃது உளப்பாட்டுத் தன்மை போன்றிருந்தது – பதி:60-உரை, பக்:24.

4. 'நாட்டுதும்' - பன்மைத் தன்மை-15:26-உரை, பக்:400.
5. 'தேவிர்' - 'இர்' முன்னிலைப்பன்மை-9:14-உரை, பக்: 246.
6. 'பெறுதிர்'-முன்னிலைப் பன்மை-11:123-உரை, பக்:305.
7. 'காண்கும்' - உளப்பாட்டுத் தன்மை:உம்-ககரமூர்ந்து வந்தது-6:13-உரை, பக்:185.
8. 'தேவர் (ன்)' - தேவர் பாடமாயின் ஒருவரைக்கூறும் பன்மைக் கிளவி யென்க-6:12 உரை, பக்-185.
9. 'வேண்டுதி' - முன்னிலை வினை - 13:28-உரை, பக்:341.
10. 'காணிகா' - இகவென் முன்னிலை அசை இகாவென ஈறு திரிந்து காண்பாயாக என்ருயிற்று - 18:46 - உரை, பக்:464.

இங்ஙனம் திணை, பால், இடங்காட்டுகின்ற சில சொற்களை எடுத்துக் காட்டுகின்ருர் நல்லார்.

## தொகை

தொகை மொழிகள் வேற்றுமைத்தொகை, உவமத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகையென அறுவகைப்படும். இவ்வாறு வகைத் தொகை மொழிகளையும் ஆங்காங்கே எடுத்துக்காட்டிச் செல்கின்ருர் நல்லார்.

### 1. வேற்றுமைத்தொகை

1. 'குன்றக் குறவர்' - ஏழனுருபுத்தொகை - பதி:3-உரை, பக்:19.
2. 'தெய்வமால்வரை' - தெய்வத் தன்மையையுடைய பெரிய வரையென உருபு தொக்கது - 3:1-உரை, பக்:78.
3. 'சூலத்து' - சாரியை நிற்க உருபும் உவம உருபும் தொக்கன - 11:73-உரை, பக்:302.
4. 'குடைக்கீழ்' - 'இன்' உருபு தொக்கது - 11:1-உரை, பக்:298.
5. 'நூலின்' - நூலினை (ஐ) என்னும் உருபு தொக்கது - 11:154-உரை, பக்:307.
6. 'உழவர்' - உழவர்க் கென நான்கனுருபு விரிக்க - 11:210-உரை, பக்:309.

7. மேகலைக் கோவை' - வேற்றுமைத் தொகையுமாம் -13:159-உரை, பக்:349.

8. 'வாள் வேந்தன்' - வேற்றுமைத் தொகை-19:19-உரை, பக்:471.

உவமத்தொகை

1. 'பொலம்பூ' - பதி:4-உரை, பக்:19.
2. 'நிலாவிரிந்த' - 2:32-உரை, பக்:49.
3. 'வாசிகைத் தோரணம்' - 5:151-52-உரை, பக்:165.
4. 'மதிக்குடை' - 19:19-உரை, பக்:471.

வினைத்தொகை

1. 'நள்ளிருள்' - உரிச்சொல் ஈறு திரிந்தது; இனி வினைத் தொகையாக்கி அனுகரணத்தையுடைய இருளென்பதும் சிறந்தது; 'நள்ளென் றிருத்த நடுவுகொள் யாமத்து' என்றாராக லின் -பதி:41-உரை, பக்:23.
2. 'உரை காதை' - பதி:80-உரை, பக்:27.
3. 'களி மகிழ்வு' - 4:14-உரை, பக்:129.
4. 'நிமிர்நெடுங்கண்' - 4-71-உரை, பக்:133.
5. 'அகன்பரப்பு' - 5:3-உரை, பக்:152.
6. 'அணிவளை' - 5:47-உரை, பக்:156.
7. 'வரிகோலம்' - 5:226-உரை, பக்:171.
8. 'அவிழ்பூ' - 6:2-உரை, பக்:184.
9. 'வெல்போர்', 'முனையிடம்' - 10:118-உரை, பக்:276.
10. 'விழிநாட்டம்' - 14:7-உரை, பக்:366.
11. 'அறுபொருள்' - 17:33:2-உரை, பக்:456.
12. 'விரிகமலம்' - 17:36:2-உரை, பக்:457.

பண்புத்தொகை

1. அங்கண் - 'அம்' இது பண்புத்தொகைக்கண் வந்தது. -4:3-உரை, பக்:128.
2. ஏழகத்தகர் முதலியன இருபெயரொட்டுப் பண்புத் தொகை. -10:5-8, பக்:267.

உம்மைத்தொகை

1. 'அரையிருள்யாமம்' - உம்மைத் தொகை; இருபெயர்க் கண் வந்தது - 4:81-உரை, பக்:135.

2. 'நெஞ்சிருள் கூர்' - உள்ளக் கண்ணையும் அவ்விருள் மறைப்ப-சிறப்பும்மை தொக்கது - 6:10-உரை, பக்:185.
3. 'யாம்' – யாமுமென்னும் உம்மை தொக்கது - 6:27-உரை, பக்:187.
4. 'அலர் கொடி' - அலரும் என்னும் உம்மை தொக்கது. - 6:124-உரை, பக்:197.
5. 'மணி விளக்கம்' – உம்மைத்தொகை; இரு பெயர்க்கண் வந்தது - 9:3–உரை, பக்:235.
6. 'முழுதாண்ட' – முழுதுமென்னும் முற்றும்மை தொக்கது - 4:1–உரை, பக்:128.
7. 'அருளறம்' - உம்மைத்தொகையுமாம் - 10:200–உரை, பக்:282.
8. 'அறத்துறை' – அறமும் அறத்தின் துறையுமென உம்மைத் தொகை - 14:11-உரை, பக்:366.
9. 'மறத்துறை' - 14:12-உரை, பக்:367.
10. 'மண்ணரசு' - 14:50-உரை, பக்:371.
11. 'புண்ணிய தானம்' - 15:30-உரை, பக்:401.
12. 'இலக்கண முறைமை' - இலக்கணத்தானும் இருந்த முறைமை யானும் என உம்மைத்தொகை - 10:162 -உரை, பக்:133.
13. 'மன்னர் ஏவல் கேட்க' - மன்னருமென்னும் உம்மை தொக்கது - 17:1:3:4-உரை, பக்:446.

அன்மொழித்தொகை

1. 'பைந்தொடி' - 14:23-உரை, பக்:369.

விளிவேற்றுமை

எட்டாவது வேற்றுமையாகக் கொள்ளப்படுவது விளி. இதற்கெனத் தனி உருபு இல்லை. அடியார்க்கு நல்லார் விளியேற்ற சில பெயர்ச்சொற்களைத் தம் உரையிடையே குறிப்பிட்டுச் செல்கின்றார்.

1. 'பைந்தொடி', 'கூந்தல்' - அண்மைவிளி - பதி:46,50-உரை, பக்:23.
2. 'அடிகள்' - அண்மை விளி - பதி:62-உரை, பக்:24.
3. 'மாது' - முன்னிலை விளி - 2:60-உரை, பக்:52.
4. 'கோதை' - 'ஐயா யாகும்' (தொல். விளி மரபு. 4) என்பதனுற் கோதை கோதாயென விளியேற்றது - 2:62-உரை, பக்:52.

5. 'நன்னுதால்' - நன்னுதல் "எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே, நின்ற வீற்றய னீட்டம் வேண்டும்" (தொல். விளிமரபு. 27) என்பதனுல் நீட்டித்தது
-2:55-உரை, பக்:52.

6. 'கூந்தல்' - 10:43-உரை, பக்:270.

7. 'கடல் வண்ணன்' - அண்மை விளி - 'அண்மைச் சொல்லே யியற்கையாகும்' (தொல். விளிமரபு.10) - 17:32:2-உரை, பக்:456.

8. 'உண்கண்' - இனி உண்கண் என்பதனை முன்னிலை விளியாக்கி இம்மறையை நீ பொறுக்க வென்று சொல்லிக் காட்டினன் எனினும் அமையும் -9:34-உரை, பக்:248.

### வியங்கோள்

ஆசிரியர் இளங்கோவடிகள் எடுத்தாண்ட வியங்கோள்வினை வடிவங்களில் இரண்டினை மட்டும் பெயர்சுட்டி விளக்கிச் செல்கின்றார் நல்லார்.

1. 'உண்க' - இரந்து கோடற் குறிப்பின்கண் வந்த ககர வீற்று வியங்கோள்-16:43-உரை: பக்:427.

2. 'எள்ளல்' - அல்லீற்று வியங்கோள்; 'இற்றெனக் கிளத்தல்' (தொல். கிளவி. 19) போல
-19:14-உரை, பக்: 471.

### எச்சம்

பெயரெச்சம் வினையெச்சம் என எச்சம் இருவகைத்து. இவ்வெச்சங்களை வினைமுடிபு காட்டி உரை எழுதுகின்றபோது குறிப்பிட்டுச் செல்கின்றார்.[1] இவை தவிரச் சொல்லெச்சம், குறிப்பெச்சம் என்ற இரண்டினையும் ஒரோ வழிச் சுட்டுகின்றார்.

1. 'காட்டுமின்' - சொல்லெச்சம் - 16:158-61-உரை, பக்:433.

2. 'ஒளிய' - ஒளிய வெனவே குறிப்பெச்சமாய் வல்லென்பதாயிற்று - 14:183-உரை, பக்:382.

3. 'காண்டிய' - வினை எச்சம் - 16:159-உரை, பக்:433.

---

1. நல்லாரின் இலக்கண உரைநடை—பார்க்க.

### மயக்கம்

காலம் திணைபால் இடமயக்கம், உருபுமயக்கம் என மயக்கம் இரண்டு வகைப்படும். இவ்விருவகை மயக்கங்களும் சிலம்பில் இடம் பெறுவது நல்லாரால் எடுத்துக் காட்டப்படுகின்றது.

### கால மயக்கம்

1. 'வந்தது' - வரும் என்னும் எதிர்காலத்தை இறந்த காலத்தாற் கூறினர்; விரைவு; என்னை;
'வாராக் காலத்து நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருளவென்மனர் புலவர்'
(தொல். வினை. 44)
என்றாராகலின்-8:3-7-உரை, பக்:229.
2. 'திறந்தேன்' - காலமயக்கம்; விரை பொருட்கண் வந்தது. -11:117-உரை, பக்:305.
3. 'முடித்த' - முடிந்த தென்பது விகாரம். இனி, எதிர் காலத் தன்மை வினையை விரைபொருட்கண் இறந்தகாலத்தாற் கூறினன் எனினும் அமையும் -16:155-உரை, பக்:133.
4. 'இல்வழி' - இல்லாத காலத்தே; இடப்பொருள் காலத்தோடு மயங்கிற்று -4:11-உரை, பக்:129.

### திணை மயக்கம்

1. 'ஐவர்' - செறலின் கண் திணை மயக்கம்
-10:198-உரை, பக்:282.

### பால் மயக்கம்

1. 'கஞ்சனார்' - செறலின் கண் பான் மயக்கம்
-17:37:1-உரை, பக்:457

### இடமயக்கம்

1. பட்டது பாடமாயின் ஒருமைப் பன்மை மயக்கமென்க
- 12:13-உரை, பக்:320.

### உருபு மயக்கம்

1. 'உலகிற்கு' - உலகின்கண் - உருபுமயக்கம்
-1:11-உரை, பக்; 37.

2. 'குடிகளோடு' - ஒடு - இன்; உருபுமயக்கம்
- 1:32-உரை, பக்:39.
3. 'மருந்தின்' - உருபுமயக்கம்-2:46-உரை, பக்:51.
4. 'வாளியின்' - இன்-ஆன் உருபு மயக்கம்
-8:50-உரை, பக்:223.
5. 'சாத்ததற்கு' - (சாத்தனிடம்) உருபுமயக்கம்
-9:15-உரை, பக்:217.
6. 'விலக்கினிற்புணர்ந்து' - மூன்றனுருபு ஐந்தனொடு மயங்கிற்று - 3:13-உரை, பக்:81.

விகாரம்

சொற்கள் தத்தம் இயல்பினின்று திரிந்து விகாரமாக அமைவனவற்றை அடியார்க்கு நல்லார். 'விகாரம்' எனப் பெயர் குறிப்பிட்டு எடுத்துக் காட்டிச் செல்கின்றார். இங்ஙனம் நல்லார் சில சொற்களை விகாரமாகக் கொண்டு பொருள் எழுதுதலின் மூலநூற் கருத்தைத் தெளிவாக அறிய முடிகிறது. நல்லார் 'விகாரம்' எனக் காட்டும் சொற்கள் வருமாறு:

1. 'போய அது' போயதென விகாரம்-பதி:8-3-உரை,பக்:19.
2. 'பூம்புகார்' - 1:10-உரை, பக்:37.
3. 'வியர்பிரிய' - 4:57-உரை, பக்:132.
4. 'கழல்கட் கூளி' - விகாரமாக்கிப் பச்சைக் கழல் போலும் கண்ணையுடைய கூளியெனினும் அமையும் -5:125-உரை, பக்:164.
5. 'அலவல்' - 5:129-உரை, பக்:164.
6. 'பூம்பொதி நறுவிரைப் பொழில்' - நறிய விரையைப் பொதிந்த பூவையுடைய பொழில்-விகாரம் - 5:195-உரை, பக்:169.
7. 'தீர்ந்திலது' - 5:232-உரை, பக்:171.
8. 'காமர்' - காமம் காமரென விகாரம்
-6:89-உரை, பக்:194.
9. 'வாட்டருஞ்சீர்' - வாடு - வாட்டென விகாரம்
-9:40-உரை,பக்:249.
10. 'இனைதல்' - இனையாயிற்று; விகாரம் - 9:42-உரை, பக்:249.
11. 'புதா' - 10:117-உரை, பக்:276.

12. 'விளக்கி' - விளக்கி; விகாரம்-11:12-உரை, பக்:299.
13. 'பவம்' - பவமென்பதை விகாரமாக்கிப் பாவத்தான் வரும் பிறப்புக்களை எனலுமாம்- 11:101-உரை, பக்:304.
14. 'தரும்' - தாருமென்றது தருமென விகாரமாகிக் கொடு மென்பதாயிற்று -12:19-உரை, பக்:32.
15. 'குவிந்தன' - குவித்தன-விகாரம்-12:3:2-உரை, பக்:324.
16. 'பொரு' - பொருந்தின; விகாரம்-15:50-உரை, பக்:402.
17. 'தோட்டார்' - 15:198-உரை, பக்:409.
18. 'முடிந்த' - 16:155-உரை, பக்:433.
19. முந்தை-'முத்தை'-17:15:4-உரை, பக்:450.
20. 'சுருங்கி' - 19:32-உரை, பக்:472.
21. 'கற்கோள்' - கால்கோளென விகாரம்-பதி:84-உரை, பக்:28.
22. 'ஓவுதல்' விகாரத்தால் ஓவென நின்றதெனவுமாம் -10:109-உரை, பக்:275.

மருஉ

மருஉ வாக வரும் சொல்லைப்பற்றி ஓரிடத்துக் குறிப்பிடு கின்றார் அடியார்க்கு நல்லார்.

'விளைத்த' லென்பது 'விளையு'ளென மருவிற்று -6:30-உரை, பக்:187.

இடக்கர்

இடக்கரடக்கலாக அமையும் மூன்று சொற்களை எடுத்துக் காட்டுகின்றார் நல்லார்.

1. 'மயங்கி' - 2:35-உரை, பக்:49.
2. 'நகை' - ஆகுபெயராகிய இடக்கர் - 14:163-உரை, பக்:380.
3. 'அசைந்தன வருந்த நிலவுப்பயன் கொள்ளு'மென இடக்க ராக்கிக் கூறினார் -4:30-31-உரை, பக்:131.

ஒப்பில் போலி

ஒப்பில்போலியாக அமையும் சொல்லை மூன்றிடங்களில் குறிப்பிடுகின்றார் நல்லார்.

1. 'போலும்' - 10:221-உரை, பக்:283.

2. 'போலும்' - 10:231-உரை, பக்:284.
3. ,, - 11:123-உரை, பக்:305.

*அருத்தாபத்தி*

இதனை ஈரிடங்களில் குறிக்கின்றார் நல்லார்.

1. 'சொல்லிய முறையாற் சொல்லவும் படும்' என்பதனாற் சொல்லாத முறையாற் சொல்லவும் படுமென அருத்தா பத்தி கோடலானும் -பதி:1-2-உரை, பக்:17.
2. 'குன்று' வென்பதனை அருத்தா பத்தியாக்கிக் குன்றுதலை யுடையவெனக் குற்றம் நான்கிற்கும் ஏற்றுக -14:181-உரை, பக்:382.

இவையேயன்றி வேறுசில இலக்கணக் குறிப்புக்களையும் நல்லார் ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றார். ஒருபொருட் பன்மொழி பற்றி ஓரிடத்துக் குறிப்பிடுகின்றார்.

'உச்சி மீமிசை யென ஒரு பொருட் பன்மொழி சிறப்பின்கண் வந்தன' -11:42-உரை, பக்:301.

'பகுதிப் பொருள் விகுதி' என்ற இலக்கணக் குறிப்பை ஈரிடங்களில் தருகின்றார்.

1. காவதம் - காதம் -10:42-உரை, பக்:270.
2. யாவதும்-யாதும்-16:57-உரை, பக்:428.

தொடரியல் அமைப்பில் 'எழுவாய்' பற்றி ஈரிடங்களில் குறிக்கின்றார்.

1. புகழினன் - எழுவாய் - 1:36-உரை, பக்:39.
2. என்கண் - எழுவாய் - 11:52-உரை, பக்:301.

திசைச் சொற்கள் மூன்றினையும் எடுத்துக் காட்டுகின்றார்.

1. 'தெக்கணம்' - வடசொற்றிரிபு - 14:82-உரை, பக்:373.
2. 'பிறக்கு' - பிருதக் கென்னும் வடமொழிச் சிதைவென்க -5:95-உரை, பக்:161.
3. காப்பியமென்னும் வடமொழிப் பெயர் -உரைப்பாயிரம், பக்:6.

இங்ஙனம் எழுத்துக்களின் புணர்ச்சி, சொற்களின் அமைப்பு சொல்வகை, தொடரியல் பற்றிய இலக்கணக் குறிப்புக்களை மிகுதியும் எடுத்துக்காட்டி உரை எழுதும் நல்லாரின் இலக்கண அறிவு போற்றற்குரியது. இதோடு மெய்ப்பாடு, அணி, வழக்கு பற்றிய செய்திகளையும் ஆங்காங்கே விளக்கிச் செல்கின்றார்.

*மெய்ப்பாடு*

சிறப்புடைய மெய்ப்பாடுகள் எட்டினைத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன. பிற்காலத்தார் சாந்தத்தையும், பக்தியையும் சேர்த்து மெய்ப்பாடு பத்து என மொழிவர். அடியார்க்கு நல்லார் தம் உரையில் ஐந்து இடங்களில் இம்மெய்ப்பாடு பற்றி விளக்கிச் செல்கின்றார். ஐந்திடங்களில் நல்லார் மெய்ப்பாடு பற்றிப் பேசினும், மருட்கை, வீரம் (பெருமிதம்), வெகுளியாகிய மூன்று மெய்ப்பாடுகளையே பெயர் சுட்டுகின்றார்.

குன்றக் குறவர்கள் தம் கண்முன்னே கண்ணகி விட்புலம் போய காட்சியைச் சேரன்செங்குட்டுவனுக்கு விளக்கி, 'இறும்பூது போலுமஃ தறிந்தரு ளீயென'த் தம் வியப்பினையும் சுட்டுகின்றனர். இதற்கு உரை எழுதிய நல்லார் 'இது மருட்கையென்னும் மெய்ப்பாடு' என விளக்குகின்றார்.[1]

புகார் நகரில் மருவூர்ப்பாக்கத்தும், பட்டினப்பாக்கத்தும் வாழ்ந்த வீரமறவர்கள், 'தம் வேந்தனுக்கு உற்ற தீங்கு நீங்குக' எனக் கூறித் தம்தலைகளை அரிந்து நாளங்காடிப்பூதத்திற்குப் பலியிடுகின்றனர். இதனை விளக்கிய நல்லார், 'இவற்றாற் சொல்லியவை அவிப்பலியென்னும் புறப்பொருட்பகுதியும் (பு. வெ. வாகை. 30) காப்பியத்துக்கு அங்கமான நவச்சுவையுள் வீரச்சுவை யவிநயமுமென்க' என உரை எழுதுகின்றார்.[2]

ஆய்ச்சியரின் குரவை முடியுந் தருணத்தில் ஊர் அரவங் கேட்டு வந்த ஒருத்தி கண்ணகிக்கு வரப்போகும் பெருந்துயருக்கு ஆற்றாளாய் நெஞ்சழிந்து சொல்ல நாவெழாது நிற்கின்றாள். இதற்கு உரை எழுதிய நல்லார், 'இனி வாக்காற் சொல்லாதவள் தன் மெய்ப்பாட்டாற் சொல்லுமென்றுமாம்' எனக் குறிக்கின்றார்.[3]

ஊர் அரவங் கேட்டு வந்தாளின் நிலை கண்ட கண்ணகி,

*'நஞ்சமோ தோழி தலைவன் வரக்காணேன்*
*... ... ... ... ... ... ...*
*எஞ்சலார் சொன்ன தெவன்வாழி யோதோழி'*

என மும்முறை அவலித்துக் கேட்கிறாள். இது அழுகையில் தோன்றிய மருட்கை என்னும் மெய்ப்பாடு என விளக்குகின்றார் நல்லார்[4].

---

1. சிலப். பதி: 9-உரை, பக்: 19.
2. சிலப். 5:76-88-உரை, பக்: 160.
3. சிலப். 18:9-10-உரை, பக்: 461.
4. சிலப். 18:20-23-உரை, பக். 462.

ஊர்சூழ் வரியில் தன் கணவன் வெட்டுண்டு இறந்து கிடப்பதைக் கண்ட கண்ணகி;

'என்னுறு துயர்கண்டு மிடருறு மிவளென்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ
மன்னுறு துயர்செய்த மறவினை யறியாதேற்
கென்னுறு வினைகாணு விதுவென வுரையாரோ'
(19:39-42)

என அவலித்து அழுகின்றாள். இதற்கு உரை எழுதிய நல்லார் 'இஃது அழுகையைச் சார்ந்த வெகுளி; மேல்வருவனவற்றிற்கும் கொள்க' என எழுதுகின்றார்.[1] எனவே பின் வருகின்ற கண்ணகி அரற்றலும் அழுகையைச் சார்ந்த வெகுளி என்னும் மெய்ப்பாடு என்பது போதரும்.

இங்ஙனம் நல்லார் 'மெய்ப்பாடு' பற்றிய செய்திகளை விளக்கிச் செல்கின்றார். இதுவும் நல்லாரின் இலக்கணப் புலமைக்குச் சான்றாக அமையும்.

*அணி (அலங்காரம்)*

அணிகட்கெல்லாம் முதன்மையான உவமையை மட்டுமே தொல்காப்பியர் உவமையியலில் கூறுகின்றார். இதன் வளர்ச்சியே பிற்கால அணிகள். தண்டியலங்காரம் 35 அணிகளைக் கூறுகின்றது. பின்வந்த அலங்கார நூற்கள் இதன் எண்ணிக்கையை மேலும் பலவாக விரித்துக் கூறும். அடியார்க்கு நல்லார் தம் உரையில் உவமை, உருவகம், நிரனிறை, பரியாயம், உதாரம், சமாதி, விரோதம் முதலான அணிவகைகளைக் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

*உவமை*

உவமையணியை நல்லார் பண்பும் பயனும் கூடின உவமம், தொழில் உவமம், இல்பொருள் உவமம், புகழுவமம் எனக் குறிப்பிட்டுச் செல்கின்றார். மங்கல வாழ்த்துப்பாடலில் 'திங்களைப் போற்றதும்' (1:1-3) என்பதில் அமையும் உவமையைப் பண்பும் பயனும் கூடின உவமம் என்கிறார்.[2] அடுத்து வரும் 'ஞாயிறு போற்றதும்'(1.4-6) என்பதில் அமையும் உவமையைத் தொழிலுவமமாகக் காண்பர்.[3] கோவலனும் கண்ணகியும் ஒருங்கிருத்தலுக்கு

1. சிலப். 19:39-42-உரை, பக்: 473.
2. சிலப். 1:2-3-உரை, பக்: 17.
3. சிலப். 1;4-6-உரை, பக்: 37.

ஞாயிறும் திங்களும் ஒருங்கிருத்தலே ஒப்பிடுகின்றார் அடிகள். இங்கு ஞாயிறும் திங்களும் ஒருங்கிருத்தல் இயல்பின்மையின் இவ்வுவமையை இல்பொருள் உவமம் என நல்லார் எடுத்துக் காட்டுகின்றார்.[1] இதுபோன்று கண்ணகியின் குரலினிமைக்குக் குழைத்தல் இயல்பில்லாத குழலிசையும் யாழிசையும் அமுதமும் கலந்த கலவையை இளங்கோவடிகள் உவமித்தலின் இதனையும் இல்பொருள் உவமை என நல்லார் விளக்குகின்றார்.[2]

முருகன் தன் அழகிய வேலைக் கண்ணகிக்கு இரு கண்ணாக ஈந்துள்ளான் என்பதில் அமையும் உவமையைப் 'புகழுவமையலங்காரம்' என்கிறார் நல்லார்.[3]

ஓர் உவமை அமைவதற்கு உவமானம், உவமேயம், பொதுத் தன்மை, உவமஉருபு ஆகியன இருக்க வேண்டுமென்பர். இவற்றில் உவமான உவமேயத்தைச் சிலவிடங்களில் பொருத்திக் காட்டுகின்றார் நல்லார்.

'குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபிற் கோவலன் போல
இளிவாய் வண்டினொ டின்னிள வேனிலொடு
மலய மாருதந் திரிதரு மறுகில்' -5:200-203.

என்பதில் அமையும் உவமேய உவமானங்களை 'பாணர்க்கு வண்டும், பரத்தர்க்கு வேனிலும் கோவலர்க்கு மாருதமும் உவமம்' எனப் பொருத்திக் காட்டுகின்றார் நல்லார்.[4] இது போன்று 'மையிருங்குன்று' (15:51) என்பதில் அமையும் 'மை-முகபடாத்துக்கு உவமையாக்குக' என எழுதுகின்றார்.[5] கொலைக்களக்காதையில் அமையும் கோவலன் பாராட்டுரைக்கு (கண்ணகியை) உரை எழுதிய நல்லார், 'பேணிய கற்பு...பொன் முதலியவற்றுக் கெல்லாம் உவமம் விரித்துரைக்க' என எழுதுகின்றார்.[6] இங்ஙனம் உவமையணி பற்றி நல்லார் பேசுகின்றார்.

## உருவகம்

'உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்து
ஒன்றென மாட்டின ஃதுருவக மாகும்' (தண்டி:30)

---

1. சிலப். 2:28-31-உரை, பக்: 49.
2. சிலப். 2:58-உரை, பக்: 52.
3. சிலப். 2:49-51-உரை, பக்: 51.
4. சிலப். 5:200-203-உரை, பக்: 169.
5. சிலப். 15:51-உரை, பக்: 402.
6. சிலப். 16:84-93 உரை, பக்: 429.

என்பர் தண்டியாசிரியர். இவ்வுருவக அணி சிலம்பில் சில இடங்களில் இடம் பெறினும் நல்லார் ஓரிடத்து மட்டுமே இதனை ஓர் அலங்காரமாகச் சுட்டிச் செல்கின்றார். அந்திமாலைச்சிறப்புச் செய்காதையில் விடியற்காட்சியைப் படைத்த இளங்கோவடிகள் பொய்கையை மகளாக உருவகிக்கின்றார். இதற்கு உரை எழுதிய நல்லார், 'அன்னமென்றது முதல் விழிப்பவென்னுந் துணையும் கூறிய இவை உருவகமென்னும் அலங்கார மென்றுணர்க', என எழுதுகின்றார்.[1]

*நிரனிறை*

சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது நிரனிறை யணியாகும். நிரனிறை, எதிர்நிரனிறை மயக்க நிரனிறை என இதன் வகைகளைக் குறிப்பிடுகின்றார் நல்லார். அந்திமாலைச் சிறப்புச் செய்காதையில்,

'குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத' (4:15-16)

என்னும் வரிகட்கு உரை எழுதிய நல்லார், 'ஊதுதல் கோவலர்க்கும் தும்பிக்கும் பொது. ஊதுங் குழலினும் முல்லையினும் கோவலரோடு தும்பி வாய்வைத்து ஊதவெனினும் அமையும்; இது நிரனிறை' எனக் குறிப்பிடுகின்றார்.[2] இதே போன்று,

'உழைமுத லாகவு முழையீ ருகவும்
குரன்முத லாகவுங் குரலீ ருகவும்
அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியன் மருதமும் பெருகியன் மருதமும்' (8:37-40)

என்பதன் உரையில், 'உழை குரன் முதல் உழைகுரலீருகவுள்ள நாஃகிற்கும் அகநிலை மருதமுதற் பெருகியன் மருதம் ஈருகவுள்ள நான்கும் 'நிரனிறை' என்று எழுதுகின்றார்[3]. இங்ஙனம் நிரனிறை அணிவருவதை ஈரிடங்களில் பெயர்சுட்டிவிளக்கம் எழுதுகின்றார்.

இனி, எதிர்நிரனிறை பற்றி மூன்றிடங்களில் குறிப்பிடுகின்றார். மங்கலவாழ்த்துப்பாடலில் 'போகநீள் புகழ்' என்பதற்குப் 'போகமும் புகழும் நிலைபெற்ற' என உரை எழுதிய நல்லார் இதனை எதிர்நிரனிறை எனச் சுட்டுகின்றார்.[4] கடலாடு காதையில்,

---

1. சிலப். 4:72-76-உரை, பக்: 134.
2. சிலப். 4:15-16-உரை, பக்: 129.
3. சிலப். 8:37-40-உரை, பக்: 233.
4. சிலப். 1:22-உரை, பக்: 38.

'தோடுகொண் மருங்கிற் சூழ்தா லெழினியும்
விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்
தண்பதங் கொள்ளுந் தலைநாட் போல
வேறு வேறு கோலத்து வேறு வேறு கம்பலை' (6:158-61)

என்பதன் உரையில், 'தோடு கம்பலையும் எழினி கோலமும் தோன்றவென எதிர் நிரனிறை'[1] என எழுதுகின்றார்.

நாடுகாண் காதை 94-97 வரிகட்குரிய உரையில், 'வயலும் சோலையு மென்பனவற்றைக் கூறிய முறையானே எதிர் நிரனிறையாகக் கொள்வாருமுளர்'[2] எனக் குறிப்பிடுகின்றார்.

காடுகாண்காதையில் நெடியோனின் நின்றவண்ணம் குறிக்கும் பகுதியை மயக்க நிரனிறையாகக் கொள்கின்றார் நல்லார். 'மேகம் இடைநிலைத் தானத்து உடுத்துப் பூண்டு நின்றது போல ஏந்திப் பூண்டு பொலிந்து உச்சி மீமிசைத் தோன்றிய நெடியோன் நின்ற வண்ணமும் என்க. இது மயக்க நிரனிறை' என்பர்.[3]

பரியாயம்

பரியாய அலங்காரம் பற்றி மூன்றிடங்களில் குறிப்பிடுகின்றார் நல்லார். மனையறம் படுத்த காதை 82-3-வரிகட்கு உரை எழுதிய நல்லார், 'தயங்கல் வயங்கலிரண்டும் விளக்க மாதலிற் பரியாய மென்னும் அலங்காரம்'[4] எனக்குறிப்பிடுகின்றார். ஊர்காண்காதையில் அடிகள் பல்வேறு சொற்களால் கோயிலைக் குறிக்க, அதற்கு விளக்கம் எழுதிய நல்லார், 'கோயில் நியமம் நகரம் கோட்டம் பள்ளியென்பனவற்றில் வந்த பரியாய அலங்காரம் உணர்க'[5] எனக்குறிக்கிறார்.

துன்பமாலையில், துன்புற்ற கண்ணகிக்கு, ஊரரவம் கேட்டு வந்தாள், 'கொலை குறித்தனரே' என ஏன் கூறினாள் என்ற வினாவிற்கு விடை எழுதும் முகனாகக் 'கொன்றார்களெனின், இவளுயிர்க்கு உறுதி பயக்குமெனக் கருதிப் பரியாயத்திற் கூறினாளாம்'[6] என்கிறார் நல்லார். இங்ஙனம் பரியாய அணி பற்றிக் குறிப்பிடுகின்றார்.

---

1. சிலப். 6-158-62-உரை, பக்:193.
2. சிலப். 161·194-97-உரை, பக்: 274.
3. சிலப். 11:41-51-உரை, பக்:301.
4. சிலப். 2:82-83-உரை, பக்: 54.
5. சிலப். 4:12-உரை, பக்: 367.
6. சிலப். 18:25-28-உரை, பக்: 462

உதாரம், சமாதி, விரோதமாகிய அலங்காரங்களை முறையே ஒவ்வோரிடத்தில் எடுத்துக் காட்டுகின்றார். மனையறம்படுத்த காதை 26-27-வரிகட்கு உரை எழுதிய நல்லார், "பகையின்றிக் கல்வியொடு செல்வத்திடை நஞ்சுற்ற காமம் நுகர்ந்திருத்தலின், வாளியும் காமனும் வருந்தாதிருந்தமை தோன்ற வீற்றிருக்கு மென்றார் ; இஃது உதாரமென்னு மலங்காரம் ; என்னை? 'உதார மென்பதோதிய செய்யுளிற், குறிப்பி னொருபொருணெறிப் படத் தோன்றல்" என்பது அணியியலாகலின்' என உதார அலங் காரத்தை விளக்குகின்றார்.[1]

சமாதி அலங்காரத்திற்கும் விரோத அலங்காரத்திற்கும் சிலம்பிலிருந்து ஓரோர் எடுத்துக் காட்டுத் தருகின்றார் நல்லார்.

1. குமரி 'வாழை' இது பெயரின் வந்த சமாதி என்னும் அலங் காரம் -16:12-உரை, பக்:127.
2. 'செய்ய கரியவன்'-விரோத மென்னும் அலங்காரம் -17:36:34-4-உரை, பக்:457.

'விளக்கு' என்னும் ஓர் அலங்காரமும் அலங்கார நூற்களில் பேசப்படுகின்றது. இது முதல்நிலை விளக்கு, இடைநிலை விளக்கு, இறுதிநிலை விளக்கு என மூவகைப்படும். நல்லார் தம் உரையில் இடைநிலை விளக்காக அமையும் சொற்களை ஈரிடங்களிலும், இறுதி நிலை விளக்காக அமையும் சொல்லை ஓரிடத்தும் குறித்துச் செல் கின்றார். 'தீபகம்' எனத் தண்டி கூறும் அணியைத் தமிழாக்கி 'விளக்கு' என நல்லார் அமைத்துள்ளது அவரது தமிழுணர் வைக் காட்டுகிறது.

1. 'மன்னும்' இடைநிலை விளக்கு 1:22-உரை, பக்:38.
2. 'புகழ்' - ,, 1:26-உரை, பக்:39.
3. 'தொகு' - இறுதிநிலை விளக்கு - 11:109-உரை, பக்:374.

### சிலேடை

சிலேடை அணி பற்றி நான்கு இடங்களில் குறிப்பிடுகின்றார் அடியார்க்கு நல்லார்.

1. 'ஒருதனித் திகிரி' - ஒப்பற்ற ஒற்றைத்தேராழி; சக்கரமு மாயிற்று ; சிலேடை-4:2-உரை, பக்: 128.
2. 'புறஞ்சிறை வாரணம்' - என்பது சிலேடை ; புறத்தே சிறையையுடைய கோழியும், புறஞ்சேரியையுடைய உறையூரும்-10:248-உரை, பக்:285.

---

1. சிலப். 2:26-27-உரை, பக்: 49.

3. 'செம்மலர்க்கண்கள் முழுநீர்வார' - என்பதற்குச் செம்மலரிடமெல்லாம் கள்ளாகிய நீர் முழுதும் வார வெனவும், சிவந்த மலர் போலும் கண்கள் இரண்டும் நீர் வார வெனவும் சிலேடைப் பொருண்மை காண்க. -4:5-6-உரை, பக்:129.

4. 'காதற்கொழுநனை' (5:189) என்பது முதல் 'மறுகில்' (5:203) என்னுந் துணையும் சிலேடை-5:187-88 -உரை, பக்:168.

மேற்கண்ட நான்கிடங்களில் சிலேடையணியை நல்லார் குறிப்பிடுவதோடு,

'காதற் கொழுநனைப் பிரிந்தல ரெய்தா
மாதர்க் கொடுங்குழை மாதவி' (5:189-90)

என்னும் வரிகட்கு உரை எழுதுகின்ற போது சிலேடையணி விளங்க இருபொருள்பட உரை எழுதிச் செல்கின்றார். இங்ஙனம் பல்வேறு அணிவகைகளைக் குறிப்பிடும் நல்லாரின் அணியியல் அறிவு, தெற்றெனப் புலப்படுகின்றது.

நல்லாரின் இலக்கண உரைநடை

உரை எழுதுகின்றபோது வினைமுடிபு கூறுவது நல்லாரின் தனித்தன்மைகளுள் ஒன்று. பெயர் வினை எச்சங்களைப் பெயரோடும் வினைமுற்றுக்களோடும் பொருத்திக்காட்டும் இலக்கண உரைநடை அவரின் இலக்கணப் புலமையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

பதிகத்தின் முதலிரு வரிகட்குச் சொல்லுக்குச் சொல் புணர்ச்சி விதி கூறிய நல்லார், 'அரசென்பதற்கு இரண்டனுருபு விரித்துத் துறந்தென்னும் வினையெச்சத்தோடும், துறந்தென்னும் வினை எச்சத்தை இருந்தவென்னும் பெயரெச்சத்தோடும் முடித்து அதனையும் அடிகளென்னும் பெயரோடே முடிக்க'[1] என வினை முடிபு காட்டுகின்றார்.

பதிகம் 1-9-வரிகளின் உரைமுடிபில், 'ஈண்டி வந்து காட்டிக் காணப் போய வென்னும் பெயரெச்சம் அதுவென்னும் சுட்டுப் பெயரோடு முடிந்தது'[2] என வினைமுடிபு காட்டுகின்றார்.

அந்திமாலைச் சிறப்புச்செய்காதை 47-57-வரிகளின் உரையில், 'ஒழிய நீங்கப் பிரிய மறப்ப இழப்ப என்பன பரியாய வாய்பாட்டான் வந்து இழப்ப வென்னும் பொருளவாயின. இவ்வினை

---

1. சிலப்.பதி: 1-2-உரை, பக்:13.
2. சிலப்.பதி: 1-9-உரை, பக்: 19.

யெச்சங்களை எழுதாள் மகிழாள் காதினள் என்னும் வினைப்பெய ரான் முடித்து இப்பெயர்கட்குப் பண்பொட்டு விரித்து இவற்றைக் கையற்ற வென்னும் பெயரெச்சத்தோடு முடித்து இப் பெய ரெச்சத்தை நெஞ்சென்னும் பெயரோடு முடித்து இதனையுடைய கண்ணகி என்க'[1] என எழுதுகின்றார்.

இந்திர விழவூரெடுத்த காதை 200-203-வரிகட்கு, 'மாதவி தன்னொடும் பயில்பூம் பிணையலாற் பொலிந்து எய்தி அமர்ந்து புக்குச் சிறந்து திளைத்துப் பாணரொடும் பரத்தரொடும் திரிகின்ற ஒழுக்கத்தையுடைய கோவலனைப் போல வண்டினொடும் இள வேனிலொடும் மாருதம் திரிதரு மறுகிலென்க' என முடிப்புரை எழுதிய நல்லார், 'இச்செய்தென்னும் வினையெச்சங்களைத் திரி தரும் என்னும் வினையொடு முடித்து ஆச்செய்யுமென்னும் பெய ரெச்சத்தையும் கோவலனென்னும் பெயரொடு முடித்து அவனைப் போலத் திரிதருமென்க' வென வினைமுடிபு சுட்டுகின்றார்.[2]

கடலாடு காதை 26-27-வரிகளின் உரையில், 'இனி என வென்பதனை 'எனவெனெச்சம் வினையொடு முடிமே' (தொல். எச்ச. 42) என்பதனுன், என்று சொல்லிப் போந்தெனச் சொல் லெச்சமாக்கி முடிப்பினும் அமையும்'[3] என எழுதுகின்றார். இக்காதை 115-20-ஆம் வரிகட்கு எழுதிய உரையில், 'புலம்பக் காட்டக் கடிய வென்னும் செயவெனெச்சங்கள் ஏற ஏறி என்னும் வினை கொண்டு முடிந்தன'[4] என முடிவு கூறுகின்றார்.

புறஞ்சேரியிறுத்த காதை 184-88-ஆம் வரிகளின் உரையில் 'ஏங்கி என்னும் செய்தெனெச்சம் நடுங்க வென்னும் பிறவினை கொண்டு முடிந்தது'[5] என வினை முடிபு கூறுகின்றார்.

கொலைக்களக் காதை 9-14-வரிகட்கு உரை எழுதிய நல்லார், 'வந்தீர்க்கென்றும், காணீரென்றும் உயர்சொல்லால் ஒருவரைக் கூறும் பன்மையாற் கூறினவள் ஈண்டு நங்கையென்றது ஒருமை பன்மை மயக்கமெனின்—அற்றன்று. நம்பியெனப் பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயர் நங்கையென்று புதல்வர் மனைவியரைக் கூறும் முறைப்பெயராதலின் நங்கை யென்றுளென்க'[6] என 'நங்கை' என்ற சொல் ஒருவரைக்கூறும் பன்மைக் கிளவியாகப் பயன் படுத்தப் பட்டிருப்பதைக் காரண காரியத்துடன் எடுத்துக் காட்டி விளக்குகின்றார்.

1. சிலப். 4:47-57-உரை, பக்:132.
2. சிலப். 5:200-203-உரை, பக்: 169.
3. சிலப். 6:26-27 -உரை, பக்:187.
4. சிலப். 6:115-20-உரை, பக்: 197.
5. சிலப். 13:184-88-உரை, பக்: 351.
6. சிலப். 16:9-14-உரை, பக்: 423.

இதே காதை 22-28-வரிகளின் உரையில், 'எண்ணும்மை தொக்கு ஒடு விரிந்து உடனிகழ் பொருளாயிற்று'[1] என விளக்கம் எழுதுகின்றார். ஆய்ச்சியர் குரவை 5-வது பாடல் உரையில், 'உறையாமையும் சோர்தலும் உருகாமையும் ஆடாமையும் வீழ் தலு மென்றெண்ணிய உம்மைகளில் உரையாமை யானுமென மூன்றனுருபு விரிக்க; 'உம்மை யெண்ணி னுருபுதொகல் வரை யார்' (தொல். இடை. 43) என்றாராகலின்'[2] என இலக்கண அமைப்பை மனதிற் கொண்டு உரை கொள்ளுகின்றார்.

'துன்ப மாலை' 25-28-வரிகளின் உரையில், 'என்றே யென்ற ஏகார மிரண்டினும் பிறந்த தேற்றத்தைப் பிரிநிலையால் எதிர் மறுத்துக் கூறினாள்'[3] என விளக்குகின்றார். 'ஊர்சூழ்வரி' 72-75 வரிகளின் உரையில், 'என்றாள் என்னும் எழுவாய்க்குச் சென்றாள் என்பதனைப் பயனிலை யாக்குக'[4] என வினைமுடிபு கூறுகின்றார்.

இங்ஙனம் இலக்கண அமைப்புக்களை மனதில் கொண்டு எச்சங்களைப் பெயரோடும், வினையோடும் முடித்துக் காட்டுவதும் உருபு தொக்கு வருவனவற்றை விரித்துப் பொருள் எழுதுவதும், சொற்கள் நிற்கும் முறையான் மேம்போக்காக நோக்குவார்க்கு வழுவாகத் தோன்றுவனவற்றைத் தக்க சான்றுகளுடன் வழு வின்மை சுட்டி விளக்கிச் செல்வதும் நல்லாரின் இலக்கண அறி வைத் தெள்ளிதின் உணர்த்துகின்றன.

### வழக்கு

செய்யுள் இயற்றும் புலவர்கள் நாடக வழக்கு, உலகியல் வழக்கு என்னும் இருவகை வழக்குகளை அறிந்திருக்க வேண்டும் என்பது தொல்காப்பியர் கொள்கை. இங்கு நல்லார் உலகியல் வழக்கை நன்கறிந்து உரை எழுதியுள்ளார் என்பது பல சான்றுகளால் தெளிவாகின்றது. வழக்குகளைப் பல கோணங்களில் காண்கிறார் நல்லார். பேச்சு வழக்கில் அமைந்த பழமொழிகளைக் கூறுகின் றார். வட்டார வழக்காக அமைந்த வடிவங்களைச் சுட்டுகிறார். அக்காலத்தில் அமைந்த வழக்குகளையும் தருகிறார். இவை மொழியியல் நோக்கில் நல்லார் வழக்குகளை நோக்கிய பார்வையைத் தெரிவிக்கின்றன.

---

1. சிலப். 16:22-28-உரை, பக்: 426.
2 சிலப். 17:5-உரை, பக்: 447.
3. சிலப். 18:25-28-உரை, பக்: 462.
4. சிலப். 19:72-75-உரை, பக்: 475.

கோவலன், 'இலம்பாடு நாணுத் தருமெனக்கு' எனக் கண்ணகியிடம் உரைத்ததற்கு விளக்கம் எழுதும்போது, 'இன்று நாணுத் தருமென்றது, கெட்டால் மதி தோன்றும் என்னும் வழக்கு' என எழுதுகின்றார்.[1]

'கடல்விளை யாட்டினுள் கோவலன் ஊடக்கூடாது ஏகிய' (8:14) என்ற பகுதிக்கு உரைதரும் போது, 'விளையாட்டினுள் என்றார், விளையாட்டுப்பூசல் வினையாயிற்றென்னும் வழக்குப் பற்றி'[2] எனத் தருகின்றார். கோவலனும் மாதவியும் கடற்கரையில் விளையாட்டாகவே பாடத்தொடங்கினர். ஆனால் அது இறுதியில் வினையில் முடிந்த தென்பதை இங்கே சுட்டுகின்றார். இளவேனில் வந்ததைச் சோலைக் குயிலோன் தன் குரலால் மக்களுக்குத் தெரிவித்தான் என்பதை, 'படையுள் படுவோன் பணிமொழி கூற, (8:13) என இளங்கோவடிகள் கூற, 'பணிமொழி' என்பதற்கு, 'பணிவிடை என்னும் வழக்கும் அது'[3] என நல்லார் எழுதுகின்றார்.

மாதவியின் முதற்கடிதம் கலைகளின் கூட்டு; மன்மதனின் நிலையை வேனிற் காலத்தில் விளக்கும் சொல்லலங்காரம்; இங்கு 'ஒருதனிச் செங்கோல் ஒருமக ளாணையில்' (8:51) என்பதற்கு விளக்கம் எழுதிய நல்லார், 'திருவாணைக்கு மேலாய ஆணை இல்லையென்பது வழக்கு'[4] என எழுதுகின்றார்.

கோவலனும் கண்ணகியும் மதுரைப் பயணத்தைத் தொடங்கும் போது கவுந்தியின் துணை கிடைக்கின்றது. அதற்கு மகிழ்ந்த கோவலன்,

> *'அடிகள் நீரே அருளுதி ராயினித்*
> *தொடிவளைத் தோழி துயர் தீர்த்தேன்'* (10:62-63)

எனப் பேசுகின்றான். இதற்கு உரை எழுதிய நல்லார், 'நீயிரே இது செய்வீராயினென்றது ஒரு வழக்கு'[5] என இன்றைய மக்கள் வழக்கிலும் பயின்று வரும் பேச்சுவழக்கு முறையைச் சுட்டுகின்றார்.

பொற்கொல்லன் தன்னோடு சிலம்பு காண வந்த காவலரைத் தன் கட்டுண் சொற்களால் கவர்கின்றான். கள்வனின்

---

1. சிலப். 9:71-உரை, பக்: 251.
2. சிலப். 8:14-உரை, பக்: 230.
3. சிலப். 8:13-உரை, பக்:229.
4. சிலப். 8:51-உரை, பக்:234-35.
5. சிலப். 10:62-63-உரை, பக்: 271.

மருந்திற் பட்டால்பின்பு மன்னன் சினத்திலிருந்து தப்பமுடியாது என்பதை,

'மருந்திற் பட்டி ராயின் யாவரும்
பெரும்பெயர் மன்னனிற் பெருநவைப் பட்டீர்' (16:170-71)

எனப் பேசுகின்றான். இதைக் குறிப்பிடும்போது, 'பட்டீர்-வினை பொருள்; சொன்னேம் சொன்னேம் என்னும் வழக்கு' என எழுதுகின்றார்.[1] இக்கூற்று நாம் தற்காலத்தில், 'நான் சொல வதைச் சொல்லிவிட்டேன்-பின்பு உன் இஷ்டம்' என்று கூறு கின்ற நிலையினை நினைக்கத் தூண்டுகிறது.

இங்ஙனம் பொதுமக்களின் பேச்சு வழக்கைப் பொதுநிலையில் குறிப்பிட்ட நல்லார், அடுத்துச் சில குறிப்பிட்ட பகுதியில் வாழ்கின்ற மக்களின் பேச்சுவழக்கினையும் குறிப்பிடுகின்றார். இதனை வட்டார வழக்கு என்பர் இன்றைய மொழிநூலார்.

நிலமடந்தை, கண்ணகியின் துன்பத்தினைக் கண்டு நடுங்கினாள் என இளங்கோ கற்பனை செய்கின்றார். 'முழுநீர் வார முழுமெயும் பனித்து' (4:6) என்பதில் 'பனித்து' என்ற சொல்லுக்கு 'நடுங்கி' என்று பொருள்கூறி, 'பனிகொண்டு, பனியென்பதொரு நோயுமுண்டு. அது குடநாட்டு வழக்கு' என்று எழுதுகின்றார்.[2] 'காய்ச்சல்' எனத் தமிழ்நாட்டில் கூறு கின்ற நோயை இன்றும் குடநாட்டில் 'பனி' என்றுதான் கூறுகின்றனர்.

கோவலன், தன் குழந்தை மணிமேகலைக்குப் பெயர் சூட்டும் நாளன்று பலருக்கும் செம்பொன்மாரி செங்கையால் பொழிந்தான் அதனைப் பெறவந்த முதிய பார்ப்பனனை வேகயானை வெம்மையிற் கைக்கொண்டது. அதனை 'ஒய்யெனத்தெழித்தனன்' கோவலன் இங்குத் 'தெழித்து' என்ற சொற்குப் பொருள்விளக்கம் தரும் போது, 'தெழித்தல்-பிரித்தலுமாம்; குட நாட்டார் வழக்கு'[3] என எழுதுவது எண்ணத்தக்கது.

ஆய்ச்சியர் குரவையில் கோவலர் தம் சிறுமியர்கள் குழற் கோதை புறஞ்சோரக் கூத்தாடுகின்றார்கள். இங்குச் 'சிறுமியர்-சிறு பெண்கள் ; குடநாட்டு வழக்கு'[4] என இயம்புகின்றார்.

நிலமகளின் புதைத்த இருட்படாத்தைக் கதிரவன் நீக்கு கிறான். 'புதையிருட் படாம் போக நீக்கி' (5:4). இங்குப்

---

1. சிலப். 16:170-71-உரை, பக்: 434.
2. சிலப். 4:6-உரை, பக்: 128.
3. சிலப். 15:49-உரை, பக்: 402.
4. சிலப். 17:28:2-உரை, பக்: 454.

'புதைத்தல்-போர்த்தல் ; மலைநாட்டு வழக்கு'[1] என எழுதுகிருர். இன்றும் போர்வையைப் 'பொதப்பு' என்றுதான் கேரளத்தில் கூறுகின்றனர். நல்லார் இங்ஙனம் மூன்றிடங்களில் குடநாட்டு வழக்கென்றும் ஓரிடத்து மலைநாட்டு வழக்கென்றும் கூறுவது சிந்திக்கத்தக்கது. இதனுல் நல்லார் குடநாட்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு.

*காலவழக்கு*

காலந்தோறும் மொழிவழக்குகள் மாற்றமடைந்து கொண்டிருக்கின்றன. இன்று கணவனை 'அத்தான்' என்றழைக்கின்றனர். சிறிது காலத்திற்கு முன்பு 'நாதா', 'பிராணநாதா' போன்ற சொற்களைப் பயன்படுத்தினர். இன்று 'பையன்' என்று கூறுவதை அடிகள் காலத்தில் 'பாலகன்' என்று அழைத்தார்கள். இதைக் காலவழக்கு எனக் கருதுகின்ருர் நல்லார். 'பால் விக்கிப் பாலகன் தான்சோர' (9:6) என்பதற்கு விளக்கம் எழுதிய நல்லார் ''பாலகன் என்பது கால வழக்கு''[2] எனக் கூறுகின்ருர்.

தொல்காப்பியத்தில் குழந்தையை 'மகவு' என அழைத்தார்கள் (அடிகள் காலத்தில்) 'பாலகன்' என அழைத்தார்கள் என்பதை வலியுறுத்த ''மடியகத் திட்டாள் மகவை'' (9:22) என்பதற்கு உரை விரிக்கும்போது, ''மக, 'குழவியு மகவு மாயிரண் டல்லவை, கிழவ வல்ல மக்கட் கண்ணே' (தொல். மரபு. 23)'' என்ற தொல்காப்பிய நூற்பாவைக் காட்டி-மறுபடியும் 'பாலகனென்பது காலவழக்கு' என எழுதுகின்ருர்.[3]

இன்று 'குளித்தாயா?' என்று கேட்பதைச் சில காலத்திற்கு முன்பு 'நீராடினுயா?' என்று கேட்டனர் போலும். இளங்கோ காலத்தில் 'துறை படிதல்' என்பது நீராடலைக் குறித்தது போலும். எனவே, 'தூவித் துறைபடியப் போயினுள்' (18:5) என்பதற்கு உரை வகுத்த நல்லார், 'துறைபடிதல்-நீராடுதல்; அக்கால வழக்கு'[4] என எழுதுகின்ருர்.

மாதரி, கண்ணகி கோவலரை அடைக்கலம் பெற்று மடைக்கலம் அளிக்கத் தன் மகள் ஐயையிடம் கூறும்போது, 'நாத்தூண் நங்கையொடு நாள்வழிப் படூஉம்' (16:19) என ஐயைக்கு அண்ணன் கோவலனுகவும், அண்ணன் மனைவி கண்ணகியை

---

1. சிலப். 5:4-உரை, பக்: 152.
2. சிலப். 9:6-உரை, பக்: 245.
3. சிலப். 9:22-உரை, பக்: 247.
4. சிலப். 18:5-உரை, பக்:461.

நாத்தூண் நங்கையாகவும் கருதிக் கூறுகின்றாள். இதனை 'நாத்தனார்' என்று இன்று கூறுகின்றார்கள். மதினி, மைத்துனி என்றும் கூறுகிறோம். அடிகள் காலத்தில் 'நாத்தூண் நங்கை' எனக் குறிப்பிட்டனர் போலும். எனவே நல்லார் இதனை 'இஃது அக்கால வழக்கு' என எழுதுகின்றார்.[1]

'திசை முகம் பசந்து' (4:5)–'பசந்து என்றார் மாலைக்காலத்துப் பரந்த பச்சை வெயிலை; 'செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன' (411) என்றார் மதுரைக்காஞ்சியினும். இக்காலத்து இதனைக் காடு கிழாள் வெயிலென்ப'[2] எனக் குறிப்பிடுகின்றார். எனவே இது அடியார்க்கு நல்லார் காலவழக்கு எனலாம். இதனால் 'அக்கால வழக்கு' என நல்லார் குறிப்பிடுவது இளங்கோவடிகள் கால வழக்கு என்பது போதரும்.

இவ்வாறு இன்று மொழியியல் அடிப்படையில் காணுகின்ற வழக்குகள் பற்றி 14-ஆம் நூற்றாண்டிலேயே எண்ணி எழுதிய திறன் எண்ணி இன்புறற் குரியது. இவற்றால் நல்லாரின் இலக்கணப்புலமையும் தெற்றெனத் தெரிகின்றது. சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு எழுதுவதும், சொல்லமைப்புக்களை விளக்குவதும், புணர்ச்சிவிதி கூறுவதும், பல்வேறு அணிவகைகளை எடுத்துக்காட்டுவதும், தொடரியல் அமைப்பில் வினைமுடிபு கூறுவதும், தொகை பற்றி விளக்குவதும், இலக்கண அமைப்பை ஒட்டி உரை எழுதுவதும், வழக்குகளை அறிந்து விளக்கம் கூறுவதுமாகிய நல்லாரின் இலக்கணப்புலமைத்திறன்கள் வியந்து பாராட்டும் தகைமைத்து.

---

1. சிலப். 16:19-உரை, பக்: 425.
2. சிலப். 4:5-உரை, பக்: 129.

# இலக்கண மேற்கோள்கள்

| எண் (1) | நூற்பா (2) | எடுத்தாளப்படும் இலக்கண நூல் (3) | சிலம்பில் எடுத்தாளப் படும் இடம் (4) | நோக்கம் (5) |
|---|---|---|---|---|
| | **தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்** | | | |
| 1. | 'அவற்றுள், மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்' | தொல். புணர்:2 | பதி:1-2-உரை, பக்:13 | புணர்ச்சி விதி-'கோட்டத் தரசு |
| 2. | ,, | ,, | ,, | புணர்ச்சிவிதி-'துறந் திருந்த' |
| 3. | 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' | ,, : 3 | ,, | ,, -'கோட்டத் தரசு' |
| 4. | ,, | ,, | ,, | ,, -துறந்திருந்த' |
| 5. | 'அத்தி னகர மகரமுனை யில்லை' | ,, :23 | ,, | ,, 'கோட்டத்தரசு' |
| 6. | 'அத்தே வற்றே யாயிரு மொழிமேல் ஒற்றுமெய் கெடுத றெற்றென் றற்றே' | ,, :31 | ,, | ,, -'கோட்டத்தரசு' |
| 7. | 'புள்ளி யீற்றுமு னுயிர்தனித் தியலாது மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே' | ,, :36 | ,, | ,, -'கோட்டத்தரசு' |
| 8. | ,, | ,, :36 | ,, | ,, -'துறந்திருந்த' |

| | | | |
|---|---|---|---|
| 9. ,, | ,, ,, | ,, | ,, -‘சேரலிளங்கோ’ |
| 10. ‘எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே<br>உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்’ | தொல்.புணர்:38 | பதி:1-2-உரை,<br>பக்:13 | புணர்ச்சிவிதி-‘கோவடிகட்கு’ |
| 11. ‘மஃகான் புள்ளிமு னத்தே சாரியை’ | ,, உருபு:13 | ,, | ,, -‘கோட்டத்து’ |
| 12. ‘ஏழ னுருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்<br>சாரியைக் கிளவி யியற்கையு மாகும்’ | ,, ,, :29 | ,, பக்:12 | ,, -‘குணவாயில்’ |
| 13. ‘அகர விறுதிப் பெயர்நிலை முன்னர்<br>... ... ஒற்றிடை மிகுமே’ | ,, உயிர்மயங்:1 | ,, பக்:13 | ,, -‘குடக்கோ’ |
| 14. ‘வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே’ | ,, ,, :14 | ,, ,, | ,, ,, |
| 15. ‘ஓகார விறுதி யேகார வியற்றே’ | ,, ,, :87 | ,, ,, | ,, -‘கோச்சேரல்’ |
| 16. ‘அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே<br>முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்<br>வரைநிலை யின்றே யாசிரி யற்க<br>மெல்லெழுத்து மிகுதலாவயி னான’ | தொல். புள்ளி:20 | 16:38-உரை, பக்:427 | ,, -‘அங்கை’ |
| 17. ‘லகார விறுதி னகார வியற்றே’ | ,, ,, :71 | பதி:1-2-பக்:12 | ,, -‘வாயிற்கோட்டம்’ |
| 18. ‘ளகார விறுதி ணகார வியற்றே’ | ,, ,, :101 | ,, ,, பக்:13 | ,, ‘அடிகட்கு’ |
| 19. ,, | ,, ,, :110 | 4:3-உரை, பக்:128 | ,, -‘அங்கண்’ |
| 20. ‘மெல்லொற்று... .. கிளையொற் றாகும்’ | தொல். குற்: 9 | 16:77, பக்:429 | புணர்ச்சிவிதி-‘அற்பு’ |
| 21. ‘மூன்று மாறு நெடுமுதல் குறுகும்’ | ,, ,, : 35 | 5:170, பக்:167 | ,, ‘அறுமுகம்’ |
| 22. ‘லனவென வரூஉம் புள்ளி யிறுதிமு<br>னும்முங் கெழுவு முளப்படப் பிறவும் | | | |

| (1) | (2) | (3) | (4) | (5) |
| --- | --- | --- | --- | --- |
| | அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச் செய்யுட் டொடர் வயின் மெய்பெற நிலையும்' | தொல்.புணர்:76 | பதி:61, பக்:24 | புணர்ச்சிவிதி-'கெழு' எனும் சாரியை |
| 23. | 'கிளந்த வல்ல' என்னும் அதிகாரப் புறனடையான் | ,, ,, :78 | பதி:40, பக்:23 | ,, -'பொதியில்' |
| 24. | 'அதிகாரப் புறனடையால்' | ,, ,, ,, | 2:28, பக்:49 | ,, -'சுரும்புணக் கிடந்த' |
| 25. | ,, | ,, ,, ,, | 2:53, பக்:52 | ,, -'மாயிரு' |
| 26. | ,, | ,, ,, ,, | 4:80, பக்:134-35 | ,, -'இரவுத்தலை' |
| 27. | ,, | ,, ,, ,, | 16:17, பக்:425 | ,, -'நோதகவு' |
| 28. | 'செய்யு ளிறுதிப் போலி மொழிவயின் னகார மகார மீரொற் ருகும்' | தொல். மொழி:18 | 11:183, பக்:308 | போலி-'போன்ம்' |
| | **தொல்காப்பியம்-சொல்லதிகாரம்** | | | |
| 29. | 'இற்றெனக் கிளத்தல்' | தொல். கிளவி:19 | 19:9-14, பக்:471 | வியங்கோள் விளக்கம்-'எள்ளல்' |
| 30. | 'குடிமை யாண்மை ... ... ... ... ... ... ... ... நிலையின வாயினும் அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்' | ,, ,, :56 | 2:1, பக்:46 | உயர்திணைச்சொல் அஃறிணை முடிபு கொளல் - 'அரசு' |
| 31. | ,, | ,, ,, ,, | 4:8, பக்:128 | ,, - 'அரசு' |

| | | | |
|---|---|---|---|
| 32. ‘காலமுலகம்’ | ,, ,, :58 | 4:4, பக்:128 | அஃறிணைச்சொல் உயர் திணையாய் இசைத்தல்–‘திங்களஞ்செல்வன்’ |
| 33. ,, | ,, ,, ,, | 8:59, பக்:234 | ,, –‘திங்கட்செல்வன்’ |
| 34. ,, | ,, ,, ,, | 14:96, பக்:374 | ,, –‘காரரசாளன்’ |
| 35. ‘நின்ருங் கிசைத்த லிவணியல் பின்று’ | ,, ,, :59 | 4:4, பக்:128 | ,, –‘திங்களஞ்செல்வன்’ |
| 36. ,, | ,, ,, ,, | 8:59, பக்:234 | ,, –‘திங்கட்செல்வன்’ |
| 37. ,, | ,, ,, ,, | 14:96, பக்:374 | ,, –‘காரரசாளன்’ |
| 38. ‘இசைத்தலு முரிய வேறிடத் தான’ | ,, ,, :60 | 4:4, பக்:128 | ,, –‘திங்களஞ்செல்வன்’ |
| 39. ,, | ,, ,, ,, | 8:59, பக்:234 | ,, –‘திங்கட்செல்வன்’ |
| 40. ‘கண்ணுந் தோளும்’ | ,, ,, :62 | 11:52, பக்:301 | பன்மை கூறும் கடப்பாடி லாதசொல்–‘கண்’ |
| 41. ‘யாதனு … … சாரும்’ | தொல்.வேற்.மயங். :23 | 1:11, பக்:37 | உருபு மயக்கம்–‘உலகிற்கு’ |
| 42. ‘ஐ யா யாகும்’ | தொல்.விளி: 4 | 2:62, பக்:52 | விளி–‘கோதாய்’ |
| 43. ஓவு முவ்வு மேயொடு சிவணும்’ | ,, ,, : 5 | 2:60, பக்:52 | முன்னிலைவிளி–‘மாது’ |
| 44. ‘அண்மைச் சொல்லே யியற்கை யாகும்’ | ,, ,, :10 | 17:32, பக்:456 | அண்மைவிளி–‘கடல் வண்ணன்’ |
| 45. ‘எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே நின்ற வீற்றய னீட்டம் வேண்டும்’ | ,, ,, :27 | 2:55, பக்:52 | விளி–‘நன்னுதால்’ |
| 46. ‘அம்மாம்’ | ,, வினை:5 | 1:1, பக்:37 | பன்மைத்தன்மை–‘போற்றுதும்’ |
| 47. ‘ஆவோ வாகும்’ | ,, ,, :14 | 15:160, பக்:407 | வினைமுற்று ஈறுதிரிதல்–‘நின்றேனை’ |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 48. | ‘ஆயென் கிளவியு மவற்றெடு கொள்ளும்’ | தொல்.வினை:15 | 6:26, பக்:187 | ,, - ‘இடையோய்’ |
| 49. | ‘இஐ ஆய்’ | ,, ,, :26 | பதி:38, பக்:23 | முன்னிலை ஒருமை வினைமுற்று-‘கேட்டி’ |
| 50. | ‘வாராக் காலத்து நிகழுங் காலத்தும் ஒராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல் விரைந்த பொருள வென்மனார் புலவர்’ | ,, ,, :44 | 8:7, பக்:229 | காலமயக்கம்-‘வந்தது’ |
| 51. | ‘உம்மை யெண்ணி னுருபுதொகல் வரையார்’ | ,,இடை:43 | 17:5, பக்:447 | 3-ஆம்வேற்றுமைத்தொகை |
| 52. | ‘கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும் கிளந்தவற் றியலா னுணர்ந்தனர்கொளலே’ | ,, ,, :48 | 1:13, பக்:38 | எண்ணிடைச்சொல் -‘ஆயினும்’ |
| 53. | ,, | தொல்.உரி:29 | 2:54, பக்:52 | உரிச்சொல் பொருள்-‘சாயல்’ |
| 5. | ‘ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே’ | தொல்.உரி:86 | 9:45, பக்:249 | ,, -‘கடுக்கும்’ |
| 55. | ‘ஐவியப் பாகும்’ | ,, ,, :87 | 17:16, பக்:451 | ,, -‘ஐ’ |
| 56. | ‘வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே’ | ,, எச்ச: 5 | உரைப்:பக்:6 | வடசொல்-‘காப்பியம்’ |
| 57. | ‘சிதைந்தன வரினு மியைந்தன வரையார்’ | ,, ,, : 6 | ,, ,, | ,, ,, |

| | | | |
|---|---|---|---|
| 58. 'எனவெ னெச்சம் வினையொடு முடிமே' | ,, ,, :42 | 6:27, பக்:187 | எச்சம்-'என' |

## தொல்காப்பியம்-பொருளதிகாரம்

| | | | |
|---|---|---|---|
| 59. 'முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்<br>இயல்பென மொழிப வியல்புணர்ந் தோரே' | தொல்.அகத்:4 | பதி:1-2, பக்:14 | முதற்பொருள் |
| 60. 'மாயோன் மேய காடுறை யுலகமும்<br>சேயோன் மேய மைவரை யுலகமும்<br>வேந்தன் மேய தீம்புன லுலகமும்<br>வருணன் மேய பெருமண லுலகமும்<br>முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்<br>சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே' | ,, ,, :5 | ,, | நானிலமும் தெய்வமும் |
| 61. 'காரு மாலையு முல்லை' | தொல்.அகத்:6 | பதி:1-2, பக்:14 | முல்லைக்குரிய பொழுது |
| 62. 'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு<br>முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே' | ,, ,, :9 | ,, பக்:17 | பாலைத்திணைக்குரிய பொழுது |
| 63. 'தெய்வ முணாவே மாமரம் புட்பறை<br>செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ<br>அவ்வகை பிறவுங் கருவென மொழிப' | ,, ,, :18 | ,, பக்:14 | கருப் பொருள் |
| 64. 'இருவகைப் பிரிவு நிலைபெறத் தோன்றினும்<br>உரிய தாகு மென்மனார் புலவர்' | ,, ,, :11 | 2:3-11, பக்:47 | பிரிவு இருவகை-'கலத்தினும் காலினும்' |

| (1) | (2) | (3) | (4) | (5) |
| --- | --- | --- | --- | --- |
| 65. | ‘மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த கொற்றவை நிலையு மத்திணைப் புறனே’ | தொல்.புறத்:4 | 12:14, பக்:327 | கொற்றவை நிலை |
| 66. | ‘வாடா வள்ளி வயவ ரேத்திய’ | ,, ,, :5 | 12:7, பக்:325 | வள்ளிக்கூத்து |
| 67. | ‘நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து தனிமகள் புலம்பன் முதுபாலையாகும்’ | ,, ,, :24 | 19:47-50, பக்:474 | முதுபாலை |
| 68. | ‘நடைமிகுத் தேத்திய குடைநிழன் மரபு’ | ,, ,, :36 | 1:1-3, பக்:37 | குடைச்சிறப்பு |
| 69. | ,, | ,, ,, ,, | 1:10-12, ,, | குலச்சிறப்பு |
| 70. | ‘துயிலெடை’ | ,, ,, ,, | 4:77-84, பக்:134 | சொற்பொருள் விளக்கம்-‘துயிலெடுப்பி’ |
| 71. | ‘ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற் ரேற்ற முச்சீர்த் தாகு மென்ப’ | தொல்.செய்:68 | பதி:90, பக்:29 | குட்டச்செந்தூக்கு |
| 72. | ‘இடையும் வரையார் தொடையுணர் வோரே’ | ,, :69 | ,, | ,, |
| 73. | ,, | ,, ,, :132 | 6:35, பக்:188 | தரவு விளக்கம் |
| 74. | ‘ஏனை யொன்றே தேவர்ப் பராவுதன் முன்னிலைக் கண்ணே’ | ,, ,, :138 | ,, | தேவபாணி |
| 75. | ‘ஒருபொரு ளுதலிய வெள்ளடி யியலால் திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே’ | ,, ,, :153 | பதி:70-71, பக்:26 | கலிவெண்பாட்டு |
| 76. | ‘பாட்டிடை வைத்த குறிப்பி னானும் பாவின் றெழுந்த கிளவி யானும் | | | |

| | | | |
|---|---|---|---|
| பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும் பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென் றுரைவகை நடையே நான்கென மொழிப' | ,, ,, :173 | பதி:27-30, பக்:21 | பாட்டிடைவைத்த குறிப்பு |
| 77. 'இழுமென் மொழியான் விழுமியது நுவலினும் பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினும்' | ,, ,, :239 | உரைப்: பக்:6 | தொடர்நிலை விளக்கம் |
| 78. 'குழவியு மகவு மாயிரண் டல்லவை கிழவ வல்ல மக்கட் கண்ணே' | ,, மரபு:23 | 9:22, பக்:247 | மக்கள் இளமைப்பெயர்-'மக' |
| 79. 'புறக்கா ழனவே புல்லென மொழிப' | தொல்.மரபு:85 | 16:35, பக்:427 | தாலப்'புல்'-விளக்கம் |
| 89. 'சொல்லிய வல்ல பிறவவண் வரினும்' | ,, ,, | 2:38, பக்:50 | குழவித்திங்கள்- ,, |

## புறப்பொருள் வெண்பாமாலை

| | | | |
|---|---|---|---|
| 1. ,, | பு. வெ :2 | 12:14, பக்:326 | வெட்சிப்புறநடை-விளக்கம் |
| 2. 'பெய்தாமஞ் சுரும்பிமிரப் பெரும்புலவர் புகழ் பாடக் கொய்தார் மன்னவன் குடைநாட் கொண் டன்று' | ,, வஞ்சி:3 | 5:89-94, பக்:161 | குடைநாட்கோடல்- ,, |
| 3. 'செற்றார்மேற் செலவ மர்ந்து கொற்றவா ளுட்கொண் டன்று' | ,, :4 | ,, | வாளுட்கோடல்- ,, |
| 4. ,, | ,, :20 | 12:13, பக்:326 | வெட்சி- ,, |
| 5. ,, | ,, :30 | 5:76-88, பக்:160 | அவிப்பலி- ,, |
| 6. 'தண்பணை வயலு ழவனைத் தெண்கிணைவன் றிருந்துபுகழ் கிளந்தன்று' | ,, :186 | 10:138-39, பக்:277 | களவழி வாழ்த்து- ,, |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | **அணியியல்** | | | |
| 1. | ‘உதார மென்ப தோதிய செய்யுளிற் குறிப்பி னொருபொரு ணறிப்படத் தோன்றல்’ | அணியியல் | 2:26-27, பக்:48 | உதார அலங்காரம்- ,, |
| | **திவாகரம் (நிகண்டு)** | | | |
| 1. | ‘நீரின்றி வேனி றெறுநிலம் பாலை’ | திவா:5 | பதி:1-2, பக்:18 | நீரின்மை-பாலைக்குரியது-விளக்கம் |
| 2. | ‘ஆதி யரிவஞ்ச நல்லரி வஞ்சம் ஏமத வஞ்ச மிரண வஞ்சம் தேவ குருவ முத்தர குருவமெனப் போக பூமி அறுவகைப் படுமே’ | ,, :12 | 2:10, பக்:47 | போகபூமி வகை- ,, |
| 3 | ‘ஆசே சிறுமையுங் குற்ற முமாகும்’ | ,, — | 3:47, பக்:109 | சொற்பொருள்-‘ஆசு’ |
| 4. | ‘பருத்திநூல் பட்டுநூ லமைத்தாடை யாக்கலும் சுமத்தலும் பிறவுங் காருக வினைத்தொழில்’ | ,, :12 | 5:16-17, பக்:153 | காருகத்தொழில்-விளக்கம் |
| 5. | ‘கொன்றுவாழ் தொழிலினும் வன்பணித் தொழிலினும் கன்றிய தொழிற்கை கருங்கை யெனப்படும்’ | ,, ,, | 5:29, பக்:155 | கருங்கை வகை- ,, |
| 6. | ‘முடக்கிய விருகை பழுப்புடை யொற்றித் துடக்கிய நடையது துணங்கை யாகும்’ | ,, :9 | 5:70, பக்:159 | துணங்கைக்கூத்து- ,, |

## பிங்கலந்தை (நிகண்டு)

1. ‘கொட்டந் துருக்கந் தகர மகிலாரம்
ஒட்டிய வைந்தும் விரை’

பிங்:ஐயர்வகை. :78 5:14, பக்:153 விரை- ,,

## இலக்கண நூற்களில் காட்டப்படும் மேற்கோள் பாடல்கள்

1. ‘மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனுங் கண்களித்தான்-பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப்
பிறமக ளேற்றுள் பெரிது’

தொல். புறத்:5 நச். மேற் 12:7, பக்:325 வள்ளிக்கூத்து- ,,

2. ‘அறிந்தவ ராய்ந்தநா ளாழித்தேர் மன்னன்
எறிந்திலங் கொள்வா ளியக்கம்-அறிந்திகலிப்
பின்பகலே யன்றியும் பேணு ரகநாட்டு
நன்பகலுங் கூகை நகும்’

பு.வெ.வஞ்சி:4 5:89-94, பக்:161 வாளுட்கோடல்- ,,

3. ‘முன்னர் முரசிரங்க மூரிக் கடற்றானைத்
துன்னருந் துப்பிற் றொழுதெழா-மன்னர்
உடைநா ளுலந்தனவா லோதநீர் வேலிக்
குடைநா ளிறைவன் கொள’ பு.வெ.வஞ்சி:3 5:89-94, பக்:161 குடைநாட்கோடல்-
விளக்கம்

4. ‘பகடுவாழ் கென்று பனிவயலு ளாமை
அகடுபோ லங்கட் டடாரித்-துகடுடைத்துக்

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | குன்றுபோற் போர்விற் குரிசில் வளம்பாட<br>இன்றுபோ மெங்கட் கிடர்' | பு.வெ.வஞ்சி:186 | 10:138–39, பக்:277 | களவழி வாழ்த்து-விளக்கம் |
| 5. | 'ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்<br>கூளி மலிபடைக் கொற்றவை-மீளி<br>அரண் முருங்க வாகோள் கருதி னடையார்<br>முரண் முருங்கத் தான்முந் துறும்' | ,, :20 | 12:13, பக்:326 | வெட்சி- ,, |
| 6. | 'அருஅ நிலைச்சாடி யாடுறு தேறல்<br>மருஅன் மழைத்தடங் கண்ணி-பொருஅன்<br>கடுங்கண் மறவன் கழல்புனைந்தான் காலை<br>நெடுங்கடைய நேரார் நிரை' | ,, :2 | 12:14, பக்:326 | வெட்சிப்புறநடை-,, |
| 7. | 'இறையோன் சடைமுடிமே லெந்நாளுந் தங்கும்<br>பிறையேர் திருநுதலும் பெற்ற-தறைபுனல்சூழ்<br>பூவலயந் தாங்கு மரவின் படம்போலும்<br>பாவைநின் னல்குற் பரப்பு' | தண்டி.பொருள்:5 | 2:49-52, பக்:51 | புகழுவமை- ,, |

# இசைப்புலமை

முத்தமிழ் வித்தகர் அடியார்க்கு நல்லாரின் இசைத்தமிழ்ப் புலமை ஆங்காங்கே விளங்கித் தோன்றினும், கூத்துக்கலை போன்று விரிவும் விளக்கமும் பெறவில்லை எனலாம். அதற்கு அடிப்படைக் காரணம் கானல்வரிக்கு அவர்தம் உரை கிடைக்கப் பெருமையே. நல்லார் தம்உரையின்கண் இயற்றமிழுக்குத் தொல்காப்பியத்தையும், நாடகத்தமிழுக்கு அறிவனுர் செய்த பஞ்சமரபு முதலான நூற்களையும் மூலநூற்களாகக் கொள்வது போன்று இசைத்தமிழுக்குச் சிகண்டியார் செய்த இசைநுணுக்கத்தையும், யாமளேந்திரர் செய்த இந்திரகாளியத்தையும் மூலமாகக் கொள்ளுகின்ருர். நல்லார் தம் காலத்திற்கு முன்னரே இறந்துபோன சில தொன்மைச்சிறப்பு மிக்க இசைத்தமிழ் நூற்களின் பெயரைக் குறிப்பிடுகின்ருர். அவை பெருநாரை, பெருங்குருகு, தேவவிருடி, நாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலான.

இசைத்தமிழ்க் கூறுகளாக இசைக்குப் பிறப்பிடம், ஆளத்தி, பண்வகை, வட்டப்பாலை பன்னிருபாலை பிறக்கும்முறை, இசைப்பா, இசையளவுபா, தேவபாணி முதலான இசைப்பாக்களின் வகை, இசைக்கருவிகளான யாழ், குழல், தண்ணுமை முதலான

கருவிகள் ஆகியன தெளிவும் விளக்கமும் பெறுவதோடு ஆங்காங்கே சான்றுவிளக்க மேற்கோள்களையும் கொண்டு சிறக்கின்றன. இசையாசிரியன் அமைதி, கவிஞன் அமைதி, தண்ணுமையோன் அமைதி, யாழாசிரியன் அமைதி பற்றி நல்லார் மூலநூலை அடியொற்றி விளக்கம் எழுதுவது அவரின் இசைத் தமிழ்ப் புலமையை எடுத்துக்காட்டும்.

*இசைக்குப் பிறப்பிடம்*

பூதங்களானும் பொறி முதலியவற்றானும் வாயுக்களானும் நாடிகளானும் பரிணமித்துச் சுக்கில சுரோணிதங்களாலே உடம்பு கொண்டு இருவினையும் தன்னகத் தடக்கி உயிர் பிறக்கும் என விளக்கிய நல்லார் இப் பூதவுடலில் இசை பிறக்கும் இடம் பற்றி எடுத்துப் பேசுகின்றார்.

'துய்ய உடம்பளவு தொண்ணூற்று றங்குலியா
மெய்யெழுத்து நின்றியங்கு மெல்லத்தான்-வையத்
திருபாலு நாற்பதோ டேழ்பாதி நீக்கிக்
கருவாகு மாதாரங் காண்'

என்பது இசைக்குப் பிறப்பிடமாயுள்ளஆதாரம் உணர்த்துகின்றது.

சரீரத்தளவு தன்கையால் தொண்ணூற்று றங்குலம். இதனுள் மேலே நாற்பத்தேழரை யங்குலமும் கீழே நாற்பத்தேழரை யங்குலமும் விட்டு நடுநின்ற ஒரங்குலம் மூலாதாரம். இதன் மேலே நால்விரல் விட்டுப் பின்னுதாரம் நின்றியங்குமெனக் கொள்க.

'ஆதாரம் பற்றி யசைவ முதலெழுத்து
மூதார்ந்த மெய்யெழுத்து முன்கொண்டு-போதாரு
முந்தி யிடைவளியா யோங்குமிடை பிங்கலையால்
வந்துமே லோசையாம் வைப்பு'

'ஐவகைப் பூதமு மாய சரீரத்து
மெய்பெற நின்றியங்கு மெய்யெழுத்தால்-துய்ய
ஒருநாடி நின்றியங்கி யுந்திமே லோங்கி
வருமா லெழுத்துடம்பின் வந்து'

இங்ஙனம் இசைக்குப் பிறப்பிடமாய மூலாதாரம் பற்றிக் குறிப்பிடுகின்றார் நல்லார்.

## ஆளத்தி

'மகரத்தி னெற்றாற் சுருதி விரவும்
பகருங் குறினெடில்பா ரித்து-நிகரிலாத்

தென்ன தெனவென்று பாடுவரே லாளத்தி
மன்னுவிச் சொல்லின் வகை.

என்பது ஆளத்தி யாமாறுணர்த்துகின்றது.

முதலில் பாடுமிடத்து மகரத்தினெற்றலே நாதத்தை உச்ச ரிக்கு மரபு பகரிற் பாரித்து முற்கூறிய நாதத்தினைத் தொழில் செய்யுமிடத்துக் குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலும் செய்யப் படும்.

அவை அச்சு, பாரணை யென்று பெயர்பெறும். அச்சுக்கு எழு வாய் குற்றெழுத்து. பாரணைக்கு எழுவாய் நெட்டெழுத்து. அச்சு தாளத்துடன் நிகழும். பாரணை கூத்துடன் நிகழும்.

ஆளத்தி செய்யுமிடத்துத் தென்னவென்றும், தெனவென்றும் இரண்டசையுங் கூட்டித் தென்ன தென வென்றும் பாடப்படும். இவைதாம் காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணுளத்தியென மூன்று வகைப்படும்.

இவற்றுள் காட்டாளத்தி அச்சுடன் நிகழும். நிறவாளத்தி நிறம் குலையாமற் பாரணையுடன் நிகழும். பண்ணுளத்தி பண்ணையே கருதி வைக்கப்படும்.

'குன்ருக் குறிலைந்துங் கோடா நெடிலைந்தும்
நின்ருர்ந்த மங்கரந் தவ்வொடு-நன்ருக
நீளத்தா லேழு நிதானத்தா னின்றியங்க
ஆளத்தி யாமென் றறி'

என்பது ஆளத்திக்கு இன்னும் படுவதோரிலக்கணம் உணர்த்து கின்றது.

குன்ருக் குறிலைந்தும் கோடா நெடிலைந்து மென்றது-குற்றெ ழுத்தாலும் நெட்டெழுத்தாலும் ஆளத்தி செய்யப்படும் என்றவாறு. குற்றெழுத்தைந்தாவன: அ இ உ எ ஒ; நெட்டெழுத்தைந்தாவன: ஆ ஈ ஊ ஏ ஓ என இவை. நின்ருர்ந்த வென்றது-மெய்யெழுத் தாகிய பதினெட்டெழுத்துள்ளும் மவ்வும் நவ்வும் தவ்வுமென மூன்றெழுத்து மல்லா மற்றை யெழுத்துக்கள் ஆளத்திக்கு வரப் பெரு என்றவாறு. இம்மூவகை மெய்யினுள்ளும் மவ்வினம் சுத்தத் திற்குரித்து; நவ்வினம் சாளரத்திற்குரித்து; தவ்வினம் தமிழ்க் குரித்து; விரவவும் பெறும்.

பண்[1]

மூலாதாரந் தொடங்கிய எழுத்தின் நாதம் ஆளத்தியாய்ப் பின் இசையென்றும் பண்ணென்றும் பெயராம் ; என்னை?

'பாவோ டணைத லிசையென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தான மெட்டானும்-பாவாய்
எடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்று பார்'

பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசையென்று பெயராம். பெருந்தான மெட்டினும் கிரியைக ளெட்டாலும் பண்ணிப் படுத்தலாற் பண்ணொன்று பெயராயிற்று.

பெருந்தான மெட்டாவன: நெஞ்சும் மிடறும் நாக்கும் மூக்கும் அண்ணக்கும் உதடும் பல்லும் தலையுமென இவை. கிரியைக ளெட்டாவன: எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம் குடிலம் ஒலி உருட்டு தாக்கு என இவை.

இனி நரப்படைவால் நிறந்தோன்றப் பண்ணப்படா நின்றன பண் எனவும் படும். இது விரியால் 103-வகைப்படும். தொகையால் நான்கு வகைப்படும். பண், பண்ணியல், திறம், திறத்திறம் என. இவற்றைச் சம்பூரணம், சாடவம், ஒளடவம், சதுர்த்தம் என்ற வடமொழிப் பெயரானும் வழங்குவர்.

'நாற்பெரும் பண்ணுஞ் சாதி நான்கும்
பாற்படு திறனும் பண்ணெனப் படுமே'

என்பது இதனை விளக்கும்.

நாற்பெரும் பண்களாவன : பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழியென்பன. இவற்றின் திறங்களாவன : பாலைக்குப்புறம்-தேவாளி; அருகு-சீர்கோடிகம் ; பெருகு-நாகராகம். குறிஞ்சிக்குப் புறம்-செந்து ; அருகு-மண்டிலம் ; பெருகு-அரி. மருதத்திற்குப் புறம்-ஆகரி ; அருகு-சாய வேளா கொல்லி ; பெருகு-கின்னரம். செவ்வழிக்குப் புறம்-வேளாவளி; அருகு-சீராகம் ; பெருகு-சந்தி.

செம்பாலையுட் பிறக்கும் பண்

செம்பாலையுட் பிறக்கும் பண்களாவன : பாலையாழ், நாகராகம், ஆகரி, தோடி, கௌடி, காந்தாரம், செந்துருத்தி, உதயகிரியென

1. சிலப். அடியார்க்கு நல்லார் உரை, பக்: 105, 109, 110, 134, 232 346, 347, 380.

விவை. பிறவும் •விரிப்பின் உரை பெருகுமாதலின் அவற்றை வந்த வழிக்கண்டுகொள்க என எழுதுகின்றார் நல்லார்.

*நோதிறம்*

பாலைப் பண்ணின் திறம் ஐந்துள் ஒன்று நோதிறம். என்னை?

> 'தக்கராக நோதிறங் காந்தார பஞ்சமமே
> துக்கங் கழிசோம ராகமே-மிக்கதிறற்
> காந்தார மென்றைந்தும் பாலைத் திறமென்றார்
> பூந்தா ரகத்தியனார் போந்து'

என்றாராகலின். இங்குப் பாலைப்பண்ணின் திறம் ஐந்தினையும் குறிப்பிட்டுச் செல்கின்றார் நல்லார்.

*ஆசான் என்னும் பண்ணியல்*

இது நான்கு வகைப்படும். ஆசானுக்கு அகச்சாதி காந்தாரம்; புறச்சர்தி சிகண்டி ; அருகுசாதி தசாக்கரி ; பெருகுசாதி சுத்த காந்தாரம் எனக் குறிப்பிடுகின்றார்.

*பண்ணீர்மை*

பண்ணீர்மையை அறிகின்ற பதினொரு பாகுபாட்டினை நல்லார் குறிப்பிடுகின்றார். அவையாவன : முதல், முறை, முடிவு, நிறை, குறை, கிழமை, வலிவு, மெலிவு, சமன், வரையறை, நீர்மை என்பன:

*ஆதியிசை*

நரப்படைவால் உரைக்கப்பட்ட ஆதியிசைகள் பதினோரா யிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்று என்று சுட்டி அவற்றைக் குறிக்கும் சூத்திரம் ஒன்றையும் எடுத்துக் காட்டு கின்றார் நல்லார்.

> 'உயிருயிர் மெய்யென வுரைத்தவைம் பாலினும்
> உடறமி ழியலிசை யேழுடன் பகுத்து
> மூவேழ் பெய்தந்......
> தொண்டு மீண்ட பன்னீ ராயிரம்
> கொண்டன ரியற்றல் கொளவல்லோர் கடனே'

என்னும் சூத்திரத்தால் உறழ்ந்து கண்டு கொள்க என்கிறார்.

இங்ஙனம் பண்பற்றியும் அதன் வகைகள் பற்றியும் விளக்கிய நல்லார் வட்டப்பாலை பற்றியும், பன்னிருபாலைப்பண் பிறக்கு மாற்றையும் மிகத் தெளிவாக விளக்கிச் செல்கின்றார்,

வட்டப்பாலை

பாலைப்பண் நான்கு வகைப்படும்; ஆயப்பாலை, சதுரப்பாலை, திரிகோணப்பாலை, வட்டப்பாலை யென. என்னை?

'ஆயஞ் சதுரந் திரிகோணம் வட்டமெனப்
பாய நான்கும் பாலை யாகும்'

என்ருர். அவற்றுள் வட்டப்பாலை வருமாறு :

'வட்ட மென்பது வகுக்குங் காலை
ஒரேழ் தொடுத்த மண்டல மாகும்'

'சாணளவு கொண்ட தொருவட்டந் தன்மீது
பேணியிரு நாலு பெருந்திசைக்-கோணத்
திருகயிறு மேலோட்டி யொன்பானு மூன்றும்
வருமுறையே மண்டலத்தை வை'

என்பது சூத்திரம். என்னுதலிற்றேவெனின் வட்டப்பாலை மண்டலம் வருமிடத்துச் சாணுக்குச் சாணுக ஒரு வட்டம் கீறிப் பெருந்திசைகளின் மேலே இரண்டு வரம்பு கீறி மண்டலம் செய்து பன்னிரண்டு கோணமாக வகுப்பது நுதலிற்று.

'எதிரு மிராசி வலமிட மாக
எதிரா விடமீன மாக-முதிராத
ஈரா றிராசிகளை யிட்டவையே நோக்கவே
ஏராந்த மண்டலமென் றெண்'

என்பது சூத்திரம். என்னுதலிற்றேவெனின்; இட்ட பன்னிரண்டு கோணத்திற் பன்னிரண்டிராசிகளை நிறுத்தினுல் இவற்றுள் நரம்புடன் இயல்வன ஏழென்பது உணர்த்துதல் நுதலிற்று.

'ஏத்து மிடப மலவ னுடன்சீயம்
கோற்றனுக் கும்பமொடு மீனமிவை-பார்த்துக்
குரன்முதற் றூர மிறுவாய்க் கிடந்த
நிரலேழுஞ் செம்பாலை நேர்'

இவ்வேழும் இடபம், கற்கடகம், சிங்கம், துலாம், தனு, கும்பம், மீனமென இவற்றுள் நிற்கும்.

'துலைநிலைக் குரலுந் தனுநிலைத் துத்தமும்
நிலைபெறு கும்பத்து நேர்கைக் கிளையும்
மீனத் துழையும் விடைநிலைத் திளியும்
மானக் கடகத்து மன்னிய விளரியும்
அரியிடைத் தாரமு மணைவுறக் கொளலே'

இனி இந்நரம்புகளின் மாத்திரைகள் வருமாறு :

'குரறுத்த நான்கு கிளைமூன் றிரண்டாம்
குரையா வுழையிளி நான்கு-விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர்'

எனக் கொள்க.

இவற்றுள், தாரத்து உழைபிறக்கும்; உழையிற் குரல் பிறக்கும்; குரலுள் இளி பிறக்கும்; இளியுள் துத்தம் பிறக்கும்; துத்தத்துள் விளரி பிறக்கும்; விளரியுட் கைக்கிளை பிறக்குமெனக் கொள்க. இவற்றுள் முதலில் தோன்றிய நரம்பு தாரம்; இவை விரிப்பிற் பெருகும்; வந்தவழிக் கண்டு கொள்க.

இனி வட்டப்பாலையிலே நாலு பண்ணும் பிறக்கும்;

'தாரத் துழைதோன்றப் பாலையாழ் தண்குரல்
ஒருமுறை தோன்றக் குறிஞ்சியாழ்-நேரே
இளிகுரலிற் றோன்ற மருதயாழ் துத்தம்
இளியிற் பிறக்கநெய்த லியாழ்'

இவற்றுள், பாலையாழுள்ளே ஏழுபாலையிசை பிறக்கும்.

'குரலிளியிற் பாகத்தை வாங்கியோ ரொன்று
வரையாது தாரத்துழைக்கும்-விரைவின்றி
எத்தும் விளரி கிளைக்கீக்க வேந்திழையாய்
துத்தங் குரலாகுஞ் சொல்'

இந்நரம்பிற் பாலை பிறக்குமிடத்துக் குரலும் துத்தமும் இளியும் நான்கு மாத்திரை பெறும்; கைக்கிளையும் விளரியும் மூன்று மாத்திரை பெறும்; உழையும் தாரமும் இரண்டு மாத்திரை பெறும்; இவற்றுள் குரல் குரலாய் ஒத்து நின்றது செம்பாலை; இதனிலே குரலிற் பாகத்தையும் இளியிற் பாகத்தையும் வாங்கிக் கைக்கிளை உழை விளரி தாரத்திற்கு ஒரோ வொன்றைக் கொண்டு சேர்க்கத் துத்தம் குரலாய்ப் படுமலைப் பாலையாம்; இவ்வாறே திரிக்க இவ்வேழு பெரும் பாலைகளும் பிறக்கும்; பிறக்குங்கால் திரிந்த குரல் முதலாக ஏழும் பிறக்கும்.

அவை பிறக்குமாறு: குரல் குரலாயது செம்பாலை; துத்தம் குரலாயது படுமலைப்பாலை; கைக்கிளை குரலாயது செவ்வழிப்பாலை; உழை குரலாயது அரும்பாலை; இளி குரலாயது கோடிப்பாலை; விளரி குரலாயது விளரிப்பாலை; தாரம் குரலாயது மேற்செம்பாலை யென வலமுறையே ஏழு பாலையும் கண்டு கொள்க. இதனை

வலமுறை யென்றும்; மேற்கே முகமாக இருந்து திரிதலான். கிழக்கே நோக்கியிருக்கின் இடமுறையாமெனக் கொள்க.[1]

இனி வட்டப்பாலையின் இடைமுறைத் திரிபினை வேனிற் காதை உரையில் தருகின்றார்.

'குன்றுக் குரற்பாதி தாரத்தி லொன்று
நடுவ ணிணைகிளை யாக்கிக்-கொடியிடையாய்
தாரத்தி லொன்று விளரிமே லேறடவந்
நேரத் ததுகுரலா நின்று'

உழை குரலாகிய கோடிப்பாலை நிற்க இடைமுறை திரியுமிடத்துக் குரல் குரலாயது செம்பாலை; இதனிலே குரலிற் பாதியும் தாரத்தி லொன்றும் இரண்டின் அந்தரத்திலே கிளையாக்கித் தாரத்திலே நின்ற ஓரலகை விளரியின் மேலேறட விளரி குரலாய்ப் படுமலைப் பாலையாம். இம்முறையே துத்தம் குரலாயது செவ்வழிப்பாலை யாம். இளி குரலாயது அரும்பாலையாம். கைக்கிளை குரலாயது மேற்செம்பாலையாம். தாரம் குரலாயது விளரிப்பாலையாம் – என இடைமுறைத்திரிபினையும் அவ்வழிப் பிறக்கின்ற பண்களையும் குறிப்பிடுகின்றார் நல்லார்.[2]

*பன்னிரு பாலை பிறக்குமாறு*

யாழாசிரியன் அமைதி கூறுகின்ற அரங்கேற்று காதையுரையில் பன்னிருபாலை யாழிடத்துப் பிறக்குமாற்றை விளக்குகின்றார் நல்லார்.

'தார பாகமுங் குரலின் பாகமும்
நேர்நடு வண்கிளை கொள்ள நிற்ப
முன்னர்ப் பாகமும் பின்னர்ப் பாகமும்
விளரிகுர லாகு மென்மனார் புலவர்'

என்னுஞ் சூத்திரத்தின் விதி பற்றி வட்டப்பாலையின் முடிவு தானமாய் வலிந்த நிலைமையினையுடைய தாரம் பெற்ற இரண்டலகில் ஓரலகையும், இப்பாலையின் முதல்தானமாய் மெலிவினிற்கும் குரல் நரம்பு பெற்ற நாலலகில் இரண்டலகையும், தார நரம்பில் அந்தரக்கோலிலே கைக்கிளையாக நிறுத்தத் தாரந்தான் கைக் கிளையாயிற்று. அந்த நரம்பில் ஒழிந்த ஓரலகையும் பண்டை விளரியிலே கூட்ட அவ்விளரி துத்த நரம்பாயிற்று. இப்படிப் பன்னிருகால் திரிக்கப் பன்னிரு பாலையும் பிறக்கும்.

1. *சிலப். 14:13:8-10-உரை, பக்: 449-50.*
2. *சிலப். 8:3(-உரை, பக். 282.*

பன்னிரு பாலையினுரு தொண்ணூற்றென்றும் பன்னிரண்டு மாய்ப் பண்கள் நூற்றுமூன்றாதற்குக் காரணமாம்.

உழைமுதற் கைக்கிளை இறுதியாக மெலிவு நான்கும் சமம்; ஏழும் வலிவு மூன்றுமாய் உழைமுதலாயது செம்பாலை ; கைக்கிளை குரலாகப் படுமலைப்பாலையும், துத்தம் குரலாகச் செவ்வழிப் பாலையும், குரல் குரலாக அரும்பாலையும், தற்கிழமை திரிந்த பின் பிறக்கும். முன்பிற் படியே தாரம் குரலாகக் கோடிப்பாலையும், விளரி குரலாக விளரிப்பாலையும், இளிகுரலாக மேற்செம்பாலையுமாய் மேற்செம்பாலை இளி நரம்பு இரட்டித்த நிலைமையினையுடைத்தாய் இப்படிச் சமைந்த பதினாற் கோவைப் பாலைநிலையினும் பண்ணின்ற நிலையினும் இரட்டித்த குரல் குரலாகிய அரும்பாலையும், இளி குரலாகிய மேற்செம்பாலையும் போல் அல்லாதன ஐந்து பாலையும் உழைகுரலாகச் செம்பாலைக்கு உழைபெய்தும், கைக்கிளை குரலாகப் படுமலைக்குக் கைக்கிளை பெய்தும், துத்தம் குரலாகச் செவ்வழிக்குத் துத்தம் பெய்தும், தாரம் குரலாகக் கோடிப்பாலைக்குத் தாரம் பெய்தும், விளரி குரலாக விளரிப் பாலைக்கு விளரி பெய்தும் பாடப்படும். யாழினிடத்து அரும்பாலை முதலாயின இடைமுறை மெலியவும், குழலினிடத்துக் கோடிப் பாலை முதலாயின வலமுறை மெலியவும் பாடப்படும்.[1]

## இசைப்பாடல்கள்

இசையின் பிறப்பிடம், ஆதியிசை, பல்வேறு பண்கள், அவை பிறக்கும் முறை பற்றிப் பேசிய நல்லார் இசைப்பாடல்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார். கூத்துத்தமிழ் பற்றிப் பேசுங்கால் இசை பற்றிய பல செய்திகளை நல்லார் எடுத்துக் காட்டுகின்றார். அவற்றில் ஒன்று அகநாடகங்களுக்கும் புறநாடகங்களுக்குமுரிய பாட்டு வகைகள். இங்குக் கந்த முதலாகப் பிரபந்த வுரு ஈருக வுள்ள இருபத்தெட்டும் அகநாடகங்களுக்குரியன என்கிறார். கந்தமாவது அடிவரையறை யுடைத்தாய் ஒருதாளத்தாற் புணர்ப்பது. பிரபந்தமாவது அடிவரையறையின்றிப் பல தாளத் தாற் புணர்ப்பது என்கிறார். இதன் வகை பற்றி எஞ்சிய நல்லாரின் விளக்கம் நமக்குக் கிடைக்கவில்லை. புற நாடகங்களுக்குரிய உருவாகத் தேவபாணி முதலாக அரங்கொழி செய்யுளீருகவுள்ள செந்துறை விகற்பங்கள் எல்லாம் எனச் சுட்டுகின்றார்.[2] இவற்றில் தேவபாணி பற்றிப் பின்னர் விரிவாக விளக்குகின்றார்.

---

1. சிலப். 3:72-92-உரை, பக்: 112.
2. சிலப்,3 :14-உரை,பக்: 90.

இசைப் பாடல்களில் 'தேவபாணி' தவிரப் பிறவற்றைப் பற்றிய நல்லாரின் விளக்கம் நமக்குக் கிடைக்கவில்லை என்றே கூறலாம். ஓரிடத்து வாரப் பாடல் பற்றிக் கூறுகின்றார். இவை ஓரொற்று வாரம், ஈரொற்றுவாரம் என இருவகைப்படும். இது நன்மையுண்டாகவும் தீமை நீங்கவும் தெய்வத்தை வழுத்தி, நாடக மகளின் நாட்டிய அரங்கேற்றம் நடப்பதற்கு முன் பாடப் படும் பாடல் என்பதை நல்லார் உரைவழி அறிகின்றோம்.[1] இவை தாளத்து ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் பெற்று வரும். மேலும் தலைப்பாட்டுக்கூத்தி, இடைப்பாட்டுக்கூத்தி பற்றி விளக்கும்போது, 'தலைப்பாட்டாவது உகம்; இடைப் பாட்டாவது ஒளகம்'[2] என எழுதுகின்றார். பதிகவுரையில் கானல் வரி பற்றிக் கூறுகையில் 'இஃது இசைப் பாவாற் பெற்ற பெயர்'[3] என்கிறார். கானல்வரிக்கு நல்லார் எழுதிய உரை கிடைத் திருக்குமே யாகின் பல்வேறு இசைப்பாடல்கள் பற்றிய விளக்கங் களை நாம் அறிந்திருக்க வாய்ப்பேற்பட்டிருக்கும்.

*இசைப்பா வகை*

மாயோனைப் பராவுந் தேவபாணி பற்றி விளக்குகையில் இசைப்பாக்களின் வகைபற்றிப் பேசுகின்றார் நல்லார். இது 'இசைப்பா' 'இசையளவுபா' என இருவகைப்படும். இசையளவுபா விரியால் பத்து வகைப்படும். அவையாவன. செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகு, மண்டிலமெ‌ன. என்னை?

'செந்துறை வெண்டுறை தேவ பாணிய்யிரண்டும்
வந்தன முத்தகமே வண்ணமே-கந்தருவத்
தாற்றுவரி கானல் வரிமுரண் மண்டிலமாத்
தோற்று மிசையிசைப்பாச் சுட்டு'

என்றார் இசைநுணுக்க முடைய சிகண்டியாரென்க.

இன்னும் சுத்தம் சாளகம் தமிழென்னும் சாதியோசைகள் மூன்றினுடனும் கிரியைகளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பது வகையென்ப; அவை சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறு தேவபாணி, வண்ண மெனவிவை. என்னை?

---

1. சிலப். 3:135-36-உரை, பக்: 118.
2. சிலப். 14:156-உரை, பக்: 379.
3. சிலப். பதி:69-உரை, பக்; 29.

'செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை
தப்பொன்று மில்லாச் சமபாதம்-மெய்ப்படியும்
செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப
பைங்தொடியா யின்னிசையின் பா'

என்றார் பஞ்சமரபுடைய அறிவனாரென்னு மாசிரியரென்க.[1]

இங்ஙனம் தொகையான் இசைப்பா, இசையளவுபா என இரண்டாகவும், விரியால் இசைப்பா ஒன்பது என்றும், இசையளவு பா பத்து என்றும் விளக்கிச் செல்கின்றார் நல்லார்.

**தேவபாணி**

தேவபாணி தேவர்ப் பராவுதலாயிற்று. என்னை?

'ஏனை யொன்றே
தேவர்ப் பராவுதன் முன்னிலைக் கண்ணே'

(தொல்.செய்:138)

என்றாராகலின். அது முத்தமிழ்க்கும் பொது. அது இயற்றமிழில் வருங்காற் கொச்சக வொருபோகாய் வரும். வரும் வழியும் பெருந்தேவபாணி, சிறுதேவபாணி யென இருவகைத்தாய் வரும். என்னை?

'கூறிய வுறுப்பிற் குறைபா டின்றித்
தேறிய விரண்டு தேவ பாணியும்'

என்றாராகலின். அங்ஙனம் வரும் தரவினை நிலையென வடக்கி முகத்திற் படுந்தரவினை முகநிலையெனவும், இடை நிற்பனவற்றை இடைநிலையெனவும் இறுதியினிற்பனவற்றை முரிநிலையெனவும் பரவுதற்பொருள்மையாற் பெயர் கொடுத்தார் செய்யுளியலின் கண்ணுமெனக் கொள்க.

இனி, இசைத்தமிழில் வருங்கால், முகநிலைக் கொச்சகம் முரி யென்ப ஒருசாராசிரியர். அன்றி இசைப்பா, இசையளவு பா வென்னும் இருபகுதியுள் இஃது இசைப்பாவின் பகுதியென்ப.

இனி, நாடகத் தமிழில் தேவபாணி வருங்காற் பெருந்தேவபாணி பலதேவரையும் சிறுதேவபாணி வருணப் பூதரையும் மூவடிமுக்கால் வெண்பாவால் துதிக்கின்றுழி, அவரணியும் தாரும் ஆடையும் நிறனும் கொடியும் துதித்து அவராற் பெற வேண்டுவனவும் துதிக்கப்படும்; என்னை?

'திருவள ரரங்கிற் சென்றினி தேறிப்
பரவுந் தேவரைப் பரவுங் காலை

1. சிலப். 6:35-உரை, பக். 188.

மணிதிகழ் நெடுமுடி மாணிபத் திரளே
அணிதிகழ் பளிங்கி னொளியினை யென்றும்
கருந்தா துடுத்த கடவுளை யென்றும்
இரும்பனைத் தனிக்கொடி யேந்தினை யென்றும்
கொடுவாய் நாஞ்சிற் படையோ யென்றும்
கடிமலர் பிணைந்த கண்ணியை யென்றும்
சேவடி போற்றிச் சிலபல வாயினும்
மூவடி முக்கால் வெள்ளையின் மொழிப'

என்றார் மதிவாணனாரென்க. இவை ஈண்டுரைப்பிற் பெருகும். பிறவும் வந்தவழிக் காண்க.

இனி, முற்கூறிய பதினோராடற்கும் முகநிலையாகிய தேவபாணி மாயோன் பாணி. அது வருமாறு:

'மலர்மிசைத் திருவினை வலத்தினி லமைத்தவன்
மறிதிரைக் கடலினை மதித்திட வடைத்தவன்
இலகொளித் தடவரை கரத்தினி லெடுத்தவ
னின நிரைத் தொகைகளை யிசைத்தலி லழைத்தவன்
முலையுணத் தருமவ ணலத்தினை முடித்தவன்
முடிகள் பத் துடையவ னுரத்தினை யறுத்தவன்
உலகனைத் தையுமொரு பதத்தினி லொடுக்கின
னொளி மலர்க் கழறரு வதற்கினி யழைத்துமே'

இஃது எண்சீரான் வந்த கொச்சகவொருபோகு. பண்-கௌசிகம். தாளம் இரண்டொத்துடைத் தடாரம் சிறுதேவ பாணி ஈண்டுக் கூறிற்றிலரெனினும் இனப்பட்டு வருதலிற் கூறல் வேண்டுவ தாயிற்று. அது வருமாறு:

'வண்ணமலர் சரங்கோத்து மதனவேள் மிகவெய்யக்
கண்ணளவோர் புலனல்லாக் கனல்விழியா
லெரித்தனையால்
எண்ணிறந்த தேவர்களு மிருடிகளு மெழுந்தோட
ஒண்ணுதலாள் பாகங்கொண் டொருதனியே யிருந்தனையே'

என்பர்.

இனி வருணப்பூதர் நால்வரைப் பராவும் நால்வகைத் தேவ பாணி வருமாறு:

'அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக
வேந்தன் வேள்வியோ டியாண்டுபல வாழ்க
வாணிக ரிருநெறி நீணிதி தழைக்க
பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக

அரங்கியற் கூத்து நிரம்பியினை முடிக
வாழ்க நெடுமுடி கூர்கவென் வாய்ச்சொலென்
றிப்படிப் பலிகொடுத் திறைவனிற் றெருக்குச்
செப்பட வமைத்துச் செழும்புகை காட்டிச்
சேவடி தேவரை யேத்திப் பூதரை
மூவடி முக்கால் வெண்பா மொழிந்து
செவியிழுக் குறுமை வேந்தனை யேத்திக்
கவியொழுக் கத்து நின்றுழி வேந்தன்
கொடுப்பன கொடுப்ப வடுக்கு மென்ப'

என்றார் மதிவாணனாரென்க.

சந்திரனைப் பாடும் தேவபாணி வருமாறு:

'குரைகடன் மதிக்கு மதலையை
குறுமுய லொளிக்கு மரணினை
இரவிரு ளகற்று நிலவினை
யிறையவன் முடித்த வணியினை
கரியவன் மனத்தி னுதிதனை
கயிரவ மலர்த்து மவுணனை
பரவுநர் தமக்கு நினதிரு
பதமலர் தபுக்க வினையையே'

என வரும். இங்ஙனம் பல்வகைத் தேவபாணி பற்றியும் அவை வருமாற்றையும் காட்டுக்களுடன் விளக்குகின்றார் நல்லார்.[1]

### இசைக் கருவிகள்

இசைக் கருவிகளில் யாழே சிறப்பிடம் பெறுகின்றது. யாழ் வகை, யாழின் உறுப்புக்கள், யாழ்வாசிக்கும் முறை ஆகியன பற்றிப் பேசுகின்றார் நல்லார். 'குழல்' என்னும்ஊதுகருவி பற்றியும், தண்ணுமை யென்னும் தாளக் கருவி பற்றியும் நல்லார் விளக்குகின்றார். அகக் கூத்திற்குரிய தாளவகை, கொட்டுவகை பற்றியும் குறிப்பிட்டுச்செல்கின்றார்.[2]

### யாழ்[3]

யாழ் நால்வகைப்படும். அவை பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழென்பன. இவை நாலும் பெரும்பான்மைய சிறுபான்மையான் வருவன பிறவுமுள. என்னை?

1. சிலப். 6:35-37-உரை, பக்: 188-189.
2. நல்லாரின் கூத்துக்கலைப்புலமை-'பாணி'-பார்க்க.
3. சிலப்.உரைப்.பக்: 9;3:26-உரை, பக்: 100; 6:23-04-உரை; பக்; 130-32; 13:106-103-உரை; பக்; 346.

'பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினுர்-தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முளவே பிற'

என்ருராகலின்.

இந்நால்வகை யாழிற்கும் நரம்பு கொள்ளுமிடத்துப் பேரியாழிற்கு இருபத்தொன்றும், மகரயாழிற்குப் பத்தொன்பதும், சகோட யாழிற்குப் பதினுலும், செங்கோட்டியாழிற்கு ஏழும் கொள்ளப்படும். என்னை?

'ஒன்று மிருபது மொன்பதும் பத்துடனே
நின்றபதி ஞன்கும் பின்னேழும்-குன்ருத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி'

என்ருராகலின்.

இனி இவ்வியாழென்னும் ஒன்றிற்கு அமைந்த பலவுறுப்பாகிய,

'கோட்டின தமைதியுங் கொளுவிய வாணியும்
ஆட்டிய பத்தரின் வகையு மாடகமும்
தந்திரி யமைதியுஞ் சாற்றிய பிறவு
முந்திய நூலின் முடிந்த வகையே'

வகுக்கப்பட்டன வெல்லாம் கானல்வரியில், 'குற்றம் நீங்கிய யாழ் என்பதன்கண் விரியக் கூறுதும் என்கிருர்.கானல்வரிக்கு நல்லாரின் உரை கிடைக்கப் பெருமையான் யாழ் பற்றிய வி.ரிவான செய்திகளை அறிய முடியவில்லை. இருப்பினும் இந்நால்வகை யாழில் சகோட யாழ், செங்கோட்டியாழ் பற்றிய சிறுகுறிப்பைப் பின்னர் ஓரிடத்துத் தந்து செல்கின்ருர்.

நல்லார் தம் காலத்து இறந்து போன பெருங்கல மென்னும் பேரியாழ் பற்றியும் குறிப்பிடுகின்ருர். 'பெருங்கல மாவது பேரியாழ்; அது கோட்டினதளவு பன்னிரு சாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிரு சாணும் இப்பெற்றிக் கேற்ற ஆணிகளும், திவவும், உந்தியும் பெற்று ஆயிரங்கோல் தொடுத்து இயல்வது. என்னை?

'ஆயிர நரம்பிற் ருதியா ழாகும்
ஏனை யுறுப்பு மொப்பன கொளலே
பத்தர தளவுங் கோட்டின தளவும்
ஒத்த வென்ப விருமுன் றிரட்டி
வணர்சா ணெழித்தென வைத்தனர் புலவர்'

என நூலுள்ளும்,

*'தலமுத லூழியிற் றனவர் தருக்கறப்*
*புலமக ளாளர்புரிநரப் பாயிரம்*
*வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச்*
*செலவுமுறை யெல்லாஞ் செய்கையிற் றெரிந்து*
*மற்றை யாழும் கற்றுமுறை பிழையான்'*

(பெருங்:4:3:51-55)

எனக் கதையினுள்ளும் கூறினராகலாற் பேரியாழ் முதலிய ஏனவும் இறந்தனவெனக் கொள்க', என மறைந்து போன பேரியாழ் பற்றிப் பேசுகின்றார்.

*சகோட யாழ்-நரம்பு*

கோவலனைப் பிரிந்த மாதவி தனியே தன்மனைபுக்குத் தன் தனிமைத்துயர் நீங்கச் சகோட யாழை இசைபெறக் கட்டி வாசிக்கத்தொடங்குகிறாள். இங்கு இவ்வியாழின் இணை, கிளை, பகை, நட்பு என்று சொல்லப்பட்ட நால்வகை நரம்பினை விளக்குகின்றார்.

இணை-இரண்டு நரம்பு; என்னை?

*'இணையெனப் படுவ கீழு மேலு*
*அணையத் தோன்று மளவின வென்ப'*

கிளை-ஐந்து நரம்பு; என்னை?

*'கிளையெனப் படுவ கிளக்குங் காலைக்*
*குரலே யிளியே துத்தம் விளரி*
*கைக்கிளை யெனவைந் தாகுமென்ப'*

பகை-ஆறும் மூன்றும்; கூடமெனினும் பகையெனினும் ஒக்கும்.

*'நின்ற நரம்பிற் காறு மூன்றும்*
*சென்றுபெற நிற்பது கூட மாகும்'*

நட்பு-'நாலு நரம்பு....' இங்ஙனம் சகோட யாழிற்குரிய நான்கு வகை நரம்புகளைப் பற்றிப் பேசுகின்றார்.

*செங்கோட்டியாழ்*

செங்கோட்டியாழ் அறுவகை உறுப்புக்கள் கொண்டது.

*'செங்கோட்டி யாழே செவ்விதிற் றெரியின்*
*அறுவகை யுறுப்பிற் றாகு மென்ப'*
*'அவைதாம்*
*கோடை திவவே யொற்றே......*
*தந்திரி கரமே நரம்போ டாறே'*

அவற்றுள் தந்திரிகர மென்பது நரம்பு துவக்குதற்குத் தகைப் பொழிய இருசாணுல் விரல் நீளமாகக் குறுக்கிடத்துச் சேர்த்தும் ஐம்பத்தோருறுப்பு; என்னை?

*‘தந்திரி கரமே தகைப்பற விலகி*
*வந்த விருசா ணுல்விர லாகும் .....’*

என்ருராகலின். இங்ஙனம் செங்கோட்டியாழின் உறுப்புக்கள் பற்றிச் சிறு குறிப்புத் தருகின்ருர்.

*யாழ் வாசிக்குமுறை*

கோவலனைப் பிரிந்த மாதவி யாழை மீட்டி வாசிக்கத் தொடங்கிய பகுதிகட்கு உரை எழுதிய நல்லார் யாழ் கொண்டு இருக்கும் முறை, யாழைத் தழுவிக்கொள்ளல், இசை கொள்ளுங் கால் பகை நரம்பு நான்கும் புகாமல் நீக்குதல், யாழ் நரம்பை உழைகுரலாகக் கைக்கிளை தாரமாக இசைகொளக் கட்டுதல் ஆகிய முறைகளைப் பற்றிப் பேசுகின்ருர்.

*இருக்கை வகை*

வேனிற்காதையில் வரும் ‘ஒன்பான் விருத்தி’ ((8:25) என்பதற்கு உரை எழுதிய நல்லார், ‘இதனுள் விருத்தி யென்பது இருப்பு. ஓவிய நூலுள் நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல் என்னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள; அவற்றுள் இருத்தல் திரிதரவுடையனவும் திரிதர வில்லனவுமென இரு பகுதிய; அவற்றுள் திரிதரவுடையன யானை, தேர், புரவி, பூனை முதலியன. திரிதரவில்ல ஒன்பது வகைப்படும். அவை பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படி யிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம் எனவிவை. என்னை?

*‘பதுமுக முற்கட் டிதமே யொப்படி*
*இருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகம்*
*தனிப்புட மண்டில மேக பாதம்*
*உளப்பட வொன்பது மாகும்*
*திரிதர வில்லா விருக்கை யென்ப’*

என்ருராகலானும்,

*‘பன்னுள் கழிந்த பின்னர் முன்னுள்*
*எண்மெய்ப் பாட்டினு ளிரக்கமெய்ங் நிறீஇ*
*ஒண்வினை யோவியர் கண்ணிய விருத்தியுள்*
*தலையத னும்பர்த் தான்குறிக் கொண்ட*
*பாவை நோக்கத் தாரணங் கெய்தி’*

(பெருங்:1:35-44-48)

எனப் பெருங்கதையுட் கூறினமையானுங் கொள்க.

இனி நாடகநூலார் இவ்வுருப்பை ஐம்பதென விரிவரையறை யாற் கூறித் தொகை வரையறை கூறுவார். அவற்றை ஒன்பதின் அடக்கினறெென வுணர்க. என்னை?

'ஆதிப்பா விருத்தி யைம்பதிற் புலவோர்
ஓதிக் கொண்டன ரொன்பான் விருத்தி'

என்றாராகலின்.

அவற்றுள், தலைக்கண் விருத்தியாவது பதுமாசனம். இதனைச் சொல்லியது, அதிரா மரபினையுடைய யாழைக் கையின் வாங்கிப் பதுமாசனமாக இருந்தவள் தனக்கு நாயகனின்மையால் தியாத நாயகனை மானதத்தால் நோக்கி எதிர்முகமாக விருந்து வாசித் தலைக் கருதினளென்பது. என்னை?

'முதற்க ணெதிர்முக நோக்கி நயத்தக
ஒருவ னாகிய தோற்றமும்'

என்றாராகலின்', என இருத்தல் வகையினை விளக்குகின்றார். யாழ் வாசிக்குமுன் அதனை ஏந்திக்கொண்டு பதுமாசனமாக இருக்கும் நிலையினை இங்குச் சுட்டிக் காட்டுகின்றார்.

யாழைக் கைக்கொளல்

யாழை எடுத்து வாசிக்குமுன் அதை எவ்வாறு ஏந்திப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்பதையும் நல்லார் தெரிவிக்கின் றார். வலக்கையைப் பதாகையாகக் கோட்டின் மிசையே வைத்து இடக்கை நால்விரலால் மாடகத்தைத் தழுவிக் கொள்ள வேண்டு மென்பர் இளங்கோ.[1] இங்குப் பதாகைக்கு விளக்கம் எழுதப் போந்த நல்லார், 'பதாகையாவது பெருவிரல் குஞ்சித்து ஒழிந்த விரலெல்லாம் நிமிர்த்தல். என்னை?

'எல்லா விரலு நிமிர்த்திடை யின்றிப்
பெருவிரல் குஞ்சித்தல் பதாகையாகும்'

என்றாராகலின்' என விளக்குகின்றார்.

பகைநரம்பு புகாமல் நீக்கல்

செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு எனும் நான்கும் பகை நரம்பாகக் கொள்ளப்படுகிறது. இவற்றுள் செம்பகை தாழ்ந்த

1. சிலப். 8:27-28-உரை, பக்: 231.

விசை-இன்பமின்றி யிசைத்தல்; ஆர்ப்பு மாத்திரை யிறந்த சுருதி ஓங்க விசைத்தல்; கூடம் இசை நிறவாதது-தன் பகையாகிய ஆறு நரம்பினிசையிற் குன்றித் தன்னோசை மழுங்கல்; அதிர்வு நரம்பைச் சிதறவுந்த லெனக் கொள்க. இதனை,

'இன்னிசை வழியதன்றி யிசைத்தல்செம் பகையதாகும்
சொன்னமாத் திரையி னோங்க விசைத்திடுஞ்
சுருதியார்ப்பே
மன்னிய விசைவ ராது மழுங்குதல் கூடமாகும்
நன்னுதால் சிதறவுந்த லதிர்வென நாட்டி னாரே'

என்பதனாற் கொள்க. இது பஞ்சபாரதீயம்.

அன்றி,

'செம்பகை யென்பது பண்ணோ டுளரா
இன்பமி லோசை யென்மனார் புலவர்'

'ஆர்ப்பெனப் படுவ தளவிறந் திசைக்கும்'

'கூட மென்பது குறியுற விளம்பின்
வாய்வதின் வராது மழுங்கியிசைப் பதுவே'

'அதிர்வெனப் படுவ திழுமென லின்றிச்
சிதறி யுரைக்குந ருச்சரிப் பிசையே'

எனக் கூறினாருமுளர். இவை நான்கும் மரக்குற்றத்தாற் பிறக்கும். என்னை?

'நீரிலே நிற்ற லழுகுதல் வேத னிலமயக்குப்
பாரிலே நிற்ற லிடிவீழ்த லேய்மரப் பாற்படல்கோ
ணேரிலே செம்பகை யார்ப்பொடு கூட மதிர்வு நிற்றல்
சேரினேர் பண்க ணிறமயக் குப்படுஞ் சிற்றிடையே'

என்றார். இவ்வாறு பகை நரம்பு புகாமல் நீக்கலை விளக்குகின்றார்.

நரம்புகளைக் கட்டுதல்

சகோட யாழில் முதற்கண் கோடிப்பாலை பிறக்குமாறு கட்டுதலை வேனிற்காதை 31-32-வரிகளின் உரையிற் குறிப்பிடுகின்றார் நல்லார்.

'குரல் முதலேழினும் முன்தோன்றியது தாரம்;

'தாரத்துட் டோன்று முழையுழை யுட்டோன்றும்
ஒருங் குரல்குரலி னுட்டோன்றிச்-சேருமிளி

உட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட்
கைக்கிளை தோன்றும் பிறப்பு'

என்பதனுல், தாரத்தில் முதற்பிறப்பதாகிய உழைகுரலாய்க் கைக்கிளை தாரமாகிய கோடிப்பாலை முதற்பிறக்கக் கட்டி யென்க' என இதனை விளக்குகின்ருர்.

*யாழ்வாசிக்கும் முறை*

யாழ்வாசிக்கு முறையை,

'நல்லிசை மடந்தை நல்லெழில் காட்டி
அல்லியம் பங்கயத் தயனினிது படைத்த
தெய்வஞ் சான்ற தீஞ்சுவை நல்யாழ்
மெய்பெற வணங்கி மேலொடு கீழ்புணர்த்
திருகையின் வாங்கி யிடவயி னிரீஇ
மருவிய வினய மாட்டுதல் கடனே'

என்பதனுனறிக என்ற பாடல் மூலம் எடுத்துக்காட்டிச் செல்கின்ருர்.

இங்ஙனம் யாழின் வகை, யாழுறுப்புக்கள், யாழைத் தழீஇக் கொண்டு இசை புணர்க்கும் முறையாகியன பற்றி நல்லார் நவில்வது அவர்தம் யாழிசைப் புலமைக்குச் சான்ருக அமைகின்றது.

குழல்[1]

ஊது கருவிகளில் ஒன்று குழல். இக்குழல் செய்வதற்குப் பயன்படுத்தும் பொருட்கள், இதன் அமைப்பு, குழலை வாசிக்கும் முறை, அவ்வழிப் பிறக்கும் ஏழிசைகள் ஆகியன பற்றி விளக்கிச் செல்கின்ருர் நல்லார். குழல் பற்றி நல்லார் கூறுவன வருமாறு :

குழல்-வங்கியம் ; அதற்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலியென ஐந்துமாம் ; என்னை?

'ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே
பாங்குறுசெங் காலி கருங்காலி-பூங்குழலாய்
கண்ண னுவந்த குழைக்கிவைக ளாமென்ருர்
பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து'

என்ருராகலின்.

இவற்றுள் மூங்கிலிற் செய்வது உத்தமம் ; வெண்கலம் மத்திமம்; மூங்கில் பொழுது செய்யும் ; வெண்கலம் வலிது ; மரம் எப்பொழுதும் ஒத்துநிற்கும்.

---

2. சிலப். 3:26-உரை, பக்:100-101.

இக்காலத்துக் கருங்காலி செங்காலி சந்தனம் இவற்றுற் கொள்ளப்படும் ; கருங்காலி வேண்டுமென்பது பெருவழக்கு. இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்த நிலத்திற் பெருகவளர்ந்து நாலுகாற்று மயங்கின் நாதமில்லை யாமாதலால் மயங்கா நிலத்தின் கண் இளமையும் நெடும்பிராயமுமின்றி ஒரு புருடாயுப்புக்க பெரிய மரத்தை வெட்டி ஒரு புருடாகாரமாகச் செய்து அதனை நிழலிலே ஆற இட்டுவைத்துத் திருகுதல் பிளத்தல் போழ்ந்து படுதலின் மையை அறிந்து ஓர் யாண்டு சென்றபின் இலக்கணவகையான் வங்கியம் செய்யப்படும் ; என்னை?

'உயர்ந்த சமதலத் தோங்கிக்கா ளுன்கின்
மயங்காமை நின்ற மரத்தின்-மயங்காமே
முற்றிய மாமரந் தன்னை முதறடிந்து
குற்றமிலோ ராண்டிற் கொளல்'

என்றுராகலின்.

இதன் பிண்டியிலக்கணம்: நீளம் இருபது விரல் ; சுற்றளவு நாலரை விரல். இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒருபாதி மரனிறுத்திக் கடைந்து வெண்கலத்தாலே அணைசு பண்ணி இட முகத்தையடைந்து வலமுகம் வெளியாக விடப்படும் ; என்னை?

'சொல்லு மிதிற்களவு நாலைந்தாஞ் சுற்றளவு
நல்விரல்க ளுலரையா நன்னுதலாய்-மெல்லத்
துளையளவு நெல்லரிசி தூம்பிட மாய
வளைவல மேல் வங்கிய மென்'

என்றுராகலின்.

இனித் துளையளவிலக்கணம்: அளவு இருபதுவிரல். இதிலே தூம்புமுகத்தின் இரண்டுநீக்கி முதல்வாய் விட்டு இம்முதல்வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினுமிரண்டு நீக்கி நடுவில் நின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளை இடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரையென்று கழித்து நீக்கி நின்ற ஏழினும் ஏழுவிரல் வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்பு ஒரு விரலகலம் கொள்ளப் படும் ; என்னை?

'இருவிரல்க ணீக்கி முதல்வாயேழ் நீக்கி
மருவு துளையெட்டு மன்னும்-பெருவிரல்கள்
நாலஞ்சு கொள்க பரப்பென்ப நன்னுதலாய்
கோலஞ்செய் வங்கியத்தின் கூறு'

என்றுராகலின்.

இவ்வங்கியம் ஊதுமிடத்து வளைவாய் சேர்ந்த துளையை முத்திரை யென்று நீக்கி முன்னின்ற ஏழினையும் ஏழுவிரல் பற்றி வாசிக்க.

ஏழுவிரலாவன: இடக்கையிற் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றை மூன்று விரலும், வலக்கையிற் பெருவிரலொழிந்த நான்கு விரலும் ஆக ஏழு விரலுமென்க. என்னை?

'வளைவா யருகொன்று முத்திரையாய் நீக்கித்
துளையேழி னின்ற விரல்கள்-விளையாட்
டிடமூன்று நான்குவல மென்றார் காணேகா
வடமாரு மென்முலையாய் வைத்து'

என்றாராகலின்.

இவ்வங்கியத்து ஏழு துளைகளின் இசைபிறக்குமாறு: அஃது எழுத்தாற் பிறக்கும். எழுத்து, சரிகமபதநி என்பன. இவ்வேழெழுத்தினையும் மாத்திரைப்படுத்தித் தொழில் செய்ய இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும்.

ஏழிசையாவன: சட்சம், ரிடபம், காந்தாரம் மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்பன. இவை பிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக்கும்; என்னை?

'சரிக மபதநியென் றேழெழுத்தாற் றானம்
வரிபரந்த கண்ணினாய் வைத்துத்-தெரிவரிய
ஏழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண் பிறக்கும்
சூழ்முதலாஞ் சுத்தத் துளை'

என்றாராகலின்.

இத்தன்மைத்தாகிய குழலுமென்க.

தோற்கருவிகள்

'நால்வகை உத்தமத் தோற் பெருங் கருவிகளாவன மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லிகை யென்பன. என்னை?

'மத்தளந் தண்ணுமை யிடக்கை சல்லிகையென
வைத்த நான்கு முத்தமக் கருவி'

என்றாராகலின்' எனத் தோற்கருவிகளில் சிறப்புடைய நான்கினைக் குறிக்கின்றார் நல்லார்.

அரங்கேற்று காதையில் 'தாழ்குரற் றண்ணுமை' (3:27) என்ற வரி உரையில் பல்வேறுபட்ட தோற்கருவிகளைக் குறிப்பிடுகின்றார். அவையாவன: பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை,

கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாளிகைப்பறை, துடி, பெரும்பறை யெனத் தோலாற் செய்யப்பட்ட கருவிகள். என்னை?

'பேரிகை படக மிடக்கை யுடுக்கை
சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகந் தண்ணுமை 'தாவி றடாரி
அந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளந் துடுமை சிறுபறை யடக்க
மாசி றகுணிச்சம் விரலேறு பாகம்
தொக்க வுபாங்கந் துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே'

என்றாராகலின்.

இவை அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணமைமுழவு, நாண்முழவு, காலைமுழவென ஏழுவகைப்படும்.

அவற்றுள் அகமுழவாவன: முன்சொன்ன உத்தமமான மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழா வென விவை.

அகப்புற முழவாவன: முன்சொன்ன மத்திமமான தண்ணுமை, தக்கை, தகுணிச்சம் முதலாயின.

புறமுழவாவன: முன்சொன்ன அதமக் கருவியான கணப்பறை முதலாயின.

புறப்புற முழவாவன: முற்கூறப்படாத நெய்தற்பறை முதலாயின.

பண்ணமை முழவாவன: முன்சொன்ன வீர முழவு நான்கும். அவையாவன முரசு, நிசாளம், துடுமை, திமிலையென விவை.

நாண் முழவாவன: நாட்பறை ; ஆவது நாழிகைப்பறை.

காலை முழவாவன: முன் துடி யென்றது.

இனி இவற்றுள், மத்தளம்-மத்து ஓசைப்பெயர் ; இசையிடனுகிய கருவிகட் கெல்லாம், தள மாதலால் மத்தளமென்று பெயராயிற்று. இக்கருவி பல கூத்துக்களுக்கு உரித்தாகலானும்

பாடலெழுத்தான் உள்ளே பிறத்தலானும் முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும் இதனை நான்முகனென்பர்.

சல்லிகை யென்றது-சல்லென்ற ஓசையையுடைத்தாதலாற் பெற்ற பெயர். ஆவஞ்சி யெனினும் குடுக்கை யெனினும் இடக்கை யெனினும் ஒக்கும்; அதற்கு ஆவினுடைய வஞ்சித்தோலைப் போர்த்தலால் ஆவஞ்சி யென்று பெயராயிற்று; குடுக்கையாக வடைத்தலாற் குடுக்கை யென்று பெயராயிற்று; வினைக்கிரியைகள் இடக்கையாற் செய்தலின் இடக்கை யென்று பெயராயிற்று.

கரடி கத்தினாற் போலும் ஓசையை யுடைத்தாதலாற் கரடிகை யென்று பெயராயிற்று. பிறவற்றையும் இங்ஙனம் உய்த்துணர்ந்து கொள்க. இவற்றுள் முதலிற் கரங்கொள்வது மத்தள மாதலின் முதற் கருவியாயிற்று. இடைக்கருவி சல்லி; இடைகொள வைத்ததாகலின். கடைக்கருவி உடுக்கை; கடைக்கட்டடட்டுக்கு உரித்தாகலின். இங்ஙனம் தோற்கருவிகள் பற்றிக் கூறுகின்றார் நல்லார்.

'இவருடைய இசைத்தமிழ் விளக்கமே சுவாமி விபுலானந்தரை இதன் ஆராய்ச்சியில் ஈடுபடுத்தி 'யாழ் நூல்' என ஒன்று புதிதாக எழுதி வெளியிடச் செய்தது' என மு. அருணசலம் அவர்கள் எழுதுவது இங்குக் கருதத்தக்கது. சிலப்பதிகாரத்தை அடியொற்றிக் 'கருணாமிர்த சாகரம்' என்னும் மிகப்பெரிய இசைத் தமிழ்நூல் ஆபிரகாம் பண்டிதரவர்களால் எழுதப்படுவற்கும் நல்லாரின் இசைத்தமிழ் விளக்கங்கள் பெரிதும் துணை செய்தன வெனலாம். தற்காலத்தில் அரு. இராமநாதன் அவர்களால் 'சிலப்பதிகார இசை நுணுக்க விளக்கம்' என்னும் இசைத்தமிழ் நூல் உருப்பெற அடிப்படையானது நல்லாரின் இசைத்தமிழ் விளக்கமே என்பதில் ஐயமில்லை. முற்கால இசைபற்றியும் இசைத் தமிழ் நூல்கள் பற்றியும் அறிந்து கொள்ளப் பெருந்துணை செய்வது நல்லாரின் இசைத்தமிழ் விளக்கங்கள் என்பது அங்கை நெல்லி யெனப் போதரும். தமிழிசை வளர்ச்சியில் நல்லாரின் பங்கு குறிப்பிடத் தக்கது.

# கூத்துக்கலைப் புலமை

தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்று கோணங்களில் நோக்கப்பட்டது. இளங்கோவடிகள் முத்தமிழ்த் துறைபோகிய வித்தகர் என்பதைத் தம் உரை வாயிலாக வெளியிடுகின்ற நல்லார், 'அவர் அதனையே துணிந்து தமது முத்தமிழ்க் கல்வியும் வித்தகக் கவியுங் காட்டுதற்குத் தாம் வகுத்துக் கொண்ட மூவகை உள்ளுறையின் வினைவு தோன்ற'[1] எனத் தம் உரைச் சிறப்புப் பாயிரத்தில் எழுதுகின்றார்.

'பழுதற்ற முத்தமிழின் பாடற்குரையின்
றெழுதத் துணிவதே யறன்'

(உரைப்பாயிரம்)

எனவும்,

'ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவகுத்துச்
சேரன் றெரித்த சிலப்பதிகாரம்'

(உரைச்சிறப்புப் பாயிரம்)

எனவும்,

'கொண்டாடுஞ் செஞ்சொற் குடக்கோ முனிசேரன்
தண்டா வுரைமுத் தமிழ்'

(நூற்சிறப்புப் பாயிரம்)

1. சிலப். உரைச்சிறப். பக்: 10.

எனவும் முத்தமிழ்க் காப்பியமாகச் சிலப்பதிகாரம் எண்ணப்படு வது குறிப்பிடத்தக்கது. இம்முத்தமிழ்க் காப்பியத்திற்கு விருத்தி யுரை வழங்கிய நல்லாரும் முத்தமிழ் வித்தகராகவே விளங்கித் தோன்றுகின்றார். நல்லாரின் இலக்கிய அறிவும் இலக்கணப் புலமையும் அவரின் இயற்றமிழ்ப் புலமைக்குச் சான்றாக அமை வன. இசை, நாடகத்தமிழில் நாடகத்தமிழ் பற்றிய பரந்து பட்ட அவரின் அறிவு அரங்கேற்றுகாதை உரைவழி வெளிப் படுகின்றது. இசையும் நாடகமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையன ; இசையின்றேல் நாடகம்-கூத்து சிறப்படையா தாகலின் நாடகத்தமிழை மிகுதியும் பேசும் அரங்கேற்றுகாதை உரையில் இசைத்தமிழ்க் கூறுபாடுகளையும் எடுத்துக் காட்டு கின்றார். இசைத்தமிழ்ச் செய்திகளினும் நாடகத்தமிழ் பற்றிய விளக்கங்களையே நல்லார் மிகுதியும் விளக்கிச் செல்கின்றார். அவரின் 'கானல் வரி' உரை கிடைத்திருக்குமே யாகின் இசைத்தமிழ் பற்றிய விரிந்த செய்திகளை நாம் அறிந்திருக்க வாய்ப்புண்டு.

அடியார்க்கு நல்லார் தம் உரைக்கு நாடகத்தமிழைப் பொறுத்தமட்டில் மூலநூற்களாக-ஆதார நூற்களாக அறிவனார் செய்த பஞ்சமரபையும், ஆதிவாயிலார் செய்த பரதசேனா பதீயத்தையும், கடைச்சங்க மிரீஇய பாண்டியருட் கவியரங் கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களிலுள்ள வசைக் கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்து இயன்ற 'மதி வாணர் நாடகத்தமிழ்நூலை'யும் கொள்ளுகின்றார். இம் மூன்று நாடகத்தமிழ்நூற்களும் நல்லார் காலத்தில் வழக்கில் இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

இவை தவிர இறந்து போன சில பழைய நாடகத்தமிழ் நூற் களையும் பெயரளவில் தம் பாயிரவுரையில் குறிப்பிட்டுச் செல் கின்றார். நல்லார் தம் உரைப்பாயிரத்தில், 'நாடகத்தமிழ் நூலா கிய பரதம், அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணை யல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தன போலும், என எழுதுவது குறிப்பிடத்தக்கது.

அடியார்க்கு நல்லார் முதற்கண் இருவகைக் கூத்துக்கள் இவையிவை என்று சுட்டி, சாந்திக்கூத்தையும் விநோதக் கூத்தையும் விரிவாக விளக்கிச் செல்கின்றார். மாதவியாடிய 11-வகை ஆடல்களையும் அவற்றை ஆதியில் ஆடிய தெய்வங்கள்

பற்றியும் விளக்குகின்ருர். எட்டுவகை வரிக்கூத்து பற்றிய விளக்கம் நல்லார் உரையில் காணக்கிடக்கின்றது. பல்வகை வரிக்கூத்திற்கு ஒரு நீண்ட கலிவெண்பாவை எடுத்துக் காட்டுகின்ருர். இங்குக் குறிக்கப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட கூத்துக்கள் பற்றி விளக்கமாக அறியமுடியவில்லை. இவை தவிரத் தேசிக் கூத்து, மார்க்கக்கூத்து, துணங்கைக்கூத்து போன்ற பிற வகைக் கூத்துக்கள் பற்றியும் ஆங்காங்கே விளக்கிச் செல்கின்ருர் நல்லார்.

கூத்திலக்கணத்தை பொறுத்தமட்டில் மிக விரிந்த செய்திகளைத் தருகின்ருர் நல்லார். அறுவகை நிலை, ஐவகைப்பாதம், அங்கங்கிரியை பதினறு, வருத்தனை நான்கு, நிருத்தக் கை முப்பது, விலக்குறுப்பு பதினன்கு, கூத்திற்குரிய உரு, ஆடல் வகை, பாணி, தூக்கு முதலான அவிநயம் செய்யும் முறை, அரங்கில் புகுந்து கூத்து நிகழ்த்தும் முறை, ஆடலரங்கம், தலைக்கோல் பற்றிய செய்திகள் ஆகியன இங்குக் குறிப்பிடத்தக்கன. இவற்றுள், விலக்குறுப்புக்களில் ஒன்பான் சுவை பற்றிய நல்லாரின் விளக்க மேற்கோள், 24–வகை அவிநயம் பற்றிய காட்டுக்கள், அவிநயம் செய்யுங்கால் இணையா வினைக்கை-33, இணைக்கை 15-பற்றிய விளக்க மேற்கோள் பாடல்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன. இவை நல்லாரின் கூத்துக்கலை யறிவைத் தெற்றெனத் தெரிக்கும். இவற்றின் விளக்கங்கள் நல்லார் வழி ஈண்டுத் தரப்படுகின்றன.

### இருவகைக் கூத்தாவன

வசைக்கூத்து, புகழ்க்கூத்து; வேத்தியல், பொதுவியல்; வரிக்கூத்து; வரிச்சாந்திக்கூத்து; சாந்திக்கூத்து, விநோதக் கூத்து; ஆரியம், தமிழ் ; இயல்புக்கூத்து; தேசிக்கூத்தெனப் பல வகைய. இவை விரிந்த நூற்களில் கண்டு கொள்க .

ஈண்டு இருவகைக் கூத்தாவன சாந்தியும், விநோதமும் ; என்னை?

> ‘அவைதாம்
> சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்
> ருய்ந்துற வகுத்தன னகத்தியன் ருனே’

என்ருராகலின்.

### சாந்திக்கூத்து

> ‘சாந்திக் கூத்தே தலைவ னின்பம்
> ஏந்திநின் ருடிய வீரிரு நடமவை

சொக்க மெய்யே யவிநய நாடகம்
என்றிப் பாற்படூஉ மென்மனூர் புலவர்'

என்பதனுல் நாயகன் சாந்தமாக ஆடிய கூத்துச் சாந்திக் கூத்தெனப்படும்.

இவற்றுள் சொக்கமென்றது-சுத்த நிருத்தம். அது நூற்றெட்டுக் கரணமுடைத்து. மெய்க்கூத்தாவது தேசி, வடுகு, சிங்களமென மூவகைப்படும். இவை மெய்த்தொழிற் கூத்தாகலின் மெய்க் கூத்தாயின. இவை அகச்சுவை பற்றி யெடுத்தலின் அகமார்க்கமென நிகழ்த்தப்படும்.

அகச்சுவையாவன: இராசதம், தாமதம், சாத்துவிகம் என்பன.

'குணத்தின் வழியதகக் கூத்தெனப் படுமே'

என்ருர் குணநூலுடையார்.

'அகத்தெழு சுவையா னகமெனப் படுமே'

என்ருர் சயந்த நூலுடையாரு மெனக் கொள்க.

சாந்திக்கூத்து ஈசனுக்கும் காளிக்கும் உரியதெனவும், ஆடும் முறையை,

'வாசிகை வைத்து மணித்தோ டணியணிந்து
மூசிய சுண்ண முகத்தெழுதித்-தேசுடனே
ஏந்துசுடர் வாள்பிடித்திட் டீசனுக்குங் காளிக்கும்
சாந்திக்கூத் தாடத் தகும்'

என்ற பாடல்கொண்டு விளக்குகின்ருர்.

*அவிநயக்கூத்தாவது*

கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்யும் பலவகைக் கூத்து.

*நாடகம்*

கதை தழுவி வருங் கூத்து.

*விநோதக் கூத்து*

விநோதக் கூத்து பல்வகைக் கூத்துக்களில் ஒன்ருகவும் கருதப்படுகின்றது. வென்றிக் கூத்து, வசைக் கூத்து, விநோதக் கூத்து முதலியன பல்வகைக் கூத்திலடங்கும்.

'பல்வகை யென்பது பகருங்காலை
வென்றி வசையே விநோதமாகும்'

என்ருராகலின்,

'அவற்றுள்,
மாற்ருன் ஒடுக்கமும் மன்ன னுயர்ச்சியு
மேற்படக் கூறும் வென்றிக் கூத்தே'

என்பது வென்றிக்கூத்தின் இலக்கணமாகும்.

வசைக்கூத்து

'பல்வகை யுருவமும் பழித்துக் காட்ட
வல்லவ ணுதல் வசையெனப் படுமே'

இவ்விரு கூத்தும் தாளத்தின் அடிப்படையில் அமைவது. இதனை,

'எனவிவை தாளத்தின் னியல்பின வாகும்'

என்ற வரியால் விளக்குகின்ருர்.

விநோதக்கூத்து

'விநோதக் கூத்து வேறுபா டுடைத்து
வென்றி விநோதக் கூத்தென விளம்புவர்'

இதன் கருத்து, கொடித்தேர் வேந்தரும் குறுநில மன்னரு முதலாக உடையோர் பகை வென்றிருந்த விடத்து விநோதங் காணும் கூத்தென்பதாம்.

இவ்விநோதக்கூத்து குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை எனப் பல்வகையின.

'பரவிய சாந்தி யன்றியும் பரதம்
விரவிய விநோதம் விரிக்குங் காலைக்
குரவை கலிநடங் குடக்கூத் தொன்றிய
கரண நோக்குத் தோற்பா வைக்கூத்
தென்றிவை யாறு நகைத்திறச் சுவையும்
வென்றியும் விநோதக் கூத்தென விசைப்ப'

இவற்றுள் குரவை யென்றது காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக, எழுவரேனும் எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைபிணைத் தாடுவது.

'குரவை யென்பது கூறுங் காலைச்
செய்தோர் செய்த காமமும் விறலும்
எய்த வுரைக்கு மியல்பிற் றென்ப'

'குரவை யென்ப தெழுவர் மங்கையர்
செழுநிலை மண்டலக் கடகக் கைகோத்
தந்நிலைக் கொட்பநின் ருட லாகும்'

குரவை-வரிக்கூத்தின் ஓர் உறுப்பு ; அவை வந்த வழிக் கண்டு கொள்க. கலிநடமென்றது-கழாய்க்கூத்து; குடக்கூத்து மேற் பதினொராடலுட் காட்டப்படும் ; கரணமாவது-படிந்த ஆடல் ; நோக்கென்றது-பாரமும் நுண்மையும் மாயமு முதலாயினவற்றை உடையது; தோற் பாவையென்றது-தோலாற் பாவை செய்து ஆட்டுவிப்பது.

இன்னும் நகைத் திறச்சுவை யென்பதனோடு கூட்டி ஏழென்பாருமுளர் ; அஃதாவது விதூடகக் கூத்து. இதனை வசைக் கூத்தென்பாருமுளர். இது வேத்தியல், பொதுவியல் என இரண்டு வகைப்படும்.

வெறியாட்டு முதலாகத் தெய்வமேறி யாடுகின்ற அத்திறக் கூத்துக்களும் கூட்டி ஏழென்பாரும் உளர். என்னை?

*'எழுவகைக் கூத்து மிழிகுலத் தோரை*
*ஆட வகுத்தன னகத்தியன் றனே'*

என்றாராகலின்.

இங்ஙனம் இருவகைக் கூத்துக்கள் இவையிவை யெனச் சுட்டிக்காட்டிய நல்லார் சாந்திக்கூத்து, விநோதக்கூத்துக்களின் வகையினையும், பல்வகைக் கூத்துக்களாவன இவை யெனவும் விளக்கிச் செல்கின்றார்.

### துணங்கைக்கூத்து

கூத்துவகையுள் ஒன்று துணங்கைக்கூத்து. இதனைச் சிங்கி என்றும் கூறுவர். முடக்கிய கையைப் புடைஒற்றி ஆடும்கூத்து துணங்கை எனப்படும். இதனை,

*'முடக்கிய விருகை பழுப்புடை யொற்றித்*
*துடக்கிய நடையது துணங்கை யாகும்'* (திவா:9)

என்ற திவாகர நூற்பாவை எடுத்துக்காட்டி விளக்குகின்றார்.

### தேசிக்கூத்து

இது மண்டிலத்தால் வரும்.

*'கொண்ட தேசிப் பகுதி யெல்லாம்*
*மண்டில நிலையின் வருதக வுடைத்தே'*

என்பது தேசிக்கூத்தின் இலக்கணத்தைக் கூறும்.

*மார்க்கக் கூத்து*

பஞ்சதாளப் பிரபந்தமாகக் கட்டப்பட்ட வடுகில் ஒத்தையும் தேசியிலொத்தைக் காட்டினுற்போல இரட்டிக்கிரட்டியாக ஆடுதல் மார்க்கக் கூத்தாகும். இதனை மட்டதாள முதலாக ஏகதாளமீருக வைசாக நிலையில் ஆடுதல் மரபு. இதனை, 'வைசாக நிலையே வடுகிற்கும் வரையார்' என்பர்.

பதினேராடல்

இப்பதினேராடலும் தெய்வங்களால் ஆடப்படுதலின் தெய்வ விருத்தி எனப்படுகிறது. இவை நின்ருடல், வீழ்ந்தாடல் என இருவகைப்படும். இப்பதினெரு கூத்துக்களை ஆடியோர் விவரமும் அவற்றிற்குரிய உறுப்புக்கள் இத்தனை என்றும் நல்லார் மேற்கோள் மூலம் விளக்குகின்ருர். அவை வருமாறு:

பதினேராடலாவன:

'கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா லல்லியமல் கும்பம்-சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கம்
கொட்டியிவை காண்பதினேர் கூத்து'

இவை தெய்வ விருத்தி. இவை இரண்டு கூறுபடும். என்னை?

'அல்லியங் கொட்டி குடைகுடம் பாண்டரங்க
மல்லுட னின்ருட லாறு'

'துடிகடையம் பேடு மரக்காலே பாவை
வடிவுடன் வீழ்ந்தாடலைந்து'

இவை அசுரரைக் கொல்ல அமரராடின.

1, 'அல்லிய மாயவ ஞடிற்றதற் குறுப்புச்
சொல்லுப வாரு மெனல்'

2. 'கொட்டி கொடுவிடையோ ஞடிற் றதற்குறுப்
பொட்டிய நான்கா மெனல்'

3. 'அறுமுகத்தோ ஞடல் குடைமற் றதற்குப்
பெறுமுறுப்பு நான்கா மெனல்'

4. 'குடத்தாடல் குன்றெடுத்தோ ஞடலதனுக்
கடைக்குப ஷைந்துறுப் பாய்ந்து'

5. 'பாண்டரங்க முக்கண ஞடிற் றதற்குறுப்
பாய்ந்தன வாரு மெனல்'

6. ‘நெடியவ னுடிற்று மல்லாடன் மல்லிற்
கொடியா வுறுப்போரைந் தாம்’

7. ‘துடியாடல் வேன்முருக னாட லதனுக்
கொடியா வுறுப்போரைந் தாம்’

8. ‘கடைய மயிராணி யாடிற் றதனுக்
கடைய வுறுப்புக்க ளாறு’

9. ‘காமன தாடல்பே டாட லதற்குறுப்பு
வாய்மையி னாரயி னுன்கு’

10. ‘மாயவ ளாடன் மரக்கா லதற்குறுப்பு
நாமவகை யிற்சொ லுங்கா னுன்கு’

11. ‘பாவை திருமக ளாடிற் றதற்குறுப்
போவாம லொன்றுடனே யொன்று’

இனி, இப்பதினோராடலும் ஆடப்பட்ட காரணமும்,

‘புரமெரித்தல் சூர்மாத் துளைபடுத்தல் கஞ்ச
னுரனெரித்தல் வாணனைவா னுய்த்தல்-பெரிய
அரன்முத லாகவே லன்முதன் மாயோன்
அமர்முத லாடிய வாறு’

என்பது முதலான நூற்பாக்களால் விளக்கப்படுகிறது. பிற தெய்வங்கள் ஆடியதற்கான காரணம் கூறும் நூற்பா கிடைத்தில.

வரிக்கூத்து

வரிக்கூத்தாவது அவரவர் பிறந்த நிலத்தன்மையும் பிறப்பிற் கேற்ற தொழிற்றன்மையும் தோன்ற நடித்தல். என்னை?

‘வரியெனப் படுவது வகுக்குங் காலை
பிறந்த நிலனும் சிறந்த தொழிலும்
அறியக்கூறி யாற்றுழி வழங்கல்’

என்றாராகலின்.

வரி எட்டுவகைப்படும். கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி யென. என்னை?

‘கண்கூடு காண்வரி யுள்வரி புறவரி
கிளர்வரி யைந்தோ டொன்ற வுரைப்பிற்
காட்சி தேர்ச்சி யெடுத்துக் கோளென
மாட்சியின் வருஉ மெண்வகை நெறித்தே’

என்றாராகலின்.

*கண்கூடுவரி*

அவற்றுட் கண்கூடாவது பிரியதரிசனம்; அஃதாவது காட்சி; அஃது ஒருவர் கூட்டவன்றித் தானேவந்து நிற்கும் நிலைமை; என்னை?

'கண்கூ டென்பது கருதுங் காலை
இசைப்ப வராது தானே வந்து
தலைப்பெய்து நிற்குந் தன்மைத் தென்ப'

என்றாராகலின்.

*காண்வரி*

'காண்வரி யென்பது காணுங் காலை
வந்த பின்னர் மனமகிழ் வுறுவன
தந்து நீக்குந் தன்மைய தாகும்'

என்றாராகலின்.

*உள்வரி*

உள்வரி யென்றது வேற்றுருக் கொண்டு நடித்தல். என்னை?

'உள்வரி யென்ப துணர்த்துங் காலை
மண்டல மாக்கள் பிறிதோ ருருவம்
கொண்டுங் கொளாது மாடுதற் குறித்தே'

என்றார்ராகலின். பாண்டவர் பிறிதுருவங் கொண்டதுவுமது. 'மண்டல மாக்க'ளாவார் அரசர்.

*புறவரி*

புறவரியாவது தலைவனுடன் அணையாது புறத்து நின்று விளையாடுவது; என்னை?

'புறவரி யென்பது புணர்க்குங் காலை
இசைப்ப வந்து தலைவன் முற்படாது
புறத்துநின் றுடி விடைபெறு வதுவே'

என்றாராகலின்.

*கிளர்வரி*

கிளர்வரி யென்றது நடுநின்றார் இருவருக்கும் சந்து சொல்லக் கேட்டு நிற்பது; என்னை?

'கிளர்வரி யென்பது கிளக்குங் காலை
ஒருவ ருய்ப்பத் தோன்றி யவர்வாய்
இருபுற மொழிப்பொருள் கேட்டுநிற் பதுவே'

என்றாராகலின்.

### தேர்ச்சிவரி

தேர்ச்சிவரி யென்றது நாயகன் கிளைகட்குத் தன் துன்பங் களைத் தேடித் தேடிச் செல்லுதல். என்னை?

‘(தேர்ச்சி யென்பது தெரியுங் காலைக்)
கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முன்
பட்டது முற்றது நினை இ யிருந்து
தேர்ச்சியோ டுரைப்பது தேர்ச்சிவரி யாகும்’

என்றாராகலின்.

### காட்சிவரி

காட்சிவரி யென்றது தன் வருத்தத்தைப் பலருங் காணும்படி நடத்தல். என்னை?

‘காட்சிவரி யென்பது கருதுங் காலைக்
கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முனர்ப்
பட்டது கூறிப் பரிந்துநிற் பதுவே’

என்றாராகலின்.

### எடுத்துக்கோள்வரி

எடுத்துக்கோள்வரி யென்றது தான் கையறவெய்தி வீழ்ந்தா ளாக வீழ்ந்து பிறர் எடுத்துக்கொள்ளும்படி நடித்தல். என்னை?

‘எடுத்துக் கோளை யிசைக்குங் காலை
அடுத்தடுத் தழிந்து மாழ்கி யயலவர்
எடுத்துக்கோள் புரிந்த தெடுத்துக் கோளே’

என்றாராகலின்.

### பல்வகை வரிக்கூத்து

வரி என்பதற்கு மேற்கூறிய எட்டுவகை வரிக்கூத்து என்ப தோடு பல்வகை வரிக்கூத்து என்று கொள்வாரும் உளர். இதனை எடுத்துக்காட்டிய நல்லார் ஒரு நீண்ட பாடலை எடுத்துக்காட்டு கின்றார்.

‘சிந்துப் பிழுக்கை யுடன்சந்தி யோர்முலை
கொந்தி கவுசி குடப்பிழுக்கை கந்தன்பாட்
டாலங்காட் டாண்டி பருமண னெல்லிச்சி
சூலந் தருநட்டந் தூண்டிலுடன்-சீலமிகும்

ஆண்டி யமண்புனவே டாளத்தி கோப்பாளி
பாண்டிப் பிழுக்கையுடன் பாம்பாட்டி-மீண்ட
கடவுட்சடைவீர மாகேசங் காமன்
மகிழ்சிந்து வாமன ரூபம்-விகடநெடும்
பத்திரங் கொற்றி பலகைவாள் பப்பரப்பெண்
டத்தசம் பாரந் தகுணிச்சங்-கத்து
முறையீண் டிருஞ்சித்து முண்டித மன்னப்
பறைபண் டிதன்புட்ப பாணம்-இறைபரவு
பத்தன் குரவையே பப்பறை காவதன்
பித்தனெடு மாணி பெரும்பிழுக்கை எத்துறையும்
ஏத்திவருங் கட்களி யாண்டு விளையாட்டுக்
கோத்த பறைக்குடும்பு கோற்கூத்து-மூத்த
கிழவன் கிழவியே கிள்ளுப் பிருண்டி
அழகுடைய பண்ணிவிக டாங்கம்-திகழ்செம்பொ
னம்மனை பந்து கழங்காட லாலிக்கும்
விண்ணகக் காளி விறற்கொந்தி-அல்லாத
வாய்ந்த தனிவண்டு வாரிச்சி பிச்சியுடன்
சாந்த முடைய சடாதாரி-ஏய்ந்தவிடை
தக்கபிடார் நிர்த்தந் தளிப்பாட்டுச் சாதுரங்கம்
தொக்க தொழில்புனைந்த சோணுண்டு-மிக்க
மலையாளி வேதாளி வாணி குதிரை
சிலையாடு வேடு சிவப்புத்-தலையில்
திருவிளக்குப் பிச்சி திருக்குன் றயிற்பெண்
டிருமுண்கத்துப் பேதை யிருளன்-பொருமுகத்துப்
பல்லாங் குழியே பகடி பகவதியாள்
நல்லார்தந் தோள்வீச்சு நற்சாழல்-அல்லாத
உந்தி யவலிடி யூராளி யோகினிச்சி
குந்திவரும் பாரன் குணலைக்கூத்-தந்தியம்போ
தாடுங் களிகொய்யு முள்ளிப்பூ வையனுக்குப்
பாடும்பாட் டாடும் படுபள்ளி-நாடறியும்
கும்பிடு நாட்டங் குணாட்டங் குணலையே
துஞ்சாத சும்மைப்பூச் சோனக-மஞ்சரி
ஏற்ற வுழைமை பறைமைமுத லென்றெண்ணிக்
கோத்தவரிக் கூத்தின் குலம்'

இந்நீண்ட கலிவெண்பாட்டு நூற்றுக்கு மேற்பட்ட கூத்துக்களைக் குறிப்பிடுகின்றது. இப்பாடலுள் அமையும் கூத்து வகைகள் பற்றி மு. அருணாசலம் அவர்கள் குறிப்பிடுவது இங்கு ஒப்புநோக்கத் தக்கது. 'இவற்றுள் அம்மானை, உந்தி, சாழல், தோள்வீச்சு (தோள்நோக்கம்) என்பன போன்ற சில திருவாசகத்தில்

இலக்கிய ஆட்சி பெற்றிருப்பதை நாம் அறிவோம். கழங்கு, குணலை, குரவை, பகடி, பகவதி, பந்து, பறை, பாம்பாட்டி, பிடாரன் என்பன போன்ற பல பிற்காலத்தில் (15-ஆம் நூற்றுண்டில்) தத்துவராயர் பாடுதுறையுள் இலக்கிய அமைப்புப் பெற்றிருப்பதையும் காண்கிறேம். ஆலங்காட்டாண்டி என்பது காரைக் காலம்மையார் திருவாலங்காட்டில் திருக்கூத்தைத் தரிசித்த வரலாற்றேடு தொடர்புடையதாய் இருக்கலாம். சும்மைப்பூ என்பது 'சும்மலோ சும்முலக்காய்' என்ற பாட்டோடு குற்றுகின்ற தொழிலைக் குறிக்கும். இது வள்ளைப் பாட்டு. இப்பாட்டு கலிங்கத்துப் பரணியில் வந்த போதிலுங்கூட, 'சும்மலோ' என்ற சொல்லாட்சி பின்னர் 13-ஆம் நூற்றுண்டில் தோன்றிய இரணிய வதைப் பரணியில் காண்கிறேம். பல்லாங்குழி என்ற ஆட்டவகை இன்றும் பெண்கள் வீட்டுக்குள்ளிருந்து ஆடும் விளையாட்டு வகைகளில் ஒன்று. ஆடும் படுபள்ளி என்பது ஒருகால் பிற்காலத்துச் சிறப்பான பள்ளு என்ற பிரபந்த வகையாக வளர்ச்சி பெற்றிருக்கலாம். அவலிடி என்பதும் வள்ளைப்பாட்டுப் போன்றதே. திருவிளக்குப் பிச்சன் என்பது சோழர் கல்வெட்டுக்களிற் காணும் தொடர்; திருவிளக்குப் போடும் பணி செய்வோன்; திருவிளக்குப் பிச்சி என்பது அதன் பெண்பால். பிழுக்கை, சிந்து என்ற பல் வகை விளையாட்டுக்களும் இங்கு வருகின்றன. பிற கூத்து வகைகளைக் குறித்து எந்த விளக்கமும் நமக்குத் தெரியவில்லை. அடியார்க்கு நல்லார் இக்கலிவெண்பாவில் காட்டும் கூத்தும் அவற்றின் விளக்கமும் அவற்றிற்குரிய இலக்கியமும் வளர்ச்சியும் தனியான ஓர் ஆராய்ச்சிக்குரிய பொருளாகும்' எனக் குறிப்பிடுகின்றுர்.[1]

இங்ஙனம் பல்வேறு வகையான கூத்துக்களையும் அவற்றின் விளக்கங்களையும் நல்லார் எடுத்துக் காட்டுப் பாடல் மூலம் விளக்கிச் செல்கின்றுர். இனி, கூத்தாடுதற்குரிய இலக்கண முறைமையினை நல்லார் வழிக் காண்போம்.

### இருவகைக் கூத்தின் இலக்கணம்

இருவகைக் கூத்துக்களாகச் சாந்திக் கூத்தையும் விநோதக் கூத்தையும், இவற்றின் வகைகளையும் விளக்கிய நல்லார் இவற்றிற்குரிய இலக்கணத்தை,

*'அறுவகை நிலையு மைவகைப் பாதமும்*
*ஈரெண் வகைய வங்கக் கிரியையும்*
*வருத்தனை நான்கு நிருத்தக்கை முப்பதும்*
*அத்தகு தொழில வாகுமென்ப'*

---

1. மு. அருணுசலம்; தமிழிலக்கிய வரலாறு-12-ஆம் நூற்றுண்டு, பக்: 531.

என்ற பாடல் மூலம் விளக்குகின்றார். 'இவை விரிப்பிற் பெருகும்' எனக்கூறி மேற்செல்லுகின்றார் நல்லார். இதற்குக் குறிப்புரை வழங்கிய டாக்டர் உ. வே. சா. அவர்கள் அறுவகை நிலை, ஐவகைப்பாதம், அங்கக்கிரியை பதினாறு, வருத்தனை நான்கு, நிருத்தக்கை முப்பது ஆகியவற்றை விளக்குகின்றார்கள்.

*அறுவகை நிலை*

அறுவகை நிலையாவன : வைணவம், சமநிலை, வைசாகம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீட மென்பன.

*ஐவகைப்பாதம்*

ஐவகைப்பாதமாவன : சமநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிதமென்பன.

*அங்கக்கிரியை பதினாறு*

அங்கக் கிரியை பதினாறுவன :சரிகை, புரிகை, சமகலி, திரிகை ஊர்த்துவகலிகை, பிருட்டகம், அர்த்த பிருட்டகம், சுவத்திகம், உல்லோலம், குர்த்தனம், வேட்டனம், உபவேட்டனம், தானபதப்பிராய விருத்தம், உக்ஷேபணம், அவக்ஷேபணம், நிகுஞ்சனமென்பன.

*வருத்தனை நான்கு*

வருத்தனை நான்காவன : அபவேட்டிதம், உபவேட்டிதம், வியாவர்த்திகம், பராவர்த்தித மென்பன.

*நிருத்தக்கை முப்பது*

நிருத்தக் கை முப்பதாவன : சதுரச்சிரம், உத்துவீதம், தலமுகம், சுவத்திகம், விப்பிரகீர்ணம், அருத்தரேசிதம், அராளகடாமுகம், ஆவித்த வத்திரம், சூசிமுகம், இரேசிதம், உத்தானவஞ்சிதம், பல்லவம், நிதம்பம், கசதந்தம், இலதை, கரிக்கை, பக்கவஞ்சிதம், பக்கப் பிரதியோகம், கருடபக்கம், தண்டபக்கம், ஊர்த்துவ மண்டலி, பக்க மண்டலி, உரோ மண்டலி, உரப்பார்சுவார்த்த மண்டலி, முட்டிகச் சுவத்திகம், நளினீபதும கோசம், அலபதுமம், உற்பணம், இலளிதை, வலிதை யென்பன.

*விலக்குறுப்பு*

விலக்குறுப்பாவன பதினான்கு வகைப்படும். அவை பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம்,

அவிநயம், சொல், சொல் வகை, வண்ணம், வரி, சேதமென விவை. என்னை?

'விலக்குறுப் பென்பது விரிக்குங் காலைப்
பொருளும் யோனியும் விருத்தியுஞ் சந்தியும்
சுவையுஞ் சாதியுங் குறிப்புஞ் சத்துவமும்
அவிநயஞ் சொல்லே சொல்வகை வண்ணமும்
வரியுஞ் சேதமு முளப்படத் தொகைஇ
இசைய வெண்ணி 'னீரே ழுறுப்பே'

என்ருராகலின்.

இவை வேந்து விலக்கு, படை விலக்கு, ஊர்விலக்கு என்றுஞ் சொல்லப்படும். இவ்விலக்குறுப்புக்களைத் தெளிவாகக் காட்டுக்களுடன் விரித்துச் செல்கின்ருர் நல்லார். இவற்றில் சாதி பற்றிய நல்லார் கருத்துக் கிடைக்கவில்லை. நல்லார் விலக்குறுப்புக்கள் பற்றித் தரும் கருத்துக்கள் வருமாறு:

1. பொருள்

பொருள் நான்கு வகைப்படும். என்னை?

'அறம்பொரு ளின்பம் வீடென நான்கும்
திறம்படு பொருளெனச் செப்பினர் புலவர்'

என்ருராகலின்.

இவை நாடகத்திற் பிரிந்தும் கூடியும் வருங்காற் பெயர் வேறுபடும். அவை நாடகம், பிரகரணப் பிரகரணம், கூடிய பிரகரணம், அங்கமெனப் பெயரவாம். என்னை?

'அவைதாம்
நாடகம் பிரகர ணப்பிர கரணம்
ஆடிய பிரகரண மங்க மென்றே
ஓதுப நன்னூ லுணர்ந்திசி னேரே'

என்ருர் மதிவாணனரும்.

'அறமுத ஞன்கு மொன்பான் சுவையு
முறைமுன் ஞடக முன்ஞே ஞகும்'

எனவும்,

'அறம்பொரு ளின்ப மரசர் சாதி'

எனவும்,

'அறம்பொருள் வாணிகர் சாதியென் றறைபு'

எனவும்,

'அறமேற் சூத்திர ரங்க மாகும்'

எனவும் சொன்னுர் செயிற்றியனுர். இவை நான்கும் நாடகமென்றறிக.

**2. யோனி**

யோனி நான்கு வகைப்படும். உள்ளோன் தலைவனுக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் தலைவனுக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், உள்ளோன் தலைவனுக இல்லதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் தலைவனுக இல்லதோர் பொருண்மேற் செய்தலுமென இவை. என்னை?

'உள்ளோற் குள்ளது மில்லோற் குள்ளதும்
உள்ளோற் கில்லது மில்லோற் கில்லதும்
எள்ளா துரைத்தல் யோனி யாகும்'

என்ருராகலின்.

**3. விருத்தி**

விருத்தி நான்கு வகைப்படும். அவை சாத்துவதி, ஆரபடி, கைசிகி, பாரதியென விவை.

இவற்றுள், சாத்துவதியாவது அறம்பொருளாகத் தெய்வ மானிடர் தலைவராக வருவது. ஆரபடியாவது பொருள் பொருளாக வீரராகிய மானிடர் தலைவராக வருவது. கைசிகியாவது காமம் பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவராக வருவது. பாரதியாவது கூத்தன் தலைவனுக நடன் நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது.

இச்சொல்லப் பட்ட நால்வகை விருத்தியுள்ளும் பாரதி விருத்தி, அந்த மூன்று விருத்தியும் போலப் பிறிதின் தலைவர் பிறிது பொருள் பற்றி விருத்தி கூருது பொருளாலே விருத்தி கூறுமெனக் கொள்க.

**4. சந்தி**

சந்தி ஐந்து வகைப்படும். அவை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தலென இவை.

இவற்றுள் முகமாவது எழுவகைப்பட்ட உழவினுற் சமைக்கப் பட்ட பூழியுள் இட்ட வித்துப் பருவஞ்செய்து முளைத்து முடிவது போல்வது. பிரதிமுகமாவது அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலைதோன்றி நாற்ருய் முடிவது போல்வது. கருப்பமாவது அந் நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன்னுட் பொருள் பொதிந்து கருப்ப முற்றி நிற்பது போல்வது. விளைவாவது கருப்ப முதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக் காய் தாழ்ந்து முற்றி

விளைந்து முடிவது போல்வது. துய்த்தலாவது விளையப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலி செய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வது போல்வது. இவை ஐந்து சந்தியும் நாட்டியக் கட்டுரை.

## 5. சுவை

சுவை ஒன்பது வகைப்படும்: அவை வீரச்சுவையவிநயம், பயச்சுவையவிநயம், இழிப்புச்சுவையவிநயம், அற்புதச்சுவை யவிநயம், இன்பச்சுவையவிநயம், அவலச்சுவையவிநயம், நகைச் சுவையவிநயம், நடுநிலைச்சுவையவிநயம், உருத்திரச்சுவையவி நயமென; அவற்றுள்.

### வீரச்சுவையவிநயம்

'வீரச்சுவை யவிநயம் விளம்புங் காலை
முரிந்த புருவமும் சிவந்த கண்ணும்
பிடித்த வாளுங் கடித்த வெயிறும்
மடித்த வுதடுஞ் சுருட்டிய நுதலும்
திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை
எண்ணல் செல்லா விகழ்ச்சியும் பிறவும்
நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே'

### அச்சச்சுவையவிநயம்

'அச்ச வவிநய மாயுங் காலை
ஒடுங்கிய வுடம்பு நடுங்கிய நிலையும்
அலங்கிய கண்ணும் கலங்கிய வுளனும்
கரந்துவர லுடைமையுங் கையெதிர் மறுத்தலும்
பரந்த நோக்கமு மிசைபண் பினவே'

### இழிப்புச்சுவையவிநயம்

'இழிப்பி னவிநய மியம்புங் காலை
இடுங்கிய கண்ணு மெயிறுபுறம் போதலும்
ஒடுங்கிய முகமு முஞற்றுக் காலும்
சோர்ந்த யாக்கையுஞ் சொன்னிரம் பாமையும்
நேர்ந்தன வென்ப நெறியறிந் தோரே'

### அற்புதச்சுவையவிநயம்

'அற்புத வவிநய மறிவரக் கிளப்பிற்
சொற்சோர் வுடையது சோர்ந்த கையது
மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய

தெய்திய திமைத்தலும் விழித்தலு மிகவாதென்
றையமில் புலவ ரறைந்தன ரென்ப'

இன்பச்சுவையவிநயம்

'காம வவிநயங் கருதுங் காலைத்
தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலும்
காரிகை கலந்த கடைக்கணுங் கவின்பெறு
மூரன் முறுவல் சிறுநிலா வரும்பலு
மலர்ந்த முகனு மிரந்தமென் கிளவியும்
கலந்தன பிறவுங் கடைப்பிடித்தனரே'

அவலச்சுவையவிநயம்

'அவலத் தவிநய மறிவரக் கிளப்பிற்
கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும்
வாடிய நீர்மையும் வருந்திய செலவும்
பீடழி யிடும்பையும் பிதற்றிய சொல்லும்
நிறைகை யழிதலு நீர்மையில் கிளவியும்
பொறையின் ருகலும் புணர்த்தினர் புலவர்'

நகைச்சுவையவிநயம்

'நகையி னவிநய நாட்டுங் காலை
மிகைபடு நகையது பிறர்நகை யுடையது
கோட்டிய முகத்தது......
விட்டுமுரி புருவமொடு விலாவிறுப்புடையது
செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென்
றையமில் புலவராய்ந்தன ரென்ப'

நடுவுநிலைச்சுவையவிநயம்

'நாட்டுங் காலை நடுவுநிலை யவிநயம்
கோட்பா டறியாக் கொள்கையு மாட்சியு
மறந்தரு நெஞ்சமு மாறிய விழியும்
பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையும்
குறிப்பின் ருகலுந் துணுக்க மில்லாத்
தகைமிக வுடைமையுந் தண்ணென வுடைமையும்
அளத்தற் கருமையு மன்பொடு புணர்தலும்
கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிர்ப்பும்
விலக்கா ரென்ப வேண்டுமொழிப் புலவர்'

*உருத்திரச்சுவையவிநயம்*

உருத்திரச்சுவை யவிநயம் பற்றிய நூற்பா ஒரு பிரதியிலும் கிடைக்க வில்லை யெனப் பதிப்பாசிரியர் டாக்டர் உ. வே. சா. அவர்கள் குறிப்பிடுகின்றார். இவ்வவிநயம் பற்றித் தண்டி கூறுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

'கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையா வேரா வெகுண்டெ ழுந்தான்'

(தண்டி : 70, மேற்)

மேற்கூறிய ஒன்பது வகைச் சுவையுணர்வு உள்ளத்து நிகழ்ந்த வழித்தோன்றும் உடம்பின் வேறுபாட்டை விறல் என்பார் நல்லார். இதனைச் சத்துவ மென்பாரு முளர். அச்சத்து வந்தான் பத்து வகைப்படும். என்னை? மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வார்தல், நடுக்க மடுத்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு என விவை.

சத்துவமாவது குறிப்பு வரையறை ; ஆவது சுத்தச் சுவை யாகின்ற ஒன்பதினும் பாவிக்கும் அத்துணையே மெய்ம்மைத்தாய் வருவதெனக் கொள்க.

என்னை? வேம்பென்று காட்டப்புக்கால் அவ்வேம்பின் இரதங் காட்டாதே அதுதான் தின்றவனுக்கு மெய்யின்கண் வருவது. கருணை யென்றுற் பாவித்துக் காட்டுவதன்றி மெய்யாகக் கண்ணீர் வந்தழுவது. அல்லாத சுவைகளும் வந்த சத்துவமும் இப்படி ஒட்டிக் கண்டுகொள்க.

அவைதாம் அச்சுவைகளில் எண்ணம் வந்தால் தோற்று முடம்பில் ; உடம்பின் மிகத்தோற்றும் முகத்து ; முகத்தின் மிகத் தோற்றும் கண்ணில் ; கண்ணின் மிகத்தோற்றும் கண்ணின் கடையகத் தென்றவாறு.

இங்ஙனம் ஒன்பான் சுவைகளும் அவை தோன்றுங்கால் உடம்பின்கண் ஏற்படும் வேறுபாடுகளும், இம்மெய்ப்பாடுகள் சிறப்புநிலையில் வெளிப்பட்டுத் தோன்று மிடங்களும் நல்லாரால் தெளிவாக எடுத்துக் காட்டப் படுகின்றன.

*6. சாதி*

*7. குறிப்பு*

குறிப்பாவது சுவையதன் கட்டோன்றுவது.

8. சத்துவம்

சத்துவமாவது அக்குறிப்பின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சி.

9. அவிநயம்

அவிநயமென்றது - பாவகம்; அஃது இருபத்துநான்கு வகைத்து; வரலாறு:

வெகுண்டோனவிநயம், ஐயமுற்றோனவிநயம், சோம்பினோனவிநயம், களித்தோனவிநயம, உவந்தோனவிநயம், அழுக்காறுடையோனவிநயம், இன்பமுற்றோ னவிநயம், தெய்வமுற்றோனவிநயம், ஞஞ்ஞையிற்றோனவிநயம், உடன் பட்டோனவிநயம், உறங்கினோனவிநயம், துயிலுணர்ந்தோன விநயம், செத்தோனவிநயம், மழைபெய்யப்பட்டோன விநயம், பனித்தலைப்பட்டோனவிநயம், வெயிற்றலைப்பட் டோனவிநயம், நாணமுற்றோனவிநயம், வருத்தமுற்றோன விநயம், கண்ணோவுற்றோனவிநயம், தலைநோவுற்றோன விநயம், அழற்றிறம்பட்டோனவிநயம், சீதமுற்றோனவிநயம், வெப்பமுற்றோனவிநயம், நஞ்சுண்டோனவிநயமென விவை. அவற்றுள்,

வெகுண்டோனவிநயம்

'வெகுண்டோ னவிநயம் விளம்புங் காலை
மடித்த வாயு மலர்ந்த மார்பும்
துடித்த புருவமுஞ் சுட்டிய விரலும்
கன்றின வுள்ளமொடு கைபுடைத்திடுதலும்
அன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே'

ஐயமுற்றோனவிநயம்

'பொய்யில் காட்சிப் புலவோ ராய்ந்த
ஐய முற்றோ னவிநய முரைப்பின்
வாடிய வுறுப்பு மயங்கிய நோக்கமும்
பீடழி புலனும் பேசா திருத்தலும்
பிறழ்ந்த செய்கையும் வான்றிசை நோக்கலும்
அறைந்தனர் பிறவு மறிந்திசி னோரே'

சோம்பினோனவிநயம்

மடியி னவிநயம் வகுக்குங் காலை
நொடியொடு பலகொட் டாவிமிகவுடைமையு
மூரி நிமிர்த்தலு முனிவொடு புணர்தலும்
காரண மின்றி யாழ்ந்துமடிந் திருத்தலும்

பிணியு மின்றிச் சோர்ந்த செலவோ
டணிதரு புலவ ராய்ந்தன ரென்ப'

களித்தோனவிநயம்

'களித்தோ னவிநயங் கழறுங் காலை
ஒளித்தவை யொளியா னுரைத்த லின்மையும்
கவிழ்ந்துஞ் சோர்ந்துந் தாழ்ந்துந் தளர்ந்தும்
வீழ்ந்த சொல்லொடு மிழற்றிச் சாய்தலும்
களிகைக் கவர்ந்த கடைக்கணோக்குடைமையும்
பேரிசை யாளர் பேணினர் கொளலே'

உவந்தோனவிநயம்

'உவந்தோ னவிநய முரைக்குங் காலை
நிவந்தினி தாகிய கண்மலருடைமையும்
இனிதி னியன்ற வுள்ள முடைமையும்
முனிவி னகன்ற முறுவன கை யுடைமையும்
இருக்கையுஞ் சேறலுங் கானமும் பிறவும்
ஒருங்குட னமைந்த குறிப்பிற் றன்றே'

அழுக்காறுடையோனவிநயம்

'அழுக்கா றுடையோ னவிநய முரைப்பின்
இழுக்கொடு புணர்ந்த விசைபொரு ளுடைமையும்
கூம்பிய வாயுங் கோடிய வுரையும்
ஓம்பாது விதிர்க்குங் கைவகை யுடைமையும்
ஆரணங் காகிய வெகுளி யுடைமையும்
காரண மின்றி மெலிந்தமுக முடைமையு
மெலிவொடு புணர்ந்த விடும்பையுமேவரப்
பொலியு மென்ப பொருந்துமொழிப் புலவர்'

இன்பமுற்றோனவிநயம்

'இன்பமொடு புணர்ந்தோ னவிநய மியம்பில்
துன்ப நீங்கித் துவர்த்த யாக்கையும்
தயங்கித் தாழ்ந்த பெருமகிழ் வுடைமையு
மயங்கி வந்த செலவுநனி யுடைமையும்
அழகுள் ளுறுத்த சொற்பொலி வுடைமையும்
எழிலொடு புணர்ந்த நறுமல ருடைமையும்
கலங்கள்சேர்ந் தகன்றதோண் மார் புடைமையும்
நலங்கெழு புலவர் நாடின ரென்பு'

தெய்வமுற்ருேனவிநயம்

'தெய்வ முற்ருே னவிநயஞ் செப்பிற்
கைவிட் டெறிந்த கலக்கமுடைமையு
மடித்தெயிறு கெளவிய வாய்த்தொழி லுடைமையுந்
துடித்த புருவமுந் துளங்கிய நிலையுஞ்
செய்ய முகமுஞ் சேர்ந்த செருக்கும்
எய்து மென்ப வியல்புணர்ந் தோரே'

ஞஞ்ஞையுற்ருேனவிநயம்

'ஞஞ்ஞை யுற்ருே னவிநய நாடிற்
பன்மென் றிறுகிய நாவழி வுடைமையும்
நுரைசேர்ந்து கூம்பும் வாயு நோக்கினர்க்
குரைப்போன் போலவுணர்வி லாமையும்
விழிப்போன் போல விழியா திருத்தலும்
விழுத்தக வுடைமையு மொழுக்கி லாமையும்
வயங்கிய திருமுக மழுங்கலும் பிறவும்
மேவிய தென்ப விளங்குமொழிப் புலவர்'

உடன்பட்டோனவிநயம்

'சிந்தையுடம் பட்டோ னவிநயந் தெரியின்
முந்தை யாயினு முணரா நிலைமையும்
பிடித்த கைமே லடைத்தகவினு
முடித்த லுருத கரும நிலைமையும்
சொல்லுவது யாது முணரா நிலைமையும்
புல்லு மென்ப பொருந்துமொழிப் புலவர்'

உறங்கினேனவிநயம்

'துஞ்சா நின்ருே னவிநயந் துணியின்
எஞ்சுத லின்றி யிருபுடை மருங்கு
மலர்ந்துங் கவிழ்ந்தும் வருபடை யியற்றியும்
அலர்ந்துயிர்ப்புடைய வாற்றலு மாகும்'

துயிலுணர்ந்தோனவிநயம்

'இன்றுயி லுணர்ந்தோ னவிநய மியம்பின்
ஒன்றிய குறுங்கொட்டாவியு முயிர்ப்பும்
தூங்கிய முகமுந் துளங்கிய வுடம்பும்
ஓங்கிய திரிபுமொழிந்தவுங் கொளலே'

செத்தோனவிநயம்

'செத்தோ னவிநயஞ் செப்புங் காலை
அந்தக வச்சமு மழிப்பு மாக்கலும்
கடித்த நிரைப்பலின் வெடித்துப் பொடித்துப்
போந்த துணிவுடைமையும் வலித்த வுறுப்பு
மெலிந்த வகடு மென்மைமிக வுடைமையும்
வெண்மணி தோன்றக் கருமணி கரத்தலும்
உண்மையிற் புலவ ருணர்ந்த வாறே'

மழைபெய்யப்பட்டோனவிநயம்

'மழைபெய்யப் பட்டோ னவிநயம் வகுக்கின்
இழிதக வுடைய வியல்புநனி யுடைமையும்
மெய்கூர் நடுக்கமும் பிணித்தலும் படாத்தை
மெய்பூண் டொடுக்கிய முகத்தொடு புணர்த்தலும்
ஒளிப்படு மனனி லுலறிய கண்ணும்
விளியினுந் துளியினு மடிந்தசெவி யுடைமையும்
கொடுகிவிட்டெறிந்த குளிர்மிக வுடைமையும்
நடுங்கு பல்லொலி யுடைமையு முடியக்
கனவுகண் டாற்று னெழுதலு முண்டே'

பனித்தலைப்பட்டோனவிநயம்

'பனித்தலைப் பட்டோ னவிநயம் பகரி
னடுக்க முடைமையு நகைபடு நிலைமையும்
சொற்றளர்ந் திசைத்தலு மற்றமி லவதியும்
போர்வை விழைதலும் புந்திநோ வுடைமையும்
நீரும் விழியுஞ் சேறு முனிதலும்
இன்னவை பிறவு மிசைந்தனர் கொளலே'

வெயிற்றலைப் பட்டோனவிநயம்

'உச்சிப் பொழுதின் வந்தோ னவிநயம்
எச்ச மின்றி யியம்புங் காலைச்
சொரியா நின்ற பெருந்துய ருழந்து
தெரியா நின்ற வுடம்பெரி யென்னச்
சிவந்த கண்ணு மயர்ந்த நோக்கமும்
பயந்த தென்ப பண்புணர்ந் தோரே'

நாணமுற்றோனவிநயம்

'நாண முற்றோ னவிநய நாடின்
இறைஞ்சிய தலையு மறைந்த செய்கையும்

வாடிய முகமுங் கோடிய வுடம்பும்
கெட்ட வொளியுங் கீழ்க்கணேக்கமும்
ஒட்டின ரென்ப வுணர்ந்திசி னேரே’

வருத்தமுற்ருேனவிநயம்

‘வருத்த முற்ருே னவிநயம் வகுப்பிற்
பொருத்த மில்லாப் புன்கணுடைமையும்
சோர்ந்த யாக்கையுஞ் சோர்ந்த முடியும்
கூர்ந்த வியர்வுங் குறும்பல் லுயாவும்
வற்றிய வாயும் வணங்கிய வுறுப்பும்
உற்ற தென்ப வுணர்ந்திசி னேரே’

கண்ணேவுற்ருேனவிநயம்

‘கண்ணே வுற்ருே னவிநயங் காட்டி
னண்ணிய கண்ணீர்த் துளிவிரற் றெறித்தலும்
வளைந்தபுரு வத்தொடு வாடிய முகமும்
வெள்ளிடை நோக்கின் விழிதரு மச்சமும்
தெள்ளிதிற் புலவர் தெளிந்தனர் கொளலே’

தலைநோவுற்ருேனவிநயம்

‘தலைநோ வுற்ருே னவிநயஞ் சாற்றி
னிலைமை யின்றித் தலையாட்டுடைமையும்
கோடிய விருக்கையுந் தளர்ந்த வேரொடு
பெருவிர லிடுக்கிய நுதலும் வருந்தி
ஒடுங்கிய கண்ணொடு பிறவும்
திருந்து மென்ப செந்நெறிப் புலவர்’

அழற்றிறம்பட்டோனவிநயம்

‘அழற்றிறம் பட்டோ னவிநய முரைப்பின்
நிழற்றிறம் வேண்டு நெறிமையின் விருப்பும்
அழலும் வெயிலுஞ் சுடரு மஞ்சலும்
நிழலு நீருஞ் சேறு முவத்தலும்
பனிநீ ருவப்பும் பாதிரித் தொடையலும்
நுனிவிர லீர மருநெறி யாக்கலும்
புக்க துன்பமொடு புலர்ந்த யாக்கையும்
தொக்க தென்ப துணிவறிந் தோரே’

சீதமுற்ருேனவிநயம்

‘சீத முற்ருே னவிநயஞ் செப்பி
னேதிய பருவர லுள்ளமோ டுழத்தலும்

ஈர மாகிய போர்வை யுறுத்தலும்
ஆர வெயிலுழங் தழலும் வேண்டலும்
உரசியு முரன்று முயிர்த்து முரைத்தலும்
தக்கன பிறவுஞ் சாற்றினர் புலவர்'

வெப்பமுற்றோனவிநயம்

'வெப்பி னவிநயம் விரிக்குங் காலைத்
தப்பில் கடைப்பிடித் தன்மையுந் தாகமும்
எரியினன்ன வெம்மையோ டியைவும்
வெருவரு மியக்கமும் வெம்பிய விழியும்
நீருண் வேட்கையு நிரம்பா வலியும்
ஒருங் காலை யுணர்ந்தனர் கொளலே'

நஞ்சுண்டோனவிநயம்

'கொஞ்சிய மொழியிற் கூரெயிறு மடித்தலும்
பஞ்சியின் வாயிற் பனிநுரை கூம்பலும்
தஞ்ச மாந்தர் தம்முக நோக்கியோர்
இன்சொ லியம்புவான் போலியம் பாமையும்
நஞ்சுண் டோன்ற னவிநய மென்ப'

'சொல்லிய வன்றியும் வருவன வுளவெனிற்
புல்லுவழிச் சேர்த்திப் பொருந்துவழிப் புணர்ப்ப'

என வரும்.

இனி, அவிநயம் செய்யுங்கால் அவிநய நிலம் நான்கும், ஏழும் கொள்ளப்படும். அவிநய நிலம் நான்காவன: நிற்றலும், இயங்கலும், இருத்தலும், கிடத்தலு மென்பன. என்னை?

'நிற்ற லியங்க லிருத்தல் கிடத்தலென்
றத்தகு நான்கே யவினயக் களனே'

என்றாராகலின். எழுவகை நிலமாவன : சரிகம பதநி என்னும் எழுவகைப்பட்ட எழுத்தடியாகப் பிறக்கும் குரல் முதலாகிய ஏழும். இதனை ஆற்றுவரி, சாற்றுவரி, திணைநிலைவரி, மயங்குதிணை நிலைவரி, முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரி என ஏழு என்பர் அரும்பதவுரையார்.

10. சொல்

சொல் மூன்று வகைப்படும். உட்சொல், புறச்சொல், ஆகாயச் சொல்லென. அவை நெஞ்சொடு கூறல், கேட்போர்க் குரைத்தல், தானே கூறலென்பன. என்னை?

'நெஞ்சொடு கூறல் கேட்போர்க் குரைத்தல்
தஞ்சம் வரவறிவு தானே கூறலென்
றம்மூன் றென்ப செம்மைச் சொல்லே'

என்றுராகலின்.

## 11, சொல்வகை

சொல்வகை நான்கு வகைப்படும். சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகமென. சுண்ணம் நான்கடியான் வருவது. சுரிதகம் எட்டடியான் வருவது. வண்ணம் நாலுன்கடியான் வருவது. வரிதகம் முப்பத்திரண்டடியான் வருவது. என்னை?

'சுண்ண நான்கடி சுரிதக மெட்டடி
வண்ண நாலுன்கு வரிதக மெண்ணான்கென்
றெண்ணிய வடித்தொகை யெய்தவும் பெறுமே'

என்றுராகலின்.

## 12. வண்ணம்

வண்ணம் ஒருவகையான் மூன்று வகைப்படும். பெரு வண்ணம், இடை வண்ணம், வனப்பு வண்ணமென. அவற்றுள் பெருவண்ணம் ஆறுய் வரும் ; இடை வண்ணம் இருபத்தொன்றுய் வரும் ; வனப்பு வண்ணம் நாற்பத்தொன்றுய் வரும்.

## 13 வரி

வரி எட்டு வகைப்படும். இவ்வரி என்பதனைப் பல்வரிக் கூத்தென்பாரும் உளர். இவற்றின் விரிவு முன்னர் வரிக் கூத்துப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

## 14. சேதம்

சேதம் ஆரியம் தமிழ் என இருவகைத்து. என்னை?

'ஆரியந் தமிழெனுஞ் சீர்நட மிரண்டினும்
ஆதிக் கதையை யவற்றிற் கொப்பச்
சேதித் திடுவது சேதமென் றுகும்'

என்றுராகலின்.

## உரு

'உரு' எனினும் 'பாட்டு' எனினும் ஒக்கும். இது அக நாடகங்களுக்குரியன, புறநாடகங்களுக்குரியன என இரு வகைத்து.

அக நாடகங்களுக்குரிய உருவாவன கந்த முதலாகப் பிரபந்த வுரு ஈருகவுள்ள இருபத்தெட்டும். இவற்றுள் கந்தமென்றது அடி வரையறை யுடைத்தாய் ஒரு தாளத்தாற் புணர்ப்பது. பிரபந்த மென்றது அடிவரையறையின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது.

புற நாடகங்களுக்குரிய உருவாவன தேவபாணி முதலாக அரங்கொழி செய்யுளீருகவுள்ள செந்துறை விகற்பங்களெல்லா மென்க. 'பண்ணல்' முதலிய எட்டு வகைப்பட்ட குறிக்கோளும்,

'இன்பந் தெளிவே நிறையோ டொளியே
வன்சொ லிறுதி மந்த முச்சமென
வந்த வெட்டும் பாடலின் பயனே'

என்று சொல்லப்பட்ட எண்வகைப் பயனுமுடையது பாடல்.

### ஆடல்

அகக் கூத்துக்குரிய ஆடல், புறக்கூத்துக்குரிய ஆடல் என ஆடல் இருவகைத்து.

கீற்று கடிசரி முதலாகிய தேசிக்குரிய கால்களும், சுற்றுதல் எறிதல் உடைத்தல் முதலாகிய வடுகிற்குரிய கால்களும், உடற் றூக்கு முதலாகிய உடலவர்த்தனையும் அகக் கூத்துக்குரியன. இங்குத் தேசிக்குரிய கால்கள், வடுகிற்குரிய கால்கள், உடல வர்த்தனை முதலியன பற்றி நல்லார் விரிக்காது விட்டு விடு கின்றூர். பதிப்பாசிரியர் டாக்டர் உ. வே. சா. இவற்றின் விரி வைச் 'சுத்தானந்தப் பிரகாசம்' என்னும் நூலிலிருந்து எடுத்துத் தருகின்றூர். அவையாவன:

### தேசிக்குரிய கால்கள்-24

கீற்று, கடிசரி, மண்டலம், வர்த்தனை, கரணம், ஆலீடம், குஞ்சிப்பு, கட்டுப்புரியம், களியம், உள்ளாளம், கட்டுதல், கம் பித்தல், ஊர்தல், நடுக்கல், வாங்குதல், அப்புதல், அனுக்குதல், வாசிப்பு, குத்துதல், நெளிதல், மாறுகால், இட்டுப்புகுதல், சுற்றி வாங்குதல், உடற்பிரிவு என்பன.

### வடுகிற்குரிய கால்கள்-14

சுற்றுதல், எறிதல், உடைத்தல், ஒட்டுதல், கட்டுதல், வெட்டுதல், போக்கல், நீக்கல், முறுக்கல், அனுக்கல், வீசல், குடுப்புக்கால், கத்தரி கைக்கால், கூட்டுதல் என்பன.

உடலவர்த்தனை-9

மெய் சாய்த்தல், இடைநெரித்தல், சுழித்தல், அணைத்தல், தூக்குதல், அசைத்தல், பற்றல், விரித்தல், குவித்தலென விவை.

'மெய்சாய் விடைநெரிவு மேற்சுழிவோ டாங்கணைத்தல்
கைதூக் கசைத்தல் கலைபற்றல்-கைகள்
விரித்தல் குவித்தலிவை சிங்களமா மென்று
தெரித்தனர் தண்டமிழோர் தேர்ந்து'

'சிங்கள மிருவகை நிலையினு மெய்தும்'

என்பதனால் ஈண்டுச் சிங்களத்திற்குரிய உடலவர்த்தனை அகக் கூத்திற்குரிய வாயின.

புறக் கூத்துக்குரிய ஆடல்களாவன பெருநடை, சாரியை, பிரமரி இவை முதலாயினவும், பதினோராடலிற் கூத்துக்களுமாம்.

பாணி

பாணியுமென்றது தாளங்களு மென்றவாறு.

'கொட்டு மசையுந் தூக்கு மளவும்
ஒட்டப் புணர்ப்பது பாணியாகும்'

என்றாராகலின்.

இவை மாத்திரைப் பெயர்கள். கொட்டு அரை மாத்திரை. அதற்கு வடிவு க; அசை ஒரு மாத்திரை. அதற்கு வடிவு எ. தூக்கு இரண்டு மாத்திரை; அதற்கு வடிவு உ. அளவு மூன்று மாத்திரை; அதற்கு வடிவு ஃ எனக் கொள்க. என்னை?

'ககரங் கொட்டே யெகர மசையே
உகரந் தூக்கே யளவே யாய்தம்'

என்றாராகலின்.

இவற்றின் தொழில் வருமாறு: கொட்டாவது அமுக்குதல்; அசையாவது தாக்கி யெழுதல்; தூக்காவது தாக்கித் தூக்குதல்; அளவாவது தாக்கின வோசை நேரே மூன்று மாத்திரை பெறு மளவும் வருதலெனக் கொள்க.

இவற்றுள் கொட்டு-கூத்து விகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக் கூறுகளாகும். அவை கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கமென்மன. அவற்றுள் கீதாங்கம் கீதத்துக்கு வாசிப்பது; நிருத்தாங்கம் நிருத்தத்திற்கு வாசிப்பது; உபயாங்கம் இரண்டிற்கும் வாசிப்பது. இதனைக் கீதானுகம், நிருத்தானுகம், உபயானுகம் என்பர் அரும்பதவுரையார்.

இனி அகக் கூத்திற்கும், புறக் கூத்திற்குமுரிய தாளவகைகளும் நல்லாரால் சுட்டப்படுகின்றன. அரை மாத்திரையுடைய ஏகதாள முதலாகப் பதினறு மாத்திரையுடைய பார்வதிலோசன மீருகச் சொன்ன நாற்பத்தொரு தாளமும் புறக்கூத்திற்குரிய; ஆறன் மட்ட மென்பனவும், எட்டன் மட்ட மென்பனவும், தாள வொரிய லென்பனவும், தனிநிலையொரிய லென்பனவும், ஒன்றன் பாணி முதலாக எண்கூத்துப் பாணியீருகக் கிடந்த பதினெரு பாணி விகற்பங்களும், முதனடை வார முதலாயினவும் அகக் கூத்திற்குரிய வென்க.

### தூக்கு

தூக்கு மென்றது இத்தாளங்களின் வழிவரும் செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கெனப்பட்ட ஏழு தூக்குகளுமென்க. என்னை?

> *'ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை*
> *முச்சீர் துணிபு நாற்சீர் கோயில்*
> *ஐஞ்சீர் நிவப்பா மறுசீர் கழாஅலே*
> *எழுசீர் நெடுந்தூக் கென்மனூர் புலவர்'*

என்றுராகலின்.

### அவிநயம் செய்யும் முறை

முற்கூறிய சொல் விகற்பமாகிய உட்சொல், புறச்சொல், ஆகாயச் சொல்லென்னு மூன்றினையும், அவிநயத்தோடே நாட்டிச் செய்யுமிடத்துச் செய்யு முறைமைதான் நான்கு வகைப்படும்; கையும் கருத்தும் மிடறும் சரீரமுமென. என்னை?

> *'அவைதாம்*
> *கையே கருத்தே மிடறே சரீரமென்*
> *றெய்தமுன் பமைத்த விவையென மொழிப'*

என்றுராகலின்.

### கை

அவற்றுட் கைதான் இரண்டு வகைப்படும்; இணையாவினைக் கையும் இணைக்கையுமென. இவை ஒற்றைக்கை இரட்டைக் கையென்றும் வழங்கப்படும்.

இன்னும் (ஒரு சாரார்) ஒற்றைக்கை இரட்டைக்கையென்னு மிவற்றை, இவ்வகையோடும் ஆண்கை, பெண்கை, அலிக்கை,

பொதுக்கை யென்னும் நான்கினையுங்கூட்டி ஆறென்பாருமுளர். என்னை?

'மெய்பெறத் தெரிந்து மேலோ ராய்ந்த
கைவகை தன்னைக் கருதுங் காலை
இணையா வினைக்கை யிணைக்கையென்ன
அணையு மென்ப வறிந்திசி னோரே'

'.. மொழிநரு முளரே'

'இணையா தியல்வ திணையா வினைக்கை
இணைந்துடன் வருவ திணைக்கை யாகும்'

என்று பிறரும் கூறினாராகலின்.

இனி ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கை யென்பதற்குச் சுத்தானந்தப் பிரகாசத்திலிருந்து நான்கு வெண்பாக்களை எடுத்துக் காட்டுகின்றார் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்.

ஆண்கை

'முட்டி சிகர மலர்பதுமஞ் சந்தஞ்சம்
விட்ட சிலந்தி மிகுசூசி-ஒட்டும்
சதுரம் பதாகந் தருதிரிப தாகம்
அதிகமுறு மாண்கை நவமாம்'

பெண்கை

'கடகஞ் சுகதுண்டங் காங்கூல மன்னும்
அடைவாம் பிறைக்கை யராளம்-தடமருவு
மன்னபக்கந் தாம்பிர சூடமொடு மான்றலையே
இன்னவெட்டும் பெண்ணுகு மே'

அலிக்கை

'சர்ப்பசிரம் வண்டு தனிமுகுளங் கத்தரிகை
விற்பனஞ்சேர் கோசங்க வித்தமுடன்-அற்புதமே
ஆகு மலிக்கைக ளாறென் றுரைப்பரே
பாகனைய சொல்லாய் பரிந்து'

பொதுக்கை

'உன்னமா மண்டல...வலம்புரியே
மெய்ந்நிலையாஞ் சங்கிலதை மேம்படவே-மன்னிவரு
தூமமொடு பிண்டியாய்ச் சொன்னார் பொதுக்கையெனத்
தாம முருங்குழலாய் தான்'

இணையாவினைக்கை

இனி அவற்றுள் இணையா வினைக்கை ('பிண்டி') முப்பத்து மூன்று வகைப்படும். அவை; 1. பதாகை 2. திரிபதாகை 3. கத்தரிகை 4. தூபம் 5. அராளம் 6. இளம்பிறை 7. சுகதுண்டம் 8. முட்டி 9. கடகம் 10. சூசி 11. பதுமகோசிகம் 12. காங்கூலம் 13. கபித்தம் 14. விற்பிடி 15. குடங்கை 16. அலாபத்திரம் 17. பிரமரம் 18. தாம்பிரடம் 19. பிசாசம் 20. முகுளம் 21. பிண்டி 22. தெரிநிலை 23. மெய்ந்நிலை 24. உன்னம் 25. மண்டலம் 26. சதுரம் 27. மான்றலை 28. சங்கு 29. வண்டு 30. இலதை 31. கபோதம் 32. மகரமுகம் 33. வலம்புரி என. என்னை?

'இணையா வினைக்கை யியம்புங் காலை
அணைவுறு பதாகை திரிபதா கையே
கத்தரிகை தூபமராள மிளம்பிறை
சுகதுண் டம்மே முட்டி கடகம்
சூசி பதும கோசிகந் துணிந்த
மாசில்காங் கூலம் வழுவறு கபித்தம்
விற்பிடி குடங்கை யலாபத் திரமே
பிரமரந் தன்னொடு தாம்பிரசூடம்
பிசாச முகுளம் பிண்டி தெரிநிலை
பேசிய மெய்ந்நிலை யுன்ன மண்டலம்
சதுர மான்றலை சங்கே வண்டே
அதிர்வி லிலதை கபோத மகர முகம்
வலம்புரி தன்னோடு முப்பத்து மூன்றென்
றிலங்கு மொழிப் புலவ ரிசைத்தன ரென்ப'

என்றுராகலின்.

இவற்றுள், பிண்டியென்றது ஒன்றுய் ஆகுபெயரான் ஒற்றைக் கைக்குப் பெயராயிற்று.

பிணையல் - இணைதலாதலால் இணைக்கை யாயிற்று. ஆதலாற் பிண்டியும் பிணையலு மென்றுரெனக் கொள்க.

பிண்டி அல்லது இணையா வினைக்கை- 33

இவற்றுட் பிண்டிக்குக் காட்டிய முப்பத்து மூன்று வகையினுள்:-

1. பதாகை

பதாகைக் கையாவது நான்குவிரலும் தம்முள் ஒட்டி நிமிரப் பெருவிரல் குஞ்சித்து நிற்பது; என்னை?

'பதாகை யென்பது பகருங் காலைப்
பெருவிரல் குஞ்சித் தலாவிர னான்கு
மருவி நிமிரு மரபிற் றென்ப'

என்றாராகலின்.

இக் கைகளின் தொழில் முதலிய விரிப்பின் உரை பெருகு மாதலின், விடுக்கப்பட்டன; விரிந்த நூல்களிற் கண்டு கொள்க.

2. திரிபதாகை

திரிபதாகையாவது -பதாகைக் கையின் அணிவிரல் முடக்குவது; என்னை?

'திரிப தாகை தெரியுங் காலை
அறைப தாகையி னணிவிரன் முடக்கின.:
தாமென மொழிப வறிந்திசி னோரே'

என்றாராகலின்.

3. கத்தரிகை

கத்தரிகையாவது - திரிபதாகையின் முடங்கிய அணிவிரற் புறத்ததாகிய நடுவிரலைச் சுட்டுவிரலோடு பொருந்த நிமிர்ப்பது; என்னை ?

'கத்தரி கையே காண்டக விரிப்பின்
அத்திரி பதாகையி னணியின் புறத்தைச்
சுட்டக மொட்ட விட்டுநிமிர்ப் பதுவே'

என்றாராகலின்.

4. தூபம்

தூபமென்றது - நிமிர்ந்த நடுவிரலும் சுட்டுவிரலும் பாதிப்பட வளைய நிற்பது; என்னை ?

'தூபமென்பது துணியுங் காலை
விளங்குகத்தரிகை விரலகம் வளைந்து
துளங்கு மென்ப துணிபறிந் தோரே'

என்றாராகலின்.

5. அராளம்

அராளமாவது - பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரல் முடக்கி ஒழிந்த விரன்மூன்றும் நிமிர்ந்து வளைவது; என்னை ?

'அராள மாவ தறிவரக் கிளப்பிற்
பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரன் முடக்கி
விரல்கண் மூன்று நிமிர்த்தகம் வளைத்தற்
குரிய தென்ப வுணர்ந்திசி னோரே'

என்றுராகலின்.

6. இளம்பிறை

'சுட்டும் பேடு மநாமிகை சிறுவிரல்
ஒட்டி யகம் வளைய வொசித்த பெருவிரல்
விட்டு நீங்கும் விதியிற் றென்ப'

7. சுகதுண்டம்

'சுகதுண்ட மென்பது தொழில்பெறக் கிளப்பிற்
சுட்டு விரலும் பெருவிர லுனும்
ஒட்டி யுகிர்நுனை கௌவி முன்வளைந்
தநாமிகை முடங்கப் பெட்டொடு சிறுவிரல்
தான்மிக நிமிர்ந்த தகுதித் தென்ப'

8. முட்டி

'முட்டி யென்பது மொழியுங் காலைச்
சுட்டு நடுவிர லநாமிகை சிறுவிரல்
இறுக முடக்கி யிவற்றின்மிசைப் பெருவிரல்
முறுகப்பிடித்த முறைமைத் தென்ப'

9. கடகம்

'கடகமுகமே கருதுங் காலைப்
பெருவிர னுனியுஞ் சுட்டுவிர னுனியு
மருவ வளைந்தவ் வுகிர்நுனி கௌவி
ஒழிந்த மூன்றும் வழிவழி நிமிர
மொழிந்தன ரென்ப முடிபறிந் தோரே'

10. சூசி

'சூசி யென்பது துணியுங் காலை
நடுவிரல் பெருவிர லென்றிவை தம்மில்
அடைவுட னெற்றிச் சுட்டுவிர னிமிர
ஒழிந்தன வழிவழி முடங்கி நிற்ப
மொழிந்தனர் மாதோ முடிபறிந் தோரே'

11. பதும கோசிகம்

'பதும கோசிகம் பகருங் காலை
ஒப்பக் கைவளைத் தைந்து விரலு
மெய்ப்பட வகன்ற விதியிற் றாகும்'

12. காங்கூலம்

காங்கூலமாவது - மூன்று வகைப்படும்; குவிகாங்கூலம், முகிழ்காங்கூலம், விரிகாங்கூலமெனு; என்னை?

'காங்கூ லம்மே கருதுங் காலைச்
சுட்டும் பேடும் பெருவிரன் மூன்றும்
ஒட்டிமுன் குவிய வநாமிகை முடங்கிச்
சிறுவிர னிமிர்ந்த செய்கைத் தாகும்'

'முகிழ்காங் கூல முந்துற மொழிந்த
குவிகாங் கூலங் குவிவிழந் ததுவே'

'மலர்காங் கூல மதுமலர்ந் ததுவே'

13. கபித்தம்

கபித்தமாவது - சுட்டுவிரனுனியும் பெருவிரனுனியும் உகிர் நுனை கௌவிப் பிடித்து ஒழிந்த மூன்றுவிரலும் மெல்லெனப் பிடிப்பது; என்னை?

'கபித்த மென்பது காணுங் காலைச்
சுட்டுப் பெருவிர லொட்டிநுனி கௌவி
அல்ல மூன்று மெல்லப்பிடிப் பதுவே'

என்றாராகலின்.

14. விற்பிடி

'விற்பிடி யென்பது விரிக்குங் காலைச்
சுட்டொடு பேடி யநாமிகை சிறுவிரல்
ஒட்டி யகப்பால் வளையப் பெருவிரல்
விட்டு நிமிரும் விதியிற் றாகும்'

இதற்குச் சிகரமென்றும் பெயர்.

15. குடங்கை

குடங்கையாவது — எல்லா விரலுங்கூட்டி உட்குழிப்பது; என்னை?

'குடங்கை யென்பது கூறுங்காலை
உடங்குவிரற் கூட்டி யுட்குழிப்பதுவே'

என்றாராகலின்.

16. அலாபத்திரம்

அலாபத்திரமாவது-சிறுவிரன் முதலாகிய வைந்தும் வளைந்து மறிவது; என்னை?

'அலாபத் திரமே யாயுங் காலைப்
புரைமையின் மிகுந்த சிறுவிரன் முதலா
வருமுறை யைந்தும் வளைந்துமறி வதுவே'

என்றாராகலின்.

17. பிரமரம்

பிரமரமாவது – அநாமிகை விரலும் நடுவிரலும் தம்மிற் பொருந்தி வலஞ்சாயப் பெருவிரல் நடுவிரலினுள்ளே சேரச் சுட்டு விரலும் சிறுவிரலும் பின்பே வளைந்து நிற்பது; என்னை?

'பிரமர மென்பது பேணுங் காலை
அநாமிகை நடுவிர லறவுறப் பொருந்தித்
தாம்வலஞ் சாயத் தகைசால் பெருவிரல்
ஒட்டிய நடுவுட் சேரச் சிறுவிரல்
சுட்டு வளைந்துபின் றோன்றிய நிலையே'

என்றாராகலின்.

18. தாம்பிரசூடம்

தாம்பிரசூடமாவது – நடுவிரலும் சுட்டுவிரலும் பெருவிரலும் தம்மில் நுனியொத்துக் கூடி வளைந்து சிறுவிரலும் அணிவிரலும் முடங்கி நிமிர்வது; என்னை?

'தாம்பிர சூடமே சாற்றுங் காலைப்
பேடே சுட்டுப் பெருவிர னுனியொத்துக்
கூடி வளைந்து சிறுவிர லணிவிரல்
உடனதின் முடங்கி நிமிர நிற்பதுவே'

என்றாராகலின்.

19. பசாசம்

பசாசமாவது - பெருவிரலும் சுட்டுவிரலுமன்றி ஒழிந்த மூன்று விரலும் தம்மிற் பொலிந்து நிற்பதெனக் கொள்க.

அப்பசாசந்தான் மூன்று வகைப்படும்; அகநிலைப்பசாசம், முகநிலைப் பசாசம், உகிர்நிலைப் பசாசமென. அவற்றுள்,

அகநிலைப்பசாசம் - சுட்டுவிரல் நுனியிற் பெருவிரல் அகப்படுவது; முகநிலைப்பசாசம் - அவ்விரன்முகங்கூடி உகிர்விட்டு நிற்பது;

உகிர்நிலைப்பசாசம் - சுட்டுவிரலும் பெருவிரலும் உகிர்நிலை கௌவி நிற்பது; என்னை?

'பசாச மென்பது பாற்படக் கிளப்பின்
அகநிலை முகநிலை யுகிர்நிலை யென்னத்
தொகைநிலை பெற்ற மூன்றுமென மொழிப'

'அவைதாம்
சுட்டுவிர னுனியிற் பெருவிர லகப்பட
ஒட்டிவளைத்த தகநிலை முகநிலை
அவ்விர னுனிகள் கௌவிப் பிடித்தல்
செவ்வி தாகுஞ் சிறந்த வுகிர்நிலை
உகிர் நுனை கௌவிய தொழிந்த மூன்றும்
தகைமையி னிமிர்த்தலம் மூன்றற்குந் தகுமே'

என்றாராகலின்.

20. முகுளம்

முகுளமாவது - ஐந்துவிரலும் தம்மில் தலைகுவிந்து நிற்பது; என்னை?

'முகுள மென்பது மொழியுங் காலை
ஐந்து விரலும் தலைகுவிந்தேற்ப
வந்து நிகழு மாட்சித் தாகும்'

என்றாராகலின்.

21. பிண்டி

பிண்டியென்றது - சுட்டுவிரல் பேடிவிரல் அநாமிகை சிறுவிரல், ஒட்டி நெகிழ முடங்க அவற்றின்மேலே குறுக்கிடப் பெருவிரல் கட்டி விலங்கி விரல் வழி முறையொற்றல்; என்னை?

'பிண்டி யென்பது பேசுங் காலைச்
சுட்டுப் பேடி யநாமிகை சிறுவிரல்
ஒட்டி நெகிழ முடங்க வவற்றின்மிசை
விலங்குறப் பெருவிரல் விட்டுங் கட்டியும்
இலங்குவிரல் வழிமுறை யொற்றலு மியல்பே'

என்றாராகலின்,

22. தெரிநிலை

தெரிநிலையாவது - எல்லாவிரலும் விரிந்து குஞ்சித்து நிற்பது; என்னை ?

'தெரிநிலை யென்பது செப்புங்காலை
ஐந்து விரலு மலர்ந்து குஞ்சித்த
கைவகை யென்ப கற்றறிந் தோரே'

என்றாராகலின்.

23. மெய்ந்நிலை

மெய்ந்நிலையாவது - சிறுவிரலும் அணிவிரலும் நடுவிரலும் சுட்டுவிரலும் விட்டு நிமிரச் சுட்டு விரன்மேற் பெருவிரல் சேர வைப்பது; என்னை?

'மெய்ந்நிலை யென்பது விளம்புங் காலைச்
சிறுவிர லநாமிகை பேடொடு சுட்டிவை
உறுத லின்றி நிமிரச் சுட்டின்மிசைப்
பெருவிரல் சேரும் பெற்றித் தென்ப'

என்றாராகலின்.

24. உன்னம்

உன்னமாவது - சிறுவிரலும் பெருவிரலும் தம்முட்கூட ஒழிந்த மூன்று விரலும் விட்டு நிமிர்வது; என்னை?

'உன்ன நிலையே யுணருங் காலைப்
பெருவிரல் சிறுவிர லென்றிவை யிணைய
வருமுறை மூன்று மலர்ந்து நிமிர்வதுவே'

என்றாராகலின்.

25. மண்டலம்

'மண்டல மென்பது மாசறக் கிளப்பிற்
பேடு நுனியும் பெருவிர னுனியும்
கூடி வளைந்துதம் முகிர்நுனை கௌவி
ஒழிந்த மூன்று மொக்க வளைவதென
மொழிந்தன ரென்ப முழுதுணர்ந் தோரே'

என்றாராகலின்.

26. சதுரம்

சதுரமாவது - சுட்டுவிரலும் நடுவிரலும் அணிவிரலும் தம்முட் சேர்ந்து இறைஞ்சப் பெருவிரல் அகம்வர வைத்துச் சிறுவிரல் பின்பே நிமிர்ந்து நிற்பது; என்னை?

'சதுர மென்பது சாற்றுங் காலை
மருவிய மூன்று நிமிர்ந்தகம் வளையப்
பெருவிர லகமுறப் பொற்பச் சேர்த்திச்
சிறுவிரல் பின்பே நிமிர்ந்த செவ்வியின்
இறுமுறைத் தென்ப வியல்புணர்ந் தோரே'

என்றுராகலின்.

27. மான்றலை

மான்றலையாவது-பெருவிரலும் சிறுவிரலு மொழிந்த மூன்றும் தம்மில் ஒத்து ஒன்றி முன்னே இறைஞ்சி நிற்பது; என்னை?

'மான்றலை யென்பது வகுக்குங் காலை
மூன்றிடை விரலு நிமிர்ந்தக மிறைஞ்சிப்
பெருவிரல் சிறுவிர லென்றிவை நிமிர்ந்து
வருவ தென்ப வழக்கறிந் தோரே'

என்றுராகலின்.

28. சங்கு

சங்கமாவது - பெருவிரல் நிமிர ஒழிந்த நான்கு விரலும் வளைந்து நிற்பது; என்னை?

'சங்கெனப் படுவது சாற்றுங் காலைச்
சிறுவிரன் முதலாச் செறிவிர னான்கும்
பெறுமுறை வளையப் பெருவிர னிமிர்ந்தாங்
கிறுமுறைத் தென்ப வியல்புணர்ந் தோரே'

என்றுராகலின்.

29. வண்டு

வண்டாவது - பெருவிரலும் அணிவிரலும் வளைந்து நுனி யொன்றிச் சிறுவிரல் நிமிர்ந்து சுட்டுவிரலும் நடுவிரலும் நெகிழ வளைந்து நிற்பது; என்னை?

'வண்டென் பதுவே வகுக்குங் காலை
அநாமிகை பெருவிர னனிமிக வளைந்து
தாநுனி யொன்றித் தகைசால் சிறுவிரல்
வாலிதி னிமிர மற்றைய வளைந்த
பாலின தென்ப பயன்றெரிந் தோரே'

என்றுராகலின்,

### 30. இலதை

இலதையாவது - நடுவிரலும் சுட்டுவிரலும் கூடிநிமிரப் பெருவிரல் அவற்றின்கீழ் வரைசேர ஒழிந்த இரண்டுவிரலும் வழிமுறை பின்னே நிமிர்ந்து நிற்பது; என்னை?

'இலதை யென்ப தியம்புங் காலைப்
பேடியுஞ் சுட்டும் பிணைந்துட னிமிர்ந்து
கூடிய பெருவிரல் கீழ்வரை குறுகக்
கடையிரு விரலும் பின்னர் நிமிர்ந்த
நடையின தென்ப நன்னெறிப் புலவர்'

என்றுராகலின்.

### 31. கபோதம்

கபோத மென்றது - பதாகைக் கையிற் பெருவிரல் விட்டு நிமிர்வது; என்னை?

'காணுங் காலைக் கபோத மென்பது
பேணிய் பதாகையிற் பெருவிர னிமிரும்'

என்றுராகலின்.

### 32. மகரமுகம்

மகரமுகமாவது - பெருவிரலும் சுட்டுவிரலும் நிமிர்ந்துகூட ஒழிந்த மூன்றுவிரலும் தம்முளொன்றி அதற்கு வேருய் நிற்பது; என்னை?

'மகர முக மென்பது வகுக்குங் காலைச்
சுட்டொடு பெருவிரல் கூட வொழிந்தவை
ஒட்டி நிமிர்ந்தாங் கொன்று வாகும்'

என்றுராகலின்.

### 33. வலம்புரி

வலம்புரியாவது - சிறுவிரலும் பெருவிரலும் நிமிர்ந்து சுட்டுவிரலின் அகம் வளைந்து ஒழிந்த விரண்டும் நிமிர்ந்து இறைஞ்சி நிற்பது; என்னை?

'வலம்புரிக் கையே வாய்ந்த கனிட்டன்
நலந்திகழ் பெருவிர னயமுற நிமிர்ந்து
சுட்டு விரன் முடங்கிச் சிறுவிர னடுவிரல்
விட்டு நிமிர்ந்திறைஞ்சும் விதியிற்றென்று
கூறுவர் தொன்னூற் குறிப்புணர்ந் தோரே'

என்றுராகலின்.

இச் சொல்லப்பட்ட முப்பத்துமூன்றும் பிண்டிக்கையெனக் கொள்க. இணையாவினைக்கை யெனினும் ஒற்றைக்கை யெனினு மொக்கும்.

*பிணையல்*

பிணையலுமென்றது இரட்டைக் கையு மென்றவாறு. அஃதாவது இணைக்கை. அது பதினைந்து வகைப்படும்.

அவையாவன:- அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமான மென்றிவை; என்னை?

*'எஞ்சுத லில்லா விணைக்கை யியம்பில்*
*அஞ்சலிதன்னொடு புட்பாஞ் சலியே*
*பதுமாஞ் சலியே கபோதங் கற்கடகம்*
*நலமாஞ் சுவத்திகங் கடகா வருத்தம்*
*நிடதந் தோரமுற் சங்க மேம்பட*
*உறுபுட் பபுட மகரஞ் சயந்தம்*
*அந்தமில் காட்சி யபய வத்தம்*
*எண்ணிய வருத்தமானந் தன்னொடு*
*பண்ணுங் காலைப் பதினைந் தென்ப'*

என்றாராகலின். அவற்றுள் :-

*1. அஞ்சலி*

அஞ்சலி யென்றது - இரண்டு கையும் பதாகையாய் அகமொன்றுவது; என்னை?

*'அஞ்சலி யென்ப தறிவுறக் கிளப்பின்*
*எஞ்ச லின்றி யிருகையும் பதாகையாய்*
*வந்தகம் பொருந்து மாட்சித் தென்றனர்*
*அந்தமில் காட்சி யறிந்திசி னோரே'*

*2. புட்பாஞ்சலி*

புட்பாஞ்சலியாவது - இரண்டு கையும் குடங்கையாய் வந்து ஒன்றுவது; என்னை?

'புட்பாஞ் சலியே பொருந்தவிரு குடங்கையும்
கட்டி நிற்குங் காட்சிய தென்ப'

என்றாராகலின்.

**3. பதுமாஞ்சலி**

பதுமாஞ்சலியாவது – இருகையும் பதும கோசிகமாகக் கூட்டு வது; என்னை?

'பதுமாஞ் சலியே பதும கோசிகம்
எனவிரு கையு மியைந்து நிற்பதுவே'

என்றுராகலின்.

**4. கபோதம்**

கபோதமென்றது இரண்டு கையும் கபோதமாகக் கூட்டுவது; என்னை?

'கருதுங் காலைக் கபோத விணைக்கை
இருகையுங் கபோத மிசைந்துநிற் பதுவே'

என்றுராகலின்.

**5. கற்கடகம்**

கற்கடகமென்றது - தெரிநிலைக்கை யிரண்டும் அங்குலி பிணைந்து வருவதெனக் கொள்க; என்னை?

'கருதுங் காலைக் கற்கட கம்மே
தெரிநிலை யங்குலி யிருகையும் பிணையும்'

என்றுராகலின்.

**6. சுவத்திகம்**

சுவத்திகமென்றது - மணிக்கட்டிற் பொருந்திய பதாகை யிரண்டையும் மணிக்கட்டி லேற்றி வைப்பது; என்னை?

'சுவத்திக மென்பது சொல்லுங்காலை
மணிக்கட் டமைந்த பதாகை யிரண்டையு
மணிக்கட் டேற்றி வைப்பதாகும்'

என்றுராகலின்.

**7. கடகாவருத்தம்**

கடகாவருத்தமாவது - இரண்டு கையும் கடகமாய் மணிக் கட்டுக்கு ஏற இயைந்து நிற்பது; என்னை?

'கருதிய கடகா வருத்தக் கையே
இருகையுங் கடக மணிக்கட் டியைவது'

என்றுராகலின்.

### 8. நிடதம்

நிடதமாவது – முட்டியாக இரண்டு கையும் சமஞ்செய்வது; என்னை?

'நிடத மென்பது நெறிப்படக் கிளப்பின்
முட்டி யிரண்டுகை யுஞ்சம மாகக்
கட்டி நிற்கும் காட்சித் தென்ப'

என்றாராகலின்.

### 9. தோரம்

தோரமாவது – இரண்டு கையும் பதாகையாக்கி அகம்புற மொன்றி முன்தாழ்ந்து நிற்பது; என்னை?

'தோரமென்பது துணியுங் காலை
இருகையும் பதாகை யகம்புற மொன்ற
மருவிமுன் றாழும் வழக்கிற் றென்ப'

என்றாராகலின்.

### 10. உற்சங்கம்

உற்சங்கமாவது – ஒருகை பிறைக்கையாகக் கொண்டு ஒருகை அராளமாக்கி இரண்டு கையும் மணிக்கட்டில் ஏற்றி வைப்பது; என்னை?

'உற்சங்க மென்ப துணருங் காலை
ஒருகை பிறைக்கை யொருகை யராளம்
தெரிய மணிக்கட்டி லேற்றிவைப் பதுவே'

என்றாராகலின்.

### 11. புட்பபுடம்

புட்பபுடமாவது – குடங்கை யிரண்டும் தம்மிற் பக்கங்காட்டி நிற்பது; என்னை?

'புட்பபுட மென்பது புகலுங் காலை
ஒத்த விரண்டு குடங்கையு மியைந்து
பக்கங் காட்டும் பான்மைத் தென்ப'

என்றாராகலின்.

**12. மகரம்**

மகரமென்றது - கபோதமிரண்டு கையும் அகம்புறமொன்ற வைப்பது; என்னை?

'மகர மென்பது வாய்மையி னுரைப்பிற்
கபோத மிரண்டு கையு மகம்புறம்
ஒன்ற வைப்பதென் றுரைத்தனர் புலவர்'

என்றாராகலின். உச்சித்த மென்பதும் இதனது பெயர்.

**13. சயந்தம்**

சயந்தமென்றது.........

**14. அபயவத்தம்**

அபயவத்தமாவது - இருகையும் சுகதுண்டமாக நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற்பது; என்னை?

'அபயவத் தம்மே யறிவுறக் கிளப்பின்
வஞ்சமில் சுகதுண்ட மிருகையு மாட்சியில்
நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற் பதுவே'

என்றாராகலின்.

**15. வருத்தமானம்**

வருத்தமானமாவது - முகுளக்கையிற் கபோதக்கையை எதிரிட்டுச் சேர்ப்பது; என்னை?

'வருத்த மானம் வகுக்குங் காலை
முகுளக் கையிற் கபோதக் கையை
நிகழச் சேர்த்து நெறியிற் றென்ப'

என்றாராகலின்.

இச்சொல்லப்பட்ட பதினைந்தும் பிணையற்கை யெனக்கொள்க.

இணைக்கை யெனினும் இரட்டைக்கை யெனினும் பிணைய லெனினு மொக்கும்.

பிண்டி, பிணைய லென்னும் இருவகைக் கைகளுடன் எழிற்கை, தொழிற்கை, பொருட்கை யென மூன்றும் அவிநயம் செய்யும் முறையில் குறிப்பிடத்தக்கது. எழிற்கை - அழகுபெறக் காட்டுங் கை; தொழிற்கை - தொழில்பெறக் காட்டுங்கை; பொருட்கை - பொருளுறக் காட்டுங்கை; என்னை?

'அவைதாம்
எழிற்கை யழகே தொழிற்கை தொழிலே
பொருட்கை கவியிற் பொருளா கும்மே'

என்றுராகலின்.

இங்ஙனம் கூறப்பட்ட கையவிநயம் ஐந்தில் பிண்டியும் பிணையலும் புறக்கூத்துக் குரியன. எழிற்கையும் தொழிற்கையும் அகக் கூத்துக் குரியன.

*கூத்து நிகழும் முறை*

அரங்கில் புகுந்து கூத்து நிகழ்த்துங் காலத்துக் கைக்கொள்ள வேண்டிய சில விதிமுறைகளையும் இளங்கோ வழிநின்று விளக்கிச் செல்கின்றுர் நல்லார். அகக்கூத்து நிகழுமிடத்து ஒற்றையிற் செய்த கைத்தொழில் இரட்டையிற் புகாமலும், இரட்டையிற் செய்த கைத்தொழில் ஒற்றையிற் புகாமலும் களைதல்வேண்டும். இன்னும் தேசியிற் கைத்தொழில் மார்க்கத்துப் புகாமலும், மார்க் கத்துக் கைத்தொழில் தேசியிற் புகாமலும் களைதல் வேண்டும். ஆடல் நிகழுமிடத்து அவிநயம் நிகழாமலும், அவிநயம் நிகழு மிடத்து ஆடல் நிகழாமலும் களையவேண்டும். கூத்து நிகழ்த்தும் ஆசான் குரவைக்கூத்திற்குரிய கால்களும் வரிக்கூத்திற்குரிய கால்களும் தம்மில் விரவாத படியே கூத்தை நடத்த வேண்டும்.

இங்ஙனம் ஆடல்களின் வகை, ஆடற்கலை இலக்கணம், ஆடும்முறை முதலான பல்வேறு செய்திகளைப் பற்றி விரிவாகப் பேசிச் செல்கின்றுர் நல்லார். நாடகக்கலையில் நல்லார் பெற்றிருந்த புலமையை இவை தெற்றெனக் காட்டும். அதோடு ஆடரங்கு பற்றியும், கூத்தின் இயல்பு பற்றியும் நல்லாரின் கருத்து விளக்கங் கள் அவர் தம் கலைஞானத்தை மேலும் தெளிவு படுத்துகின்றன.

*ஆடரங்கம்*

ஆடரங்கம் பற்றிய விரிவான செய்தியைத் தருகின்றுர் நல் லார். அரங்கம் அமைக்கத் தகுதியான நிலம், அரங்கம் அளக்கும் கோல், அரங்கத்தின் அளவு, அரங்கவகை, வாயில்கள், திரைச் சீலைகள், விதானம், தலைக்கோலை அரங்கில் வைக்கும்முறை, அரங்கில் புகுந்து நாடகக் கூத்தி ஆடுகின்ற முறை ஆகிய செய்தி களைப் பேசுகின்றுர்.

*இடம்*

அரங்கம் அமைத்துக் கொள்வதற்குரிய தகுதியான இடத்தை முதற்கண் தேர்ந்து கொள்ள வேண்டும். தெய்வத்தானம், பள்ளி,

அந்தணர் இருக்கை, கூபம், குளம், காவு, முதலியன இருக்குமிடங்களில் அரங்கம் அமைத்தலைத் தவிர்க்க வேண்டும். அழியாத இயல்பினையுடைத்தாய் நிறுக்கப்பட்ட குழிப் பூழி குழிக்கொத்துக் கல்லப்பட்ட மண்நாற்றமும் மதுரநாறி இரதமும் மதுரமாகித் தானும் திண்ணிதாய் என்பும் உமியும் பரலும் சேர்ந்த நிலம், களித்தரை உவர்த்தரை, ஈளைத்தரை, பொல்லாச் சாம்பல்தரை, பொடித்தரை என்று சொல்லப்பட்டன ஒழிந்து ஊரின் நடுவணதாகித் தேரோடும் வீதிகளெதிர்முகமாக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

'தந்திரத் தரங்கிங் கியற்றுங் காலை
அறனழித் தியற்ரு வழகுடைத் தாகி
நிறைகுழிப் பூழி குழிநிறை வாற்றி
நாற்றமுஞ் சுவையு மதுரமு மாய்க்கனம்
தோற்றிய திண்மைச் சுவட துடைத்தாய்
என்புமி கூர்ங்கல் களியுவ ரீளை
துன்ப நீறு துகளிவை யின்றி
ஊரகத் தாகி யுளைமான் பூண்ட
தேரகத் தோடுந் தெருவுமுக நோக்கிக்
கோடல் வேண்டு மாடரங் கதுவே'

நிலம் வன்பால், மென்பால், இடைப்பாலென்று மூன்று வகைப்படும். அவற்றுள் வன்பாலாவது குழியின் மண் மிகுவது ; மென்பாலாவது குறைவது; இடைப்பாலாவது ஒப்பு;ஈண்டு இவை பெரும்பான்மையாற் கொள்ளப்படும்.

துவர்ப்புப் பயமும், புளிப்பு நோயும், காழ்ப்புப் பசிநீடுதலும், கைப்புக் கேடும், உவர்ப்புக் கலக்கமும் பண்ணு மாதலான் நீக்கப்பட்டன. என்னை?

'உவர்ப்பிற் கலக்கமாங் கைப்பின் வருங் கேடு
துவர்ப்பிற் பயமாஞ் சுவைகள்-அவற்றிற்
புளிநோய் பசிகாழ்ப்புப் பூங்கொடியே தித்திப்
பளிபெருகு மாவ தரங்கு'

என்ருர் பரத சேனபதியார்.

இதனுள் நாற்றமென்பன கொள்ளிலையும் செந்நெல்லும் சண்பகமும் சுரபுன்னையுமென விவை. ஒழிந்தன தீமைப்பால. இங்ஙனம் அரங்கிற்கு நிலம் வகுத்துக் கொள்வதைப் பற்றிப் பேசுகின்ருர் நல்லார்.

**அரங்கம் அளக்கும் கோல்**

அரங்கிற்குரிய நிலம் வகுத்துக் கொள்வதை விரித்த நல்லார் அடுத்து அரங்கம் அளக்கும் கோலின் தன்மைகளையும் விவரிக்கின்றார். பொதியின்மலை முதலாய புண்ணிய வரைப் பக்கங்களிலே நெடிதாகி உயர வளர்ந்த மூங்கிலிற் கண்ணொடு கண்ணிடை ஒரு சாணுக வளர்ந்தது கொண்டு நூல்களிற் சொல்லுகின்றபடியே அரங்கஞ்செய்ய அளக்குங்கோல் உத்தமன் கைப்பெருவிரலில் இருபத்து நாலு கொண்டது ஒரு கோல் என்க. என்னை?

**'ஒத்த வணுமுத லுயர்ந்துவரு கணக்கின்**
**உத்தமன் பெருவிர லிருபத்து நாலுள**
**கோலே கோடல் குறியறிந் தோரே'**

என்றுராகலின்

இதனுள் அணுமுதற் பெருவிரலளவு உயர்ந்து வருமாறு: அணு எட்டுக் கொண்டது தேர்த்துகள்; தேர்த்துகள் எட்டுக்கொண்டது இம்மி; இம்மி எட்டுக்கொண்டது எள்ளு; எள்ளு எட்டுக்கொண்டது நெல்லு; நெல்லு எட்டுக் கொண்டது பெருவிரலெனக் கொள்க. உத்தமராவார் கழிய நெடுமையும் கழியக் குறுமையு மில்லோர்.

**அரங்க அளவு**

இக்கோலால் எழுகோல் அகலமும் எண்கோல் நீளமும் ஒரு கோற் குறட்டுயரமும் உடையது அரங்கம். என்னை?

**'அக்கோ லேழகன் றெட்டு நீண்டும்**
**ஒப்பா லுயர்வு மொருகோ லாகும்**
**நாற்கோல் வேந்த னயக்குறு வாயில்**
**முக்கோ ருனு முயரவு முரித்தே'**

என்றுர் செயிற்றியனுர்.

**'அக்கோ லொருகோ லளவுறக் கல்வி**
**மிக்க கம்மியர் வடகலை விதிமுறைக்**
**கூறின ரன்றியுங் குறிவகைக் கேற்றனை**
**ஏற்கச் செய்க வியல்புணர்ந் தோரே'**

எனக் கூறினரு முளர்.

**அரங்க அமைப்பு**

தூணத்துக்கு மீது வைத்த உத்தரப் பலகைக்கும் அரங்கினிடத்து அகலத்துக் கிடப்பட்ட பலகைக்கும் இடைநின்ற

நிலம் நான்கு கோலாக உயரங்கொண்டு இத்தன்மையவாய அளவுக்குப் பொருந்த வகுத்த வாயில் இரண்டினை யுடைத்தாக அரங்கம் செய்யப்படும். மேலும் கரந்து போக்கிடம், கண்ணுளர் குடினைப் பள்ளி, அரங்கம், அதனெதிர் மன்னர் மாந்தரோடிருக்கும் அவையரங்கம், இவற்றினைச் சூழ்ந்த புவிநிறை மாந்தர் பொருந்திய கோட்டியாகியன அமைக்கப் பட்டிருக்கும்.

*விதானம்*

அந்தணர், அரசர், வணிகர், சூத்திரரென்று சொல்லப்பட்ட நால்வகை வருணப் பூதரை எழுதி மேனிலத்தே யாவரும் புகழ்ந்து வணங்க வைப்பர்.

*விளக்கு*

தூண்களின் நிழல் நாயகப் பத்தியின் கண்ணும் அவையின் கண்ணும் படாதபடி மாட்சிமைப்பட்ட நிலை விளக்குகள் நிறுத்தப்படும். என்னை?

'விளக்கியல் வனப்பும்'

என்றாராகலின்.

*திரை*

இடத்தூணிலை யிடத்தே உருவுதிரையாக ஒருமுக வெழினியும், இரண்டு வலத்தூணிடத்தும் உருவுதிரையாகப் பொருமுக வெழினியும், மேற்கட்டுத் திரையாகக் கரந்து வரலெழினியும் செயற் பாட்டுடனே வகுக்கப்படும்.

மேற்கட்டுத் திரையாய் நிற்பது ஆகாய சாரிகளாய்த் தோன்றுவார்க்கெனக் கொள்க. என்னை?

'முன்னிய வெழினிதான் மூன்று வகைப்படும்'

என்றார் மதிவாணனார்.

'அரிதரங்கிற்
செய்தெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற் பூதரையும்
எய்த வெழுதி யியற்று'

என்றார் பரத சேனாபதியாரும்.

இங்ஙனம் நாடக அரங்கு அமைக்கும் முறைமை பற்றிப் பேசுகின்றார் நல்லார்,

தலைக்கோல்

தலைக்கோல் இரண்டு வகையான் கொள்ளப்படும். ஒன்று மாற்றரசரைப் பகைப்புறத்துப் பொருதழித்து அவர் புறங் கொடுத்த வழிப் பெற்ற அழகிய இயல்பையுடைய வெண்கொற்றக் குடைக்காம்பைத் தலைக்கோலாகக் கொள்வது. இது வேத்தியலுக் குரியது. மற்றது மாற்றார் எயிற்புறத்து மிளைக்கண் வெட்டிக் கொண்ட மூங்கிலால் இயற்றுவது. இம்முறையில் கொள்ளப் படும் தலைக்கோல் பொதுவியலுக்குரியது. என்னை?

'புண்ணியமால் வெற்பிற் பொருந்துங் கழைகொண்டு
கண்ணிடைக் கண்சாண் கனஞ்சாரும்-எண்ணிய
நீளமெழு சாண்கொண்டு நீராட்டி நன்மைபுனை
நாளிற் றலைக்கோலை நாட்டு'

'ஆவ தகத்தியனார் சாபத்தா னுன்மூங்கில்'

என்றார் பரத சேனாபதியார்.

இத்தலைக்கோலை இந்திரன் மகன் சயந்தனாக நினைத்து மந்திர விதியாலே பூசித்து வழிபடுவர். நாடகக் கணிகை தலைக்கோல் கொள்ளும் ஞான்று ஆடலாசிரியன் முதலாயினோர் அரங்கத்தின் கண்ணே இத்தலைக்கோலை வைத்துப் புண்ணிய நதிகளின் நீரைப் பொற்குடத்திலே முகந்து வந்து நீராட்டி மாலை சூட்டுவர். பின்னர் இத்தலைக்கோலைப் பொன்னாற் செய்த பூணையும் பட்டத் திணையுமுடைய பட்ட வருத்தனத்தின் கையிலே வாழ்த்துடன் கொடுத்து, வீரமுரசு முதலான மும்முரசுகளும் வாச்சியங்களும் முழங்க அரசனும் அமாத்தியர் புரோகிதர் சேனாபதித் தொடக்கத் தாருங் கூட வீதியின்கண் நின்ற தேரினை இந்த யானையோடும் உடன் கொண்டு வலஞ்செய்து தேர்மிசை நின்ற கவியின் கையிலே இத்தலைக்கோலைக் கொடுப்ப அவர் ஊரை வலமாக வந்து அரங் கத்தின்கண் புகுந்து தலைக்கோலை எதிர்முகமாக வைப்பர். என்னை?

'பிணியுங் கோளு நீங்கிய நாளால்
அணியுங் கவினு மாசற வியற்றித்
தீதுதீர் மரபிற் றீர்த்த நீரான்
மாசது தீர மண்ணுநீ ராட்டித்
தொடலையு மாலையும் படலையுஞ் சூட்டிப்
பிண்ட முன்னும் பெருங்களிற்றுத் தடக்கைமிசைக்
கொண்டு சென்றுநீஇக் கொடிபெடுத் தார்த்து
முரசு முருடு முன்முன் முழங்க

அரசு முதலான ஐம்பெருங் குழுவும்
தேர்வலஞ் செய்து கவிகைக் கொடுப்ப
ஊர்வலஞ் செய்து புகுந்த பின்றைத்
தலைக்கோல் கோட றக்க தென்ப'

என்றார் செயற்றியனார்.

*அரங்கிற்புகுந்து ஆடுகின்ற வியல்பு*

நாடகக் கணிகை மாதவி அரங்கிற் புகுந்து ஆடும் இயல்பினை அடிகள் வழிநின்று விளக்குகின்றார் நல்லார். நாடகக் கணிகை ஐயாண்டில் தண்டியம் பிடித்து ஏழாண்டு இயற்றுவித்துப் பன்னீராண்டில் அரசன் முன்னிலையில் அரங்கேறல் மரபு. இதனைப் பரத சேனாபதி யாரிலிருந்து எடுத்துக்காட்டுத்தந்து விளக்குகின்றார் நல்லார்.

'பண்ணியம்வைத் தானைமுகன் பாதம் பணிந்துநாட்
புண்ணிய வோரை புகன்றனகொண்-டெண்ணியே
வண்டிருக்குங் கூந்தன் மடவரலை யையாண்டில்
தண்டியஞ்சேர் விப்பதே சால்பு'

எனவும்,

'வட்டணையுந் தூசியு மண்டலமும் பண்ணமைய
எட்டுட னீரிரண்டாண் டெய்தியபின்-கட்டளைய
கீதக் குறிப்பு மலங்கார முங்கிளரச்
சோதித் தரங்கேறச் சூழ்'

எனவும்,

'நன்னர் விருப்புடையோ ணற்குணமு மிக்குயர்ந்தோள்
சொன்னகுலத் தாலமைந்த தொன்மையளாய்ப்-பன்னிரண்டாண்
டேய்ந்ததற்பி னுடலுடன் பாடலழ கிம்மூன்றும்
வாய்ந்தவரங் கேற்றல் வழக்கு'

எனவும் கூறினார் பரதசேனாபதியார் எனக் காட்டுவர் நல்லார்.

மாதவி அரங்கேற்றம் தொடங்குமுன் அரசன் முதலியோர் யாவரும் வரிசைக்கேற்ற இருக்கை முறைமைகளிலே இருந்தனர்.

'ஆடிட முக்கோ லாட்டுவார்க் கொருகோல்
பாடுநர்க் கொருகோ லந்தர மொருகோல்
குயிலுவர் நிலையிட மொருகோல்'

என்று நூலிற் கூறின முறைமையால் குயிலுவக் கருவியாளர் தாம் நிற்கக்கடவ முறைமைகளில் நின்றனர். நாடகக் கணிகையாகிய அரங்கேறுகின்ற மாதவி அரங்கத்திலே வலக்கால் முற்பட விட்டேறிப் பொருமுக வெழினிக்கு நிலையிடனுன வலப்பக்கத் தூணிடத்தே சேர்தல் வழக்காதலின் அவ்விடத்தில் சேர்ந்தாள்.

'இந்நெறி வகையா லிடத்தூண் சேர்வோள்
தொன்னெறி மரபிற் ரேரிய மகளே'

எனவும்,

'தலைக்கோ லரிவை குணத்தொடு பொருந்தி
நலத்தகு பாடலு மாடலு மிக்கோள்
சொல்லப்படு கோதைத் தோரிய மகளே'

எனவும் சொன்னாராகலின் தோரிய மடந்தையர் மாதவி வந்தேறி நின்றபடியே இடத்தூண் நிலையிடமாகிய ஒருமுக வெழினியிடம் பற்றி நின்றனர். நன்மையுண்டாகவும் தீமை நீங்கவும் ஓரொற்று வாரம் ஈரொற்று வாரமென்னும் வாரப்பாடல் பாடப்பட, இசைக் கருவிகளெல்லாம் ஒருங்கு நின்றிசைப்பப் பஞ்சதாளப் பிரபந்த மாகக் கட்டப்பட்ட தேசியொத்தை ஒரு தாளத்திற்கு இரண்டு பற்ருகப் பத்தும் தீர்வு ஒன்றுமாகப் பதினெரு பற்ருலே தேசிக் கூத்தை ஆடிமுடிக்கின்ருள். பின் மார்க்கக்கூத்து, நாட்டிய மென் னும் புற நடம் ஆகியவற்றை நூல்கள் சொன்ன முறைமை வழு வாமல் அவிநயித்துப் பாவகம் தோன்ற விலக்குறுப்புப் பதினுலின் நெறி வழுவாமல் ஆடிக் காட்டுகின்ருள். இங்ஙனம் அரங்கிற் புகுந்து ஆடும் தலைக்கோல் அரிவை மாதவியின் நாட்டிய அரங் கேற்றம் விவரிக்கப் படுகின்றது.

இங்ஙனம் பல்வேறு வகையான கூத்துக்கள், அவற்றின் இயல்புகள், அவற்றை ஆடுகின்றபோது கைக்கொள்ள வேண்டிய விதிமுறைகள், அரங்கத்தின் இயல்பு, அரங்கில் புகுந்து ஆடும் இயல்பு, ஆடும் கூத்தியர் இயல்பு ஆகிய பல்வேறு கூறுகளைப் பற்றி நல்லார் விவரித்துச் செல்கின்ருர். இவை அவரின் பரந்து பட்ட கூத்தியல் அறிவைக் காட்டுகின்றது.

# பிறதுறைப் புலமை

முத்தமிழ் வித்தகர் அடியார்க்கு நல்லார் பல்துறைப் புலமை மிக்கா ரென்பது முன்னர்ச் சுட்டப்பட்டது. அவரின் இலக்கிய, இலக்கண, இசை, நாடகப்புலமை முற்கட்டுரைகளில் நோக்கப் பட்டது. இவை தவிர வேறு பல துறைகளிலும் நல்லார் ஒப்பற்ற கலைஞராக மிளிர்கின்றார். தம்முடைய காப்பியக் கொள்கையினைப் பதிகவுரையில் தெளிவு படுத்துகின்றார். அன்றியும் ஐந்திணை, உடற்கூற்றமைப்பு, பழங்கதை, சங்கங்களும் பழந்தமிழகமும், அணிகல வகை, கணுநூல், களவுநூல், சமயத்தத்துவக் கொள்கை, தொழில் வகை முதலான பல்வேறு துறைகளிலும் நல்லார் நன்கு பயிற்சி பெற்றிருந்தாரென்பது ஆங்காங்கே அவர்தம் உரை வாயிலாக வெளிப்படுகிறது. மேற்கண்ட துறைகளில் நல்லாரின் புலமைத்திறன் வெளிப்பட்டுத் தோன்றுகின்ற சில பகுதிகள் இங்கு நோக்கப் படுகின்றன.

### 1. காப்பியக் கொள்கை

சிலப்பதிகாரம் ஒரு தொடர்நிலைச் செய்யுள் என்பது அடியார்க்கு நல்லார் கொள்கை. இதனைத் தம் உரைப்பாயிரத் தொடக்க வரியிலேயே தெளிவு படுத்துகின்றார்.

'இவ்வியலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற் றமிழ்நூல் தொல்காப்பிய

மாதலானும், பிறர் கூறிய நூல்கள் நிரம்பா இலக்கணத்தன வாத லானும் அந்நூலின் முடிபே இதற்கு முடிபென்றுணர்க. அந்நூலிற் செய்யுளியலின் கண்ணே ஆசிரியர் பாவும் இனமுமென நான்கி னீக்கிய பாவினைத் தொகைவரையறையான் இரண்டென அடக்கி யும், விரிவரையறையான் ஆறென விரித்தும், அவற்றை அறம் பொருளின்பத்தாற் கூறுக வென்றுங் கூறிப் பின்பு அம்மை முதலிய எட்டு வனப்பும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கண மென்று கூறியவர்,

> 'இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
> பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினும்'
>
> (தொல்.செய்:239)

என்பதனால், குவிந்து மெல்லென்ற சொல்லானும் பரந்து வல் லென்ற சொல்லானும் அறம்பொருளின்பம் பயப்ப வீடென்னும் விழுமிய பொருள் பயப்ப ஒருகதைமேற் கொச்சகத்தானும் ஆசிரியத் தானும் வெண்பா வெண்கலிப்பாவானும் மற்றும் இன்னோரன்ன செய்யுட்களானும் கூறுக வென்றமையான், இத் தொடர்நிலைச் செய்யுள் அங்ஙனங் கூறிய தொடர்நிலையென வுணர்க'[1]

இதனால் சிலப்பதிகாரம் 'தோல்' என்னும் வகையில் அடங்கும் தொடர்நிலைச் செய்யுள் என்பது போதரும். இதனைப் பிறிதொரு இடத்தும் நல்லார் சுட்டுகிறார். 'இக் காப்பியத்திற்கும் தோலென்பது ஒரு சொல்லலங்காரமாகவே யுணர்க'[2] எனக் குறிப்பிடுகின்றார்.

இனி, இத் தொடர்நிலைச் செய்யுட்களுக்குக் காப்பியம் என்ற சொல் பொருந்தும் என்றும் நல்லார் தம் உரையில் குறிப்பிடுகிறார். 'முந்து நூல்களிற் காப்பியமென்னும் வடமொழிப்பெயர் இன்றேனும், சொற்றொடர்நிலை பொருட்டொடர்நிலை யென்னும் தொடர்நிலைச் செய்யுட்கும் காப்பியமென்று பெயர் கூறுதலும் ஆசிரியர் (தொல்காப்பியர்) கருத்தென வுணர்க'[3] எனத் தம் எண்ணத்தை வெளியிடுகின்றார்.

காப்பியம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள் பயக்க வேண்டு மென்பது நல்லாரின் காப்பியக் கொள்கையாக அறியக் கிடக்கின்றது. அவர் கருத்துப்படி சிலப்பதிகாரம் அறம் பொருள் இன்பமாகிய முப்பொருட் பாகுபாட்டை மட்டுமே கொண் டது என்றும், எனவே சிலப்பதிகாரம் ஒரு பெருங்காப்பியம் அல்ல

---

1. சிலப். உரைப்பாயிரம், பக்: 6.
2. ,, பக்: 9.
3. ,, பக்: 6-8.

வென்பதும் தெரிய வருகிறது. மேலும் மணிமேகலை அறமும் வீடும் பயப்பச் செய்யப்பட்ட காப்பியமென்றும், இவ்விரண்டனையும் இணைக்க ஒரு பெருங்காப்பியம் ஆகும் என்றும் குறிப்பிடுகிறார் நல்லார். இதனை விரிவாகத் தம் உரைச்சிறப்புப் பாயிரத்தில் விவரித்துச் செல்கிறார்.

'உலகத்துக் காப்பியஞ் செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடும் கூறல் வேண்டுமன்றே; இந்நாடகக் காப்பியத் தினுள் அறனும் பொருளும் இன்பமும் கூறிச் சிறிதாயினும் வீடு கூறிற்றிலர்; என்னையெனின், 'யானறிகுவனது பட்டதென்று' (பதி:11) உரைத்த சாத்தனார் நாற்பொருளும் பயப்பப் பெருங் காப்பியமாகச் செய்யக் கருதி யிருக்கின்றார்க்கு அடிகள், 'நாட் டுதும் யாமோர் பாட்டுடைச்செய்யுள்' (பதி:60) என உளப்பாட்டுத் தன்மையாற் கூறிச் சாத்தனார் இவர் ஏனையிரு வேந்தரையும் புகழ்ந்துரையார் என்பது கருதி மூவேந்தர்க்கும் உரியதாகலின், 'நீரே யருளுக' (பதி:62) என்று ஏகாரவினைப் பொருண்மையான் அவர் கருத்து நிகழ்ச்சி விளங்குவான் கூற, அவர் அதனையே துணிந்து தமது முத்தமிழ்க் கல்வியும் வித்தகக் கவியும் காட்டு தற்குத் தாம் வகுத்துக் கொண்ட மூவகை உள்ளுறையின் வினைவு தோன்ற, மங்கல வாழ்த்துப் பாடல் முதல் வரந்தருகாதை யிறுதி முப்பது வகைத்தாக வரையறுத்து, அதனை அதிகாரமாகப் பொதிந்து முன்வைத்துப் பின்னர், அறனும் பொருளும் இன்பமும் கூறி அடைக்கலக்காதை இறுதிக்கண், 'போதியறவோன் ... யளிப்பவும்' (103-4) எனக் கோவலன் முன்கண்ட கனவின்கண் நிகழ்ந்ததை எதிர்கால நிமித்தமாக மாடலற்குக் கூறுதலானும் நீர்ப்படையுள், 'மாதவி... போதித் தானம் புரிந்தறங்கொள்ளவும்' (103-8) என்றலானும், வாழ்த்தின்கண், 'மாதவி தன்துறவுங் கேட்டாயோ தோழீ, மணிமேகலை துறவுங் கேட்டாயோ தோழீ' (அடித்தோழி யரற்று) எனத் தேவந்தி கூறுதலானும், வரந்தரு காதையில், 'மணிமே கலையார், யாதவ டுறத்தற் கேதுவீங் குரை' (4-5) என 'மையீ ரோதி, (10) முதல் 'போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்' (28) என்பதீருகப் பக்குவஞ் சொல்லி, 'பருவ மன்றியும் பைந்தொடி நங்கை, திருவிழை கோல நீங்கினள்' (35-36) என்றமையானும் மணிமேகலை துறந்தா ளென்பது உணர்ந்து அத்துறவினைப் பின்வைத்து அதனொடு நாற்பொருளும் பூரித்துப் பெருங்காப்பிய மாக முடித்தலைக் கருதி அடிகள் சாத்தனார்க்கு இவ்வுரையை உரைத்துழி, அவர் மணிமேகலை பெயரான் அவள் துறவே துறவாக அறனும் வீடும் பயப்ப ஒருகாப்பியம் செய்தமைத்தன மெனக் கேட்டு, அவ்வடிகள் விரும்பி

இவ்விரண்டினையும் ஒரு காப்பியமாக்கி உலகின்கண் நடாத்து வான் வேண்டவும் இருவர் செய்தலின் இரண்டாகி நடந்தன வென்க'[1]

**2. ஐந்திணை**

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை யென்பன தமிழில் அமையும் ஐந்திணைப் பாகுபாடுகள். இவற்றில் பாலைக்குத் தனி யாக நிலம் கிடையாது. 'முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து' பாலையாகுமென்பர் அடிகள்.[2] இவை ஒவ்வொன்றிற்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூவகைப் பொருட் கூறுகள் அமையும். அடியார்க்கு நல்லார் தம்பதிகவுரை யில் எண்வகைப் பொருளாராய்ச்சி பற்றிக் கூறும்போது அவற்றில் ஒன்றான நிலப் பாகுபாடுகளை மிகத் தெளிவாக விளக்குகின்றார். இவ் ஐவகை நிலங்கட்குமுரிய முதல், கரு, உரிப் பொருட்களைக் குறிப்பிட்டு அவற்றிற்குச் சிலம்பிலிருந்தே எடுத்துக் காட்டுத் தரு கின்றார். இது நல்லார் சிலப்பதிகாரக் காப்பியத்துள் எத்துணை ஈடுபாடும் பயிற்சியும் கொண்டுள்ளார் என்பதைத் தெரிவிக்கும்' மேலும் அடிகள் சங்க இலக்கிய மரபைப் பின்பற்றி ஐந்திணைக்கும் இலக்காகத் தம் காப்பியத்தைப் படைத்தளித்த பெற்றியும் இவ் வாற்றான் பெறப்படும். இங்கு அகத்திணைப் பகுதி பற்றி நல்லார் கூறுவன வருமாறு :

'இனிப் பொருளாராய்ச்சி எண்வகைய : அவை திணை, பால், செய்யுள், நிலம், காலம், வழு, வழக்கு, இடமென்பன. அவற்றுள், திணை இரண்டு: ஆவன - அகத்திணை புறத்திணை யென்பன. பால் பதினான்கு ; ஆவன - கைக்கிளை முதல் பெருந் திணையிறுவாய் ஏழும், வெட்சி முதல் பாடாண்டிணை இறுவாய் ஏழும். செய்யுள் அறுவகை ; ஆவன - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடற்பா, மருட்பா வென்பன. காலம் பன்னிரண்டு; ஆவன - சிறுபொழுதாறும் பெரும் பொழுதாறும். வழு பதினான்கு ; ஆவன - அகத்திணை வழுவேழும், புறத்திணை வழுவேழும். வழக்கு இருவகை ; ஆவன - நாடக வழக்கும், உல கியல் வழக்கு மென்பன. இடம் இருவகை; ஆவன-வழக்கிடமும், செய்யுளிடமும்.

இவற்றுள் நிறுத்த முறையானே அகத்திணைப் பொருட்பகுதி முதலியன இப் பதிகச் செய்யுளுள் முடியாமையின், அவை முடியுமிடங் கூறுதற்கு, ஆசிரியர் அகப்பொருட் பகுதி கூறுவார்,

---

1. சிலப். உரைப்பாயிரம், பக்: 10-11.
2. சிலப். ,, 11:64 66.

'மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'

(தொல். அகத்: 5)

என முல்லைத்திணையை முதலாக நாட்டுதலின் அம்முறையே அகத்திணைப் பொருட் பகுதி முடியுமிடம் ஈண்டு எடுத்துக் காட்டப் படும்.

முல்லை

'முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப வியல்புணர்ந் தோரே'

(தொல். அகத்: 4)

என்பதனால், முதற்பொருள் இருவகைப்படும். முல்லைத் திணை நிலமுதற் பொருள்; 'காரும் மாலையு முல்லை' (தொல். அகத்: 6) என்பதனால் அத்திணைக்குரிய பெரும்பொழுதும் சிறு பொழுதும் கொள்ளப்படும். பெரும் பொழுது : 'காரோ வந்தது' (26:118) என்பதனாற் காரும், சிறுபொழுது : 'மாலை நீயாயின்' (7: 'பையுணோய்') என்பதனால் மாலையும் கூறினர். கருப்பொருள்,

'தெய்வ முணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப'

(தொல். அகத்: 18)

என்பதனா லுணர்க. இந்நிலத்திற்குக் கருப்பொருள்: 'கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்' (17: 'கன்று') என்பதனால் தெய்வமும், 'அளைவிலை யுணவின்' (16:3) என்பதனால் உணவும், 'நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்' (11:78) என்பதனால் மாவும், 'கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தான்' (17: 'செந்நிலை') என்பதனால் மரமும், 'கான வாரணங் கதிர்வர வியம்ப' (13:37) என்பதனாற் புள்ளும், 'ஏறங் கோட்பறை' என்பதனாற் பறையும், 'கோகுல மேய்த்து' (17: 'கோவா') என்பதனாற் செய்தியும், 'குடமுதல் .....வேண்டிய பெயரே' (17:'குடமுத') என்பதனால் முல்லையாழும், பண்: 'முல்லைத் தீம் பாணி யென்ருள்' (17:'செந்நிலை') என்பதனாற் சாதாரியும் கூறினர்.

உரிப்பொருள்

'புணர்தல் பிரித லிருத்த லிரங்கல்
ஊட லிவற்றி னிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே'

(தொல். அகத்: 14)

என்பதனு லுணர்க. 'இருந்தேங்கி வாழ்வா ருயிர்ப்புற(ல)த்தாய்' 'பேரருளி னீழல்' (7:'பிரிந்தார்') என்பவற்றல் இருத்தலும், இருத்தல் நிமித்தமும் கூறினர். பிறவு மென்றதனுல் நில மக்களும் நீர்நிலையும் வார்கொடியும் பூவும் கொள்ளப்படும். இவற்றுள், 'இளைசூழ் கோவலர்' (16:4) என்பதனுல் நில மக்களும்' 'புடை நெறிப் போயோர் பொய்கையிற் சென்று' (11:169) என்பதனுல் நீர்நிலையும், 'ஆய் கொடிக் கவலையும்' (11:82) என்றதனுல் வார் கொடியும், 'காயா மலர் மேனி' (12:'ஆய்பொன்னரி'), 'முல்லை நிகர் மலர்' (9:1-2) என்பவற்றுற் பூவும் கூறினர்.

குறிஞ்சி

குறிஞ்சித்திணை நில முதற் பொருள். பெரும்பொழுது: 'அருவி யொலிக்கு .... மலை காண்குவம்' (25:6-7) என்பதனுற் கூதிர்ப் பொழுதும், சிறுபொழுது: 'குன்றத்துச் சென்று வைகியும்' (24:'குருவி') என்றதனுல் நள்ளியாமமும், கருப்பொருள்: 'நீலப் பறவை மேல்......புதல்வன் வரும்' (24:'வேலனுர்') என்பதனுல் தெய்வமும், 'ஐவன வெண்ணெலும் ......கொய்பூந் தினையும்' (11:80-81)என்பதனுல் உணவும், 'புலியொடு பொருஉம் புகர்முகம் (25:29) என்பதனுல் மாவும், 'கோங்கம் வேங்கை' (25:17) என்ப தனுல் மரமும், 'கானக் கோழியுந் தேன்மொழிக் கிள்ளையும்' (25:54) என்பதனுற் புள்ளும், 'தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்' (24:'குருவி')என்பதனுற் பறையும், 'கொய்பூந் தினை யும்' (11:81), 'நறவுக் கண்ணுடைத்த' (25:27) என்பவற்றுற் செய்தியும், 'அந்தீங் குறிஞ்சி' (28:35) என்பதனுல் யாழும், 'குறிஞ்சி பாடுமின்' (24:'குருவி') என்பதனுற் பண்ணும், உரிப் பொருள் : 'அஞ்சலோம்பென்று நலனுண்டு', 'நல்காதார்' (24:'ஆங்கொன்று') என்பனவற்றுற் புணர்தலும் புணர்தல் நிமித் தமும்,'குன்றவருங் கண்டு நிற்க'(24:'குருவி')'குறத்தியர் பாடிய' (27:224) என்பனவற்றல் நிலமக்களும், 'அருவி யாடியு மகன்சுனை குடைந்தும்' (24:'குருவி') என்பதனுல் நீர்நிலையும், 'ஏலவல்லியு மிருங்கறி வல்லியும்' (25:41) என்பதனுல் வார்கொடியும், 'விரவு மலர் தூவுமின்' (24:'குருவி') என்பதனுற் பூவும் கூறினர்.

மருதம்

மருதத்திணை நில முதற்பொருள்: 'இன்னிள வேனில் வந்த திவணென' (8:7) என்பதனாற் சிறுபொழுதும், 'வான்கண் விழியா வைகறை யாமத்து' '(10:1) என்பதனாற் சிறுபொழுதும், கருப்பொருள்: 'மலைச்சிற கரிந்த வச்சிர வேந்தற்கு' (14:94) என்பதனால் தெய்வமும், 'குமரிக்கூட்டிற் கொழும்பல் லுணவு (10:123) என்பதனால் உணவும், 'கழாமயிர் யாக்கைச் செங்கட் காரான்' (10:121) என்பதனால் மாவும், 'மருதோங்கு முன்றுறை' (14:72) என்பதனால் மரமும், 'கம்புட்கோழியுங் கனைகுரனுரையும்' (10:114) என்பதனாற் புள்ளும், 'தெண் கிணைப் பொருநர் செருக் குடனெடுத்த'(10:138)என்பதனாற் பறையும், 'ஏரொடு நின்றோர்', 'அரிந்து கால் குவித்தோர்' (10:135,136) என்பனவற்றாற் செய்தியும், யாழ்: 'அதிரா மரபின் யாழ்கை வாங்கி' (8:23) என்பதனால் மருதயாழும், பண்: 'வைகறைப் பாணியும்' (13:148) என்பதனால் மருதப்பண்ணும், உரிப்பொருள்: 'சிலம்புள கொண்மென' (9:73) என்பதனால் ஊடலும், 'விடுதலறியா விருப்பினன்' (3:174), 'போற்றா வொழுக்கம் புரிந்தீர்' (16:81) என்பனவற்றால் ஊடனிமித்தமும், 'கருங்கை வினைஞருங் களமரும்' (10:125)'சின்மொழிக் கடைசியர்' (10:130) என்பன வற்றால் நிலமக்களும், 'பூநா றிலஞ் சிப் பொருகய லோட்டி'(10:78) என்பதனால் நீர்நிலையும், 'கோதை மாதவி' (14:113) என்பதனால் வார்கொடியும், 'வெண்பூ மல்லிகை ......தண்செங் கழுநீர்' (14:78-9) என்பதனாற் பூவுங் கூறினார்.

நெய்தல்

நெய்தற்றிணை நிலமுதற்பொருள். பெரும்பொழுது, காரும், இருவகை வேனிலும். இவை ஆசிரியர் எடுத்தோதாமையின் அடிகள் கூறிற்றிலர் போலும். சிறுபொழுது: 'வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை' (7:பையுளோய் கூற) என்பதனால் மாலையும், கருப்பொருள்:தெய்வம்: 'கடற்றெய்வங் காட்டிக் காட்டி'(7:'கரிய மலர்') என்பதனால் வருணனும், உணா:'விலைமீ னுணங்கற்பொருட் டாக' (7:வலைவாணர்) என்பதனால் மீன்விலையுணவும் கூறினர். மா, உமணர் பகடன்றிஇந்நிலத்திற்கு விலங்கின்மையின் ஆசிரியர் கூறிற்றிலர் போலும். இனி முதலையும் சுறுவும் மா வென்பர்.

'கெண்டை யஞ்சினை மேய்ந்து கிளர்ந்துபோய்
முண்டகத்துறை சேர்ந்த முதலைமா
வண்டல் வார்கரை மாமக ரக்குழாம்
கண்டு நின்று கனலுங் கழியெலாம்' (சூளா:நாட்டு:-22)

எனக் காட்டுவாருளராயினும், அவை மீனெனப் படுவ வல்லது மாவெனப் படா; 'பொறைமலி பூம்புன்னை' (7:'துறைமேய்') என்பதனுல் மரமும், 'அன்னந் துணையோ டாட' (7:'அன்னம்') என்பதனுற் புள்ளும் கூறினர். பறை கூறிற்றிலர்; மீன்கோட் பறையென்க. 'கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்' (7:'கடல்புக்') என்பதனுற் செய்தியும், 'சித்திர படத்துள்...... குற்ற நீங்கிய யாழ்' (7:முதற் கட்டுரை) என்பதனுல் யாழும், பண்: 'நுளையர் விளரி' (7:'நுளையர்') என்பதனுல் விளரிப் பண்ணும், உரிப்பொருள்: 'கொளை வல்லா யென்னுவி கொள்' (7:நுளையர்) என்பதனுல் இரங்கலும், 'பேரருளி னீழல், இருந்தேங்கி வாழ்வார்' (7:பிரிந்தார்) என்பதனுல் நிமித்தமும், 'சேரிப் பரதர் வலை முன்றில்' (7:'வாரித் தரள'), 'பவள வுலக்கை' (7:'பவள'), 'எறிவளைக ளார்ப்ப' (7:'எறிவளை') என்பன வற்ருற் பரதரும் பரத்தியரும் நுளையரும் நுளைச்சியருமாகிய நிலமக்களும், 'ஈர்ந்தண்டுறை' (7:'நேர்ந்தநம்') என்பதனுல் நீர்நிலையும், 'அம்மெ னிணர வடும்புகாள்' (7:'தம் முடைய') என்பதனுல் வார்கொடியும், 'நறுஞாழல் கையி னேந்தி' (7:'நிணங்கொள்') என்பதனுற் பூவும் கூறினர்.

பாலை

'சொல்லிய முறையாற் சொல்லவும் படும்' என்பதனுற் சொல்லாத முறையாற் சொல்லவும் படுமென அருத்தாபத்தி கோடலானும்,

'நடுவு நிலைத்திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே'

(தொல். அகத்:9)

என்பதனுலும்,

'முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்
காலை யெய்தினர்'

(சிலப்: 11:64-67)

என்பதனுனும் போந்த இப்பெற்றித்தாகிய பாலைத்திணை நிலமுதற் பொருள். பெரும் பொழுது: 'வேனிற் கிழவனெடு வெங்கதிர் வேந்தன், தானலந் திருகித் தன்மையிற் குன்றி' (11:62-63) என்பதனுல் இருவகை வேனிலும், சிறுபொழுது: 'படுங்கதி ரமயம் பார்த்திருந் தோர்க்கு' (13:16) என்பதனுல் நண்பகலும் கூறினர். கருப்பொருள்: தெய்வம்: ஆசிரியர் புலப்பட எடுத்தோதிற்றில ரேனும்,

'கடுங்கதிர் திருகலின்' (12:1) எனவும், 'வெங்கதிர் வேந்தன் தானலந் திருகி' (11:62- 63) எனவும், 'ஐயை கோட்டத் தெய்யா வொரு சிறை' (12:4) எனவும், 'கொற்றவையுங் கொடுமரமுன் செல்லும்' (12: 'கல்விலேயாட்டி') எனவும் கூறுதலானும், பிறவாற்ருனும் பருதியஞ் செல்வனும், திகிரியஞ் செல்வியு மெனக் கொள்க. உணு: 'ஆரிடை யத்தத் தியங்குந ரல்லது, மாரி வளம்பெரு வில்லே ருழவர்' (11:209-10) என்பதனுல், ஆறெறிந்தும் சூறை கொண்டும் உண்ணும் உணவாம். மா: 'மானின்று விளிக்கும்' (11:78) என்பதனுல் உழைமான் முதலியனவும், 'அலறுதலே மராமு முலறுதலே யோமையும்' (11:75) என்பதனுல் மரமும், 'கான வாரணங் கதிர் வர வியம்ப' (13:37) என்பதனுற் புள்ளும், 'துண்ணென் றுடியொடு' (12:'துண்ணென்') என்பதனுற் பறையும், 'பொருள் கொண்டு புண்செயின்' (12:'பொருள்') என்பதனுற் செய்தியும், 'செந்திறம் புரிந்த செங்கோட்டியாழ்' (13:106) என்பதனுல் யாழும், பண்: 'ஆசான் றிறத்தின்' (13:112) என்பதனுற் காந்தார பஞ்சமமும் கூறினுர்; உரிப்பொருள்: 'தொடிவளேச் செங்கை தோளிற் காட்டி' (13:33) எனவும், 'ஆரிடை யுழந்த மாதரை நோக்கி' (13:30) எனவும் கூறினமையாற் போக்கும், வாளாது 'போக்கெல்லாம் பாலே' என்றலின் உடன்போக்கும் கொள்ளப் பட்டன. நிலமக்கள்: 'கண்ணிலெயினர்' (12:'துண்ணென்') எனவும், 'இளமா வெயிற்றி' (12: 'இளமா') எனவும் கூறலின், எயினரும் எயிற்றியரும்; ஈண்டு நீரின்மை நிலே: 'நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்' (11:78) என்பதனுலும், 'நீரின் றி வேனிறெறு நிலம் பாலே' (திவா:5), என்பதனுலும் நீரின்மையே இந்நிலத்திற்குச் சிறப்பென உணர்க. 'அறுநீர்ப் பைஞ்சுனே யாமறப் புலர்தலின், உகுநெற் பொரியும் வெம்மை' (1) என அகப்பாட்டினும், 'மரையா மரல்கவர' (6) எனக் கலியுள்ளும் கூறினுர். 'ஆய்கொடிக் கவலேயும்' (11:82) என்பதனுல் வார்கொடியும், 'கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன்' (12:'செம்பொன்') என்பதனுற் பூவுங் கூறினுர்.[1]

### 3. உடற்கூற்றமைப்பு

அரங்கேற்று காதையில் ஆசிரியர் இளங்கோ, 'மூலாதாரந் தொடங்கிய மூச்சைக் காலாற் கிளப்பிக் கருத்தா லியக்கி ஒன்றெ னத் தாக்கி இரண்டெனப் பகுத்துப் பண்ணீர்மைகளேப் பிறப்பிக்கப் பட்ட பாடலியலுக்கு அமைந்த மிடற்றுப் பாடலே', 'மிடறும்' (3:26) எனக் குறிப்பிடுகின்ருர். இதனே விளக்கப் போந்த நல்லார் பூத பரிணும சக்திகளால் உடல் பிறக்குமாற்றை மிகத் தெளிவாக விவரிக்

1. சிலப். பதி: 1-2-உரை, பக்: 14-18.

கின்ருர். இங்கு அடியார்க்கு நல்லார் ஓர் உடலியற் றத்துவ நிபுண ராகக் காட்சி யளிக்கிருர். அவர் உடற்கூறு பற்றிக் கூறுவன வருமாறு:

'மிடறு மென்றது-சாரீரவீணையு மென்றவாறு. அதனை,

'பூதமுதற் சாதனத்தாம் புற்கலத்தின் மத்திமத்து
நாத முதலா மெழுத்து நாலாகி-வீதி
வருவரத்தாற் ருனத்தால் வந்து வெளிப்பட்
டிருவரத்தாற் ருேற்ற மிசைக்கு'

என்பதனு லுணர்க.

புற்கலம்-உடம்பு. அப் புற்கலத்துக்கு முதலாயுள்ள பூதமாவன: மண், நீர், தீ, வளி, வான் என விவை; என்னை?

'மண்ணுட னீர்நெருப்புக் கால்வான மென்றிவைதாம்
எண்ணியபூதங்க ளென்றறிந்து-நண்ணிய
மன்னர்க்கு மண்கொடுத்து மாற்ருர்க்கு விண்கொடுத்து
தென்னவர்கோ மானே தெளி'

என்ருராகலின்.

இப்பூதங்கள் ஐந்தானும் புற்கலமாம் என்ற ஆசானை மாணுக்கன் பணிந்து பூதங்கள் தாம் ஒன்ருேடொன்று கூடுவனவல்ல; மண் செறிதலைக் குணமாக வுடைத்து; நீர் நெகிழ்தலைக் குணமாக வுடைத்து;தீத்தெறுதலைக் குணமாக வுடைத்து; காற்று ஓரிடத்தும் நிலைபெற்று நிற்பதன்று; ஆகாய மென்பது ஒருரு வுண்டில்லை யன்று; அன்றியும்,

'செப்பிய பூதங்கள்சேர்ந்தோர் குறியன்றே
அப்பரிசு மண்ணைந்து நீர்நாலாம்-ஒப்பரிய
தீயாகின் மூன்றிரண்டு காற்றம் பரமொன்று
வேயாருந் தோளி விளம்பு'

என்பதனுல் மண் ஐந்து பயனுடைத்து; நீர் நான்கு பயனுடைத்து; தீ மூன்று பயனுடைத்து; காற்று இரண்டு பயனுடைத்து; வான் ஒரு பயனுடைத்து; ஆதலால் இவை ஒன்ருேடொன்று கூடுவன வல்லவாகவும் இவற்றின் கூட்டம் உடம்பென்றீராதலால் இவ் வைந்தின் கூட்டம் உடம்பாவது எவ்வாருே வெனின்,- இதற்கு விடை,

'மெய்வாய் கண்மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாயு மாயவற்றின் மீதடுத்துத்-துய்ய
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தால்
அவை முதற் புற்கலமாம்'

என்பது. இது பூதங்கள் பரிணமித்து உடம்பாமாறு கூறுகின்றது.

பூதங்களைந்தும் தத்தம் தன்மை நீங்கி மண் உடம்பாயும், நீர் வாயாயும், தீ கண்ணாயும், காற்று மூக்காயும், ஆகாயம் செவியாயும் நின்று உடம்பாம். பொறிகள் தோறும் வினியோகப்பட்ட புலன் சுவை முதல் ஐந்து வகைப்படும். இவ்வைந்தும் பொறியைந்தினுமேறி, மண்ணால் உடம்பு ஊறுயும், நீரால் வாய் சுவையாயும், தீயாற் கண் ஒளியாயும், காற்றால் மூக்கு நாற்றமாயும், வானாற் செவி ஓசையாயும் வந்து உடம்பாம். அன்றியும் மண்ணின் பகுதி, நரம்பு இறைச்சி என்பு மயிர் தோலென ஐந்து. நீரின் பகுதி நீர் மூளை சுக்கிலம் நிணம் உதிரமென வைந்து.

'பசிசோம்பு மைதுனங் காட்சிநீர் வேட்கை
தெசிகின்ற தீக்குண மோரைந்து - மொசிகின்ற
போக்கு வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம்
வாக்குடைய காற்றின் வகை'

என்பது தீயின் குணமும் காலின் குணமு முணர்த்து கின்றது; ஆவன : பசி சோம்பு மைதுனம் காட்சி நீர் வேட்கை யென விவை காற்றின் குணம்.

'ஓங்கும் வெகுளி மதமான மாங்காரம்
நீங்கா வுலோபமுட னிவ்வைந்தும்-பாங்காய
வண்ண முலைமடவாய் வானகத்தின் கூறென்றார்
எண்ணிமிக நூலுணர்ந்தோ ரெண்'

இஃது ஆகாயத்தின் குணம் உணர்த்து கின்றது; ஆவன : வெகுளி மதம் மானம் ஆங்காரம் உலோபமென விவை. இப்பூத குணம் இருபத்தைந்தும் கொண்டு உடம்பாம்.

'ஒப்பார் பிராண னபான னுதான னுடன்
தப்பா வியானன் சமானனே-இப்பாலும்
நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருகரன்
தீதிலாத் தேவதத் தனே'

என்பது தச வாயுக்களையும் உணர்த்து கின்றது ; ஆவன : பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சய னென விவை.

'இடைபிங் கலைசுழுமுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினி பூடாவோ
டங்குகு கன்னி யலம்புடை யென்றுரைத்தார்
தங்குதச நாடிக டாம்'

தச நாடிகளாவன : இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, சங்கினி, பூடா, குகு, கன்னி, அலம்புடை என விவை.

'பூத வகைகளோ ரைந்தாய்ப் பொறியைந்தாய்
வாதனையோரை யைந்தாய் மாருதமும்-மேதகுசீர்ப்
பத்தாகு நாடிகளும் பத்தாகும் பாரிடத்தே
முத்திக்கு வித்தா முடம்பு'

என்பது பூத பரிணமம் உணர்த்துகின்றது. பூதங்கள் ஐந்தாவன : மண் முதலாயின. பொறி யைந்தாவன : செவி முதலாயின : புலனைந்தாவன : சத்த முதலாயின. வாதனை ஐயைந்தாவன : நரம்பு முதலிய ஐந்தும், நீர் முதலிய ஐந்தும், பசி முதலிய ஐந்தும், போக்கு முதலிய ஐந்தும், வெகுளி முதலிய ஐந்தும். தச வாயுக்களாவன : பிராணன் முதலிய பத்தும். தச நாடிகளாவன: இடை பிங்கலை முதலிய பத்தும் ; மூலாதாரத்து எழுபத்தீராயிர நாடிகளும் பீர்க்கங் கூட்டின் மூன்று கண்ணும் போல இடை பிங்கலை சுழுமுனை யென்னும் மூன்று நாடிகளுமாய் நடுவுநின்ற சுழுமுனை யொழிய இரண்டானும் மேனோக்கி யேறி இரண்டு மூக்கானும் ஒரோர் பாரிசத்து ஐந்து நாழிகையாகக் கொண்டு ஒரு மாத்திரையில் நூற்றிருபத்தைந்து சுவாதமாய் ஒரு சுவாதத்திலே பன்னிரண் டங்குலியளவு புறப்பட்டு நாலங்குலி தேய்ந்து எண்விர லடங்குகின்றது பிராணவாயு வெனக் கொள்க.

மாத்திரையாவது இரண்டரை நாழிகையை எட்டுக் கூறிட்டு ஒரு கூறென்றறிக.

அபானவாயு மல மூத்திரங்களைப் பெய்விக்கும். உதானன் கண்டத் தானத்தில் நிற்கும். வியானவாயு போக்குவரவு செய்து இயங்கப் பண்ணும். சமானவாயு அறுவகைச் சுவையையும் அன்னத்தையும் பிரித்து எழுவகைத் தாதுவின் கண்ணும் கலப்பிக்கும். கூர்மன் இமைப்பும் விழிப்பும் உறக்கமும் உணர்ச்சியும் பண்ணும். நாகன் விக்கல் இடுவிக்கும். கிருகரன் கோபத்தைப் பண்ணுவிக்கும். தேவதத்தன் உடம்பெரிப்பைப் பண்ணுவிக்கும். தனஞ்சயன் பிராணன் போனபின்னும் உடம்பை

விடாதே நின்று மூன்றுநாள் உதிப்பித்து உச்சந் தலையிற் பிற் கூற்றிலே மூன்று நெற்கிடை வெடித்துப் போமென்றறிக.

நாடிகள் எழுபத்தீராயிரத்திலும் தசநாடிகள் பிரதானமெனக் கொள்க. என்னை?

'இடைபிங் கலையிரண்டு மேறும் பிராணன்
புடைநின்ற பானன்மலம் போக்கும்-தடையின்றி
உண்டனகீ ழாக்கு முதானன் சமானனெங்கும்
கொண்டெறியு மாறிரதக் கூறு'

எனவும்,

'கூர்ம னிமைப்புவிழி கோணுகன் விக்கலாம்
பேர்வில் வியானன் பெரிதியக்கும்-போர்மலியும்
கோபங் கிருகரனுங் கோப்பி னுடம்பெரிப்புத்
தேவதத்த னுகுமென்று தேர்'

எனவும்,

'ஒழிந்த தனஞ்சயன்பே ரோதி லுயிர்போய்க்
கழிந்தாலும் பின்னுடலைக் கட்டி-அழிந்தழிய
முந்நா ளுதிப்பித்து முன்னியவான் மாவின்றிப்
பின்னு வெடித்துவிடும் பேர்ந்து'

எனவும் இசைநுணுக்க முடைய சிகண்டியாரும் கூறினராகலின்.

இங்ஙனம் பூதங்களாலும் பொறி முதலியவற்றாலும் வாயுக்க ளானும் நாடிகளானும் பரிணமித்துச் சுக்கில சுரோணிதங்களாலே உடம்பு கொண்டு இருவினையும் தன்னகத் தடக்கி உயிர் பிறக்கு மென்றறிக.

'துய்ய வுடம்பளவு தொண்ணூற்று றங்குலியா
மெய்யெழுத்து நின்றியங்கு மெல்லத்தான்-வையத்
திருபாலு நாற்பதோ டேழ்பாதி நீக்கிக்
கருவாகு மாதாரங் காண்'

என்பது இசைக்குப் பிறப்பிடமா யுள்ள ஆதாரம் உணர்த்து கின்றது.

சரீரத்தளவு தன்கையால் தொண்ணூற்று றங்குலம். இத னுள் மேலே நாற்பத்தேழரை யங்குலமும் கீழே நாற்பத்தேழரை யங்குலமும் விட்டு நடுநின்ற ஓரங்குலம் மூலாதாரம். இதன்

மேலே நால்விரல் விட்டுப் பின்னுதாரம் நின்றியங்குமெனக் கொள்க.

‘ஆதாரம் பற்றி யசைவ முதலெழுத்து
மூதார்ந்த மெய்யெழுத்து முன்கொண்டு-போதாரு
முந்தி யிடைவளியா யோங்குமிடை பிங்கலையால்
வந்துமே லோசையாம் வைப்பு’

‘ஐவகைப் பூதமு மாய சரீரத்து
மெய்பெற நின்றியங்கு மெய்யெழுத்தால்-துய்ய
ஒருநாடி நின்றியங்கி யுந்திமே லோங்கி
வருமா லெழுத்துடம்பின் வந்து’

இங்ஙனம் இசைக்குப் பிறப்பிடமாய மூலாதாரத்தைக் குறிக்க வந்த நல்லார் உடலியல் தத்துவ ஞானியாக நின்று உடற் கூற்றமைப்புக்களை நூல்வல்லோர் பாடல்களை எடுத்துக்காட்டி விளக்கிச் செல்கின்றார்.

## 4. பழங்கதை

நாட்டுப்புற மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற சில மரபுக் கதைகளே காப்பிய எழுச்சிக்கு அடிப்படைக் காரணம். இது எல்லா நாட்டுக் காப்பியங்கட்கும் பொருந்தும். இத்தகைய மரபுக் கதைகளைக் கையாண்டு வெற்றி கண்டவர் இளங்கோவடிகள். இக்கதைகளை எடுத்தாளும் இளங்கோ சிலவிடங்களில் தெளிவாக-விரிவாகக் கதையை வாசகர்களுக்கு விளங்குமாறு விவரித்துச் செல்கின்றார். சிலவிடங்களில் இக்கதைகளின் கருவை மட்டும் காட்டிக் கதைநிகழ்ச்சியை விவரிக்காது செல்கின்றார். தம் காப்பியக் கதைநிகழ்ச்சிக்கு எத்துணைத் தேவையோ அத்துணையளவு மட்டுமே இளங்கோ இப்பழங்கதை நிகழ்ச்சிகளை விரிப்பார். இப் பழங்கதைகள் பற்றி முழுநிலையில் வாசகன் உணரவில்லையாகின் பொருட்தெளிவு அவனுக்குக் கிடைப்பது அரிது. இதனை நன்குணர்ந்த அடியார்க்கு நல்லார், வாசகனைத் தெளிவு பெறச் செய்தல் வேண்டுமென்ற நோக்கில் இப்பழங் கதைகளின் நிகழ்ச்சிகளைச் சற்று விரிவாகக் கூறிச் செல்கின்றார். இவற்றில் ஊர்வசி-சயந்தன் சாபவரலாறு குறிப்பிடத்தக்கது. தவிரவும் கீரிப்பிள்ளை-பார்ப்பனி கதை, நாளங்காடிப் பூதக்கதை, சிகண்டி-சாரகுமாரன் வரலாறு, பாண்டியன் வரலாறு, கோழியூர் பற்றிய வரலாறு, பாற்கடல் கடைந்த செய்தி முதலான பழ மரபுக் கதைகளை விவரித்துச் செல்கின்றார்.

ஊர்வசி-சயந்தன் சாபவரலாறு

நாடகக்கணிகை மாதவியை அரங்கேற்று காதையில் அறிமுகப் படுத்துகின்ற இளங்கோ, அவள் ஊர்வசியின் மரபினள் என்று குறிப்பிடுகிருர். இங்குச் சயந்தன்-ஊர்வசி சாபவரலாற்றைச் சுருங்க வுரைக்கிருர் இளங்கோ.

> 'தெய்வ மால்வரைத் திருமுனி யருள
> எய்திய சாபத் திந்திரச் சிறுவனெடு
> தலைக்கோற் ருனத்துச் சாப நீங்கிய
> மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்' (3:1-4)

மரபில் வந்தவள் மாதவி என்கிருர். இங்குத் திருமுனியால் (அகத்தியன்) ஊர்வசி-சயந்தன் சாபம் பெற்றதும், பின் அவனருளால் தலைக்கோல் தானத்தில் (அரங்கேற்றத்தின்போது) சாபம் நீங்கியதும் ஆகிய செய்திகளே அறியப்படுகின்றன. இங்குச் சாபம் பெற்றதற்கான காரணம் என்ன? என்ன சாபம் பெற்ருள்? எப்படிச் சாபம் நீங்கியது? என்பன போன்ற செய்திகளை அறிய முடியவில்லை. ஆயின் கடலாடுகாதையில் இதனைச் சற்று விரிவாகக் குறிப்பிடுகின்ருர் இளங்கோ.

> 'நாரதன் வீணை நயந்தெரி பாடலும்
> தோரிய மடந்தை வாரம் பாடலும்
> ஆயிரங் கண்ணோன் செவியக நிறைய
> நாடக முருப்பசி நல்கா ளாகி
> மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்
> தங்குக விவளெனச் சாபம் பெற்ற
> மங்கை மாதவி வழிமுதற் ருேன்றிய
> அங்கர வல்குல் ஆடலுங் காண்குதும்' (6:18-25)

இங்கு ஊர்வசியின் சாபவரலாறு சற்று விரிவு பெறினும், இச்சாப வரலாற்றை அறிந்தார்க் கல்லது பிறர்க்கு இதன் பொருளைத் தெளிதல் அரிது. வீணைப்பாடலும் வாரப்பாடலும் ஆயிரங் கண்ணோன் செவியகம் நிறையாது போக உருப்பசி யாது செய்தாள்? 'வீணை மண்மிசைத் தங்குக' என்ருரா அல்லது 'இவள் (ஊர்வசி) மண்மிசைத் தங்குக' என்ருரா? 'சாபம் பெற்ற மங்கை மாதவி யார்?' என்பன போன்ற வினுக்களுக்கு இச்சாப வரலாற்றை அறிந்தவர்க் கல்லது விடை காணுதல் இயலாது. இதனைத் தெளிவு படுத்தும் நோக்கில், இப் பகுதிகட்கு உரை எழுதுங்கால் ஊர்வசி-சயந்தன் வரலாற்றை முழுநிலையில் விளக்கிச் செல்கின்ருர் நல்லார்.

அரங்கேற்றுகாதை யுரையில்[1] சயந்தன் பெற்ற சாபமும், சாப விடையும் கூறப்படுகிறது.

'திருந்திய பொதியி லருந்திற லகத்தியன்
சுந்தர மணிமுடி யிந்திரன் மகனை
மாணு விறலோய் வேணு வாகென
விட்ட சாபம் பட்ட சயந்தன்
சாபவிடை யெமக்கரு டவத்தோ யென்று
மேவினன் றெழுது மேதக வுரைப்ப
அருந்தவ மாமுனி தமிழ்க்கூத் தியர்க்குத்
திருந்திய தலைக்கோற் றானந் தீருமென்
றவனினி துரைப்ப வாகிவந் தனனென்'

என்னும் பாடலை எடுத்துக்காட்டிச் சயந்தன் சாபவரலாற்றைத் தெளிவு படுத்துகின்றார். இப்பாடல், 'நான்முகத்துள்' வருவதாகக் குறிப்பிடுகின்றார். இது எந்த நூலின் நான்முகம் என்று தெரியவில்லை.

கடலாடுகாதை யுரையில் ஊர்வசியின் சாப வரலாற்றைத் தெளிவு படுத்துகின்றார் நல்லார். உருப்பசியின் சாபவரலாறு என்னையோ வெனின்.

'வயந்த மாமலை நயந்த முனிவரன்
எய்திய வவையி னிமையவர் வணங்க
இருந்த விந்திரன் றிருந்திழை யுருப்பசி
ஆட னிகழ்க பாடலோ டீங்கென
ஓவியச் சேனன் மேவின னெழுந்து
கோலமுங் கோப்பு நூலொடு புணர்ந்த
இசையு நடமு மிசையத் திருத்திக்
கரந்துவர லெழினியொடு புகுந்தவன் பாடலிற்
பொருமுக வெழினியிற் புறந்திகழ் தோற்றம்
யாவரும் விழையும் பாவனை யாகலின்
நயந்த காதற் சயந்தன் முகத்தில்
நோக்கெதிர் நோக்கிய பூக்கமழ் கோதை
நாடிய வேட்கையி னாட னெகிழப்
பாடன் முதலிய பல்வகைக் கருவிகள்
எல்லா நெகிழ்தலி னெல்லா முனிவரன்
ஒருதலை யின்றி யிருவர் நெஞ்சினும்
காமக் குறிப்புக் கண்டனன் வெகுண்டு

1. சிலப். உரைப்பாயிரம், பக்; 10-78.

*சுந்தர மணிமுடி யிந்திரன் மகனை*
*மாணு விறலோய் வேணு வாகென*
*விட்ட சாபம் பட்ட சயந்தன்*
*சாப விடையரு டவத்தோய் நீயென*
*மேவினன் பணிந்து மேதக வுரைப்ப*
*ஓடிய சாபத் துருப்பசி தலைக்கட்டும்*
*காலைக் கழையு நீயே யாகி*
*மலையமால் வரையின் வந்து கண்ணுற்றுத்*
*தலையரங் கேறிச் சார்தி யென்றவன்*
*கலக நாரதன் கைக்கொள் வீணை*
*அலகி லம்பண மாகெனச் சபித்துத்*
*தந்திரி யுவப்பத் தந்திரி நாரிற்*
*பண்ணிய வீணை மண்மிசைப் பாடி*
*ஈண்டு வருகெனப் பூண்ட சாபம்*
*இட்டவக் குறுமுனி யாங்கே*
*விட்டன னென்ப வேந்தவை யகத்தென்'*

என்பதனுனறிக.

இதனுற் சொல்லியது: நாரதன் கலகப் பிரிய ஞதலால் தனது யாழைப்பகை நரம்புபட இசைத்தலின், தான் இங்ஙன மிசைத்தற்குக் காரணமின்ருகவும் இவள் கலங்கினமை தான் நமக்கறிவித்து நம்மால் இவனை முனிவிப்பான் வேண்டி நம்மை மதியாஞயினு னென அவளொடும் சாபமிடுகின்றவன் வீணை மங்கல மிழக்க; மண் மிசைத் தங்குக; இவள் மண்ணிற் போய்ப் பிறக்க வெனச் சாபம் இட்டா னென்பது. வீணை மண்மிசைத் தங்குக வெனவே இவனை நீங்கா வரத்தின் வந்ததாகலான் இவனும் மண்மிசைத் தங்குக வென்பதாயிற்று; எனவே இவன் மண்ணில் பிறவாஞதல் உணர்க.

இவ்வீணையை உருப்பசி கையின் வீணையென்பாருமுளர். அது பொருத்தமின்று. அங்ஙனம் இவள் மண்மிசைப் பிறக்கவெனச் சபித்தலின் அதனைப்பெற்று வந்து பிறந்த மங்கையாகிய மாதவி வழிப் பெயராம். அவ்வழியிற் ருேன்றிய அரவுபோலு மல்குலை யுடைய மாதவியுடைய ஆடலையும் அவ்விடத்துக் காண்பே மென்ரு னென்க. ஈண்டுச் சயந்தன் சாபமும் விடையும் கூருதது அரங்கேற்று காதைக்கண்,

*'இந்திரச் சிறுவனெடு*
*தலைக்கோற் ருனத்துச் சாப நீங்கிய'* (3:2-3)

என்ருராகலின் எனக் கொள்க. இனி வீணையைச் சாரீரவீணை யாக்கி மங்கல மிழப்ப என்பதற்கு இவள் இக்கடவுள் யாக்கை

யொழிந்து மக்கள் யாக்கையில் தங்குகவெனச் சபித்தா னென் பதும் கொள்க. இனி உருப்பசிக்குச் சயந்தன் மேற்சென்ற காதன்மை புதல்வர் மேற்செல்லும் கண்ணோட்ட மென்பார்க்கு அங்ஙனம் புதல்வரை நோக்கி மகிழ்வார்க்கு அன்பு சிறத்த லொழிந்து நிலைகலங்கி ஆடல் பாடல் நெகிழ்தலும் மூன்று கால மும் உணர்ந்த முனிவன் அதனை அறியாது சபித்தா னென்ற லும் பொருந்தாமையின் அங்ஙனம் உரைத்தல் குற்றமென்க. மண்மிசைத் தங்குக வென்றதை வீணைக்கும் ஏற்றுக.[1]

இங்ஙனம் உருப்பசி-சயந்தன் சாப வரலாற்றினை ஆதியோ டந்தமாக விவரிக்கின்றார் நல்லார். இவ் விளக்கத்தை அறிந்து பின் மூலநூலைக் கற்பார்க்கு மேற்கூறிய பகுதியின் பொருள் நன்கு விளங்கும்.

*கீரிப்பிள்ளை-பார்ப்பனி கதை*

கோவலனின் சிறப்புக்களை அடைக்கலக் காதையில் மாடலன் வாயிலாகப் புகழும் இளங்கோ வடிகள், கீரிப்பிள்ளையைக் கொன்ற பார்ப்பனி கதையைக் கோவலன் வாழ்க்கையோடு தொடர்பு படுத்துகின்றார். இங்குக் கோவலன் பார்ப்பனியின் கொலைப் பாவம் நீங்க மிக்க தானம் செய்து, பிரிந்து சென்ற அவள் கணவனையும் கூட்டி வைக்கிறான்.[2]

‘பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக
எள்ளிய மனையோ ளினைந்துபின் செல்ல
... ... ... ... ...
கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை’ (15:54-57)

எனக் கூறிப் பிரிந்து செல்கிறான் மாமறையாளன். இப்பகுதி யிலிருந்து இம்மறையோன் மனைக்கிழத்தி செய்த பாவம் என்ன வென்பதை அறிய முடியவில்லை. கீரிப்பிள்ளை-பார்ப்பனி பற்றிய பழங்கதையை அறிந்தால் ஒழிய இதன் பொருளை விளங்கிக் கொள்வது அரிது. இக்கதையினை நன்குணர்ந்தமையான், ‘தான் வளர்த்த கீரி தன் பிள்ளையைக் காத்திருந்ததாக, ஒரு பாம்பனுக அதனைக் கௌவித் துணித்த குருதி வாயோடு தன் வரவு பார்த்து எதிர் கொண்டதனைத் தன்பிள்ளையைக் கடித்த தெனக் கருதித் தன் கையின் மணையாற் புடைக்க அது மரித்த லாலே’ என உரை எழுதுகிறார் நல்லார். இதனால் இக்கதையின் விளங்காத பகுதிகள் விளங்குவதோடு மூலநூற் பொருளையும் உணர்ந்து சுவைக்க முடிகிறது.

---

1. சிலப். 6:18-25-உரை, பக்: 186-187.
2. சிலப். 15:54-75.

நாளங்காடிப்பூதம்

புகார் நகரின் காவற் பூதமான, 'நாளங்காடிப்பூதம்' பற்றி அடிகள் ஈரிடங்களில் குறிப்பிடுகிறுர்.

'வெற்றிவேன் மன்னற் குற்றதை யொழிக்கெனத்
தேவர் கோமா னேவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை' (5:65-67)

என இந்திர விழவூரெடுத்த காதையிலும்,

'கடுவிசை யவுணர் கணங்கொண் டண்டிக்
கொடுவரி யூகத்துக் கோநகர் காத்த
தொடுகழன் மன்னற்குத் தொலைந்தன ராகி
நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்
திருந்துவே லண்ணற்குத் தேவ னேவ
இருந்துபலி யுண்ணு மிடனுங் காண்கும்' (6:7-13)

எனக் கடலாடு காதையிலும் இப் பூதம் பற்றிய செய்தி வருகிறது.

இப் பூதம் பற்றிய கதையை நல்லார் தெளிவாக அறிந்திருந் தமையாலேதான், அவர்தம் உரையும் தெளிவுடன் விளக்கம் பெறுகின்றது. இந்திர விழவூரெடுத்த காதையில், 'அஃது எத்தன்மைத்தாகிய பூதமெனின் வெற்றி பொருந்திய வேலையுடைய முசுகுந்த னென்னும் மன்னனுக்கு வரும் இடையூற்றை ஒழிப்பா யெனத் தேவர்கோன் ஏவுதலானே அத் தேவருலகினின்றும் போந்து அந்நாண் முதலாகப் பலிகொண்டு போதும் பூதமென்க'[1] என எழுதுகிறுர். இப்பூதம் பற்றிய வரலாற்றுப் பழங்கதையை நல்லார் அறிந்திருந்தமையாலேயே அவர், 'வெற்றிவேல் மன்னன்' என்பதற்கு, 'முசுகுந்த மன்னன்' எனப் பொருள் எழுதுகின்ருர் எனலாம். கடலாடு காதையிலும், 'தொடுகழல் மன்னன்' (6:9)என்பதற்கு, 'முசுகுந்தன்' எனப் பொருள் கொள்வதற்கும் இக்கதையே காரணமாகும்.

கடலாடு காதையில் இப்பூதம் பற்றிய வரலாறு கூறும் ஒரு பழம் பாடலை எடுத்துக் காட்டி விளக்குகின்ருர். 'இதனை,

'முன்ருளிந்திரன் ......
காவ லழித்துச் சேவல்கொண் டெழுந்த
வேட்கை யமுத மீட்க வெழுவோன்
இந்நகர் காப்போர் யாரென நினைதலும்
நேரிய னெழுந்து நீவரு காறும்
தார்கெழு மார்ப தாங்கலென் கடனென

---

1. சிலப். 5:59-67உரை, பக்:158,

உவந்தனன் கேட்டுப் புகழ்ந்தவிப் பூதம்
நின்வழி யாகென நிறீஇப் பெயர்வுழிக்
கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிப்
பொருதுபோர் தொலைந்தன ராகிப் பெரிதழிந்
தாழ்ந்த நெஞ்சிற் சூழ்ந்தனர் நினைத்து
வஞ்ச மன்றிது வஞ்சத் தல்லது
வேற லரிதெனத் தேறினர் தேறி
வளைத்துத் தொடுத்த வல்வா யம்பின்
அயின்முகங் கான்ற வாரிருள் வெயிலோன்
இருகணும் புதையப் பாய்தலி னொருகணும்
நெஞ்சங் காணு நிற்ப நின்ற
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்'

என்பத னானு முணர்க.

என் சொல்லியவாறோ வெனின், அங்ஙனம் விட்ட அம்பு கண்ணையும் மனத்தையும் புதைத்தலாற் போர்த்தொழி லொழிந்து நின்ற முசுகுந்தற்கு அவ்விருளுடைதற்குக் காரணமாயதோர் மந்திரத்தை யருள அதனான் வஞ்சம் கடிந்து அவுணரைக் கொன்று குவித்து நின்றானைக் கண்ட இந்திரன் அவரை எங்ஙனம் கொன்று குவித்தா யென்றாற்கு அவன் இப்பூதத்தின் செயலெனக் கேட்ட இந்திரன் அப்பூதத்தை அவன் பொருட்டு மெய்க்காவலாக ஏவுதலின் ஆங்கு நின்றும் போந்து ஈங்குப் புகாரினுள் இருந்து பலியுண்ணும் நாளங்காடி யிடமும் காண்பே மென்பதாம்'[1] என விரித்துரைக்கிறார்.

*சிகண்டி-சாரகுமாரன் வரலாறு*

'இசை நுணுக்கம்' என்ற இசைத் தமிழ்நூல் செய்த சிகண்டியார் பற்றிக் குறிப்பிடுகின்றபோது ஓர் வரலாற்றுப் பழங்கதையைத் தொடர்பு காட்டுகின்றார் நல்லார். அநாகுலன் என்னும் பாண்டியன் விண்ணியங்கு தேரிற் சென்று தேவமகள் திலோத்தமையுடன் கூடி இன்புறப் பிறந்த சாரகுமாரனுக்கு இசையறிவிக்கும் பொருட்டுச் சிகண்டியாரால் இவ் 'இசை நுணுக்கம்' என்னும் நூல் செய்யப்பட்டது என்கிறார் அடியார்க்கு நல்லார். இவ் வரலாறு பற்றி அவர் கூறுவதாவது:

'இனித் தேவ விருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிருவருள் சிகண்டி யென்னும் அருந்தவமுனி, இடைச்

1. சிலப். 6:7-13-உரை, பக்:184-85.

சங்கத்து அநாகுல னென்னும் தெய்வப் பாண்டியன் தேரோடு விசும்பு செல்வோன் திலோத்தமை யென்னும் தெய்வமகளைக் கண்டு தேரிற்கூடின விடத்துச் சனித்தானைச் தேவரும் முனிவரும் சரியா நிற்கத் தோன்றினமையிற் சாரகுமாரனென அப்பெயர் பெற்ற குமரன் இசையறிதற்குச் செய்த இசை நுணுக்கம்,' எனக் குறிப்பர் அடியார்க்கு நல்லார்.

*பாண்டியன்*

பாண்டிய மன்னனொருவன் வேலை எறிந்து கடலை வற்றச் செய்தான் என்றும், இந்திரன் பூட்டிய ஆரத்தைத் தனது மார்பிடத்தே பூண்டான் என்றும், இந்திரன் முடிவளையை உடைத்தான் என்றும், மேகத்தைச் சிறைப்படுத்தி மழை பெய்யச் செய்தான் என்றும் அடிகள் குறிக்கின்றார். இம்மன்னன் உக்கிர வன்மன் எனத் திருவிளையாடல் புராணம் கூறும். இம்மன்னன் பற்றிய வரலாற்றுப் பழங்கதையை நன்கறிந்த நல்லார்,

'அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
ப∴றுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள' (11:17-20)

என்னும் வரிக்கு, 'முன்னொரு காலத்துத் தனது பெருமையினதளவை அரசர்க்குக்காலான் மிதித்துணர்த்தி வேலானெறிந்த அந்தப் பழம்பகையினைக் கடல் பொறாது பின்னொரு காலத்து அவனது தென்றிசைக் கண்ணதாகிய ப∴றுளி யாற்றுடனே பலவாகிய பக்க மலைகளையுடைய குமரிக் கோட்டையும் கொண்டது' என எழுதுகின்றார்.

*கோழியூர்*

'முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்' (10:247-8)

என்ற நாடுகாண் காதை வரிக்கு உரை எழுதிய நல்லார் உறையூருக்குச் (கோழியூர்) 'வாரணம்' என்ற பெயர் எப்படி வந்தது என்ற ஒரு பழங்கதையைச் சுட்டிச் செல்கின்றார்.

'வாரணம்—கோழி; ஆவது உறையூர். முற்காலத்து ஒரு கோழி யானையைப் போர் தொலைத்தலான் அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழி என்பது பெயராயிற்று' என்பர். இச்செய்தியிற் பொதிந்து கிடக்கும் ஓர் உண்மையினை அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் எடுத்துக் காட்டுகின்றார்கள். அதாவது மதயானையின்

மத்தகத்தில் கோழி அமரின், யானைக்கு மதம் அடங்கும் என்பது.[1] எனவே கோழியூர் அல்லது வாரணம் என உறையூர் பெயர் பெறுவதற்கான கதையில் ஓர் உண்மையும் அடங்கியிருக்கிறது என்பதை அறிகின்றபோது அனைத்துப் பழங்கதைகளுக்கும் ஓர் 'உண்மைச் செயல்' அடிப்படைக் காரணமாக அமைந்திருக்க வேண்டுமென்பது தெரிகின்றது. நமக்குத் தெரியவில்லை என்பதற்காக அவற்றை வெறும் கற்பனை என்று ஒதுக்கித் தள்ளி விடுதற்கில்லை.

*பாற்கடல் கடைந்த செய்தி*

பாற்கடல் கடைந்தபோது இந்திரனின் வச்சிராயுதம் தோன்றிய செய்தியை ஓரிடத்துக் குறிக்கின்றார் நல்லார்.[2]

இங்ஙனம் நல்லாரின் பழங்கதை யறிவு அவர்தம் உரைவழி வெளிப்படுகின்றது. இவ்வறிவு அவருக்கு மூலநூலின் சில பகுதிகட்குத் தெளிவாக உரை எழுதத் துணை செய்வதோடு, இலக்கியத்தை நுகரும் வாசகர்களுக்கும் கதைநிகழ்ச்சிகளை உணர்ந்து சுவைப்பதற்குத் துணை செய்கின்றது.

### 5. பழந்தமிழகமும் முச்சங்க வரலாறும்

பழந் தமிழ்நாட்டில் மூன்று சங்கங்கள் இருந்து தமிழ் ஆய்ந்தன வென்றும், இச்சங்கங்கள் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் செயல்பட்டன வென்றும் அறிகிறோம், இச்செய்தியை முதன் முதல் நமக்குத் தருவது இறையனார் அகப்பொருளுரையே. முச்சங்கங்களில் முதல் இரு சங்கங்கள் பற்றி அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

'நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு' (8:1-2)

என்னும் வேனிற்காதை யுரையில் தலைச்சங்கம் பற்றியும் அக் காலத்துப் பஃறுளி யாற்றிற்கும் குமரியாற்றிற்கும் இடையேயுள்ள தமிழகப் பகுதிகள் பற்றியும், பிற்காலத் தமிழக எல்லை பற்றியும் விளக்கிச் செல்கின்றார். இச்செய்திகளாவன:-

'நெடியோன் குன்றம்-வேங்கடமலை. தொடியோள்-பெண் பாற் பெயராற் குமரி யென்பதாயிற்று; ஆகவே தென்பாற்

1. அ. மு. பரமசிவானந்தம் - 'இளங்கோ பொய்சொல்ல வில்லை'-நூல், 'மானுடம் வென்றது' பக்; 47, 1965.
2. சிலப். 2:46-48-உரை, பக்: 51.

கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம். ஆனால், நெடியோன் குன்றமும் தொடியோள் நதியு மென்னுது பௌவமு மென்றது என்னையெனின், முதலூழி யிறுதிக்கண் தென்மதுரையகத்து தலைச்சங்கத்துத் அகத்தியனாரும், இறையனாரும், குமரவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின்கிழவனும் என்றிவ ருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத் தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் உள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீயினார் காய்சினவழுதி முதற் கடுங்கோனீருயுள்ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங் கேறினார் எழுவர். பாண்டியருள் ஒருவன் சய மாகீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினான். அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னு மாற்றிற்கும் குமரியென்னு மாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன்பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகரைநாடும் ஏழ் குறும்பனை நாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலாற் குமரியாகிய பௌவ மென்றா ரென்றுணர்க. இஃது என்னை பெறுமாறெனின்,

'வடிவே லெறிந்த வான்பகை பொறாது
ப∴றுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள' (11:18-20)

என்பதனாலும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம்பூரண வடிகள் முகவுரையானும், பிறவாற்றானும் பெறுதும். அஃது அற்றாக, வடக்கின்கண் வேங்கடமலை தெற்கின்கட் குமரிக் கடலெனக் குறியாற் கூறினவர் கீழ்பான் மேல்பாற்கு எல்லை கூறாதது என்னையோவெனின், நெடுந் திசையாகிய வடபாற் கெல்லை குன்றமென்றும் தென்பாற் கெல்லை குமரிப்பௌவ மென்றும் கூறினமையான் ஒழிந்த திசைகட்கு ஒழிந்த பௌவம் எல்லை யென்பதாயிற்று; என்னை?

'வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே'

என்ருர் சிகண்டியாரு மாகலின். அன்றியும் வடதிசைக்கண் வடு கொழிந்த திரிபுடை மொழி பலவுளவாகலான் மலையெல்லை கூறி ஒழிந்த திசை மூன்றிற்கும் திரிபின்மையாற் கடலெல்லை கூறினு ரெனினும் அமையும்', என விளக்குகின்ருர்.

உரைப்பாயிரத்தில் இடைச்சங்க வரலாற்றைக் கூறுகின்ருர். 'காப்பியம்' என்ற வடமொழிச்சொல், தமிழில் அமையும் தொடர் நிலைச் செய்யுட்கும் பொருந்தும் என்பதை விளக்க வந்த நல்லார், இச்சொல் இலக்கியங்களில் ஆளப்படுவதை எடுத்துக் காட்டுகிருர். பெருங்கதையில்,

'கூத்திய ரிருக்கையுஞ் சுற்றிய தாகக்
காப்பிய வாசனை கலந்தவை சொல்லி' (பெருங்:4:3:41-2)

என இரண்டாம் ஊழியதாகிய கபாட புரத்தின் இடைச் சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலத்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்து அகத்தியனுரும், தொல்காப்பிய ஞரும் இருந்தையூர்க் கருங்கோழி மோசியாரும், வெள்ளூர்க் காப்பியனுரும், சிறுபாண்டரங்கனுரும், மதுரையாசிரியன் மாறனுரும், துவரைக்கோமானும், கீரந்தையாரும் என்றித் தொடக்கத்தார் ஐம்பத் தொன்பதின்மர் உள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர் தம்மாற் பாடப்பட்ட கலியும் குருகும் வெண்டாளியு முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை'[3] எனப் பெருங்கதையைச் சிறப்பிக்கின்ருர். இவ்வழி இடைச் சங்க வரலாற்றைச் சுருக்கமாகத் தருகின்ருர் நல்லார்.

இங்கு முச்சங்க வரலாற்றைக் குறிப்பிடும் ஒரு நீண்ட பாட்டைப் பதிப்பாசிரியர் உ. வே. சாமிநாதையரவர்கள் எடுத்துக் காட்டுகிருர்கள். இப்பாடல் இறுதியில், 'இச்செய்யுள் பாண்டி நாட்டிலுள்ள செவ்வூர்ச் சிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டி லிருந்த பழைய ஏட்டுப் புத்தகமொன்றில் எழுதப்பட்டிருந்தது. இவ்வகவலிலுள்ள சில பகுதி மறுத்தற் குரியனவாக இருந்தும் ஒரு சாராருடைய கொள்கை தெரிவதற்கு இங்கே பதிப்பிக்க லாயிற்று', என எழுதுகிருர். முச்சங்க வரலாற்றுத் தொடர்பு கருதி இப்பாடல் இங்குத் தரப்படுகிறது.

'வேங்கடங் குமரி தீம்புனற் பௌவத்
திந்நான் கெல்லையி னிருந்தமிழ் பயின்ற

---

3. சிலப் உரைப்பாயிரம், பக்:6-9.

செந்நாப் புலவர் செய்தியீண் டுரைப்பின்
ஆடகக் குடுமி மாடக் கூடலின்
முன்னர்ச் சங்கக் கன்மாப் பலகையில்
திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள்
மன்றன் மராத்தார்க் குன்றெறி யிளஞ்சேய்
திண்டிறற் புலமைக் குண்டிகைக் குறுமுனி
புவிபுகழ் மருதங் கவினிய முரஞ்சிப்
பதிமுடி நாக னிதியின் கிழவன்
இனையர்நா னூற்றுநாற் பத்தொன் பதின்மர்
அனையர் நானான் காயிர நூற்றொடு
நாற்பத்தொன் பதின்மர் பார்க்கிற்செந் தமிழோர்
புரிந்தன செய்யுட் பெரும்பரி பாடலும்
முதுமை யடுத்த நாரையுங் குருகும்
கதியுறச் செய்த களரியா விரையும்
ஆங்கவ ரிருந்தது மத்தொகை யாகும்
ஈங்கிவர் தம்மை யிரீஇயபாண் டியர்கள்
காய்சின வழுதிமுதற் கடுங்கோ னீரு
ஏசி லாவகை யெண்பத்தொன் பதின்மர்
கவியரங் கேறினா ரெழுவ ராகும்
மகத்துவ முடைய வகத்திய மிலக்கணம்
வடுவறு காட்சி நடுவட் சங்கத்
தகத்தியர் தொல்காப் பியத்தமிழ் முனிவர்
இருந்தை யூரிற் கருங்கோழி மோசியார்
எள்ளாப் புலமை வெள்ளூர்க் காப்பியன்
இறவா விசையிற் சிறுபாண்ட ரங்கன்
தேசிக மதுரை யாசிரியன் மாறன்
தவரொப் பாய துவரைக் கோமான்
தேருங் கவிபுனை கீரந்தை யாரிவர்
ஒன்பதோ டடுத்த வைம்பதின் மராகும்
தவலருங் கேள்வித் தன்மைய ருள்ளிட்
டிவர்மூ வாயிரத் தெழுநூற் றுவரே
வையகம் பரவச் செய்த செய்யுளும்
இருங்கலி கடிந்த பெருங்கலித் தொகையொடு
குருகுவெண் டாளி தெருள்வியாழ மாலை
அந்நா ளிலக்கண மகத்திய மதனொடு
பின்னாட் செய்த பிறங்குதொல் காப்பியம்
மதிநலங் கவின்ற மாபு ராணம்
புதுநலங் கனிந்த பூத புராணம்

வல்லிதி னுணர்ந்த நல்லிசை நுணுக்கம்
தாவாக் காலந் தமிழ்பயின் றதுவும்
மூவா யிரத்தோ டெழுநூற் றியாண்டு
பரீஇய சங்க மிரீஇயபாண் டியர்கள்
வெண்டேர்ச் செழியன் முதலா விறல்கெழு
திண்டேர்க் கொற்ற முடத்திரு மாறன்
முரசுடைத் தானை மூவா வந்தம்
அரசுநிலை யிட்டோ ரைம்பத்தொன் பதின்மர்
இவ்வகை யரசரிற் கவியரங் கேறினர்
ஐவகை யரச ராயிடைச் சங்கம்
விண்ணகம் பரவு மேதகு கீர்த்திக்
கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப
அருங்கடைச் சங்க மிருந்தோர் யாரெனிற்
சிறுமே தாவியார் சேந்தம் பூதனார்
அறிவுடை யரனார் பெருங்குன் றூர்கிழார்
பாடல் சான்ற விளந்திரு மாறன்
கூடலா சிரியர் நல்லந் துவனார்
பரவுதமிழ் மதுரை மருதனிள நாகர்
அவர்கணக் காயர் நவினக் கீரர்
கீரங் கொற்றர் கிளர்தே னூர்கிழார்
ஒருங் கலைமண லூரா சிரியர்
நல்லூர்ப் புளியங் காய்ப்பெருஞ் சேந்தர்
செல்லூ ராசிரியர் முண்டம் பெருங்குமரர்
முசிறியா சிரியர் நீல கண்டனார்
அசைவிரி குன்றத் தாசிரிய ரன்றி
நாத்தலங் கனிக்குஞ் சீத்தலைச் சாத்தர்
முப்பா லுணரு முப்பூரி குடிகிழார்
உருத்திர சன்மர் மருத்துவ ராகிய
நாம நூற்கலைத் தாமோ தரனார்
மாதவ ளனாரோ டோதுமிள நாகர்
கடியுங் காமப் படியங் கொற்றனார்
அருஞ்செய லூர்வாழ் பெருஞ்சுவ னாருடன்
புவிபுகழ் புலமைக் கபிலர் பரணர்
இன்னாத் தடிந்த நன்னாக ரன்றியும்
ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்துக்
குரையிடை யிட்ட விரகர் கல்லாடர்
பேர்மூல முணரு மாமூலர் தம்மொடு
விச்சை கற்றிடு நச்செள்ளை யார்முதல்
தேனூற் றெடுப்பச் செந்தமிழ் பகர்ந்தோர்
நானூற் றுவர்முத னாற்பத்தொன் பதின்மர்

பீடுபெற வுலகிற் பாடிய செய்யுள்
முத்தொள் ளாயிர நற்றிணை நெடுந்தொகை
அகநா னூறு புறநா னூறு
குறுந்தொகை சிற்றிசை பேரிசை வரியோ
டறம்புகல் பதிற்றுப்பத் தைம்பதோ டிருபான்
பெரும்பரி பாடலுங் குறுங்கலி நூற்றைம்
பதுமுத லாகிய நவையறுங் கலைகள்
அக்கா லத்தவர்க் ககத்திய மதனொடு
மிக்கா மிலக்கணம் விளங்குதொல் காப்பியம்
எண்ணூற் கேள்விய ரிருந்த தாயிரத்
தெண்ணூற் றைம்பது வருட மென்ப
இடர்ப்படா திவர்களைச் சங்க மிரீஇயினோர்
முடத்திரு மாறன் முதலா வுக்கிரப்
பெருவழுதி யீறுப் பிறங்கு பாண்டிய
நரபதி களாகு நாற்பத்தொன் பதின்மர்
இவருட் கவியரங் கேறினர் மூவர்
புவியிற் சங்கம் புகழ்பட மதுரை
ஆதிமுச் சங்கத் தருந்தமிழ்க் கவிஞர்
ஓதிய செய்யு ளுலவாப் பெரும்பொருள்
வாளாக் கேட்குந் தோளாச் செவிக்கும்
கேட்டுந் தெரியா வோட்டைநெஞ் சினுக்கும்
நுழையா வாதலி னுழைபுலன் றன்னொடும்
விழைவார்க் குரைக்க வேண்டுவர் தெரிந்தே’

### 6. அணிகல வகை

அணிகல வகைகள் பெரும்பான்மையும் மகளிருக்கே சிறப்பாகக் குறிக்கப் பெறும். மகளிர் அணியும் இவ்வணிகலன் பற்றிச் சிறப்பாகப் பேசுகின்றார் நல்லார். புகைப் பொருட்கள், மலர் முதலான மணப் பொருட்கள், பொன் மணி வயிரம் முதலான வற்றால் செய்யப்படும் ஆபரண வகைகள் பற்றிப் பெரிதும் குறிப்பிடுகின்றார் அடியார்க்கு நல்லார். இவ்வணிகல வகைகள் பற்றிப்பேசும் நல்லார் பெரும்பான்மையும் இலக்கியப் பாடல் களையே மேற்கோள் காட்டுகின்றார். இப்பாடல்கள் எந்த நூலைச் சார்ந்தன வென்று நல்லாரால் குறிக்கப் படவில்லை.

#### பூ வகை-3

விடு பூ, தொடைப்பூ கட்டுப்பூ வென(5:14, பக்:153)

புகைப்பொருள்-6

‘நேர்கட்டி செந்தே னிரியாசம் பச்சிலை
ஆர மகிலுறுப்போ டாறு’ (5:14:பக்:153)

விரை-5

‘கொட்டந் துருக்கந் தகர மகிலாரம்
ஒட்டிய வைந்தும் விரை’ (பிங்: ஐயர்வகை: 78)
(5:14, பக்:153; 6:76-79, பக்:193)

பஞ்சவாசம்-5

‘தக்கோலந் தீம்பூத் தகைசா லிலவங்கம்
கப்பூரஞ் சாதியோ டைந்து’ (5:26, பக்:154)

இவ்வைந்தினையும் மலைபடு பொருளாகவும் குறிப்பர் நல்லார் (10:102-111, பக்: 275).

துவர்-10

‘பூவந்தி திரிபலை புணர்கருங் காலி
நாவ லோடு நாற்பான் மரமே’

ஓமமாலிகை-32

‘இலவங்கம் பச்சிலை கச்சோல மேலம்
குலவிய நாகணங் கொட்டம்-நிலவிய
நாக மதாவரிசி தக்கோல நன்னாரி
வேகமில் வெண்கோட்ட மேவுசீர்-போகாத
‘கத்தூரி வேரி யிலாமிச்சங் கண்டில் வெண்ணெய்
ஒத்தகடு நெல்லி யுயர்தான்றி-துத்தமொடு
வண்ணக்கச் சோல மரேணுக மாஞ்சியுடன்
எண்ணுஞ் சயிலேக மின்புழுகு-கண்ணுநறும்
புன்னைநறுந் தாது புலியுகிர் பூஞ்சரளம்
பின்னி தமாலம் பெருவகுளம்-பன்னும்
பதுமுக நுண்ணேலம் பைங்கொடு வேரி
கதிர் நகையா யேமாலி கை’
‘ஒரை விரையினு மீரைந் துவரினும்
ஆறைந்தின் மேலிரண் டோமா லிகையினும்
நாறைங் கதுப்பி னுனமு நன்குரைஇ
ஊறின நன்னீ ருவந்தன ளாட்டி’ (6:76-79, பக்:193)

இங்ஙனம் ஐந்து வகை விரையானும், பத்து வகை விரையானும் முப்பத்திருவகை ஓமாலிகையானும் ஊறின நன்னீர் கொண்டு கூந்தலுக்கு நிற மூட்டுதல் சுட்டப்பெறுகின்றது.

*பின்பனிக்கால ஒப்பனைப்பொருள்*

மதுரை மாநகரில் கடை கழி மகளிர் காதலஞ் செல்வரொடு பருவம் எண்ணி யிருக்கின்றனர். இங்கு ஒவ்வொரு பொழுதும் பற்றிக் கூறிய இளங்கோ பின்பனிக் காலத்தையும் விவரிக்கிருர்- இங்கு,

*'வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட*
*அகிலுந் துகிலு மாரமும் வாசமும்*
*தொகுகருப் பூரமுஞ் சுமந்துடன் வந்த'* (14:107-9)

கொண்டலைக் குறிப்பிட்டுப் பருவ வருணனையை முடிக்கிருர். இப்பகுதிக்கு உரை எழுதிய நல்லார் அகில், துகில், ஆரம், வாசம், கருப்பூரம் ஆகிய ஒப்பனைப் பொருட்களின் வகையினை விவரிக்கின்ருர்.

*அகில்*

அருமணவன் தக்கோலி கிடாரவன் காரகிலென்று சொல்லப் பட்ட பலவகைத் தாகிய தொகுதி.

*துகில்*

கோசிகம் பீதகம் பச்சிலை அரத்தம் நுண்டுகில் சுண்ணம் வடகம் பஞ்சு இரட்டு பாடகம் கோங்கலர் கோபம் சித்திரக்கம்பி குருதி கரியல் பேடகம் பரியட்டக்காசு வேதங்கம் புங்கர்க்காழகம் சில்லிகை தூரியம் பங்கம் தத்தியம் வண்ணடை கவற்றுமடி நூல் யாப்பு திருக்கு தேவாங்கு பொன்னெழுத்து குச்சரி தேவகிரி காத்தூலம் இறஞ்சி வெண்பொத்தி செம்பொத்தி பணிப்பொத்தி யென்று சொல்லப்பட்ட பல்வகைத் தாகிய தொகுதி.

*ஆரம்*

மலையாரம் தீமுரன்பச்சை கிழான்பச்சை பச்சைவெட்டை அரிசந்தனம் வேரச்சுக்கொடி யென்று சொல்லப்பட்ட பல் வகைத்தாகிய தொகுதி.

### வாசம்

அம்பர் எச்சம் கத்தூரி சவாது சாந்து குங்குமம் பனிநீர் புழுகு தக்கோலம் நாகப்பூ இலவங்கம் சாதிக்காய் வசுவாசி நிரியாசம் தைலம் என்று சொல்லப்பட்ட பல்வகைத்தாகிய தொகுதி.

### கருப்பூரம்

மலைச்சரக்கு கலை அடைவுசரக்கு மார்பு இளமார்பு ஆரூர்க் கால் கையொட்டுக்கால் மாரப்பற்று வராசான் குமடெறிவான் உருக்குருக்கு வாரோசு சூடன் சீனச்சூடன் என்று பெயர் கூறப் பட்ட பலவகைத்தாகிய தொகுதி.

### அணிகலன்கள்

இந்திர விழவில் ஆடிய மாதவியின் 'ஆடலும் கோலமும் அணியுங் கடைக்கொள ஊடற்கோலமோ டிருக்கிருன்' கோவலன். அது தீர்க்க அவனைக் 'கடல் விளையாட்டுக் காண்டல் விருப்பொடு' அழைத்துச் செல்கிருள் மாதவி. இங்குக் கூடலும் ஊடலும் கோவலற் களித்த மாதவியின் ஒப்பனை அழகினைப் பாதாதிகேசமாக வருணிக்கிருர். இப்பகுதிக்கு உரை வகுத்த நல்லார், கால்விரலணி, காலணி (பரியகம் முதலான), அல்குல் அணி (பூந்துகில் முதலான), தோள்வளை, கையணி, கழுத்தணி, காதணி, கூந்தலணி முதலியவற்றைக் குறிக்கின்ருர்.[1]

### கால் விரலணி

மகரவாய் மோதிரம், பீலி, கான்மோதிரம் முதலியன.

### காலணி: பரியகம்

'பொன்னிதழ் பொதிந்த பன்னிற மணிவடம்
பின்னிய தொடரிற் பெருவிரன் மோதிரம்
தன்னொடு தொடக்கித் தமனியச் சிலம்பின்
புறவாய் சூழ்ந்து புணரவைப் பதுவே'

### காலணி: பிற

'அவ்வாய் மகரத் தணிகிளர் மோதிரம்
பைவாய் பசும்பொற் பரியக நூபுரம்

---

1. சிலப். 6:76-108, பக்:193-96.

மொய்ம்மணி நாவின் முல்லையங் கிண்கிணி
கௌவிய வேனவுங் காலுக் கணிந்தாள்'

அல்குலணி

'குறங்கு செறியொடு கொய்யலங் காரம்
நிறங்கிளர் பூந்துகில் நீர்மையி னுடீஇப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
அறிந்த தமைவர வல்குற் கணிந்தாள்'

தோள்வளை

'ஆய்மணி கட்டி யமைந்தவிலைச் செய்கைக்
காமர் கண்டிகைக் கண்டிரண் முத்திடைக்
காமர்பொற் பாசங் கொளுத்திக் கவின்பெற
வேய்மருண் மென்றோள் விளங்க வணிந்தாள்'

கையணி

'புரைதபு சித்திரப் பொன்வளை போக்கில்
எரியவிர் பொன்மணி யெல்லென் கடகம்
பரியகம் வால்வளை பாத்தில் பவழம்
அரிமயிர் முன்கைக் கமைய வணிந்தாள்'

கழுத்தணி

'சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினைத்
தொங்க லருத்தித் திருந்துங் கயிலணி
தண்கடன் முத்தின் றகையொரு காழெனக்
கண்ட பிறவுங் கழுத்துக் கணிந்தாள்'

காதணி

'நூலவ ராய்ந்து நுவலருங் கைவினைக்
கோலங் குயின்ற குணஞ்செய் கடிப்பிணை
மேலவ ராயினும் மெச்சும் விறலொடு
காலமை காதிற் கவின்பெறப் பெய்தாள்'

கூந்தலணி

'கேழ்கிளர் தொய்யகம் வாண்முகப் புல்லகம்
சூளாம மணியொடு பொன்னரி மாலையும்
தாழ்தரு கோதையுந் தாங்கி முடிமிசை
யாழின் கிளவி யரம்பைய ரொத்தாள்'

இனி இவ் வணிகலன்கள் குயிற்றும் வயிரம், மரகதம், மாணிக்கம், நீலமணி, முத்து, கொடிப்பவளம் முதலான வற்றின் வகைகளையும் தக்க எடுத்துக்காட்டுப் பாடல்களுடன் விளக்குகின்றார்.

**வயிரம்**

இவற்றுட் குற்றம் பன்னிரண்டாவன: சரைமலம், கீற்று, சப்படி, பிளத்தல், துளை, கரி, விந்து, காகபாதம், இருத்து, கோடியில்லன, கோடிமுரிந்தன, தாரை மழுங்கலென விவை.

'சரைமலங் கீற்றுச் சப்படி பிளத்தல்
துளைகரி விந்து காக பாதம்
இருத்துக் கோடிக ளிலாதன முரிதல்
தாரை மழுங்க றன்னோ
டீராறும் வயிரத் திழிபென மொழிப'

என்றாராகலின்.

இனிக் குணங்கள் ஐந்தாவன: எட்டுப் பலகையும், ஆறு கோடியும், தாரையும், சுத்தியும், தராசமுமென விவை;

'பலகை யெட்டுங் கோண மாறும்
இலகிய தாரையுஞ் சுத்தியுந் தராசமும்
ஐந்துங் குணமென் றறைந்தனர் புலவர்
இந்திர சாபத் திகலொளி பெறினே'

என்றார்.

நால்வகை வருணத் தொளியாவன :

'அந்தணன் வெள்ளை யரசன் சிவப்பு
வந்த வசியன் பச்சை சூத்திரன்
அந்தமில் கருமையென் றறைந்தனர் புலவர்'

இனி, மிக்க குற்றங்கள் நான்கின் பயனாவன :

'காக பாத நாகங் கொல்லும்'

'மலம்பிரி யாதது நிலந்தரு கிளைகெடும்'

'விந்து சிந்தையிற் சந்தா பந்தரும்'

'கீற்று வரலினை யேற்றவர் மாய்வர்'

என வரும்,

இனி வருண நான்கின் பயனுவன :

'மறையோ ரணியின் மறையோ ராகிப்
பிறவி யேழும் பிறந்துவாழ் குவரே'

'மன்னவ ரணியின் மன்னவர் சூழ
இந்நில வேந்த ராவரெழு பிறப்பும்'

'வணிக ரணியின் மணிபொன் மலிந்து
தணிவற வடைந்து தரணியில் வாழ்வர்'

'சூத்திர ரணியிற் ருேகையர் கனகநெல்
வாய்ப்ப மன்னி மகிழ்ந்துவாழ் குவரே'

என வரும்.

மரகதம்

வயிரத்தின் வகைபற்றிக் கூறிய நல்லார் அடுத்து மரகதம் பற்றிப் பேசுகின்ருர். வயிரமும் மரகதமும் புராண நிலையில் நல்லா ரால் சுட்டப் பெறுகின்றன. 'வலன்' என்பானின் எலும்பே வயிரமாகியது என்றும், அவன் வயிற்றிலுள்ள பித்தமே மரகத மாகியது என்றும் குறிப்பிடுகின்ருர். இதனை, 'முன்னர் வலனென் பாகிய வயிரச்சாதி கூறி, இனி அவன் வயிற்றிற் பித்தத்தைக் கொத்தி விழுங்கிய கருடன் நகைத்தலான் உமிழ, அஃது இம வான் முதலிய பன்மலைகளிலும் ஊறிப் பிறத்தலிற் கருடோற்கார மென்று பெயர் பெற்ற மரகதச்சாதி', எனக் குறிப்பர்.

இதற்குக் (மரகதத்திற்கு) குற்றம் எட்டுள; அவை: கருகல் வெள்ளை கல் மணல் கீற்று பொரிவு தராசம் இறுகுதலென விவை; என்னை?

'கருகுதல் வெள்ளை கன்மணல் கீற்றுப்
பொரிவு தராச மிறுகுதன் மரகதத்
தெண்ணிய குற்ற மிவையென மொழிப'

என்ருர்கலின்.

இவற்றுள், மிக்க குற்றமுடையன ஏகை-இரேகை-கீற்று; மாலை-தார்; இருள்-கருகுதல் என்னும் இம் மூன்று மென்ருரென்க. பாசார் மேனிப் பசுங் கதிரொளி யென்ற மிகையானே குணங்களும் எட்டென்பதே பெறுதும்;

'நெய்த்தல் கிளிமயிற்கழுத் தொத்தல்பைம் பயிரிற்
பசுத்தல் பொன்மை தன்னுடன் பசுத்தல்
பத்தி பாய்தல் பொன்வண் டின்வயி
றொத்துத் தெளிதலோ டெட்டுங் குணமே'

என்ருராகவி னெனக் கொள்க.

*மாணிக்கம்*

'பதுமமு நீலமும் விந்தமும் படிதமும்
விதிமுறை பிழையா விளங்கிய சாதியும்' (14:186-87)

என மாணிக்க வருக்கம் பற்றிக் குறிக்கிருர் இளங்கோ. இதற்கு உரை எழுதிய நல்லார், 'விதிமுறை பிழையா வெனவே பிறப்பிடமும், வருணமும், பெயரும், குணமும், குற்றமும், நிறமும், விலையும், பத்தியுமென்னு மிவையும் பிறவும் அடங்கின; என்னை?

'மாணிக் கத்தியல் வகுக்குங் காலைச்
சமனெளி சூழ்ந்த வொருநான் கிடமும்
நால்வகை வருணமும் நவின்றவிப் பெயரும்
பன்னிரு குணமும் பதினறு குற்றமும்
இருபத் தெண்வகை யிலங்கிய நிறமும்
மருவிய விலையும் பத்தி பாய்தலும்
இவையென மொழிப வியல்புணர்ந் தோரே'

என்ருராகவின். இவற்றுள், பதுமம்-பதுமராகம்; சாதுரங்க மென்பதும் அது. நீலம்-நீலகந்தி; சௌகந்தியென்பதும் அது. விந்தம்-குருவிந்தம்; இரத்தவிந்து வென்பதுமது. படிதம்-கோவாங்கு; என்னை?

'வன்னியிற் கிடக்கும் வருணநாற் பெயரும்
உன்னிய சாதுரங்க மொளிர்குரு விந்தம்
சௌகந்தி கோவாங்கு தானு கும்மே'

எனவும்,

'தாமரை கழுநீர் சாதகப் புட்கண்
கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு
மாதுளைப் பூவிதை வன்னியீ ரைந்தும்
ஓதுசா துரங்க வொளியா கும்மே'

எனவும்,

'திலக முலோத்திரஞ் செம்பருத் திப்பூக்
கவிர்மலர் குன்றி முயலுதி ரம்மே
சிந்துரங் குக்கிற் கண்ணென வெட்டும்
எண்ணிய குருவிந்த மன்னிய நிறமே'

எனவும்,

'கோகிலக்கண் செம்பஞ்சு கொய்ம்மலர்ப் பலாசம்
அசோக பல்லவ மணிமலர்க் குவளை
இலவத் தலர்க ளென்றுறு குணமும்
சௌகந் திக்குச் சாற்றிய நிறனே'

எனவும்,

'கோவைநற் செங்கல் குராமலர் மஞ்சளெனக்
கூறிய நான்குங் கோவாங்கு நிறனே'

எனவும் சொன்னார். ஒழிந்தனவும் விரிப்பின் உரை பெருகும்; வந்தவழிக் கண்டு கொள்க', என மாணிக்க வகையினை விளக்குகின்றார் நல்லார்.

*நீலமணி*

இதற்குச் சாதி நான்கும், குணம் பதினொன்றும், குற்றம் எட்டு மெனக் கொள்க; என்னை?

'நீலத் தியல்பு நிறுக்குங் காலை
நால்வகை வருணமு நண்ணுமா கரமும்
குணம்பதி னொன்றுங் குறையிரு நான்கும்
அணிவோர் செயலு மறிந்திசி னோரே'

என்றாராகலின்.

'வெள்ளை சிவப்புப் பச்சை கருமையென்
றெண்ணிய நாற்குலத் திலங்கிய நிறமே'

'கோகுலக் கழுத்துக் குவளை சுரும்பர்
ஆகுலக் கண்க ளவிரிச் சாறு ......
காயா நெய்தல் கனத்தல் பத்தி
பாய்த லெனக்குணம் பதினொன் றாமே'

என்பன. இனிக் குற்றம் வந்தவழிக் கண்டு கொள்க.

*முத்து*

'இதற்குக் காற்றேறு மணலேறு கல்லேறு நீர்நிலை யென்பன மிக்க குற்றங்கள்; பிறவும் குற்றங்கள் பலவுள வாயினு மென்க. வெள்ளி, அங்காரக னென்பன மிக்க குணமுடையன. பிறவுங் குணங்களுள வாயினு மெனக் கொள்க', என முத்துக்களின் குணமும் குற்றமுங் கூறுகின்றார்.

*கொடிப்பவளம்*

'கருப்பத்தே துளைபடுதல், கல்லிடுக்கிற் புக்கு முடங்குதல், திருக்கு முறுக்குண் டெழுதல் ஆகியன இவை மிக்க குற்றங்கள். பிறவுங் குற்றங்களுள வாயினுமெனக் கொள்க. இனிக் குணமிக்குக் குற்றங்கள் நீங்கியன, நிறமும் உருட்சியும் சிந்துரமும் ஈச்சங் காயும் முசுமுசுக்கைக் கனியும் தூதுவழுதுணம் பழமும் போல்வன வெனக் கொள்க', வெனக்கொடிப்பவளத்தின் குற்றமும் குணமும் எடுத்தோதுகின்றார்.

இங்ஙனம் வயிரம் முதல் கொடிப்பவளம் ஈருகவுள்ள ஒளியும் அழகும் விலையும் மிக்க கற்களின் வகை பற்றி விளக்கிச் செல் கின்றார் நல்லார்.[1]

*7. கனுநூல்*

அடைக்கலக் காதையில் கோவலனைச் சாயல் கண்டு பணிந்த மாடலன், அவன் சிறப்புக்களை யெல்லாம் எடுத்துக் கூறி,

'இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி யுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது'

(15:91-93)

எனக் கூறி இரங்குகிறான். கேட்ட கோவலன் தான் கண்ட கன வினை யுரைக்கிறான். இக் கனவுபற்றி விளக்கிய நல்லார் கனு நூலிலிருந்து நான்கு பாடல்களை எடுத்துக்காட்டுகின்றார். இவற்றில் மூன்று பாடல்கள் 'கோட்டுமா' என்ற சொற்பொருள் விளக்கத்தில் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன. இன்னொரு பாடல் கனவு கண்ட நேரத்திற்கும் கனவின் பயனிற்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது. நல்லார் காட்டும் கனுநூற் கருத்துக்கள் வருமாறு:

1. சிலப். 14:180-198, பக்: 381-85.

கோட்டுமா-எருமையேற்றை; என்னை?

'சொல்லத் தகுமுகட் டொட்டகம் வெட்டுந் துணை மருப்பார்
இல்லத் தெருமை கழுதைக ளென்றிவை யேறிநின்றே
மெல்லத் தரையி லிழிவதன் முன்னம் விழித்திடுமேல்
கொல்லத் தலைவரு மாற்றருஞ் சீற்றத்துக் கூற்றுவனே'
(கனநூல்: 15)

என்றுராகலின் இனிப் பன்றி யெனவுமாம்;

'களிறுமேற் கொள்ளவுங் காழக நீப்பவும்...
கனவி னரியன காணு' (புறத்: 41:9-11)

என்றூர் புறத்தினு மாதலால் களிறென்றது ஈண்டுப் பன்றியை; என்னை?

'மிக்க வெயிற்றின கொம்பின பன்றி விறற்குரங்கு
தொக்கன தம்மைக் கனவினிற் காணிற் சுடர்மகுடச்
சக்கர வர்த்திக ளாற்பய முண்டெனுந் தம்மயிர்கள்
உக்கன வாதல்செய் தாற்பொரு டேயும் பயமுடைத்தே'
(கனநூல்:10)

என்றுராகலின். கோட்டுமா வென்பதனை யானையெனின்,

'ஓதும் பசுவு மிடபமும் யானையு மோங்கல்களும்
சீர்துன்று கோயிலு மேறிடக் காணினுந் தீமலத்தை
மீதொன்ற மேனியிற் பூசிடக் காணினு மெல்லியலார்
சூதென்று கொங்கை புணரினும் வாழ்வென்று
சொல்லினரே' (கனநூல்:4)

என்பதனுல் யானை யன்மை யறிக.

இனி, இக்கனுக் கடை யாமத்துக்கண்ட தாதலால் இவ்விடத்தே கடிதிற் பலிக்கு மென்று னெனினும் அமையும்;

'... ... ... ... ஆயிடை
வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே' (சிந்:219)

என்றுர் சிந்தாமணியினும்.

'படைத்தமுற் சாமமோ ராண்டிற் பலிக்கும் பகரிரண்டே
கிடைத்தபிற் சாம மிகுதிங்க ளெட்டிற் கிடைக்கு மென்னும்
இடைப்பட்ட சாமமோர் மூன்றினிற் றிங்களோர் மூன்றென்பவால்
கடைப்பட்ட சாமமு நாள்பத்து ளேபலங் கைபெறுமே'
(கனநூல்.2)

இவை கணுநூலாதலாற் கொள்க,' எனக் கணுநூற் கருத்துக்களை எடுத்துக் காட்டுகிறார். இது நல்லாரின் கணுநூற் பயிற்சியைக் காட்டும்.

### 8. களவு நூல்

அரசன் ஆணைபெற்று வந்தகருந்தொழில் கொல்லன் காவலர் களிடம் கோவலனைக் கள்வனெனக் காட்டுகிறான். அவர்களோ,

'இலக்கண முறைமையி னிருந்தோ னீங்கிவன்
கொலைப்படு மகனலன்' (16:162-63)

என்கின்றனர். இங்குக் கள்வர்தம் இயல்பையும், களவின் முறைகளை யும் எடுத்துக் காட்டுகின்றான் பொற்கொல்லன் (16:165-189). இவற்றைக் களவுநூற் கருத்துக்களாகக் காட்டுவர் நல்லார். 'கருந் தொழிற் கொல்லன் காட்டினன் உரைப்போன், (16:165) என்ற வரிக்குக் 'கொலைத் தொழில் புரிந்த பொற்கொல்லன் களவு நூலி லுள்ள ஏதுக்களைக் காட்டினனாய் உரைக்கின்றவனென்க,' என எழுதுகின்றார்.

'தந்திர கரண மெண்ணுவ ராயின்
இந்திரன் மார்பத் தாரமும் எய்துவர்' (16:180-181)

என்பதன் உரையில், 'களவுநூலிற் சொல்லிப் போதுகின்ற தொழில்களை அறிந்து எண்ணிச் செய்வராயின் ...... எய்துவர்' எனக் களவுநூல் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

இதேபோன்று 188-89-வரிகளின் உரையிறுதியில், 'இக்களவு நூலை நாம் கேட்பின், ஓடி யொளிக்கலா மிடமில்லை யென்றுமாம்' எனவும் குறிக்கின்றார். இவை நல்லாரின் களவுநூற்கல்வியை விளக்கும்.

### 9. சமயமும் தத்துவமும்

சமயக் கொள்கைகளைப் பொறுத்தவரை நல்லார் எல்லாச் சமயங்களையும் நன்குணர்ந்து போற்றுகின்றார் என்பது தெளிவு. சைவ, சைனக் கொள்கைகள் இவர்தம் உரையில் நிறைந்து காணப்படும். நல்லாரின் 'வேட்டுவ வரி' உரையை நோக்கின் அவர் எந்த அளவிற்குக் கொற்றவை வழிபாட்டை நன்குணர்ந்து உரைசெய்துள்ளார் என்பது போதரும். இதுபோன்று ஆய்ச்சியர் குரவை யுரையில் திருமால் வழிபாட்டை உணர்ந்து எழுதுகிறார். நாடுகாண் காதையில் அருகனுக்குச் சாரணர் கூறும் பல்வகைப்

பெயர்கட்கு நல்லார் கூறும் விளக்கம் அருக சமயத்தில் அவருக்கிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்தும். சிவபெருமானை, 'இறைவன்' என்று மதிக்கும் அவர்தம் சமயக் காழ்ப்பின்மையும் நோக்கத்தக்கது. இங்ஙனம் நல்லாரின் சமயத் தத்துவ எண்ணங்கள் பலநிலைகளில் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன. இவை பற்றி நல்லார் தனியே எடுத்துப் பேசும் சில செய்திகள் இங்குத் தரப்படுகின்றன.

### நால்வகைத் தேவர்

நால்வகைத் தேவராவார் முப்பத்து மூவர்; அவர் வசுக்கள் எண்மரும், திவாகரர் பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும் மருத்துவர் இருவருமென விவர் (*5:176-8*, பக்:*167*).

### மூவாறு கணங்கள்

மூவாறு கணங்களாவார்,

'கின்னரர் கிம்புருடர் விச்சா தரர்கருடர்
பொன்னமர் பூதர் புகழியக்கர்-மன்னும்
உரகர் சுரர்சா ரணர்முனிவர் மேலாம்
பரகதியோர் சித்தர் பலர்'

'காந்தருவர் தாரகைகள் காணுப் பசாசகணம்
ஏந்துபுகழ் மேய விராக்கதரோ-டாய்ந்ததிறற்
போகா வியல்புடைய போகபூமி யோருடனே
ஆகாச வாசிகளா வார்'

என விவர்; ஆகாசர் நாகர் சித்தர் காந்தருவர் விஞ்சையர் பசார்ச தாரகை போகபூமியோர் கிம்புருடர் சுரர் அசுரர் பூதம் முனி தேவர் கருடர் இராக்கதர் இயக்கர் சாரணர் எனவுங் கொள்க (*5:176-8*, பக்:*167*)

### பஞ்ச பரமேட்டிகள்

பஞ்ச பரமேட்டிகளாவார் அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்களென விவர் (*10:15-25*, பக்:*268*)

### பஞ்ச மந்திரம்

அ ஸி ஆ உ ஸா - அ சி ஆ உ சா (*10:98-101*, பக்:*274*)

### அதிசயம் மூன்று

அதிசய மூன்றுவன சகசாதிசயம், கர்மக்ஷயாதிசயம், தெய்வீகாதிசய மென்பன (*10:156-63*, பக்:*278*).

**எண்வகைக் கன்மம்**

ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோக நீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என விவை. டாக்டர் உ. வே. சா. அவர்கள் ஞானவரணீய முதலிய இவ்வெட்டும் காதி அகாதி யென இருவகைப்பட்டு நூற்று நாற்பத்தெட்டாக விரியு மென்பர் (10:177, பக்:280).

**கேவலஞானம்**

'பகவன்' என்பதற்குக் 'கேவலஞானி' என வுரை எழுதுகிறார் (10:177, பக்:280) நல்லார். உ. வே. சா. தமது குறிப்புரையில், 'கேவல ஞானம்-ஐந்து ஞானத்துள்ளும் சிறந்தது. ஐந்து ஞானங்களாவன : 1. மதிஞானம்-சுபாவ புத்தி 2. சுருத ஞானம்-நூல் உணர்ச்சி 3. அவதிஞானம்-தன்னுடைய முற்பிறப்பை யறியு மறிவு 4. மனப்பரியயஞானம்-தன்னுடைய முற்பிறப்பையும் பிறருடைய முற்பிறப்பையும் அறியுமறிவு ; 5. கேவல ஞானம்-திரிகால உணர்ச்சி', எனக் குறிப்பிடுகிறார்.

**விரதம்**

'குணவதன்' என்பதில் அமையும் 'வதம்' என்பதற்கு விரதம் எனப் பொருள் கூறுகிறார் நல்லார்(10:181, பக்:280). இது, 'அனுவிரதம் குணவிரதம் சிக்ஷாவிரதமென மூன்று வகைப்படும் ; அவற்றுள் குணவிரதம்-திக்குவிரதம், தேசவிரதம் அநர்த்த தண்ட விரதமென மூன்று வகைப்படும்', என்பர் உ. வே. சா.

**அங்காகமம்**

'அங்கம் பயந்தோன்', என்பதற்கு, 'அங்காகமத்தை யுண்டாக்கினவன்', என உரை கூறுவர் நல்லார் (10:187, பக்:281). இவ் வங்காகமம் பன்னிரு பகுப்புடைத்து. அவை வருமாறு: 1. ஆசாராங்கம் 2. சூத்திர கிருதாங்கம் 3. ஸ்தானங்கம் 4. ஸமவாயங்கம் 5. வியாக்கியாப் பிரஜ்ஞப்த்யங்கம் 6. ஞாத்ரு கதாங்கம் 7. உபாஸ காத்தியயனங்கம் 8. அந்தக்கிருததசாங்கம் 9. அநுத்தரோப பாதிகதசாங்கம் 10. பிரச்சிநவியாகரணங்கம் 11. விபாக சூத்திராங்கம் 12. திருஷ்டிவாதாங்கம் என விளக்குவர் உ. வே. சா.

**எண்குணம்**

எண்குணமாவன அநந்த ஞானம், அநந்த வீரியம், அநந்த தரிசனம், அநந்த சுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம், நிராயுஷ்யம், அழியா வியல்பென விவை (10:188, பக்:281).

முக்குடை

முக்குடையாவன : சந்திரா தித்தம், நித்திய விநோதம், சகல பாசன மென்பன (11:1-4, பக்:298).

அறம்

'அறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியும்
மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்' (14:11-12)

என்னும் வரிகட்கு உரை கூறிய நல்லார் அறத்துறை பற்றியும் புறத்துறை பற்றியும் விளக்கிச் செல்கிறார்.

'அறமாவது இருவகைத்து ; இல்லறமும் துறவறமுமென. அவற்றுள் இல்லற மென்பது கற்புடை மனைவியோடு இல்லின் கண் இருந்து செய்யும் அறம்.

அதன் துறையாவன : தன்னை யொழிந்த மூவர்க்கும் துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் தேவர்க்கும் முனிவர்க்கும் விருந்தினர்க்கும் சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் துணையாதலும், வேள்வி செய்தலும், சீலங் காத்தல் முதலியனவும், அருளு மன்பு முடையனுதலும்.

இனித் துறவறமாவது நாகம் தோலுரித்தாற்போல அகப் பற்றும் புறப்பற்றுமற்று இந்திரிய வசமறுத்து முற்றத் துறத்தல்.

அதன் துறையாவன : சரியை, கிரியை, யோகம், ஞான மென்பன. அவற்றுள் சரியை அலகிடல் முதலியன ; கிரியை-பூசை முதலியன. யோகம் எண்வகைய. அவை, இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி யென்பன ; அவற்றுள்,

'பொய்கொலை களவே காமம் பொருணசை
இவ்வகை யைந்து மடக்கிய தியமம்'

எனவும்,

'பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு
பயனுடை மரபி னியம மைந்தே'

எனவும்,

'நிற்ற லிருத்தல் கிடத்த னடத்தலென்
றுரைத்த நான்கி னுல்கா நிலைமையொ

அ-14

*டின்பம் பயக்குஞ் சமய முதலிய*
*அந்தமில் சிறப்பி னுசன மாகும்'*

எனவும்,

*'உந்தியொடு புணர்ந்த விருவகை வளியும்*
*தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை'*

எனவும்,

*'பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமை*
*ஒருவழிப் படுப்பது தொகைநிலை யாமே'*

எனவும்,

*'மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை'*

எனவும்,

*'நிறுத்திய வம்மன நிலைதிரி யாமற்*
*குறித்த பொருளொடு கொளுத்துவது நினைவே'*

எனவும்,

*'ஆங்ஙனங் குறித்த வம்முதற் பொருளொடு*
*தான்பிற னுகாத் தகையது சமாதி'*

எனவும் வருவன வற்ருலறிக', என அறத்துறையினை விளக்குவர் நல்லார். இங்கு 'யோகம்' பற்றி நல்லார் கூறுவன சைவ சமயக் கருத்துக்கள் என மு. அருணுசலம் அவர்கள் குறிப்பிடுவர்.

### புறத்துறை

'மறமும் அதன் துறைகளும். அதன் துறையாவன எழு வகைய ; அவை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை யென இவை. இனி விரிப்பின் அகலும். 'தொகை மறவரது தறுகண்', என்பதனுன் இவையும் இவற்றின் துறைகளும் வந்தவழிக் கண்டு கொள்க', எனப் புறத்துறையைச் சுருங்கக் கூறி முடிக்கின்ருர்.

இங்ஙனம் சமயத் தத்துவங்கள் சிலவற்றைச் சுட்டிச் செல் கின்ருர் நல்லார்.

### 10. தொழில் வகை

இந்திர விழவூரெடுத்த காதையில் காருகர் இருக்கை பற்றி அடிகள் குறிக்கின்ருர் (5:16-17). இதற்கு உரை எழுதிய நல் லார் காருகத் தொழில் வகை இரண்டினைப்

'பருத்திநூல் பட்டுநூ லமைத்தாடை யாக்கலும்
சுமத்தலும் பிறவுங் காருக வினைத்தொழில்'

(திவாகரம்:12)

என்ற திவாகர நூற்பாவை எடுத்துக் காட்டிச் சுட்டுகிறார்.

இதேபோன்று, 'கருங்கைக் கொல்லர்' (5:29) என்பதற்கு விளக்கம் எழுதிய நல்லார், 'கருங்கை இருவகைத்து ; என்னை?

'கொன்றுவாழ் தொழிலினும் வன்பணித் தொழிலினும்
கன்றிய தொழிற்கை கருங்கை யெனப்படும்'

(திவாகரம்)

என்ற திவாகர நூற்பாவை எடுத்துக் காட்டிக் கருங்கை வினைத் தொழில் இரண்டினைக் குறிப்பிடுகின்றார்.

### 11. பிற செய்திகள்

மேற்குறிப்பிட்ட பல துறைகளில் அடங்காத வேறு சில செய்திகளைப் பற்றியும் நல்லார் கூறிச் செல்கின்றார். இவற்றிற் குறிப்பிடத் தக்கன எண்வகைக் கூலம், மருந்து வகை, கடல்படுபொருள், ஐம்பெருங்குழு, எண்பேராயம் ஆகியவை பற்றி விளக்கிச் செல்வது.

**எண்வகைக் கூலம்**

'பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்' (5:22-23)

என்ற வரிகட்கு உரை எழுதிய நல்லார், 'எண்வகைக் கூலமாவன:

'நெல்லுப் புல்லு வரகுதினை சாமை
இறுங்கு தோரையொடு கழைவினை நெல்லே'

என விவை. இனிக்கூலம் பதினெண்வகைத் தென்பர் கூத்தநூலாசிரியர். என்னை? 'பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக' என்றாரா கலின்', என எழுதுகிறார்.

ஊர்காண் காதை 208-11-வரிகளினுரையில், 'கூலம்—ஈரெண் வகைத்து; என்னை?

'நெல்லுப் புல்லு வரகு...இராகியெண் கூலம்'

எனவும்,

'எள்ளுக் கொள்ளுப் பயறுழுந் தவரை
கடலை துவரை மொச்சை யென்றுங்
குடனிவை முதிரைக் கூலத் துணவே'

எனவும் சொன்னாராகலின்,' எனக் குறிப்பிடுகின்றார். இங்கு 'நெல்லுப் புல்லு' வெனத் தொடங்கும் பாடலின் இறுதி வேறுபடுகிறது.

மருந்துவகை

சல்லியகரணி சந்தானகரணி சமனியகரணி மிருதசஞ்சீவினி என்பன (5:224-34, பக்:171)

கடல்படுபொருள்

கடல் வளனுவன :

'ஓர்க்கோலை சங்க மொளிர்பவளம் வெண்முத்தம்
நீர்ப்படு முப்பினோ டைந்து' (10:102-11, பக்: 275)

ஐம்பெருங்குழு

'அமைச்சர் புரோகிதர் சேனா பதியர்
தவாத்தொழிற் றூதுவர் சாரண ரென்றிவர்
பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே'
(5:157-60, பக்: 166)

எண் பேராயம்

'கரணத் தியலவர் கரும காரர்
கனகச் சுற்றங் கடைகாப் பாளர்
நகர மாந்தர் நளிபடைத் தலைவர்
யானை வீர ரிவுளி மறவர்
இனைய ரெண்பே ராய மென்ப'
(5:157-60, பக்:166)

இங்ஙனம் பல்வேறு துறைகளில் அடியார்க்கு நல்லாரின் தெளிந்த-முதிர்ந்த புலமையினையும், நுணுகிய ஆய்வுத் திறனையும் காண்கிறோம். இத்தகு பல்துறைச் செல்வராக நல்லார் விளங்கியமையாலேயே அவர்தம் உரைநூல் இன்று அறிஞர்களிடையே சிறந்துரைக்கப்படுகிறது. அடியார்க்கு நல்லார் உரைக்குப் பின் இன்று பலரின் உரைகள் சிலம்பிற்கு எழுதப் பட்டிருப்பினும் அவையெல்லாம் அடியார்க்கு நல்லார் உரை பெற்ற செல்வாக்கைப் பெற முடியவில்லை. ஓர் உரையாசிரியருக்குரிய அனைத்துத் திறனும் அடியார்க்கு நல்லாரிடம் பொருந்தியிருந்தமையே இத்தகு சிறந்த ஓர் உரைநூலைப் படைத்தளிப்பதற்குக் காரணமென்பது அங்கை நெல்லியெனப் போதரும்.

# உரை நயம்

*'பருந்து நிழலுமெனப் பாவு முரையும்*
*பொருந்துநெறி யெல்லாப் பொருளும்-தெரிந்திப்*
*படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னூல்*
*அடியார்க்கு நல்லானென் பான்'*

என்ற உரைச்சிறப்புப் பாயிரப்பாடல் நல்லாரின் உரைச் சிறப்பை மிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகிறது. இவர்தம் உரைநடை சிற்சில விடங்களில் எதுகை மோனை பெற்று இனிய சுவைபொதுளிய கவிதை நடையாக அமைகின்றது. காப்பியப் பொருண்மை, கதையின் கட்டுக் கோப்பு, நிகழ்ச்சி ஒருமைப்பாடு, காப்பிய மாந்தரின் பண்பு, நூலாசிரியரின் ஆழ்ந்த கவியுளம், கதைநிகழ்ச்சியின் கால அளவு, காதைகளும் பாடல் அமைப்பும் ஆகிய பல்வேறு கூறுகளை நுணுகி நோக்கி ஆராய்ந்து திறம்படக் கூறுகின்றார் நல்லார். படிப்போரின் மனநிலைகளுக்குப் பொருந்துமாறு உரை எழுதிய நயம் போற்றத்தக்கது. எண்ணற்ற பல சொற்களுக்குப் பொருள் விளக்கம் தருகின்றார். பல சொற்களுக்கும் தொடர்களுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பலபொருள் கூறுகின்றார். வேறுபட்ட பல பாடபேதங்களை எடுத்துக்காட்டி அவற்றின் பொருள் வேறுபாட்டையும் சுட்டுகின்றார். சில பகுதிகட்கு உரை எழுதுகின்றபோது சில சொற்களை வருவித்துப் பொருளுரைக்கின்றார். முன்பின் நோக்கி உரை எழுதுகின்ற நயமும் பாராட்டத்தக்கது. மூலநூலாசிரியர் ஏன் இவ்வாறு சொன்னார் என்ற வினவைத் தமக்குள்ளே எழுப்பி விடை பகரும் நோக்கில் காரண காரியத்

தொடர்போடு உரை வகுக்கின்றார். ஒவ்வொரு காதையின் இறுதியிலும் அக்காதை நிகழ்ச்சிகளைத் தொகுத்து ஒரு முடிப்புரை எழுதுகின்றார். மேலும் ஒரே காதையில் பலவிடங்களில் சில தொடர்புடைய நிகழ்ச்சிகளை விளக்கிவிட்டு அதற்கோர் முடிப்புரையும் தருகின்றார். சிலவிடங்களில் முன்னெழுதியவற்றையே அவ்வப் பகுதி தெளிவின் விளங்க வேண்டுமென்பது கருதிப் பின்னும் எழுதுகின்றார்.

இவை தவிர அடியார்க்கு நல்லார் தாம் எடுத்தாளும் இலக்கிய இலக்கண, இசை, நாடக நூற்பாடல்களைப் பெரும்பாலும் இடம் சுட்டியே குறிப்பிடுகின்றார். எண்ணற்ற பல சொற்களுக்கு இலக்கணக் குறிப்புத் தருவதோடு புணர்ச்சி விதியும் கூறுகின்றார். மூல நூற்கண் அமையும் அலங்காரம், மெய்ப்பாடு முதலானவற்றையும் சுட்டிச் செல்கின்றார்.[1] இவையும் நல்லாரின் உரைச் சிறப்பைத் தெற்றென விளக்கி நிற்கும். இவை தவிரப் பிறவாற்றானமையும் நல்லாரின் உரை நயங்கள் சில இப்பகுதிக்கண் நோக்கப் படுகின்றன.

### *1.* உரைவகை

முதல் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பிய மரபியலின் கண் இருவகை உரை பற்றிய குறிப்புக் காணக்கிடக்கின்றது. அவை காண்டிகை, விருத்தி என்பன.

இவற்றிற் காண்டிகை உரை வருமாறு:

'பழிப்பில் சூத்திரப் பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்'

'விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே'

(தொல்.மரபு: *102,103*)

காண்டிகை யுரையாவது சூத்திரத்தில் உட்பொருள் அல்லது கருத்தை மறைவின்றித் தெளிவாக விளக்குவது; சூத்திரப்பொருள் விட்டுப் போகாது கருத்தை விரித்துக் காரண காரிய முறைகளோடும், எடுத்துக்காட்டுக்களோடும் பொருளை விளக்குவது. எனக் காண்டிகையுரைக்கு விளக்கம் தருகின்றது தொல்காப்பியம்.

---

1. நல்லாரின் இலக்கிய, இலக்கண, இசை, நாடகப்புலமை கட்டுரைகள் பார்க்க.

விருத்தியுரை வருமாறு :

'சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே'
'மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்'

(தொல்.மரபு:104,105)

என விளக்குவர் தொல்காப்பியர். இதனால் விருத்தியுரை சூத்திரத்தின் உட்பொருளைக் கொண்டிருப்பதோடு அதனோடு ஒப்புடைய பொருள்கள் எல்லாவற்றையும் கொண்டிருக்க வேண்டும். மேலும் இது வினாவிடையாகவும், ஐயமும் திரிபு மின்றியும், தன்னூலானும் பிறநூல் முடிபுகளாலும் பொருள் தெளிவும் வலிவும் கொண்டு அமைய வேண்டும் என்பதை அறிகின்றோம்.

நன்னூலார் ஓர் உரைநூலில் இருக்க வேண்டிய பொருட் கூறுகள் பதினான்கினைக் குறிப்பிடுகின்றார். அவை பாடஞ்சொல்லல், கருத்துரைத்தல், சொல் வகுத்தல், சொற்பொருள் உரைத்தல், பொழிப்புரைத்தல், உதாரணங் காட்டல், வினாத் தோற்றல், விடை கொடுத்தல், விசேடம் காட்டல், விரிவு காட்டல், அதிகார வரவு காட்டல், துணிவு கூறல், பயனொடு படுத்தல், ஆசிரிய வசனங் காட்டல் என்பன.

'பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதி காரம் துணிவு பயனோ
டாசிரிய வசனமென் றீரே ழுரையே'

(நன்.பொது:20)

இவற்றுள் கருத்து, பதப்பொருள், எடுத்துக்காட்டு, வினா, விடை யாகிய ஐந்து கூறுகளைக் கொண்டது காண்டிகைவுரையாகும்.

'கருத்து பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானும்
சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை'

(நன்.பொது:21)

என்பர் நன்னூலார். இவ்வைந்து காண்டிகை உறுப்போடு வேறு சில இன்றியமையாத கூறுகளும் விருத்தியுரையுள் கூறப்பட வேண்டும். இதனைச்

'சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்
கின்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐய மகல ஐங்காண் டிகை யுறுப்பொடு
மெய்யினை எஞ்சா திசைப்பது விருத்தி'

(நன்.பொது:22)

என்பர்.

தமிழில் முதல் உரைநூலான இறையனுர் அகப்பொருள்உரை நான்கு வகை உரையினைக் குறிப்பிடுகின்றது. அவையாவன: கருத்துரைத்தல், கண்ணழித்துரைத்தல், பொழிப்புத் திரட்டல், அகலங்கூறல் என்பன. நம்பியகப் பொருளும் இந்நான்கினைக் குறிப்பிடுகின்றது.

இவற்றுட் கருத்துரைத்தலாவது சூத்திரத்தின் உட்கோள் உரைத்தல். கண்ணழித்தலாவது சூத்திரத்துள் சொற்ருேறும் பொருள் உரைத்தல். பொழிப்புத் திரட்டலாவது சூத்திரத்துப் பொருளை யெல்லாம் தொகுத்து உரைத்தல். அகலங் கூறலாவது சூத்திரப் பொருளைத் தூய்மை செய்தற்குக் கடாவும் விடையும் உள்ளுறுத்து விரித்துரைத்தல்.

அறநூற்களில் ஒன்ருன நாலடியாரிலும் உரைபற்றிய செய்தி ஓரிடத்து இடம் பெறுகின்றது. திரண்ட பொருளைச் சொல்லுதல், விரித்துரைத்தல், கடாவும் விடையுமாகச் சொல்லுதல், இலேசான பொருளை உரைத்தல், எச்ச உம்மைகளால் எஞ்சிய பொருளை யுரைத்தல் ஆகியன உரையின் இயல்பு எனக் கூறும்.

'பொழிப்பகல நுட்பநூல் எச்சமென்று ஆற்றக்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள்-பழிப்பில்
நிரையாமோ சேக்கு நெடுங்குன்ற நாட
உரையாமோ நூலிற்கு நன்று'

வீரசோழியம் (வீர:178) நன்னூலார் குறிப்பிட்டதுபோலப் பதினன்கு வகை உரையின் இயல்பினைச் சுட்டிக் காட்டுகிறது. யாப்பருங்கல விருத்தி இதனை வேருெரு வகையில் விளக்குகிறது.

'முத்திறத் தானும் மூவிரு விகற்பினும்
பத்து விதத்தினும் பதின்மூன்று திறத்தானும்
எழுவகை யானும் இரண்டு கூற்ருனும்
வழுவுநனி நீங்க மாண்பொடும் மதத்தொடும்
யாப்புறுத் துரைப்பது சூத்திரஃவுரையே'

இவற்றில் வழுவென்பது குன்றக்கூறல் முதலிய பத்துக் குற்றம்; மாண்பு, சுருங்கச் சொல்லல் முதலிய பத்து அழகு ; மதம் உடன் படல், மறுத்தல் முதலிய எழுவகை. இங்ஙனம் உரையில் அமைய வேண்டிய பல்வேறு உறுப்புக்கள் பற்றி இலக்கண, இலக்கிய ஆசிரியர்கள் குறிப்பிட்டுச் செல்கின்றனர்.[1]

இங்குக் கூறிய உரையின் உறுப்புக்கள் அனைத்தும் நன்னூலார் கூறும் பதினான்கு உறுப்புக்களுள் அடங்கும். இப்பதினான்கு கூறுகளும் எங்ஙனம் நல்லார் உரையில் கொள்ளப்படுகின்றன எனக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்க மன்றாயினும், இக்கூறுகள் அனைத்தும் சிறப்பிடம் பெறுகின்றன எனத் துணிந்து கூறலாம்.

*பாடங்காட்டல்*

இக்கட்டுரையில் 'பாட பேதம்' பற்றிய பகுதியில் விரிவாக அமையும்.

*கருத்துரைத்தல்*

கருத்துரைத்தல் பலவிடங்களில் அமையும். இந்திர விழ வூரெடுத்த காதை 89-94 வரிகட்கு உரை எழுதத் தொடங்குமுன் அதன் உட்கருத்து இன்ன வென்பதை, 'இனி, முன்னாட் கரிகாலன் செய்த செயல் கூறுவார்' எனக் கூறுகின்றார். இதே காதையில் 204-234 வரிகட்கு உரை எழுதும் நல்லார், 'இனி வீதி வருணனை கூறுவார்' எனக்கூறி இப்பகுதி புகார் நகர வீதி வருணனை பற்றியது என்னும் உட்கருத்தை எடுத்துக் காட்டுவார்.

14-வது ஊர்காண் காதையின்கண் இங்ஙனம் உரை எழுதும் பகுதிகளின் உட்கோளை, உரைக்கு முன்னர் அல்லது பின்னர் எடுத்துக் காட்டுவது சிறப்பிடம் பெறுகின்றது. பெண்டிரும் உண்டியும்(இன்பமும் பொருளும்) துன்பம் தருவனவே யென்னும் கருத்தமைந்த மூலநூற்பகுதிக்கு உரை கூற முற்பட்ட நல்லார் அது இன்ன பொருள் பற்றியது என்பதை, 'இனி, இன்பமும் பொருளும் சிறிது இன்பம் பயந்து பெரிது துன்பம் விளைக்கு மென்பதூஉம், அறம் சிறிது துன்பம் பயந்து பெரிது இன்பம் விளைக்கு மென்பதூஉம் கூறுவார்'[2] என முன்னுணர்த்துகின்றார்.

பிரிதற் றுன்பமும் புணர்தல் துன்பமும் உற்ற இராமன், நளன் கதைகளை விளக்கப்போந்த நல்லார், 'இனி, அப்பலருள்

1. உரை வகை பற்றிய குறிப்புக்கள் 'உரையாசிரியர்கள்' என்ற நூலிலிருந்து கொள்ளப்பெற்றன.
2. சிலப். 14:33-34-உரை, பக்:369.

(துன்புற்ருர்) தேவரிற் சிறந்தோனெருவனேயும், மக்களுட் சிறந் தோனெருவனேயும் எடுத்துக் காட்டுவார்'[1] எனப் பின்வரும் பகுதி யின் உட்கோளே உணர்த்துகிருர்.

இக்காதை 50-57–வரிகளினுரையில், '...கோவலனே வினே ஏவுதல் பெறப்படலானும், இராமனேத் தாதை ஏவுதலானும், நள னேப் புட்கரன் ஏவுதலானும், இவர் மனேவியரோடு அறியாத் தேயத்தாரிடை யுழத்தலும், சிறுமையுறுதலும் ஒத்த பண்பின ராதலின் உவமை கூறி, இவரினும் உனக்கு ஓர் உறுதியுண்டென்று கூறுவார்'[2] என அடுத்து வரும் செய்திக்குத் தோற்றுவாய் செய்கின்ருர்.

இனி, 70-85–வரிகளின் பொருளே மூன்று பகுதியாக வகுத்துக் கொண்டு, 'இது (70-75) சிறு காலமாறினும் காலேப் பொழுதிற் பொழுது போக்குக் கூறிற்று', 'இது (76-82) நண்பகற் பொழுதிற் பொழுது போக்குக் கூறிற்று', இஃது (83-85) எற்படுபொழுதிற் பொழுது போக்குக் கூறிற்று, என இப்பகுதிகளின் உட்கருத்தை எடுத்துரைக்கின்ருர்.[3]

இவ் வூர்காண் காதை 160-67–வரிகளின் உரையிறுதியில், 'இத்துணேயும் வீதிகளேச் சிறப்பித்துக் கூறி, இனி அங்காடி வீதி கூறுவார் கம்மியர் முதலாயினுர் பண்ணி விற்பன கூறுகின்ருர்'[4] என எழுதுகின்ருர். இது முற்பகுதியின் உட்பொருளேயும், அடுத்து வரும் பகுதியின் உட்பொருளேயும் சுட்டி நிற்கின்றது.

அங்காடிவீதி வருணனேயில் பல்வேறு பண்டம் விற்கும் கடைகள் பற்றி விளக்கிக் கூறிய நல்லார், 'இங்ஙனம் பெரிய கடை ஒருவாற்ருற் கூறி, இரத்தினக்கடையும் பொற்கடையும் கூறு வார்'[5] என அடுத்து வரும் பகுதியின் உட்கோள் உணர்த்து கின்ருர்.

இதேபோன்று வயிர வகைக்கு விளக்கம் எழுதிய நல்லார், 'முன்னர் வலனென்பாகிய வயிரச்சாதி கூறி, இனி அவன் வயிற்றிற் பித்தத்தைக் கொத்தி விழுங்கிய கருடன் நகைத்தலான் உமிழ, அஃது இமவான் முதலிய பன்மலேகளிலும் ஊறிப்பிறத்தலிற்

1. சிலப். 14:35-45 உரை, பக்: 370.
2. ,, ,, 50-57 ,, ,, 371.
3. ,, ,, 70-85 ,, ,, 372-73.
4. ,, ,, 160-67 ,, ,, 380.
5. ,, ,, 178-79 ,, ,, 381.

க்ருடோற்காரமென்று பெயர் பெற்ற மரகதச்சாதி கூறுவார்'[1] என அடுத்து வரும் பகுதியின் உட்பொருளை உணர்த்துகின்றார். இங்ஙனம் 'கருத்துரைத்தல்' பல விடங்களிலும் அமைந்து சிறக்கின்றது.

**சொல் வகுத்தல்**

இப்பகுதி இலக்கணக் கட்டுரையில் விளக்கப்பட்டது. சொற்களைப் பெயர்த்திரிசொல், வினைத்திரிசொல், இடைச்சொல் எனவும் திசைச்சொல் எனவும் குறிப்பிடுகின்றார். பெயரை, பெயர், இயற்பெயர், சிறப்புப்பெயர், பொதுப்பெயர் எனவும் குறிப்பிடுகின்றார்.[2]

**சொற்பொருள் உரைத்தல்**

இப்பகுதி இக்கட்டுரையில் பின்னர் விரிவாக ஆராயப்படும்.

**பொழிப்புரைத்தல்**

பெரும்பாலும் பொழிப்புரையையே முதற்கண் எழுதிப் பின்னர் தேவையான விளக்கம் எழுதுகின்றார் நல்லார். அரங்கேற்றுகாதை யுரையில் ஆடலாசிரியன் அமைதி கூறிய நல்லார், 'இது பொழிப்புரை'[3] எனக் கூறுகிறார்.

**உதாரணங் காட்டல்**

தன் கருத்தை வலியுறுத்துவதற்குப் பல இலக்கண, இலக்கிய நூற்களிலிருந்து மேற்கோள் காட்டுவது. இவை இலக்கண, இலக்கிய, இசைநாடக மேற்கோள் பகுதியில் விரிக்கப் பெறும்.

**வினாவிடை**

வினா விடையாக உரை எழுதிச் செல்வது பழைய உரையாசிரியர்களிடம் பெரும்பாலும் காணப்படும். மூலநூலாசிரியர் ஏன் இவ்வாறு கூறினார் என்ற வினாவைத் தமக்குள் எழுப்பி அதற்கு விடையிறுக்கும் முறையில் விளக்கவுரை அமையும். இம்முறை அடியார்க்கு நல்லாரால் பல விடங்களிலும் பின்பற்றப்படுகின்றது.

உரைச் சிறப்புப்பாயிரத்தில், 'உலகத்துக் காப்பியம் செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடும் கூறல் வேண்டுமன்றே; இந்நாடகக் காப்பியத்தினுள் அறனும் பொருளும் இன்பமும் கூறிச் சிறிதாயினும் வீடு கூறிற்றிலர்;என்னை யெனின்', என்று

---

1. சிலப். 180-83-உரை, பக்: 382.
2. இலக்கணப் புலமை - கட்டுரை பார்க்க.
3. சிலப். 3;12-25-உரை, பக்; 79,

ஓர் வினவை எழுப்பி அதற்கு விடையாக அடிகள் காப்பியம் செய்த வரலாற்றை விளக்கிச் செல்கின்றார்.[1]

இதே போன்று பதிகவுரையில், 'அடிக ளென்றது துறத்த லான்: அத்துறவின் வரலாறு யாதோவெனின்' என்ற வினவை எழுப்பி விடையாக இளங்கோ வடிகளின் துறவு வரலாற்றை விவரிக்கின்றார்.[2] இங்ஙனம் பல சொற்றொடர்களுக்கும், சொற் களுக்கும் விளக்கவுரை எழுதுகின்றபோது வினவிடையமைப் பில் எழுதிச் செல்கின்றார்.

*விசேடங் காட்டல்*

விசேடங் காட்டலாவது சூத்திரத்துப் பொருளின்றி ஆண் டைக்கு வேண்டுவன தந்துரைத்தலாகும். அடியார்க்கு நல் லார் ஒவ்வொரு பகுதியின் விளக்கவுரையிலும் தொடர்புடைய இலக்கிய, இலக்கண, இசை நாடக நூற் கருத்துக்களை எடுத்துக் காட்டிச் செல்வது இவ்வகை யிலடங்கும்.

*விரிவு காட்டல்*

வேற்றுமை முதலானவற்றை விரித்தல் விரிவு காட்டலாகும். இப்பகுதி 'இலக்கணப் புலமை' என்ற கட்டுரையில் 'தொகை' என்னும் பகுதியில் விவரிக்கப் பட்டுள்ளது. தொகையாக வருவன வற்றை விரிக்க வெனச் சில விடங்களில் எழுதிச் செல்கின்றார்.

*எ. கா: 1. அரசுவிழைதிரு-சிறப்பும்மை விரிக்க*
*(2:1-உரை, பக்:46)*

*2. உழவர்-உழவர்க்கென நான்கனுருபு விரிக்க*
*(11:10-உரை, பக்: 309)*

*அதிகார வரவு காட்டல்*

அதிகார வரவு காட்டலாவது அதிகாரத்தோடு பொருத்திக் காட்டுவது. ஆய்ச்சியர் குரவையுள் பூவை நிலைத் துறைப் பாடல்களுக்கு விளக்கம் கூறிய நல்லார் 'இவற்றுட் சேரனை முற் கூறுது பாண்டியனை முற்கூறிய தென்னையெனின், இது மது ரைக் காண்ட மாதலானும், இக்காப்பியம் செய்தவர் விழைவு வெறுப்பற்ற சேரமுனி யாதலானும், 'முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது', எனச் சாத்தர் கூறினமையானு மென்க', என அதிகார வரவு காட்டுகின்றார்.

*துணிவு கூறல்*

பிறநூலாரின் கருத்துக்களைக் காரண காரியத்துடன் மறுத்துத் தன் கொள்கையினை வலிவுடைத்தென நிறுவுதல் துணிவு

---

1 சிலப். உரைப், பக்:10-11.
2. நல்லாரின் இலக்கிய, இலக்கண, இசை, நாடகப்புலமை பார்க்க.

கூறலாகும். நல்லார் உரையில் இத்தகைய சிறப்புக்கள் சிலவற்றைக் காணலாம்.

சிலம்பின் சிற்றுறுப்பு, காதையாகலின் இதனைக் 'கதை நூல்' எனக் கொள்வார் கருத்தை மறுக்கும் நல்லார், இதனைக் காப்பியமாகக் கொள்கின்ருர். அவர்தம் மறுப்புரையும் விளக்கமும்வருமாறு:

'இனி இதன் செய்யுள் காதையென்று வழங்குதலிற் கதையையுடையது காதையாமாகலின், ஆசிரியம் வெண்பா வெண் கலிப்பா என்னும் இவற்ருேடு சிறுபான்மையான் ஒருசார் கொச்சகக்கலி மயங்கி வருதலானும், காண்டமெனக் குறி பெறுதலானும் இதனைக் கதையென்றல் வலிவுடைத் தென்பார்க்கு அற்றன்று ; கதையென்பது பொய்ப்பொருள் புணர்த்துக் கூறுவது; என்னை? 'கதையெனக் கருதல் செய்யான் மெய்யெனத் தானுங் கொண்டான்' (சீவக:2144) என்றமையானும், வழக்கினுள்ளும் இஃது ஒரு கதை யென்பவாகலானும், 'நாடகக் காப்பியம்' (மணி:19:80) என்றலானும் கதை யென்பது அல்லது இனி, அது நல்ல புலவராற் பொருளொடுபுணராப் பொய்ம்மொழியால் நாட்டப்பட்டு வருவதாகலின், இஃது அவ்வாறன்றி யோனி யென்னும் நாடகவுறுப்பும் நாடகமும் தழுவி, உள்ளோன் தலைவனுக உள்ளதொரு பொருள் மேற் சித்தரிக்கப்படாது பட்டாங்கு கிளந்து பலவினப் பாட்டான் வருதலின், ஈது அன்னதன்றென்பார்க்குக் காப்பியமென்றலுமாம்'[1] என விளக்குகின்ருர்.

பதிக வுரையில் 'குன்றம்' என்பதை விளக்க வந்த நல்லார், 'குன்றம்–கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன்றென்னும் மலை. அது திருச்செங்கொடென்பவாலெனின், அவரறியார் ; என்னை? அத்திருச்செங்கோடு வஞ்சி நகர்க்கு வடகீழ்த்திசைக் கண்ணதாய் அறுபதின் காத ஆறுண்டாகலானும், அரசனும் உரிமையும் மலை காண்குவமென்று வந்து கண்ட அன்றே வஞ்சி புகுதலானும் அது கூடாமையினென்க'[2] எனத் தம் துணிவு கூறுகின்ருர்.

கடலாடு காதையில் உருப்பசியின் சாபவரலாறு கூறும் உரையாசிரியர், நாரத வீணையை, உருப்பசி கையில் உள்ள வீணை எனக் கூறுவார் கூற்றை மறுக்கின்ருர். 'இவ்வீணையை உருப்பசி கையில் வீணை யென்பாருமுளர். அது பொருத்தமின்று'[3] எனக் கூறுகின்ருர்.

---

1. சிலப். உரைப், பக்: 9.
2. சிலப். பதி;3-உரை, பக்:19.
3. சிலப். 6:13-25-உரை, பக்:186.

ஆய்ச்சியர் குரவையுள் கொன்றை, ஆம்பல், முல்லை யென்பன பண்களென்ற பிறர்கூற்றை மறுத்து இவை பண்களல்ல ; கருவிகளே எனத் துணிவு கூறுகின்றார்.

'கொன்றை ஆம்பல் முல்லை யென்பன சில கருவி; இனி அவற்றைப் பண்ணென்று கூறுபவெனின், அங்ஙனம் கூறுவாரும் ஆம்பலும் முல்லையுமே பண்ணுதற்குப் பொருந்தக் கூறினல்லது கொன்றையென ஒரு பண் இல்லையாதலானும், கலியுள் முல்லைத் திணையின்கண் ஆரும் பாட்டினுள்,

'கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்
இமிழிசை மண்டை யுறியொடு தூக்கி
ஒழுகிய கொன்றைத் தீங்குழல் முரற்சியர்
வழூஉச்சொற் கோவலர் தத்த மினநிரை
பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்புலத்தர்'
(கலி:106:1-5)

எனக் கருவி கூறினமையானும்,

'அன்றைப் பகற்கழிந் தாளின் றிராப்பகற்
கன்றின் குரலுங் கறவை மணிகறங்கக்
கொன்றைப் பழக்குழற் கோவல ராம்பலும்
ஒன்றல் சுரும்பு நரம்பென வார்ப்பவும்'

என வளையாபதியுள்ளும் கருவி கூறிப் பண் கூறுதலானும், இவை ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த ஒத்தாழிசை யாதலானும் இரண்டு பண்ணும் ஒன்று கருவியுமாகக்கூறின், செய்யுட்கும் பொருட்கும் வழூஉச் சேறலானும் அங்ஙனம் கூறுதல் அமையாதென்க'[1] என விரிவான ஒரு விளக்கம் எழுதுகின்றார்.

இதேபோன்று 'முந்நீர்' என்பதற்கு ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீரெனக் கொள்வார் கூற்றையும் மறுத்து எழுதுகின்றார்.

'முந்நீர்–கடல் ; ஆகுபெயர் ; ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீரென இவை யென்பார்க்கு அற்றன்று ; ஆற்றுநீர் மேனீராகலானும் இவ்விரண்டு மில்வழி ஊற்றுநீரும் இன்றா மாதலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்திய 'தன்றுமுதிய நீரெனின், 'நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றும்' (குறள்:17) என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது ; ஆனால் முந்நீர்க்குப் பொருள் யாதோவெனின், முச்செய்கையையுடைய நீர் முந்நீரென்பது; முச்செய்கையாவன மண்ணைப் படைத்தலும் மண்ணையழித்தலும் மண்ணைக் காத்தலுமாம்,' என நிறுவுகின்றார். இங்ஙனம் பலவிடங்களில் பிறர்மதம் மறுத்துத் தம் கருத்தை நிலைநிறுத்துகின்றார்.

---

1. சிலப். 17:20-உரை, பக்:452.

### பயனொடு படுத்தல்

பயனொடு படுத்தல் பற்றிய விளக்கம் நல்லாரின் உரையில் தெளிவாகக் காணப்படவில்லை.

### ஆசிரிய வசனங்காட்டல்

நூலாசிரியரின் தொடர்களை ஆங்காங்கே எடுத்தாளுவது ஆசிரியவசனங் காட்டலாகும். சிலம்பிலிருந்து பலவரிகளை நல்லார் மேற்கோள் காட்டுவது முன்னர் அறியப்பட்டது.[1]

இவை தவிர இலேசினாற் பொருள் கோடல், ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்துதல் ஆகியனவும் நல்லாரின் உரை நயத்திற்குச் சான்றுகளாகின்றன. உரைப்பாயிரத்தில், தொடர் நிலைச் செய்யுட்குக் 'காப்பியம்' என்ற வடமொழிப்பெயர் பொருந்தும் என்பதை விளக்கப்போந்த நல்லார், 'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ,' என்ற தொல்காப்பிய நூற்பாவைக் காட்டி, 'ஆகும்மே' என்ற இலேசினான் உய்த்துணரற்பாலதனை மாணுக்கன் ஐயந்தீர்தற் கன்றே பின்னும், 'சிதைந்தன வரினு மியைந்தன வரையார்' (தொல்.எச்ச:6) என்றுதெனக் கொள்க'[2] என எழுதுகின்றார். புறஞ்சேரி யிறுத்த காதை யுரையில் அச்ச மெய்ப்பாட்டை விளக்குமிடத்து 'உற் டட்ட டட் டெனப் பற்பறை கொட்டல்'[3] என ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்து கின்றார்.

இங்ஙனம் உரைக்குரிய பல்வேறு உறுப்புக்களையும் பயன் படுத்தி உரை எழுதும் நயம் அடியார்க்கு நல்லாரிடம் மலிந்து காணப்படுகின்றது.

### 2. கவிதை நடை

அடியார்க்கு நல்லாரின் உரை சிற்சில விடங்களில் எதுகை மோனை பெற்றுச் செய்யுளோசை மிக்கு அமைகின்றது. இதற்குச் சிறந்த காட்டாக அமைவது பதிகத்தின் முதலிரு வரிகட்கு அவர் எழுதுகின்ற உரையாகும். இப்பகுதி ஒரு நீண்ட ஆசிரியப்பா அமைப்பைப் பெறுகின்றது.

'குமரியொடு வடவிமயத்
தொருமொழிவைத் துலகாண்ட
சேர லாதற்குத் திகழொளி ஞாயிற்
றேழ்பரி நெடுந்தேர்ச் சோழன் றன்மக
ணற்சோணை யீன்ற மக்க ளிருவருள்
முன்னோன் றன்னைப் பின்ன ரியற்றிப்
பின்னோன் றன்னையும் பெருநம்பி யாகென

1. இலக்கிய மேற்கோள் அட்டவணை-'சிலப்பதிகாரம்' பார்க்க.
2. சிலப். உரைப், பக்:6.
3. சிலப். 13:30-32-உரை, பக்:341.

அன்னவர் தம்மொடு தென்னர் செம்பியர்
தன்னடி போற்றத் தமனிய மண்டபத்துச்
சிங்கஞ் சுமந்த பொங்கணை மீமிசை
உவரித் திரையிற் கவரி யிரட்ட
வேந்த னிருந்துழிச் சார்ந்த நிமித்திகன்
அடிமுதல் முடிவரை நெடிது நோக்கி
யின்றேள் கழியப் பொன்றிக ழுலகஞ்
சேர்தி நீயெனச் சேரலற் குரைத்தவன்
மைந்தரை நோக்கி நந்தாச் செங்கோ
லந்தமி லின்பத் தரசா ளுரிமை
இளையோற் குண்டென வுளைவன னனிவெகுண்
டழுக்காற் றெருழுக்கத் திழுக்கு நெஞ்சினன்
கண்ணெரி தவழ வண்ணலை நோக்குங்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்ல னீங்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்மு
னகலிடப் பார மகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்
தந்தமி லின்பத் தரைசாள்வேந் தாயினென்'[1]

நிலைமண்டில ஆசிரியப்பா அமைப்புடைய இப்பகுதியின் முதலிரு வரி, வாழ்த்துக்காதையின் முதலிரு வரியாக வருகின்றது. அதே போன்று இறுதி வரிகள் ஆறும் வரந்தருகாதையின் 177-182 வரிகளா யுள்ளன. எஞ்சிய பகுதி நல்லாரின் உரை விளக்கமாக அமைவது. இங்குக் கவிதைப் பகுதியும் உரைப் பகுதியும் வேறுபாடின்றிப் பொருந்துவது குறிப்பிடத்தக்கது. இது நல்லாரின் உரையில் அமைந்த கவிதைத் தன்மையைத் தெற்றென விளக்கும்.

கடலாடு காதை 44-48-வரிகட்கு நல்லார் எழுதிய உரையும் கவிதைத் தன்மைக்குக் காட்டாக அமையும்.

'வானோ ராகிய தேரில் நான்மறைக்
கடும்பரி பூட்டி நெடும்புற மறைத்து
வார்துகின் முடித்துக் கூர்முட் பிடித்துத்
தேர்மு னின்ற திசைமுகன் காண்'[2]

'அஞ்சன வண்ணன் ஆடிய(வாடல்) பத்துள்
கஞ்சன் வஞ்சத்தின் வந்த யானையின்

1. சிலப், பதி: 1-2-உரை, பக்:12.
2. சிலப். 6:44-45, பக்:190.

*கோட்டை ஒசித்தற்கு நின்று ஆடிய*
*அல்லியத் தொகுதி யென்னும் கூத்தும்'*[1]

இவைபோன்று கடலாடு காதை 17-ஆம் வரிக்கு நல்லார் எழுதிய உரைப்பகுதியும் கவிதைச் சிறப்புப் பெறுகின்றது.

*'ஒழுக்க முடைய விழுக்குடிப் பிறந்தோர்*
*நாணுடை மகளிரொடு நீணெறிச் செல்லார்'*[2]

இங்ஙனம் கவிதைச்சிறப்பு மிக்க நல்லாரின் உரைநடைக்குப் பல பகுதிகள் சான்று பகர்கின்றன

3. *திறனாய்வு நெஞ்சம்*

சிலம்பிற்கு எத்தனையோ திறனாய்வு நூற்கள் இன்று வெளி வந்துள்ளன. இவற்றிற் கெல்லாம் அடிப்படை வகுத்துக் கொடுத் தவர் அடியார்க்கு நல்லாரே எனக் கூறுவது மிகையன்று. இவர் ஒரு சிறந்த உரையாசிரியராக இலங்குவதோடு ஒப்பற்ற திறனாய் வுக் கலைஞராகவும் மிளிர்கின்றார். கதையின் கட்டுக் கோப்பு, கதை நிகழ்ந்த காலத்தைக் கணக்கிடும் காலவுணர்வு, பாத்திரப் பண்பு சுட்டுதல் அவர்தம் திறனாய்வு எண்ணத்தின் வெளி யீடுகளாக அமைகின்றன.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் அடிப்படை நோக்கம் பற்றிப் பல கருத்து முரண்பாடுகள் காணக் கிடக்கின்றன. சிலர் பதிகம் கூறும் மூன்று உண்மைகளை வலியுறுத்தவே சிலப்பதிகாரக் காவியம் எழுந்தது என்பர். சிலர் சிலம்பின் உட்கோள் நடுகற் காதையுள் பேசப்படும் மூன்று உண்மைகளே என நிறுவ முனைவர். வேறுசிலர் சமுதாயச் சீர்திருத்தமே சிலம்பின் தலையாய நோக்க மென வாதிடுவர். இங்ஙனம் பல்வேறு கருத்துக்களுக்கும் இடனாக அமைவது சிலம்பு. இப் பல்வேறு நோக்கங்களில் ஒன்று பத்தினி யை ஏத்துவது. பெண்ணின் பெருமை பேசும் காப்பியம் சிலப்பதி காரம் என்ற உட்கோளை உணர்ந்த நல்லார், மங்கல வாழ்த்துப் பாடல் 30-39-வரிகளின் உரையில், 'கண்ணகியை முற்கூறினார் பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்' என எழுதுகின்றார்.

முத்தமிழையும், முந்நாட்டையும், மூவேந்தரையும் ஒப்ப நோக்கிக் காவியம் செய்தவர் அடிகள். சமயப் பொதுநோக்குடன்

---

1. சிலப். 6:46-48-உரை, பக்:190.
2. சிலப். 14:17-உரை, பக்:368.

விருப்பு வெறுப்பின்றி எல்லாச் சமயங்களேயும் பாராட்டிப் பேசியவர் அடிகள். இத்தகைய அடிகளின் தூய நெஞ்சத்தை உணர்ந்த நல்லார், அதனே ஆய்ச்சியர் குரவை உரையில் உணர்த்திச் செல் கின்ருர். ஆய்ச்சியர் குரவை உள்வரி வாழ்த்தாக அமையும் மூன்று பாடல்களுக்கு (29-31) உரை கூறிய நல்லார், 'இவற்றுட் சேரனே முற்கூருது பாண்டியனே முற்கூறிய தென்னேயெனின், இது மதுரைக் காண்ட மாதலானும், இக்காப்பியம் செய்தவர் விழைவு வெறுப்பற்ற சேரமுனி யாதலானும், 'முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது' (பதிகம்:16) எனச் சாத்தனர் கூறினமையானு மென்க' என அடிகளின் விழைவு வெறுப்பற்ற நெஞ்சை உணர்ந்து எழுது கின்ருர்.

### கதை நிகழ்ச்சியும் கட்டுக்கோப்பும்

சிலப்பதிகாரக் காப்பிய அமைப்பில் சில செய்திகள் மறைக் கப்பட்டுள்ளன. சில நிகழ்ச்சிகள் முரண்பாடாக அமைகின்றன. துடிப்புள்ள இக்காலத் திறனய்வாளர்கள் இவற்றை 'இளங்கோ வடிகளின் குறை',எனத் துணிந்து கூறுகின்றனர். இதன் விளேவே சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களின் 'இளங்கோ வின் மறதி' என்ற கட்டுரையும், சிவ. மணிகண்ட ராமனின் 'இளங்கோவின் குறை' என்ற கட்டுரையும்.

பொதுவாகச் சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சிகள் சில முரண் பாடாகவும் குறைபாடாகவும் நமக்குத் தோன்றுகின்றன. நாடு காண் காதையில்,

*'மறவுரை நீத்த மாசறு கேள்வியர்*
*அறவுரை கேட்டாங் கறிவனே யேத்தத்*
*தென்றமிழ் நன்ஞட்டுத் தீதுதீர் மதுரைக்*
*கொன்றிய வுள்ள முடையே ஞகலிற்*
*போதுவல் யானும் போதுமி னென்ற' (10:56-60)*

எனக்கூறிக் கோவலன் கண்ணகிருடன் மதுரை புறப்பட்ட கவுந்தி தான் எந்த நோக்குடன் புறப்பட்டாரோ அதனே முடித்த தாகக் காட்டாத அடிகள்,

*'தவந்தரு சிறப்பிற் கவுந்தி சீற்றம்*
*நிவந்தோங்கு செங்கோ னீணில வேந்தன்*
*போகுயிர் தாங்கப் பொறைசா லாட்டி*
*என்ஞே டிவர்வினே யுருத்த தோவென*
*உண்ணு நோன்போ டுயிர்பதிப் பெயர்த்ததும்' (27:79-83)*

எனக் கோவலன் இறப்புச் செய்தி கேட்ட கவுந்தி உண்ணு நோன் பிருந்து இறப்பதாகக் கூறுகின்றூர்.

மாதவியின் இரண்டாவது மடல் கண்டு,

'தன்றீ திலளெனத் தளர்ச்சி நீங்கி
என்றீ தென்றே யெய்திய துணர்ந்த' (13:94-95)

கோவலன் அவளின் கையறு நெஞ்சங் கடியல் மறந்து தன் பெற்ருேரின் துயரை ஆற்றுப்படுத்த மாதவி முடங்கலேயே தன தாகக் கொண்டு அனுப்புகிருன்.

கொலேக்களக்காதை முதல் கட்டுரைக்காதை ஈருகவுள்ள நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒருநாள் நிகழ்ச்சியர்கக் கொள்ள முடி யாதாகினும் அடிகள் ஒரு நாள் நிகழ்ச்சிபோலக் காட்டிச் செல் கின்ருர்.

நீர்ப்படைக் காதையில்,

'மற்றது கேட்டு மாதவி மடந்தை
நற்ருய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமே கலேயை வான்றுய ருறுக்கும்
கணிகையர் கோலங் காணு தொழிகெனக்
கோதைத் தாமங் குழலொடு களேந்து
போதித் தானம் புரிந்தரங் கொள்ளவும்' (27:103-108)

என மணிமேகலேயின் துறவினை மாடலன் வாயிலாகவும், வாழ்த் தின் கண்,

'மணிமே கலேதுறவுங் கேட்டாயோ தோழி' (29:பா:7:5)

என்ற அடித்தோழியின் அரற்றல் வாயிலாகவும் கேட்டு அறிந்த பின்னரும் செங்குட்டுவன், வரந்தரு காதையில்,

'தேவந் திகையைச் செல்விதி நோக்கி
வாயெடுத் தரற்றிய மணிமே கலேயார்
யாதவ டுறத்தற் கேதுவீங் குரையென' (30:3-5)

அறியாதான் போலக் கேட்கின்ருன். இவற்றை மேம்போக்காக நோக்குகின்றபோது இளங்கோவின் குறைபாடுகளாக இவை தோன்றும். ஆயின் உரையாசிரியர்கள் மூலநூலாசிரியரிடம் குறை காணும் நோக்குடைய ரல்லர். மூலநூலார் சொல்லுகின்ற ஒவ்வொரு முறைகட்கும் சில உள்நோக்கம் இருக்க வேண்டும் என உணர்ந்து அந்நோக்கை அறிய முற்படுவர். இந்நிலேயில்

அடியார்க்கு நல்லார் ஈரிடங்களில் இளங்கோவால் மறைத்துரைக்கப்பட்ட சில செய்திகளை விரித்துரைத்துக் காப்பிய நிகழ்ச்சியில் முரண்பாடு ஏற்படாமல் காக்கின்றார்.

கோவலன்,

'தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்
கென்னிலை யுணர்த்தி யான்வருங் காறும்
பாதக் காப்பினள் பைந்தொடி' (14:21-23)

எனக் கூறிப் போந்தவன் தன் குல வணிகர்க்குத் தன்னிலை யுணர்த்தலை மறந்து, 'காவலன் பேரூர் கண்டு மகிழ் வெய்தி' வருகின்றான். இப்பகுதிக்கு உரை எழுதிய நல்லார், 'காவலனது பெரிய நகரியைக் கண்டு மகிழ்ச்சி யெய்துதலாலே பொருந்துழி யறிதலை மறந்து போந்தா னென்க'[1] என எழுதுகின்றார். இங்கு நல்லார், 'பொருந்துழியறிதலை மறந்து' என்ற தொடரை இணைத்துக் கதை நிகழ்ச்சியில் ஏற்படுகின்ற முரண்பாட்டைத் தவிர்க்கின்றார். இவ்வுரையின்றேல் கோவலன் யாது காரணத்தால் தான் சென்ற நோக்கத்தை நிறைவேற்ற மறந்தான் என்பது தெரியாமல் போய்விடும். அதோடு இக்குறைபாடு அவன் பாத்திரப் படைப்பில் ஒரு குறையாக அமைவதோடு இங்ஙனம் ஒரு தலைவனைப் படைத்த இளங்கோவிற்கும் ஒரு குறையாக அமைந்து விடும். இக்குறைபாடுகளை நீக்கிக் காப்பிய நிகழ்ச்சியில் ஒரு கட்டுக்கோப்பை ஏற்படுத்துகின்றார் நல்லார்.

இதுபோன்றதோர் முரண்பாடு கொலைக்களக் காதையிலும் ஏற்படுகின்றது. பொற்கொல்லன் காவலன் ஏவலாளருடன் வந்து கோவலனை நண்ணி,

'வலம்படு தானை மன்னவ னேவச்
சிலம்பு காணிய வந்தோ ரிவரென' (16:158-159)

கூறிக் கோவலன் கையிலுள்ள சிலம்பினைக் காவலாளர்கட்குக் காட்டுகிறான். கோவலனைக் கண்ட ஏவலாளர் 'கொலைப்படு மகன் இவனல்லன்' எனக் கூற, பொற்கொல்லன் கள்வரியல்பு பற்றி ஒரு நீண்ட சொற்பொழிவினை நிகழ்த்துகிறான். இத்துணையளவும் கோவலன் என்ன செய்தான்? ஏன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை? தான் கள்வனல்லன் என்று ஏன் வாதிட்டிருக்கக்கூடாது? என்ற வினாக்கள் எழுகின்றன. இவ்விடத்துக் கோவலன் பாத்திரப்படைப்பில் ஏதோ ஒரு குறைபாடு இருப்பதாகத்

1. சிலப். 14:217-உரை, பக்:386.

தோன்றுகிறது. இக்குறைபாட்டை யெல்லாம் நீக்குகிறது நல்லாரின் உரை.

'சிலம்பின் அருமை யெல்லாம் கூறுவான் போலப் பொய்ம்மையைத் தொழிலாகவுடைய கொல்லன் அவரை வேருக அழைத்துக் கோயிலில் இருக்கின்ற தனிச் சிலம் போடே பொருந்தச் சொல்லிக் காட்ட வென்க' எனவும், 'புரிந்து எனவே அவனி னீங்கி யென்பதும், உடன் காட்ட வெனவே அச்சிலம்போடு ஒரு தன்மையாக ஒப்புக்கூறி யென்பதும் கொள்ளப்பட்டன' எனவும் விளக்குகின்ருர்.[1] இவ்வுரையால் மேற்கண்ட குறைபாடுகள் களையப் படுவதோடு கதை நிகழ்ச்சியில் ஒரு கட்டுக்கோப்பும் ஏற்படுகின்றது. இங்ஙனம் சூழ்நிலைக்குத்தகச் சில செய்திகளை வருவித்துப் பொருள் எழுதிக் கதை நிகழ்ச்சியில் ஏற்படுகின்ற முரண்பாட்டைத் தவிர்த்துக் கட்டுக்கோப்பை உருவாக்குவதோடு மூலநூலாருக்குக் குறை வராதும் காக்கின்ருர் நல்லார்.

காலவுணர்வு

பல்கலை வல்லுநரான நல்லாரிடம் பிறதுறைப் புலமை போல வானநூற்கலைப் புலமையும் சிறப்பாக அமைகின்றதெனலாம். தம் வானநூற் புலமையால், சிற்சில விடங்களில் கதை நிகழ்ச்சியும் அவை நிகழ்ந்த காலம் பற்றியும் தெளிவு படுத்திச் செல்கின்ருர்.

கோவலன் தாய் தன்மகனையும் மருமகளையும் இல்லறக் கடமைகளில் ஈடுபடுத்துவான் வேண்டித் தனிமனைப் படுத்த, கண்ணகிக்கு,

'யாண்டுசில கழிந்தன விற்பெருங் கிழமையிற்
காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென்' (2:89-90)

எனச் சில யாண்டுகள் இல்லற வாழ்க்கை நடந்து கழிந்தன வென்கிருர் அடிகள். இதற்கு உரை எழுதிய நல்லார், 'கண்ணகிக்குச் சில யாண்டு கழிந்தன வெனவே மாதவிக்குப் பலயாண்டு கழிதலும் கொள்ளப்பட்டது. இன்னும் மேற் கனாத்திற முரைத்த காதையில்,தேவந்தி'கண்ணகி நல்லாளுக் குற்றகுறை யுண்டென்று'(41) என்புழி எச்சவும்மை விரிக்க, இவட்கு அவள் இளமைப் பருவந்தொடங்கி நிகழும் பார்ப்பனத் தோழியாய் மாநாய்கன் மனை வளர்தலின், ஒரு காலத்தே குடிபுக்குச் செல்கின்றுழிப் பிரிவும்

---

1. சிலப். 16;158-61-உரை, பக்:433,

ஒரு காலத்தாயிற்றென்ப தாகலின், 'நாலீராண்டு நடந்ததற் பின்னர்' (30:85) என்பதனை இருவர்க்குமாக்கி மாதவிக்கு எட்டி னிறந்த பல யாண்டு சேறலிற் கண்ணகிக்குச் சில யாண்டு கழிந்த வெனப்பொருள் கூறலு மொன்று;இதனால் மிக்க பலமின்று; ஏற்கு மேற் கொள்க', எனக் கால அளவைக் கணித்துக் கூறு கின்றார்.

இந்திர விழவூரெடுத்த காதையில், 'சித்திரைச் சித்திரைத் திங் கள் சேர்ந்தென'(64) என்பதற்குச் 'சித்திரை மாதத்துச் சித்திரை நாளிலே நிறைமதி சேர்ந்ததாக அந்நாளிலே' என வுரை எழுது கின்றார். இந்திர விழா சித்திரைத் திங்கள் தொடங்குவது குறிக்கப் படுதலின் விஞ்சைவீரன் வெள்ளியம் பெருமலையின் வட சேடிக் கண் காமனுக்கு விழாக் கொண்டாடியது இந்திர விழாத் தொடங்கு வதற்கு முன்னாகலின் இதனைப் பங்குனித்திங்கள் நடந்ததாகக் கொள்கின்றார். மேலும் 'இந்திர விழவு கொண்டெடுக்கு நாளிது வென' (6:6) அடிகள் குறிப்பிடுதலின் காமனுக்கு எடுத்த விழா வின் இறுதி நாளில் இந்திர விழா ஆரம்பமாகும் எனக் குறிப்பிடு கின்றார்.

'வீரன், பங்குனித் திங்கள் இருபத்தொன்பதிற் சித்திரை நாளிலே அவ்விழா முடிதலின், தென்றிசைப் பக்கத்து ஒரு வள விய நகரிடத்து இந்திர விழவிற்குக் கால்கொண்டு கொடியெடுக் கும் நாள் மேலை மாதத்து இந்தச் சித்திரை காணெனச் சொல்லி யென்க.

இதுவெனச் சுட்டினான், அன்றும் சித்திரை யாகலின். ஈண்டுத் திங்களும் திதியுங் கூறியது என்னையெனின், கோவலனும் மனைவியும் ஊரினின்றும் போந்த திங்களும் திதியும் வாரமும் நாளும் வழிச்செலவும் ஒழிவும், மதுரையிற் சென்று புக்கு இவன் இறந்துபட்ட திங்கள் முதலா யுள்ளவற்றோடு மாறுகொள்ளாது முடிதற்கெனக் கொள்க. அது யாண்டுமோவெனின் வேனிற் காதையினும் நாடுகாண் காதையினும் காடுகாண் காதை கட்டுரை காதை யென்னும் இவற்றுள்ளுமெனக் கொள்க'[1] என நல்லார் விளக்குவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

வேனிற்காதையில்,

'அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வன்' (8:58-59)

---

1. சிலப். 6:5-6-உரை, பக்:184.

என்பதற்கு, 'அந்திப் பொழுதின் கண்ணே அரும்புகின்ற விரக விதனத்தின் மேலே வந்து தோன்றிய திங்களாகிய செல்வன்'[1] என உரை எழுதிய நல்லார், அந்திப் போதக மென்பதை யானை யாக்கி அதன் புறக்கழுத்தில் தோன்றிய பிறைத்துங்கள் எனக் கொள்வது காலவுணர்வுக்குப் பொருந்தாது எனத் தக்க சான்று களுடன் எடுத்துக் காட்டுகின்றார்.

'...இனி இவ்வாறன்றி அந்திப் போதக மென்பதனை யானை யாக்கி அதன் புறக்கழுத்தில்தோன்றிய திங்களெனிற் பிறையாம்; ஆகவே நாடுகாண் காதையுள்,

'...... ...... ...... வைகறை யாமத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிரு ணின்ற கடைநாட் கங்குல்
ஊழ்வினை கடைஇ யுள்ளந் துரப்ப......
—— ——... நெடுங்கடை கழிந்து' (10:1-8)

என்பதனாற் பூருவ பக்கத்துப் பதினாலாம் பக்கமாதலான் அத னோடும்,

'ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்
தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண
உரைசான் மதுரையோ டரைசுகே டுறுமெனும்
உரையு முண்டு' (23:132-36)

என்பதனோடும் பிறவற்றோடும் மாறுகொள்ளு மாதலான் அவ்வாறு கூறுதல் பொருந்தாதென வுணர்க.[2] எனக் காலவுணர்வோடு பொருந்த உரை வகுக்கின்றார்.

நாடுகாண் காதை 1-3-வரிகளின் உரையிலும் புகாரில் இந்திர விழா நிகழ்ச்சி நடந்த காலத்தைக் கணித்துக் கூறுவதோடு, கோவலன் கண்ணகியர் புகாரை விட்டு மதுரைக்குப் புறப்பட்ட நாள் இன்னதென்பதையும் குறிப்பிடுகின்றார்.

'வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிரு ணின்ற கடைநாட் கங்குல்' (10:1-3)

'என்பது அந்தச் சித்திரைத் திங்கட் புகுதிநாள்-சோதி; திதி-மூன்றும் பக்கம்; வாரம்-ஞாயிறு. இத்திங்க ளிருபத்தெட்டிற்

1. சிலப். 8:45-71-உரை, பக்:233.
2. சிலப். ,, ,, பக்:235.

சித்திரையும் பூரணையுங் கூடின சனி வாரத்திற் கொடியேற்றி, 'நாலேழ் நாளினும்' (மணி.1:8) என்பதனால் இருபத்தெட்டு நாளும் விழா நடந்து கொடியிறக்கி வைகாசி இருபத்தெட்டினிற் பூருவ பக்கத்தின் பதின்மூன்றும் பக்கமும் சோமவாரமும் பெற்ற அனுடத்தில் நாட்கடலாடி ணூடுதலின் வைகாசி இருபத்தொன் பதிற் செவ்வாய்க் கிழமையும் கேட்டையும் பெற்ற நாசயோகத்து நிறைமதிப் பதினலாம் பக்கத்து வைகறைப் பொழுதினிடத்து நிலவுபட்ட அந்தரத் திருளிலே யென்றவாறு. அது பூருவ பக்க மென்பது தோன்றக் 'காரிரு ணின்ற கடைநாட் கங்குல்' என்றார்'[1] என விளக்குகின்றார் நல்லார்.

காடுகாண் காதையிலும், ஓரிடத்து நிகழ்ச்சிகளையும் அவை நிகழ்ந்த காலத்தையும் தொடர்புபடுத்தி விளக்குகின்றார். சாரணர் அறவுரை கேட்ட அன்றிரவு கவுந்தியடிகளும், கோவலன் கண் ணகியரும் சாவகர் தம் உறைவிடத்துத் தங்கியதை, 'அன்றவர் உறைவிடத் தல்கின ரடங்கி' (11:9) என்று இளங்கோ குறிப்பிடு கின்றார். இதற்கு விளக்கவுரை எழுதிய நல்லார், 'என்றது காலைப் பொழுதில் வாய்மொழி கேட்டு மாடப்புணை போகித் தென்கரை யெய்திப் பூம்பொழிலிருந்துழிச் சாபவிடை செய்து மாலைப்பொழு தின்கண் புறஞ்சிறை வாரணம் புரிந்து புக்கனரெனவே அற்றை ஞான்று தங்குதல் கூற வேண்டாது முடியும்; முடியவே வழிநாட் சாவகர் உறைகின்ற விடத்தே தங்கினராய் ஒடுங்கி யென்க. அவ ரெனக் கடவுளரைச் சுட்டின், அவருறைவிடம் கந்தன்பள்ளி யாமாகலானும், ஆண்டு அடங்காமை சொல்ல வேண்டாவாக லானும் அவரென்றது சாவகரை யென்க. கடவுளர்க் கெல்லாம் மாதவத்தாட்டி மாண்புற மொழிந்தெனவே கவுந்தியடிகள் கந் தன் பள்ளியுட் புக்கமை யுணர்க. இங்ஙனங் கூறியது, 'ஆறைங் காதம்' (10:42) என்றமையானும்,

'காவத மல்லது கடவா ராகிப்
பன்னாட் டங்கிச் சென்னா ளொருநாள்' (10:154-155)

என்றமையானும், ஈண்டும்,

'அன்றவ ருறைவிடத் தல்கின ரடங்கி' (11:9)

என்றமையானும் சிலநாட் சென்றவழிச் செலவொழிந் தொழிந்து ஆண்டாண் டிருந்து ஆறிச் சென்றமை உணர்த்தற்கெனக் கொள்க',[2] எனக் காலவுணர்வோடு உரை வகுத்துச் செல்கின்றார் நல்லார்.

---

1. சிலப். 10:1-3-உரை, பக்:267.
2. சிலப். 11:8-9-உரை, பக்:299.

புறஞ்சேரி யிறுத்த காதையில், 'வேனில் வீற்றிருந்த'(13:36) என்னும் வரிக்கு விளக்கம் எழுதிய நல்லார், 'ஆனித் திங்கட் கடைநாளாகலின், 'வீற்றிருந்த' என்ருர்'[1] என எழுதுகின்ருர். ஊர்காண் காதையில் 'குடகாற் றெறிந்து'(14:70)என்னும் வரிக்கு உரை எழுதிய நல்லார், 'ஆடித்திங்க ளென்பது தோன்றக் குட காற்றுக் கூறினுர்'[2] என்கிருர். கொலைக்களக்காதையில் மாதரி மனைபுக்க கண்ணகி அடிசில் ஆக்குதற்குக் கலன் முதலான கேட்பது வரையுள்ள நிகழ்ச்சி ஒருநாள் நடந்ததென்றும், அடிசில் ஆக்கிக் கோவலனை உண்பித்தது மறுநாள் நிகழ்ச்சி என்றும் கொள்கின்ருர் நல்லார். இதனை, இக்காதை 18-21 வரிகளினுரை யிறுதியில், 'இத்துணையுங் கூறியது, இவர்கள் சென்ற அன்றிரவு செய்தனவும் மேற்செய்வனவும். இனி மற்றைநாளைச் செய்தி கூறுகின்ருர்',[3] என எழுதுகின்ருர்.

ஊர்காண்காதை 70-85-வரிகட்கு உரை எழுதிய நல்லார், 'இது சிறுகால மாறினும் காலைப்பொழுதிற் பொழுதுபோக்குக் கூறிற்று. .........இது நண்பகற் பொழுதிற் பொழுதுபோக்குக் கூறிற்று. ............இஃது எற்படு பொழுதிற் பொழுதுபோக்குக் கூறிற்று',[4] என எழுதுகின்ருர். இங்ஙனம் காப்பிய நிகழ்ச்சிகளை யும் காலத்தையும் கணக்கிட்டு உரை எழுதும் நயம் நனி சிறக்கின்றது. மேலும் இது நல்லாரின் வானநூற் புலமையினையும் தெற்றென விளக்கி நிற்கின்றது.

*பாத்திரப் பண்பு*

சிலம்பின் பாத்திரப் படைப்பு பற்றிப் பல திறனுய்வு நூல்களும் கட்டுரைகளும் இன்று வெளிவந்துள்ளன. இவற்றிற்கெல்லாம் வித்திட்டவர் நல்லாரே எனலாம். தான் ஒரு உரையாசிரியராக மட்டும் நிற்காது பாத்திரங்களின் பண்புகளையும் மனநிலைகளையும் ஆராய்ந்துரைக்கின்ருர். காப்பியத்தலைவி கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள், பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் கரிகால் பெருவளத்தான் ஆகியோர் பண்பு நலன்கள் சிலவற்றை ஆங்காங்கே விளக்கிச் செல்கின்ருர்.

'குலந்தரு வான்பொருள் குன்றந் தொலைத்த
இலம்பாடு நாணுத் தரும்' (9:70-71)

1. சிலப். 13:36-37-உரை, பக்:342,
2. சிலப்.14:70-75-உரை, பக்:372.
3. சிலப். 16:18-21-உரை, பக்:426.
4. சிலப், 14:70-85-உரை, பக்:372-73.

எனக் கோவலன் கூறக்கேட்ட கண்ணகி அவன் வறுமை யுற்றான் என வுணர்ந்து 'சிலம்புள கொண்ம்' (9:73) என்கிறாள். இதற்கு உரை எழுதிய நல்லார், 'சிலம்புள வென்றாள், இவை யொழிந்த கலனெல்லாம் தொலைதலால். இவை அணியாதிருத்தலின் அவனறியானாகக் கருதினும் அவன் தளர்ச்சி கூறுதலால் தான் இவை யுண்மை நினைந்து கூறினாளென்க. புலந்து கூறினாளெனிற் கற்பின் தன்மையன்றாம்',[1] எனக் குறிப்பிடுகின்றார். இங்குக் கணவனுக்காக அணைத்தையும் அக மகிழ்வோடு விட்டுக் கொடுக்கும் பண்பு பெறப்படுகிறது.

கணவனொடு மதுரைக்குப் புறப்பட்ட கண்ணகி சில காத தூரம் நடந்த வளவிலே தளர்ச்சி மீதூர 'மதுரை மூதூர் யாதென' (10:41) வினவக் கோவலன் 'ஆறைங் காதம்'(10:42) என்கிறான். இவ்வரிகட்கு உரை கூறிய நல்லார், 'யாதென்றவட்கு முப்பதென்னும் பொருள் மறைந்து காதம் ஆறு காதம் ஐந்தென்றாற் போலிருத்தற்கு ஆறைங் காதமென்றான்',[2] என்பர். இவ்வுரை கண்ணகியின் மென்மைத் தன்மைக்கு மேலும் ஒரு சான்றாக அமைகின்றது.

மதுரைப் பயணத்தின்போது நீர் நசைஇ வேட்கையின் நெடுந்துறைச் சென்று கோவலன் நிற்பக்கண்ட கானுறை தெய்வம் வனசாரிணி, வயந்தமாலை வடிவிற் சென்று அவனை மயக்கி அவன் வழிச் செலவைத் தடுக்க முற்படுகிறது. முன்பே மாங்காட்டு மறையவன் கூறிய மொழி நினைவுக்குவரக் கோவலன் அத்தெய்வத்தின் உண்மைத் தன்மை அறியப் பாய்கலைப் பாவை மந்திரம் உச்சரிக்க, வனசாரிணி மெய்யுருவொடு தோன்றி,

'புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும்
என்திற முரையா தேக' (11:199-200)

என வேண்டுகிறாள். இதன் உரையில், 'தவத்தினும் கற்புச் சிறந்ததாகலின் முற்கூறினார்'[3] என விளக்குவர் நல்லார். இங்குத் தவச்சிறப்புமிக்க துறவொழுக்கம் பூண்ட கவுந்தியினும், கண்ணகியின் கற்பொழுக்கம் சிறந்ததெனக் கூறுவது கண்ணகியின் பாத்திரப் படைப்பை மேலும் உயர்த்துகிறது.

புறஞ்சேரியிறுத்த காதை 19-29–வரிகளின் விளக்கவுரையில், 'இவள் கண்ணகி புணர்ச்சி யின்பம் பெருமை நோக்கிப்

1. சிலப். 9:72-73–உரை, பக்:251.
2. சிலப். 10:42-43–உரை, பக்:270.
3. சிலப். 11:192-200–உரை, பக்:309.

பார்மகள் இரங்கிக் கூறினள். என்னை புணர்ச்சி யில்லாதவா றெனின்–மாதவியோடு புலந்து போதுதலானும், மதுரைக்குச் சேறற்கு ஒருப்பட்ட நெஞ்சினனாதலானும், மேற் கவுந்தியடி களுடன் வழிச்சேறலானும் யாண்டும் மெய்யுறன் மாத்திர மல்லது புணர்ச்சி யில்லெனவுணர்க'[1] என எழுதுகின்றார். இங்குக் கண்ணகியின் இல்லற இன்பம் பெருத் துன்பியல்நிலை நல்லாரால் சுட்டிக்காட்டப் பெறுகிறது.

மனைவியொடும் கவுந்தியொடும் மதுரைப் புறஞ்சேரி புக்க கோவலன், மனைவியைக் கவுந்தியடிகளிடம் அடைக்கலப் படுத் தித் தன்குல வணிகர்க்கண்டு தன்னிலை யுணர்த்தி வரப் புறப்படு கின்றான். இங்குக் கோவலன், 'நெறியின் நீங்கியோர் நீர்மையே னாகி..... சிறுமை யுற்றேன்', எனத் தன் தவற்றுக்காக இரங்கு கின்றான். இப்பகுதியின் விளக்கவுரையில் நல்லார், 'ஒழுக்க முடைய விழுக்குடிப் பிறந்தோர் நாணுடை மகளிரொடு நீணெறிச் செல்லா ரென்பது கருதி, 'நெறியி னீங்கியோர் நீர்மையே னாகி' என்றானென்றுணர்க. அன்றி, நாடுகாண் காதைக்கண்,

*'வம்பப் பரத்தை வறுமொழி யாளனொடு*
*...... ...... ...... சென்றோர்*
*காமனுந் தேவியும் போலு மீங்கிவர்*
*ஆர்' (10:219-22)*

எனவும்,

*'உடன் வயிற் றோர்க ளொருங்குடன் வாழ்க்கை*
*கடவது முண்டோ' (10:227-28)*

எனவும் கூறுதலும், அதனால் அவர்க்குச் சாபம் வருதலும் போல் வன இவளை உடன்கொண்டு வருதலான் வந்தனவென்று தன் அறிவின்மையை வெறுத்து நொந்து கூறினானெனினுமாம்,'[2] என எழுதுகின்றார். இங்குக் கோவலன் 'நெறியின் நீங்கிய' தன்மை யாங்ஙனம் என்ற வினாவிற்கு விடைகிடைக்கின்றது. இதனால் தன் தவற்றுக்கு வருந்தும் கோவலன் பண்பு வெளிப்படுவதோடு, தன் தவற்றால் பிறருற்ற துன்பத்திற்காக இரங்கும் மனநிலையும் வெளிப்படுகிறது.

கொலைக்களக் காதையில் தன் தவறுகளை யெல்லாம் மனைவி யிடம் கூறி வருந்திய கோவலன், 'எழுகென எழுந்தாய் என்செய் தனையென'க் கேட்கிறான். இதற்கு விளக்கம் கூறிய நல்லார்,

1. சிலப். 13:19-29-உரை, பக்:341.
2. சிலப். 14:17-20-உரை, பக்:368.

'இத்துணையும் தனது ஒழுக்கத்தை வெறுத்து இவ்வரவிற்கு (மதுரைப் பயணத்திற்கு) நீயும் உடன்பட்டாயெனத் தனது அறிவின்மையை அவளொடு படுத்துக் கூறினான்'[1] என முடிக்கின்றார். இங்கும் தனது அறிவின்மைக்கு வருந்தும் கோவலன் மனநிலை நல்லாரால் எடுத்துக் காட்டப்படுகிறது.

தவப்பெருஞ் சிறப்பின் கவுந்தி யடிகட்கு முக்கால வுணர்வின்மையை ஈரிடங்களில் எடுத்துக் காட்டுகின்றார் நல்லார்.

'ஒழிகென வொழியீ ரென்பதற்கு',
இவர்க்கு எதிர்வ தறிந்துகூறினரெனின்,

'தவந்தரு சிறப்பிற் கவுந்தி......
உண்ணு நோன்போ டுயிர்பதிப் பெயர்த்ததும்' (27:79-83)

என நீர்ப்படையுள் மாடலன் கூறுதலானும், அடைக்கலக் காதையில்,

'...... ...தன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்
உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும்
இடைக்குல மடந்தைக் கடைக்கலம் தந்தேன்' (15:126-30)

எனவும், 'தாயு நீயே யாகித் தாங்கு' (15:136) எனவும், 'மிகப்பேரின்பந் தருவது கேளாய்' (15:150) எனவும் ஒரு பொழுதிற்கு இத்துணை ஓம்படை யெல்லாம் கூறவேண்டா வாகலானும் இவர்க்குத் தவப்பயனாலே சபித்தலன்றிக் காலவுணர்ச்சி யின்மையுணர்க'[2] எனவும் 'கண்டறி கவுந்தி என்பதனாலும் காலவுணர்ச்சியின்மை யுணர்க'[3] எனவும் நாடுகாண் காதையுரையில் இதனை எடுத்துக் காட்டுகின்றார்.

மேலும் கவுந்தி யடிகள் மாங்காட்டு மறையவனை, 'நலம்புரி கொள்கை நான்மறையாள' என விளிப்பது இகழ்ச்சி என்றும்,[4] அவர் திருமாலைக் 'காமுறு தெய்வ' மெனக் கூறுவதைக் காமமுறும் தெய்வ மென்றும் காமக் குரோதாதிக ளெல்லாமுடைய தெய்வமென்றும்,[5] நல்லார் விளக்குவது கவுந்தியடிகளின் பிற சமயக் காழ்ப்புணர்ச்சியைக் காட்டும்.

---

1. சிலப். 16:63-70-உரை, பக்:429.
2. சிலப். 10:55-உரை, பக்:271.
3. சிலப். 10:164-69-உரை, பக்:279.
4. சிலப். 11:152-உரை, பக்:307.
5. சிலப். 11:158-59-உரை, பக்:307.

பாண்டியன் நெடுஞ்செழியன் பாத்திரப்படைப்பை நுணுகி நோக்கிய நல்லார், அவன் தவறுடைமைக்குக் காரணம் சூழ் நிலையே என்பதை ஈரிடங்களில் வலியுறுத்துகின்றார்.

'வினைவிளை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் றேரா னாகிக்
கன்றிய காவலர்க் கூஉய்க் கள்வனைக்
கொன்றச் சிலம்பு கொணர்க' (பதி:27-30)

என்ற பதிக வரியுரையில், 'அக்கள்வனைக் கொல்ல அச்சிலம் பையும் அவனையும் இப்பொழுதே இங்கே கொண்டு வருவீராக வெனச் சொல்லக் கருதினவன் காமபரவசனாய் இச்சிலம்பு இவ ளூடல் தீர்க்கும் மருந்தா மென்னும் கருத்தால் வாய் சோர்ந்து கொன்று அச்சிலம்பை இப்பொழுதே கொணர்க வென்று கூறலா லென்க,[1] என எழுதிச் செல்கிறார்.

இப்பதிகச் செய்தி கொலைக்களக் காதையில் பேசப்படுவதன் சுருக்கமே. கொலைக்களக் காதையில்,

'வினைவிளை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் றேரா னாகி
ஊர்காப் பாளரைக் கூவி யீங்கென்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகிற்
கொன்றச் சிலம்பு கொணர்க' (16:148–153)

என இதனைச் சற்று விரிவாகப் பேசுகின்றார் இளங்கோ. இதற்கு உரை எழுதும் போதும், 'சினையலர் வேம்பன் ஊர்காக்கும் காவ லாளரை யழைத்து இங்ஙனமாகிய எனது தாழ்பூங் கோதையை யுடையாள் தன்னுடைய காலணியாகிய சிலம்பு இவன் சொன்ன களவில் தழும்பிய கள்வனுடைய கையகத்ததாயின், அவனைக் கொல்ல அச்சிலம்போடு ஈங்குக் கொணர்க வெனக் கருதியவன் வினை விளைகின்ற காலமாதலானே இதனைச் சிறிதும் தேரானாய்த் தேவி கூடாதேகச் சுற்ற நீங்கிச் சிலதியரோடு கோயில் நோக்கிக் காம பரவசனாய் அவள் கடையிடத்தோனாகலானே அவனைக் கொன்று அச்சிலம்பை இவளூடல் தீர்த்தற்கு உதவியாக இவ் விடத்தே கொணர்வீராக வென்று சொல்ல வென்க'[2] என மேற் கண்ட செய்தியை விவரிக்கின்றார். இங்ஙனம் பாண்டியன்

---

1. சிலப். பதி:27-30-உரை, பக்:21.
2. சிலப். 16:148-53-உரை, பக்:432.

தவறுடைமைக்குச் சூழ்நிலையே காரணம் என்பதை நல்லார் தெளிவிக்கின்றார்.

சிலப்பதிகாரக் காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் சோழ வேந்தன் கரிகால் பெருவளத்தானின் மனநிலையும் ஓரிடத்துச் சுட்டப் படுகிறது. தன்னுடைய தலைமையில் மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் கண்ட அரசன் அவள்மேல் காமக் குறிப்புடைய னாயினான் என்கிறார் நல்லார்.

> '..... ..... காவல் வேந்தன்
> இலைப்பூங் கோதை யியல்பினன் வழாமை' (3:159-60)

என்னும் வரிகட்கு உரை எழுதிய நல்லார், 'என் சொல்லிய வாறோ வெனின்-நாடகமகள் அரங்கேறக்கண்ட அரசன் அவள் மேற் காமக்குறிப்புடையனாதல் இயல்பு. அங்ஙனம் மாதவி யாடல் பாடல் அழகென்னும் இவை முதலிய கண்களிப்பக் கண்டும் செவிகளிப்பக் கேட்டும் நெஞ்சம் அழிந்து காமக்குறிப்பு மீதூர வும் நாம் இவளை வரையின் நவை பிறக்கு மென்பது கருதி வரை யானாயினா னென்பதாம்'[1] என விளக்கம் தருகின்றார். இது சோழ னின் மனநிலையைத் தெளிவு படுத்துவதோடு, மாதவியின் ஆடல் பாடல் அழகு என்னும் முச்சிறப்புக்களையும் விளக்கி நிற்கின்றது.

இங்ஙனம் அடியார்க்கு நல்லாரின் திறனாய்வு நெஞ்சம் கதைச் கட்டுக் கோப்பு, கதை நிகழ்ச்சிகளைக் கால வுணர்வோடு காட்டிச் செல்லுதல்- பாத்திரப்பண்பை விளக்குதல் என்னும் நிலைகள் சிறப்பாக வெளிப்படுகின்றன. பிறவிடங்களிலும் நல்லாரின் திற னாய்வுக் கருத்துக்களும் எண்ணங்களும் வெளிப்பட்டுத் தோன் றினும் இப்பகுதிகளிலேயே அவர் ஓர் ஒப்பற்ற திறனாய்வுக் கலைஞ ராகத் திகழ்கின்றார் எனலாம்.

### 4. காதையும் பாடல் யாப்பும்

சிலம்பின் சிற்றுறுப்பு முப்பது காதைக ளென்பினும் அவை முப்பதும் காதை என்ற பெயர் பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. 22-காதைகளே காதை என்ற பெயர் பெறுகின்றன.[2] சிலப்பதிகாரக் காப்பியம் ஆசிரியப் பாவால் அமைவதாயினும் எல்லாக் காதைகளும் ஆசிரியப் பாவால் அமைந்தனவல்ல. 19-காதைகளே 'என்' என்னும் முடிவு பெறும் நிலை மண்டில ஆசியப் பாவால் அமைவன.[3] இக் காதைகளில் சிலவற்றின் பெயர்களும்

---

1 சிலப். 3;159-60-உரை, பக்:120.

2. காதை எண்: 2-6, 8-11, 13-16, 20, 22, 23, 25-30.

3. காதை என்: 2-6, 8, 10-11, 13-16, 22, 23, 25-28, 30.

இசை, கூத்து பற்றிய காரணத்தால் அமைகின்றன. இங்ஙனம் காதைகட்கும் பாவமைப்பிற்குமுள்ள தொடர்பை யெல்லாம் நல்லார் நயம்பட விளக்கிச் செல்கின்றார்.

கதை, காதை என்ற சொற்களை உரைப்பாயிரத்தில் ஆராய்கிறார் நல்லார். 'இதன் செய்யுள் காதை யென்று வழங்குதலிற் கதையை (கதைநிகழ்ச்சியை) யுடையது காதை யாமாகலின், ஆசிரியம், வெண்பா, வெண்கலிப்பா என்னும் இவற்றோடு சிறு பான்மையான் ஒருசார் கொச்சகக்கலி மயங்கி வருதலானும், காண்டமெனக் குறி பெறுதலானும் இதனைக் கதை (பொய்க்கதை) யென்றல் வலியுடைத் தென்பார்க்கு அற்றன்று. கதை யென்பது பொய்ப்பொருள் புணர்த்துக் கூறுவது'[1] எனக் குறிப்பிடுகின்றார். இதனால் கதைநிகழ்ச்சிகளை உள்ளடக்கியது காதை என வழங்கப் பெறுகின்றது என்பது நல்லாரின் கொள்கை. இதனைப் பின்வரும் ஒவ்வொரு காதையின் உரையிலும் தெளிவு படுத்துகின்றார்.

**பதிகம்**

அறுபத்தெட்டா மடியுள் 'கடலாடு காதையும்' எனக் குறளடியும், 'வாழ்த்து வரந்தரு காதையொடு (85) எனச் சிந்தடியும், 'இவ்வா றைந்தும்' (86) எனக் குறளடியும் வந்து,

> 'ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற்
> றோற்ற முச்சீர்த் தாகு மென்ப' (தொல்.செய்:68)

என்ற ஆசிரியர்,

> 'இடையும் வரையார் தொடையுணர் வோரே'
> (தொல்.செய்:69)

என்றதனாற் குட்டச் செந்தூக் காயிற்று'[2]

**மங்கல வாழ்த்துப் பாடல்**

இதனை மங்கல வாழ்த்துக்காதையு மென்னாது பாடலுமென்றது என்னையோ வெனின்-இஃது ஆசிரியப்பாவால் வாராது கொச்சகக் கலியால் வருதலானும், கதையை யுடையது காதையா மாதலானும், அவ்வாறு இதிற் கதை நிகழ்ச்சி யின்மையானும், வாழ்த்தும் உரையும் பாடலுமாய் வருதலானும் இங்ஙனம் பெயர் கொடுத்தாரென வுணர்க. அஃது அற்றாக; மேலும் கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி, வஞ்சின மாலை, குன்றக் குரவை இவையிற்றையும் காதை யென்றிலரா லெனின்

---

1. சிலப். உரைப், பக்:9.
2. சிலப். பதி-உரை, பக், 29.

அவற்றைக் கூறுததும் சில வேறுபாடு கருதிப் போலும். என்னை வேறுபாடெனின் அவை தத்தம் முடிவிற் கூறுதும்.'[1]

*கானல்வரி*

'இஃது இசைப்பாவாற் பெற்ற பெயர். இதனுள்ளும் கதை நிகழாமை யுணர்க.'[2]

*கனுத்திற முரைத்த காதை*

இது கலிவெண் பாட்டாகலின்,

'ஒருபொரு ளுதலிய வெள்ளடி யியலால்
திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே' (தொல்.செய்:153)

'என்பதனாற் கனுநிலை யுரைத்தற் பொருண் முடிபாகிய பாவதனைக் கூறுதலிற் காதை யாயிற்றென வுணர்க.'[3]

வேட்டுவ வரி

'இருவகை பல்வகை யென்னும் விலக்கோ
டரியவுறுப் புப்பதினொ ராட்டுக்-குரவைவரி
சொக்க மவிநய நாடகமென் றிவற்றுல்
தக்கவனே யாடலா சான்'

என்றமையான், வரி யென்பது கோலச்சாரி; இது வேட்டுவ மக ளாகிய சாலினி கொற்றவை யுருக்கொண்டு ஆடுதலின்;

'கொற்றவை கொண்ட வணிகொண்டு நின்றவிப்
பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ'

(12:கொற்றவை)

என்பதனு லறிக. கூத்துள் படுதலின், நாடக வரிப்பெயராய், வேட்டுவ வரி நிகழ்தலின் இது வேட்டுவ வரியாயிற்று. இது கூத்தாற் பெற்ற பெயர்.'[4]

ஆய்ச்சியர் குரவை

'குரவை யென்பது கூறுங் காலைச்
செய்தோர் செய்த காமமும் விறலும்
எய்த வுரைக்கு மியல்பிற் றென்ப'

எனவும்,

---

1. சிலப். பதி: 62–63-உரை, பக்:25.
2. சிலப். பதி: 69-உரை, பக்:25.
3. சிலப். பதி: 70–71-உரை, பக்:26.
4. சிலப். பதி: 73-உரை, பக்:26.

'குரவை யென்ப தெழுவர் மங்கையர்
செழுநிலை மண்டலக் கடகக் கைகோத்
தந்நிலைக் கொட்பநின் றாட லாகும்'

எனவும் சொன்னாராகலின் இதுவும் ஆய்ச்சியரிடத்து நிகழ்த லான் ஆய்ச்சியர் குரவை யெனக் கூத்தாற் பெற்ற பெயர்.[1]

துன்பமாலை .

'இதுவும் ஊர்சூழ்வரியும் சிறிது கதை நிகழ்ச்சியுள வெனினும் மருட்கை யென்னு மெய்ப்பாடும் அவலம் அரற்றுக் கவலை கையாறென்னு மிவையும் (மணி:30:116) நிகழ்த லியல் பினன் இதனை மாலை யென்று ரெனக் கொள்க.'[2]

ஊர்சூழ்வரி

'கண்ணகி ஊர்சூழ வருவதனைப் பத்தினிப் பெண்டிர் கண்கூடாகக் காண்டலின் இஃது ஊர்சூழ்வரி யென்பதா யிற்று. இதுவும் கூத்தாற் பெற்ற பெயர்.'[3]

வஞ்சினமாலை

'வஞ்சினமாவது மேற்கோள். இக் கலிவெண் பாட்டுப் பத்தினித் தன்மைத்தாகிய ஒரு பொருளையே கருதிக் கூறிய இயல்புடைத் தாகலின் மாலை என்றார்.'[4]

குன்றக் குரவை

'ஆய்ச்சியர் குரவையிற் கூறியது இதற்குங் கூறுக.'[5]

இங்ஙனம் காதை எனப் பெயர் பெறாத எட்டுப் பிரிவுகளையும், காதை என்னும் பெயர் பெறும் கனத்திற முரைத்த காதையையும் விளக்குகின்றார் நல்லார். இவ்வொன்பது காதைகளும் நிலைமண்டில ஆசிரியப்பாவான் அமையாது பிற பாவால் அமைவன வென் பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வெட்டுக் காதைகளும் காதை எனப் பெயர் பெருமைக்கான அடிப்படைக் காரணம் இவற்றில் 'கதை நிகழ்ச்சி நிகழவில்லை' என்பதையே அடிப்படைக் காரண மாகக் கூறுகின்றார் நல்லார். மேலும் ஆசிரியப் பாவால் வராமை யும் இங்ஙனம் 'காதை' எனப் பெயர் பெருமைக்குரிய ஒரு துணைக்

1. சிலப்.பதி: 77- உரை, பக்:27.
2. ,, ,, 77-78 ,, ,, ,,
3. ,, ,, 78-79 ,, ,, ,,
4. ,, ,, 80 ,, ,, ,,
5. ,, ,, 82-83 ,, ,, 28.

காரணமாக நல்லாரால் கொள்ளப்படுகிறது. ஆயின் இதற்கு மாருகக் கனுத்திற முரைத்த காதை,வழக்குரை காதை, வாழ்த்துக் காதை ஆகியன ஆசிரியப் பாவாலமையாது பிறபாவால் அமை யினும் 'காதை' என்ற பெயரைப் பெறுகின்றன. இதற்குக் காரணம் இவற்றில் கதை நிகழ்ச்சி பேசப்படுதலின் இவ்வாறு பெயர் பெற்றன எனக் கொள்ள வேண்டியுள்ளது.

இனி, இக்காதைகளெட்டும் இங்ஙனம் பெயர் பெறுதற்கான வேறு ஒரு காரணமும் நல்லாரால் காட்டப் பெறுகின்றது. வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, ஊர்சூழ்வரி, குன்றக்குரவை யாகிய நான்கும் கூத்தாற் பெயர் பெற்றன. துன்பமாலையும் வஞ்சின மாலையும் ஒரு பொருளைக் கருதிக் கூறினமையின் மாலையாயிற்று. கானல்வரி இசையாற் பெற்ற பெயர். மங்கல வாழ்த்துப் பாடல் வாழ்த்தும் உரையும் பாடலுமாக அமைதலின் இப்பெயர் பெற்றது. இங்ஙனம் இக் காதைகள் பெயர் பெற்றதற்கான காரணங் கூறு கின்ருர் நல்லார்.

இனி, நல்லார் இன்னின்ன காதை இன்னின்ன பாவகை யைச் சேர்ந்தது என ஒவ்வொரு காதையின் உரையிறுதியிலும் எடுத்துக் கூறுவது குறிப்பிடத்தக்கது. 'மங்கல வாழ்த்துப் பாடல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா. மனையறம் படுத்த காதை எல்லா வடியும் நேரடியாய் முடிதலின் இது நிலைமண்டில ஆசிரியப்பா. அரங்கேற்று காதை நிலைமண்டிலம். அந்திமாலைச் சிறப்புச்செய் காதை முதல் நடு இறுதி அளவடியான் முடிதலின் நிலைமண்டில ஆசிரியப்பா. இந்திர விழவூரெடுத்த காதை எல்லா வடியும் அள வடியாய் முடிதலின் நிலைமண்டில ஆசிரியப்பா. கடலாடு காதை நிலைமண்டில ஆசிரியப்பா. வேனிற்காதை நிலைமண்டில ஆசிரியப்பா. கனுத்திற முரைத்தகாதை கனவென்னும் பொரு ளையே கருதாது மாலதி கதையையும் தேவந்தி கதையையும்கலந்து கூறிற்றேனும், உறுப்பழிவின்றி நடந்ததேனும் முந்நான்கடி யினிறந்து வருதலான் நெடுவெண்பாட்டாகாது கலிவெண் பாட்டாதல் உணர்க. நாடுகாண் காதை எல்லா வடியுந் தம்மு ளொத்து முடிதலின் நிலைமண்டில ஆசிரியப்பா. காடுகாண் காதை நேரடியாய் வருதலின் நிலைமண்டில ஆசிரியப்பா. வேட்டுவ வரி பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா. புறஞ்சேரி யிறுத்தகாதை நிலைமண்டில ஆசிரியப்பா. ஊர்காண் காதை நிலைமண்டிலம். அடைக்கலக் காதை எல்லா வடியும் முதனடு விறுதி அளவடியான் முடிதலின் நிலைமண்டில ஆசிரியப்பா. கொலைக்களக் காதை எல்லாவடியும் அளவடியான் முடிதலின் நிலைமண்டில ஆசிரியப்பா. துன்பமாலை மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா. ஊர்சூழ்வரி

அயன்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா' எனக் குறிப்பிடு கின்ருர்.

அடியார்க்கு நல்லார் உரை கிடைத்துள்ள 18-காதைகளில் ஆய்ச்சியர் குரவை தவிரப் பிற காதைகள் இன்னின்ன பாவில் அமைந்துள்ளன எனக் குறிப்பிடுகின்ருர். இவற்றில் பன்னிரு காதைகள் நிலைமண்டில ஆசிரியப்பாவால் அமைவன. எஞ்சிய ஆறில் ஒன்றின் பா பற்றி நல்லார் குறிப்பிடவில்லை. ஏனை ஐந்தில் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா இரு காதைகளிலும், அயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, கலிவெண்பாட்டு, பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா ஆகியவை முறையே ஒவ்வொரு காதை களிலும் பயன்படுத்தப் படுகின்றன.

இங்ஙனம் கதை-காதை வேறுபாடு, காதைகளின் பெயர்க் காரணம், அவற்றின் பாவமைப்பு ஆகியவற்றைத் தெளிவுபடுத்தி உரை வகுக்கின்ருர் நல்லார். இதுவும் நல்லாரின் உரைச் சிறப்பிற்கு ஒரு துணைச் சான்ருகும்.

**5. வாசகர் மனநிலை**

அடியார்க்கு நல்லார் உரை செய்யுங்கால் வாசகர்தம் மன நிலையையும் மனதிற் கொண்டு உரைகாணும் நயம் போற்றற்குரி யது. தம் உரை படிப்போர்க்கு இன்பம் பயக்க வேண்டு மென்றும், அவர்கட்குச் சலிப்புத் தோன்ருமல் இருக்க வேண்டு மென்றும் நினைக்கின்ருர். இதன் காரணமாகவே பலவிடங்களில் உரையை விரிக்காது விட்டுச் செல்கின்ருர்.

பதிகத்தின் முதலிரு வரியுரையில் ஐந்திணைகளின் முதல், உரி, கருப் பொருள்களை விரித்துச் சான்றுகளைச் சிலம்பிலிருந்தே எடுத்துக் காட்டிய நல்லார், 'இச் சொல்லப்பட்ட ஐந்திணையின் முதல் கரு உரிப்பொருளும் பிறவுமாகிய அகத்திணைப் பொருட் பயன் உடம்பொடு புணர்ந்தி உணர்த்துங்காற் புனைந்துரைக்கப் பட்டுக் கேட்போர்க்கு இன்பம் பயவாது உணர்வு சலிக்கு மாகலின் வந்தன வந்துழிக் காட்டுதலைக் கருதிற்று இவ்வுரை யென்க.

இனி, இசை நாடகத் தமிழ் நூலது பகுதியும், இவை போலப் பெருவழக்கின்ருதலானும், நிலத்தோடும், கலத்தோடும், கண்டத் தோடும், கருவியோடும், நிலையோடும், இயக்கத்தோடும் இருவகை பலவகை விலக்குறுப்புக் கை, கால், வட்டணை, பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதமென்ப வற் ருேடும்கதையோடும் பல கூத்துக் கூறுங்கால் உய்த்துணர்

வில்லோர்க்குச் செவிச்சுவை பயக்கு மாதலானும் ஈண்டு விரியாது விரித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக் கொள்க.

இனிப் பதிகச் செய்யுளுள், முதலீரடியும் போல யாண்டும் விரியாதது உரை பெருகு மென்பதனைக் கருதி யென்க'[1] என எழுதுகிறார்.

அரங்கேற்று காதையில் விநோதக் கூத்தின் ஒரு வகையான குரவைக் கூத்தை விளக்கிய நல்லார், 'குரவை-வரிக்கூத்தின் ஓர் உறுப்பு; அவை வந்தவழிக் கண்டு கொள்க'[2] எனக் கூறுகின்றார். இப்பகுதியில் வசைக்கூத்தை விளக்கி, 'வசை-வேத்தியல், பொதுவியலென இரண்டு வகைப்படும்; அவை முந்து நூல்களிற் கண்டு கொள்க',[3] எனக் குறிப்பிடுகிறார்.

இதே காதையில் 'சீர்' என்பதைச்

'செம்முறை யுறழ்பே மெய்ந்நிலை கொட்ட
னீட்ட னிமிர்த்தல்'

என்று சொல்லப்படா நின்ற வண்ணக் கூறுபாட்டையும் இரு வகைத் தாளக் கூறுபாட்டையும் பாலை நிலையினையும் பண்ணு நிலையினையும் நிலைப் படப் படுத்துத் தூயதாகக் காட்டும் தன்மையு மென்க என விளக்கிய அடியார்க்கு நல்லார், 'இதன் பகுதி யெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும்; வந்த வழிக் கண்டு கொள்க. அஃதன்றித் தாளவகை யோத்தினுள்ளும் காணலாகும்.'[4] எனக் குறிப்பிடுகின்றார்.

அரங்கேற்று காதையில் கவிஞனது அமைதி கூறுங்கால் வேத்தியல், பொதுவியலென இருவகை நாடகக் கூறுபாட்டினை விளக்கிய நல்லார், 'வேத்தியல்-அகம், பொதுவியல்—புறமென் பாரும், பிறிது கூறுவாருமுளர். அவை முடிந்த நூல்களிற் கண்டு கொள்க'[5] என்கிறார்.

இந்திர விழவூரெடுத்த காதையில்,

'வாளுங் குடையு மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து' (5:91-92)

---

1. சிலப். பதி: 1-2-உரை, பக்: 18.
2. சிலப். 3:12-உரை, பக்: 80.
3. சிலப். 3:12-உரை, பக்: 80.
4. சிலப். 3:26-உரை, பக்:101.
5. சிலப். 3:39-40-உரை, பக்:108.

என்பதை, வாணாட்கோள், குடைநாட்கோள், முரசுநாட்கோள் எனக் குறிப்பிட்டுப் புறப்பொருள் வெண்பா மாலையிலிருந்து எடுத்துக் காட்டுத் தந்து விளக்கிய நல்லார், 'பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க'[1] என எழுதுகின்றார்.

வேனிற்காதை யுரையில், வட்டப்பாலையின் இடைமுறைத் திரிபு கூறி அவ்வழிப் பிறக்கும் கோடிப்பாலை, செம்பாலை, படுமலைப் பாலை, செவ்வழிப் பாலை, அரும்பாலை மேற் செம்பாலை,, விளரிப் பாலை யாகிய பெரும்பாலை ஏழும் பிறக்கு மாற்றையும், செம்பாலை யுட் பிறக்கும் பாலையாழ், நாகராகம், ஆகரி, தோடி, கௌடி, காந்தாரம், செந்துருத்தி, உதயகிரியாகிய பண்களையும் குறிப் பிட்ட நல்லார், 'பிறவும் விரிப்பின் உரை பெருகுமாதலின் அவற்றை வந்த வழிக் கண்டு கொள்க'[2] என்கிறார்.

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை யாகியவற்றை மறத்துறை என ஊர்காண் காதை யுரையிற் காட் டிய நல்லார், 'இனி விரிப்பின் அகலும். 'தொகை மறவரது தறு கண்' என்பதனான் இவையும் இவற்றின் துறைகளும் வந்தவழிக் கண்டுகொள்க'[3] என்பர்.

மாணிக்க வருக்கத்தின் பிறப்பிடம் நான்கு, வருணம் நான்கு, பெயர், குணம், குற்றம், நிறம், விலை, பதி யாகியன குறிக்கும் நூற்பாவைக் காட்டி, இவற்றிற் சிலவற்றிற்குரிய விளக்க நூற்பாக் களையும் தந்து, 'ஒழிந்தனவும் விரிப்பின் உரை பெருகும்; வந்த வழிக் கண்டு கொள்க'[4] எனக் காட்டுகின்றார்.

நீலமணி வருக்கத்தின் சாதி நான்கு, குணம் பதினொன்று, குற்றம் எட்டு எனக்கூறி முதலிரண்டிற்கும் எடுத்துக்காட்டு நல்கிய நல்லார், 'இனிக் குற்றம் வந்தவழிக் கண்டு கொள்க'[5] என முடிக்கின்றார்.

ஆய்ச்சியர் குரவை யுரையில், வட்டப்பாலை வருமாறு விளக்கிய நல்லார், தாரத்து உழை பிறக்கும்; உழையிற் குரல் பிறக் கும்; குரலுள் இளி பிறக்கும்; இளியுள் துத்தம் பிறக்கும்; துத்தத்துள் விளரி பிறக்கும்; விளரியுள் கைக்கிளை பிறக்குமெனக்கூறி,

1. சிலப். 5:89-94-உரை, பக்:161.
2. சிலப். 8:35-உரை, பக்:232.
3. சிலப். 14-12-உரை, பக்:367.
4. சிலப். 14;186-187-உரை, பக்:383-84.
5. சிலப். 14;190-உரை, பக்:384.

'இவற்றுள் முதலில் தோன்றிய நரம்பு தாரம்; இவை விரிப்பிற் பெருகும்; வந்தவழிக் கண்டு கொள்க'[1] என வுரைக்கின்றார்.

இங்ஙனம் பதின்மூன்று இடங்களில் அடியார்க்கு நல்லார் உரைப்பெருக்கம் கருதிச் செய்திகளை, 'வந்த வழிக் கண்டு கொள்க' எனக் கூறி வாசகர்களின் கவனத்திற்கு விட்டுச் செல்கின்றார். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்கு விருத்தியுரையே செய்துள்ளாராயினும் அந்த விருத்தியுரையும் எந்த அளவு விரிவுபெற வேண்டும் என்ற ஒரு வரையறை வேண்டும்; ஒரு அளவுகோல் வேண்டும். இவ்வரையறையும் அளவுகோலையும் எங்ஙனம் கொள்வது என்பதற்கு விடையாக நல்லார் வாசகர் மனநிலையையே சிறந்த வரையறையாகவும் அளவு கோலாகவும் கொள்கின்றார் எனலாம். ஓர் உரைநூல் வாசகனுக்கு இன்பம் தருதல் வேண்டும்; தேவையான அளவு விரிவு பெறுதல் வேண்டும்; அதற்கு மேலும் சென்று வாசகனைச் சலிப்படையச் செய்யக்கூடாது. இதுவே நல்லார் தம் விருத்தியுரைக்குக் கொண்ட அளவு கோல். கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த நல்லார் வாசகர் மனநிலை அறிந்தும் அவர்தம் மனச்சுமையையும் பொறுமையையும் உணர்ந்து உரை எழுதியுள்ளார் என்பதை நினைக்கின்றபோது அவர்தம் பெருமை மேலும் உயர்கின்றது.

### 6. முன்பின் நோக்கி உரை வகுத்தல்

உரையாசிரியர்கள் மூலநூலை முழுநிலையில் தெளிந்து, அதிற் பேசப்படுகின்ற செய்திகளை முறைப்படுத்திய பின்னரே உரை எழுதத் தொடங்குதலின், சில பகுதிகட்கு உரை எழுதுகின்ற போது முன் பின்னுள்ள நிகழ்ச்சிகளை இணைத்து அதற்குத்தக உரை கூறிச் செல்கின்றனர். இம்முறை அடியார்க்கு நல்லாரிடம் சிறப்பாகக் காணப்படுகிறது. பலவிடங்களில் முன்பின் நிகழ்ச்சிகளை இணைத்து உரை எழுதிச் செல்கின்றார்.

பதிகத்தின் 12-20-வரிகட்குப் பொழிப்புரை கூறிய நல்லார்,

'கண்ணகி யென்பாண் மனைவி யவள்காற்
பண்ணமை சிலம்பு பகர்தல் வேண்டிப்
பாடல்சால் சிறப்பிற் பாண்டியன் பெருஞ்சீர்
மாடமதுரை புகுந்தனன்' (பதி:17-20)

என்னும் வரியிலுள்ள பொருள் நயத்தை விளக்குகின்றபோது, 'காற்சிலம்பு பகர்தல் வேண்டி யெனவே தலைக்கோல முதலிய அணிகள் அனைத்தும் முன்னமே தொலைந்தது விளங்கி நின்றது.

1. சிலப். 17-13-உரை, பக்:449.

சிறப்பிற் பாண்டிய னென்றும், பெருஞ்சீர் மாடமதுரை யென்றும் அடிகள் புகழ்ந்தார் இவையும் பழ வினையால் அழிந்த வென்னும் இரக்கம் தோன்ற. மாடமதுரை புகுந்தன னென்பது-காட்டினன்றி ஓர் ஊரின்கண் உயிரும் பொருளும் இழந்தானென்பது மேல் வினை யத் தோன்றிநின்றது'[1] எனப் பின்னிகழ்வை முன்னுணர்த்து கின்றார்.

'திருந்துகோ னல்லியாழ் செவ்வனம் வாங்கி'

(6:172)

என்னும் கடலாடு காதை வரியை விளக்கும் நல்லார், 'திருந்து கோ னல்யாழ்-இன்பத்தை விளைத்தற்குக் காரணமாகிய கோலை யுடைய யாழ்; எனவே, மேல் துன்பத்தை விளைவிக்கு மென்பது கருத்து. செவ்வனம் வாங்கி என்றார். பின்னர் ஊடலோடு வாங்கு தலின்'[2] எனப் பின்னிகழும் கானல்வரி நிகழ்ச்சியினை வாசகர்தம் மனத்தில் பதியச் செய்கிறார்.

கவுந்தி யடிகளொடு மதுரையை நெருங்கிய கோவலன் கண் ணகியர், வையை யாற்றைத் தொழுது, அதன் 'பரிமுக வம்பியும் கரிமுக வம்பியும் அரிமுக வம்பியும் அருந்துறை யியக்கும் பெருந் துறை மருங்கிற் பெயராது' மரப்புணை ஏறித் தென்கரை எய்துகின் றனர். இவ்விடத்தில் 'பெருந்துறை மருங்கிற் பெயராது' என்ற வரிக்கு விளக்கம் கூறிய நல்லார், 'முன்னர் வம்பப் பரத்தை வறு மொழி யாளனொடு (10:219) சாபமுறுதலின் ஈண்டு மருங்கிற் பெயரா தென்றார்'[3] என முன்னிகழ்வை நினைவு கூர்கின்றார்.

'அறம்புரி மாந்த ரன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர் புக்கனர் புரிந்தென்'

(13:195-96)

என்னும் புறஞ்சேரியிறுத்த காதையின் இறுதி வரிகட்குப் பொருள் விரிக்கும் ஞான்று, 'இது (புறஞ்சிறை மூதூர்) கீழ்த்திசை வாயிற்கு அயலதோர் முனிவர் இருப்பிடம். புரிந்து புக்கனரெனப் பொதுமையாற் கூறினமையின், முன்னர் நாடுகாண் காதைக் கண்ணே, 'அறிவனை யேத்த .....ஒன்றிய வுள்ள முடையேன்' (57-59) என்பதனாற் கவுந்தி யடிகளும் அறிவனைப் புரிந்து புக்கா ரென்க'[4] என முன்னிகழ்வையும் இணைத்துப் பொருளுரைக்கின்றார்.

ஊர்காண் காதையில்,
'நெறியி னீங்கியோர் நீர்மையே ளுகி
நறுமலர் மேனி நடுங்குதுய ரெய்த

1. சிலப். பதி:17-20-உரை, பக்:20.
2. சிலப். 6:172-உரை, பக்: 200.
3. சிலப். 13:-178-உரை, பக்:350.
4. சிலப், 13;195-96-உரை,பக்:351,

*அறியாத் தேயத் தாரிடை யுழந்து*
*சிறுமை யுற்றேன்' (14:17-20)*

எனத் தன் தவற்றுக்காக வருந்தும் கோவலன் கூற்றை ஆய்ந்துணர்ந்த நல்லார், 'ஒழுக்கமுடைய விழுக்குடிப் பிறந்தோர் நாணுடை மகளிரொடு நீணெறிச்செல்லா ரென்பது கருதி, 'நெறியினீங்கியோர் நீர்மையேனுகி' யென்ருனென்றுணர்க. அன்றி, நாடு காண் காதைக்கண், 'வம்பப் பரத்தை வறுமொழி யாளனெடு...... சென்ருேர், காமனுந் தேவியும் போலு மீங்கிவர்' (10:219-22) எனவும், 'உடன்வயிற்ருேர்க ளொருங்குடன் வாழ்க்கை, கடவதுமுண்டோ' (10:227-28) எனவும் கூறுதலும், அதனுல் அவர்க்குச் சாபம் வருதலும் போல்வன இவளை உடன்கொண்டு வருதலான் வந்தனவென்று தன் அறிவின்மையை வெறுத்து நொந்து கூறினுனெனினுமாம்,'[1] என முன்னிகழ்ச்சியையும் தொடர்பு படுத்தி விளக்கு கின்ருர்.

இக்காதையில் அடுத்தமையும்,

*'தொன்னகர் மருங்கின் மன்னர் பின்ஞேர்க்*
*கென்னிலை யுணர்த்தி யான்வருங் காறும்*
*பாதக் காப்பினள் பைந்தொடி யாகலின்*
*ஏதமுண்டோ வடிகளீங் கென்றலும்' (14:21-24)*

என்னும் வரிகட்கு, 'அடிகளே, இத் தொன்னகரிடத்துள்ள வணிகர்க்கு என் தன்மை யுணர்த்தி வரும் துணையும் இவட்கு ஏதமின்ருகக் காத்தருள வேண்டுமெனக் கூறக் கருதியவன், தெளிந்து, 'போதுவல் யானும் போதுமின்'(10:60:) என்றவன்றே இவள் நும் பாதமாகிய காவலை யுடையாளாதலின், இவட்கு இனி ஓரேதமுண்டோ; இல்லை யென்று கையெடுத்துக் கூறினுனுகவென்க'[2] என உரை எழுதுகிருர். இங்ஙனம் நல்லார் பொருள் கொள்வதற்கு முன்னிகழ்ச்சி எத்துணையளவு துணைபுரிகின்றது என்பது இங்கு விளங்கக் காண்கிருேம்.

துன்பமாலையுள் 'செங்கண் சிவப்ப அழுதாள்' என்பதற்கு விளக்கம் கூறுகையில், 'ஆண்டு, 'கண்ணகி கருங்கண்' (5:237) என்றவர் ஈண்டு, 'செங்கண்' என்ருர், காலையில் தலையளியாற் பிறந்த செவ்வி தோன்ற,'[3] என்கிருர்.

இங்ஙனம் முன்பின் நிகழ்ச்சிகளை இணைத்து உரை எழுதுவதால், உரையில் ஒரு தெளிவு ஏற்படுவதோடு, வாசகனுக்கும்

1. சிலப். 14:17-20-உரை, பக்: 368.
2. சிலப். 14:21-24-உரை, பக்:368.
3. சிலப். 18:32-உரை, பக்:463.

நிகழ்ச்சிகளைக் கோர்வைப் படுத்தி உணர்ந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமைகின்றது.

**7. காரண காரிய முடிபுகூறல்**

மூலநூலாசிரியர் ஏன் இவ்வாறு கூறினர் என்ற வினவைத் தமக்குள் எழுப்பிக்கொண்டு விடை பகரும் முகனுக உரை வகுத்தல் பெரும்பான்மையான பழைய உரையாசிரியர்களிடம் ஒரு மரபாக அமைகின்றது. அடியார்க்கு நல்லார் இம்மரபைப் பலவிடங்களில் பின்பற்றுகின்ருர்.

'கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்
பியாப்புற வில்லையீங் கிருக்கென் றேகிப்
பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறனேர் கள்வன் கையென'

(பதி:23-26)

என்னும் பதிக வரிகட்கு விளக்கம் கூறும் நல்லார், 'தான் கொண்ட வென்ருர் தன்நெஞ்சறியத் தான் கொண்டதனை இங்ஙனம் கூறினனென்பது தோன்ற; ஈங்கிருக்க வென்ருர் பிறிதோரிடத் தாயின் ஊர் காவலர் ஆராய்வரென்று கருதினனென்பது தோன்ற.என்றேகி என்ருர் அவன் கருத்தும் முயற்சியும் தோன்ற. சில்லரிச் சிலம்பினை யென்ருர் தொழிற் பன்மை தோன்ற. பிறனேர் கள்வன் கையிற் கண்டன னென்ருர் தன்னையும் கள்வனென்றமை தோன்ற',[1] என ஒவ்வொரு சொல்லுக்கும் காரணம் கூறுகின்ருர்.

'வினைவிளை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் றேரா னுகிக்
கன்றிய காவலர்க் கூய்க் கள்வனைக்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கென' (பதி:27-30)

என அடுத்தமையும் பதிகவுரையில், 'தேரானுகி', 'கன்றிய காவலர்' என்னும் சொற்களின் பயன்பாட்டை ஆராய்கின்ருர் நல்லார். 'களவினை ஆராயு நெறி பலவுளவாகவும், அவற்றில் ஒன்றையும் தேர்ந்தில னென்பார் யாவதும் தேரானுகி யென்ருர்; முன்னர்க் கை குறைத்தல் முதலிய முறை செய்தோன் இதனைத் தேர்ந்திலனென்று அடிகள் இரங்கிக் கூறினர். கன்றிய காவலரென்ருர் அவரும் முன்னர்த் தீது செய்யா ரென்பது தோன்ற'[2] என எழுதுகின்ருர்.

---

1. சிலப். பதி:23-26-உரை, பக்:21.
2. சிலப். பதி:27-30-உரை, பக்:21-22.

பாண்டியன் தவறிழைக்க வினைவிளைவு காரணமெனச் சாத்தனார் கூற (பதி:27), செங்குட்டுவன், 'யாதவர் வினைவிளைவு' (பதி:37-38) எனக் கேட்ப, அதற்குச் சாத்தனார் விடை கூறிற்றிலர். இப்பகுதிக்கு உரை வகுத்த நல்லார், 'வினைவிளைவு யாதென்ற வினாவினாற்குப் பாண்டியன் வினைவிளைவு கூறிற்றிலர்; என்னை? அது கட்டுரைக் காதையில் விளங்க உரைக்கப் படும்'[1] எனக் காரணம் கூறுகின்றார். இங்கு மூலநூலார் கூறாது விடுத்த செய்திக்குச் சமாதானங் கூறி மூலநூலார்க்குக் குறை வராது காக்கின்றார் நல்லார்.

'முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரிய
தடிக ணீரே யருளுக' (பதி:61-62)

என்ற சாத்தனார் கூற்றை விளக்கப் போந்த நல்லார், 'என் சொல்லிய வாறேவெனின்-இச்செய்கின்ற காப்பியம் மூவேந்தர்க்கும் உரியதென்பதனால், ஏனையோரை இவர் புகழ்ந்துரையாராகலின், யாம் காப்பியம் செய்யக்கடவே மென்பது கருதி நீரே அருளுகென ஏகார வினைப் பொருண்மை தோன்ற இது கருதி இது சொன்னாற்கு அவர் கருதிய பொருளிற்கு உடம்படாது சொல்லிற்கு உடம் பட்டா ரென்பதாயிற்று'[2] என உரைக்கிறார்.

மங்கல வாழ்த்துப் பாடலில் முதற்கண் திங்களைப் போற்றிய தன் காரணம் கூறும் நல்லார், 'திங்களைமுற் கூறினர், இத்தொடர்நிலைச் செய்யுட்குச் சிறந்த முதன்மொழி அதுவாகலான்'[3] எனச் சுட்டுகிறார்.

மனையறம் படுத்த காதையில் கோவலன், 'அரும் பெறற் பாவாய்', 'ஆருயிர் மருந்தே', 'மலையிடைப் பிறவா மணியே' 'அலையிடைப் பிறவா அமுதே', 'யாழிடைப் பிறவா இசையே' எனத் தன் மனைவியைப் புகழ்கிறான். இங்ஙனம் பாவை யென்றும், மருந்தென்றும், மணியென்றும், அமுதென்றும், இசையென்றும் கூறியதன் காரணம் கூறுகின்றார் நல்லார். 'இவற்றால் சொல்லியது என்னையெனின், -காட்சியில் உயிர் மயக்குறுதலிற் கொல்லியிற் பாவா யென்றும், அவ்வாறு அழியுமுயிரை இமைப்பிற் றருதலின் ஆருயிர் மருந்தே என்றும் கூறி, மலையிடைப் பிறக்கு மணி குழையாமையின் அதிற் பிறவா மணியே யென்பேனோ! அலையிடைப் பிறக்கும் அமிர்திற்கு இவ்வடிவின்மையின் அதனிற் பிறவாத அமுதே யென்பேனோ! யாழ்கட்கு இன்னாதாகலின்

1. சிலப்.பதி: 38-54|உரை, பக்:23.
2. சிலப்.பதி: 61-62-உரை, பக்:25.
3. சிலப். 1;1-உரை, பக்:37.

அதனிடைப் பிறவாத இசையே யென்பேனோ வெனத் தெரிதரு தேற்றவுவமை யென்னும் அலங்காரமும், மலை கடலென விரோதமும் பின்வருநிலை யென்னும் அலங்காரமும் புலப்படுத்தினாரென வுணர்க்,'[1] என விளக்குகிறார்.

புதுமணத் தம்பதிகளான தன்மகனையும் மருமகளையும் மாசாத்துவான் மனைவி தனிமனைப் படுத்துகின்றாள். அவர்கள்,

'மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்'

(2:85-86)

காண இங்ஙனம் தனிமனைப் படுத்துகிறாள். இதற்கு நயவுரை காணும் நல்லார், 'கேண்மையோ டெனவே சுற்றந் தழாலும், அறப்பரி சாரமு மெனவே அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க் கெதிர்தலும் என்பதாயிற்று. இவற்றோடே பொருந்திய வாழ்க்கை யெனவே அருளுடைமை, அன்புடைமை, இனியவை கூறல் முதலிய இல்லறப் பகுதி யெல்லாம் அடங்கும்,'[2] என விரிக்கிறார்.

இந்திர விழவூரெடுத்த காதை,

'உள்ளக நறுந்தா துறைப்ப மீதழிந்து
கள்ளுக நடுங்குங் கழுநீர் போலக்
கண்ணகி கருங்கணு மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன
எண்ணுமுறை யிடத்தினும் வலத்தினுந் துடித்தன
விண்ணவர் கோமான் விழவுநா ளகத்தென்'

(5:235-40)

என்னும் இறுதி வரிகட்குக் காரண காரியத் தொடர்போடு விளக்கங் கூறுகிறார் அடியார்க்கு நல்லார். 'கழுநீர்போல வென்றது ஊறி நிறைந்து இதழினின்றும் வழிந்து சிந்துதலின். நடுங்கு மென்றார் மல்கி நின்று அலைந்து சிந்து மாகலின். கருங்கண் செங்கணென்றார் இருவர்க்கும் கூட்ட மின்மையும் உண்மையு முணர்த்தற்கு. இடத்தினும் வலத்தினும் துடித்தன வென்றார் மேல் இருவர்க்கும் கூட்டமும் பிரிவு முணர்த்தற்கு. விழவு நாளகத் தென்றார் தீர்த்தத்தின் முன்னாளென்பது உணர்த்தற்கு'[3] என எழுதுகிறார். இங்கு ஒவ்வொரு தொடரமைப்பும் இன்னின்ன காரணம் பற்றிப்

1. சிலப். 2: 75-81-உரை, பக்:54.
2. சிலப். 2: 84:89-உரை, பக்:54-55.
3. சிலப். 5:235-40-உரை, பக்:172.

பயன் படுத்தப் பட்டனவென நயங்காணும் சிறப்பு நனிசிறக்கின்றது.

இந்திர விழாவின் இறுதிநாளில் அனைவரும் கடலாடச் செல்கின்றனர். இங்கு அரச குமரரும் அவரது உரிமைச் சுற்றமும் கடலாடச் செல்வதாகக் குறிப்பிட்ட இளங்கோ, வணிகர் தம் உரிமைச் சுற்றமொடு சென்றனர் எனக் குறிப்பிட்டிலர். 'வணிகர்க்கு உரிமை யென்னுதது அவர் புனலாடல் மரபன்மையான்'[1] என இதற்குக் காரணம் கூறுகின்றார் நல்லார்.

குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைத்த கோவலன் நாணுடைமை மிக்கு மனைவியொடு மதுரை புக்கு வணிகம் செய்யக் கருதிப் புறப்படுகின்றான். அவர்கள் வான் கண்விழியா வைகறை யாமத்துக் காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து செல்கின்றனர். இங்குக் 'கடைமுகங் கழிந்து' என்று ஏன் இளங்கோ கூறினார் என்பதற்குக் காரணம் கூறும் நல்லார், 'காலையில் நாணீ ராடுவோர் பிறர்முகம் நோக்காது போதற்கு மறைந்து கழிவர்; இருவரும் அவ்வாறு கழிந்தார் என்றற்குக் கடைமுகங் கழிந்தென்றார் என விளக்கம் தருகின்றார்.[2]

மதுரைக்குக் கோவலன் கண்ணகியரை வழிப்படுத்தியழைத்துச் செல்லும் கவுந்தி, வயல்வழியிலுள்ள ஏதம் குறிக்கின்றார். இங்கு அலவனும் நந்தும் அவரடிப்பட்டுத் துன்புறுதலின் வரும் கொலைப்பாவத்தை 'நோய்' என்கிறார் அடிகள். இதற்கு உரை கூறிய நல்லார், 'நோயென்றார்-கொலையென்று வாக்காற் கூறவு மாகாமையின்,'[3] என விளக்கம் தருகின்றார்.

கோவலன் கண்ணகியர் புகாரின் 'ஊரிடையிட்ட நாடுடன் கண்டு' செல்கின்றனர். இங்கு 'உடன் கண்டென்றார், இந் நாட்டுச் சிறப்பெல்லாம் கண்டு தொலைத்துக் கழிதலருமையின்',[4] என விளக்கம் எழுதுகின்றார் நல்லார். இது புகாரின் நாட்டு வளனைச் சிறப்பாகக் காட்சிப் படுத்துகின்றது.

மதுரைப் பயணத்தினிடையே தோன்றிய சாரணர்கள்,

'கடுங்கா னெடுவெளி யிடுஞ்சுட ரென்ன
ஒருங்குட னில்லா வுடம்பிடை யுயிர்கள்' (10:174-75)

என நிலையாமைக் கொள்கையினைக் கவுந்தியடிகட்கு எடுத்துக் கூறுகின்றனர். இதனை விளக்கும் நல்லார், 'நல்வினை தீவினைப்

---

1. சிலப். 6:155-158-உரை, பக்:199.
2. சிலப். 10:32-33-உரை, பக்:269.
3. சிலப். 10:90-93-உரை, பக்:274.
4. சிலப். 10:148-56 உரை, பக்:278.

பயனாகிய இன்பமும் துன்பமும் வருங்கால் யாவரானும் ஒழிக்க வொண்ணா வென்பதூஉம், யாக்கை நிலையாமையும் இவர் தம் பால் உறுவது கண்டு கவுந்தியடிகட்குச் சாரணர் கூறினரென வுணர்க. விளக்கு உவமித்தார் நினைவற அழிவதற்கும் புக்குழிப் புலப் படாமைக்கும்,'[1] என எழுதுகின்றார்.

ஊர்காண் காதையில், 'கோவலன் சென்று கொள்கையி னிருந்த கவுந்தி யையையைக் கைதொழு தேத்தி' மனைவியை அவர்பால் அடைக்கலப்படுத்தித் தன்குல வாணர்க்குத் தன் னிலை யுணர்த்தி வரப் புறப்படுகிறான். இங்குக் 'கோவலன் சென்று கொள்கையி னிருந்த' என்னும் வரிக்கு விளக்கம் எழுதும் போது, 'சென்றென்பதனால் அவர் வேறிடத் திருந்தமையும், கொள்கையி னென்பதனால் தியானத் தோடிருந்தமையும் கூறினார். கொள்கையி னிருந்த வென்பதற்கு இவர்கள் உறும் துன்பம் உருதிருந்த வெனவுமாம்'[2] எனக்கூறுகின்றார்.

மதுரையில்,

'குடகாற் றெறிந்து கொடிநுடங்கு மறுகிற்
கடைகழி மகளிர் காதலஞ் செல்வரொடு' (14:70-71)

பூம்புனை தழீஇப் புனலாட் டமர்கின்றனர். இப்பகுதிக்கு உரை எழுதிய நல்லார், 'குடகாற்று', 'கடைகழி மகளிர்', 'காதலஞ் செல்வர்' என்னும் சொற்களின் பயன்பாட்டை ஆராய்ந்துரைக் கின்றார். 'ஆடித்திங்கள் என்பது தோன்றக் குடகாற்றுக் கூறினார். நாணும் மடனும் பெண்மையவாதலின் இவற்றைக் கழிந்தே கடைகழிய வேண்டுதலிற் கடைகழி மகளிரெனப் பொதுமக ளிர்க்குப் பெயர் கூறினார். இவர்க்குக் காதல் பொருளின் கண்ண தாகலிற் காதலஞ் செல்வ ரென்றார். தம்மேற் காதலையுடைய செல்வரோ டெனவுமாம்'[3] என விவரிக்கின்றார்.

கண்ணகி தன் கணவனுக்கு அடிசில் ஆக்குதற்குக் கலன் முதலான மாதரியிடமிருந்து பெறுகின்றாள். இங்கு அவள் பெற்ற கலங்களை, 'அமைந்த நற்கலங்கள்' என்கிறார் இளங்கோ. இதன் உட்பொருளுணர்ந்த நல்லார், 'அமைந்த கலமென்றார், தாங்கள் ஆளுங்கலமன்றி மேன்மக்கள் ஆளும் மடைக்கலங்களை'[4] என விளக்குகிறார்.

ஊர்சூழ்வரியில் கணவனை இழந்த கண்ணகி 'என்காற் சிலம்பு கொள்ளும் விலைப் பொருட்டாற் கொன்றாரே' (19:7-8)

---

1. சிலப். 10:174-75-உரை, பக்:279.
2. சிலப். 14:15-16-உரை, பக்:368.
3. சிலப். 14:70-75-உரை, பக்:372.
4. சிலப். 16:18-21-உரை, பக்:425.

என்றும், அங்ஙனம் கொல்லப்பட்ட என் கணவன் வாயினின்று 'தீதறு நல்லுரை கேளா தொழிவேனேல் நோதக்க செய்தாளென் றென்னை எள்ளுமின்' (19:13-14) என்றும் கூறி அரற்றுகின்றாள். இதன் உரையில், 'என்காற் சிலம்பென்றாள்;தான் அரசன்;யான் ஒரு வணிகனின் மனைவி; என் காலணியினென்று பெற்றவிலை தாராமைக் கள்வனென்று ஒரு பெயரிட்டுக் கொன்றார்களேயென்று; இஃதோர் அநியாயம் இருந்தபடி என்னவென்று தெளிந்து கூறி னாள். கொன்றாரே யெனப் பன்மை கூறினாள் அரசனோடு அமைச் சரையுங் கருதி. கேளா தொழிவேனேல் என்றது சவம் எழுந் திருந்து எனக்கு ஒரு வார்த்தை சொல்லக் கேளா தொழிவேனேல் என்றவாறு. எள்ளலென்றது ஆதித்தனைச் சான்று காட்டின வது வுமன்றிப் பட்ட என் கணவன் எழுந்திருந்தது எனக்கு வார்த்தை சொல்லக் கேளேனாகில், 'நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்' என்று நும்மை இகழ்ந்த என்னைக் கள்வன் மனைவி யென்று எள்ளு மின்; எள்ளுதற்கு இது நல்லவிடம் என்றாளென்க'[1] என எழுது கின்றார்.

இங்ஙனம் அடியார்க்கு நல்லார் இளங்கோ கையாண்ட சில சொற்களையும், சொற்றொடர்களையும் நுணுகி ஆராய்ந்து, அவற்றை ஏன் பயன்படுத்தினர் என்ற வினாவை எழுப்பி விடை பகரும் நோக்கில் நயவுரை காணுகின்றார். இம்முறையில் அமையும் நல் லாரின் உரை இலக்கியச் சுவையை நனிசிறக்கச் செய்கின்றது. மட்டுமன்றிப் பிற்றை ஆய்விற்கும் இது வழி வகுத்துக் கொடுக் கின்றது.

### 8. முடிப்புரை

சிலப்பதிகாரத்தின் ஒவ்வொரு காதையும் யாதானும் ஒரு பாவில் அமைதலின் ஒவ்வொன்றும் ஒரு நீண்ட பாடலாக அமை கின்றது. இந்நெடும்பாட்டின் பொருட்பகுதிகள் விளங்கும் பொருட்டு ஆங்காங்கே சில முடிப்புரைகளை எழுதிச் செல்கின்றார் நல்லார். தொடர்புடைய செய்திகளைத் தனித்தனியே விளக்கிய பின் இறுதிநிலையில் அவற்றை முடித்துக் காட்டுகின்றார். பெரும் பாலும் ஒவ்வொரு காதையின் இறுதியிலும் இம் முடிப்புரை காணப் படுகிறது. கிட்டத்தட்ட 36-இடங்களில் இம் முடிப்புரை காணப் படுகிறது.[2]

---

1. சிலப். 19:7-14-உரை,பக்:470-71.
2. சிலப். பக்: 13, 19, 20, 22, 24, 29, 41, 48, 49, 51, 55, 121, 130, 131, 133, 135, 152, 159, 160, 164, 171, 172, 184, 196, 197, 200, 235, 278, 285, 371, 386, 402, 411, 432, 435, 463.

மங்கல வாழ்த்துப் பாடலின் இறுதியில், 'கொடியன்னர், பிரியாமல் நெகிழாமல் தீதறுகென ஏத்தித் தூவி அருந்ததி யன்னளை உழையதாக உருட்டுவோனுகவென அமளி யேற்றினரென்க' எனக் காதை நிகழ்ச்சிகளைச் சுருக்கிக் கூறி ஒரு முடிப்புரை எழுதுகின்ருர். இதேபோன்று மனையறம் படுத்த காதையிறுதியிலும், 'செல்வர்க்குத் தோன்றிய கண்ணியும் கொழுநனும் தென்றலைக் கண்டு மகிழ்ந்து சிறந்து ஏறிக் காட்சிபோலச் சேக்கையிலிருந்து எழுதி மயங்கிக் கையற்று முகநோக்கிக் குறியாக் கட்டுரை கூறுகின்றவன் திங்கள் முதலியவற்றை முதன்முதலில் வரச் சொல்லிப் பலபாராட்டி மகிழ்ந்து செல்வுழி ஒருநாள் பேரியற் கிழத்தி புணர்க்கக் கண்ணகி தனக்குப் பெருங்கிழமையோடு ஆண்டு சில கழிந்தனவெனக் கூட்டுக' என முடிப்புரை எழுதுகின்ருர்.

அரங்கேற்று காதை யிறுதியில், 'ஆடல் முதலியன காட்டல் வேண்டி ஆடலோனும் இசையோனும் இயற்புலவனும் தண்ணுமையோனும் குழலோனும் யாழோனுங் கூடி வகுத்தனர் கொண்டு தொழுதனரேத்த எழுதிவைத்து எடுத்து வகுத்து நாற்றிக் கிடந்த அரங்கத்துக் கொண்டு ஒழுக்கிப் போக்கி ஆகெனச் செய்து ஏந்தி அணிந்துகொண்டு இயம்ப ஆர்ப்பச் செய்து கொடுப்ப வைத்தபின் நிற்ப ஏறிப் பொருந்திச் சேர்ந்த மகளிரும் பொலிய நீங்கப் பாட இசைக்கும், கருவிகளெல்லாம் நின்றது; நின்றது; நின்றது; நின்றிசைத்தது; பதினெென்று போக்கி அம்முறை போக்கி வகுத்தெனக் கடைப்பிடித்துக் காட்டினளாதலின், எய்தி ஏறிப் பெற்றனள்; பெற்றனள்; பெற்று நிறுத்தக் கோவலன் வாங்கி மனைபுக்கு அயர்ந்து மயங்கி மறந்து விருப்பினனுயினனென்க'எனக் காதைச் செய்திக ளனைத்தையும் தொகுத்துரைக்கின்ருர். பிறகாதைகளுக்கும் இவ்வாறே முடிப்புரை எழுதுகின்ருர். காதை இறுதி முடிப்புரையன்றிக் காதையின் இடையிலும் பல முடிப்புரைகள் அமைகின்றன. இவை தொடரமைப்பின் சிறப்பினை உணர்த்துகின்றன.

### 9. சொல் வருவித்துப் பொருள் கோடல்

நல்லார் தம் உரையில் பொருள் விளக்கத்திற்கு வேண்டிச் சில விடங்களில் சில சொற்களைத் தேவைக்கேற்ப வருவித்துக் கொண்டு உரை எழுதிச் செல்கின்ருர். ஏறத்தாழ 10-இடங்களில் இங்ஙனம் சொற்களை வருவித்துப் பொருள் கொள்ளுகின்ருர். இவ்விடங்களில் வருவிக்கப்பட்ட சொல் இன்னதென்பதைப் பெரும்பாலும் சுட்டிச் செல்கின்ருர்.

1. 'பொன்செய் கொல்லன் றன்கைக் காட்ட' (பதி:20-22) என்னும் பதிகவுரையில் 'கண்டு' என ஒரு சொல் வருவித்துப் பொருள் கொள்கிருர்.

2. பதிகம் 55-60-வரிகளி னுரையில் 'பிறந்தன' என ஒரு சொல் வருவித்து,

'அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாக' (பதி:55-58)

பிறந்தனவென உரை கூறுகின்றார்.

3. மனையறம் படுத்த காதை 28-31-வரிகளின் உரையில் 'இருந்து' என ஒரு சொல் வருவித்து, 'கதிரொருங் கிருந்த காட்சி போல' இருந்து கண்ணகியின் பெருந்தோளில் கரும்பையும் வல்லியையும் எழுதி இன்பம் துய்த்தான் என வுரைக்கிறார்.

4. இக்காதை 48-வது வரியுரையில், 'ஆக' என ஒரு சொல் வருவித்து, 'படைநினக் களிக்கவத னிடைநினக் கிடை' ஆக எனப் பொருளுரைக்கிறார்.

5. இந்திர விழவூரெடுத்த காதை 208-11-வரிகளின் உரையில் 'வளர' என ஒரு சொல் வருவித்துக் கொண்டு,

'நீர்வாய்த் திங்க ணீணிலத் தமுதின்
சீர்வாய் துவலைத் திருநீர் மாந்தி' (5:208-209)

வளர 'வளர்த்த வானவல்லி வருதலு முண்டுகொல்' எனப் பொருள் கொள்ளுகின்றார்.

6. இதே காதை 218-23-வரிகளி னுரையில் 'கொல்' என்னும் இடைச் சொல்லை வருவித்துக் கூற்றம் 'பெண்மையிற் றிரியும் பெற்றியு முண்டு' கொல் எனப் பொருள் விரிக்கின்றார்.

7. கடலாடு காதை 7-13-வரிகளி னுரையில் 'போந்து' என ஒரு சொல் வருவித்துத் 'திருந்துவே லண்ணற்குத் தேவ னேவ' (6:12) போந்து எனப் பொருள் முடிவு காட்டுகிறார்.

8. 'மாலை வாங்கிய வேலரி நெடுங்கண்
கூல மறுகிற் கோவலற் களிப்ப' (8:72-73)

என்னும் வேனிற்காதை யுரையில் 'போய்', 'கண்டு' என இரு சொற்களை வருவித்துக் கொண்டு வேலரி நெடுங்கண்ணளாகிய வசந்தமாலை போய் கூலமறுகிற் கோவலற் கண்டு அளிப்ப எனப் பொருள் கொள்ளுகின்றார்.

9. கனாத்திற முரைத்த காதை 14-16-வரிகளி னுரையில் 'சொல்லி' என ஒரு சொல் வருவித்துப் பொருள் கொள்ளுகின்றார்.

*10.* மேலும் *44-54*-வரிகளி னுரையில், 'கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டு' எனும் *49*-வது வரியில் 'சொல்ல' என்னும் சொல்லைச் சேர்த்துக் கோவலற் குற்றதோர் தீங்கென்று சொல்ல அது கேட்டு' எனவும், 'நற்றிறம் கேட்கி னகையாகும்' எனும் 53-வது வரியில் 'என' என்ற சொல்லைச் சேர்த்து 'நற்றிறங் கேட்கி னகையாகும் என' எனவும் பொருள் கொள்ளுகின்றார்.

*11.* நாடுகாண் காதையில்,

'உரையாட் டில்லை யுறுதவத் தீர்யான்
மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்' (*10:50-51*)

எனும் வரியின் இறுதியில் 'என' வென்னும் சொல்லைச் சேர்த்துப் பொருள் கூறுகின்றார்.

*12.* புறஞ்சேரி யிறுத்த காதை *19-29*-வரிகளி னுரையில் சில சொற்கள் வருவிக்க என எழுதுகின்றார் நல்லார்.

*13.* 'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்' (*13:87*) என்னும் வரியின் இறுதியில் 'கண்டருள்க' என்ற சொல்லைச் சேர்த்து, 'இதனைத் திருவுளத்திலே கண்டருள்க' எனப் பொருள் எழுதுகிறார்.

*14.* இக்காதை *98-101*-வரிகளி னுரையில், 'எனச் சொல்லி' என்று ஒரு சொல் வருவித்து, 'மாசில் குரவர் மலரடி தொழுதேன்' எனச் சொல்லி இவ்வோலையைக் காட்டு' எனப் பொருள் எழுதுகின்றார்.

*15.* ஊர்காண் காதையில் 'கடைகழி மகளிர் காதலஞ் செல்வரொடு பருவம் எண்ணியிருக்கின்றனர். இங்குக் கார், கூதிர், முன்பனிப் பருவங்களை விளக்கிக் கூறிய நல்லார், இவை இக்கடைகழி மகளிரின் கூற்றில் அமைவன வென்பதை 'எவ்விடத்துள்ளன' எனும் சொல் வருவித்துப் பொருள் கொள்வதால் புலனாகின்றது. 'வாடையொடு வருஉம் காலமன்றியும்...கூதிற்காலமும்...அச்சிரக் காலையும்' எவ்விடத்துள்ளன என உரை முடிபு கூறுகின்றார். (*14:102-105*)

*16.* கொலைக்களக் காதையில் கண்ணகி, 'என் வாயன் முறுவற்கவ ருள்ளகம் வருந்தப் போற்றா வொழுக்கம் புரிந்தீர் (*16:79-81*) எனத் தன் கணவனின் போற்றா ஒழுக்கம் இதுவெனச் சுட்டும் பகுதிக்கு உரை எழுதிய நல்லார் 'நீர்' என ஒரு சொல் வருவித்து 'என்வாயன் முறுவற்கவர் உள்ளகம் வருந்த நீர் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' என உரை எழுதுகின்றார்.

*17.* கள்வர்தம் இயல்பினை அடிகள் வழிநின்று விளக்கிய நல்லார்,

'கருவி கொண்டவ ரரும்பொருள் கையுறின்
இருநில மருங்கி னியார்காண் கிற்பார்' (16:186-87)

என்னும் வரியுரையிறுதியில் 'இங்ஙனமாதலால்' என ஒரு சொல் வருவித்துக் 'கள்வர் திறம் இங்ஙனமாம்' என்று முடிக்கின்றார்.

18. 'கொலைக்களக் காதையின் இறுதி வெண்பாவிற்கு உரை எழுதிய நல்லார், 'ஆதலால்' என ஒரு சொல் வருவித்து, 'பாண்டியன் முன்செய்த தீங்கின் விளைவாகி வந்த வினையாலே, மண்ணில் வளையாத செங்கோல் கண்ணகி தன் கேள்வன் முன் னிலையாக வளைந்தது; ஆதலால், செய்தானொருவனை இருவினை யும் நண்ணுமென்பதனை யறிந்து, உலகத்தீர்! நல்வினையே செய்யு மின்களென்று அடிகள் கூறினாரென்க' என உரை வகுக்கின்றார்.

இங்ஙனம் பல்வேறு சொற்களை இடத்திற்கேற்பப் பெய்து உரை எழுதிப் பொருட்டெளிவை ஊட்டுகின்றார் நல்லார். இங்கு வருவித்துக் கொள்கின்ற சொற்கள் பெரும்பாலும் ஒரு சொல் வடிவின. இது நல்லாரின் சொல்லாட்சித்திறனை நன்கு தெளிவு படுத்தும்.

### 10. சொற்பொருள்

சொல்லுக்குப் பொருள் கூறுவது உரை வகையுள் இன்றியமை யாத ஒரு கூறு. அடியார்க்கு நல்லார் உரைக்கு முன் எழுதப் பட்ட அரும்பதவுரை பெரும்பாலும் பொருள் விளங்காத சில அரிய சொற்களுக்குப் பொருள் கூறும் நிலையிலேயே அமைகின்றது. எண்ணற்ற பல சொற்களுக்கு நல்லார் பொருள் எழுதிச் செல் கின்றார். சில சொற்களுக்கும் தொடர்களுக்கும் ஒன்றுக்கு மேற் பட்ட பொருள்கூறிச் செல்கின்றார். இவை தனித்தனியே பட்டிய லிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

சொற்பொருள்: (ஒரு சொல்லுக்கு ஒரு பொருள்)

| | | | |
|---|---|---|---|
| 1. | அகமுழவு | -முன்சொன்ன உத்தமமான மத்தளம் சல்லிகை இடக்கை கரடிகை பேரிகை பாடகம் குடமுழா வென விவை | 3:27 |
| 2. | அகச்சுவை | -இராசதம், தாமதம், சாத்து விக மென்பன | 3:12 |
| 3. | அகடு | -நடு | 14:215 |
| 4. | அகநகை | -இகழ்ச்சி நகை | 16:164 |
| 5. | அகநிலை | -ஊர் | 5:161 |

| | | | |
|---|---|---|---|
| 6. | அகநிலைப் பசாசம் | -சுட்டுவிரல் நுனியில் பெரு விரல் அகப்படுவது | 3:18 |
| 7. | அகப்புற முழவு | -முன் சொன்ன மத்திமமான தண்ணுமை தக்கை தகுணிச்ச முதலாயின | 3:27 |
| 8. | அகலுள் | -தெருவுமாம் | 1:47 |
| 9. | அகநகர் | -பட்டினப்பாக்கம் எனினும் அமையும் | 9:1 |
| 10. | அகன்பதி | -மதுரை | 11:86 |
| 11. | அகன்பொழில் | -அம்மரம் பயில் அடுக்கம் | 11:6 |
| 12. | அகில் | -அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் என்று சொல்லப்பட்ட பலவகைத் தாகிய தொகுதியும் | 14:108 |
| 13. | அங்கம் பயந்தோன் | -அங்காகமத்தை யுண்டாக் கினவன் | 10:187 |
| 14. | அங்கை | -அகங்கை | 16:38 |
| 15. | அசை | -தாக்கி எழுதல் | 3:16 |
| 16. | அசைவு | -மடிதல் | 5:95 |
| 17. | அஞ்சலி | -இரண்டு கையும் பதாகை யாய் அகமொன்றுவது | 3:18 |
| 18. | அடக்கல் | -மற்றைக் கருவிகளின் மிகுதியை அடக்குதல் | 3:53 |
| 19. | அடவி | -காடு | 6:29 |
| | | -மலை சேர்ந்த காடு | 14:54 |
| 20. | அடித்தலத்தில் வீழ்தல் | -வணக்கம் | 13:87 |
| 21. | அடியில் | -அடியால் | 11:17 |
| 22. | அடியோர் பாங்கு | -அடியார் பகுதித்திரள்; என் பார். செவிலித்தாய் முதலிய ஐவர் | 16:85 |
| 23. | அடை கரை | -கடற்கரை என்பாருமுளர் | 10:90 |
| 24. | அண்ணற்கு | -அண்ணல் பொருட்டு | 6:12 |
| 25. | அணங்கு | -வருத்தமுமாம் | 12:61 |
| | | -தெய்வ மகள் | 14:160 |
| 26. | அணங்கெழுந்தாடி | -தேவர் எழுந்தாடி | 5:70 |

27. அணி -அழகு 10:9
28. அணியும் மணியும் - ,, 8:111-112
29. அத்திரி -கோவேறு கழுதை 6:119
30. அதனைக் கழிக்கை -போனகணவனைக் கூடுதல் 15:62
31. அதள்புனை அரணம் -தோற்கைத் தாளம் 14:170
32. அதிர்வு -நரம்பைச் சிதறவுந்த லெனக் கொள்க 8:29
33. அதிராச் சிறப்பு -பகைவரால் நடுக்கமில்லாத சிறப்பு பதி:39
34. அது -ஒரு முலை யிழந்தது பதி:11
35. அந்தரத்துள்ளோர் -விச்சாதரருமாம் 6:72
36. அந்தி -மாலைப் பின்பொழுது 4:23
37. அந்நிலையே -அப்பொழுதே 17:17
38. அபய வத்தம் -இருகையும் சுகதுண்டமாக நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற்பது 3:18
39. அம் -அழகு 1:3
40. அம்பணம் -தரகர் அளக்கும் மரக்கால் 14:209
41. அமரர் தருக்கோட்டம் -தேவர் தரு நிற்குங் கோயில் 9:9
42. அமரனின் -அமரனுலே 6:14
43. அமைதி -பெருமை 6:17
44. அயிர் -கண்டு சருக்கரை 4:35
45. அயிராணி -இந்திராணி 6:63
46. அரங்கம் -மேற்கூறிய ஆற்றுவீயரங்கம் திருவரங்கமுமாம் 11:6
47. அரசர்க்கு -உலகில் அரசர் எல்லார்க்கும் என்க 11:17
48. அரசன் பின்னோர் -வணிகர் 16:44
49. அரசு -அரசாட்சி பதி:1
-தன்கொழுநனுகிய பகலோன் 4:8
50. அரந்தை -துன்பம் உரை கட்:3
51. அராளம் -பெருவிரல் குஞ்சித்துச் சுட்டு விரல் முடக்கி ஒழிந்த விரன் மூன்றும் நிமிர்ந்து வளைவது 3:18
52. அருந்தவம் -ஈண்டுத் தானம் 2:3

| | | | |
|---|---|---|---|
| 53. | அருந்திறல் | -இராமன் | 13:65 |
| 54. | அருந்தொழில் | -கொலைத்தொழில் | 5:220 |
| 55. | அருகர் | -இருடிகள் | 10:202 |
| 56. | அருகன் | -பூச்சியன் | 10:187 |
| 57. | அரும் பொருள் | -அறனும் இன்பமும் தரும் பொருள் | பதி:16 |
| 58. | அருள்முனி | -சிவபர மூர்த்தி | 10:187 |
| 59. | அரையிருள் | -இரண்டாம் யாமம் | 4:81 |
| 60. | அல்லல் | -வருத்தம் | 19:15 |
| 61. | அல்லற்காலை | -இடுக்கட் பொழுதில் | 4:8 |
| 62. | அலத்தகச் சேறு | -செம்பஞ்சுக் களி | 8:54 |
| 63. | அலம் வரும் | -சுழலும் | 4:8 |
| 64. | அலர்தல் | -பரத்தல் | 4:63 |
| 65. | அலா பத்திரம் | -சிறுவிரல் முதலாகிய வைந்தும் வளைந்து மறிவது | 3:18 |
| 66. | அவந்தி | -உஞ்சை | 5:103 |
| 67. | அவர் உறுகுறை தாங்கும் பெண்டிர் | அவர் உற்ற பிணிக்கும் -மனத்துயர்க்கும் மெய்யாகத் தாங்கும் பெண்டிர் | 19:51-53 |
| 68. | அவர்தாம் | -அம்மகளிர்தாம் | 17:17 |
| 69. | அவலம் | -அழுக்காறு அவாமுதலியன | 10:16 |
| 70. | அவள் (பாரதி) அரங்கம் | -சுடுகாடு; அவளாடுதலாற் பெற்ற பெயர் | 6:39 |
| 71. | அவித்தல் | -அடக்குதலுமாம் | 10:194 |
| 72. | அவிநயக் கூத்து | -கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்யும் பல வகைக் கூத்து | 3:12 |
| 73. | அவிநயம் | -பாவகம் | 3:13 |
| 74. | அவுணற் கடந்த | -அவுண னெண்ணத்தைக் கடந்த | 6:48 |
| 75. | அழிந்து | -அழிய | 5:235 |
| 76. | அழுக்காறு | -மனத்தழுக்கு | 15:120 |
| 77. | அழுவம் | -பரப்பு | 5:83 |
| 78. | அளி | -கொடை | 1:8 |

| | | |
|---|---|---|
| 79. | அளிக்குங் கோவலர் | -கன்றருந்தி மிக்கதனை யாவர்க்கும் அளிக்கும் கோவலர் என்க 15:120-21 |
| 80. | அளித்து | -இனிமையாற் கொடுத்து 8:71 |
| 81. | அளியள் | -யாவராலும் அளிக்கத்தக்காள் 15:122 |
| 82. | அளவு | -தாக்கின வோசை நேரே மூன்று மாத்திரை பெறுமளவும் வருதல் 3:16 |
| 83. | அளை | -மோர் 16:3 |
| 84. | அளைஇ | -கலந்து 4:42 |
| 85. | அற்பு | -அன்பு 16:77 |
| 86. | அறங்கூறவையம் | -தருமாசனத்தார் வழக்குரைக்கு மிடம் 5:135 |
| 87. | அறத்துறை | -அறத்தின் துறை யெனவும் அறத்தின் கண் உறையெனவுமாம் 15:107 |
| 88. | அறம் | -இதம் 14:28 |
| 89. | அறம் | -அறக்கடவுள் பதி:55 |
| 90. | அறல் | -அறையாயிற்று 10:1 |
| 91. | அறவோர் | -சாவக நோன்பிகள் 16:71 |
| 92. | அறவோர் பள்ளி | -அருகர்பள்ளி; புத்தர்பள்ளி 5:179 |
| 93. | அறவோன் | -அறஞ்செய்தலையே தொழிலாக உடையோன் 16:176 |
| 94. | அறன் | -அறனோம்படை யென்றது தருமாசன மென்பாரும் உளர் 10:3.கட் |
| 95. | அறனோம்படை | -தருமம் போதிக்குமிடம் 5:179 |
| 96. | அறிதுயில் | -யோக நித்திரை 10:9 |
| 97. | அறிந்தீமின் | -அறிமின் 8:63 |
| 98. | அறியாக் கரி | -பொய்க்கரி 15:78 |
| 99. | அறிவன் | -எல்லாப் பொருளையு மறியும் அறிவை யுடையோன் 10:176 |
| | | -உறையூரில் அருகன் 11:4 |
| 100. | அறிவு வரம்பிகந்தோன் | -யாவருமறியப்படும் அறிவெல்லையைக் கடந்தோன் 10;176 |

| | | | |
|---|---|---|---|
| 101. | அறுவை | –தோளிலிடு முறி | 10:98 |
| 102. | அறைக்கண் | -வரைந்த கண்ணுமாம் | 11:80 |
| 103. | அறைந்து சாற்றுதல் | -பாடமோதிப் பொருளுரைத் தல் | 10:13 |
| 104. | அறைபோதல் | -கீழறுத்தல் | 4:10 |
| 105. | ஆக்கல் | -மற்றைக் கருவிகளின் குறை யை நிரப்புதல் | 3:53 |
| 106. | ஆக்கஜேக் காத்து | -வெருவும் பிணியுமுற்றுழிக் காத்து | 15:120 |
| 107. | ஆங்கு | -அவ்விடத்து | 3:58;12:11;18:1 |
| | | -அங்ஙனம் | 4:44 |
| | | -பூத்த அப்பொழுதே | 5:215 |
| | | -அந்த இடங்களிலே | 14:203 |
| | | -அப்படியே | 17:13 |
| 108. | ஆசு | -சிறுமை | 3:47 |
| 109. | ஆட்டு | -விளையாட்டு; ஆவது புணர்ச்சி | 5:195 |
| 110. | ஆடல் | -எல்லாக் கூத்துக்களும் | 3:45 |
| 111. | ஆடலும் | -முற்கூறிய அகக் கூத்தினும் புறக் கூத்தினுமுள்ள ஆடலு மென்றவாறு | 3:16 |
| 112. | ஆடலொடு | -அகக் கூத்துப் புறக் கூத்துப் பதினேராடலென்று சொல் லப்படா நின்ற ஆடலுடனே | 3:27 |
| 113. | ஆடற் றொகுதியும் | -ஆடலாசிரியன் ஈடும் மேல் வரவுகளின் தொகுதியும் | 3:33 |
| 114. | ஆடற் கூத்தியர் | -அகக் கூத்தாடும் பதியிலார் | 5:50 |
| 115. | ஆடு | -வெற்றி | 13:104 |
| | | -வென்றி யென்றது புலவி யாலே கூடாத மகளிரை இங் ஙனம் புகழ்ந்து புலவியைத் தீர்த்தென்றபடி | 5:225 |
| 116. | ஆடுகளம் | -அரங்கு | 6:157 |
| 117. | ஆடுதல் | -அனுபவித்தல் | பதி:16 |

| | | |
|---|---|---|
| 118. ஆண்டலை யடுப்பும் | -ஆண்டலைப் புள் வடிவாகப் பண்ணி பறக்க விட உச்சி யைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறி நிரை களும் | 15:211 |
| 119. ஆதியோ | -ஆவையோ கருத்தனே என்றுமாம் | 16:112 |
| 120. ஆப்பயன் | -பால் முதலியன | 15:120 |
| 121. ஆம்பி | -பன்றிப் பத்தர் | 10:110 |
| 122. ஆமந்திரிகை | -இடக்கை | 3:143 |
| 123. ஆயம் | -தாயம் | 14:50 |
| | சேவிக்கும் தோழிமார் | 16:85 |
| | பசுத்திரள் | 17:3 |
| 124. ஆயிழை | -தமயந்தி | 14:54 |
| 125. ஆர் | -கூர்மை | 5:124 |
| 126. ஆர்த்தும் | -நிறைவிக்கும்; நுகர்விக்கு மென்றுமாம் | 1:33 |
| 127. ஆர்ப்பு | -மாத்திரை யிறந்த சுருதி; ஓங்க விசைத்தல் | 8:29 |
| 128. ஆரஞர் | -பெரிய வருத்தம்; ஆவது கணவனை இழத்தல் | பதி:42 |
| 129. ஆரபடி | -பொருள் பொருளாக வீரரா கிய மானிடர் தலைவராக வருவது | 3:13 |
| 130. ஆரம் | -முத்து வடம் | 5:2 |
| | -மலையாரம் தீமுரன் பச்சை கிழான்பச்சை பச்சை வெட் டை அரிசந்தனம் வேரச்சுக் கொடியென்று சொல்லப் பட்ட பலவகைத் தாகிய தொகுதி | 14:108 |
| 131. ஆரிடை | -அரிய வழி; ஆவது ஆறலைப் போரும் ஊறு செய் விலங்கு முடைத்தாய் ஏற்றிழிவும் கவலைச் சின்னெறியு மாயி ருப்பது | 11:68 |

| | | | |
|---|---|---|---|
| 132. | ஆற்றவும் | -மிகவும் | 19:27 |
| 133. | ஆற்றுவழிப் பட்டோர் | -வழியிற் கூடி வந்தோர் | 10:224 |
| 134. | ஆன் | -ஒடு | 17:17 |
| 135. | இகந்தனஞ | -இகந்தேனுக | 16:76 |
| 136. | இகலமராட்டி | -மாறுபட்ட அமரைச்சயித்து | 5:225 |
| 137. | இசை | -நரப்படை வாலுரைக்கப்பட்ட பதினோராயிரத்துத் தொள் ளாயிரத்துத் தொண்ணூற் றென்ருகிய ஆதி இசை களும் | 3:45 |
| 138. | இந்திரர் | -தேவர் | 16:173 |
| 139. | இடந்தலைப் படுதல் | -கூட்டுதல் | 16:16 |
| 140. | இடவயின் | -இடத்தில் | 15:18 |
| 141. | இடிப்பு | -அதிர்வு | 13:32 |
| 142. | இடுதேளிடுதல் | -தேளிடப்படுவார் காணுமே தேளல்லாத ஒன்றை மறை யக் கொடுவந்து மேலே இட்டு அவரைக் கலங்கப் பண்ணுதல்; பாய்ச்சுத் தேளென்பாரு முளர் | 9:48 |
| 143. | இடுபிணம் | -குழியிலிடு பிணம் | 9:21 |
| 144. | இடைநிலம் | -தொடை நடு | 8:48 |
| | | -நாலா நிலம் | 2:13 |
| 145. | இடைப்பாட்டுக் கூத்தி | -இடைப்பாட்டைப் பாடுங் கூத்தி | 14:156 |
| 146. | இடைப்பாட்டு | -ஔகம் | 14:156 |
| 147. | இடைப்பால் | -ஒப்பு | 3:95-96 |
| 148. | இடைவண்ணம் | -இருபத்தொன்ருய் வரும் | 3.13 |
| 149. | இணை | -இரண்டு நரம்பு | 8:33 |
| 150. | இணையணை | -பலவான அணை | 4:67 |
| 151. | இந்நெறி | -வடகரை வழி | 10:64 |
| 152. | இம்மைக்கின்பம் | -புகழ் | 11:112 |
| 153. | இமில் | -முரிப்பு | 17:2 |
| 154. | இயக்கம் | -வழி | 10:90 |
| 155. | இயக்கி | -ஆரியாங்கனை | 15;116 |

| | | | |
|---|---|---|---|
| 156. | இயல்குணன் | -இயல்பையே குணமாக உடையவன் | 10:184 |
| 157. | இயவு | -செலவு | 11:108 |
| 158. | இரிதல் | -நீங்குதல் | 4:52 |
| 159. | இரியல் | -விரைவு | 6:112 |
| 160. | இரீஇ | -இருத்தி | 1:43 |
| 161. | இருமுதுகுரவர் | -தந்தை தாயர் | 16:67 |
| 162. | இருமை | -பெருமை | 2:53 |
| | | -கருமை | 6:79 |
| 163. | இருபெருவீதி | -சிறுதனம், பெருந்தனம் | 14:167 |
| 164. | இருள் | -கருகுதல் | 14:184 |
| 165. | இல்லறம் | -கற்புடை மனைவியொடு இல்லின்கண் இருந்து செய்யும் அறம் | 14:11 |
| 166. | இல்வளர் | -மனை வளர் | 4:27 |
| 167. | இல்வழி | -இல்லாத காலத்தே | 4:11 |
| 168. | இலங்கீர்வளை | -ஈர்ந்திலங்கு வளை | 19:1 |
| 169. | இலதை | -நடுவிரலும் சுட்டு விரலும் கூடி நிமிரப் பெருவிரல் அவற்றின் கீழ்வரை சேர ஒழிந்த இரண்டு விரலும் வழி முறை பின்னே நிமிர்ந்து நிற்பது | 3:18 |
| 170. | இலைப்பூங் கோதை | -அரசனுடைய மாலை | 3:160 |
| 171. | இலவந்திகை | -நீராவியைச் சூழ்ந்த வயந்தகச் சோலை. அஃது அரசனும் உரிமையு மாடுங் காவற் சோலை | 10:31 |
| 172. | இவ்வூர் | -இது சொன்ன இவ்வூர் | 18:53 |
| 173. | இவர்தல் | -தேரைக் கொண்டெழுதல் | 5:160 |
| 174. | இழிபிறப்பு | -விலங்கின் பிறப்பு | 10:241 |
| 175. | இழைத்து | -வரித்து; எனவே எழுதி என்பதாயிற்று | 14:90 |
| 176. | இளங்காற்றூதன் | -தென்றலாகிய தூதன்; இளைய காற்றூதன் எனவுமாயிற்று | 8;9 |

| | | |
|---|---|---|
| 177. இள நிலா | -மாலைப் பொழுதின் நிலா; அன்றிச் சுதை நிலா வென முன்றிற் கடையாக்கினும் அமையும் | 14:103 |
| 178. இளை | -கட்டுவேலியுமாம் | 12:24 |
| 179. இறந்தோர் | -கழிந்தோருமாம் | 14:44 |
| 180. இறுத்த | -வந்து விட்ட | 4:12 |
| 181. இறுதியிலின்பம் | -வீடு | 11:122 |
| 182. இறும்பூது | -அதிசயம் | பதி:9 |
| | புதுமை | 8:63 |
| 183. இறுமுறை | -முடியுமுறை; வருத்துந் தன்மை எனினு மமையும் | 2:50 |
| 184. இறை | -திறை | 5:100 |
| 185. இறைவன் | -எப்பொருளினும் தங்குகின்ற வன் | 10:184 |
| 186. இனநிரை | -நிரை யினம் | 14:64 |
| 187. ஈகை | -பொன் | 1:24 |
| 188. ஈங்கு | -இவ்விடத்து | 10:221 |
| | -இக்கடலிடத் தெனவும், இந் நகரிடத் தெனவும், இப்படி விபத்தினின்றும் எடுப்ப தற்கு எனவுமாம் | 15:32 |
| 189. ஈங்குறும் | -இவ்விடத்தே வரும். இனி இக்கனா கடையாமத்துக் கண்டதாதலால் இவ் விடத்தே கடிதிற் பலிக்கு மென்றான் எனினும் அமை யும் | 15:106 |
| 190. ஈசன் | -ஐசுவரியவான் | 10:186 |
| 191. ஈண்டுதல் | -மிகுதல் | 6-145 |
| | -விரைதல் | 13:101 |
| 192. ஈந்தார் | -அறிவித்தார் | 1:44 |
| 193. ஈரயிர் | -மிகவும் நுண்ணிய மணல் | 6:146 |
| 194. உகிர்நிலைப் பசாசம் | -சுட்டுவிரலும் பெருவிரலும் உகிர் நிலை கவ்வி நிற்பது | 3:18 |

| | | |
|---|---|---|
| 195. உச்சிக்கிழான் | -பகற்பொழுதிற் சூரியவன்; இனி பகற்பொழுதிற்கு வருவாயா யுள்ளவனென்றுமாம்; சூரியன்கோயில் என்றபடி | 9:11 |
| 196. உரைப்பெருங் கொழுநர் | -தங்களையுடைய பெரிய கொழுநர் | 4:68 |
| 197. உண்டல் | -உறுதல் | 9:22 |
| 198. உண்ணுமிவ்வூர் | -இவ்வூரை யுண்ணும் | 18:53 |
| 199. உண்மையின் | -உண்டாகலின் | 1:13 |
| 200. உத்தர குரு | -போகபூமி | 2:10 |
| 201. உப்பால் | -மேலே | 12:5 |
| 202. உபயாங்கம் | -இரண்டிற்கும் வாசிப்பது | 3:14 |
| 203. உம்பர் | -மேலே | 11:120 |
| 204. உம்மை | -முற்பிறப்பு | 15:92 |
| 205. உமிழ்தல் | -கொப்புளித்தல் | 16:214 |
| 206. உய்யானம் | -அரசர் விளையாடும் காவற் சோலை | 14:127 |
| 207. உயர்ந்தோர் | -முனிவனும் இறைவனும் அரசனும்; இனி உயர்ந்தோர் அகத்தியனும் இருடிகளும் பழங்குடியிலுள்ளாரும் என்றுமாம்; என்றது இமயத்தோடும் பொதியிலோடும் உள்ள இருடிகளையும் புகாரிலுள்ள வணிகரையும் உவமித்தவாரும் | 1:13 |
| 208. உயிர் மருந்து | -மிருத சஞ்சீவினி | 2:75 |
| 209. உரிது | -உரித்து | 2:40 |
| 210. உருகுதல் | -நெகிழ்த்தல் | 17:3 |
| 211. உருகும் | -குழைந்து கிடக்கும் | 17:3 |
| 212. உருத்து | -உருக்கொண்டு, முதிர்ந்தென்றுமாம் | பதி:57 |
| 213. உருத்திரச்சுவை யவிநயம் | -அஃதாவது விறலென்பது; சத்துவ மேல் பாரு முளர் | 3:13 |
| 214. உருமு | -இடி | 5;87 |

| | | |
|---|---|---|
| 215. உரை | -புகழ் | 5:162 |
| 216. உரைத்தல் | -பூசுதல் | 13:83 |
| 217. உரைப்பாட்டு மடை | -உரைப்பாட்டை நடுவே மடுத்தல் | 12:74 |
| 218. உலக நோன்பிகள் | -துறவாது விரதங் காக்கும் சாவகர் | 15:158 |
| 219. உலக விடைக்கழி | -ஊர்வாயில்; இடையே கழி தலின் அவ்வாயில் இடைக் கழி யாயிற்று | 10:27 |
| 220. உலகுவிளங் கவிரொளி | -உலகு விளங்குதற்குக் கார ணமாகத் தான் விளங்கும் ஒளி ஆவது ஞாயிறு | 5:16 |
| 221. உலறுதல் | -தலைமுளிதல் | 11:75 |
| 222. உவணம் | -கருடன் | 14:8 |
| 223. உழத்தல் | -அனுபவித்தல் | 14:26 |
| 224. உழி | -அளவு | 1:42;2:13 |
| 225. உழிஞ்சில் | -உன்னமுமாம் | 11:76 |
| 226. உள்ளு | -உள்ளான் | 10:117 |
| 227. உள்ளேன் | -உள்ளவன் நான் | 11:53 |
| 228. உள்வரி | -வேற்றுருக் கொண்டு நடித் தல் | 8:89 |
| 229. உற்சங்கம் | -ஒருகை பிறைக்கை யாகக் கொண்டு ஒருகை அராள மாக்கி இரண்டு கையும் மணிக்கட்டில் ஏற்றி வைப் பது | 3:18 |
| 230. உற | -மிக | 14:77 |
| 231. உறீஇ | -உறுவித்து, புணர்வித்து என்றபடி | 5:226 |
| 232. உறுக்கும் | -உறுத்தும் | 10:75 |
| 233. உறுகுறை தாங்குதல் | -பொதுமகளிரைப் பிரிதலும் அவரோடுகலந்த செவ்வியும் புணர்ச்சிக் குறியும் கண்டுழி யும் அவர் தெருட்டத் தெருண்டு குறையுறப் பொறுத்தலுமாம் | 19:52 |

| | | |
|---|---|---|
| 234. | உறுகணாளர் | -மிடியாளர் என்பாருமுளர் 10:53 |
| 235. | உறைதல் | -தோய்தல் 17:2 |
| 236. | உறைப்ப | -உகுப்ப 4:71 |
| 237. | உன்னம் | -சிறுவிரலும் பெருவிரலும் தம் முட் கூட ஒழிந்த மூன்றுவிரலும் விட்டு நிமிர்வது 3:18 |
| 238. | ஊக்கம் | -மன வெழுச்சியும் முயற்சியுமாம் 5:95 |
| | | -வலி 6:8 |
| 239. | ஊட்டி | -தானுண்ட இருளை உலகை உண்ணப் பண்ணி 19:31 |
| 240. | ஊடலை அளித்தல் | -அதனான் வருந்துன்பத்தை அளித்தல் 6:109 |
| 241. | ஊதுலைக்குருகு | -துருத்தி; வெளிப்படை 4:59 |
| 242. | ஊர்க்கோட்டம் | -இறைவன் ஊராகிய கைலாயம் நிற்கும் கோயில் 9:11 |
| 243. | ஊரல் | -குளுவை 10:117 |
| 244. | ஊடற் காலத்து | -முன் ஊடுங் காலங்களில் 4:68 |
| 245. | ஊழ் | -முறைமை 10:92 |
| 246. | எங்குல தெய்வம் | -எங்குலத்தை யுண்டாக்கிய தெய்வம் 15:37 |
| 247. | எங்கோன் | -எம்முடைய சுவாமி 10:184 |
| | | -எம்மரபில் முற்பட்டவன் 15:29 |
| 248. | எடுத்துக் காட்டு | -இங்ஙனம் சுட்டிக் காட்டுதல் 17:13 |
| 249. | எடுத்துக் கோள்வரி | -தான் கையற வெய்தி வீழ்ந்தாளாக வீழ்ந்து பிறர் எடுத்துக்கொள்ளும்படி நடித்தல் 8:108 |
| 250. | எடுத்து நுவலும் | -எடுத்தலாற் சொல்லுமென்றுமாம் 6:132 |
| 251. | எண் | -இலக்கம் 5:112 |
| 252. | எண்குணன் | -எட்டுக் குணங்களை யுடையோன் 10:188 |
| 253. | எண்ணுதல் | -எண்ணிச் செயல் 16:180 |
| 254. | எண்ணு வரம்பு | -எண்ணின் பெருமைக் வரம்பு 6:145 |

| | | | |
|---|---|---|---|
| 255. | எதிர் நின்று விலக்கி | -போகப் புக்கவர்களைப் போகாமல் விலக்கி | 5:225 |
| 256. | எயினர் | -மறவர் | 11:79 |
| 257. | எருத்தம் | -புறக்கழுத்து | 1:43 |
| 258. | எல் | -ஒளி | 4:19 |
| 259. | எல்லா | -ஏடீ; தோழி யென்றுமாம் | 17:28 |
| 260. | எல்லை | -பகற்பொழுது | பதி:51 |
| 261. | எழிற்கை | -அழகுபெறக் காட்டுங்கை | 3:18 |
| 262. | எழினிக் கோலம் | -உருக்கள் | 6:158 |
| 263. | எழுவும் சீப்பும் | -கதவுக்கு வலியாக உள்வாயிற்படியிலே நிலத்திலே வீழவிடு மரங்களும்; திறக்குங் காலத்தே மேலே எழுப்புகையால் எழுவும் சீப்பு மென்றார் | 15:25 |
| 264. | எறிநீர் | -வாய்த்தலை யினின்றும் குதித்து வரும் வாய்க்கால் நீர் | 10:90 |
| 265. | என்நிலை | -மாசாத்து வாணிகன் மகனாகியும் இங்ஙனமாகிய தன்மை | 14:22 |
| 266. | என்தீது | -என் தீவினை | 13:95 |
| 267. | என்றாற்கு | -தான் பாடக் கருதி வினவின சாத்தற்கு | பதி:62 |
| 268. | என்னுற்றனர் கொல் | -இறந்து பட்டார்களோ | 16:60 |
| 269. | என | -என்று சொல்லி | 16:122 |
| 270. | எனா | -என்றிட்டு | 17:17 |
| 271. | எனும் | -சிறிது மென்றபடி | 16:69 |
| 272. | ஏகை | -இரேகை-கீற்று | 14:184 |
| 273. | ஏசல் | -பழித்தல் | 9:16 |
| 274. | ஏடு | -இக்கவியை எழுதிய ஏடு | 15:58 |
| 275. | ஏர்பு | -எழுதலான் | 14:104 |
| 276. | ஏவல்கேட்ப | -சுட்ட அளவிலே | 6:41 |
| 277. | ஏவல் பிழைத்தல் | -மாதவி நட்பை அவரொழிக்க ஒழியாமை | 16:67 |
| 278. | ஏவற் சிலதியர் | -மடைப் பள்ளியாரடியார் | 5:51 |

279. ஏழிசை -சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம் பஞ்சமம், தைவதம், நிடாத மென்பன; இவை பிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக்கும் 3:26

280. ஏழுவிரல் -இடக்கையிற் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றை மூன்று விரலும் வலக்கையிற் பெருவிரல் ஒழிந்த நான்கு விரலும் ஆக ஏழு விரலு மென்க 3:26

281. ஏறு -இடியேறு 10:104

282. ஏனப்படம் -பன்றி முகக் கடகு 14:172

283. ஐது மண்டிலம் -அழகிய மண்டில நிலையால் என்க 3:152

284. ஐயவித் துலாம் -பற்றுக்கைத் தூக்கிப் போகட்ட விட்டமும் அன்றிக் கதவை அணுகாதபடி கற் கவி தொடங்கி நாற்றும் துலாமுமாம்; சாணம்புக் கூடென்பாரும் சிற்றம்புகள் வைத்தெய்யும் இயந்திர மென்பாருமுளர் 15:213

285. ஐயென்றாள் -வியந்தாள் 17:16

286. ஒட்டுப் புதவம் -இரட்டைக் கதவம் 11:120

287. ஒடுக்கம் -முடிபு 1:13

288. ஒடுங்குதல் -பிறர் அறியாமல் அடங்குதல் 14:147

289. ஒதுக்கம் -நடை 10:92

290. ஒய்தல் -போக்குதல் 14:33

291. ஒருத்தி -ஓர் இயக்கி 11:111

292. ஒருதனித்திகிரி -ஒப்பற்ற தேராழி; சக்கரமுமாயிற்று 4:2

293. ஒருதனியுழத்தல் -உசாவில்லாத துன்பம் 15:92

294. ஒலி -தழைத்தல் பதி:50

295. ஒழித்து -ஒழிப்ப 14:203

| | | | |
|---|---|---|---|
| 296. | ஒள்ளெரி | -நின் ஏவல் கேட்கும் எரி | 18:53 |
| 297. | ஒற்றல் | -நினைதல் | 3:63 |
| 298. | ஒற்றி | -பொறித்து | 5:98 |
| 299. | ஒன்றன் பகுதி | -ஒற்றைத் தாளத்தின் கூறு | 17:24 |
| 300. | ஓ | -தூம்பிற் கதவு | 10:109 |
| 301. | ஓசுநர் | -எண்ணெய் வணிகருமென்ப | 5:27 |
| 302. | ஓம்பி | -அலைத்தலைப் புலர்த்தி, புலத் தலை நீரூட்டி | 15:120 |
| 303. | ஓவிய விதானத்து | -சித்திர விதானத்தையு முடைத்தா யென்க. | 3:111 |
| 304. | கச்சை | -கீழ்வயிற்றிற் கச்சை | 5:142 |
| 305. | கஞ்சத் தொழிலவும் | -கஞ்சத்தாற் செய்தன | 14:174 |
| 306. | கட்டுரை | -பொருள் பொதிந்த சொல்; உறுதியையுடைய சொல்லு மாம் | பதி:54 |
| | | -நலம் பாராட்டல் என்னும் பொருள் பொதிந்த உரை | 2:37 |
| | | -புலவிக்குறை யெல்லாம் பொதிந்த உரை | 14:138 |
| 307. | கட்புலம் | -கண்ணினது புலம்; கண் ணென்கின்ற புலமுமாம் | பதி:8 |
| 308. | கடகா வருத்தம் | -இரண்டு கையும் கடகமாய் மணிக்கட்டுக்கு ஏற இயைத்து நிற்பது | 3:18 |
| 309. | கடல் வளம் | -முத்தும் பவளமும் சங்கும் முதலியன | 6:128 |
| 310. | கடி | -மிகுதி | 14:66 |
| | | -வரைவு | 14:147 |
| 311. | கடிஞை | -ஐயக் கடிஞை | 10:98 |
| 312. | கடி தீங்கு | -மிக்க தீங்கு; அச்சத்தை யுடைய தீங்கு எனவுமாம் | 15:106 |
| 313. | கடுக்கும் | -ஐயுறும் | 9:45 |
| 314. | கடும்பரி கடவுநர் | -பரிகளைக் கடாவுவராகிய அச் சுவ வாரியர் | 5:54 |

| | | | |
|---|---|---|---|
| 315. | கடுமை | -சினம் | 5:55 |
| 316. | கடுவரல் | -முடுகி வரும் வரவு | 10:108 |
| 317. | கடைஇ | -செலுத்தி என்றுமாம் | 10:4 |
| 318. | கடைநாள் | -மரணம் | 15:175 |
| | | -பருவத்தின் கடை நாள் | 14:125 |
| 319. | கடையம் | -கடைசிக் கூத்து | 6:63 |
| 320. | கண் | -இடம் | 1:3 |
| | | -இறைவன் கண் என்பாரு முளர் | 10:1 |
| 321. | கண்கூடு | -பிரிய தரிசனம்; அஃதாவது காட்சி; அஃது ஒருவர் கூட்ட வன்றித் தானே வந்து நிற்கும் நிலைமை | 8:77 |
| 322. | கண்டு | -கண்டு வைத்தும் என்க | 10:153 |
| 323. | கண்ணீர் | -கள்ளாகிய நீர் எனவுமாம் | 13:188 |
| 324. | கண்ணுள் வினைஞர் | -சித்திர காரிகள் | 5:30 |
| 325. | கணவனோடு | -கணவனை | 9:44 |
| 326. | கத்திகை | -தொடை விசேடம் | 8:47 |
| 327. | கத்திரிகை | -திரிபதாகையின் முடங்கிய அணிவிரல் புறத்ததாகிய நடு விரலைச் சுட்டுவிரலோடு பொருந்த நிமிர்ப்பது | 3:18 |
| 328. | கதிர் | -ஆரும் கிரணமும் | 4:1 |
| 329. | கந்தம் | -அடிவரையறைத்தாய் ஒரு தாளத்தாற் புணர்ப்பது | 3:14 |
| 330. | கபித்தம் | -சுட்டு விரனுனியும் பெருவிர னுனியும் உகிர்நுனை கௌவிப் பிடித்துஒழிந்த மூன்று விரலும் மெல்லெனப் பிடிப் பது | 3:18 |
| 331. | கபோதம் | -பதாகைக் கையிற் பெருவிரல் விட்டு நிமிர்வது | 3:18 |
| 332. | கம்பலை மாக்கள் | -வேறு சில காட்சி கண்டு திரியு மாக்கள் | 19:29 |
| 333. | கம்புள் | -சம்பங் கோழி | 10:114 |
| 334. | கயிற்கடை | -கோக்குவாய்; ஒழுகிய கோவை யென்க | 6:101 |

| | | | |
|---|---|---|---|
| 335. | கரணம் | -படிந்தாடல் | 3:12 |
| 336, | கரிபுற வட்டில் | -புறம் கரிதான வட்டில் | 16:32 |
| 337. | கரியவன் | -சனி | 10:102 |
| 338. | கருங்கை | -வலிய கை | 10:125 |
| | | -இருவர்க்கும் பொது | 10:125 |
| 339. | கருணை | -அருள் | 15;53 |
| 340. | கருந்தலை | -பசுந்தலை | 5:84 |
| 341. | கருந்தொழில் | -கொலைத் தொழில் | 16:154 |
| 342. | கருப்பம் | -இவை கேட்டிற்குக் கருப்பம் | 17:7 |
| | | -அந்நாற்று முதலாய்க் கரு விருந்து பெருகித் தன்னுட் பொருள் பொதிந்து கருப்ப முற்றி நிற்பது போல்வது | 3:13 |
| 343. | கருமக் கழிபலம் | -பாவத்தைக் கழிக்கும் புண் ணியம் | 15:62 |
| 344. | கருமுகை | -பித்திகை | 8:45 |
| 345. | கருமை | -பெருமை | 5:204;14:210 |
| 346. | கருவிக் குயிலுவர் | -தோற்கருவி வாசிப்பார் | 5:184 |
| 347. | கருவிரல் ஊகம் | -கரிய விரலையுடைய குரங்கு போலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறி | 15:208 |
| 348. | கரைதல் | -ஓசைப் படுதலுமாம்; அவ காசித்தலுமாம் | 18:26 |
| 349. | கல் | -அனுகரணம் | 12:12 |
| 350. | கல்லிடு கூடை | -இடங்கணிப் பொறிக்குக் கல் லிட்டு வைக்கும் கூடை | 15:210 |
| 351. | கல்லுமிழ் கவண் | -கல்லை யுமிழும் கவண் | 15:208 |
| 352. | கலம் | -மரக்கலம் | 2:7 |
| 353. | கலி நடம் | -கழாய்க் கூத்து | 3:12 |
| 354. | கலையிலாளன் | -அநங்கன் | 10:28 |
| 355. | கவர்பரி | -பகுத்து விரையும் செலவு | 5:159 |
| 356. | கவலை | -முடுக்கு வழிகள் | 14:214 |
| 357. | கவியது குறிப்பு | -இயற்புலவன் நினைந்த கோட் பாடு | 3:33 |

| | | | |
|---|---|---|---|
| 358. | கவைக்கோல் | -கொடிற்றுக்கோல்; ஆவது படைக்கல் இட்டிகை முதலியவற்றைப் பறிக்குங்கருவி. குத்துக்கோல் என்பாருமுளர் | 16:142 |
| 359. | கவை | -கிடங்கிலேறின் மறியத் தள்ளும் இரும்புக்கவை | 15:212 |
| 360. | கழி | -ஊன் | 5:81 |
| 361. | கழிபேராண்மைக் கடன் | -தன்னைத்தான் இடும் பலிக் கடன் | 11:213 |
| 362. | கழிய | -ஈண்டு வருந்த | 4:60, 65 |
| 363. | கழு | -கழுக்கோல் | 15:212 |
| 364. | களமர் | -உழவர் கீழ்க்குடி மக்கள் | 10:125 |
| 365. | களித்துயில் | -இன்பத் துயில் | 4:46 |
| 366. | களையாத துன்பம் | -கணவனை யிழத்தல் | 19:17 |
| 367. | கற்கடகக் கை | -நண்டுக் கை | 17:17 |
| 368. | கற்கடகம் | -தெரிநிலைக் கை யிரண்டும் அங்குலி பிணைந்து வருவதெனக் கொள்க | 3:18 |
| 369. | கறை | -கடமை | 4:9 |
| | | -கறுப்பு | 5:81 |
| 370. | கன்னகம் | -அகழ் கருவி | 16:142 |
| 371. | கன்னிகாரம் | -கோங்கு | 11:110 |
| 372. | கன்றிய | -அடிபட்ட என்ற படி | 16:152 |
| 373. | கனிக்காய் | -மூதாரிக்காய் | 16:24 |
| 374. | கனிட்டன் | -சிறுவிரல் | 3:53 |
| 375. | கனைத்தல் | -செறிதல் | 13:140 |
| 376. | காங்கூலம் | -மூன்று வகைப்படும்; குவிகாங்கூலம், முகிழ்காங்கூலம் விரிகாங்கூலமென | 3:18 |
| 377. | காட்சி வரி | -தன் வருத்தத்தை யாவருங் காணும்படி நடித்தல் | 8:106 |
| 378. | காட்டல் | -தருதல் | 10:71 |
| 379. | காண்டல் | -பண்ணுதல் | 5:106 |
| | | -நீர்ப்போரில் வெற்றி தோல்வி காண்டல் | 6:114 |

380. காணுய் -நீ முன்பு அறியாய் 10:64
-பாராய் 10:170
381. காமக் கடவுள் -காமதேவன் 6:2
382. காமர் -அழகு 10:28
383. காமுறு தெய்வம் -காமுறும் தெய்வம்; எனவே காமக் குரோதிக ளெல்லா முடைய தெய்வம் என்பதூஉம் ஆயிற்று 11:160
384. காய்பொன்னுலே -உருக்கக் காய்ச்சி எறிதற்கு எஃகு பட்டு இருக்கும் உலே கள் 15:210
385. காயம் -வெள் உள்ளி 11:82
386. கார் -ஈண்டு முகில் 14:96
387. காரணன் -எல்லாவற்றிற்கும் காரணமா யுள்ளவன்; காரணபூதன் 10:182
388. கால் -வட்டை 2:7
389. கால்கோள் விழவின் கடைநிலே சாற்றி -விழாவின் தொடக்கமும் முடிவும் அறிவித்து 5:144
390. கால்பொரு நிவப்பு -குடகின் உச்சி 10:104
391. காலதர் -சாளரம் 5:8
392. காலமன்றியும் -இரவும் பகலும் என்றுமாம் 14:210
393. காலே -காலம் 11:67
394. காலே முழவு -முன் துடியென்றது 3:27
395. காவதம் -காதம் 10:36
396. காழ் -வடம் 2:70
397. காழியர் -பிட்டு வாணிகர் 5:24
398. காழூன்று கடிகை -குத்துக்கோல் 14:173
399. காற்றூதன் -ஓட்டன் 8:9
400. காறு -அளவு 14:22
401. காறும் -அளவும் 4:80
402. கானங் கோழி -கானுங்கோழி; நீலவண்மை யாக்கிக் காட்டுக்கோழி யென்பாரும் உளர் 10:116

| | | | |
|---|---|---|---|
| 403. | கானப் படம் | -கானமாகிய கடகும்; கானத்துள்ளன எல்லாம் எழுதுதலிற் கானமாயிற்று | 14:173 |
| 404. | கானம் | -நந்தவனம் | 14:114 |
| 405. | கிடங்கு | -அகழி | 15:207 |
| 406. | கிடந்தாளுக்கு | -கிடந்தாளை; இயல்புமாம் | 9:15 |
| 407. | கிடுகின் படம் | -தோற் கடகம் | 14:172 |
| 408. | கிடை | -கிடேச்சு | 5:33 |
| 409. | கிணை | -கடாரி; புட்பறை என்பதுங் கொள்க | 10:138 |
| | | -மருதப்பறை; கூத்தர் பறையுமாம் | 13:148 |
| 410. | கிம்புரி | -கொம்பிலணியும் பணி | 5:150 |
| 411. | கிழமை | -உரிமை | 1:39 |
| 412. | கிழார் | -பூட்டைப் பொறி | 10:110 |
| 413. | கிழி | -சீரை | 5:33 |
| 414. | கிளர்தல் | -மிகுதல் | பதி:4 |
| 415. | கிளர் முத்து | -பருமுத்து; ஒளி கிளறும் முத்தெனினும் அமையும் | 5:150 |
| 416. | கிளர் வரி | -நடுநின்றூர் இருவருக்கும் சந்து சொல்லக் கேட்டு நிற்பது | 8:101 |
| 417. | கிளை | -ஐந்து நரம்பு | 8:33 |
| 418. | | -கிளியை யொப்பாளெனவுமாம் | 12:68 |
| 419. | கிற்றல் | -செய்தல் | 16:183 |
| 420. | கீதாங்கம் | -கீதத்துக்கு வாசிப்பது | 3:14 |
| 421. | குடங்கை | -ஐந்து விரலும் கட்டி உட்குவிப்பது | 10:85 |
| 422. | குடம் | -தயிர்த்தாழி | 17:2 |
| 423. | குடசம் | -வெட்பாலை விசேடம் | 14:87 |
| 424. | குடதிசை அயிர் | -யவனதேசத்து அயிர் | 4:35 |
| 425. | குடி முதற்சுற்றம் | -தாய் தந்தை முதலியோர் | 16;84 |

| | | | |
|---|---|---|---|
| 426. | குடைச்சூல் | -குடைப்படுதல் என்பாருமுளர் | 16:118 |
| 427. | குணப்பொருட் கோமான் | -குணங்களைச் சம்பத்தாக உடையவன் | 10:185 |
| 428. | குணவதன் | -குணத்தை யுடையவன் | 10:181 |
| 429. | குந்தம் | -சிறு சிவளம் | 15:216 |
| 430. | குப்பை | -குவியல் | 6:121 |
| 431. | குயிலுவர் | -இடக்கை முதலிய கருவியாளர் | 3:130 |
| 432. | குயிற்றுதல் | -அழுத்துதல் | 5:147 |
| 433. | குரலெடுப்பி | -குரலாலுணர்த்தி | 5:133 |
| 434. | குரவன் | -குருமூர்த்தியா யுள்ளவன் | 10:184 |
| 435. | குரவை | -கை கோத்தாடும் கூத்து | 5:70 |
| | | -வரிக்கூத்தின் ஒரு உறுப்பு; காமமும், வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைந்தாடுவது | 3:12;17:5 |
| 436. | குலத்திற் குன்றுதல் | -பூப்பின்கட் பிரிதல்; அன்றி நடுநின்று நன்பொருள் வெஃகலுமாம் | 2:8 |
| 437. | குலந்தரு வான்பொருள் | -தொன்றுதொட்டு வருகின்ற பொருள் | 9:70 |
| 438. | குழல் | -வங்கியம் | 3:26 |
| | | -ஊதுகுழலும் மயிரும் | 4:15 |
| | | -வங்கியப் பாடல் | 3:26 |
| 439. | குவளை | -நீலோற்பலம் | 4:40 |
| 440. | குவிதல் | -திரளுதல் | 17:2 |
| 441. | குழூஉக்குரல் | -பலவாயொன்றான ஓசை | 10:119 |
| 442. | குற்றிளையோர் | -குற்றேவல் மகளிர் | 16:84 |
| 443. | குரங்கு செறி | -கவான் ஆபரணம் | 6:86 |
| 444. | குறிப்பு | -சுவையதன் கட்டோன்றுவது | 3:33 |
| 445. | குறியாக் கட்டுரை | -முன் கருதப்படாத கட்டுரை | 2:37 |

| | | | |
|---|---|---|---|
| 446. | குறுநெறி | -செறிந்த குழல் | 13:84 |
| 447. | குறும்பெறிந்தோட்டி | -குறும்பை அறுத்தோட்டி | 4:24 |
| 448. | குறைவில் புகழோன் | -நிறைந்த புகழை யுடையோன் | 10:185 |
| 449. | குன்றம் | -கொடுங்கோளூர்க் கயலதாகிய செங்குன்றென்னும் மலை | பதி:3 |
| 450. | கூத்துள் படுதல் | -ஆடத் தொடங்குதல் | 17:16 |
| 451. | கூத்து வருகாலை | -கூத்துக்களின் வரவு நிகழு மிடத்து | 3:19 |
| 452. | கூடம் | -இசை நிறவாதது; தன் பகை யாகிய ஆறு நரம்பினிசையிற் குன்றித் தன்னோசை மழுங்கல் | 8:29 |
| 453. | கூடிய நெறி | -முற்சொல்லப்பட்ட கூத்தும் பாட்டும் தாளமும் தூக்கும் தம்மிற் கூடின நெறியையுடைய அகக் கூத்தும் புறக்கூத்தும் முதலாயின வென்க | 3:17 |
| 454. | கூவியர் | -அப்ப வாணிகர் | 5:24 |
| 455. | கூளி | -பூதமுமென்ப | 5:125 |
| 456. | கெடுத்து | -காணப்பெறாது | 4:8 |
| 457. | கெழீஇய | -பொருந்தின | 1:13 |
| 458. | கேட்டீமின் | -கேண்மின் | 18:48 |
| 459. | கேடுற | -அழிவுற | பதி:16 |
| 460. | கேவணம் | -மணி அழுத்தும் குழி | 16:118 |
| 461. | கொங்கு | -தாது | 1:2 |
| 462. | கொங்கை முன்றில் | -முலை முற்றம் | 4:49 |
| 463. | கொட்டுதல் | -அமுக்குதல் | 3:16 |
| 464. | கொட்டு | -கூத்துவிகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக் கூறுகள் | 3:14 |
| 465. | கொடி | -சிறுகொடி | 14:216 |
| 466. | கொடுங்கடல் | -இவ்வளவெல்லாம் தந்த கடல் | 11:20 |
| 467. | கொடுமை | -வளைவு | 4:51 |

468. கொடுவரி -புலி 6:8

469. கொடுவாய்க்குயம் -கோடிய வாயையுடைய அரிவாள் 16:30

470. கொண்ட கொழுநர் -தம்மை நெஞ்சினும் கொண்ட கொழுநர் 19:52

471. கொண்ட வகையறிந்து -கொண்டவகையறிதலாவது பிண்டியும் பிணையலும் புறக்கூத்துக்குரிய கையென்றும் எழிற்கையும் தொழிற்கையும் அகக்கூத்துக்குமுரிய கையென்றுமறிதல் 3:19

472. கொண்டல் -கீழ்க்காற்று 14:110

473. கொண்டு -காமக்குறிப்பினுல் உட்கொண்டு 1:39

474. கொதியழல் -வெவ்வழல் பதி:44

475. கொல்லல் -வெட்டல் 5:29

476. கொலைப்படு மகன் -கள்வன் 16:163

477. கொழுமுறி -இளந்தளிர் 4:39

478. கொளுத்துங்காலை -ஆட்டுவிக்குமிடத்து 3:17

-இக்கூத்துக்களை ஆசிரியன் குறிப்புக்கும் பாடலுள்ளிட்டவற்றுக்கும் சேரவியற்றுமிடத்து 3:34

479. கொளுச்சொல் -குரவைக் கூத்திற்குக் கருத்து 17:17

480. கொளை -ஒற்றுறுப்பு 17:26

481. கொற்றப் பந்தர் -அவன்றனக்குக் கொற்றத்தான் வந்த பந்தர் அது மேற்கூறுப அன்றி அக்கொற்றவன் முன்னர் நிற்கும் பந்தர் எனினும் அமையும் 5:100

482. கொற்றம் -வெம்மை 15:4

483. கொன்று -கொல்ல எனத் திரிப்பினும் அமையும் 16:153

484. கோட்டம் -அருகன் கோயில் பதி:1

-வஞ்சம் பதி:54

485. கோட்டகம் -கரை; பள்ளமுமாம் 11:71

486. கோட்டுமா -எருமை யேற்றை; இனிப் பன்றி எனவுமாம் 15:98

487. கோடு -கரை 10:35
-மலை 11:20

488. கோடுகடை தொழிலவும்-ஆனைக்கோடு முதலிய வற்றைக் கடையும் தொழிற்குரிய கருவி களும் 14:176

489. கோதை -மாலை; ஒழுங்குமாம்; வெண் டோட்டுத் தாழையுமாம் 2:18

490. கோதை மாதவி -மாலைபோலப் பூக்கும் குருக் கத்தி 14:113

491. கோநகர் -அமராவதி 6:8

492. கோப்பெருந்தேவி -அறக் கற்புடையாள் பதி:23

493. கோலங் கோடல் -அக்காலத்திற் கேற்பன உடுத்து முடித்துப் பூசிப் பூணுதல்; போர்க்கோலமென்று மாயிற்று 8:11

494. கோலம் -ஒப்பனை; தமது கொழுந ரோடு எதிர்க்கும் போர்க் கோலமு மாயிற்று 9:4

495. கோலும் -விட்டேறும் 15:216

496. கோவியன் வீதியும் -இராச பெருந்தெருவும்; செண்டு வெளிப்புறத் தெருவென்பாரு முளர் 5:40

497. கோளி -பூவாது காய்க்கும் மரம் 16:24

498. கை -ஒழுக்கம்; கையான் உண்டு ஒழு கும் இல்வாழ்க்கை யெனவுமாம் 15:67

499. கைக்கோல் -கொடிறு 16:108

500. கைசிகி -காமம் பொருளாகக் காமுக ராகிய மக்கள் தலைவராக வரு வது 3:13

501. கைபெயரூசி -மதிற்றலையைப் பற்றுவாரை கையைப் பொதுக்கும் ஊசிப் பொறிகளும் இனிக் கதவோடு சேராதபடி வைத்த நிரைக்கழு வெனினும் அமையும் 15;213

| | | | |
|---|---|---|---|
| 502. | கையற்று | -செயலற்று | 15:102 |
| 503. | கையறி மடமை | -கை அறிந்ததும் அறியாததும் ஆக என்க; முன்பு ஆக்கிக் கைதேறினாற்போல எனவும் அமையும் | 16:34 |
| 504. | கையறு துன்பம் | -மீளாத்துன்பம் | 10:71 |
| 505. | கையுறை | -காணிக்கை | 8:22 |
| 506. | கைவிடலீயான் | -மெய்ம்மறந்தும் ஓலையை நெகிழ விட்டிலன் என்றுமாம் | 13:85 |
| 507. | கௌரியர் | -பாண்டியர் | 15:2 |
| 508. | சகடு | -உரோகிணி | 1:50 |
| 509. | சங்கம் | -பெருவிரல் நிமிர ஒழிந்த நான்கு விரலும் வளைந்து நிற்பது | 3:18 |
| 510. | சங்கரன் | -சுகத்தைப் பண்ணுகின்றவன் | 10:186 |
| 511. | சந்திர குரு | -வெள்ளி | 14:195 |
| 512. | சத்துவம் | -அக்குறிப்பின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சி | 3:13 |
| 513. | சதக்கனி | -நூற்றுவரைக் கொல்லி | 15:216 |
| 514. | சதுக்கம் | -நாற்சந்தி | 5:134 |
| 515. | சதுமுகன் | -நான்முகன்–அதிசயத்தோடு நான்முகன் | 10:186 |
| 516. | சதுரம் | -சுட்டு விரலும் நடுவிரலும் அணி விரலும் தம்முட் சேர்ந்து இறைஞ்சப் பெருவிரல் அகம்வர வைத்துச் சிறுவிரல் பின்னே நிமிர்ந்து நிற்பது | 3:18 |
| 517. | சயம்பு | -தானே தோன்றினவன் | 10:186 |
| 518. | சல்லிகை | -சல்லென்ற ஓசையுடைத்தாத லாற் பெற்ற பெயர் | 3:27 |
| 519. | சலதி | -பொய்த்தி | 9:69 |
| 520. | சலம் | -பொய் | 9:69 |
| 521. | சாந்தவும் | -மயிர்ச் சாந்துக்கு உறுப்பாய் உள்ளனவும் மெய்ச்சாந்து உறுப்புமாம் | 14:77 |

| | | |
|---|---|---|
| 522. | சாத்துவதி | -அறம், பொருளாக மானிடர் தலைவராக வருவது 3:13 |
| 523. | சாதுவன் | -ஒடுங்கினவன் 10:182 |
| 524. | சாயல் | -மென்மை 2:54 |
| 525. | சாரணர் | -பெரும் பெயரையரிட்ட சிலா தலத்துத் தருமம் சாற்றும் சாரணர் 11:7 |
| 526. | சாரணன் | -ஆகாசவாசி 10:182 |
| 527. | சால் | -அமைதி 5:162 |
| 528. | சாலினி | -தேவராட்டி 12:7 |
| 529. | சாவக நோன்பு | -துறவாது விரதங் காத்தல் 16:18 |
| 530. | சிக்கை | -இசை 17:25 |
| 531. | சிங்கல் | -குன்றல் பதி:47 |
| 532. | சித்தன் | -எண்வகைச் சித்திகளையு முண்டாக்கினவன் 10:183 |
| | | -கிருத கிருத்தியன்; செய்ய வேண்டுவனவற்றைச் செய்து முடித்தவன். கன்மங்களைக் கழுவினவனு மென்ப 10:177 |
| 533. | சித்திரப்புணர்ப்பு | -இசை கொள்ளும் எழுத்துக் களின் மேலே வல்லொற்று வந்துழி மெல்லொற்றுப்போலப் பண்ணீர்மை நிறுத்தல் 3:56 |
| 534. | சித்திரைத் திங்கட் புகுதி நாள் | -சோதி 10:3 |
| 535. | சிமையம் | -உச்சி 6:28 |
| 536. | சில்லை | -இழிவு 16:147 |
| 537. | சிலாதலம் | -சந்திர காந்தக் கல்லால் படுத்தது 10:25 |
| | | -அப்பட்டினத்துச் சிலாதலம் 15:154 |
| 538. | சிலதியர் | -ஏவன் மகளிர் 14:132 |
| 539. | சிலம்பாறு | -அவ்வியாற்றின் பெயர் 11:108 |
| 540. | சிவகதி நாயகன் | -வீட்டுலகத்திற்கு நாயகனாயுள்ளவன் 10:180 |
| 541. | சிறத்தல் | -மிகுதி, மிகுதல் 12:12;16:72 |

| | | | |
|---|---|---|---|
| 542. | சிறந்து | -சிறப்பெய்தப் பட்டு; மிக்கென்றுமாம் | 15:217 |
| 543. | சிறு குரங்கு | -மெலிந்த குரங்கு | 15:167 |
| 544. | சிறுபுறம் | -பிடர் | 6:102 |
| 545. | சிறுமியர் | -சிறு பெண்கள் | 17:27 |
| 546. | சிறுமுதுக் குறைவி | -சிறிய பிராயத்தே பெரிய அறிவை யுடையவள் | 16:68 |
| 547. | சிறுமை | -ஈண்டு அறிவின்மை | 14:20 |
| 548. | சிறை | -பள்ளி என்றுமாம்; ஸ்ரீ கோயிலின் ஒருபக்கமுமாம் | 10:44 |
| 549. | சின்மலர் | -மங்கல மலர்; கற்பு-முல்லை முதலியவை. அருச்சனை மலருமாம் | 2:65 |
| 550. | சின்மொழி | -இழிந்த மொழி; சிலவான மொழி | 10:130 |
| 551. | சினவரன் | -சினத்தைக் கீழ்ப்படுத்தியவன் | 10:180 |
| 552. | சினேந்திரன் | -எண்வகைக் கன்மங்களையும் சயித்தவன் | 10:77 |
| 553. | சினை | -கொம்பு | 16:149 |
| 554. | சீத்தல் | -விளக்குதல் | 9:79 |
| 555. | சீர் | -'செம்முறை யுறழ்பே மெய்ந்நிலை கொட்டனீட்ட னிமிர்த்தல்' என்று சொல்லப்படா நின்ற வண்ணக் கூறுபாட்டையும் இருவகைத் தாளக் கூறுபாட்டையும் பாலை நிலையினையும் பண்ணு நிலையினையும் நிலப்படையகத்தும் தூய்தாகக் காட்டும் தன்மை | 3:26 |
| 556. | சீற்றம் | -மிகுசினம் | பதி:44 |
| 557. | சுட்டு | -குறிப்புமாம் | 12:21 |
| | | -இது முதற் குறிப்பு | 17:7 |
| 558. | சுடுகாட்டுக் கோட்டம் | -சக்கரவாளக் கோட்டம் | 9:20 |
| 559. | சுடுநோக்கு | -சுடுவது போலும் நோக்கு; என்றது கொள்ளிக்கண் | 5:84 |
| 560. | சுடுமண் | -ஓடு | 14:146 |

561. சுண்ணம் -நான்கடியான் வருவது 3:13

562. சுந்தரம் -நிறம் 4:42

563. சுரத்தல் -இடைவிடாது சொரிதலுமாம் 1:9

564. சுரிதகம் -எட்டடியான் வருவது 3:18

565. சுருங்கை -கரந்துபடை 14:65

566. சுவத்திகம் -மணிக் கட்டிற் பொருந்திய பதாகை யிரண்டையும் மணிக் கட்டி லேற்றி வைப்பது 3:18

567. சூதர் -இருந்தேத்துவார் 5:48

568. சூர்த்து -அச்சமுறுத்து; சுழன்றென் பாரு முளர் 5:84

569. சூலத்து -சூலம் போல 11:73

570. செந்நிலை -சமநிலை 17:17

571. செம்பகை -தாழ்ந்தவிசை இயைபின்றி யிசைத்தல் 8:29

572. செம்பிற் செய்நவும் -செம்பாற் செய்தனவும் 14:174

573. செம்மல் -நாயக மூர்த்தி 10:183

574. செம்மை -நடுவுநிலைமை 8:59

575. செம்மையினிற்பது -மோக்கம் 11:114

576. செய்யாக் கோலம் -புனையாத கோலம்; ஆவது இயற்கை அழகு 16:11

577. செய்வினை -கைத்தொழில் 16:119

578. செல்வர் -இருவர் பிதாக்களும் 2:8

579. செவ்வி -இருவர் மகிழுஞ் செவ்வி 2:21
-மனோரதமுமாம் 8:48

580. செவ்வியனல்லன் -புணர்ந்தார்க்கும் பிரிந்தார்க்கும் ஒரு தன்மையனல்ல எனினு மமையும் 8:59

581. செறிதல் -ஒடுங்குதல் 2:56

582. சென்றெறி சிரல் -மாற்றார்மேற் சென்று கண்ணைக் கொத்தும் சிச்சிலிப் பொறியும் 15:214

583. செறிவன் -எல்லாவுயிர்கட்கும் இதனையுள்ள வன்; சலியாதவன் என்றுமாம் 10:177

584. சேக்கைப்பள்ளி -சேரும் சயனம் 4:28

585. சேதம் -ஆரிடம் தமிழென இருவகைத்து 3:13

586. சேந்தன -சிவந்தன 16:31

587. சேனே -மகளிர் 8:10

588. சொக்கம் -சுத்த நிருத்தம் 3:12

589. சொல் -மூன்று வகை 3:13

590. சொல்லிய வியல்பு -நூல்களிற் சொன்ன முறைமை 3:56

591. சொல் வகை -நான்கு வகைப்படும்; சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதக மென 3:13

592. சோர்தல் -மரித்தல் 9:6

593. ஞாயில் -குருவித் தலை; இதனை ஏவறை யென்பாருமுளர் 15:217

594. தவிசு -தடுக்கு 16:37

595. தஞ்சம் -எண்மை 13:64

596. தடம் -பரப்பு 2:69

597. தண்கான் -இழிந்த காடு 2:54

598. தண்ணுமை -குடமுழா 14:151

599. தணத்தல் -ஓதன் முதலியவற்றுற் சென்று குறித்துக் கூறும் பருவம் பொய்த் தல் 8:61

600. தத்துவன் -தத்துவங்களை யுடையோன் 10:182

601. தந்திர கரணம் -நூலிற் சொல்லும் கிரியை 16:180

602. தமர் -முசுகுந்தன் முன்னோர்; அன்றிக் கரிகாலன் மரபிலுள்ளாரெனி னும் அமையும் 6:15

603. தலைப்பாட்டு -உகம் 14:156

604. தவ்வை -தாய் 15:80; 16:52

605. தழூஉம் -தழுவிக்கும் 14:116

606. தன்மை -தவத்தோடு ஒற்றுமைப்படுந் தன்மை 5:128

607. தன்றெறல் வாழ்க்கை -தனதென்னும் தன்மையில்லாத வாழ்க்கை 15:195

608. தனித்துயர் -ஒப்பற்ற துயர் 14:26

609. தனிப்படு காமம் -சிறந்தார்க்கும் உரைக்கலாவ தன்றாய் அரிதாய் அகத்தே சுட்டுருக்குங் காமம் 8:66

610. தாங்கா விளையுள் -நிலம் பெறாத விளைத்தல் 6:30

611. தாங்கும் -தடுக்கும் 11:146

612. தாம் -அங்ஙனம் தூவிய மகளிர் தாம் 9:4

613. தாம்பிர சூடம் -நடுவிரலும் சுட்டு விரலும் பெருவிரலும் தம்மில் நுனியொத்துக் கூடி வளைந்து சிறுவிரலும் அணிவிரலும் முடங்கி நிமிர்வது 3:18

614. தார் -பூமாலை 15:157

615. தாழ்குரல் தண்ணுமை -தாழ்ந்த குரலினையுடைய தண்ணுமைக் கருவி முதலியன 3:27

616. தாழ்தல் -தங்குதல் 4:13; 17:37

617. தானத்துறுதி -தானப்பயன் ;ஆவது புண்ணியம் 15:34

618. திகிரி -ஆக்கினா சக்கரம் 1:5

619. திகழ்தல் -விளங்குதல் 11:2

620. திகழொளி -விளங்கும் ஒளியா யுள்ளவன் 10:183

621. திசைமுகம் -திக்காகிய முகம் 4:5

622. திதி -மூன்றாம் பக்கம் 10:3

623. திரிதருதல் -உலாத்துதல் 5:201

624. திரிபதாகை -பதாகைக் கையின் அணிவிரல் முடக்குவது 3:18

625. திரு -அழகு 12:6பா
-பெயருமாம் 16:31
-முலைமேற் றோன்றும் வீற்றுத் தெய்வம் 2:69

626. திருகுதல் -முறுகுதல் 14:215

627. திருத்தகு மாமணி -முழு மாணிக்கம் 15:93

628. திருந்துதுயில் -முற்கூறிய களித்துயில் 4:67

| | | | |
|---|---|---|---|
| 629. | திருந்து கோனல் யாழ் | -இன்பத்தை விளைத்தற்குக் காரணமாகிய யாழ் | 6:172 |
| 630. | திருமணி குயிற்றுநர் | -முத்துக்கோப்பாரும் (வரிசையான) வேகடிகளுமாம் | 5:46 |
| 631. | திருமா பத்தினி | -அழகிய வீரபத்தினி | பதி:5 |
| 632. | திருமால் குன்றம் | -அழகர் மலை | 11:91 |
| 633. | திருமுனி | -அகத்தியன் | 3:1 |
| 634. | திருமொழி | -ஆகமம் | 10:12 |
| | | -அவனருளிச் செய்த ஆகமம் | 10:47 |
| 635. | திருவில் | -இந்திர வில் | 15:156 |
| 636. | திவவு | -நரம்புகளை வலிபெறக் கட்டும் வார்க்கட்டு | 13:107 |
| 637. | திளைத்தல் | -ஒரு தொழிலை இடைவிடாது பயிறல் | 5:199 |
| 638. | திறம் | -கற்பு | 1:27 |
| | | -தீது நன்றென்னும் திறம் | 14:28 |
| 639. | திறவோர் உரைக்குஞ் செயல் | -புராணம் | 5:181 |
| 640. | தீக்குற்றம் | -கடிதான குற்றம்; ஆவது முலை திருகி எறிதல் | 9:52 |
| 641. | தீங்கென்றது கேட்டு | -தீங்கென்று சொல்ல அது கேட்டு | 9:49 |
| 642. | தீத்திறம் | -கொலைத்திறம் | 15:71 |
| 643. | தீதியல் கானம் | -தீங்காலியன்ற கானம் | 11:204 |
| 644. | தீது | -பிறர் நெஞ்சு புகுதல் | 1:27 |
| | | -பசியும் பிணியும் பகையும் | 15:9 |
| 645. | தீர்தல் | -விடுதற் பொருட்டு | 14:26 |
| | | -நீங்குதல் | 15:9 |
| 646. | துகிர்க்கோவை | -பவளக் கோவை | 4:29 |
| 647. | துகின் மேகலை | -துகின்மேற் சூழ்ந்த மேகலை என்பாருமுளர் | 4:30 |
| 648. | துணங்கை | -துணங்கைக் கூத்து. இதனைச் சிங்கி என்பாருமுளர் | 5:70 |

649. துணிபொருள் -மறத்தலால் வருந்த ண்டம் 8:70

650. துணை -சேவல் 4:66
-உசா 16:143
-தோட்டுணை யென்றுமாம் 4:13

651. துப்பு -கருவி 14:175

652. தும்பி -வண்டில் ஒரு சாதி 4:16

653. துய்த்தல் -விளையப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடா விட்டுத் தூற்றிப் பொலி செய்து கொண்டு போய் உண்டு மகிழ் வது போல்வது 3:13

654. துவர் -செம்மை நிறம் 6:26

655. துளங்குதல் -அசைதல் 6:154

656. துறவறம் -நாகம் தோலுரித்தாற் போல அகப்பற்றும் புறப்பற்று மற்று இந்திரிய வசமறுத்து முற்றத் துறத்தல் 14:11

657. துறைப் பாட்டு மடை -துறைப் பாட்டுக்களை நடுவே மடுத்தல் 12:17

658. துறை படிதல் -நீராடுதல் 18:7

659. துறை போதல் -அதற்குத் தக நிற்றல் 9:30

660. துன்னகாரர் -சிப்பியர் 5:32

661. துனைவு -விரைவு 8:114

662. தூக்கு -செந்தூக்கு முதலாகிய ஏழு தூக்குக்களும் 3:46
-இத்தாளங்களின் வழிவரும் செந்தூக்கு, மதலைத்தூக்கு, கோயிற்றூக்கு, துணிபுத்தூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு நெடுந் தூக்கெனப்பட்ட ஏழு தூக்குகளு மென்க 3:16
-தாக்கித் தூக்குதல் 3:16

663. தூங்கிருள் -செறிந்த விருள்; யாவரும் துஞ்சு மிருளாம் 9:20

664. தூண்டில் -தூண்டில் வடிவாகப் பண்ணிப் போகட்டு வைத்துக் கிடங்கு நீக்கி மதில் பற்றுவாரைக் கோத்து வலிக்கும் கருவி 15:211

665. தூபம் -நிமிர்ந்த நடுவிரலும் சுட்டு விரலும் பாதிப்பட வளைய நிற்பது 3:18

666. தூமணி -முத்து 6:90

667. தூவி -மயிர் 4:66

-சூட்டு 12:33

668. தெரிநிலை -எல்லா விரலும் விரிந்து குஞ்சித்து நிற்பது 3:18

669. தெய்வ மால்வரை -தெய்வத் தன்மையுடைய பெரியவரை 3:1

670. தேசிகம் -இயற்சொல் முதலிய நான்கு சொற்கூறுய சொற்பிரயோகம் 3:47

671. தேர்ச்சிவரி -நாயகன் கிளைகட்குத் தன் துன்பங்களைத் தேடித் தேடிச் சொல்லுதல் 8:104

672. தேவன் -இந்திரன் 6:12

-தேவர்களுக்கு ஆதியாகிய தேவன் 10:180

673. தொடக்கு -கழுக்கோல் கழுத்திற் பூட்டி முறுக்கும் சங்கிலியும் கயிற்றுத் தொடக்குமாம் 15:211

674. தொடி -வளைவு 10:63; 11:111; 13:33

675. தொடியோள் -பெண்பாற் பெயராற் குமரி என்பதாயிற்று. ஆகவே தென் பாற் கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம் 8:1

676. தொண்டியோர் -சோழ குலத்தோர் 14:107

677. தொய்யில் -பத்திக் கீற்று 2:69

678. தொல்லோர் சிறப்பி னுயம் -பழையோராகச் சிறப்பித்துக் கூறப்பட்ட ஆபம் 15:129

679. தொழிற்கை -தொழில் பெறக் காட்டும் கை 3:18

680. தொளி -சேறு 10:120

681. தோடு -தொகுதி; இதழையுடைய பொழிலிடத் தெனவுமாம் 6:158
-பொற்றோடும் தாழந் தோடும் 8:111

682. தோம் -ஈண்டு ஓட்டம் 5:152
-குற்றம் 10:98

683. தோமரம் -இரண்டு கையும் பதாகையாக்கி அகப்புற மொன்றி முன் தாழ்ந்து நிற்பது 3:18

684. தோரிய மடந்தையர் -ஆடி முதிர்ந்தவர் 3:134
-ஆடி முதிர்ந்தாற் பின்பு ஆடன் மகளிர் காலிற்கு ஒற்றறுத்துப் பாடுபவள் 6:19

685. தோல் -பரிசை; கருங்கட கென்பாரு முளர் 5:81

686. தோலின் துன்னர் -உறைகாரரும் பறம்பர் முதலா யினருமாம் 5:32

687. தோற்பாவை -தோலால் பாவை செய்து ஆட்டுவிப்பது 5:12

688. தோற்றிய வரங்கு -இப்படியாகச் சமைக்கப்பட்டு நூல் சொல்லுகின்றபடி எல்லாம் தோன்றிய வரங் கெனக் கொள்க 3:106

689. தோன்றி -தோன்ற 13:18

690. நகர் -தன் மனையுமாம் 16:69

691. நகுதல் -துன்ப நகை 10:43

692. நகைவேழம்பரொடு -சார மணிகளோடே சிரிக்கும் பரியாசகருடனு மென்ப 5:53

693. நச்சு -நச்சப்படும் பொருள் 16:66

694. நட்பு -நாலு நரம்பு 8:33

695. நடுங்குபு -நடுங்கி 17:3

696. நந்து -ஈண்டு நத்தை 10:91

697. நம்பியர் -காதலஞ் செல்வர் 14:100

698. நரகன் -நரகிற் கேதுவான வினையை யுடையவன் 15:84
699. நல்லுயிர் -காம இன்பத்தை நுகருமுயிர் 8:62
700. நல்லோரேத்து -மகளிரால் ஏத்தப்படும் அழகு 16:86
701. நல்வினை -விழா 5:234
702. நலங்கொள வைத்து -தமது அரிந்ததலையிற் குலைந்த மயிரையும் கோதி முடித்துக் குருதித் திலகத்தையும் நுதலிலே அணிந்து வைத்து 5:86
703. நலந்தரு நாளால் -இதற்குப் பொருந்தின நல்ல நாளினால் என்க. அவையா வன: பூராடம், கார்த்திகை, பூரம், பரணி, இரேவதி, திரு வாதிரை, அவிட்டம், சித்திரை, விசாகம், மகம் என விவை 3:123
704. நலம் -குளிர்ச்சி பதி:4
705. நலம்பெறு கண்ணுளர் -தாம் கொண்ட கோலத்தானும் கூத்தானும் நலம்பெறும் சாந்திக் கூத்தர்; மதங்க ரென் பாரு முளர் 5:49
706. நள்ளிருள் -செறிந்த விருள் பதி:41
707. நளி -செறிவு 2:56
708. நற்கலம் -புதுக்கலம் 16:20
709. நற்றிறம் -இருவரும் சுவர்க்கம் புகுதல் 9:53
710. நனி -மிகுதி 4:84
711. நனை -அரும்பு 5:189
712. நாக நாடு -பவணம் 1:21
713. நாகநீணகர் -சுவர்க்கம் 1:21
714. நாட்டுதல் -நிறுத்தல் 15:26
715. நாடகம் -கதை தழுவி வருங் கூத்து 3:12
716. நாடக மேத்தும் -நாடகம் தான் இவளால் சிறப் பெய்துதலின் ஏத்திற்று என்ற வாறு. இனி ஏத்து நாடகமென மாறிப் பதினொராடலாக்கி உரைப்பினும் அமையும் பதி:15

717. நாண் முழவு -நாட்பறை; ஆவது நாழிகைப் பறை 3:27

718. நாணுடைக் கோலத்து நகைமுகங் கோட்டி -ஒருருவைக் கோட்டுவார்க்கு நாணுடைமை கோட்டல் அரிதாகலின் முதலில் அதனைக் கோட்டி பின்பு அதனோடு நகை முகத்தையும் கோட்டி என்பதாயிற்று 16:19

719. நாத்தூண் நங்கை -நங்கை நாத்தூண் என்க 16:19

720. நாலுறுப்பு -உக்கிரம், துருவை, ஆபோகம் பிரகலை யென்பன 3:150

721. நாவொடு -நாவால் 5:137

-குதை வில் என்பாருமுளர் 14:139

722. நாள் -குடைநாட்கோள் முதலியவு மாம் 13:144

723. நாள்வழிபடு மடிசில் -போசனம் 16:19-20

724. நிக்கந்தக் கோட்டம் -அருகன் கோயில் 9:13

725. நிகர் -ஒளி 9:2

726. நிகர்த்து -தம்மில் ஒத்துக் கூடி 6:10

-நேரொத்து 6:50

727. நிடதம் -முட்டியாக இரண்டு கையும் சமஞ்செய்வது 3:18

728. நித்தல் விழா -சீபாலி உ.பெ.கட்:4

729. நிருத்தாங்கம் -நிருத்தத்திற்கு வாசிப்பது 3:14

730. நிலந்தரு திரு -விளைவு; அதன் நிழலிடத்தே நின்றெனினும் அமையும் 15:1

731. நிலம் -இடம் 3:67

732. நிலாக் கோட்டம் -சந்திரன் கோயில் 9:13

733. நிழல் -ஒளி 5:127

734. நிற்க -நிறுத்த 12:42

735. நின்றசிலம்பு -மற்றைச் சிலம்பு 19:2

736. நின்றிலள் -போனாள் 19:2

737. நீர் நசைஇ -நீர்மேல் மிக்க விருப்பம் 11:170

738. நீர்வேலி -கிடங்குமாம் 15;11

| | | | |
|---|---|---|---|
| 739. | நீரணி விழவு | -அபிடேக விழா வெனினும் அமையும் | 10:22 |
| 740. | நீனிறம் | -நீல நிறம் | 12:34 |
| 741. | நுகர்தல் | -பயன்கோடல் | 14:103 |
| 742. | நும் மகனுர்க்கு | -நும்முடைய புருடனுக்கு | 16:17 |
| 743. | நுழைதல் | -கழிதல்; அன்றி இளமரக்கா வாதலால் தாழ்ந்த கோட்டிடை நுழைந்து போய் | 10:35 |
| 744. | நூலோர் | -கற்ருேர் | 11:180 |
| 745. | நெஞ்சிருள் கூர | -உள்ளக் கண்ணையும் அவ்விருள் மறைப்ப | 6:10 |
| 746. | நெடிதல் | -நீட்டித்தல் | 16:21 |
| 747. | நெடியோன் குன்றம் | -வேங்கட மலை | 8:1 |
| 748. | நெடுநகை புக்கு | -சிரிப்புக்குட்பட்டு | 16:64 |
| 749. | நெடுநிலை | -எழுநிலை | 2:13 |
| 750. | நெடுநீர் | -மிக்க நீர் | 13:173 |
| 751. | நெடுநெறி | -பெருவழி | 13:43 |
| 752. | நெடுமால் | -அந்தர வானத் தெம்பெருமான் | 18:4 |
| 753. | நெடுமொழி | -புகழுமாம் | 14:49 |
| 754. | நெடுவாயிற்கடை | -பெரிய கதவையுடைய தலைக் கடை | 10:8 |
| 755. | நெய் | -புழுகு நெய் | 4:56 |
| 756. | நெற்றிச் செகில் | -நெற்றி ஒழிந்த செகில்; சிவந்த சுட்டியுமாம் | 17:7 |
| 757. | நேமி | -ஆணைச் சக்கரம் | 15:1 |
| 758. | நொடித்தல் | -சொல்லுதல் | 16:79 |
| 759. | நோக்கு | -பாரமும் நுண்மையும் மாயமும் முதலாயினவற்றை யுடையது | 3:12 |
| 760. | நோதக | -கண்டார்க்கு நோவு தக | 4:53 |
| 761. | நோலை | -எட்கசிவு | 5:68;12:37 |
| 762. | பகல் | -அரையாமம் | 4:81 |
| 763. | பகல்வாயில் | -பகல்தோன்றுகின்ற வாயில் ஆவது கீழ்த்திசை | 9;10 |

764. பகல்வாயில் உச்சிக் கிழான் கோட்டம் -கீழ்த்திசையில் தோன்றுகின்ற சூரியன் கோயில் 9:11

765. பகவன் -கேவல ஞானி 10:177

766. பகுதிப் பாடல் -இவற்றின் பகுதிக்கு அமைந்த பாடலும் 3:34

767. பகுவாய் -அங்ஙன் பருகுங்கால் அங்காக்கும் வாய் 5:219

768. பகை -உட்பகை 5:72
-ஆறும் மூன்றும் (நரம்பு) 8:33

769. பசந்து -பொன்னிறங் கொண்டு 4:5

770. பசாசம் -பெருவிரலும் சுட்டுவிரலுமன்றி ஒழிந்த மூன்று விரலும் தம்மிற் பொலிந்து நிற்பதெனக் கொள்க 3:18

771. பட்டை -நரம்புகளில் இளிக்குப் பெயர் 3:63

772. பட்டது -விளைந்தது பதி:11

773. பட்டினி நோன்பிகள் -இரண்டு உவாவும் அட்டமியும் முட்டுப்பாடும் பட்டினி விட்டுண்ணும் விரதிகள் 15:164

774. பட்டி மண்டபம் -வித்தியா மண்டபம்; ஓலக்க மண்டபமும் என்க 5:102

775. படப்பை -தோட்டக் கூறு 6:32
-முன்பக்கமுமாம் 15:151

776. படர் -துன்பமுமாம் 8:68

777. படருறு மாலை -நினைவுமிகு மாலை 8:68

778. படலை -இலைத் தொடை 4:41

779. படாகை -பெருங் கொடி 14:216

780. படி -வடிவு. பிறரைப்பழிக்கும் வடிவை யுடைய தொரு பெண் வடிவம் 15:158

781. படிமை -தெய்வ வடிவு 15:158

782. படிறு -பொய் 15:76

783. படுகாலை -அந்திக் காலத் தெனினும் அமையும் 19;5

784. படுதல் -உண்டாகுதல் 18:50

785. படைத்துக் கோட்
பெயரிடுவாள் -இனி ஆளுதற்கு இட்ட இடு
குறிப் பெயர் கூறுவாள் 17:13

786. படையுள் படுவோன் -சின்னமூதி 8:13

787. பண்டேய்த்த -பண்ணைக் கெடுத்த 1:36

788. பண்ணமை முழவு -முன்சொன்ன வீர முழவு நான்
கும்: அவையாவன : முரசு,
நிசாளம், துடுமை, திமிலை
யென விவை 3:27

789. பண்ணவன் -கடவுள் 10:188

790. பண்ணியாழ்ப் புலவன் -கட்டப்பட்ட யாழ் வாசிக்க
வல்ல அறிஞன் 5:185

791. பண்ணை -தோட்டங்களும் ஓடைகளும்
13:192

792. பண்ணென்றது -நரப்படைவால் நிறந்தோன்றப்
பண்ணப்படா நின்ற பண்ணும்
பண்ணியற் றிறமும் திறமும்
திறத்திறமும் 3:46

793. பணித்தல் -அருளிச் செய்தல் 8:13

794. பணிமொழி -காற்றூதன் பணித்த மொழி 8:13

795. பணை -வேய் வடிவாகப் பண்ணி அடித்
தற் கமைந்த பொறி 15:214

796. பதாகை -நான்கு விரலும் தம்முள் ஒட்ட
நிமிர பெருவிரல் குஞ்சித்து
நிற்பது 3:18

797. பதியெழுவறியா -பதியினின்றும் பெயர்தலை அறி
யாத. எனவே பகையின்மை
கூறிற்று 1:15

798. பதுமாஞ்சலி -இருகையும் பதும கோசிக
மாகக் கூட்டுவது 3:18

799. பந்தர் -நீழல் 10:30

800. பயம் -மன்னர் விழைச்சி 2:2

801. பயிரெழில் குயிலுவர் -தோற் கருவி இசைப்பார் 5:52

802. பரமன் -மேலானவன் 10:181

803. பரதர் -வணிகர் 5:158

| | | | |
|---|---|---|---|
| 804. | பரி | -மிகுதி | 10:220 |
| 805. | பரியகம் | -சரியுமாம் | 6:93 |
| 806. | பரிவு | -அன்புமாம் | 12:30 |
| 807. | பரிவுறு வெந்நெயும் | -காய்ந்து இறைத்தலாற் சேர்ந் தாரை வருத்துவதாய நெய்யும் | 15:209 |
| 808. | பருகுங் கூற்றம் | -பலவுயிரையும் ஒரு வாயிற் பருகுங் கூற்றம் | 5:219 |
| 809. | பருஉக் காழாரம் | -பருமுத்து வடம் | 4:41 |
| 810. | பஃறூரம் (பல்தாரம்) | -பலபண்டம் | 10:106 |
| 811. | பல்வகைக் கூத்து | -வென்றிக் கூத்து, வசைக் கூத்து, விநோதக் கூத்து முதலியன | 3:13 |
| 812. | பலங் கொள்கை | -அவன் வரும்படி தானம் பண்ண வேண்டும் பொருள் தருதல் | 15:162 |
| 813. | பவழப் பல்வளை | -கை வடமுமாம் | 6:93 |
| 814. | பழங்கடன் | -முன்பு நேர்ந்த கடன் | 12:7 |
| 815. | பழங்குடி | -தொன் மரபு; ஆதிகாலத்து ஏறிய குடியுமாம் | 1:13 |
| 816. | பள்ளி | -இடம் | 13:70 |
| 817. | பறைக்கட் பராரை | -பராரைக் கட்பறை யென்க; என்றது பரிய அரையையும், இரும்பால் வாய் மட்டாகக் கட்டின கண்ணையு முடைய பறை என்றபடி | 14:208 |
| 818. | பன்முறைக் கருவியர் | -படைக்கும் உற்சவத்துக்கும் கொட்டுவார்; யாழ் முதலிய நரம்புக் கருவிகளை யுடையாரு மென்ப | 5:52 |
| 819. | பன்றி | -மதிற்றலையி னேறினர் உடலைக் கோட்டாற் கிழிக்க இரும்பாற் செய்து வைத்த பன்றிப்பொறி | 15:214 |
| 820. | பனித்து | -நடுங்கி | 4:58 |

| | | |
|---|---|---|
| 821. | பாகடு குழிசி | -செம்புருக்கு மிடா; அன்றி அங்ஙனம் இறைத்தற்கு பாகு காயும் குழிசி களுமாம் 15:209 |
| 822. | பாகல் | -பலா 16:24 |
| 823. | பாசண்டம் | -தொண்ணூற்ரறு வகைச் சமய சாத்திரத் தருக்கக் கோவை 9:15 |
| 824. | பாடல் | -பண்ணல் முதலிய எல்லாப் பாடல் இயல்பும் 3:45 |
| 825. | பாண்டில் | -தேர் வட்டை 14:168 |
| 826. | பாண் | -பாட்டு 13:105 |
| 827. | பாசவர் | -இலையமுது இடுவார் 5:26 |
| 828. | பாடுகளம் | -கண்டம் 6 157 |
| 829. | பாடு | -படுக்கையுமாம் 9:67 |
| 830. | பாடி | -நகரி உ. பெ க: 3 |
| 831. | பாட்டு | -அங்ஙனம் அவள் பாடுகின்ற பாட்டு 17:17 |
| | | -அக நாடகங்களுக்கும், புற நாடகங்களுக்கு முரிய உருக்கள் 3:14 |
| 832. | பாட்டுடைச் செய்யுள் | -பல பாக்களோடு உரைப்பாட்டையும் இசைப் பாட்டையுமுடைய இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள் பதி:60 |
| 833. | பாணி | -இருவகைத்தாள விகற்பங்களும் 3:46 |
| | | -தேவபாணி; பாட்டு; அது தேவர்ப் பராவுதலாயிற்று 6:35 |
| | | -தாளம் 14:150; 3:16 |
| 834. | பாத்தில் பழம் பொருள் | -பகுத்தற்கரிய புராணப் பொருளாயுள்ளவன்; ஓட்டமற்ற பொன்னை யொப்பா னென்றுமாம் 10:188 |
| 835. | பாய்திரை | -பரந்த திரை 18:50 |
| 836. | பாரதி | -பைரவி 6:39 |

-கூத்தன் தலைவனாக நடன் நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது 3:13

837. பால் -ஆன் பாலுமாம் 9:5

838. பால்வகை தெரிந்த பகுதியோர் -மதி நுட்பம் உடையோர் 11:181

839. பாவை -மதனப் பாவை முதலியன 12:33

840. பாற்கதிர் -பால் போலுங் கதிர்; அதற்குப் புகழ் எனவும் ஒருபொருள் தோன்றும் 4:25

841. பான்மடை -பாற்சோறு 15:117

842. பிடர் -புறக் கழுத்து 5:97

843. பிடர்த்தலை யொற்றி -தன்னோடு எதிர்த்து விலக்குதலின் அதனைப் புறங்காண்டற்கும் அதனை வடபாலும் தனது ஆணை சேறற்கும் சாத்தனதருளால் தான் பெற்ற செண்டினாலே அதனை அடித்துத் திரித்துப் பொறித்து மறித்து நிறுத்தானென வுணர்க 5:97-98

844. பிண்டி -ஒற்றைக் கை 3:18

845. பிணி -பிணித்தல் 5:81

846. பிணிப்பு -பற்று; ஆவது அன்பாகிய ஒருதலை 15:100

847. பிணையல் -இணைக்கை; இரட்டைக் கை; அநாமிகை விரலும் நடுவிரலும் தம்மிற் பொருந்தி வலஞ் சாயப் பெருவிரல் நடுவிரலினுள்ளே சேர சுட்டுவிரலும் சிறுவிரலும் பின்னே வளைந்து நிற்பது 3:18
-மார்பிலிடுவன 14:79

848. பிரதி முகம் -அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலை தோன்றி நாற்றாய் முடிவது போல்வது 3:13

849. பிரபந்தம் -அடிவரை யறையின்றி பல தாளத்தாற் புணர்ப்பது 3:14

850. பிழா -இடா 10:111

851. பிறக்கு -வேறாக என்றபடி 5:95

| | | |
|---|---|---|
| 852. பிறக்கிடுதல் | -பின்னிடுதல்; ஆவது முகம் பாராமை | 11:182 |
| 853. பிறங்குதல் | -மிகுதலுமாம் | 14:1 |
| 854. பிறர்க்கு | -பொருள் அற்றார்க்கு; நிதி யற்றார்க்கு நல்வினை செய் தார்க்கு மென்றுமாம் | 1:33 |
| 855. பிறழ்தல் | -நீங்குதல் | 15:52 |
| 856. பிறழ | -சரிய | 2:34 |
| 857. பின்றை | -பின்னை | 11:165 |
| 858. பீடிகைத் தெரு | -கடைத்தெரு | 5:41 |
| 859. புகர் | -அழகு | 9:10 |
| 860. புகர் வெள்ளை நாகர் தங்கோட்டம் | -அழகினையுடைய பலதேவர் கோயில் | 9:10 |
| 861. புகல் | -புகுதற்கு | 2:20 |
| 862. புகைக்கொடி | -வட்டம், சிலைநுட்பம், தூமம் என்னும் கோட்கள் நான்கினும் தூமக்கோள் | 10:102 |
| 863. புகையவும் | -அகிற் புகைக்கு உறுப்பாய் உள்ளனவும் | 14:177 |
| 864. புட்ப புடம் | -குடங்கை யிரண்டும் தம்மிற் பக்கங் காட்டி நிற்பது | 3:18 |
| 865. புட்பாஞ்சலி | -இரண்டு கையும் குடங்கையாய் வந்து ஒன்றுவது | 3:18 |
| 866. புண்ணிய தானம் | -மற்றுமுள்ள புண்ணிய தானங் களும் | 5:180 |
| 867. புண்ணிய திசை | -வடதிசை | 5:94 |
| 868. புணர்ந்த | -அங்ஙனம் கொடுத்த இந்திரன் கால மன்றிப் பின்னுள்ள காலங்களும் புணரும்படி செய்த | 6:16 |
| 869. புதவம் | -வாயில் | 11:119 |
| 870. புதை | -அம்புக்கட்டு | 15:212 |
| 871. புராணன் | -பழையவன் | 10:179 |
| 872. புல் | -புறக்காழ் | 11:76 |
| 873. புல்லுதல் | -இனமென்று புல்லுதல் | 14:131 |

874. புலம் -அவர் நிலம் 4:12

875. புலம்பு -தனிமையுமாம் 4:71

876. புலம்பு முத்து -துன்பக்கண்ணீர் 4:71

877. புலராது -புலம்பாமல்; செவ்வி மாறாமல் என்றபடி 5:198

878. புலவன் -எல்லார்க்கும் அறிவாயுள்ளவன் 10:179

879. புலவூண் -புலாலோடே உண்ணும் ஊணுமாம் 10:15

880. புழுக்கல் -முதிரைப் பண்டம்; அவரை துவரை முதலியன 5:68; 12:37

881. புழையும் -ஏவறைகளும் 15:212

882. புள்ளு -கணந்துட்புள் 10:117

883. புற்கலம் -உடம்பு 3:26

884. புறங்கூறு நா -புறங்கூறுதற்குக் காரணமான நா 8:65

885. புறஞ்சிறை -புறம்பின்கண் சிறை 15:108

886. புறநிலைக் கோட்டம் -புறம்புள்ள ஸ்ரீ கோயில் 5:180

887. புறப்புற முழவு -முற்கூறப்படாத நெய்தற் பறை முதலாயின 3:27

888. புறம் -இடம் 5:102

889. புறம்பணையான் வாழ் கோட்டம் -சாதவாகனன் கோயில் 9:13

890. புறமுழவு -முன்சொன்ன அதமக் கருவியான கணப்பறை முதலாயின 3:27

891. புறவரி -தலைவனுடன் அணையாது புறத்து நின்று விளையாடுவது 8:93

892. புன்கண் -வருத்தம் 4:24

893. புனிதன் -சுத்தன்; புதியவனு மென்ப 10:179

894. புனைசாந்து -பொய்ச் சாந்து 18:3

895. பூ -பொலிவு 1:49

896. பூதம் -பூதத்தை 6:11

897. பூந்தினை -பொலிவினையுடைய தினை 11:81

898. பூவல் -செம்மண் 16:5
899. பூவிலை மடந்தையர் -அற்றைப் பரிசங் கொள்வார் 5:51
900. பூவிற்புனைநவும் -பூவாற் புனையப்படும் மாலை விசேடங்களா யுள்ளனவும் 14:177
901. பெண்டிர் -கற்புடை மகளிர் 19:51
902. பெய்யுநாள் -என்றது திங்கண் மும்மாரியைப் பருவநாள் எனினும் அமையும் உ.பெ.க:2
903. பெயர் -புகழ் 16:74
904. பெயர்த்த -போக்கின 6:11
905. பெயர்தல் -தாளமாறுதல் 13:136
906. பெயரும் -நீங்கும் 4:80
907. பெரியவன் -எல்லாவற்றுலும் பெரியவன் 10:183
908. பெரியோன் -இறைவன் 2:41
909. பெருந்தானம் -நெஞ்சும் மிடறும் நாக்கும் மூக்கும் அண்ணுக்கும் உதடும் பல்லும் தலையும் என இவை 3:26
910. பெருந் தெய்வம் -தெய்வத்திலும் பெரியது; கற்புடைத் தெய்வம் 19:24
911. பெருந்தேவி -பட்டத்துத் தேவி 16:139
912. பெருநீர் -கடல் 6:112
913. பெருமகள் -கோவலன் மாதா 10:74
914. பெருமகன் -அருக தேவன் 10:47
-தயரதன் 13:63
915. பெருவண்ணம் -ஆருய் வரும் 3:13
916. பெருவிறல் -பெரிய வெற்றி 15:160
917. பெறுகை -நினைப்பிடு கையுமாம் 3:103
918. பெறுமுறையின்றியும் -அவ்வாறு தான் ஈத்தற்கு உரிமை யின்ருகவும் 2:49
919. பேதுறவு -அறிவின் திரிபு 13:66
920. பேரம்பு -பரம புருடன் 6:41
921. பேரியற் கிழத்தி -கோவலன் மாதா 2:84
922. பைந்தளிர் -பச்சிலை 4:41

923. பொங்கர் -கொம்புமாம்; பொதுவிலுமாம் 12:3
-வாடாப்பூ 10:69
924. பொங்கல் -கள்ளு; பொங்கற் சோறு மென்ப 5:69
925. பொச்சாப்புண்டு -மறவியிற் பொருந்தி 16:65
926. பொதியறை -துவாரமில்லாத கீழறை; இது புழுக்கறை எனவும் வழங்கும் 10:191
927. பொது நீங்கு திருநிழல் -பிறிதொரு மரத்திற்கின்றித் தனக்கேயுரிய நிழல். ஆவது ஆதித்தன் சாய சாயாநிழல் 15:152
928. பொதும்பர் -மரச் செறிவு 2:18
-கோடர மென்றுமாம் 10:37
929. பொதுவறு சிறப்பு -தனக்கே யுரிய சிறப்பு 1:13
930. பொய் -புரை 15:50
931. பொய்க்கரி -பொய்ச்சான்று 5:131
932. பொய்த்தொழில் -பொய் சொல்லுதலே தொழிலாக வுடைய எனினுமாம் 16:120
933. பொய்வகையின்றி -இம் மன்றிற்கு ஆண்டுள்ள செய்கை ஈண்டும் பொய்த்தல் இன்றி 6:16
934. பொரு -பொருந்தின. முடங்கு கையை யுடைய கோடு எனினும் அமை யும் 15:50
935. பொருட்கை -பொருளுறக் காட்டுங் கை 3:18
936. பொருந்தப் புணர்த்தல் -ஈண்டு பாட்டுக்களுக்கு ,வரவு வகுத்தல் 3:13
937. பொருந்தாது வதிதல் -தன் கணவனைக் கூடாது வதி தலுமாம் 8:117
938. பொருந்துதல் -ஆடுதல் 11:98
939. பொருந்துழி யறிந்து -விருந்தெதிர் கொள்வார் இடத்தை அறிந்தென்றுமாம்; ஏகிப் போந்தென இயையும் 14:61

940. பொருளன் -ஆகமத்தின் பொருளால் உள்ளவன்; உண்மைப் பொருளாயுள்ளவனெனவுமாம் 10:179

941. பொழுதிடைப் படுப்பினும் -சிறிது பொழுதை இடையே பயமின்றாகக் கழிப்பினும் என்றது ஊடல் நீட்டிப்பினும் என்றபடி 8:60

942. பொற்குடம் -அபிடேக கலசம் 5:166

943. போக்கி -எங்கும் போகப் பண்ணி; பரப்பி என்றபடி 1:38

944. போக்கும் -போக விடும் 8:53

945. போக -அகல 5:4

946. போகி -போக 11:212

947. போகு -நெடுமை 11:119

948. போதா -பெருநாரை; மரக்காரை 10:117

949. போதியறவோன் -புத்தன் 15:103

950. மகரம் -கபோத மிரண்டு கையும் அகப்புற மொன்ற வைப்பது 3:18

951. மகரமுகம் -பெருவிரலும் சுட்டுவிரலும் நிமிர்ந்து கூட ஒழிந்த மூன்று விரலும் தம்முளொன்றி அதற்கு வேறாய் நிற்பது 3:18

952. மங்கலம் -கலியாணம் பதி:63
-அழகுமாம் 6:125

953. மங்கலவணி -மாங்கலிய மென்பாரு முளர் 2:63

954. மங்கல வணியிற் பிறிதணி -மங்கல அணியின் வேறான அணி 4:50

955. மடங்கல் -நரசிங்கம் 17:34

956. மடம் -ஈண்டு அழகு 17:2

957. மடமை -அறிவின்மை 17:37

958. மடன் -கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை 16:86

959. மடுத்துடன் கிடக்கும் -இம்மூன்று வழியும் ஒருபடிப்பட முகஞ்செய்து கிடக்கும் எனினும் அமையும் 11:147

960. மடி -வயிறு 9:22

961. மடியகத் திட்டாள் -விழுங்கினுள் 9:22

962. மண் -ஈண்டு சுதை 5:30

963. மண்டலம் -'மண்டல மென்பது மாசறக் கிளப்பிற் பேடு நுனியும் பெரு விர லுனியும் கூடி வளைந்து தம்முகிர் நுனைகௌவி ஒழிந்த மூன்று மொக்க வளைவதென மொழிந்தன ரென்ப முழுதுணர்ந் தோரே' 3:18

964. மண்டல மாக்களாவார் -அரசர் 8:84-89

965. மண்ணக மருங்கின் -இந்நில வெல்லையுள் 5:93

966. மண்ணக மருள -மண்ணகம் விண்ணகமாய் மாருட; அன்றி மண்ணிலுள் ளோர் இப்படியே அவ் விண்ண கம் இருப்பதென ஒப்புக்காண வென்க 5:167

967. மண்ணீட்டாளர் -சிற்பாசாரியர்; அன்றி சுதை யாற் பாவை உள்ளிட்டன பண்ணுவா ரென்றுமாம்; குய வரு மென்ப 5:30

968. மணமுரசு -விழாமுரசு; மண்ணென்ரேதி மார்ச்சனை யென்பாரும் உளர் 5:141

969. மணவாய்த் தென்றல் -மணத்தைத் தன்னிடத்தே யுள்ள தென்றல் 2:24

970. மணி -நீலமணி 2:53

-அழகுமாம் 6:123; 9:3

971. மணித்தேர் கொடுஞ்சி -அழகிய தேர் மொட்டு 14:168

972. மத்தக மணி -கடிகை மணியுமாம்; சிலம்பின் மத்தகத்தின் மணி எனினும் அமையும் 16:117

| | | |
|---|---|---|
| 973. | மத்தளம் | -மத்து ஓசைப் பெயர்; இசையிடனுகிய கருவிகட் கெல்லாம் தாளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று 3:27 |
| 974. | மயக்கம் | -அனந்தர் என்பாருமுளர் 16:40 |
| 975. | மயக்கொழிப்பனள் போல் | -மண்மடந்தை தங்கட்கு எதிர்வது உணர்ந்து மயங்கினுளை மயக்கொழிப்பனள் போல 16:40 |
| 976. | மயங்கி | -மயக்கப்பட்டு 2:35 |
| 977. | மயங்கினர் மலிந்து | -மயங்கினராய்க் காதன் மிக்கெனினும் அமையும் 4:44 |
| 978. | மயன் | -தெய்வ தச்சன் 2:12 |
| 979. | மயிர்க்கண் முரசு | -புலியைப் பொருது கொன்று நின்று சிலைத்துக் கோட்டுமண் கொண்ட ஏறு இறந்துழி அதன் உரிவையை மயிர் சீவாமற் போர்த்த முரசு 5:88 |
| 980. | மயிலை | -இருவாட்சி 5:191 |
| 981. | மயற்பகை | -மயலாகிய பகை 5:122 |
| 982. | மல்லல் | -வளன் 4:20; 19:16 |
| 983. | மலக்கம் | -மாறு 3:116-17 |
| 984. | மலர்க் குறிஞ்சி | -முதற்கேற்ற அடை; 'கனிவிளவின் காய்' என்பது போலக் குங்கும் நிறத்தையுடைய வற்றை என்றுமாம் 14:89 |
| 985. | மலர்தல் | -விரிதல் 5:6; 12:43 |
| 986. | மலை | -பொதியிலும் இமயமும்; இவற்றைச் சாதி ஒருமையாற் கூறினுர் 5:1 |
| 987. | மழலையின் | -மழலையோடே 8:67 |
| 988. | மறப்பு | -பொச்சாப்பு 2:85 |
| 989. | மறம் | -அகிதம் 14-27 |
| | | -வீரம் 15:53 |
| 990. | மறுக | -சுழல; அரைக்க என்றபடி 4:38 |
| 991. | மறுகி | -சுழன்று 15:36 |

992. மறுகு -ஏனைத் தெரு 6:122

993. மறுகும் -வாய்விடும்; குறுக்கிடும் எனினு மாம் 13:31

994. மறுதர -மீளவும் 10:207

995. மறுமைக்கின்பம் -புண்ணியம் 11:112

996. மறையோர் இருக்கை -பஞ்சக் கிராமிகள் இருக்குமிடம் 5:42

997. மன் -மன்னரால் 16:75

998. மா -கருமை 2:53

-நிறம் 4:40

-இடிக்கலப் பெண்டிர் தெள்ளாத மாவை 6:146

999. மாகதர் -நின்றேத்துவார் 5:48

1000. மாகவான் -விசும்பின் மேகம் 1:23

1001. மாடம் -சரக்கறைகள் 6:122

1002. மாட மதுரை புகுந்தனன் -காட்டினன்றி ஓர் ஊரின்கண் உயிரும் பொருளும் இழந்தானென்பது மேல் விளையத் தோன்றி நின்றது பதி:20

1003. மாத்திரை -இரண்டரை நாழிகையை எட்டுக் கூறுக்கி ஒரு கூறு என்றறிக 3:26

1004. மாதர்க் கோலம் -கண்டு எவரும் காதலிக்கப் படும் ஒப்பனை 5:74

1005. மாமுது பார்ப்பான் -பிதா மகன்; புரோகிதனுமாம் 1:52

1006. மாய்தல் -மறைதல் 9:2

1007. மாயம் -கனவு 16:61

1008. மாயவள் -துர்க்கை 6:59

1009. மாயோன் -திருமால் 6:35

1010. மாரி -முகில் 5:2

1011. மாலை -மணிமாலை 15:157

1012. மாலையிற் புனைநவும் -மாலையின் வர்க்கமாகப் புனைவனவும் 14:157

| | | | |
|---|---|---|---|
| 1013. | மான்மணி | -பெரிய மணி | 17:3 |
| 1014. | மான்மதக் குழம்பு | -கத்தூரிக் குழம்பு; சவ்வாது மாம் | 6:81 |
| 1015. | மான் மதம் | -கத்தூரி | 2:68 |
| 1016. | மான்றலை | -பெருவிரலும் சிறுவிரலு மொழிந்த மூன்றும் தம்மில் ஒத்து ஒன்றி முன்னே இறைஞ்சி நிற்பது | 3:18 |
| 1017. | மாறு | -பகை | 17:34 |
| 1018. | மிடறு | -சரீரவீணை | 3:26 |
| 1019. | மிளை | -காவற்காடு; கட்டுவேலியுமாம் | 13:183 |
| | | -கட்டுவேலி | 16:4 |
| | | -காவற்காடு | 15:207 |
| 1020. | மீத்திறம் படாமை | -ஆக்குமிடத்தும் அடக்குமிடத் தும் இரந்திரம் தெரியாமற் செய் வது | 3:53 |
| 1021. | மீன்றுணை | -கயற்கொடித் தாணையுமாம் | 13:17 |
| 1022. | மீனரசு | -சந்திரன்; உடுபதி யென்ப வாதலின்; அன்றி மீன் இராச்சிய மெனினுமமையும் | 4:26 |
| 1023. | முக்குடை | -சந்திராதித்தம், நித்திய விநோ தம், சகல பாசனம் என்பன | 11:1 |
| 1024. | முகநிலைப் பசாசம் | -அவ்விரன் முகங்கூடி உகிர் விட்டு நிற்பது | 3:18 |
| 1025. | முகம் | -இடம் | 5:94 |
| | | -தலை | 6:41 |
| | | -எழுவகைப் பட்ட உழவினுற் சமைக்கப்பட்ட பூமியுள் இட்ட வித்துப் பருவஞ் செய்து முளைத்து முடிவது போல்வது | 3:13 |
| 1026. | முகுளம் | -ஐந்து விரலும் தம்மில் தலை குனிந்து உயர்ந்து நிற்பது | 3:18 |
| 1027. | முடம் | -இவற்றின் குற்றங்களும் | 3:46 |

| | | |
|---|---|---|
| 1028. முடிக்கை | -பண்மாறு | 3:153 |
| 1029. முடித்த கேள்வி | -கரை கண்ட கேள்வி | 1:13 |
| 1030. முதிர்தல் | -முற்றுதல். சூழ்தலுமாம். முதிர்ந்த கடலுமாம் | 2:30 |
| | -முற்படுதல்; எனவே நல்வினை முடிதலா லென்க; இனி முதிர் வினையால் இவை முடிந்த வென்ன வழக்காருக்கினும் அமையும் | பதி:45 |
| | -சூழ்தல்; முதிர் வினை என மாறித் தீய வினையாகிய வலைக் குள்ளே எனினும் அமையும் | 16:156 |
| 1031. முதுநரி | -ஓரி | 10:232 |
| 1032. முது பெண்டிர் | -தாயத்தினராகிய பெண்டிர்; அவர் சித்திராபதி முதலாயினர் | 15.25 |
| 1033. முரசொடு வான்பலி யூட்டி | -முரசத்தால் உயிர்ப்பலி யூட்டி | 5:88 |
| 1034. முருடு | -பத்தல்; மத்தளமுமாம் | 1:46 |
| 1035. முல்லை | -மலரும் பண்ணும் | 4:15 |
| 1036. முழங்குவாய் | -கொக்கரிப்பையுடைய வாய் | 12:7 |
| 1037. முழுமெய்யும் | -மார்ப முழுவதும் | 5:226 |
| 1038. முழுவிறற் கணையம் | -கணையமரம் | 10:215 |
| 1039. முன்போந்து | -முன்னின்றும் போய் | 16:122 |
| 1040. முன்வாய் | -கூர்த்த வாய் | 4:78 |
| 1041. முன்னை யுருவம் | -வம்பப் பரத்தையும் வறுமொழி யாளன் எனவுமாம் | 10:244 |
| 1042. மூடை | -பொதி | 14:210 |
| 1043. மூதிற் பெண்டிர் | -மறக்குடி மகளிர் | 5:75 |
| 1044. மூதூர்ப் பொழில் | -இலவந்திகைச் சோலை | 14:82 |
| 1045. மூவாக் கடம்பு | -வஞ்சத்தால் நின்றதாகலின் மூப்பின்றி ஒரு நாள் போல நின்ற கடம்பு | 17:31 |

| | | | |
|---|---|---|---|
| 1046. | மூழ்குதல் | -அழுக்கறக் குளிரக் குளித்தல் | 18:39 |
| 1047. | மெய்க்கூத்து | -மெய்த் தொழிற் கூத்தாகலின் மெய்க் கூத்தாயின | 3:12 |
| 1048. | மெய்ந்நிலை | -சிறுவிரலும் அணிவிரலும் நடு விரலும் சுட்டு விரலும் விட்டு நிமிரச் சுட்டுவிரன்மேற் பெரு விரல் சேர வைப்பது | 3:18 |
| 1049. | மெய்ப்பாட்டியற்கை | -பரமாகமம்; அதில் ஐந்திர வியா கரணம் காணலாம் | 11:155 |
| 1050. | மெய்புகு கவசம் | -மெய் புகுதற்கு இடமாகிய கவசம் | 14:169 |
| 1051. | மெய்ப்பை | -சட்டை | 16:107 |
| 1052. | மெய்யுறத் தீண்டி | -உடற்கரித்து | 5:82 |
| 1053. | மென்பால் | -குறைவு | 3:93 |
| 1054. | மேகலை | -பவளக் கோவை எட்டினாற் செய்தது | 4:30 |
| | | -எண் கோவை | 4:48 |
| 1055. | மேயநாள் | -மேவிய நாள் | 9:32 |
| 1056. | மேலோர் | -முனிவர் | 11:180 |
| 1057. | மேழி | -ஆகுபெயராற் கலப்பை | 14:9 |
| 1058. | மேனின்று | -மேலாய் நின்று | 1:9 |
| 1059. | மை | -மஞ்சுமாம் | 15:51 |
| 1060. | மொழிப்பொருட் தெய்வம் | -பொருண் மொழியாகிய தெய் வம்; ஆவது பஞ்சமந்திரம். அ ஸி ஆ உ ஸா ஆ சி ஆ உ சர | 10:100 |
| 1061. | மோதகம் | -ஈண்டு பிட்டு | 6:137 |
| 1062. | யவனர் | -துருக்கர் | 14:67 |
| 1063. | யாப்புறவு | -வினை; பொருத்தமுமாம் | 16:122 |
| 1064. | யாமம் | -ஓர் யாமம்; அரையிருள் யாமம் | 4:81 |
| 1065. | யாவதும் | -சிறிதும் | 5:232; 16:148 |
| | | -யாதும் | 16;62 |

-எளிய விடத்திலும் 16:178

1066. யாழ் -யாழ்ப்பாடல் 3:26

1067. வகுந்து -வழி 11:167;15:17

1068. வச்சிரக் கோட்டம் -வச்சிரப் படை நிற்குங் கோயில் 9:12

1069. வச்சிர நாடு -சோணைக்கரை 5:99

1070. வசி -மழை; வசியமுமாம் 5:73

1071. வசை -வேத்தியல் பொதுவியல் என இரண்டு வகைப்படும் 3:12

1072. வஞ்சம் -தாமதாத்திரம். ஆவது அந்த காரத்தைப் பண்ணுவதோர் அம்பு 6:11

1073. வஞ்சனைப் புணர்ச்சி -இசை கொள்ளா எழுத்துக் களின் மேலே வல்லொற்று வந்த வழி மெல்லொற்றுப் போலப் பண்ணீர்மை நிறுத்தல் 3:56

1074. வஞ்சினம் -மேற்கோள் பதி:80

1075. வட்டம் -கவடு வட்டம் 14:196

1076. வடதிசைப் பெயர்தல் -கங்கை யாடப் போதல் 15:56

1077. வடமொழி -ஆரியம் 15:58

1078. வடு -குடிக்குற்றம் 14:146

1079. வண்ணம் -தோள் முலைகளில் எழுதும் வண்ணம் 12:36

-நானுன்கடியான் வருவது 3:13

-தொய்யிற் குழம்பு முதலியவும், எழுது வண்ணமும் 5:13

1080. வண்டு -பெருவிரலும் அணிவிரலும் வளைந்து நுனியொன்றிச்சிறுவிரல் நிமிர்ந்து சுட்டு விரலும் நடுவிர லும் நெகிழவளைந்து நிற்பது 3:18

1081. வணங்கி -முதனுட் புரிந்து புக்கவர் வணங்கி என்க 11:4

1082. வதம் -விரதமுமாம் 10:181

1083. வதிதல் -தங்குதல் 8:116

1084. வந்தனை -கண்டு துதித்தல் 11;107

1085. வம்பப் பரத்தர் -புதிய காம நுகர்ச்சியை விரும் பும் காமுகர். பரத்தையை நுகர் வானும் பரத்தன் 16:64

1086. வம்பப் பரத்தை -புதிய பரத்தைத் தன்மையுடை யாள்; குண்டட மென்றபடி. இனி மனவெழுச்சியால் தோன்றினபடி சொல்லித் திரி யும் பரத்தை யென்றுமாம் 10:219

1087. வம்பின் முடிநவும் -புதுமையாக முடிவனவும்; என்றது அல்லிக் கயிறுகுசைக் கயிறு முதலியன. வம்புக் கயிறு மாம் 14:175

1088. வயங்குதல் -விளங்குதல் 5:143

1089. வரி -வரிப்பாட்டு 14:134

-அவரவர் பிறந்த நிலத் தன் மையும் தொழிற் றன்மையும் தோன்ற நடித்தல் 8:77

-பல்வரிக் கூத்தென்பாருமுளர் 3:13

-எண்வகை வரிக்கூத்து 14:150

1090. வரிதகம் -முப்பத்திரண்டடியான் வருவது 3:13

1091. வருத்தமானம் -முகுளக் கையிற் கபோதக் கையை எதிரிட்டுச் சேர்ப்பது 3:18

1092. வருநிதி -நல்வினையாற் கலத்தினும் காலி னும் வருநிதி நியாயத்தால் வரும் நிதியுமாம் 1:33

1093. வருவ தொற்றி -அத்தப் பண்ணுக்கு அயல் விரவாமல் நோக்கி யென்க 3:65

1094. வரை -பொதியில் 3:1

1095. வலம் -வென்றியுமாம் (வெற்றி) 14:63; 4:11

1096. வலம்புரி -சிறுவிரலும் பெருவிரலும் நிமிர் ந்து சுட்டு விரலின் அகம் வளைந்து ஒழிந்த விரண்டும் இறைஞ்சி நிற்பது 3:18

| | | | |
|---|---|---|---|
| 1097. | வலயம் | -பாத்தி | 10:74 |
| 1098. | வலவையின் | -நாணிலிகளைப்போல வல்லபத் தாலென்பாரு முளர் | 5:74 |
| 1099. | வலன் | -வென்றியுமாம் | 14:9 |
| 1100. | வழிநாள் | -மற்றை நாள் | 11:165 |
| 1101. | வழு | -பழிப்புரை | 16:69 |
| 1102. | வழுத்தல் | -அபிமந்திரித்தல் | 16:172 |
| 1103. | வளம் | -செல்வமும் அழகும் | 5:212 |
| 1104. | வளைதரு குழியமும் | -கடகுக் குழியம் | 14:171 |
| 1105. | வளை போழுநர் | -சங்கறுப்பார் | 5:47 |
| 1106. | வளைவிற்பொறி | -வளைந்து தானே எய்யும் எந்திர வில் | 15:207 |
| 1107. | வறுநிலம் | -வெறு நிலம் | 13:101 |
| 1108. | வறுமொழியாளர் | -பயனில கூறுவோர் | 10:63 |
| 1109. | வறுமொழியாளன் | -பயனில் சொல்லாளன்; விடன் என்றபடி | 10:219 |
| 1110. | வன்பால் | -குழியின் மண் மிகுவது | 3:95-96 |
| 1111. | வனப்பு வண்ணம் | -நாற்பத் தொன்ருய் வரும் | 3:13 |
| 1112. | வாங்குவில் | -வளைத்துக் கொள்ளும் ஒளி | 6:97 |
| 1113. | வாசகம் | -கவி | 15:58 |
| 1114. | வாசம் | -அம்பர் எச்சம் கத்தூரி சவாது சாந்து குங்குமம் பனிநீர் புழுகு தக்கோலம் நாகப்பூ இலவங்கம் சாதிக்காய் வசுவாசி திரியாசம் தைலம் என்று சொல்லப்பட்ட பல்வகைத்தாகிய தொகுதி | 14:108 |
| 1115. | வாசவர் | -பஞ்சவாசம் விற்பார் | 5:26 |
| 1116. | வாடுதல் | -குறைதல் | 9:40 |
| 1117. | வாயன் முறுவல் | -பொய்ந்நகை | 16:80 |
| 1118. | வாயில் | -கதவு | 10:8 |
| 1119. | வாயிலிரண்டு | -அரங்கிற்கு உட்புகவும் புறப்படவும் சமைத்த வாயிலெனக் கொள்க | 3:105 |
| 1120. | வார்தல் | -நெடுமை | பதி:50 |

1121. வாரணம் -கோழி; ஆவது உறையூர் 10:247
-கோழியூர் 11:11
1122. வாரம் -ஞாயிறு 10:1-3
1123. வார மிரண்டாவன -ஒரொற்று வாரம், ஈரொற்று வார மென்னுஞ் செய்யுள் 3:135-36
1124. வால்வளை -வெள்ளிய வளையுமாம் 6:93
1125. வால்வெண் கவரி -மிகவும் வெள்ளிய சாமரம் 14.171
1126. வால்வெண்டோடு -இளைய வெள்ளிய தோடெனினும் அமையும் 16:35
1127. வாலாமை -ஆசௌசம் 15:24
1128. வாலுகம் -வெண்மணல் 6:131
1129. வாழ்க்கை -பொய்த் தொழில் 11:183
1130. வாளுங் குடையும் முரசும் பெயர்த்தல் -வாளுட்கோள் குடைநாட்கோள் முரசு நாட்கோள் என்பன; இவை நாட் கொண்டு பெயர்தல் 5:91-92
1131. வாளுழத்தி -கொற்றவை 12:13
1132. வான் -பெருமை 12:29
1133. வான்கூர்ப்பு -மிகுதி 16:215
1134. வான்கேழ்வட்டம் -மிக்க ஒளியையுடைய சிலாவட்டம் 4:37
1135. வான்கொடி -வானவல்லி; பொன்மெய் வானவல்லி என்க 1:24
1136. வான்பகை -முன்பு செய்த பகைமை 11:18
1137. வான்பொருட் கேள்வி -மறைநூலும் அங்கமும் 9:29
1138. வானவல்லி -மின்னுக்கொடி 5:211
1139. விகாரம் -கையாற் கருவியாய் பண்ணுது மனத்தால் நிருமித்தல் 10:14
1140. விட்டு -ஒழிந்து 9:7
1141. விட்புலம் -விண்ணிடம் பதி:8
1142. விடுதலறியா -விடாத 3:174
1143. விடுவாய் செய்தல் -அரிதரல் 16:30

| | | | |
|---|---|---|---|
| 1144. | விண்ணவர் தலைவன் | -ஈண்டு அவன் வச்சிரம் | 5:168 |
| 1145. | விண்ணவன் | -சுவர்க்க வாசி | 10:189 |
| 1146. | விநோதக் கூத்து | -குரவை கலிநடம் குடக்கூத்து கரணம் நோக்கு தோற்பாவை என்பர் | 3:12 |
| 1147. | வெப்பு | -தொழுநோய்; வெதுப் பெனினும் அமையும் | உ. க:1 |
| 1148. | விம்மிதம் | -அதிசயமுமாம் | 16:52 |
| 1149. | வியல் | -மிகுதியுமாம் | 5:7 |
| 1150. | வியன் பெருஞ்சேடி | -அகன்றுயர்ந்த வடசேடி | 6:1 |
| 1151. | விரதத்து | -விரதத்தோடே | 10:15 |
| 1152. | விரலணி | -மகரவாய் மோதிரம்; பீலி, கான் மோதிர முதலியன | 6:83 |
| 1153. | விரியல் | -மலர்ச்சி | 2:33 |
| 1154. | விருத்த | -ஞான விருத்தனே | 15:94 |
| 1155. | விருந்தாட்டு | -நித்தல் விழாவன்றி யாண்டு தோறும் விரும்பும் விழவு | 6:4 |
| 1156. | விருந்தின் பாணி | -தம் இசையிற் புதுமை யுண்டாக்கப்படும் பாட்டெனினும் அமையும். இதனைப் பெருமுளை என்பாருமுளர் | 10:131 |
| 1157. | விருந்து | -புதுமை | 4:12 |
| 1158. | வில்லிட்டு | -தருமத்தான ஒளியைப் புறப்பட விட்டென்பாரு முளர் | 15:156 |
| 1159. | விலக்கினிற் புணர்ந்து | -விலக்குறுப்பினோடு பொருந்துவித்து | 3:13 |
| 1160. | விலக்குறுப்பு | -14-வகைப்படும். பொருள், யோனி விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதம் என விவை | 3:13 |
| | | -தலைவன் செலுத்துகின்ற கதையை விலக்கியும் அக் கதையை நடாத்தியும் முன்பு செய்த கதைக்கே உறுப்பாகுவ தென்க | 3:13 |

| | | | |
|---|---|---|---|
| 1161. | விலங்கி நிமிர் | -குறுக்கிட்டுப் பிறழும் | 4:71 |
| 1162. | விலங்கு நடைச் செலவு | -மேன்மக்களைக் கண்டு ஒதுங்கி நடத்தல் | 16:107 |
| 1163. | விலங்கூடறுத்தது | -அவ்வாள் குறுக்கே துணித்தது | 16:213 |
| 1164. | விழித்தல் | -விளங்குதல் | 10:1 |
| 1165. | விழிநாட்டம் | -இனி நுதலில் இமையா நாட்டம் என்றுமாம் | 14:7 |
| 1166. | விழிநுதல் | -நுதல்விழி என்க | 11:124 |
| 1167. | விழுக்குடை மடை | -நிணச் சோறு | 5:68; 12:37 |
| 1168. | விளங்கொளி | -அஞ்ஞான இருள் நீங்க விளங்கு மொளி | 10:189 |
| 1169. | விளி | -ஓரிக்குரல் | 10:235 |
| 1170. | விளைதல் | -முற்றுதல் | 8:67 |
| 1171. | விளைவு | -கருப்ப முதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக் காய் தாழ்ந்து முற்றி விளைந்து முடிவது போல்வது | 3:13 |
| 1172. | விற்பிடி | -இதற்குச் சிகரமென்றும் பெயர் | 3:18 |
| 1173. | வினயம் | -தேவ பாணி | 8:23-26 |
| 1174. | வினை | -தொழில் | பதி:57 |
| 1175. | வினைஞர் | -பறையர், பள்ளர் முதலாயினோர் | 10:125 |
| 1176. | வீரபத்தினி | -மறக் கற்புடையாள் | பதி:42 |
| 1177. | வீழ்குடி | -காணியாளர் யாவரும் விரும்பும் குடி | 5:43 |
| 1178. | வீழ்துயர் | -விருப்பத்தான் வரும் துயர் | 13:71 |
| 1179. | வீழ்மணித் தோட்டி | -விரும்பப்படும் மணிகள் அழுத்திய அங்குசங்களும் | 14:169 |
| 1180. | வீறுயர் பசும்பொன் | -மாற்றுன் உயர்ச்சி பெற்ற பசிய பொன் | 3:165 |
| 1181. | வெண்கால் | -மருப்புக்கால் | 6:170 |

1182. வெண் மழை -பனி மாசுமாம் 14:104
1183. வெள்யானைக் கோட்டம் -ஐராவதம் நிற்குங் கோயில் 9:9
1184. வெள்வாள் -மாற்றுரை எறிந்து குருதிக்கறை தட்டாத வாள் எனவுமாம்; போர் மாலை சூழ்ந்து புகர் புகாத வாள் 16:213
1185. வெள்ளை நாகர் -பலதேவர் 9:10
1186. வேண்டினள் -காண்டற்குத் தானும் போக கோவலனை வேண்டிக் கொண்டாள் எனவே அவனும் உடம் பட்டமை யுணர்த்திற்று 6:114
1187. வேத முதல்வனை -ஆகம மூன்றிற்கும் முதலா யுள்ளவன் 10:189
1188. வேதாளிகரொடு -வைதாளி யாடுவாரென்று சொல்லப்பட்ட இவரோடே; மிட்டைய கண்டரு மென்ப 5:48
1189. வேதினத் துப்பவும் -ஈர்வாள் தொடக்கத்தனவாகிய கருவிகளும் 14:176
1190. வேலி -அரண் 5:99
-சூழ்தல் 1:8
1191. வேலும் -வல்லையமும் ஈட்டி முதலியனவுமாம் 15:216
1192. வேலொன்று இரண்டாக ஈத்தல் -நிருமித்துத் தருதல் 2:51
1193. வைகல் -ஈண்டு ஒரு பொழுது 3:173
-துயிறல் 10:13
1194. வைத்தல் -நினைத்தல்; தியானம் 11:106
1195. வையம் -கொல்லாப் பண்டி 6:120; 14:168
1196. வைவெரி மூட்டிய -வைக்கோலால் எரியை மூட்டிய 10:33

## பல்பொருள்

சில தொடர்களுக்கும் சொற்களுக்கும் உரை எழுதும் நல்லார் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளை உரைத்துச் செல்கின்றார்.

இங்ஙனம் உரை காண்பது மூல நூலின் இலக்கியச் செவ்வியை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

1. 'அத்தகு திருவின் அருந்தவ முடித்தோர்' (2:9)

என்ற தொடருக்கு, 'அங்ஙனம் அறத்திணுகிய பொருளால் தலைப் படு தானத்தைச் செய்தோர்'என உரை கூறிய நல்லார், 'அத்தகு திருவின்' என்பதற்கு 'அவ் வளத்திற்குத் தக ஒழுகும் மனைவி யோடே' என ஓர் விளக்கமும் தருகின்ருர்.

2. 'ஆம்பல் நாறுந் தேம்பொதி நறுவிரைத்
தாமரைச் செவ்வாய்' (4:73-74)

என்னும் வரிக்கு இருவகையாக விளக்கம் அமைக்கின்ருர் நல்லார். 'தேம்பொதி நறுவிரை ஆம்பல் நாறும் தாமரையாகிய வாய்' என்றும், 'தேம்பொதி நறுவிரைத் தாமரையாகிய ஆம்பல் நாறும் செவ்வாய்' என்றும் பொருளுரைக்கின்ருர்.

3. 'இட்டுத்தலை யெண்ணு மெயின ரல்லது
சுட்டுத்தலை போகாத் தொல்குடி' (12:20-21)

என்னும் வேட்டுவ வரி உரையில், 'தாம் சுட்டிய பகைஞர் தலை யைத் தாமே யறுத்திட்டு எண்ணுமல்லது பகைஞர் சுட்டி யெண்ணு தல் அவரிடத்து முடிவு போகாமைக்குக் காரணமாகிய எயினர் தொல்குடி' என்றும், 'தலைகள் அரிந்து வைக்க வைக்கப் பிறர் எண்ணப்படு மதல்லது ஈமத்திற் சுடப்பட்டு அவம் போகாக்குடி' என்றும், 'அரசன் சுட்டிய மாற்றரசர் தலையைப் பிறரிடத்துப் போக விடாக் குடி' என்றும் பொருள் நயங் காணுகின்ருர் நல்லார்.

4. கோவலன் மனைவியொடு மதுரையை நோக்கிப் புறப் பட்டுச் சென்று விடுகிருன். புகாரில் அவனைக் காணுத அவன் சுற்றத்தினர் மிக வருந்துகின்றனர். அவர்கள் 'இன்னுயிரிழந்த யாக்கை' (13:59) போல வருந்தினர் எனக் குறிப்பிடுகின்ருர். இதற்கு 'நெருங்கிய கிளைஞர் இனிய வுயிரை யிழந்த யாக்கை போலச் செயல் மாண்டு துயர்க் கடலிலே யழுந்து கின்றதும்' என வுரை எழுதிய நல்லார், மூலத்தை 'யாக்கை யிழந்த இன்னுயிர்' என மாற்றி, 'வீடு பெறற் குரியவுயிர் இளமைக் காலத்தே யாக் கையை யிழத்தலின் தவஞ்செய்யப் பெருது பிறவிக் கடலகத்து அழுந்துமாறுபோல வெனவுமாம்' என உரை கூறுகின்ருர்.

5. புகாரை விட்டுப் புறப்படுகின்ற கோவலன் கண்ணகியர்,

'ஏழகத் தகரு மெகினக் கவரியும்
தூமயி ரன்னமுந் துணையெனத் திரியும்

*தாளொடு குயின்ற தகைசால் சிறப்பின்*
*நீணெடு வாயி னெடுங்கடை கழிந்து'* (10:5-8)

செல்கின்றனர். இப்பகுதிக்கு மூன்று விதமாகப் பொருள் கூறி இலக்கியத்தை நுகர்வார்க்கு இன்பம் பெருக்குகின்றார். இங்கு ஏழகத்தகர் முதலான திரிதரும் நெடுங்கடை(இடைக்கழி) என்பது அடிப்படைப் பொருளாக அமைகின்றது. இதனை விரித்து, 'ஏழக மாகிய தகரும் எகினமாகிய கவரியும் தூய மயிரினையுடைய அன்னமுமாகிய இவை ஒன்றேடொன்று இனமல்ல வாயினும் இனம்போல விடாது திரியும் தாளோடு கூடப் பண்ணப்பட்ட பெருமை பொருந்திய சிறப்பினையுடைய மிகவும் பெரிய கதவை யுடைய இடைக்கழி' எனவும், '*தகர் முதலியன இவள் வளர்த்தன வாகலின், இவளைத் (கண்ணகி) தம் மினமென்று கருதித் திரியு மெனவுமாம்*' எனவும், '*வாயிற்கண் எழுதினவற்றை இனமெனக் கருதித் திரியு மெனவு மமையும்*' என்றும் நயங் காணுகின்றார் நல்லார்.

6. கோவலன் கண்ணகியர் கவுந்தியுடன் சென்ற மதுரைப் பயணத்தின் போது கண்ட காவிரிக்கரைக் காட்சியைப் பலவாறு விரிக்கின்றார் அடிகள். மது மயக்கத்தால் கடைசியர் பாடி மகிழும் ஒலிக் காட்சியை,

*'கடிமலர் களைந்து முடிநா றழுத்தித்*
*தொடிவளைத் தோளு மாகமுந் தோய்ந்து*
*சேறுடு கோலமொடு வீறுபெறத் தோன்றிச்*
*செங்கய னெடுங்கட் சின்மொழிக் கடைசியர்*
*வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணியும்'* (10:127-31)

என விவரிக்கின்றார் அடிகள். இங்குக் 'கடிமலர் களைந்து முடிநா றழுத்தி' என்னும் வரிக்கு,'காலையில் முடித்த பூக்களைந்து முடித்த முடியிலே முடியினாற்றை நறுக்கிச் சூடிக் கொண்டு' எனவும், 'போகாப் புல்லாகிய கழுநீர் முதலைப் பறித்து மறித்து அதன் மீதே முடியி னாற்றைப் பகுந்து நட்டு' என்றும் பொருள் கூறுகின்றார். இவ்விரு பொருளில் எது மூலநூலாரின் கருத்து என்று துணிதற் கியலாதவாறு பொருள் பொருத்தமுற அமைந்து இலக்கியச் சுவையை மிகுவிக்கின்றது.

7. கண்ணகியை அடைக்கலமாகப் பெற்ற மாதரி, அவளின் செய்யாக் கோலத்தையும் கூடல் மகளிரின் ஒப்பனை அழகினையும் ஒப்பிட்டு நோக்கி,

*'கூடன் மகளிர் கோலங் கொள்ளும்*
*ஆடகப் பைம்பூ ணருவிலை யழிப்பச்*
*செய்யாக் கோலமொடு வந்தீர்'* (16:9-11)

என விளித்துத் தன் மகள் ஐயையை அவட்கு அடித்தொழிலாட்டியாக அமர்த்துகின்றாள். இதற்கு நயவுரை கண்ட நல்லார், 'இக்கூடல் நகரிடத்து மகளிர் கொள்ளும் அருவிலை ஆடகப் பைம்பூணற் செய்த கோல மழித்தற்குச் செய்யாக் கோலமொடு வந்த உமக்கு' எனவும், 'கூடன் மகளிர்க்கு அழகைக் கொடுக்கும் ஆடகப் பைம்பூணினது அருவிலையை யழித்தற்குச் செய்யாக் கோலமொடு வந்தீர்க்கு' எனவும் இருபொருள்பட எழுதிச் செல்கின்றார்.

8. கண்ணகியை மாதரிபால் அடைக்கலப் படுத்துகின்ற கவுந்தி, அவள் திறங் கூறுகின்றபோது,

'என்னொடு போந்த விளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மக ளறிந்திலள்' (15:137-38)

என்கிறார். இங்கு 'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்' என்ற வரிக்கு, 'இவளடியைப் பூமிதேவியும் கண்டறியா ளென்றது அகம் விட்டுப் புறப்பட்டறியா ளென்றவாறு. இனி, மண்மகள் இவள் மென்மையைத் தானறிந்து நெகிழ்ந்தில ளென்றுமாம். இன்னும் கால் கொப்புளங் கொண்டு நிலத்தில் பாவாமையிற் கூறினுளெனினும் அமையும்' என மூன்று வகையாக-அதே நேரத்தில் மூன்று பொருளும் பொருந்த உரை எழுதுகின்றார்.

9. கனாத்திற முரைத்த காதையில், கண்ணகியின் பார்ப்பனத் தோழியான தேவந்தி,

'..............வாட்டருஞ்சீர்க்
கண்ணகி நல்லாளுக் குற்ற குறையுண்டென்
றெண்ணிய நெஞ்சத் தினையளாய் நண்ணி
அறுகு சிறுபூளை நெல்லொடு தூஉய்ச் சென்று
பெறுக கணவனோடு' (9:40-44)

எனக் கூறி வாழ்த்துகிறாள். இங்குக் கண்ணகியின் பிரிவுத் துயருணர்ந்த தேவந்தி வருத்தம் மிகக் 'கோட்டம் நண்ணி அறுகு முதலியனவற்றை இவள் கணவனைப் பெறல் வேண்டுமெனத் தூவிப் பின்னர்க் கண்ணகிபாற் சென்று ஆண்டு ஆசி கூறுவாள் கணவனைப் பெறுவாயாக வென்றாளென்க' எனவுரை கூறிய நல்லார், 'இனி, கண்ணகிபால் நண்ணிச் சென்று தூவிக் கணவனொடு வாழ்வு பெறுக வென்றாளெனினும் அமையும்'எனப் பிறிதுரை வகுக்கின்றார்.

10. கோவலன் மூதாதை ஒருவன் நடுக்கடலிடை மரக்கலன் இழந்து வருந்த, அவன் துன்பத்தைப் போக்கி யருள்கிறது

மணிமேகலா தெய்வம். தன் காதற்கிழத்தி மாதவிக்குப் பிறந்த மகளின் பெயர்சூட்டு விழாவின் போது, தன் குலதெய்வமான மணிமேகலா தெய்வத்தின் பெயரைத் தன் மகளுக்குச் சூட்டக் கருதிய கோவலன் இதனைக் கூறுகிறான்.

'விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த
எங்குல தெய்வம்' (15:36-37)

என இத் தெய்வம் தன் மூதாதைக்கு உதவியதைச் சுட்டுகிறான். இங்கு 'விஞ்சையிற் பெயர்த்து விழுமம் தீர்த்த' என்பதற்கு, 'தன் விஞ்சையால் ஒரு திடரிற் பெயர்த்து இடும்பையைத் தீர்த்த' என்றும், 'இக்கரையிலே மீளவும் தந்தெனினும் அமையும், எனவும், 'தன் விஞ்சையினாலே போய பொருளும் (கல்வியும்) வஞ்ச மறத்தந்து இடும்பையைத் தீர்த்த' என்றும் உரை கூறுகின்றார்.

*11.* நாடக நங்கை மாதவி அரங்கேறி ஆடத் தொடங்குவதற்கு முன் 'சீரியல் பொலிய நீரல நீங்க' வாரப்பாடல் பாடப் படுகிறது. இங்குச் 'சீரியல் பொலிய நீரல நீங்க'(*3:135*)என்பதற்கு 'நன்மை யுண்டாகவும் தீமை நீங்கவும்' எனவும், 'தாளவியல்பு பொலிவு பெற அவதாளம் நீங்க' எனவும் இருவகையாகப் பொருளுரைக்கின்றார்.

இவ்வாறு சில தொடர்களுக்கு நயவுரை எழுதிய நல்லார் சில சொற்களுக்கும் இங்ஙனம் உரை வகுத்துச் செல்கின்றார்.

| | | |
|---|---|---|
| 1. அரியா யோகம் | அ. | கருவி விலக்காகப் புனைந்த அரைப்பட்டிகை |
| | ஆ. | அரிதல் செய்யாத யோகம் |
| | இ. | வியாதிகளைக் கெடுக்கும் மருந்து *-14:170* |
| 2. அறுபொருள் | அ. | அற்ற பொருள்; ஐயமற்ற பொருள் என்றாயிற்று |
| | ஆ. | தீர்ந்த பொருள் |
| | இ. | அறுவகைச் சமயத்தாரும் துணிந்த பொருள் *-17:பா:33* |
| 3. ஆடிய சாயலாள் | அ. | இங்ஙனம் அவர் (ஆய்ச்சியர்) ஆடிய குரவை முடிவில் சாயலாள் வேறு ஒருத்தி ஊர் அரவங்கேட்டு வந்தாள் |

ஆ. ஆடிய சாயல் எனச் சேர்த்து அசைந்த சாயலா ளென்பாரு முளர்

இ. முதுமகள் (மாதரி) போயினு ளுடைய சாயலாள் அரவங்கேட்டு வந்து அவ்விடத்து நின்ருளென ஐயை மேலேற்றுவாரு முளர்

ஈ. போயினுள் கேட்டு வந்தாளுள ளெனப் பொருண்மை சுட்டலாக்கி மாதரிமேல் ஏற்றலு மொன்று -18:2

4. இந்திரர் — அ. தேவர்

ஆ. அந்தர குமர ரென்பாருமுளர் -16:173

5. இறை — அ. பள்ளி

ஆ. ஸ்ரீ கோயிலின் ஒரு பாகம் -10:44

6. உண்கண் பொறுக்க — அ. மையுண்ட கண்கள் இதனைப் பொறுப்பன வாக

ஆ. இனி உண்கண் என்பதனை முன்னிலை விளியாக்கி இம்மறையை நீ பொறுக்க வென்று சொல்லக் காட்டினு னெனினும் அமையும் -9:34

7. கடுங்கண் மறவர் — அ. காலாட்படைத் தலைவர்

ஆ. முப்படைக்கும் தறுகண்மை யுடைய வீரர் -5:55

8. கண்ணுளாளர் — அ. மதங்கர்; ஆவது பெரும் பாணர்

ஆ. குழலர் -5:184

9. கணையம் — அ. கணைய மரம்

ஆ. சீப்பு அகப்படக் குறுக்கே போடக் கடவ மரம் -15:215

10. கழல்கட் கூளி — அ. பிதுங்கின கண்ணையுடைய பேய்

ஆ. பச்சைக் கழல்போலும் கண்ணையுடைய கூளி -5:125

11. காலுற — அ. காலிலே யுற
ஆ. காற்று உறுதலால் -13:188

12. காவற் கணிகையர் — அ. களத்தாடும் கூத்திகள்
ஆ. இராக் கடைப் பெண்டுகள் -5:50

13. தங்கிய கொள்கைத் தரு — அ. பூமியில் தங்கிய முறைமையை யுடைய தரு
ஆ. இந்திரன் தங்கிய செருக்கை யுடைய தரு -5:145

14. தமர் — அ. முசுகுந்தன் முன்னோர்
ஆ. கரிகாலன் மரபிலுள்ளார் -6:14

15. நாழிகைக் கணக்கர் — அ. அரசனுக்குக் கவி சொல்லுவார்
ஆ. நாளிகை வட்டிலிடுவார் -5:49

16. நுதல் விழி நாட்டம் — அ. இறைவி கண் புதைத்த பொழுது நெற்றியிற் புறப்படவிட்ட கண்ணையுடைய (இறைவன்)
ஆ. நுதலில் இமையா நாட்டம்
இ. காமனை விழித்த நாட்டம் -14:7

17. பாசவர் — அ. இலையமுது இடுவார்
ஆ. கயிறு திரித்து விற்பார்
இ. பச்சிறைச்சி, சூட்டிறைச்சி விற்பார் -5:26

18. பாண்வாய் வண்டு — அ. பெண்பாலாதலிற் பண் தோற்றும் வாய் என வாய்க்கு அடையாக் கலு மொன்று
ஆ. பாணைப் பாட்டாக்கி வண்டின் வாய்க்கு அடையாக்கினும் அமையும் -4:75

19. பிறவா யாக்கைப் பெரியோன் — அ. என்றும் பிறவாத யாக்கையை யுடைய இறைவன்

ஆ. யாக்கையிற் பிறவாப் பெரியோன் -5:169

20. பெறுமுறை யின்றியும் அ. (ஈத்தற்கு) காரணம் வேறில்லை யாகவும்

ஆ. தனக்குப் பெறுங்கூறு ஒன்று மில்லை யாகவும் -2:49

21. பொதும்பர் அ. மரச்செறிவு

ஆ. கோடரம் -10:37

22. மடவார் அ. மடவார்

ஆ. பூமாது கலைமாது சயமாது புகழ் மாது புவிமாது -1:36

23. வில்லிட்டு அ. விற்போல ஒளிவிட்டு

ஆ. தருமத்தான ஒளியைப் புறப்பட விட்டென்பாரு முளர் -15:156

24. வினாத்திறத்து அ. கண்ணகியார் மதுரை மூதூர் யாதென வினாவின திறத்தை யுடைய

ஆ. கவுந்தி யடிகள் வினவின திறம்

இ. பிறர் வினவின திறத்தையுடைய பதி:71

25. வீழ்குடி அ. உழவின்மேல் விரும்புங்குடி

ஆ. யாவரும் விரும்பும் குடி

இ. உழவில் விரும்புங் குடி -5:13

26. வேல் அ. வல்லையம்

ஆ. ஈட்டி முதலியன -15:216

இங்ஙனம் உரை எழுதுகின்ற போது சொற்களுக்கும் தொடர் களுக்கும் பதவுரை கூறிச் செல்கின்றார் நல்லார். இலக்கிய மென்பது 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' போல படிக்கப் படிக்கச் சுவையும் இன்பமும் தருவதோடு பல புதிய பொருள்கோளுக்கு இடந்தந்து நிற்றல் வேண்டும். நல்லாரின் திறனாய்வு நெஞ்சம் இளங்கோவடிகளின் இலக்கியப் புதையலுள் புகுந்து எழுந்து பல புதுப் பொருட்களைத் தோண்டி எடுத்து நமக் களித்துள்ளது.

இன்று அடியார்க்கு நல்லார் கண்ட புதுப் பொருளுக்கு மேலும் பல விளக்கங்களும் கூறப்பட்டுள்ளன. புதுப்பொருள் காணும் அடியார்க்கு நல்லாரின் திறனாய்வுப் பார்வை இன்றைய திறனாய்வாளர்களுக்கு அடிப்படை வகுத்துக் கொடுக்கிறது என்று கூறின் அது முற்றிலும் பொருந்துவதே.

*பாடபேதம்*

நமக்கு இன்று கிடைக்கின்ற தமிழ் இலக்கியங்கள் முதற்கண் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுப் பின்பு காகிதச் சுவடிகளாகி அச்சு நூற்களாயின. ஓலைச் சுவடிக்குள் இலக்கியங்கள் புகுமுன் வாய்மொழியாகவே மக்களிடை வழங்கி வந்தன. சிலப்பதிகாரம் முதலில் வாய்மொழி இலக்கியமாக இருந்து ஓலைச் சுவடியில் எழுதப்பட்டுப் பின் பல பகுதிகளில் வாழ்கின்றவர்கள் தாம் படித்ததையும் கேட்டதையும் நினைவிற் கொண்டு எழுதி வைத்தனர். இவ்வாறு இவ் விலக்கியங்கள் வளர்ந்ததால் பாடபேதங்கள் வளர்ந்தன. எழுதுவோரால் ஏற்பட்ட பிழைகள் காரணமாகப் பாடபேதங்கள் தோன்றி யிருக்கலாம். படிக்கும் வாசகன் சில சொற்களையோ எழுத்துக்களையோ இலக்கியச்சுவை மிகுதற்கு வேண்டி மாற்றி அமைத்த காரணத்தாலும் பாடபேதங்கள் ஏற்படலாம். நோக்கம் மூலநூலாசிரியரின் கருத்தைச் சிதைக்காது இலக்கியச் சுவையைக் கூட்டுவதாகவே இருக்கும். அவ்வாறு சிலம்பில் ஏற்பட்டுள்ள பாடபேதங்கள் சில. இங்கு அடியார்க்கு நல்லார் தம் உரையில் எடுத்துக்காட்டுகின்ற பாடபேதங்கள் மட்டுமே கொள்ளப்படுகின்றன. இவ்வகையில் ஏறத்தாழ முப்பத்தேழு பாடபேதங்கள் காணப்படுகின்றன.

*1.* பதிகத்தில் குன்றக்குரவைக் காதையினை விளக்கும் நல்லார் 'கோதையர் குன்றக் குரவை' (பதி:82-3) என்பதைப் பாடமாகக் கொண்டு 'கோதையினை யுடைய குறத்தியர் இவளை வேங்கை நிழற்கண் கண்டதற்கு உற்பாத சாந்தியாக முருகவேளை நோக்கி அக்குன்றின்கண் ஆடிய குரவை' என விளக்குகின்றார். 'கோதை என்று பாடம் கூறிக் கோதைக்கு அவர்கள் எடுத்த குரவை யெனினும் அமையும்' எனவும் விளக்குகின்றார். இவ்விரு பாடபேதமும் இங்குப் பொருள் பொருத்த முடையதாகவே அமைகின்றன.

*2.* மங்கலவாழ்த்துப் பாடலில் மாசாத்துவானைப் பற்றிக் குறிக்கும் போது 'வருநிதி பிறர்க் கார்த்து மாசாத்துவா னென்பான்'. (*1:33*) என்று குறிப்பிடுகின்றார் இளங்கோ. இங்கு, 'பிறர்க்கு' என்பதற்கு – 'பொருளற்றார்க்கு; நிதியற்றார்க்கும்

நல்வினை செய்தார்க்கு மென்றுமாம்' என உரை கூறிப் பின் 'பலர்க் கென்றும் பாடம்; அதற்கு இல்லாராகிய பலர்க்கென்க' என எழுது கிறார் நல்லார். இப்பாடத்தையே அடியார்க்கு நல்லார் தம் உரையில் ஏற்றுக் கொள்கிறார். 'பிறர்' என்ற சொல் 'தாம்', 'பிறர்' என்ற கொள்கையை மாசாத்துவான் கொண்டிருந்தான் என்று எண்ணத்தோன்றும். 'பலர்' என்ற சொல் அவ்வேற்றுமை உணர்வு இல்லாத நிலையை யுடைத்து. இப்பாடத்தைக் கொள்வ தால் மாசாத்துவான் பண்பின் தன்மை உயர்த்தப்படுகிறது.

3. கோவலனைப் பற்றி மென்மொழியார் பாராட்டிப் பேசு கின்றனர். அவன் புகழ் பண்தேய்த்த புகழா யிருந்தாலும் மடவார் மத்தியில் அடிக்கடி பேசப்படும் நிலையிலும் அமைகின் றான். ஆயின் அவனைப்பற்றி எவ்வாறு அவர்கள் அறிந்தனர் என்ற கேள்விக்கு விடையாக ஒரு பாடத்தை நினைக்கின்றார் நல்லார்.

'பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்தும் கிழமையான்' (1:36-38)

என்பதில் கோவலன் தன் மொழியினால்-பேச்சாற்றலால் மடவார் மத்தியில் தம் புகழைப் பரப்ப அதனால் மடவார் அவனைப் பாராட் டினர் என்று கொண்டால் பொருந்தும் என நினைக்கின்றார். அதனால் 'மொழியினார்' என்பதை 'மொழியினால்' என அமைத்து, அதற்குத்தக இலக்கண முறைமைக்குப் 'போக்கி' என்ற சொல் பொருந்தாதாகலின் 'போக்க' எனவும் அமைக்கின்றார்.

4. அகத்திய முனிவன் சாபத்தால் உருப்பசியும் இந்திரன் புதல்வன் சயந்தனும் மண்மிசைப் பிறக்கின்றனர். பின்னர் அவனருளால் சாப விடையும் பெறுகின்றனர்.

'தெய்வ மால்வரைத் திருமுனி யருள
எய்திய சாபத் திந்திர சிறுவனொடு
தலைக்கோற் றானத்துச் சாப நீங்கிய' (3:1-3)

என்பதில் 'அருள...நீங்கிய' என்ற சொற்றொடர்கள் தொடர் அமைப்புக்குப் பொருந்த வில்லை. ஆயின் 'அருளால்...நீங்கிய' என்பது பொருந்துமெனக் கருதி 'அருளாற் பாடமாயின் அவ்வனது அருளால் சாபநீங்கிய என்க' என எழுதுகிறார்.

5. தண்ணுமை யாசிரியன்,

'ஆடல் பாட லிசையே தமிழே
பண்ணே பாணி தூக்கே முடமே
தேசிக மென்றிவை யாசி னுணர்ந்து' (3:45-47)

தன் கைத்தொழில் காட்ட வல்லாளுக இருத்தல் வேண்டுமென் கிருர் இளங்கோ. இங்கு 'ஆசி னுணர்ந்து' என்பதற்கு 'நுண்ணி தாக உணர்ந்து (அறிந்து)' எனப் பொருள் எழுதுகிருர் நல்லார். மேலும் ஆசு-சிறுமை எனவும் பொருளுரைக்கிருர். அதோடு 'ஆசின் றென்பது பாடமாயிற் குற்றமின்றி யுணர்ந் தென்க' எனப் பிறிது பாடங்காட்டிப் பொருளுரைக்கின்ருர். ஈண்டு 'ஆசின் றுணர்ந்து' என்பதே பொருத்த முடையதாகத் தோன்றுகிறது. இப் பாடபேதம் ஏடெழுதுவோரால் ஏற்பட்ட பிழையால் அமைந்த தெனலாம்.

6. இயற்கையின் எழிலே ஏற்றமொடு அடைகளால் குறிக் கின்ருர் இளங்கோ. 'காமரு குவளை' (4:40) என்ற தொடருக்கு 'காமம் வருமென்பது விகாரத்தாற் காமருவென நின்று கண்டார்க்கு விருப்பம் வருமென்ப தாயிற்று' என எழுதிவிட்டுப் பின்பு-'காண்வரு' பாடமாயிற் 'காட்சி வருமென்க' என எழுது கிருர். 'காமரு' கண்டால் தான் விருப்பம்; 'காண்வரு' நினைக்குந் தோறும் காட்சியில் வரும் குவளை எனப் பொருள் கொள்ளின் இலக்கியச்சுவை மேலும் ஏற்றம் பெறுகிறது.

7. 'இரவுத் தலைப்பெயரும் வைகறை காறும்
அரையிருள் யாமத்தும் பகலுந் துஞ்சார்
விரைமலர் வாளியொடு கருப்புவில் லேந்தி
மகர வெல்கொடி மைந்தன் றிரிதர' (4:80-83)

என்பதில் 'துஞ்சார்' என்பதைப் பன்மையாக்கிப் புகார் நகர மக்கள் 'அல்லற் காலை வந்து புக்க இருள் இவ்விடத்து நின்று நீங்கும் வைகறை யாம மளவும் முன்சென்ற அரை யிருளினும் ஓர் யாமத்தினும் அரை யாமத்தினும் ஒரு கணப் பொழுதும் துஞ் சாரம்படி காமன் ஏந்தித் திரிதருதலானே இந்நகரம் மிகவும் காவல் சிறந்தது' என உரை எழுதுகின்ருர். இனித் 'துஞ்சா னென்று பாடமோதி காமன் துஞ்சாளுய்த் திரிதருதலின், நகரம் காவல் சிறந்தது' என்றும் பொருளுரைக்கின்ருர். இவ்விரு பாடமும் பொருட் பொருத்தத்தையும் இலக்கிய இன்பத்தையும் மிகுவிக் கின்றன.

8. இந்திரனது வச்சிரக் கோட்டத்துள் விழாத் தொடக்கத் தினை அறிவிக்கும் முரசினை 'மணங்கெழு முரசு'(5:141)எனக் குறிக் கின்ருர் மூலநூலார். இதற்கு விழாமுரசு என்று பொருள் கொண்ட நல்லார், 'மண்ணென்ருேதி (மண்கெழு முரசு) மார்ச்சனை யென் பாரும் உளர்' எனப் பிறிது பாடங் கூறிப் பொருளுரைக்கின்ருர்

9. 'மரகத மணியொடு வயிரங் குயிற்றிப்
பவளத் திரள்காற் பைம்பொன் வேதிகை' (5:147-48)

என்பதில் 'குயிற்றி' என்பதையே நல்லார் மூலபாடமாகக் கொள்கிருர். 'குயிற்றிய' என்ற பிறிது பாடம் சுட்டி 'வயிரங் குயிற்றிய காலையுடைய வேதிகை' எனப் பொருளுரைக்கின்ருர். இப் பாடத்தையே அரும்பதவுரையார் கொள்ளுகின்ருர். இங்குக் 'குயிற்றி' என்ற வினையெச்சம் வேதிகை யென்ற பெயரொடு பொருந்தவில்லை யாகலின், இதனைக் 'குயிற்றிய' எனப் பெயரெச்ச மாகக் கொள்வது பொருத்த முடையதாகத் தோன்றுகிறது.

*10.* 'கிளர்முத் தொழுக்கத்து' (5:150) என்பதில் 'கிளர் முத்து-பருமுத்து; ஒளி கிளரும் முத்து எனினும் அமையும்' எனப் பொருளுரைத்த நல்லார், 'கிளை பாடமாயின், கொத்தாகத் தோன்றும் முத்தென்க' என விளக்குகின்ருர். ஆயின் 'கிளை முத்து' என்ற வழக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே இப்பாடம் அவ் வளவு பொருட் பொருத்த முடையதென்று கூறுதற்கில்லை.

*11.* 'உள்ளக நறுந்தா துறைப்ப மீதழிந்து' (5:235) என்பதில் அமையும் 'தாதுறைப்ப' என்பதற்குத் 'தாதுகள் மதுவை யூறிப் பிலிற்றுதலால்' எனப் பொருளுரைக்கும் நல்லார், 'தாதெறிப்ப' என்று பாடமோதித் தாது ஒளிவிட வெனப் பொருள் உரைப் பாருமுளர்' எனப் பிறர் தம் பாடம் கொள்ளும் முறையை எடுத்துக்காட்டி விளக்குகின்ருர். இங்ஙனம் 'தாதெறிப்ப' எனப் பாடங்கொள்வதில் பொருட்சிறப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

*12.* 'திருந்துவேல் அண்ணற்குத் தேவன் ஏவ' (6:12) என்பதில் தேவன்-இந்திரனைக் குறிக்கும். ''தேவர்' என்பது பாடமாயின் ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி என்க' என எழுதுகிருர் நல்லார். இது பொதுநிலைப் பாடபேதம்.

*13.* புகார் நகரில் இந்திரவிழா நடைபெறுகின்றது. இது மகிழ்ச்சி தரும் விழாவாகலின் 'மகிழ்விழா' (6:34) என்கிருர் இளங்கோ. இம் மகிழ்ச்சி தரும் விழா அழகோடு நிகழ்தல் வேண்டு மாகலின் பிறிதொரு பாடம் தோன்றுகிறது. எனவே 'மகிழ்விழா'-'மணிவிழா' வாகிறது. 'மணிவிழா' பாடமாயின் அழகிய விழா வென்க' என எழுதுகின்ருர் நல்லார்.

*14.* பதினெரு வகை யாடல் முறையினைக் கடலாடு காதையில் விளக்குகின்ருர் அடிகள். அவற்றில் ஒன்று பாண்டரங் கக்கூத்து. திசைமுகன் காணப் பாரதி வடிவாய் இறைவன் ஆடிய கூத்து இது. இதனை,

> 'தேர்மு னின்ற திசைமுகன் காணப்
> பாரதி யாடிய வியன்பாண் டரங்கமும்' (6:44-45)

எனக் குறிப்பர் இளங்கோ. இங்கு 'நின்ற' என்பதற்கு இரு பாடம் கொள்ளப்படுகிறது. 'நின்ற' என்பதைப் பாடமாகக் கொண்டு 'தேர்முன் நின்ற திசைமுகன் காண ஆடியது' என்றும், 'நின்று' என்பதைப் பாடமாகக் கொண்டு 'திசைமுகன் காண நின்ருடிய பாண்டரங்கக் கூத்து' எனவும் உரை எழுதுகின்ருர் நல்லார். அடியார்க்கு நல்லார் 'நின்று' பாடமாயிற் காண நின்ருடிய வென்க' எனக் கூறினும் அவர் 'நின்ற' என்பதையே மூலபாடமாகக் கொள்கின்ருர் எனலாம். 'நின்று' என்பதைப் பாடமாகக் கொண்டால் நின்ருடல், கிடந்தாடல், படிந்தாடல் என்னும் ஆடல் வகையில் இது நின்ருடல் வகையைச் சார்ந்தது எனக் கொள்ளலாம்.

*15.* 'அரிமயிர் முன்கை' (*6:94*) என்பதற்கு 'அரியகை முன்கை' என்ற பிறிது பாடம் சுட்டுகிருர் நல்லார். இதன் பொருட் பொருத்தமும் சிறப்பும் புலப்படவில்லை.

*16.* கண்ணகியின் தோழியாகிய தேவந்தியின் வாழ்க்கை பற்றிப் பேசும்போது அவள் கணவன் தன்கடன் கழித்து 'மேய நாள்' (*9:32*) என்பதனை 'மேவினுள்' என்று பாடமோதித் 'தன்னை மேவினவளென்று பொருளுரைப் பாருமுளர்' எனப் பிறிது பாடங் குறிக்கின்ருர். இப்பாடத்தையே அரும்பதவுரையாரும் கொள்ளுகின்ருர்.

*17.* பொய்யா விரதமுடைய பஞ்ச பரமேட்டிகள் 'புலவூண்' (*10:15*) துறந்தவர். அதாவது புலாலாகிய ஊனைத் துறந்தவர்; அல்லது புலாலோடே உண்ணும் ஊணைத் துறந்தவர் என அமையும். இதற்குப் புலையூண் என்ற பாடமும் காணப்படுகிறது. 'புலையூண் பாடமாயிற் புலையருண்ணும் ஊணென்க' என எழுதுகின்ருர் நல்லார். அரும்பதவுரையார் 'புலையூன்' எனப் பாடங்கூறி 'மச்ச மாங்கிசம்' எனப் பொருள் எழுதுகின்ருர்.

*18.* 'மறவுரை நீத்த மாசறு கேள்வியர்' (*10:53*) என்பதில் 'நீத்த' என்பதற்கு 'நீத்து' என்னுமொரு பாடங் கூறுகின்ருர். இது பாடமாயின் மறவுரையை நீத்த கவுந்தி மாசற்ற கேள்வி ஞானமுடைய சாரணர் அறிவுரை கேட்க மதுரைக்கு ஏகும் உள்ள முடையள் எனப் பொருள்படும்.

*19.* கோவலன் கண்ணகியரை மதுரைக்கு வழிப்படுத்திய கவுந்தி வழியிலமையும் இடர்களைப் பற்றிக் கூறுகையில், 'முதிர் தேம் பழம்பகை முட்டினு முட்டும்' (*10:73*) என்கிருர். இதற்குப் 'பழம் பகைபோல முட்டுதலைச் செய்யினுஞ் செய்யும்' என உரை

கூறிய நல்லார் 'முட்டினு முட்டுவர் என்றது பாடமாயின், கழிவோர் செய்யினுஞ் செய்வா ரென்க' என உலகியல் சுட்டிப் பிறிது பாடங்கூறிப் பொருளுரைக்கின்றார்.

20. காவிரியின் கரைக்காட்சியில் பல்வேறு ஒலிக்காட்சிகளைக் காட்டிய அடிகள் 'கனைகுரல் நாரை' (10:114)யையும் காட்டிச் செல்கின்றார். இங்குக் 'கனைகுரல் நாரை' என்பதற்குக் 'கூக்குரல் நாரை' என்ற ஒரு பாடமும் நல்லாரால் சுட்டிக்காட்டப் படுகிறது. 'ஒலி'க் காட்சியைப் படைப்பதே இப்பாடபேதத்திற்கு மூல காரணம்.

21. கவுந்தியின் சமயப்பற்றினைப் பலவிடங்களில் அடிகள் தெளிவு படுத்துகின்றார். நாடுகாண் காதையில் சாரணர் தோன்றி அருகன் சிறப்புக்களை யெல்லாம் கவுந்திக்கு உரைக்கின்றனர். கேட்டு மகிழ்ந்த கவுந்தி,

'ஐவரை வென்றோன் அடியிணை யல்லது
கைவரைக் காணினும் காணா வென்கண்' (10:198-99)

எனப் பிற சமயக் கடவுளரை காணாப் பெற்றியைத் தெரிவிக்கிறார். இங்குக் 'கை வரைக் காணினும்' என்பதைப் பாடமாகக்கொண்டு, 'கையகத்தே காணினும்' எனப் பொருளுரைத்து, 'இனி 'கைவரை காணினும்' பாடமாயின், கைவரை காணல்-கண் விழித்தலாக்கி விழித்திருப்பினும் காணா வென்க' எனப் பிறிது பாடங்காட்டிப் பொருளும் உரைக்கிறார்.

22. அருகனைப் பற்றிக் கூறும் போது, 'ஆதியிற் றோற்றத்து அறிவன்' (11:4) எனப் பேசுகின்றார் அடிகள். இதற்கு விளக்கம் தரும் நல்லார், 'ஆதியில் தோற்றந் தறிவ னென்றது ஆதியின்மையைத் தோற்றமாக உடையவ னென்றதாம்; எனவே இனஞ் செப்பி அந்தமின்மையை முடிவாக வுடையவ னென்பதூஉமாம்; ஆகவே ஆதியும் அந்தமு மில்லாதவ னென்ற வாறும்; எனவே தனக்கு முதலில்லாதவ னென்பதாம். இன்னும் இதற்கு யாவர்க்கும் தானே முதலாயவனென் றுரைப்பினும் அமையும். 'ஆதியில் தோற்றம்' பாடமாயின் ஆதிக் காலத்திலும் முற்றோன்றிய வனென்க, என்ற கருத்து காலத்தின் முற்றொன்றும் பொருள்கள் யாவு மின்மையின் அதனினும் முற்றோன்றியவ னென்பதாம்.' இங்கு 'ஆதியிற் றோற்றத்து','ஆதியிற் றோற்றம்' என இருபாடங்களைக் கொண்டு நல்லார் உரை கூறி அருகக்கடவுளுக்குச் சிறப்புச் சேர்ப்பது குறிப்பிடத்தக்கது.

23. தெய்வமேறி (கொற்றவை) ஆடிய சாலினி, தனக்குப் பலி கொடுக்க வேண்டிய தேவையைக் கூறும் போது,

'கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன
வல்வி லெயினர் மன்றுபாழ் பட்டன' (12:12-13)

எனப் பகைவர் ஊர் நிரை வளன் மிக, எயினர் குடியிருப்பு பாழ் பட்டன வென்பதைச் சுட்டிக் காட்டுகிருள். இங்கு 'மன்று பாழ் பட்டன' வென்பதற்கு 'மன்று பாழ்பட்டது' என்ற பிறிது பாடம் நல்லாரால் குறிக்கப் படுகிறது. 'பட்டது பாடமாயின் ஒருமைப் பன்மை மயக்க மென்க' என எழுதுகின்ருர்.

24. கோசிகமாணி கோவலனைக் கண்டு மாதவியின் இரண்டாம் கடிதத்தைக் கொடுக்கும் போது கோவலனைத் தேடிப் பலர் புகார் நகரத்திலிருந்து சென்ற செய்தியைக் கூறுகிருன்.

'கோவலற் றேடிக் கொணர்கெனப் பெயர்ந்ததும்' (13:62)

இங்குப் 'பெயர்ந்ததும்' என்பதற்கு 'எத்திசைகளிலும் சென்று' என உரை கூறிய நல்லார், ''போந்ததும்' பாடமாயின், இத்திசையினும் சிலர் போந்ததுவு மென்க' என எழுதுகின்ருர்.

25. மாதவி மடலைக் கோவலன் வாங்கி அதன், 'ஏட்டகம் விரித்தாங் கெய்திய துணர்வோன்' (13:86) கடித வாசகங்களைப் படிக்க முற்படுகிருன். ஈண்டு 'எய்திய துணர்வோன்' என்பதற்கு 'எழுதியதூஉம் உணர்வோன்' என்ற பாடமும் அமைகின்றது. எழுதப்பட்ட கடிதத்தை உணர முற்படுதலின் 'எழுதியதூஉம் உணர்வோன்' என்ற பாடம் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

26. மதுரைக் கடைகழி மகளிர் நண்பகற் போதில் 'தாழ்நீர்க் குவளை'(14:76)முதலான மலர்சூடிப் பூம்புணை தழுவிப் பொழிலாட்டமர்கின்றனர். இங்குத் 'தாழ்நீர்க்குவளை' என்பதற்குத் 'தாழ்ந்த நீரில் பூத்த குவளை' எனப் பொருள் கொள்கின்ருர் நல்லார். இனி, தாள் நீர்க் குவளை 'தாணீர்க்குவளை பாடமாயின் தாளையுடைய நீர்மைக் குவளை' எனப் பொருள் கூறுகின்ருர்.

27. அடைக்கலச் சிறப்புணர்த்தும் கவுந்தி, மாதரிக்குக் குரங்குக் கை வானவன் கதையைக்கூறுகின்ருர். அவன் தோற்றப் பொலிவினைக் கூறும் அடிகள்,

'தாரன் மாலையன் றமனியப் பூணினன்
,,,—...வானவன்' (15:157-60)

என்கிறார். இதற்கு உரை எழுதிய நல்லார் 'தாரன் மாலையன்' என்பதற்குத் தாரை யுடையனாய் மாலையை யுடையனாய்' என எழுதுகிறார். இங்குத் தாரும் மாலையும் ஒரு பொருளன வாகலின் பிறிது பாட மொன்று எழுந்துள்ளது. இதனை நல்லார், 'தார மாலைய் னெனப் பாடமோதி மந்தார மாலையையுடைய னெனினும் அமையும்' என விளக்குவர். 'தார மாலையன்' எனத் தொகையாகக் கொள்வதால் பொருள் நயம் சிறக்கின்றது.

*28.* குரங்குக் கை வானவன் தெய்வ யாக்கை பெற்ற வர லாற்றை அவன் குரங்காய் இருந்து எட்டிச்சாயலன் மனைவி செய்த தானப் பயனால் வாரணவாசி யரசன் 'உத்தர கௌத்தற் கொருமக னாகி' *(15:179)* வளர்ந்து பின் தேவனாகினான் என விளக்குவர் அடிகள். இங்கு 'உத்தர கௌத்தன்' என்பதைப் பாடமாகக் கொண்டு, குரங்கு வாரணவாசி யரசன் உத்தர கௌத்தனுக்கு மகனாகப் பிறந்தது எனப் பொருளுரைப்பர். இனி நல்லாரே, 'உத்தரன் கவிப்பற் கொருமகனாகி' யெனப் பாடமோதி, இக் குரங்கு உத்தர னென்னும் பெயரோடு கவிப்பன் என்னும் வாணிக னுக்கு ஒரு மகனாகப் பிறந்தென்பாருமுளர்' எனப் பிறிது பாடமும் கூறுகின்றார்.

*29.* மதில் உறுப்புக்களில் ஒன்று கழு-கழுக்கோல் *(15:212).* இதனைக் 'கழுகு' என்பதும் ஒரு பாடம் எனக் குறிப்பிடுகிறார் நல்லார்.

*30.* மாதரி, கண்ணகியைச் சிறப்புக் கருதி முன்னிலைப் பன்மையில் அழைக்கிறாள்.

'செய்யாக் கோலமொடு வந்தீர்க் கென்மகள்
ஐயை காணீர் அடித்தொழி லாட்டி' *(16:11-12)*

இதற்கு உரை எழுதிய நல்லார், 'வந்தீர்க் கென்றும், காணீரென் றும் உயர் சொல்லால் ஒருவரைக் கூறும் பன்மையாற்' கூறியது ஒருமைப் பன்மை மயக்க மன்று என விளக்குகின்றார். இங்ஙனம் விளக்கிய நல்லார், 'இனி வந்தாய்க் கெனவும், காணி னெனவும் பாடங் கூறுவாருமுளர்' எனப் பிறர் கொள்ளும் பாடவேறு பாட்டையும் சுட்டுகிறார். இப்பாடபேதம், இலக்கணமே சிறப் பெனக் கருதுவோர் கொண்டதாகலாம்.

*31.* 'வாள்வரிக் கொடுங்காய்' *(16:24)*-வெள்ளரிக்காய் என்பதற்கு, 'வால்வரிக் கொடுங்காய்' என்று பாடமோதி

வெள்வரிக்காய் என்பாரு முளர்' என எழுதுகிறார் நல்லார். இதனால் வெள்ளரிக்காய் வேறு; வெள்வரிக்காய் வேறு என ஆகின்றது.

32. மாதரியின் மனைபுக்க கண்ணகி, 'கையறி மடைமையிற் காதலற் காக்கி' (16:34) உண்பிக்கின்றாள். இங்குக் 'கையறி மடைமை' என்பதற்குத் 'தன்கை வல்ல மாத்திரத்தாலே' எனப் பொருள் கொள்கிறார் நல்லார். இனி, 'கையறி மடமை' என்பதைப் பாடமாகக் கொண்டு, 'கை அறிந்ததும் அறியாததுமாக வென்க; முன்பு ஆக்கிக் கைதேறினாற்போல வெனவும் அமையும்' என எழுதுகின்றார். இதனால் கண்ணகி மிகப் பெரிய செல்வர் இல்லத்தில் பிறந்தவள்-செல்வந்தன் கோவலனுக்கு மனைவியானவள் ஆக இருப்பினும் தானே சமைத்துக் கணவனுக்கு ஊட்டும் பண்பினள் என்பது போதரும்.

33. ஆய்ச்சியர் சேரியில் வைத்துக் கோவலன் தன்நிலை யுணர்ந்து கண்ணகியிடம் பேசுகிறான். மனைவியோடு இழந்த பொருள் ஈட்டுதற்குச் செல்லும் மரபில்லை. இருப்பினும் அழைத்துச் செல்கிறான். மட்டுமன்றிப் புகாரில் வாழ்ந்த காலத்தும் அவளைப் பிரிந்து மாதவியுடன் மகிழ்ச்சியோடு வாழ்ந்தவன், தன் தவறுகளை எல்லாம் கூறி இரங்குகிறான்.

'சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்
டெழுகென வெழுந்தா யென்செய் தனையென' (16:68-70)

ஏங்கும் கோவலனுக்கு,

'போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்றா வுள்ள வாழ்க்கையே னாதலின்
ஏற்றெழுந் தனன்யான்' (16:81-83)

என விடையிறுக்கின்றாள் கண்ணகி. இங்கு 'மாற்றா வுள்ள வாழ்க்கையேன்' என்பதற்கு உம்முடைய வார்த்தையைச் சிறிதும் மாற்றாத வுள்ள வாழ்க்கையை யுடையேன்' எனப் பொருள் கூறு கின்றார் நல்லார். மேலும் 'ஆற்றா வுள்ள வாழ்க்கையீ ராதலின்' என்பதூஉம் பாடம் எனக் காட்டுகிறார் நல்லார். இங்குக் கோவல னின் கையற்றநிலை நோக்கத்தக்கது. கண்ணகியின் நோக்கமோ கோவலனுக்குத் துணையாக வாழ்வதே. அதோடு பிறர் யாரும் துணைபுரியாத போது மனைவி என்ற நிலையில் துணைபுரிய வேண்டிய கடமை அவளுக்குண்டு. கோவலன் பொருள் இழந்து

நிற்கும் நிலையில் மனைவியிடம் வருகிறான். இத்தகைய 'ஆற்று வுள்ள வாழ்க்கையன்' கோவலன் ஆகலின், கண்ணகி, 'ஆற்று வுள்ள வாழ்க்கையீ ராதலின்' ஏற்றெழுந்தேன் எனக் கண்ணகி பேசுகிறாள் எனலாம். இங்ஙனம் பாடங் கொள்வதும் பொருத்த முடையதாகினும், 'போற்ற ஒழுக்கம் புரிந்தீர் யாவதும் ஆற்று வுள்ள வாழ்க்கையீர்' என ஈரிடங்களில் முன்னிலை ஈறு அமைவது தொடரமைப்பிற்குப் பொருந்தவில்லை.

34. பொற்கொல்லன் தான் கள்வனாயிருந்தும் கள்வனல்லாத் தூயோனாகிய கோவலனைக் கள்வனென்று தன் பேச்சாற்ற லால் காவலரிடம் கள்வனாக்கிக் கொலையுண்ணச் செய்கிறான். காவலருள் ஒருவன் 'இலக்கண முறைமையின் இருந்தோன் ஈங்கிவன் கொலைப்படு மகனலன்' எனக் கூறப் பொற்கொல்லன், 'அருந்திறன் மாக்களை யகநகைத் துரைத்து'க் (16:164) கள்வர் தம் இயல்பை விவரிக்கிறான். இதற்கு நல்லார், 'அரிய திறலை யுடைய வேற்காரரை நகைத்து இகழ்ந்து கூறி' என உரை எழுது கிறார். இனி 'அக நெகவென்று பாடமாயின் நெகவுரைத் தென்க' எனப் பிறிது பாடங் கூறுகின்றார். அருந்திறல் மாக்களின் உள்ளம் நெகிழ உரைத்தான் எனப் பாடங்கொள்ளும்போது பொருள் நயம் மேலும் சிறக்கின்றது.

35. 'நிலனக ழுளிய னீலத் தானையன்' (16:204) என்பதில் 'உளியன்' என்பதற்கு 'உளியத்தென்று பாடமோதி, நின்று வந்த தொகைப் பின் நின்ற போன்றென்பதனை இதனோடு கூட்டி முடிப்பினும் அமையும்' என்கிறார் நல்லார்.

36. 'சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே' (17:35)

என்னும் ஆய்ச்சியர் குரவைப்பாடல் உரையில், 'செவியும் செவியே' என்ற பாடமாயின் செவியும் என்னும் உம்மை இழிவு சிறப்பு' எனப் பிறிது பாடங் கூறுவர் நல்லார்.

37. 'மதுரைக் கம்பலை மாக்கள்' (19:29) என்னும் ஊர்சூழ் வரித் தொடருக்கு, 'குடியதாகிய மதுரையிற் கம்பலை மாக்கள்' என்று பாடமோதிக் குடியது மதுரையென முற்றுவித்தலுமாம்' எனப் பிற பாடம் சுட்டிப் பொருள் எழுதுகின்றார்.

இங்ஙனம் தான் கொண்ட பாடத்திற்கு வேறான பாடங்களைச் சுட்டி அவற்றின் பொருட் பொருத்தத்தினையும் விளக்கிச் செல் கின்றார் நல்லார். இங்குக் காட்டப்பட்ட பாடபேதங்களில் நல்லார் கொண்டுள்ள பாடமே முற்றிலும் பொருத்த முடையது

எனக் கூறுதற்கில்லை. ஒரு சில மாறுபட்டும் அமைகின்றன. சில பாடங்கள் தொடரமைப்பு முறையில் பொருந்தாது அமைகின்றன. இங்ஙனம் அமையும் சிலவற்றிற்கு நல்லார், தொடரமைப்பில் சில மாற்றங்கள் செய்து பொருத்திக் காட்டுகின்றார். இது நல்லாரின் இலக்கண, இலக்கியப் பயிற்சியைக் காட்டும்.

இவ்வாற்றான் அடியார்க்கு நல்லாரின் உரைநயம் பல்வேறு வகையில் வெளிப்பட்டுத் தோன்றுகிறது. மூலநூலின் பொருளை நன்கு உணர்த்தவும், அதிற்காணும் நயங்களை எடுத்துக் காட்டுவதும், மூலநூலாருக்குக் குறை யாண்டும் நேராதவாறு காப்பதும் நல்லாரின் நோக்கமாக அமைகின்றது. இளங்கோவின் இலக்கியச் செவ்வியை நுகர்வார் நல்லாரின் உரைநயத்தையும் உடன் உணர்வது சிறந்த பயனளிக்கும்.

# அடியார்க்கு நல்லாரும் அரும்பதவுரையாரும்

சிலப்பதிகாரக் காப்பியத்திற்கு உரை எழுதிய ஆசிரியர்களில் காலத்தால் முற்பட்டவர் அரும்பதவுரையார் என்பது முன்னர்ச் சுட்டப் பட்டது. இவரை 'அரும்பதவுரையார்' என்றே நல்லார் குறிக்கின்றார்.[1] அரும்பதவுரையார் பற்றிய ஆராய்ச்சி நூலின் நோக்கம் அன்றாயினும், அவர் உரையே அடியார்க்கு நல்லார் உரைக்குப் பாலமாக அமைந்துள்ளது. எனவே இவ்வொப்பீட்டு முயற்சி இங்கு இடம் பெறுகின்றது. அரும்பதவுரையார் பெரும் பாலும் பதவுரையே எழுதிச் செல்கின்றார். சிற்சில இடங்களில் பொழிப்புரையும், விளக்கவுரையும் செய்கின்றார். காதை யிறுதி யில் முடிப்புரை எழுதுவதும் அரும்பதவுரையாரிடம் காணப்படு கின்றது. இங்ஙனம் மிகச் சுருக்கமாக அமையும் அரும்பதவுரை யைப் பெரும்பான்மை தழுவியும், சிறுபான்மை வேறுபட்டும் உரை எழுதிச் செல்கின்றார் நல்லார். சில தொடர்களுக்குப் பொருள் எழுதும்போது அடியார்க்கு நல்லார் கொள்ளுகின்ற பாடமும், அரும்பதவுரையார் கொள்ளுகின்ற பாடமும் வேறாக அமைகின்றன. இவை பற்றிய செய்திகள் மட்டுமே இங்கு நோக் கப்படுகின்றன.

1. சிலப். 5:157-60, பக்: 166.

சிலப்பதிகாரத்தை மேற்கண்ட இருவர் உரையோடு பதிப்பித்த டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் அரும்பதவுரையார் பற்றிக் குறிப்பிடுவது இங்குக் கருதத்தக்கது. அது வருமாறு:

'இவருடைய பெயர் முதலியவற்றுள் யாதொன்றும் தெரியவில்லை. இவ்வரும்பதவுரையையே பெருங்கருவியாகக் கொண்டு இந்நூலுக்கு அடியார்க்கு நல்லார் உரை செய்தனர்; அஃது இவ்விரண்டு உரைகளையும் வைத்து ஒப்புநோக்கின் நன்கு விளங்கும். ஆயினும் இந்நூலில் இவ்விரண்டு உரையாசிரியர்களுங் கொண்ட பாடம் சில சிலவிடத்து வேறுபட்டுள்ளன; அவ்வேறுபாடுகள் அவ்வவ் விடத்துள்ள உரைநடைகளால் நன்கு புலப்படும். அடியார்க்கு நல்லார் உரையிற் காணப்படாத பல மேற்கோள்களும், சில நூற்பெயர்களும் இவ்வுரையிற் காணப்படுகின்றன. வாக்கியங்களின் முதலிறுதிகளையேனும், முதலை மட்டுமேனும், சொற்களையேனும் எழுதிப் பொருளெழுதுவதும், ஒன்றையு மெழுதாது பொருளை மட்டும் எழுதிக் கொண்டு போவதும் இவ்வுரையாசிரியருடைய கொள்கையாக இருக்கின்றன. இதிற் சங்கச் செய்யுட்களுடைய கருத்து முதலியவற்றை இவர் ஆங்காங்கு விளக்கியிருப்பதுடன் சில சிலவிடத்து மிகச் செவ்விதாகப் பதசாரமும் எழுதியிருக்கிறார். அடியார்க்கு நல்லாருரையாற் புலப்படாத சில செய்திகள் இவ் வரும்பதவுரையால் விளங்குகின்றன. இவ்வுரையிற் பலவிடங்களில் வாக்கியங்கள் பூரணமாக எழுதப்படவில்லை. சில பாகங்களுக்கு ஒருவகையாக உரை எழுதிப் பின்பு வேறு உரையெழுதும் பொழுது அதனைப் புலப்படுத்துதற்குரிய உம்மை முதலியன கிடையா. இவ்வுரையிலுள்ள முடிவுகளும் பொருளும் இல்லையாயின், அடியார்க்கு நல்லாருடைய உரை கிடையாத பாகங்களுக்குப் பொருள் காண்பது அரிது',[1] எனக் குறிப்பிடுகின்றார்.

திரு மு. அருணாசலம் அவர்கள் தம்முடைய 11-ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில், அடியார்க்கு நல்லார்க்குக் கருவியாகவும், வழிகாட்டியாகவும், ஆதரவுமாக இருந்தது அரும்பதவுரையே என்பதைக் குறித்துச் செல்கிறார். மேலும் அவர் கூறுவதாவது, 'அடியார்க்கு நல்லார் ஒவ்வொரு தொடருக்கும் அரும்பதவுரையைச் சொல்லியே மேல் எழுதுகிறார். காரணம் அதைவிடச் சிறப்பாகச் சொல்வதற்குச் சொற்கள் இல்லை; சொல்ல இயலாது என்பது ஒன்று. மற்றது அரும்பதவுரையின் காலத்தில் இருந்த பொருள்களும் மரபுகளும் நூல்களும் அடுத்த நூறு ஆண்டுகளில்

1. சிலப். உ. வே. சா. முகவுரை, பக்: xviii.

மறைந்துவிட்டன என்பது மற்றென்று'[1] என எழுதுகிருர். எனவே அடியார்க்கு நல்லாருக்கு அரும்பதவுரையில் நன்கு பயிற்சி இருந்தது என்பது மட்டும் உறுதி. இருவருக்கும் உள்ள உரை ஒப்புமை இதனைத் தெளிவு படுத்தும்.

உரை ஒப்புமை

ஒரு இலக்கண நூலுக்கோ அல்லது இலக்கியத்திற்கோ உரை எழுதுகின்ற இருவேறு உரையாசிரியர்களிடையே பொருள் ஒப்புமை மிகுதியும் காணப்படுவது இயற்கை. காரணம் இருவரும் மூலநூற் கருத்தை விளக்கிக் கூறுகின்றவர்களாதலின். உரையாசிரியர்கள், சில சிக்கலான பகுதிகட்கும், இலக்கிய உத்திகள் மிகுதியும் ஆளப்படும் இடங்கட்கும் உரை எழுதுகின்ற போதும், தங்களின் புதிய எண்ணங்களையும் திறனாய்வுக் கருத்துக்களையும் வெளியிடுகின்ற போதும் ஒருவர் மற்றொருவர் கருத்திற்கு மாறுபடுவர். பிறவிடங்களில் கருத்தளவில் மாறுபடுவதில்லை. ஆயின் மொழிநிலையில் மிகுதியும் மாறுபடுவர். ஆயின் அடியார்க்கு நல்லாரோ தமக்கு முன்னிருந்த அரும்பதவுரையை அப்படியே ஏற்றுப் பல விடங்களில் எழுதிச் செல்கின்றார் (பின்னிணைப்பு-I காண்க.)

சொற்களுக்கு இலக்கணக்குறிப்புத் தருகின்ற போதும் நல்லார் சில விடங்களில் அரும்பதவுரையாரை அப்படியே பின்பற்றுகிருர். இயம்பும் (17:6)-முற்று; குழைத்த (2:53)-இல்பொருளுவமை; தோடார் (15:195) -(தோட்டார் என்பதன்) விகாரம் முதலான இவ்வகையில் அமையும்.

சொற்களுக்குப் பொருள் கொள்ளுகின்ற ஞான்றுச் சில சொற்களை வருவித்துப் பொருள் கொள்ளும் திறம் அடியார்க்கு நல்லாரிடம் சிறப்பாகக் காணப்படும். இந்நிலையிலும் அரும்பதவுரையைச் சில விடங்களில் பின்பற்றுகிருர் நல்லார். கனத்திறம் உரைத்த காதை 48-49-வரிகட்கு உரை எழுதிய அரும்பதவுரையார் 'சொல்ல - வென ஒரு சொல் வருவிக்க' என எழுதுகிருர். இதனை நல்லாரும் குறிப்பிடுகிருர். இதே காதை 54-வரியுரையில் 'என' - வென ஒரு சொல் வருவிக்க' என்ற அரும்பதவுரையார் கூற்றை ஏற்றுப் போற்றுகிருர் நல்லார்.

ஆய்ச்சியர் குரவை (17:[5]) யுரையில், 'உறையாமை முதலாக எண்ணிய உம்மைகளுக்கு உறையாமை யாலுமென்று மூன்றும் வேற்றுமை விரிக்க' என எழுதுகிருர் அரும்பதவுரையார். நல்லாரும், 'உறையாமையும் சோர்தலும் உருகாமையும்

1. மு. அருணசலம், 'தமிழ் இலக்கிய வரலாறு'-11-ஆம் நூற்ருண்டு, பக்:79.

ஆடாமையும் வீழ்தலுமென் றெண்ணிய உம்மைகளில் உறையாமையானுமென மூன்றனுருபு விரிக்க' எனக் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

தொடர் அமைப்பிலும் இருவருக்கும் இடையில் பல ஒப்புமைகள் காணப்படுகின்றன. அரங்கேற்று காதையில் 'ஆடலாசிரியனது அமைதி' (3:12-25) கூறும் பகுதிக்கு இருவர் எழுதும் பொழிப்புரை இங்கு நோக்கத் தக்கது.

'இருவகைக் கூத்தின்......ஆடற் கமைந்த வாசான் றன்னெடும் என்றது—தேசியும் மார்க்கமு மென்று சொல்லப்படா நின்ற இரண்டு வகைப்பட்ட (இருவகைத்தாகிய) அகக்கூத்தினது (ன்) இலக்கணங்களை யறிந்து பலவகைப்பட்ட புறநடங்களையும் விலக்குறுப்புக்களைச் சேரப் புணர்க்கவும் வல்லனுகி அல்லியம் முதலாகக் (ற்) கொடுகொட்டி ஈருகக் கிடந்த பதினெரு கூத்துக்களும் அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும் அவற்றுக்கு அடைத்த வாச்சியக்(ங்களின்) கூறும் (களும்) நூல்களின் (ல் விதித்த) வழியே தெரிய வறிந்து அக் கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங்களின் வழியே வந்த தூக்குக்களும் தம்மிற் கூடி(ன நெறியையுடைய அகக் கூத்தும் புறக் கூத்தும் முதலான நிகழ்த்து) நிகழுமிடத்துப் பிண்டி பிணையல் எழிற்கை தொழிற்கை யென்னும் அந்த (யென்று சொல்லப்பட்ட) நான்கினையும் நூல்களினகத்துக் கொண்ட கூறு பாட்டை யறிந்து அகக்கூத்தினிடத்துக் (து நிகழுமிடத்துக்) கூடைக் கதியாகச் செய்த கை வாரக் கதியிற்(யுட்) புகுதா(கா)மலும், வாரக் கதியாகச் செய்த கை கூடைக் கதியிற் (யுட்) புகுதா(கா)மலும், புறக்கூத்தில் (னிடத்து) ஆடல் நிகழுமிடத்து அவிநயம் நிகழாமலும், அவிநயம் நிகழுமிடத்து ஆடல் நிகழாமலும், குரவைக்கூத்தும் வரிக்கூத்தும் தம்மில் விரவாதபடியும் செலுத்த வல்ல (தி அமைந்த) ஆடலாசிரியனு மென்க (றவாறு)'.

இப்பொழிப்புரை அரும்பதவுரைக்கும் அடியார்க்கு நல்லார் உரைக்கும் பொதுவானது. இவற்றில் அடைப்புக் குறிக்குள் இடப்பட்ட பகுதிகளை நீக்கின் அரும்பதவுரையாகும். அடைப்புக் குறிக்குள் உள்ள பகுதியைச் சேர்த்து அடிக்கோடிட்ட பகுதியை நீக்கின் அடியார்க்கு நல்லார் உரையாகும். இங்ஙனம் வேறுபாடு மிகச் சிறிதாக அடியார்க்கு நல்லாரின் உரையில் அமைவதற்கு அடிப்படைக் காரணம் அவர் மனதில் பசுமரத்தாணிபோல அரும்பதவுரை பதிந்திருந்தமையே எனலாம்.

அடைக்கலக் காதையில் வரும் 'எழுவுஞ் சீப்பும்' (15:215) என்பதற்கு, 'திறக்குங் காலத்து மேலே யெழுப்புகையால் எழுவுஞ் சீப்பென்ருர்' என எழுதுகின்ருர் அரும்பதவுரையார். இதனை நல்லார் அவ்வாறே தம் உரையில் ஏற்றுக் கொள்கிருர்.

கொலைக்களக் காதையில் 'கூடல் மகளிர்' (16:9) என்னுந் தொடருக்குப் பொருள் எழுதும் அரும்பதவுரையார் 'கூட லென்ருள் தான் அறியும் ஊர் அதுவாகலின்' என எழுதுகிருர். நல்லாரும் 'கூடல் மகளிர் என்ருள் தான் அறியும் ஊர் அதுவாக லின்' என அரும்பதவுரையை மாற்ருது மேற்கொள்ளுகின்ருர். இங்ஙனம் தொடர் அமைப்பிலும் நல்லார், அரும்பதவுரையை அடியொற்றி அவற்றில் சில மாற்றங்கள் செய்தும், செய்யாமல் அப்படியே ஏற்று எழுதிச் செல்கின்ருர்.

இனி, அரும்பதவுரையார் தருகின்ற புதிய விளக்கங்களையும் திறனய்வுக் கருத்துக்களையும் மேற்கோள் பாடல்களையும் பல விடங்களில் அப்படியே ஏற்றெழுதுகிருர் நல்லார்.

மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகியின் அறிமுகப் பகுதிக்கு (1:26-29) உரை கூறிய அரும்பதவுரையார் 'இவளை முற்கூறிற்று கதைக்கு நாயகியாகலின்' என விளக்குகிருர். அடியார்க்கு நல் லாரும் கண்ணகி-கோவலர் அறிமுகப் பகுதிக்கு விளக்கம் எழுதி விட்டு, இறுதியில் 'கண்ணகியை முற்கூறினர் பத்தினியை ஏத்து தல் உட்கோளாகலான்' என்கிருர்.

'மண்தேய்த்த புகழ்' (1:36)-'பூமி சிறுகும்படி வளர்ந்த புகழ்' என்பது அரும்பதவுரை. நல்லார் இதனையே 'மண்தேய்த்த என்ருர் புகழ் வளரப் பூமி சிறுகலான்' என எழுதுகிருர்.

'திங்களைப் போற்றுதும்', 'ஞாயிறு போற்றுதும்', 'மாமழை போற்றுதும்', 'பூம்புகார் போற்றுதும்' என்னும் 'இவை நான்கு சிந்தியல் வெண்பாவும் செம்பியனையும் புகாரினையும் சிறப்பித்தன' (1:1-12-உரை) என்கிருர் அரும்பதவுரையார். அடியார்க்கு நல்லார் இக்காதையின் 1-19-வரிகட்கு உரை எழுதி இறுதியில், 'இவற்ருல் செம்பியன் சிறப்பும் புகார்ச் சிறப்பும் கூறியவாருயிற்று' என எழுதுகிருர்.

அரங்கேற்று காதையில் 'பெருந்தோள் மடந்தை' (3:6) என்னும் வரிக்கு 'பெருந்தோள் மடந்தை: மகளிர்க்குத் தோள் பெருக்கை இலக்கணம்; என்னை? 'அகலல்குரேள் கண்ணென மூவழிப் பெருகி'(கலித்:108:2)என்ருராகலின்'என உரை கூறுகிருர் அரும்பதவுரையார். அடியார்க்கு நல்லாரும், 'பெருந்தோ

ளென்ருர், மகளிர் தோள்பெருத்தல் மரபாதலின்; என்னை? 'அக லல்குரேள் கண்ணென மூவழிப் பெருகி' (கலித்:108:2) என் ருராகலின்' என இதனை விளக்குகிருர்.

அரங்கேற்று காதை 16-வது வரியுரையில், 'ஈங்குச் சிங்கள மென வழங்கி வருகின்ற கூத்துச் சொல்லிற்றிலரெனின், 'சிங்கள ...மெய்தும்' என்னுஞ் சூத்திரத்தால் அதற்கு வேறு கால்கள் இன்மையி னென்பது; பாலைக்கு நிலமில்லாதது போல வென்க' என அரும்பதவுரையார் கூறுகின்ருர். இதனை 'ஈண்டுச் சிங்கள மென்று வழங்கி வருகின்ற கூத்துச் சொல்லிற்றிலராலெனின், 'சிங்கள மிருவகை நிலையினு மெய்தும்' என்னும் சூத்திரத்தான் இதற்கு வேறு கால்கள் இன்மையி னென்க;பாலைக்கு நிலமில்லாதது போல' என அடியார்க்கு நல்லார் தெளிவு படுத்துகிருர்.

*'காதற் கொழுநனைப் பிரிந்தல ரெய்தா*
*மாதர்க் கொடுங்குழை மாதவி'* (5:189-90)

என்ற வரிக்கு உரைகாணும் அரும்பதவுரையார், 'காதற் கொழு நனை...மாதவி யென்றது சிலேடை; காதலிக்கப்பட்ட தன் கொழு நனைப் பிரிந்து வேறுபட்டு அலருருத அழகிய வளைந்த மகரக் குழையையுடைய மாதவி யென்றும், எல்லாரும் காதலிக்கும் கொழுவிய நனையாந் தன்மையை விட்டு முதிர்ந்து அலராகாத வளைந்த தளிரையுடைய குருக்கத்தி என்றும் சொல்லுக' என்பர். இங்ஙனம் அரும்பதவுரையார் காணும் பொருள்நயங் கண்ட நல் லார் அதனைத் தம் உரையிலும் ஏற்றுக் கொள்கிருர். 'மாதவிமேற் சொல்லுமிடத்துத் தான் காதலிக்கப்பட்ட கொழுநனைப் பிரிந்து வேறுபாட்டால் அலர் உருத அழகிய வளைந்த மகரக் குழையை யுடைய மாதவி யென்றும், குருக்கத்திமேற் சொல்லுமிடத்து எல்லாரும் காதலிக்குங் கொழுவிய நனையாந் தன்மையை விட்டு முதிர்ந்து அலராகாத வளைந்த அழகிய தளிரையுடைய மாதவி யென்றும் பிரிக்க' என நல்லார் உரை எழுதுகின்ருர்.

நாடுகாண் காதையில், சிறிதே தூரம் நடந்து களைத்த கண்ணகி தளர்ச்சி மிகுதியான் 'மதுரை மூதூர் யாதென வினவ' அதற்கு 'ஆறைங் காதம்'(10:42) என்கிருன் கோவலன். இதற்கு 'ஆறைங்காதம்-முப்பது காதம்; ஆறைங்காத மென்ருன் அவட்கு அறுகாதம் ஐங்காத மென்ருற் போலத் தோன்ற' என உரை எழுது கின்ருர். இவ்வுரையை மனதிற் கொண்டே 'யாதென்றவட்கு முப்பதென்னும் பொருள் மறைத்துக் காதம் ஆறு காதம் ஐந்தென் ருற் போலிருத்தற்கு ஆறைங்காத மென்ருன்' என நல்லார் உரை வகுக்கின்ருர்.

அடைக்கலக் காதையில், கண்ணகியை மாதரிபால் அடைக்கலப் படுத்தும் கவுந்தி அவள் மென்மைத் தன்மையை 'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்' (15:138) எனக் கூறுகிறார். இவ் வரியை, 'அவளைப் புறப்பட விடாமையாலே அவளடியைப் பூமி தேவியுங் கண்டறியாள்; இனி, கொப்புளங் கொண்ட தென்பாள், 'மண்மகள் அறிந்திலள்' என்றாள் என்றும், காலின் மென்மைக்குத் தக்கபடித் தானும் மெல்கிற்றில ளென்றுமாம்' என விளக்குகிறார் அரும்பதவுரையார். அரும்பதவுரையாரின் இவ்விளக்கத்தை அடியார்க்கு நல்லாரும் சுட்டிச் செல்கிறார். 'இவளடியைப் பூமி தேவியும் கண்டறியா ளென்றது அகம் விட்டுப் புறப்பட்டறியா ளென்றவாறு. இனி மண்மகள் இவள் மென்மையைத் தானறிந்து நெகிழ்ந்தில ளென்றுமாம். இன்னும் கால் கொப்புளங் கொண்டு நிலத்திற் பாவாமையிற் கூறினாளெனினும் அமையும்' என நல்லார் எழுதுவது மேற்கருத்தை விளக்கும்.

இதுபோலப் 'பொதுநீங்கு திருநிழல்' (15:152) என்பதற்கு அரும்பதவுரையாரும் நல்லாரும் எழுதும் உரையும் ஒப்புநோக்கத் தக்கது. 'பொதுநீங்கு திருநிழல்-பிறிது மரம்போல ஆதித்தனுடன் திரியாது நிற்கும் நிழல்; ஆவது ஆதித்தன் கிரணத்தாற் சாயாதே நிற்றல்' என அரும்பதவுரையாரும், 'பிறிதொரு மரத்திற் கின்றித் தனக்கே யுரிய நிழல்; ஆவது ஆதித்தன் சாயச் சாயா நிழல்' என நல்லாரும் உரை எழுதுகின்றனர்.

இங்ஙனம் கருத்து விளக்கம் செய்யுங்கால் சிலவிடங்களில் அரும்பதவுரையாரைத் தழுவி எழுதுகின்றார் நல்லார். இனி மேற்கோள் காட்டுவதிலும் அரும்பதவுரையைப் பலவிடங்களில் தழுவிக் கொள்கிறார் நல்லார். சில சான்றுகள் வருமாறு :

வேனிற்காதையில், 'ஒன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தி' (8:25) என்னும் வரிக்கு உரை எழுதிய அரும்பதவுரையார், 'ஆதிப்பா......ஒன்பான் விருத்தி,' 'முதற்க ணெதிர்...... தோற்றமும்', 'நல்லிசை மடந்தை. . வினைய மாட்டுதல் கடனே', 'பெருவிரல் குஞ்சித் தேனைய நான்கும் நிரலே நிமிர்த்தல் பதாகை யாகும்' என்னும் பாடல்களை மேற்கோள் காட்டுகிறார். இப் பாடல்கள் அடியார்க்கு நல்லாராலும் காட்டப் படுகின்றன.

'இணை கிளை பகைநட் பென்றிந் நான்கின்
இசைபுணர் குறிநிலை யெய்த நோக்கி' (8:33-34)

என்னும் வரிகட்கு உரை எழுதுகையில், 'இணையென ......அளவி னென்ப', 'கிளையெனப் படுவ .... ஆகுமென்ப', 'நின்ற.......கூட

மாகும்' என இணை, கிளை, பகை நரம்புகளை எடுத்துக்காட்டுப் பாடல்களுடன் தருகிறார் அரும்பதவுரையார். இப்பாடல்கள் நல்லாராலும் எடுத்தாளப் படுகின்றன.

இவ் வேனிற் காதையில் வரும் எண்வகை வரிக்கூத்துக்களை விளக்க, 'வரியெனப் படுவது......நெறித்தே', 'அவற்றுள், கண் கூடென்பது...தன்மைத் தென்ப', 'காண்வரி யென்பது . தன்மை யதாகும்', 'உள்வரி யென்பது – ஆடுதற் குரித்தே', 'புறவரி யென்பது...விடைபெறு வதுவெ', 'கிளர்வரி யென்பது . நிற்பது வே', தேர்ச்சி யென்பது...தேர்ச்சி வரி யாகும்', காட்சிவரி யென் பது.. பரிந்து நிற்பதுவே', 'எடுத்துக் கோளை.. எடுத்துக் கோளே' என்னும் பாடல்களைத் தருகிறார் அரும்பதவுரையார் (8:77-108). இப்பாடல்களை நல்லாரும் எடுத்துக் காட்டுகிறார்.

'கனாத்திற முரைத்த காதை' யில் தான் கண்ட கனவைத் தோழி தேவந்திக்கு உரைத்த கண்ணகி, தன் தீக்கனவைக் கூறேன் (உரையாடேன்-9:51) என்கிறாள். இங்கு அரும்பத வுரையார், 'உரையார், இழிதக்க காணிற் கனா' (பழ:182) என்ற பழமொழியை எடுத்துக் காட்டுகிறார். இப்பாடல் அடியார்க்கு நல்லாராலும் தரப்படுகிறது.

'நாடுகாண் காதை'யில் கடல்வளன் (10:107) குறிக்க 'ஓர்க் கோலை......ஐந்து'என்ற பாடலைக் காட்டுகிறார் அரும்பதவுரையார். இதனை நல்லாரும் காட்டுகிறார்.

அடைக்கலக் காதையில் கீரிப்பிள்ளை-பார்ப்பனி கதையை விளக்கும் பகுதியில் வரும் 'வடமொழி வாசகஞ் செய்த நல்லேடு' (15:58) என்னும் தொடரை விளக்கும் அரும்பதவுரையார் 'அப ரீக்ஷ்ய நகர்த்தவ் யங் கர்த்தவ்யம் ஸுபரீக்ஷிதம், பஸ்சாத் பவதி ஸந்தாபம் ப்ராஹ்மணீ நகுலம் யதா' என்ற ஒரு வடமொழிச் சுலோகத்தைக் காட்டுகிறார். இக் கிரந்தம் அடியார்க்கு நல்லார் உரையிலும் உண்டு. இவை தவிர நல்லாரின் அரங்கேற்று காதை யுரையில் இசை பற்றிக்குறிக்கும் மேற்கோள் பாடல்கள் பலவற்றில் சில அரும்பதவுரையிலும் காணப்படுகின்றன.

இங்ஙனம் சொற்பொருள் கூறுவதிலும், இலக்கணக் குறிப்புத் தருவதிலும், தொடரமைப்பிலும், நடையிலும், கருத்து விளக்கஞ் செய்கின்றபோதும், மேற்கோளை எடுத்தாள்வதிலும் பல ஒப்புடைக் கூறுகள் இரு உரையாசிரியர் தம் உரைகளிலும் காணக்கிடக் கின்றன. தமக்கு முன் வாழ்ந்த அரும்பதவுரையாரின் உரையில் மிகுந்த ஈடுபாடும், மட்டற்ற மதிப்பும் கொண்டவர் நல்லாரென்பது மேற்கண்ட ஒப்புடைக் கருத்துக்கள் தெளிவு படுத்தும். முன்னோர்

மொழி பொருளைப் பொன்னேபோற் போற்றிப் பாதுகாக்கும் அடியார்க்கு நல்லாரின் தனிப் பெருஞ்சிறப்பு இங்குப் புலப்படுகின்றது.

உரை வேறுபாடு

ஒரே நூலுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் தங்களுக்குள் பல்வேறு நிலைகளில் கருத்து வேறுபாடு கொள்வதற்குப் பல காரணங்கள் அமையலாம். இதற்கு அடிப்படையாக அமைவது காலவேறுபாடு. ஒரு காலத்தில் வழங்கி வரும் மரபுகளும், பொருண் முடிபுகளும் அடுத்த நூற்றுண்டுகளில் மாறுபடலாம். இவ்வாறு மாறுபடுகின்றபோது உரைநூற்களிலும் பல மாற்றங்கள் இன்றியமையாத தாகின்றது. இது தவிர உரையாசிரியர்கட்குக் கிடைத்துள்ள மூலாதாரங்களின் அளவைப் பொறுத்தும் உரையில் கருத்துவேறுபாடுகள் தோன்றலாம். மேலும் உரையாசிரியர்கள் சார்ந்துள்ள சமய, சமுதாய, அரசியற் பின்னணியும் அவர்தம் உரை வேறுபாடுகட்கு அடிப்படை யாகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக உரையாசிரியர்களின் புலமைத் திறனும், சிந்தனைத் திறனும், திறனாய்வுப் பார்வையுமே உரையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படக் காரணியாகும். உரையின் அமைப்பும் இத்தகு உரை வேறுபாட்டிற்குக் காரணமாகலாம். காண்டிகையுரை செய்கின்றவர் ஒவ்வொரு பகுதிக்கும் பல்வேறு வகையில் பொருள் விளக்கம் செய்து கொண்டு செல்வது இயலாது. இது விருத்தியுரையாலேயே முடியும். காண்டிகையுரையார் மூலநூலின் திரண்ட கருத்தைச் சொல்ல விருத்தியுரைகாரர் தம் கருத்தையும் பிறநூல் முடிபுகளையும் ஏற்றுச் சொல்வர். இதனுல் இரு உரைக்குமே மிகுந்த வேறுபாடு காணப்படும்.

இங்கு அரும்பதவுரைக்கும் அடியார்க்கு நல்லாருரைக்கும் வேறுபாடு இருப்பதற்குப் பல்வேறு காரணங்களைச் சொல்லலாம். அவற்றில் தலையாய காரணங்களாக அமைவன இரண்டே. ஒன்று காலவேறுபாடு. ஏறத்தாழ அரும்பதவுரையார் காலத்திற்கு ஒரு நூற்றுண்டிற்குப் பின் வாழ்ந்தவர் அடியார்க்கு நல்லார். மற்றது இருவர் தம் உரை அமைப்பு. அரும்பதவுரை மிகச் சுருக்கமாக அமைவது; இதன் தலையாய நோக்கம் விளங்காத சொற்களுக்குப் பொருள் எழுதுவதே. சிறுபான்மை விளக்கவுரையும் எழுதுகிறுர். எனினும் அடியார்க்கு நல்லார் உரையை ஒரு விருத்தியுரை எனலாம். சொற்பொருள், கருத்து, விளக்கவுரை, காட்டு முதலான பல்வேறு உரைக் கூறுகளையும் நல்லார் உரையில் காணலாம். இதனுல் இவர்தம் உரைகளில் வேறுபாடு இருத்தலில் வியப்பில்லை. இங்குப் பொருள் நிலையில் இருவரும் கொள்ளுகின்ற வேறுபாடுகள்

மட்டுமே விளக்கப் படுகின்றன. அதுவும் அரும்பதவுரை கொண்டே இவ்வேறுபாடு வரையறுக்கப் படுகிறது. அருபதவுரையுள்ள பகுதியில் அடியார்க்கு நல்லார் உரை எந்த அளவிற்கு வேறுபடுகிறது என்பது மட்டுமே இங்கு நோக்கப்படுகிறது. அடியார்க்கு நல்லார் உரையை அடிப்படையாகக் கொண்டு இவ்வேறுபாடு செய்யப் படவில்லை. அடியார்க்கு நல்லாரிடம் காணப்படுகின்ற பல விளக்கங்கள் அரும்பதவுரையில் சொல்லப்படவில்லை அதற்கு அடிப் படைக் காரணம் இருவர் தம் உரை அமைப்புக்களே.

அடியார்க்கு நல்லாருக்கும் அரும்பதவுரையாருக்கு மிடையே கிட்டத்தட்ட ஒரு நூறு உரை வேறுபாடுகள் இங்கு அட்டவணைப் படுத்தப் பட்டுள்ளன. இவ்வுரை வேறுபாடுகளை ஏழு வகைக்குள் உட்படுத்தலாம். 1. அடியார்க்கு நல்லார் உரை சிறப்பாக அமைவன 2. அரும்பதவுரை சிறப்பாக அமைவன 3. இருவர் உரையும் சிறப்புறுவன 4. இருவர் உரையில் யாருடைய உரை சிறப்பாக அமைந்துள்ளது என்று தெளிவாக வரையறுக்க முடியாதன 5. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் அரும்பதவுரையில் காணப்படுவன 6. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் அடியார்க்கு நல்லார் உரையில் காணப்படுவன 7. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் இருவர் உரையிலும் காணப்பட்டு அவற்றில் அடியார்க்கு நல்லாரால் ஒன்றும் அரும்பதவுரையாரால் மற்றொன்றும் சிறப்பாகக் கருதப் படுவன.

1. அட்டவணைப் படுத்தப் பட்டுள்ள 99-உரைவேறுபாடுகளில் முதற்கண் அமைவது அடியார்க்கு நல்லார் உரை சிறப்பாக அமையும் பகுதி. இவ்வகையில் பதின்மூன்று வேறுபாடுகள் காணப்படுகின்றன. இங்கு முதற்கண் அமையும் தொடர் 'பாட்டுடைச் செய்யுள்' (பதி:60) என்பது. இதற்கு அரும்பதவுரையார் 'உருவாகிய பாட்டுக்களையுடைய காவியம்' என்கிறார். 'உரு' என்பதற்குப் 'பாட்டு' என்றே அடியார்க்கு நல்லாரும் அரும்பதவுரையாரும் கொள்ளுகின்றனர் (3:14-உரை). இது அக நாடகங்களுக்கு உரியது புறநாடகங்களுக்கு உரியது என இருவகைப்படும். கந்த முதலாகப் பிரபந்த உரு ஈருக உள்ள இருபத்தெட்டும் அகக் கூத்திற்குரியன வென்றும், தேசியாணி முதலாக அரங்கொழி செய்யுள் ஈருக வுள்ளன புறக் கூத்திற்குரியன வென்று இவ்விரு உரையாசிரியர்களும் கூறுகின்றனர். இவற்றான் 'உரு' என்பது இசைப்பாட்டு என்பது போதரும். இத்தகைய இசைப்பாக்களை இடையிடையே கொண்டது சிலப்பதிகாரமாகலின் மேற்கண்ட அரும்பதவுரை பொருந்துவது போலத் தோன்றுகிறது. ஆயின் 'உரை' என்ற சொல் 'இசைப்பாட்டு'

என்ற பொருளில் வழங்கி வந்ததாகத் தெரியவில்லை. அதோடு சிலப்பதிகாரம் இத்தகைய இசைப்பாட்டுக்களோடு உரைச் செய்யுட்களையுங் கொண்டு அமைகின்றது. ஆகலின் இத்தொடருக்கு, 'பல பாக்களோடு உரைப்பாட்டையும் இசைப்பாட்டையு முடைய செய்யுள்' என அடியார்க்கு நல்லார் கூறும் உரை பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமைகின்றது.

இதுபோலப் 'பெருங் குணத்துக் காதலாள்' (1:28–29) என்பதற்குப் 'பெருங் குணத்தாற் காதலித்தவள்' என அரும்பதவுரையார் கூறுவது சிறப்பாகத் தோன்றவில்லை. இவ்வுரை கண்ணகியின் குண நலனைச் சிறப்பிக்கவில்லை. 'பெருங்குணங்களைக் காதலிப்பாள்' என்ற நல்லாரின் உரை கண்ணகியின் பண்பு நலனை விளக்கி நிற்கிறது.

'பிண்டி' என்பது ஒற்றைக் கை அவிநயம்; இது இருபத்து நான்கு வகைப்படும். பிணையல் என்பது இரட்டைக் கை யவிநயம்; இது பதின்மூன்று வகைப்படும் எனக் கூறிச்செல்கிறுர் அரும்பதவுரையார். ஆயின் நல்லார் பிண்டி முப்பத்து மூன்று வகைப்படும் என்றும், பிணையல் பதினைந்து வகைப்படும் என்றும் கூறி, அவற்றின் பெயர்களையும் அதற்குரிய எடுத்துக்காட்டுப் பாடல்களையும் தருகின்றுர். இங்கு அடியார்க்கு நல்லார் மிகுதியாக இவ் வவிநய வகை பற்றிக் கூறுவது அவரது காலவளர்ச்சியாக இருக்கலாம்.

'மங்கல அணி' (4:50) என்பதற்கு 'இயற்கை அழகு' என அரும்பதவுரையாரும், 'மங்கல அணி' என நல்லாரும் குறிப்பிடுகின்றனர். இவ்வுரைப்படி, கோவலனைப் பிரிந்திருந்த கண்ணகி அணிகலனே அணியாது இயற்கையழகுடன் திகழ்ந்தாள் என்றும், மங்கல அணி மட்டும் அணிந்திருந்தாள் என்றும் பொருளாகிறது. இங்கு மங்கல அணி என்று நல்லார் எதைக் குறிப்பிட்டார் எனத் தெளிவாகத் தெரியவில்லை.

இந்திர விழவூரெடுத்த காதையில், ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் அரசகுமரரும் பரதகுமரரும் சென்று இந்திரனை நீராட்டியதைக் குறிப்பிடுகிறுர் இளங்கோவடிகள் (5:157–168). இங்கு 'ஐம்பெருங்குழு எண்பேராயம்' (5:157) என்பதற்கு உரை எழுதுகையில் அரும்பதவுரையாரும் நல்லாரும் வேறுபடுகின்றனர். எண்பேராயமாவது: சாந்து, பூ, கச்சு, ஆடை, பாக்கு, இலை, கஞ்சுகம், நெய் என்பன; ஐம்பெருங்குழுவாவது: மாசனம் (மக்கள்), பார்ப்பார், மருத்துவர், நிமித்திகர், அமைச்சர் ஆகியோர். இது அரும்பதவுரையார் தரும் விளக்கம். இனி அடியார்க்கு நல்லார் கூறுவதாவது: ஐம்பெருங்குழுவாவது அமைச்சர்,

புரோகிதர், சேனுதிபதி, தூதுவர், சாரணர் என்பார்; எண்பேராய மாவது கரணத்தியலவர், கருமகாரர், கனகச் சுற்றம், கடைகாப் பாளர், நகர மக்கள், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் ஆகியோர். இருவருமே தங்கள் உரைக்குச் சான்ருக மேற்கோள் பாடல்களைக் காட்டுகின்றனர். இங்கு அரும்பதவுரையார் காட்டும் எண்பேராயம் பொருளாகவும், ஐம்பெருங்குழு அரசியற் சுற்றத் தினர்களாகவும் அமைகின்றனர். நல்லார் கூறும் இருபிரிவினரும் அரசியற் சுற்றத்தினர்களாகவே அமைகின்றனர். இதனுல் நல்லார் உரையே இவ்விடத்திற்குப் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. காரணம் இவர்கள் சென்று இந்திரனை நீராட்டு கின்றனர் எனக் குறிப்பதால். அரும்பதவுரை கூறும் எண்பேராயப் பொருள்கள் நீராட்டுதற்குப் பயன்படுமேயன்றி நீராட்டும் தொழிலைச் செய்யா.

இவைபோல, நால்வகைத் தேவர் (*5:176*), பரத்தர் (*5:200*), படாதன (*9:7*), பந்தம் (*10:213*), கோடு (*11:20*), சோவரணம் (*17[35]:3*), வாய்வதின் வந்த குரவை(*18*:பா)என்பனவற்றிற்கும் நல்லார் எழுதிய உரையே பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமைகின்றன (அட்டவணை பார்க்க).

2. இரண்டாவதாக அமையும் பகுதி அரும்பதவுரை சிறக்க அமைவதைத் தொகுத்துக் கூறும். இதன் கீழ் ஏழு உரைவேறு பாடுகள் அடங்குகின்றன. இங்கு முதற் கண் அமையும் கன்றிய காவலர் (பதி:*29*) என்பதற்குக் 'காவலில் தழும்பியவர்' என்று அரும்பதவுரையாரும், 'முன்னர்த் தீது செய்யாக் காவலர்' என்று நல்லாரும் உரை கூறுகின்றனர். இங்கு நல்லார் உரைப்படி நோக்கும்போது முன்னர்த் தீது செய்யாக் காவலர் இப்போது தீது செய்கின்றனர் எனப் பொருள்படுகிறது. கோவலனைக் கொலை செய்வதால் இவர்கள் தீது செய்கின்றனர் என்பது நல்லார் கொள்கை. ஆயின் இங்குத் தீது செய்தவன் அரசனே. காவலர்கள் தங்கள் கடமையைச் செய்கின்றனர். இதனுல் அவர் களுக்கும் தீது ஓரளவு சேர்கிறது என்ருலும், இது அவர்கள் நினைந்து செய்ததில்லை. எனவே தீதினை அவர்களுக்கு ஏற்றுதல் அவ்வளவு சிறப்பாக இல்லை. இங்கு அரும்பதவுரை இத்தகைய முரணுக்கு இடனுகாது சிறப்புறுகின்றது.

பஞ்சபரமேட்டிகள் பற்றிக் கூறுமிடத்து (அட்:*15*) ஐவரில் ஒருவர்க்கு 'ஆசாரியர்கள்' என்று அரும்பதவுரையும் 'ஆசிரியர்' என்று நல்லாருரையும் பெயர் கூறுகின்றன. ஐவரில் ஒருவர் 'உபாத்தியாயர்' உபாத்தியாயரும் ஆசிரியரும் பொருள்நிலையில் ஒன்றே. ஆசிரியருக்கு இணையான வடமொழிச் சொல்

'உபாத்தியாயர்' என்பதே. எனவே 'ஆசிரியர்' என்பதைவிட 'ஆசாரியர்' என்று கூறுவதே பொருத்தமுடையதாகத் தோன்று கிறது.

மருதினடந்து (12:23:3) என்பதற்கு 'மருதிடை நடந்து' என அரும்பதவுரையார் உரை கூறுகிறார். நல்லார் 'மருதின் மீதே நடந்து' என உரை எழுதுகிறார். இங்கு விளக்கப் படுகின்ற கதையாவது: ஆயர்பாடியில் கண்ணன் வளரும்போது அவனை யசோதை உரலில் பிணிக்கிருள். அதனை இழுத்தவாறே மரங்களின் இடையே புகுந்து அவற்றை வீழச் செய்கிருன். எனவே மருதினடந்து என்பதற்கு 'மருதிடை நடந்து' என அரும்பதவுரையார் கொள்ளும் பொருளே சிறப்புடையதாகிறது.

நாள்வழிப்படூஉ மடிசில் (16:19-20)-காலத்தே ஆக்கும் அடிசில். இது அரும்பதவுரை. நல்லார் 'பகற்பொழுதே உண்ணும் அடிசில்' என்கிருர். கோவலன் சாவகநோன்பி யாகலின் இரவு உணவு கொள்ளான். எனவே அதிகாலை அடிசில் ஆக்குதற்கு மாலையே அதற்குரிய பொருட்கள் பற்றிப் பேச்சு எழுந்தது எனலாம். 'பகல்' என்பது பொதுநிலையில் காலை முதல் மாலை வரையுள்ள நேரத்தைக் குறிக்குமாயினும், சிறப்பு நிலையில் நண்பகலையே குறிக்கும். எனவே நல்லார் 'பகற்பொழுதே உண்ணும் அடிசில்' என்று கூறுவது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை. மேலும் அவ்வுரையில் காலம் பற்றிய தெளிவும் காணப்படவில்லை. எனவே இவ்விடத்திற்குக் 'காலத்திலே அதாவது அதிகாலையில் ஆக்கும் அடிசில்' என்ற அரும்பதவுரை பொருந்தி அமைகிறது. இதற்கு,

'வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டா டழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டா ளவன்றன்னைக் காணுக் கடுந்துயரம்' (19:35-38)

என்னும் ஊர்சூழ் வரியும் சான்ருக அமைகின்றன.

கொலைக்களக்காதையில் கோவலன் வாயிலாகக் கண்ண கியின் கற்புச் சிறப்பைக் குறிக்கும் அடிகள், 'நல்லோ ரேத்தும் பேணிய கற்பு' (16:86-87) என்கிருர். இங்கு 'நல்லோர்' என்ப தற்கு' 'மகளிர்' என்று நல்லாரும், 'நல்லோர்' என அரும்பத வுரையாரும் கூறுகின்றனர். இங்கும் 'மகளிரால் ஏத்தப்படும் கற்பு' என்று கூறுவதை விட நல்லோரால் ஏத்தப்படும் கற்பு என்று கூறுவதே சிறப்பாகத் தோன்றுகிறது. இங்ஙனம் அரும் பதவுரை ஏழிடங்களில் அடியார்க்கு நல்லார் உரையைக் காட்ட லும் சிறப்பாகவும் பொருத்த முடையதாகவும் அமைகின்றது.

3. மூன்ருவதாக அமைவது இருவருரையும் சிறப்பாக அமைகின்ற இடங்கள். இவ்வகையில் பத்து உரைவேறுபாடுகள் அமைகின்றன. இவற்றிற் பல தெளிவுபடக் கிடத்தலின் விளக்க வேண்டிய தேவை யில்லாது போகின்றது. இவ்வகையில் குறிப்பிடத்தக்கன இரண்டு. ஒன்று நெறியி னீங்கியோர்' (14:17) என்பதற்கு இருவரும் தருகின்ற உரை; மற்றது கடம்பூண்டு (15:2) என்பதன் உரை. மதுரைப் புறஞ்சேரி யடைந்த கோவலன் தன் இனத்தவரைக் கண்டு சிலம்பை விற்றுவர முற்படுகிருன். அதுவரைக் கண்ணகியைக் கவுந்திபால் அடைக்கலப் படுத்து கிருன். இவ்விடத்துக் கோவலன் தன் தவற்றுக்காக வருந்து கிருன். நெறியி னீங்கிய தன் இழிதகைமையைக் கவுந்திக்குக் கூறி இரங்குகிருன். இங்கு 'நெறியி னீங்கியோர்' என்பதற்கு இல்லற நெறியின் நீங்கிய வேசையர் பதிகள்' என எழுதுகிருர் அரும்பதவுரையார். இதற்குச் சான்று பகர்வது போல, 'குரல் வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு, திரிதரு மரபிற் கோவலன் போல' (5:200-201) என்ற இளங்கோவின் கூற்று அமைகின்றது. இனி அடியார்க்கு நல்லார், 'ஒழுக்கத்தினின்று நீங்கினேர்; ஒழுக்க முடைய விழுக்குடிப் பிறந்தோர் நாணுடை மகளிரொடு நீணெறிச் செல்லார் என்பது கருதி, 'நெறியி னீங்கியோர் நீர்மை யே னுகி' என்ருனென்றுணர்க' என்று கூறுவதும் சூழ்நிலைக்குத் தகப் பொருத்தமாகவே அமைகின்றது.

*'நிலந்தரு திருவி னிழல்வாய் நேமி*
*கடம்பூண் டுருட்டும் கௌரியர்'* (15:1-2)

என்ற வரிகளில் வரும் 'கடம்பூண்டு' என்பதற்கு 'முறைமையை மேற்கொண்டு' என அரும்பதவுரையாரும்' 'முறைமையான் மேற்கொண்டு' என நல்லாரும் பொருள் கூறுகின்றனர். இங்கு அரும்பதவுரைப்படி 'முறைமையை மேற்கொண்டு நேமியை உருட்டும்' என்றும், நல்லாருரைப்படி, 'நேமியை முறைமையான் மேற்கொண்டு செலுத்தும்' என்றும் பொருள் அமைகிறது. இவ்விரு உரையுமே இலக்கிய நயத்துடன் அமைந்து சிறக்கின்றன.

4. நான்காவது வகையில் அடங்குவன இருவர் உரையில் யாருடைய உரை சிறப்பு என்று அறிய முடியாத வகையில் அமையும் உரைவேறுபாடுகள். இவ்வகையில் இருபது உரை வேறுபாடுகள் இடம் பெறுகின்றன. புகைப்பொருள்கள் பற்றிக் கூறுகின்ற போது (5:14) அது ஐந்து வகை என்று அரும்பதவுரையாரும், ஆறு என்று அடியார்க்கு நல்லாரும் குறிப்பிட்டு எடுத்துக் காட்டுப் பாடல்களைத் தருகின்றனர். இதில் எது சரி யென்பது

விளங்கவில்லை. துணங்கைக் கூத்து (5:70), பத்துத்துவர் (6:76), முப்பத்திருவகை யோமாலிகை (6:77), பதாகை (8:27) பற்றி விளக்குகின்ற இவ்விரு உரையாசிரியர்களும் தரும் மேற்கோள் பாடல்களின் அமைப்பு மாறுபடுகின்றது. இவற்றில் நல்லார் கூறும் பாடம் சரியா? அல்லது அரும்பதவுரையார் கூறும் பாடம் சரியா என்று அறிந்து கொள்ள முடியவில்லை. இனி, புகார்க் காண்ட இறுதிக் கட்டுரையில் வரும் 'ஒளியுடைப்பாணி' (புகார்க்: கட்:16) என்பதற்கு வெங்கட் டொலைச்சிய விருந்தின் பாணி (10:131) என அரும்பதவுரையாரும், 'சீரியல் பொலிய நீரல நீங்கப் பாடும் தேவபாணி (3:135) என நல்லாரும் விளக்கம் தருகின்றனர். இதிலும் எது பொருந்துவது? அல்லது இரண்டுமே பொருந்துமா? என்ற ஒரு தெளிவிற்கு வரமுடியவில்லை. இவை தவிர ஆடற்கூத்தியர் (5:50), ஏவற்சிலதியர் (5:51) முதலானவற்றிற்கு இருவரும் வேறுபட்ட உரையினைத் தருகின்றனர். இம்மைக் கின்பம்(11:112) என்பதற்குப் 'பொருள்' என்று அரும்பதவுரை யாரும், 'புகழ்' என்று நல்லாரும் பொருள் கூறுவர். இதில் எது சிறப்பு என்று தெரியவில்லை. 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்கிறார் வள்ளுவர். அதே வள்ளுவர் 'புகழெனின் உயிரும் கொடுக்குவர்' என்கிறார். எனவே இதில் எது சிறப்பு என்று வாதிட்டு வெற்றி பெறுவது அருமை. இங்ஙனம் இருவர் உரையும் மாறுபட்டு அமைவதே ஒரு சிறப்பாகச் சிலப்பதிகாரக் காப்பியத்திற்கு அமைகிறது.

5. ஐந்தாவது வகையில் இருபத்தோரு எடுத்துக் காட்டுக்கள் இடம் பெறுகின்றன. இங்கு அடியார்க்கு நல்லாரைக் காட்டிலும் அரும்பதவுரையார் சொற்களுக்குப் பல்பொருள் கூறுவது தொகுக்கப் பட்டுள்ளன. இப்பகுதியில் சில செய்திகளை மட்டும் குறிப்பிடலாம். வையம் (6:120) பாண்டில் (14:168) என்ற சொற்களுக்குப் பொருள் காண்பதில் அரும்பதவுரையிலிருந்து வேறுபாடு அறிய முடியவில்லை. இரண்டும் ஒன்று என்ற எண்ணம் தோன்றுகிறது. ஆயின் அடியார்க்கு நல்லார் தெளிவாக வையம் என்பதற்குக் 'கொல்லாப் பண்டி' என்றும், பாண்டில் என்பதற்கு 'தேர்வட்டை' என்றும் எழுதுகிறார். இது நல்லார் வெளிப்படையாக உரை வகுப்பதைக் காட்டுகிறது.

அடைக்கலக் காதையில் கோவலன் சிறப்புக்களைப் பாராட்டிய மாடல மறையோன் அவனை 'இல்லோர் செம்மல்' (15:90) எனப் புகழ்கிறான். இதற்கு 'இல்லறத்தார் தலைவன்' என இருவுரையாசிரியரும் பொருள் கூறுகின்றனர். ஆயின் அரும்பதவுரையார் 'வறியோர் தலைவன்' என்ற பொருளுக்கே சிறப்பிடம் கொடுத்து

எழுதுகிறார். இவ்வாறு கொள்வதால் கோவலனின் பண்பு நலன் மேலும் ஒரு படி உயர்கிறது எனலாம். எனவே இங்கு அரும்பத வுரை சிறக்கிறது. இதுபோல 'ஏதிலார் சொன்ன தெவன் வாழி யோ தோழி' (18:15) என்பதிலுள்ள 'ஏதிலார்' என்பதற்கு ஆய்ச் சியர் என்பது இருவுரையாசிரியர்களின் முடிந்த முடிபு. ஆயின் அரும்பதவுரையார் 'ஏதிலார்-நகரிலுள்ளாருமாம்' என்ற பொருளை யும் குறிப்பிட்டுச் செல்கிறார். இங்கு அரும்பதவுரையார் கொண்ட இரண்டாம் பொருளே முற்பொருளினும் சிறப்பாகவும் பொருத்தமாக வும் அமைகின்றது. காரணம் ஊரரவம் கேட்டு வந்தாளிடம் (கோவலன் கொலையுண்டதை அறிந்து வந்தாளிடம்) அவள் சொல்லாடாள் நிற்பக் கண்ணகி இவ்வாறு கேட்கிறாள். எனவே நகரிலுள்ளார் சொன்னது (கோவலனைப் பற்றி) என்ன என்று கேட்டாள் என்று கூறுவதே பொருத்தமாக அமைகின்றது.

அமரர் தருக்கோட்டம் (9:9), ஏனப்படம் (14:172), புதை (15:212), பணை (15:214), மான்மணி (17:[4]:2) என்னும் சொற் களுக்கு அரும்பதவுரையார் சிறப்பாகக் கொள்ளும் பொருளை நல்லார் ஏற்றுக்கொண்டு துணைநிலையாகக் (2-ஆம் நிலையில்) கருதும் பொருளைத் தள்ளிவிடுகிறார். அதுபோல, வாரணம் (10:247), குழியம் (14:171), ஆரணங்காக (15:193), நாட்கொடி (15:217), ஆயம்(16:85), தவ்வை(16:52), தெய்வமுற்றாள்(19:26) என்னும் சொற்களுக்கு அரும்பதவுரையார் துணைநிலையாகக் கொள்ளும் பொருளை ஏற்று, அவர் சிறப்பு நிலையில் கொள்ளும் பொருளைத் தள்ளி விடுகிறார் நல்லார்.

6. அரும்பதவுரையினும் மிகுதிப்பொருள் அடியார்க்கு நல்லார் உரையில் அமைவன ஆறுவதாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவ்வகையில் பதிமூன்று உரைவேறுபாடுகள் இடம் பெறுகின்றன. இவற்றில் அரும்பதவுரையைச் சிறப்புநிலை யில் ஏற்றுத் துணைநிலையில் சில புதுப்பொருள் கூறும் பகுதியும் உண்டு. இவ்வகையில் அகலுள் (1:47), பாசவர் (5:26), தோலின் றுன்னர் (5.32), அறவோர் பள்ளி (5:179), வால்வளை (6:93), நம் பொருட்டால் (19:23) என்னும் சொற்களுக்கு நல்லார் கூறும் உரை அமையும். இங்கு 'நம்பொருட்டால்' என்பதற்கு 'நம்மைக் கெடுத்தற் பொருட்டு' என்று சிறப்பாக இருவுரையாசிரியர்களும் கொள்ளும் பொருள் பொருத்தமாகத் தோன்றவில்லை. கண்ணகி ஊர்சூழ வருவதனைக் கண்ட மதுரை மகளிர்,

> 'செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
> வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொல்' (19:23-24)

என ஐயுறுகின்றனர். இங்கு 'நம்பொருட்டால்' என்பதற்கு நம்மைக் கெடுத்தற்கு என்று பொருள்கொண்டால் அவர்கள் கண்ணகியைப் பாராட்டுகின்றனர் என்று கொள்ளமுடியாது. மேலும் இது கண்ணகிக்கும் ஏற்றம் தராது. எனவே இங்கு, 'இவள் கற்பு நாம் கண்டு பாவித்தற் பொருட்டால்' என நல்லார் இரண்டாம் நிலேயிற் கொள்ளும் பொருளே சிறப்புடைத்தா கின்றது.

இனி அரும்பதவுரையைத் துணைநிலேயில் ஏற்று, புதிய உரை கூறுவதும் நல்லாரிடம் காணப்படுகிறது. இம்முறையில் ஆறு உரைவேறுபாடுகள் அமைகின்றன. இவற்றில் 'வினைத்திறத்து' (பதி:71), 'ஆடகப் பைம்பூ ணருவிலே யழிப்பச், செய்யாக் கோல மொடு வந்தீர்க்கு' (16:10-11), 'கொல்லன் புரிந்துடன் நோக்கி' (16:120) என்னும் பகுதிகட்கு நல்லார் தரும் உரை மிகச் சிறப்பாக அமைகின்றன. இது அவர்தம் திறனாய்வு நெஞ்சத்தைத் தெள்ளி தின் எடுத்துக் காட்டும். மண்ணீட்டாளர் (5:30), காவற் கணிகையர் (5:50) மருகும் (13:31) என்பனவற்றிற்கு இவர்களில் யாருடைய உரை சிறப்புமிக்கது என்பதைத் தெளிவாக அறிய முடியவில்லே.

அரும்பதவுரையை முழுநிலேயில் நீக்கி விடுவதும் ஓரிடத்து அமைகிறது. பதிகத்தில் குன்றவர்கள், கண்ணகி விண்ணகம் நன்னியதைக் 'கட்புலங் காண விட்புலம் போயது இறும்பூது போலும்' (பதி:9-10) எனச் சேரன்செங்குட்டுவனுக்குக் கூறு கின்றனர். இங்குக் 'கட்புலம்' என்பதற்குக் 'கண்ணென்கின்ற இடம்' என அரும்பதவுரையார் எழுதுகிருர். நல்லார் 'கண்ணினது அறிவு; கண்ணென்கின்ற புலமுமாம்' என எழுதுகிருர். இங்கு நல்லார் உரையே மிகப் பொருத்தமாக அமைகின்றது.

7. ஏழாவது வகையில் இரு உரையாசிரியர்களும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் கூறுவது அமையும். இங்கு அரும்பதவுரை யார் ஓர் பொருளேயும், அடியார்க்கு நல்லார் வேறு ஒரு பொருளே யும் சிறப்பாகக் கருதுகின்றனர். இவ்வகையில் பதினேந்து உரை வேறுபாடுகள் இடம் பெறுகின்றன. இவற்றில் 'இட்டுத்தலே யெண்ணும் எயினரல்லது சுட்டுத்தலே போகாத் தொல்குடி' (12:20-21), நெடுமொழி (14:49) பாகடு குழிசி (15:195), ஐயவித் துலாம் (15 213) எல்லா நம் (17:[28]:5) என்னும் பகுதிகட்கு இருவர் எழுதுகின்ற உரையுமே பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமைகின்றன.

இங்கு, 'அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி' (11:17) என்னும் ஓரிடத்து மட்டுமே நல்லார் உரையினும் அரும்பதவுரை பொருத்த முடையதாகத் தோன்றுகிறது. எஞ்சியுள்ள எட்டிடங்களில் நல்லாருரை சிறப்பெய்துவதைக் காணலாம்.

இன்றைய குமரிமுனைக்குத் தெற்கே பல தமிழகப் பகுதிகள் இருந்து கடல்கோளால் அழிந்து பட்டன என்று பண்டு தொட்டுச் செவிவழிச் செய்தியாக நம்பப்பட்டு வருகிறது. இலக்கியங்களும் இதனைக் குறிக்கின்றன. இதனை இளங்கோ வடிகளும்,

*'அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி*
*வடிவே லெறிந்த வான்பகை பொருது*
*பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்*
*குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள'* (11:17-20)

எனக் குறிக்கின்றார்.

இங்குக் கடல் பாண்டிநாட்டுப் பகுதிகளை அழித்ததற்குப் புராணநிலையில் இரு கதைகள் கூறப்படுகின்றன. 1. பாண்டிய மன்னனொருவன் தன் காலால் மிதித்துக் கடலினது அளவை யுணர்த்தியது. 2. வேலால் எறிந்து அதனை வற்றச் செய்தது. பாண்டியன் உக்கிரவன்மன் வேலை எறிந்து கடலை வற்றச் செய்தான் என்று திருவிளையாடல் புராணம் கூறும். இச்செய்திகளையே மேற்கண்ட வரிகள் விளக்குகின்றன எனத் துணியலாம். ஆயின் இதற்கு நல்லார் தரும் உரை இதனைத் தெளிவு படுத்த வில்லை. அவர், 'முன்னொரு காலத்துத் தனது (பாண்டிய அரசனது) பெருமையினதளவை அரசர்க்குக் காலான் மிதித் துணர்த்தி வேலானெறிந்த அந்தப் பழம்பகையினைக் கடல் பொருது பின்னொரு காலத்து அவனது தென்றிசைக் கண்ண தாகிய பஃறுளி யாற்றுடனே பலவாகிய பக்கமலைகளையுடைய குமரிக் கோட்டையும் கொண்டது' என உரை கூறுகிறார். இங்குப் பாண்டிய மன்னன் எதைக் காலான் மிதித்துத் தனது பெருமை யினை அரசர்க்கு உணர்த்தினான்? எதை வேலான் எறிந்தான்? கடலுக்கு அவன்பாலிருந்த பழம்பகைக்குக் காரணம் என்ன? என்பதற்கான விடை தெளிவாக மேற்கண்ட உரையிலில்லை. ஆயின் 'தனது' என்பதற்கு 'அரசன்' எனக் கொள்ளாது 'கடல்' எனக் கொளின் மேற்கண்ட வினக்கட்கு விடை கிடைக்கும். எனவே 'அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி' என்பதற்குக் 'கடலினளவை அடியாலே இன்ன அளவினது இதுவென்று அரசர்க்குக் காட்டி' என அரும்பதவுரையார் எழுதுவது தெளி வாக அமைகின்றது.

இனி அரும்பதவுரையைக் காட்டிலும் நல்லார் உரை சிறப்புப் பெறுகின்ற எட்டு இடங்களும் தெளிவாகவே அமைந்து கிடக்கின்றன. இவற்றை அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள இருவர் உரையைப் பார்த்த அளவிலே உணர்ந்து கொள்ள முடியும். சிலவற்றை இங்குக் காணலாம்.

அரியா யோகம் (14:170) என்பதற்கு 'வியாதிகட்குக் கொடுக்கும் மருந்து' என அரும்பதவுரையாரும், 'கருவி விலக்காகப் புனைந்த அரைப்பட்டிகை' என நல்லாரும் உரை கூறுகின்றனர். இச்சொல் வருகின்ற சூழ்நிலையை நோக்க நல்லார் உரையே பொருத்தமாகத் தோன்றுகிறது. மதுரையின் 'அங்காடி வீதி' வருணனையில் பல்வேறு பொருள்பற்றிக் கூறும் இளங்கோ வடிகள்,

> 'மெய்புகு கவசமும் வீழ்மணித் தோட்டியும்
> அதள்புனை யரணமு மரியா யோகமும்
> வளைதரு குழியமும்' (14:169-171)

பற்றிக் கூறுகிறார். இங்கு அனைத்தும் போர்க்கருவிகளாக அமைதலின் 'அரியா யோகம்' என்பதற்கு 'அரைப்பட்டிகை' என்பது பொருத்தமாகிறது.

துன்பமாலை முடிவில் 'சாயலால்...வந்தாள்' (18:2,7) என்பதற்கு 'ஐயை' என்று அரும்பதவுரையும், வேறொருத்தியென நல்லாருரையும் கூறும். ஆய்ச்சியர் குரவையில் மாதரி தன்மகள் ஐயையை நோக்கிக் 'குரவை யாடுதும் யாம்' (17:[5]) என்றலின் ஐயையும் ஆடலில் கலந்து கொண்டிருக்க வேண்டும்; எனவே ஊரரவங் கேட்டு வந்தாள் ஐயை அல்ல என்பது தெளிவு. ஆகலின் நல்லார் உரை இங்குப் பொருந்துகிறது.

இங்ஙனம் ஏழுநிலைகளில் இருபெரு உரையாசிரியர்களின் உரைவேறுபாடுகள் அமைந்து சிலம்பின் இலக்கியச் செவ்வியை எழில்பெறச் செய்கின்றன (பின்னிணைப்பு-II காண்க.)

*பாடபேதம்*

அடியார்க்கு நல்லாருக்கும் அரும்பதவுரையாருக்கு மிடையே கிட்டத்தட்ட 95 பாடபேதங்கள் காணப்படுகின்றன. இவை மூன்று வகையில் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன. 1. உரைநிலையில் வேறுபடாதன. 2. உரையில் வேறுபடுவன. 3. பாடபேதம் இதுவெனக் காட்டப்பெறாது உரை கொண்டு அறியப்படும் பாடபேதங்கள்.

பொருளளவில் வேறுபடாத பாடபேதங்கள் நாற்பத்து ஏழு. இப்பாடபேதங்களில் அடியார்க்கு நல்லார் கொண்டுள்ளவற்றையே பதிப்பாசிரியர் உ.வே.சா. அவர்கள் மூலநூற்பதிப்பில் ஏற்றுக் கொண்டுள்ளார். அடியார்க்கு நல்லார் கொண்டுள்ள பாடமே சிறப்பு எனக் கருதி இப்பதிப்பை டாக்டர் உ.வே.சா. அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள் எனத் தோன்றுகிறது. அல்லது அவருக்குக் கிடைத்துள்ள மூல ஏடுகளில் நல்லார் கொண்டுள்ள பாடமே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இதனுல் அரும்பதவுரையார் கொண்டுள்ள பாடங்களனைத்தும் குறை யுடையன; அல்லது பொருந்தாதன என்று கொள்வதற்கில்லை. இங்கு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள நாற்பத்தேழு பாட பேதங்களில் பல இரு உரைநூலார் கொண்டுள்ளவையும் பொருத்தமாகவே அமைகின்றன. சிலவிடங்களில் அரும்பத வுரையார் கொள்ளுகின்ற பாடம் செய்யுளோசை மிக்கு அமை வதைக் காணலாம்.

1. 'இலைப்பூங் கோதை யியல்பினின் வழாமைத்
தலைக்கோ லெய்தி' (3:160-61)

என்ற அரங்கேற்று காதை வரியை,

'இலைப்பூங் கோதை யியல்பினின் வழாஅது
தலைக்கோ லெய்தி'

என அரும்பதவுரையார் பாடம் கொண்டு பதிப்பிப்பின் ஓசை நயம் சிறப்பாக அமையும் என்ற எண்ணம் எழுகின்றது.

2. 'மரகத மணியொடு வயிரங் குயிற்றிப்
பவளத் திரள்கற்' (5:147-48)

என்ற வரியை,

'மரகத மணியொடு வயிரங் குயிற்றிப்
பவளத் திரள்கால்'

எனப் பதிப்பிக்கலாம்.

3. 'சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினை' (6:99) என்னும் பாடத்தினும் 'சங்கிலி நுண்டொடர் நுழைவினை நுண்ஞாண்' என்ற பாடம் மோனைச்சிறப்புப் பெறுகின்றது.

4. 'மொழிபெயர் தேத்தோர்' (6:143) என்பதினும் 'மொழி பெயர் தேஎத்தோர்' என்பது ஓசைநயம் சிறக்க அமைகின்றது.

5. 'தூமயி ரன்னமுந் துணையெனத் திரியும்' (10:6) என் பதினும் 'தூமயி ரன்னமுந் துணையெனத் திரிதரும்' என்பதில் கவிதைத் தன்மை சிறக்கின்றது.

6. 'உள்ளு மூரலும் புள்ளும் புதாவும்' (10:117) என் ஓரிடத்து மட்டும் அரும்பதவுரையார் பாடம் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. இவ்விடத்திற்குப் 'போதா' என்ற பாடம் இசைச் சிறப்புப் பெருமையே இதற்குக் காரண மெனலாம்.

7. 'குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்து' (6:86) என்ற இடத்துச் 'செறிதிரள்' என்ற சீரிலுள்ள 'திரள்' என்பதைப் பிரித்துக் 'குறங்கினில்' என்னும் சீரோடு இணைத்துப் பொருள் கொள்ள வேண்டியுள்ளது. இன்றேல் பொருள் தெளிவு கிடைப்ப தில்லை. ஆயின் இவ்விடத்திற்குக் 'குறங்கு செறியணி' என்ற பாடத்தை மேற்கொள்வோமாயின் எவ்விதப் பொருள் மயக்கமும் ஏற்படாது.

8: 'நாக நாலு நரந்தை நிரந்தன' (12:[2]) என்பதை விட 'நாக நாறு நரந்தை நிரந்தன' என்பதில் பொருட்டெளிவும் மயக்கமின்மையுங் காணப்படுகின்றது.

இங்ஙனம் இவ்விருவர் பாடங்களை நோக்குகின்ற போது சில எண்ணங்கள் தோன்றுகின்றன. நிலைஇய (1:17) என்பதற்குப் பதில் 'நிலைஇயர்' என்ற பாடத்தைக் கழகப்பதிப்பு (சோம சுந்தரனா் உரை) ஏற்றுக் கொள்கிறது. எனவே பதிப்புத் துறையில் புலமை பெற்றோர் இவர்தம் பாடபேதங்களை மேலும் ஆராயின் மூலநூலிற் சில மாறுதல்களும் தோன்றலாம். ஆயின் இத்தகைய மாற்றங்களைச் செய்கின்ற போது பல்வேறு ஏட்டுப் பிரதிகளையும் ஒப்பு நோக்குதல் வேண்டும்.

இனி இப்பாடவேறுபாட்டில் இரண்டாவதாக அமைவது உரை வேறுபடுகின்ற பாடபேதங்கள். இவ்வகையில் இருபத் தொன்பது பாடபேதங்கள் இடம் பெறுகின்றன. இவற்றில் இருவர் பாடங்களுமே சிறப்பாகக் கொள்ளத் தக்கன பதினான்கு (48, 50, 53, 54, 55, 58, 62, 63, 66, 67, 68, 69, 71, 74). மூன்றிடங்களில் அரும்பத வுரையார் பாடமே சிறப்பாகத் தோன்று கின்றன (49, 51, 60). எஞ்சிய பாடங்கள் நல்லார் கொள்வதே சிறப்புறுகின்றன.

1. அடியார்க்கு நல்லார் பாடமே சிறக்கின்ற இடங்கள் சில வற்றை இங்கு நோக்குவோம். கனுத்திற முரைத்த காதையில் மாலதியின் துயர் தீர்க்க மகவாகிய பாசண்டச்சாத்தன் வளர்ந்து

தந்தை தாயர்க்கு வேண்டுங்கடன் கழித்து மனைவி தேவந்திக்கும் தன் மூவா இளநலங்காட்டிப் பிரிகிருன். இதனை,

...... .. .. ....'தந்தைக்கும்
தாயர்க்கும் வேண்டுங் கடன் கழித்து மேயநாள்
தேவந்தி யென்பாள் மனைவி யவளுக்கு
...... ...... ...... ......
நீவா வெனவுரைத்து நீங்கலும்' (9:31-36)

என்கிருர் அடிகள். இங்கு 'மேயநாள்' என்பதற்குப் 'பின்னெரு நாள்' எனப் பொருள்கொண்டு 'தன் தந்தை தாயர் கடனைக் கழித்த சாத்தன் பின்னெரு நாள் தன் மனைவி வேந்திக்கும் தன் தெய்வீக வுருக்காட்டி நீங்குகிருன்' எனப் பொருள் முடிபு காட்டுகிருர் நல்லார். இவ்விடத்திற்கு 'மேவினுள்'- 'மேயினவள்' என்னும் பாடம் கொண்டால் பொருள் தொடர்பு விட்டுப் போகிறது. அரும்பதவுரையார் கூற்றுப்படி 'மேவினுளாகிய தேவந்தி' எனக் கொண்டால் பொருள் தெளிவற்றுப் போகிறது.

2. வேட்டுவ வரியில் 'அணங்கு முன்னிறீஇ' (12:42) என்ற பாடமே 'அணங்கு மெய்ந்நிறீஇ' என்னும் பாடத்தினும் சூழ்நிலைக் கேற்பப் பொருந்தி அமைகின்றது. கொற்றவை யுருக் கொண்ட மகளைக் கலைமேல் ஏற்றி (12:32) வண்ணம், சுண்ணம் முதலானவற்றை எயிற்றியர் கொற்றவை யுருக்கொண்டாட்குப் பின் ஏந்தி வருகின்றனர் (12:36-39) எனக் குறிப்பர் இளங்கோ. ஆகலின் நல்லார் உரைப்படி, ஆறெறி பறை, சூறைச் சின்னம் முதலானவற்றை அணங்கு (கொற்றவை உருக் கொண்டாட்கு) முன் நிறுத்தினர் எனக் கொள்வது சூழ்நிலைக்குப் பொருந்துகிறது. அதே நேரத்து முன்னதைப் போல இவ்விடத்து அரும்பதவுரையார் பாடம் முற்றிலும் பொருத்தமற்றது என்று கொள்வதற்கில்லை. இங்கு ஆறெறிபறை, சூறைச் சின்னம் முதலானவற்றை முழங்கச் செய்து கொற்றவை உருக் கொண்டாளைத் தெய்வத்தன்மையுறச் செய்தனர் என்றும் பொருள் கொள்ளலாம். இன்றும் விழா நாட்களில் ஒருவர் மேல் தெய்வத் தன்மையை ஏற்ற ஓசைப்பட இசைக் கருவிகளை முழக்குவது வழக்கில் இருக்கின்றது.

3. பொருள்நிலையில் 'வேய் வில்' (12:[7]), 'ஏவில்' என்ற இருபாடமும் பொருந்தினும் 'வேய்வில்' என்பது செய்யுளிசைக்குப் பொருந்தி அமைகிறது. காரணம் இப்பாடலில் வரும் முதல் மூன்று அடியின் தொடக்கமும் 'பாய்கலை', 'ஆய்தொடி' என எதுகை நயம்பட அமைகின்றன. எனவே நான்காவதடியிலும் 'வேய்வில்' எனக் கொள்வது சிறப்பாக அமைகின்றது.

4. அடைக்கலக் காதையில் மதுரை மதிலகத்துப் பொறிக்கப் பட்ட பல்வேறு பொறிகளைப் பற்றிக் கூறுகின்ற ஞான்று 'கருவிர லூகமும், (15:208) எனக் குறிப்பிட்ட அடிகள், இங்குக் 'கருவிரல்' என்பதற்கு 'கரிய விரல்' எனப்பொருள்கொண்டு, இவ்விரலை யுடைய குரங்குப்பொறி என உரை கூறுகிறார் நல்லார். இதற்கு அரும்பதவுரையார் பாடத்தை ஏற்பதாயின் வெற்றிக் கொடியை யுடைய குரங்குப்பொறி எனக் கொள்ளல் வேண்டும். இது அவ்வளவு பொருந்துவதாக இல்லை.

5. கொலைக்களக் காதையில் தன்மனைவி சமைக்க உண்டு மகிழ்ந்த கோவலன் அவளைத் தழுவிக் கொண்டு தன் பழைய செயலுக்காக இரங்குகிறான். இங்குக் கோவலன்,

'வறுமொழியாளரொடு வம்பப் பரத்தரொடு' (16:63)

எனத் தொடங்குவான். இங்கு 'வம்பப் பரத்தர்' என்பதற்கு 'வம்ப மாந்தர்' எனப் பாடங் கொள்கிறார் அரும்பதவுரையார். ஆயின் கோவலனின் ஒழுக்கத்தை முன்னொரு இடத்தில்,

'குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபிற் கோவலன் போல' (5:200-201)

எனக் குறிப்பிடுகிறார் இளங்கோ வடிகள். எனவே மேற்கண்ட இடத்திற்கு 'வம்பப் பரத்தர்' என்ற பாடமே பொருந்தும்.

6. துன்பமாலையில் 'தஞ்சமோ தோழி' (18:20) என்பதற்குத் 'தஞ்சமோ காணேன்' எனப் பாடங்கொள்கிறார் அரும்பதவுரை யார். இங்கு இவ்வரியின் அடுத்த இரு சீர் 'தலைவன் வரக் காணேன்' என்பது. எனவே அரும்பதவுரையார் பாடத்தின்படி ஒரே வரியில் 'காணேன்' என்ற சொல் ஈரிடத்து அமைகின்றது. இது அவ்வளவு இலக்கியச்சுவை பயப்பதாக இல்லை.

இவைபோல, 'நறுந்தா துறைப்ப' (5:235), 'நறும்பூ வாளியி னல்லுயிர் கோடல்' (8:62), அருந்தெறற் கடவுள் (13:137), பொத்தி (14:122), தம்பாற் பயன் (16:27), (உருகா) உருகும் (17:[3]) என நல்லார் கொள்ளுகின்ற பாடங்கள் அரும்பதவுரையினும் சிறக்க அமைவதை அவ்வப் பகுதி உரை கொண்டும் சூழ்நிலை கொண்டும் தெளியலாம்.

இனி அரும்பதவுரையார் பாடங்கள் சிறக்க அமையும் இடங் கள் வருமாறு :

1. அந்திமாலைச் சிறப்புச் செய்காதையில் காதலர்ப் புணர்ந் தோர் களிமகிழ்வு கூறும் அடிகள்,

'ஆவியங் கொழுந ரகலத் தொடுங்கிக்
காவியங் கண்ணாற் [ர்] களித்துயி லெய்த' (4:45-6)

எனக் குறிக்கின்றார். இங்குக் 'காவியங் கண்ணல்' எனப் பாடங் கொண்ட நல்லார் 'கொழுநர் மார்பிடத்துக் காவிபோலும் கண்மலர் களைப் பொருந்த வைத்து (மகளிர்) அனந்தல் கூட' என உரை கூறுகிறார். இங்குக் 'காவிபோலுங் கண்களையுடைய மகளிர் கொழுநர் மார்பிடத்தே ஒடுங்கிக் களித்துயில் எய்தினர்' எனக் கொள்வது சிறப்பெனத் தோன்றுகிறது.

2. புகார் நகர வீதி வருணனை கூறும் அடிகள், பரத்தையர் திரிதரும் வீதியையே மிகுதியும் படைக்கிறார். இப்பரத்தையர் மார்பில் எழுதிய கோலம் மைந்தரின்மெய்ம்முழுவதும் உற அதனால் அவர்தம் இல்லுறை மனைவியர் ஊடுகின்றனர். இங்குப் பரத்தையர் மார்பில் எழுதிய கோலத்தை 'எழுதுவரி[க்] கோலம்' (5:226) என அடிகள் குறிக்கின்றார். நல்லார் இதனை 'வரி கோலம்' என வினைத் தொகையாகக் கொண்டு 'எழுதிய தொய்யில்' எனப் பொருள் கொள்ளுகிறார். அவ்வாறாயின் 'எழுதிய' என்ற சொல் பொருளற்றுப் போம். ஆகலின் 'வரிக்கோலம்' (வரியையுடைய கோலம்–தொய்யில்) எனக்கொள்வதே முன்னதைக் காட்டிலும் சிறப்பாக அமைகின்றது. இதுபோன்றே வேட்டுவ வரியில் 'மலர்[ப்]பலி பீடிகை' (12:43) என்பதையும் வினைத்தொகை யாக்கி 'மலர்ந்த பலிபீடம்-விரிந்தபீடம்' என உரை கொள்கிறார் நல்லார். இங்கும் அரும்பதவுரையார் கொள்வதே (மலர்ப்பலிபீடிகை-மலர்கள் நிறைந்த பலிபீடிகை-கோட்டம்) பொருத்தமாகத் தோன்று கிறது. இங்ஙனம் அரும்பதவுரையார் பாடம் மூன்றிடங்களில் சிறப்புறுகின்றது.

மூன்றாவது வகையில் அமையும் பாடபேதங்கள் உரையால் உய்த்துணரக் கூடியன. இவ்வகையில் பதினேழு பாடபேதங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றைப் பாடபேதங்களாகப் பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே.சா. அவர்கள் குறித்துச் செல்கின்றார். இவற்றிற் சிலவற்றைப் பாடபேதங்களாகக் கொள்வதற்குச் சிறிது தயக்கம் ஏற்படுகிறது. காரணம் ஒரே சொல்லுக்கும் தொடருக்கும் வெவ் வேறு விதமாக இவ்விரு உரையாசிரியர்களும் உரை கூறியதை முன்னர்க் கண்டோம். இவற்றையெல்லாம் நாம் பாடபேதமாகக் கொள்வதில்லை. எனவே இங்கு வகைப்படுத்தப் பட்டுள்ள பாட பேதங்களில் சில ஐயத்திற் கிடனானவை.

1. 'குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத்[] தும்பி வாய்வைத் தூத' (4:15-16)

என்பதற்குக் 'கோவலர் ஊதும் குழலிலும், வளர்கின்ற முல்லையிலும் கோவலரும் தும்பியும் வாய்வைத்து ஊத' என அரும்பதவுரையாரும், 'குழலிலே வளர்கின்ற முல்லையென்னும் பண்ணிலே கோவலரும், குழலிலே வளர்கின்ற முல்லை மலரிலே தும்பியும் வாய் வைத்து ஊத' என நல்லாரும் பொதுப்பொருள் கூறுகின்றனர். இவ்விருவருக்கும் பொதுவாக அமைகின்ற மேற்கண்ட பொருளுரையைத் தவிரக் 'கோவலர் குழலி னுண்டாகிய முல்லைப் பண்ணை, —.பூவிலே தும்பி வாய்வைத்து ஊத' என்று வேறு ஒரு பொருளைத் தருகிறார் அரும்பதவுரையார். இதனைப் பாடபேதமாகக் குறிப்பர் டாக்டர் உ.வே.சா. இதனைப் பாடபேதமாகக் கொள்ளுகின்ற போது,

'குழல்வளர் முல்லையைக் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத'

எனக் கொள்ளவேண்டும்.

2. 'சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கு மருவூர்ப் பாக்கமும்' (5:38-39)

என்ற வரிகட்கு அரும்பதவுரையார் கூறும்பொருளை நோக்க, அவர் கொண்ட பாடம் 'சிறுகுறு கைவினைப் பிறவினை யாளரொடு' என்பதே எனத் தெளியலாம்.

3. 'பெருநில மன்ன னிருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி' (5:71-73)

என்பதற்கு இருவரும் கொள்ளும் பொருள் வேறுபடுகிறது. நல்லார் பசி முதலான நீங்கலையும் வசி முதலான சுரத்தலையும் மன்னனின் நிலத்திற்கு ஏற்றிக் கூறுகின்றார். அரும்பதவுரையார் பசி முதலான் நீங்கலை நிலத்திற்கும் (நாடு) வசி முதலான சுரத்தலை மன்னனுக்கும் உடைமையாக்குகிறார். இதனை உரைவேறுபாடாகக் கொள்வதினும் பாடபேதமாகக் கொள்வது சிறப்பெனத் தோன்றவில்லை.

4. 'அறவோர் பள்ளியு மறனோம் படையும்
...... ......செயல்சிறந் தொருபால்' (5:179-81)

என்பதன் உரை வழி அரும்பதவுரையார் கொண்ட பாடம் 'அறவோர் பள்ளியி னறனோம் படையும்' என்பதாக இருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. மேலும் இதுவே பொருத்த முடையதாக இருக்க வேண்டுமென்ற எண்ணமும் எழுகிறது. காரணம் அடுத்தமையும் 'புறநிலைக் கோட்டத்து' என்னும்

தொடரமைப்பு. நல்லார் பாடத்தின்படி கொண்டால் இது 'புறநிலைக் கோட்டமும்' என்றிருக்க வேண்டும். இதற்கு மாருகப் 'புறநிலைக் கோட்டத்து' என்பதை நல்லார் ஏற்றுக் கொண்டுள்ளாராகலின், 'அறவோர் பள்ளியும்' என்பதும் 'அறவோர் பள்ளியின்' என்றிருக்க வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது.

5. உருவி லாள னொருபெருஞ் சேனை
இகலம ராட்டி(யை) யெதிர்நின் றுவிலக்கியவர்
எழுதுவரி(க்) கோல முழுமெயு முறீஇ
விருந்தொடு புக்க பெருந்தோட் கணவர்' (5:22-427)

என்ற வரிகளிலுள்ள செயல்நிகழ்ச்சி நல்லார் உரைப்படி பரத்தைக்கும் பெருந்தோட் கணவருக்கும் பொருந்துகிறது. அஃதாவது மைந்தரைப் போகவிடாது தடுத்துப் புணர்தல் பரத்தையர் செயலாகவும், அதன் காரணமாக அவர்தம் எழுதுவரிக்கோலத்தைத் தம் மெய்யில் தாங்கி இல்லம் புகல் பெருந்தோட் கணவர் செயலாகவும் அமைகின்றன. ஆயின் அரும்பதவுரைப்படி செயல் பெருந்தோட் கணவருக்கு மட்டுமே ஏற்றிக் கூறப்படுகிறது. அதாவது இகலமராட்டியாகிய பரத்தையரை எதிர்நின்று விலக்கி அவர் எழுதுவரிக் கோலத்தை மெய்ம்முழுவதும் பெற்றுத் தம் மனைவியர் கொள்ளும் ஊடற்கு அஞ்சி விருந்தொடு புகுகின்றனர் கணவர். இங்ஙனங் கூறுவது முன்னதைக் காட்டிலும் பொருட் சிறப்பும் தெளிவும் கொண்டுள்ளது எனலாம்.

6. 'மலரணி விளக்கத்து மணிவிளக் கெடுத்தாங்கு' (6:123) என்பதற்கு அரும்பதவுரையார் கூறும் உரைகொண்டு அவர் கொண்ட பாடம் இன்னதுதான் எனத் தெளிவாக உணர முடியவில்லை. இங்கு நல்லார் கொண்ட பாடமே சிறக்கிறது.

7. 'புலவூண் டுறந்து பொய்யா விரதத்
தவல நீத்தறிந் தடக்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமியோர்' (10:15-17)

என்பதில் வரும் 'அடக்கிய' என்ற சொற்கு 'அடங்கிய' எனப் பாடங்கொண்டுள்ளார் அரும்பதவுரையார் என்பது தெரிகிறது. இங்கு நல்லார் கொண்டுள்ள பாடமே பொருட் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் எய்தி நிற்கிறது.

8. 'முதிர்தேம் பழம்பகை முட்டினு முட்டும்' (10:73) என்பதற்கு அரும்பதவுரையார், 'முதிர்தேம் பழம்பகை முட்டினு முட்டுவர்' எனக்கொள்கிருர். இப்பாடத்தை நல்லாரும் குறிப்பிடுகின்ருர். இப்பாடம் மூலம் வினையை வழிச்செல்வார் மேல்

ஏற்றி மொழிதல் பொருத்தமாக அமையவில்லை. காரணம் வழிப் பயணத்தின் போது ஏற்படுகின்ற துன்பத்தை முன்னும் பின்னும் 'காட்டினுங் காட்டும்' (10:71), பரற்பகை யுறுக்கும் (10:75) என வழிபடுபொருள்மேல் வினையை ஏற்றிக் கூறுகின்றார் இளங்கோ வடிகள். எனவே ஈண்டும் 'பழம்பகை முட்டினும் முட்டும்' என நல்லார் ஏற்றுக் கொள்ளும் பாடமே பொருத்தமாகவும் பொருட் சிறப்பு மிக்கும் அமைகின்றது.

9. 'செங்கதிர்...அறிவன்' (11:`-4) என்பதற்கு அமையும் அரும்பதவுரை கொண்டு அரும்பதவுரையார் கொண்டுள்ள பாடத்தைத் தெளிவாக உணர முடியவில்லை. இதனைப் பாடபேத மாகக் கொள்ளாது உரைவேறுபாடாகவும் கொள்ள இடமுண்டு. இதேபோன்றுதான் அடுத்து அமைவதும் (11:5?). இங்குக் 'கவற்ற' என்பதற்குப் பதில் 'கலக்க' என்ற பாடத்தை அரும்பத வுரையார் கொண்டுள்ளார் என்று வேண்டுமானால் கூறலாம். இதனால் மிகுந்த சிறப்பு இல்லை.

10. 'என்றூழ் நின்ற குன்று' (14:1?1) என்பதற்கு அரும் பதவுரையார் கொண்டுள்ள பாடம் 'என்றூழ் நீடிய குன்று' என அவர் உரைவழி ஊகிக்கலாம். இது போன்று 'ஏழ்வகை நிலத்தினு மெய்திய விரிக்கும்' (14:153) என்பதற்கு 'எழுவகை நிலத்தினு மெய்திய வரிக்கும்' எனப் பாடங்கொள்கிறார். இவ்விரு பாடங் களில் யாருடைய பாடம் சிறப்பு என்பது தெரியவில்லை.

11. 'பூச வுருவிற் பொலந்தெளித் தனையவும்' (14:188) என் பதற்கு அரும்பதவுரையார் கொண்டுள்ள பாடம் தெளிவாக விளங்கவில்லை. உரையைக் கொண்டு 'பூச வுருவிற் பொலந் தேய்த் தனையவும்' என்பது பாடமாக இருக்குமோ என்ற எண்ணம் எழுகின்றது. ஆயின் 'பூச வுரு' என்பதற்கு 'பூசத் தினது உரு' எனவும் 'பூனைக்கண்' எனவும் நல்லாரும், அரும்பத வுரையாரும் கொள்வது உரை வேறுபாடாகவே கொள்ளத் தக்கது. இங்கு அரும்பதவுரையே பொருத்தமாக அமைகிறது என்லாம். காரணம் பூனையினது கண்ணுக்கும் பொன்னுக்கும் மிகுந்த ஒப்புமை (நிற அளவில்) இருப்பதை நாமறியலாம்.

12. 'போற்று வொழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்று வுள்ள வாழ்க்கையே னுதலின்' (16:81-82)

என்பதற்கு உரையளவிலே நல்லாரும் அரும்பதவுரையாரும் சிறிது வேறுபடுகின்றனரே யன்றி இங்குப் பாடபேதம் இருப்ப தாகத் தோன்றவில்லை. 'உம்முடைய வார்த்தையைச் சிறிதும்' என்ற தொடரே நல்லார் உரையில் புதிதாக இணைக்கப்

பட்டுள்ளது. இதனைப் பாடபேதமாக டாக்டர் உ. வே. சா. அவர்கள் குறித்ததற்குக் காரணம் புலப்பட வில்லை.

13. 'எறிதொறுஞ் செறித்த வியல்பிற் காற்ருன்' (16:197) என்பதில் 'இயல்பிற் காற்ருன்' என்ற தொடருக்கு 'அதற்கு அரற்ருனாய்' என நல்லார் உரை காணுகின்ருர். இதற்கு அரும்பத வுரையார் 'அதிலே அலசிப் பின்பு' என உரை கூறுகிருர். எனவே இங்கு அரும்பதவுரையார் கொண்டுள்ள பாடம், 'எறி தொறுஞ் செறித்த வியல்பினை ஆய்ந்து' என இருக்க வேண்டும். இது முற்றிலும் பொருந்துமென்று கூறுதற்கில்லை.

14. ... ... ...'ஆற்றவும்
வன்பழி தூற்றுங் குடியதே மாமதுரை[க்]' (19:27-28)

என்பதற்கு அரும்பதவுரையார் கொண்டுள்ள பாடம் இதுவெனத் தெளிவாகத் தெரியவில்லை. 'மிகவும் மன்னவனைப் பழி தூற்றுங் குடியது மதுரையென முற்றுவிக்க' என அரும்பதவுரையார் கூறுதலின், மேற்காட்டிய வரியிற் இறுதியில் உள்ள ககர ஒன்று அரும்பதவுரையார் பாடத்தில் நீக்கப்பட்டிருக்க வேண்டு மெனலாம். அங்ஙனமாயின் அதற்கு முந்திய வரியில் உள்ள 'இனைந்தேங்கி யாற்றவும்' என்பது 'இனைந்தேங்க ஆற்றவும்' எனவும் அமைந்திருக்க வேண்டுமெனலாம். இவ்வாறு கொள் கின்ற போது அடுத்துவரும் 'கம்பலை மாக்கள்' (19:29) என்ற வரியோடு பொருள் தொடர்புற்று அமையாது தனித்து நிற்கின்றன மேற்கண்ட வரிகள். ஆகலின் ஈண்டு நல்லார் கொள்ளும் பாடமே பொருட் தொடர்புற்று அமைகிறது எனத் துணிந்து கூறலாம்.

இவைதவிர 'வேட்டுவ வரி'யில் 39-வது வரியை அடுத்து 'மலர்ப்பலி பீடிகை நிலைப்பலி செய்தாங்கு' என்ற ஒரு வரி இடம் பெறுகின்றது. இதற்குப் 'பீடிகையிற் சென்று நிலைப்பலி செய்து' என உரை கூறுகிருர் அரும்பதவுரையார். இவ்வரி அடியார்க்கு நல்லார் உரையில் காணப்படவில்லை. இங்ஙனம் நல்லாருக்கும் அரும்பதவுரையாருக்கும் இடையே பல பாடபேதங்கள் அமைந்து கிடக்கின்றன (பின்னிணைப்பு-III-காண்க). இவற்றிற் பல நல்லார் கொள்வதே பொருத்தமாக அமையினும் வேறு சில அரும்பதவுரையார் கொள்வது சிறப்பாகக் காணப்படுகின்றது. சிலப்பதிகாரத்திற்கு இனியொரு பதிப்பு வருமாயின் அரும்பத வுரையாரிடம் காணப்படும் சிறப்புடைய பாடங்களை ஏற்றுக் கொள்ளலாம்.

### அரும்பத உரைச்சிறப்பு

அரும்பதவுரை அடியார்க்கு நல்லார் உரையினும் மிகச் சுருக்கமாக அமைவது முன்னர்ச் சுட்டப் பட்டது. இருப்பினும்

சில இடங்களில் விரிவாகவும் அமைகின்றது. அரும்பதவுரையார் மிக விரிந்த உரை கூறிச் செல்கின்ற பகுதிகளுக்கு அடியார்க்கு நல்லார் விரிவுரை செய்யாமல் விடுத்துள்ளார். அவற்றில சில வருமாறு.

வேனிற் காதையில்,

'அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியன் மருதமும் பெருகியன் மருதமும்' (8:39-40)

என்னும் வரிக்கு உரை எழுதிய அரும்பதவுரையார், அகநிலை மருதம், புற நிலை மருதம், அருகியல் மருதம், பெருகியல் மருதம் என்னும் நான்குவகைப் பெரும் பண்ணினைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகின்றார்.

அகநிலை மருதமாவது

'ஒத்த கிழமை யுயர்குரன் மருதம்
துத்தமும் விளரியுங் குறைவுபெற ணிறையே'

இதன் பாட்டு

'ஊர்க திண்டே ரூர்தற் கின்னே
நேர்க பாக நீயா வண்ணம்'

நரம்புக்கு மாத்திரை பதினாறு.

புறநிலை மருதம்

'புறநிலை மருதங் குரலுழை கிழமை
துத்தங் கைக்கிளை குரலா மேனைத்
தாரம் விளரி யிளிநிறை வாகும்'

இதன் பாட்டு

'அங்கட் பொய்கை யூரன் கேண்மை
திங்க ளோர்நா ளாகுந் தோழி'

நரம்பு பதினாறு.

அருகியன் மருதம்

'அருகியன் மருதங் குரல்கிழமை கைக்கிளை
விளரி யிளிகுர ணிறையா மேனைத்
துத்தந் தார மிளியிவை நிறையே'

இதன் பாட்டு

'வந்தா னூரன் மென்றோள் வளைய
கன்றாய் போது காணாய் தோழி'

நரம்பு பதினாறு.

பெருகியன் மருதம்

'பெருகியன் மருதம் பேணுங் காலை
அகநிலைக் குரிய நரம்பின திரட்டி
நிறைகுறை கிழமை பெறுமென மொழிப'

இதன் பாட்டு:

'மல்லூர்.. நோவ வெம்முன்
சொல்லற் பாண சொல்லுங் காலை
எல்லி வந்த நங்கைக் கெல்லாம்
சொல்லுங் காலைச் சொல்லு நீயே'

நரம்பு முப்பத்திரண்டு.

'மண்ணு மளிகண் மலர்தேடி
மதுவை யுண்டு வரைதோறும்
பண்ணு சார லவையெங்கும்
பற்றி யார்க்கும் வகையேபோல்
முன்ன மோசை பலவாகி
முழுதும் வேறாய் மிடறென்றாய்த்
தென்ன வென்னு மிசை வளர்த்துப்
பண்ணு மாறு தேன்போல'

அகநிலை மருதத்துக்கு நரம்பணியும்படி - உழை இளி விளரி உழை கைக்கிளை குரல் உழை குரல் தாரம் இளி தாரம் துத்தம்இளி உழை: இவை உரைப்பிற் பெருகும். இங்ஙனம் நால்வகை மருதப் பண் பிறக்குமாற்றை விளக்குகிறார்.

மேலும் இவ்வேனிற் காதையுரையில் அடியார்க்கு நல்லார் காட்டாத பல மேற்கோள் பாடல்களைக் காட்டுகிறார். 'மதுர கீதம் பாடினள் மயங்கி' (8:24) என்பதன் உரையில்,

'கண்ட மல்லது நிரம்பக் காட்டக்
கருவிக் கின்பங் கொடுப்பது மது
...... ...... ......
பொருவரு நிலத்தைப் புணர்ப்ப ததுவே'

என்னும் 'சொல்லகத்திய'ச் சூத்திரத்தை எடுத்துக் காட்டுகிறார்.

'ஒன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தி' (8:25) என்பதற்கு ஒன்பது வகையான இருக்கை முறைகளை விளக்குகிறார் நல்லார். இதனை அரும்பதவுரையார் குறிப்பிட்டாலும், இதனின்று வேறுபட்ட ஒரு உரையையும் தருகின்றார். 'ஒன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தியாவது-இருபத்தொரு கோவை முதலாக

நாலாம் கோவை யீருகக் கிடந்த கோவைகளுள் ஒன்பான் கோவையில் மேற்செம்பாலை தாரமுதலென்பது, 'தலையின தாரஞ் செய்யுந் தாரம்' என்பதனாற் பெற்றும். ஒன்பான் கோவை: 'தொண்டுபடு திவவின் முண்டக நல்யாழ்' என ஆசிரியமாலை யுள்ளுங் கண்டு கொள்க' என உரை எழுதுகிறார் அரும்பத வுரையார்.

யாழின் உறுப்பாகிய மாடகம் (நரம்பை வீக்குங் கருவி) பற்றிக் குறிக்கப் போந்த அரும்பதவுரையார்,

'மாடக மென்பது வகுக்குங் காலைக்
கருவிளங் காழ்ப்பினை நால்விரல் கொண்டு
திருவியல் பாலிகை வடிவாக் கடைந்து
சதுர மூன்றாகத் துளையிடற் குறித்தே'

என்ற மேற்கோள் பாடலைக் குறிப்பிடுகிறார்.

'பிழையா மரபி னீரேழ் கோவையை
உழைமுதற் கைக்கிளை யிறுவாய் கட்டி' (8:31-32)

என்ற வரிகட்கு உரை எழுதிய அரும்பதவுரையார்,

'கணணிய கீழ்மூன் றாகி மேலும்
நண்ணல் வேண்டு மீரிரண் நரம்பே'

'குரலே துத்த மிளியிவை நான்கும்
விளரி கைக்கிளை மும்மூன் றாகித்
தளராத் தார முழையிவை யீரிரண்
டெனவெழு மென்ப வறிந்திசி னோரே'

என்னும் மேற்கோள் பாடல்களைக் காட்டுகிறார். இங்ஙனம் இசை பற்றிய பல காட்டுக்களை அரும்பதவுரையார் காட்டியும் நல்லார் இவற்றைக் கூறாது விட்டு விடுகிறார். பெரும்பாலும் அரும்பத வுரையார் காட்டும் மேற்கோளை எடுத்தாள்வதோடு அதற்கு மேலும் வேறுபல பாடல்களையும் சூத்திரங்களையும் மேற்கோள் காட்டும் இயல்பு அடியார்க்கு நல்லாரிடம் அமைந்து கிடத்தலைப் பார்க்கிறோம். இத்தகைய இயல்புடைய நல்லார் இங்கு ஏன் மேற்கண்ட செய்திகளைச் சொல்லவில்லை என்ற வினா எழுகிறது. இவ் விடத்து அடியார்க்கு நல்லார் 'கானல் வரி'க்கு உரை எழுதியிருக்கிறார் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இங்கு இசையின் பகுதிகளையெல்லாம் கூறியிருக்க வேண்டும் என்பது முன்னரே சுட்டப்பட்டது. ஆகலின் கூறியது கூறல் என்னும் குற்றத்திற்கு இலக்காகாது தம்மைக் காத்துக் கொள்ளுதற் பொருட்டு

இவ்விடத்து அரும்பதவுரையார் விளக்கிய இசைச் செய்திகளை நல்லார் விளக்கிக் கூறவில்லை யெனலாம்.

'ஆய்ச்சியர் குரவை'யில் வட்டப்பாலையை (17:[13] விளக்கும் அரும்பதவுரையார் சில நூற்பாக்களையும் எடுத்துக் காட்டுகிறார்.

'ஆழியு மாரும்போற் கீறிச் சிறுதிசைக்கண்
ஊழிநெ ரோவொன் றுடன்கீறிச்-சூழ
எருகாதி கீழ்த் திசைக்கொண் டீரா றுமெண்ணிக்
கருதி நிலக் கயிற்றைக் காண்'

'இளியிடபங் கற்கடக மாம்விளரி சிங்கம்
தளராத தார மதுவாம்-தளராக்
குரல்கோற் றனுத் துத்தங் கும்பங் கிளையாம்
வரலா லுழைமீன மாம்'

'குர றுலை விற் றுத்தங் கைக்கிளையே:கும்பம்
பரிய வுழைமீனம் பாவாய்-அரிதாரம்
கொல்லே றிளிவிளரி கற்கடகங் கோப்பமைந்த
தொல்லே ழிசைநரம்பிற் காம்'

வட்டப்பாலை வருமாற்றை விளக்கிய அடியார்க்கு நல்லார் பல மேற்கோள் பாடல்களைத் தந்து செல்லினும், மேற்கண்ட அரும் பதவுரையார் குறித்துச் சென்ற மேற்கோள்களைக் குறிப்பாகவும் சுட்டிச் சென்றாரில்லை.

ஆய்ச்சியர் குரவை 35, 36, 37-ஆகிய பாடல்களுக்கு உரை எழுதிய அரும்பதவுரையார் திருமாலின் அவதாரச் செயல், சிறப்பு முதலானவற்றைக் காட்டுக்களுடன் விளக்குகிறார்.

சோவரனை அழித்தது

'...... ...... ......'சோவி
'னருமை யழித்த மகன்' (நான்மணிக். கடவுள்)

கூர்ம : சுவேதவராக : 5; பு.வெ. 101, 228.

மால்சீர் கேளாத செவியை இகழ்தல்

'உவப்பினின் னமுத மூறி
யொழுகுமால் சரிதங் கேளாச்
செவித்துளை நச்சு நாகஞ்
செறிவதோர் துளைமற் றுமால்'
(பாக.சௌனகாதியர்:6)

'கையு மலரடியுங் கண்ணும் கனிவாயும்
செய்ய கரிய திருமாலே' (விக்கிரம சோழனுலா:158)

கண்ணை இகழ்தல்

'மழைதுளி மறுத்த கானின் வற்றனீண் மரமு மந்தண்
குழைதர வன்றிண் குன்றுங் குழைதர வமுத மூறும்
கழையிசை வடித்தான் செவ்வி காண்கிலாக் கண்கள்
மஞ்ஞைத்
தொழுதியங் கல்வ மேய துஞ்சலில் வறுங்க ணன்றே'

(பாக. சௌனகாதியர்:2)

'மைதவழ் வெற்பன் மணவணி காணமற்
கையாற் புதைபெறூஉங் கண்களுங் கண்களோ'

(கலித். 39:41-42,பரி:13:50-51)

நாவை இகழ்தல்

'பொடித்தசெங் கதிர்போற் காந்தி
பொழிமணிச் சூட்ட ராவில்
நடித்தவ ணுமம் பாடா
நாவழங் காத நாவே'

(பாக. சௌனகாதியர்:4)

'வேந்தர் தூதுபோதற் குரியர்'

(தொல்.அகத்: 26, நச்,நம்பி.75-உரை,இ.வி.சூ:443 மேற்)

இவ்விளக்க மேற்கோள்கள் நல்லார் உரையில் இடம் பெறவில்லை.

இந்திர விழவூரெடுத்த காதையில், இந்திர விழா நாளில் நகர மக்கள் தங்கள் இல்லங்களையும் தெருக்களையும் பல்வகைத் தோரணங்களால் அலங்காரம் செய்ததைக் குறித்த இளங்கோ வடிகள்,

'கிம்புரிப் பகுவாய்க் கிளர்முத் தொழுக்கத்து
மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரண நிலைஇய' (5:150-52)

என இத்தோரண அமைப்பை விளக்குவர். இங்கு 'மங்கலம்' என்பதற்கு அட்டமங்கலம் எனக்கூறி,

'செங்கய லிரட்டைதிரு வார்சுடர்க ணாடி
பொங்குகொடி வார்முரசந் தோட்டிபுணர் கும்பம்
மங்கலங்க ளெட்டும்' (சீவக : 2487)

என்ற சிந்தாமணிப் பாடலைக் காட்டி அட்டமங்கலம் இவையிவை யென்பதைக் கூறுகிறார் அரும்பதவுரையார். இவ் வட்டமங்கலம் பற்றிய விளக்கம் நல்லார் உரையில் காணப்படவில்லை.

பத்துத் துவர், ஐந்து விரை (6:76) பற்றி விளக்கும் அரும்பதவுரையார் காட்டிய இருபாடலை மட்டும் எடுத்துக்காட்டிய நல்லார் பிற இருபாடல்களை விட்டு விடுகிறார்.

பத்துத் துவருக்கு விளக்கமாக வரும்,

*'மாந்தளிர்..... முப்பழஞ் சீர்த்த முத்தக்காசு'*

என்ற மேற்கோளும், ஐந்து விரைக்கு விளக்கமாக அமையும்,

*'நறும்பிசி னுகண நற்கொட்ட மாஞ்சி*
*வெறுங் கண்டில் வெண்ணெய் விரை'*

என்ற பாடலும் நல்லார் உரையில் இடம் பெறவில்லை.

இவ்வாறு அடியார்க்கு நல்லாருக்கும் அரும்பதவுரையாருக்குமிடையே உரை ஒப்புமை, வேற்றுமை, பாடபேதம் முதலான அமைந்து கிடக்கின்றன. இருவர் உரையையும் மேலும் ஆராய்ந்தால் இன்னும் பல புதிய செய்திகள் கிடைக்க வாய்ப்புண்டு. இவ்விருவர் உரையை ஒப்பிட்டு ஆராய்கின்றபோது நல்லாருக்கு அரும்பதவுரை ஓர் ஊன்றுகோலாக அமைந்துள்ளமை பெறப்படும். அரும்பதவுரையைத் துணையாகக் கொண்டதால் நல்லாரின் உரை மேலும் சிறப்புப் பெறுகின்றது.

## பின்னிணைப்பு-1

| | | |
|---|---|---|
| 1. | அத்திரி | 6:119-கோவேறு கழுதை |
| 2. | அதள்புனை யரணம் | 14:170-தோற் கைத்தாளம் |
| 3. | அளை | 16:3-மோர் |
| 4. | அறிந்தீமின் | 8:63-அறிமின் |
| 5. | அறுவை | 10:98-தோளிலிடும் உறி |
| 6. | ஆங்கு | 18:1-அவ்விடத்து |
| 7. | ஆதியோ | 16:112-ஆவையோ |
| 8. | இருந்தைக்க | 19:67-இருக்க |
| 9. | இறுதியிலின்பம் | 10:206-அநந்த சுகம் |
| 10. | | 11:122-வீடு |
| 11. | ஈகை | 1:24-பொன் |
| 12. | ஒட்டுப்புதவம் | 11:120-இரட்டைக் கதவம் |
| 13. | ஒன்றன் பகுதி | 17:[26]-ஒற்றைத் தாளத்தின் கூறு |
| 14. | ஐயென்ருள் | 17:[16]:5-வியந்தாள் |
| 15. | கச்சை | 5:142-கீழ்வயிற்றுக் கச்சை |
| 16. | கடுக்கும் | 9:45-ஐயுறும் |
| 17. | கண்ணுள் வினைஞர் | 5:30-சித்திர காரிகள் |
| 18. | கண்ணுளர் | 5:49-சாந்திக் கூத்தர் |
| 19. | கத்திகை | 8:47-தொடை விசேடம் |
| 20. | கரியவன் | 10:102-சனி |
| 21. | கருணை மறவ | 15:53-கிருபா வீரனே |
| 22. | கருப்பம் | 14:[5]-கேட்டுக்குக் கருப்பம் |
| 23. | கலை | 10:28-சரீரம் |
| 24. | கழு | 15:212-கழுக்கோல் |
| 25. | களிற்றின் பாகர் | 5:54-யானைப்பாகர் |
| 26. | கன்னகம் | 16:142-அகழ் கருவி |
| 27. | கனிக்காய் | 16:24-முதாரிக்காய் |
| 28. | காமக் கடவுள் | 6:2-காமதேவன் |
| 29. | காயம் | 11:82-வெள்ளுள்ளி |
| 30. | கிடை | 5:33-கிடேச்சு |
| 31. | குற்றிளையோர் | 16:84-குற்றேவன் மகளிர் |
| 32. | சங்கிலி | 6:99-வீரச் சங்கிலி |
| 33. | சலம் | 9:69-பொய் |
| 34. | சாலினி | 12:7-தேவராட்டி |
| 35. | சில்லை | 16:147-இழிவு |
| 36. | செல்வர் | 2:8-இருவர் பிதாக்களும் |
| 37. | தமாலம் | 8:45-பச்சிலை |

38. தவிசு 16:37-தடுக்கு
39. திகிரி 4:2-தேராழி
40. திருமணி குயிற்றுநர் 5:46-முத்துக் கோப்பார்; வேகடிகளு மாம்
41. திருமால் குன்றம் 15:71-அழகர் திருமலை
42. தீத்திறம் 15:71-கொலைத்திறம்
43. தெய்வ வுத்தி 6:106-சீதேவி
44. தேருருநர் 5:55-தேர்ப்பாகர்
45. நல்வினை 2:234-விழா
46. நன்கலந் தருநர் 5:31-இரத்தினப் பணித்தட்டார்
47. நாழிகைக் கணக்கர் 5:49-கடிகையார்
48. நிலந்தரு திரு 15:1-விளைவு
49. நிலாக் கோட்டம் 9:13-சந்திரன் கோயில்
50. நின்ற சிலம்பு 19:3-மற்றைச் சிலம்பு
51. நீர்நிறக் காக்கை 10:116-நீர்க்காக்கை
52. நீர்மாடம் 14:74-பள்ளியோடம்
53. நீரணிமாடம் 10:215-பள்ளியோடம்
54. நெடியோன் குன்றம் 8:1-வேங்கடமலை
55. நோதக 4:58-கண்டார்க்கு நோவுதக
56. பாகு 15:46-பாகர்
57. பாரதி 6:39-பைரவி
58. பான்மடை 15:117-பாற்சோறு
59. புழை 15:212-ஏவறை
60. புறம் 5:102-இடம்
61. பெருமகன் 13:63-தயரதன்
62. பெருமகள் 16:74-கோவலன் மாதா
63. பொங்கல் 5:69-கள்ளு
64. பொச்சாப் புண்டு 16:65-மறவியிற் பொருந்தி
65. பொதுவறு சிறப்பு 1:16-தனக்கே உரிய சிறப்பு
66. பொய்தல் 6:151-விளையாட்டு
67. போதியறவோன் 15:103-புத்தன்
68. மண் 5:30-சுதை 'மண்ணோ டியைந்த மரத் தனையர்' (குறள்:576) என்கு ராகலின்
69. மறுமைக் கின்பம் 11.112-புண்ணியம்
70. மறையோ ரிருக்கை 5:42-பஞ்சக் கிராமிக ளிருப்பு
71. மாதர் வீதி 16:103-தளிப் பெண்டுகள் தெரு
72. முள்வாய் 4:78-கூர்த்தவாய்
73. மூதிற் பெண்டிர் 5:75-மறக்குடி மகளிர்

74. மூவாக்கடம்பு 17:[31]:1-வஞ்சத்தால் நின்றதாகலின் மூப்பின்றி ஒரு நாளைப் போல நின்ற கடம்பு

75. மெய்ப்பாட்டியற்கை 11:155-பரமாகமம்

76. மெய்ப்பை 16:107-சட்டை

77. மைந்நிண விலைஞர் 5:26-ஆட்டு வணிகர்

78. வல்லா நடை 16:99-மாட்டா நடை

79. வாசவர் 5:26-பஞ்ச வாசம் விற்போர்; அவை : 'தக்கோலந் தீம்பூத் தகைசா லிலவங்கம் கப்பூரஞ் சாதியோ டைந்து'

80. வாளி 15:101-வாளியை

81. வியன்பெருஞ் சேடி 6:1-அகன்றுயர்ந்த வடசேடி

82. விரை 5:14-விரையாவன : 'கொட்டந் துருக்கந் தகர் மகிலாரம் ஒட்டிய வைந்தும் விரை'

88. வெள்ளை நாகர் 9:10-பலதேவர்

84. வேதாளிகர் 5:48-வைதாளி யாடுவார்

## பின்னிணைப்பு-II

# அரும்பதவுரையார்-அடியார்க்கு நல்லார் உரை வேற்றுமை

| | | அரும் | அடியார் |
|---|---|---|---|
| 1. | பாட்டுடைச் செய்யுள் பதி:60 | உருவாகிய பாட்டுக்களை யுடைய காவியம். | பல பாக்களோடு உரைப்பாட்டையும் இசைப் பாட்டையுமுடைய இயலிசை நாடகப் பொருட் டொடர்நிலைச் செய்யுள். |
| 2. | பெருங் குணத்துக் காதலாள் 1:28-29 | பெருங் குணத்தாற் காதலித்த வள். | பெருங் குணங்களைக் காதலிப்பாள். |
| 3. | பிண்டி 3:18 | ஒற்றைக் கை; அவை பதாகை முதலாக இருபத்து நான்கு. | ஒற்றைக் கை; இணையா வினைக்கை; இது முப்பத்து மூன்று வகைப்படும். |
| 4. | பிணையல் 3:18 | இரட்டைக் கை;அவை அஞ்சலி முதலாகப் பதின்மூன்று. | இரட்டைக் கை; அஃதாவது இணைக்கை; அது பதி னைந்து வகைப்படும். |
| 5. | மங்கல வணி 4:50 | இயற்கை யழகு. | மங்கல அணி (ஒரு அணி) |
| 6. | ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும் 5:157 | 'சாந்துபூக் கச்சாடை பாக்கிலை கஞ்சுகநெய் ஆய்ந்த விவ ரெண்ம ராயத்தார்-வேந்தர்க்கு மாசனம் பார்ப்பார் மருத் தர் வாழ் நிமித்தரோ டமைச் சர் ஆசி லவைக்களத்தா ரைந்து'. | ஐம்பெருங்குழு<br>'அமைச்சர் புரோகிதர் சேனுபதியர்<br>தவாத்தொழிற் றூதுவர் சாரண ரென்றிவர்<br>பார்த்திபர்க் கைம் பெருங் குழுவெனப் படுமே'.<br>எண்பேராயம்<br>'கரணத் தியலவர் கரும காரர் கனகச் சுற்றங் கடை காப் பாளர் நகர மாந்தர் நளிபடைத் தலைவர் யானை வீர ரிவுளி மறவர் இனைய ரெண்பே ராய மென்ப.' |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | நால்வகைத்தேவர் | 5:176 | -வசுக்கள். திவாகரர், உருத்திரர், மருத்துவர், ஆதியங் கடவுளர். | - முப்பத்து மூவர்; அவர் வசுக்கள் எண்மரும், திவாகரர் பன் னிருவரும்,உருத்திரர் பதினொருவரும், மருத்துவ ரிருவருமென விவர். |
| 8. | பரத்தர் | 5:200 | -தூர்த்தர் | - கழி காமுகர். |
| 9: | படாதன | 9:7 | -இல்லாதன | - அடாதன. |
| 10. | பந்தம் | 10:213 | -ஸம்ஸாரம் | - பாசம். |
| 11. | கோடு | 11:20 | -கரை | -- மலை. |
| 12. | சோவரணம் | 17:[35]:3 | -அசுரர் நகரம் | - சோ வென்னும் அரணம். |
| 13. | வாய்வதின்வந்த குரவை | 19:47 | -புத்தி பூருவ மாக எடுத்த குரவை. | - வாய்ப்புடைத் தாகிய உற்பாத சாந்திப் பொருட்டு ஆடிய குரவை. |
| 14. | கன்றிய காவலர் | பதி:29 | -காவலில் தழும்பியவர் | - முன்னர்த் தீது செய்யாக் காவலர். |
| 15. | சந்தியைந்து | 10:19 | -ஐஞ்சந்தி; அவையாவன: பஞ்ச பரமேட்டிகள் தெரு. அவர் அருகர், சித்தர், ஆசாரியர்கள், உபாத்தியாயர்கள், சாதுக்கள். | - அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள். |
| 16. | வம்பப் பரத்தை | 10:219 | -வம்பு-புதுமை; பரத்தைத் தன்மைக்குப் புதியவள். | - புதிய பரத்தைத் தன்மையை யுடையாள். |
| 17. | மருதினடந்து | 12:23:3 | -மருதிடை நடந்து | - மருதின் மீதே நடந்து. |
| 18. | நாள்வழிப் படூஉமடிசில் | 16:19-20 | -காலத்திலே ஆக்கும் அடிசில் | - பகற் பொழுதே யுண்ணும் அடிசில். |
| 19. | அறவோர் | 16:71 | -துறவாது விரதங் காத்தோர் | - சாவக நோன்பிகள். |
| 20. | நல்லோ ரேத்து | 16:86 | -நல்லோராலே ஏத்தப்படும் தன்மை. | - மகளிரால் ஏத்தப்படும். |

| | சொல் | இடம்-அரும் | அடியார் |
|---|---|---|---|
| 21. | பேராச் சிறப்பு | பதி:13-நீங்காத பெருமை | - மாருத விளைவுச் சிறப்பு. |
| 22. | பைந்தொடி | பதி:46-முன்னிலைப் பெயர் | - அண்மை விளி. |
| 23. | மாசாத்துவான் | 1:33-குடிப் பெயர் | - இயற்பெயர். |
| 24. | செறிதல் | 2:56-ஒளித்தல் | - ஒடுங்குதல். |
| 25. | என்னுற்றனர் | 2:72-என்ன பித்தேறினர் | - என்ன பேய்கொண்டார்களோ? |
| 26. | யவனர் | 5:10-சோனகர் | - மிலேச்சர். |
| 27. | எண்குணம் | 10:188-அநந்த ஞானம், அநந்த தரிசனம், அநந்த வீரியம், அநந்த சுகம், அநந்தநாமம், நிட்களம், நிராயுஷ்யம், சற்பாவனை யென இவை. | - அநத்த ஞானம், அநந்த வீரியம், அநந்த தரிசனம், அதந்த சுகம், நிரந்நாமம், நிர்க்கோத்திரம், நிராயுஷ்யம், அழியா வியல்பு. |
| 28. | நெறியினீங்கியோர் | 14:17 -இல்லற நெறியின் நீங்கிய வேசையர். | - ஒழுக்கத்தினின்று நீங்கினோர். |
| 29. | கடம்பூண்டு | 15:2-முறைமைய்யை மேற்கொண்டு | - முறைமையான் மேற்கொண்டு. |
| 30. | வாலாமை | 15:24-தூய்மை யின்மை. | - ஆசௌசம். |
| 31. | பல்வகைக் கூத்து | 3:13-நகைக் கூத்து முதலான | - வென்றிக் கூத்து முதலியன. |
| 32. | புகை | 5:14-மயிருக்குப் புகைக்கும் அகின் முதலியன; அவையாவன: 'அஞ்சனக் கட்டி யரியாசம் பச்சிலை ஆர மகிலுறுப்போ ரைந்து'. | - புகையுறுப்பு; ஆவன: 'நேர்கட்டி செந்தே னிரியாசம் பச்சிலை ஆர மகிலுறுப்போ டாறு'. |
| 33. | துன்னகாரர் | 5:32-பாணர் | - சிப்பியர். |

| | | | |
|---|---|---|---|
| 34. | கிழி | 5:33-சீலை | - சீரை (மரவுரி). |
| 35. | ஆயுள்வேதர் | 5:44-கோயிலார் | - மருத்துவ நூலோர். |
| 36. | ஆடற் கூத்தியர் | 5:50-அகக் கூத்து முதலியன ஆடுவார் | - அகக் கூத்தாடும் பதியிலார். |
| 37. | ஏவற் சிலதியர் | 5.51-குற்றேவன் மகளிர் | - மடைப்பள்ளியா ரடியார். |
| 38. | துணங்கை | 5:70-சிங்கி; என்னை? 'பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத் தொடக்கிய நடையது துணங்கை யாகும்'. | - துணங்கைக் கூத்து; என்னை? 'முடக்கிய விருகை பழுப்புடை யொற்றித் துடக்கிய நடையது துணங்கை யாகும்'. |
| 39. | களிற்றரசு | 5143-ஐரபதம் | - ஐராவதம். |
| 40. | கிம்புரி பகுவாய்க் கிளர் முத்து | 5:150 -கிம்புரிப் பகுவாய்-மகரவாய்; கிளர்முத்து-அதன் வாயினின் றும் புறப்பட்ட முத்து. | - கிம்புரி செறித்த கொம்பினையும் அங்காந்த வாயாற் கான்ற முத்தொழுங்கையும் உடைய. |
| 41. | அறனோம்படை | 5:179-தருமம் பாதுகாக்கிற விடம் | - தருமம் போதிக்கு மிடம். |
| 42. | பத்துத்துவர் | 6:76-'பூவந்தி திரிபாலை புணர்செங் கருங்காலி ... ... ... துவரே' 'மாந்தளிர்.. முப்பழஞ் சீர்த்த முத்தக் காசு'. | - 'பூவந்தி திரிபாலை புணர்கருங் காலி நாவ லோடு நாற்பான் மரமே'. |
| 43. | முப்பத் திருவகை யோமாலிகை | 6:77 -'இலவங்கம் பச்சிலை... நண்ணு மரத்தை நறும்பிசின்-எண்ணும் குடசம் வசுவாசி தீம்பூ... .. சண்பக முகையோ டென்னுன்கு மோமா லிகை'. | - 'இலவங்கம் பச்சிலை................ கதிர் நகையா யோமாலி கை'. |

| | | அரும் | அடியார் |
|---|---|---|---|
| 44. | பதாகையாவது | 8:27–'பெருவிரல் குஞ்சித் தேனைய நான்கும் நிரலே நிமிர்த்தல் பதாகை யாகும்'. | 'எல்லா விரலும் நிமிர்த்திடை யின்றிப் பெருவிரல் குஞ்சித்தல் பதாகை யாகும்'. |
| 45. | புறம் பணையான் | 9:12–மாசாத்தன். | சாத வாகனன். |
| 46. | திருமொழி | 10:12–தருமம். | ஆகமம். |
| 47. | ஒளியுடைப்பாணி புகார்க்.கட்:16 | –'வெங்கட் டொலைச்சிய விருந் தின் பாணி (10:131) முதலாயின. | 'சீரியல் பொலிய' (3:135) என்றது. |
| 48. | இம்மைக்கின்பம் 11:112 | –பொருள் | புகழ். |
| 49. | அவுணன் | 12:65–மகிடாசுரன் | விக்கிரமா சுரன். |
| 50. | இளை | 14:62–அரண் காவல் | கட்டுவேலி. |
| 51. | வேயா மாடம் | 5:7–தட்டோடிட்டுச் சாந்து வாரப் பட்டன; நிலா முற்றமுமாம். | நிலா முற்றம். |
| 52. | ஓசுநர் | 5:27–பரவர்; மீகாமர்; எண்ணெய் விற்பாருமாம். | பரவர்; எண்ணெய் விற்பாருமாம். |
| 53. | சூதர் | 5:48–கை வாரிகள், நின்றேத்துவார் | நின்றேத்துவார். |
| 54. | மாகதர் | 5:48–இருந்தேத்துவார்; பட்டுக்கள் | இருந்தேத்துவார். |
| 55. | வையம் | 6:120–தேர்; கொல்லா வண்டியுமாம்; கூடாரப் பண்டியுமாம். | கொல்லாப் பண்டி. |
| 56. | அமரர் தருக்கோட்டம் 9:9 | –கற்பகம் நிற்குங் கோயில்; சாந்திக் கரைக் கோட்ட மெனினுமாம். | தேவதரு நிற்குங் கோயில். |

| | | | |
|---|---|---|---|
| 57. | வாரணம் | 10:247-யானை, கோழி | கோழி. |
| 58. | குழியம் | 14:171-வாச வுண்டை; கட்டுக் குழியமு மென்ப. | தட்டுக் குழியம். |
| 59. | ஏனப்படம் | 14:172-பன்றி முகக் கடகு;பன்றி வலையு மாம். | பன்றிமுகக் கடகு. |
| 60. | பாண்டில் | 14:168-இரண்டு உருளையை யுடைய சகடம்; கொல்லாப் பாண்டில்; பாண்டி யென்று பாடமோதிக் கூடாரப் பாண்டி யென்பாரு முளர். | தேர்வட்டை. |
| 61. | இல்லோர் செம்மல் 15:90 | -இல்லோர்-வறியோர்; செம்மல்-தலைவன்; இல்லோர் செம்மல் என்பதற்கு இல்லறத்தார் தலைவ வென்றுமாம். | இல்லத்தோர் தலைவனே. |
| 62. | ஆரணங்காக | 15:193-மந்திர உபதேச மாகக் கொண்டு;மிக்க தெய்வப் பிரார்த்திய மாகக்கொண்டென்று மாம். | தெய்வ வாக்கியமாகக் கொண்டு. |
| 63. | புதை | 15:212-அம்புக் கட்டு; மண்ணிற் புதைத்த இரும்பாணியு மென்ப. | அம்புக் கட்டு. |
| 64. | பணை | 15:214-வேய் வடிவாகப் பண்ணி வைப்பது; முரசென்பாரு முளர்; குதிரைப் பந்தியுமாம். | வேய் வடிவாகப் பண்ணி அடித்தற் கமைத்த கருவி. |
| 65. | நாட்கொடி | 15:217-நல்ல நாளிலே கட்டின கொடி; நாள்தோறும் செய்த வெற்றிக்குக் கட்டின கொடியுமாம். | நாடோறும் வென்று வென்றெடுத்த கொடி. |

| | | அரும் | அடியார் |
|---|---|---|---|
| 66. | தவ்வை | 16:52-தமக்கை; தாயுமாம் | தாய். |
| 67. | ஆயம் | 16:85-தோழிமார்; சேவிக்குந் தோழிமாருமாம். | சேவிக்குந் தோழிமார். |
| 68. | தந்திர கரணம் 16:180 | -கரவட நூல்; களவு நூலிற் சொல்லுகிற கிரியையுமாம். | களவு நூலிற் சொல்லும் கிரியை. |
| 69. | மான்மணி 17:[4]:2 | -பெரிய மணி; கழுத்தின் மணி | பெரிய மணி. |
| 70. | ஏதிலார் சொன்ன தெவன் வாழியோ தோழி 18:15 | -ஏதிலார் என்றது மறையச் சொன்னவர்களை; ஏதிலார்-நகரிலுள்ளாருமாம்; தோழீ யென்றது ஐயையை. | என்னை நோக்கி இவ்வாய்ச்சியர் குறிப்பாற் கூறுகின்றது யாதோ; ஏதிலார் என்றூர் சொன்னவனையும் கேட்கின்ருரையும். |
| 71. | தெய்வ முற்ருள் 19:26 | -தெய்வத் தன்மை யுற்ருள்; தெய்வமேறினு ளென்றுமாம். | தெய்வமேறினுள். |
| 72. | கட்புலம் | பதி:9-கண்ணென்கின்ற இடம் | கண்ணினது அறிவு; கண்ணென் கின்ற புலமுமாம். |
| 73. | வினுத்திறத்து பதி:71 | -கவுந்தியடிகள் வினுவிய திறத்தை யுடைய. | கண்ணகியார் மதுரை மூதூர் யாதென வினுவின திறத்தையுடைய; கவுந்தியடிகள் வினுவின திறமெனவும், பிறர் வினுவும் திறத்தையுடைய வெனவும் அமையும். |
| 74. | அகலுள் | 1:47-ஊரிலே | ஊர்; தெருவுமாம். |
| 75. | பாசவர் | 5:26-வெற்றிலை கட்டுவோர்; சூட்டிறைச்சி விற்பாருமாம். | இலையமுது இடுவார்; கயிறு திரித்து விற்பார்; பச்சிறைச்சி சூட்டிறைச்சி விற்பார். |
| 76. | மண்ணீட்டாளர் 5:30 | -சுதையாற் பாவையுள்ளிட்டன பண்ணுவார். | சிற்பாசாரிகள்; அன்றிச் சுதையாற் பாவையுள்ளிட்டன பண்ணுவார் என்றுமாம். |
| 77. | தோலின்றுன்னர் 5:32 | -செம்மார் | உறைகாரர்; பறம்பர் முதலாயினருமாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 78. | காவற் கணிகையர் | 5:50 | இராக்கடை வேசையர் | களத்தாடும் கூத்திகள்; இராக்கடைப் பெண்டுகளென்பாருமுளர். |
| 79. | அறவோர் பள்ளி | 5:179 | அருகர் தானம் | அருகர் பள்ளி; புத்தர் பள்ளி. |
| 80. | வால்வளை | 6:93 | சங்க வளை | சங்கவளை; வெள்ளிவளை. |
| 81. | மருகும் | 13:31 | திரியும் | வாய்விடும்; குறுக்கிடு மெனினும் அமையும். |
| 82. | ஆடகப்பைம்பூ ணருவிலை யழிப்பச் செய் யாக்கோலமொடு வந் தீர் | 16:10-11 | ஆபரணத்தின் உயர்ச்சியை அழித்தற்குப் பிறவியழகொடு வந்தீர்க்கு. | மகளிர் கொள்ளும் அருவிலை ஆடகப் பைம்பூணாற் செய்த கோல மழித்தற்குச் செய்யாக் கோலமொடு வந்த உமக்கு; இனி கூடன் மகளிர்க்கு அழகைக் கொடுக்கும் ஆடகப் பைம்பூணினது அருவிலையை யழித்தற்குச் செய்யாக் கோலமொடு வந்தீர்க் கெனினும் அமையும். |
| 83. | கொல்லன் புரிந்துடனேக்கி | 16:120 | கொல்லன் தான் மறைத்த சிலம்போடு ஒக்கும்படியைப் பார்த்து. | கொல்லன் நெஞ்சம் இடுவந்தி கூறுதலைப் புரிந்து நோக்கக் கண்கள் சிலம்பை நோக்க இவ்விரு நோக்கும் கண்டார்க்கு ஒரு நோக்கம் போல நோக்கி;பணியும் விலையும் நோக்காது அவனை இடுவந்தி யிடுவதற்கு இசைந்து தான் வஞ்சித்துக் கொண்ட சிலம்போடு ஒக்கும் படியைப் பார்த்தென்பாரும் உளர். |
| 84. | நம் பொருட்டால் | 19:23 | நம்மைக் கெடுத்தற் பொருட்டால்; ஆவது இனி இவளுடைய பிரகடத்தால் மதுரையில் உள்ளாரும் கெடப் புகுந்ததென்று தோன்றிற்றும். | நம்மைக் கெடுத்தற் பொருட்டு;இனி நம்பொருட்டால் என்பதற்கு இவள் கற்பு நாம் கண்டு பாவித்தற் பொருட்டால் என்பது மொன்று. |

| | அரும் | அடியார் |
|---|---|---|
| 85. கோவியன் வீதி 5:40 | செண்டு வெளிப்புறத்தெரு; இராச மார்க்க மெனினுமாம். | இராசப் பெருந்தெரு. செண்டு வெளிப் புறத்தெரு வென்பாரு முளர். |
| 86. வலவையின் 5:74 | சமத்தால்; நாணிலிகள் போல வென்றுமாம். | நாணிலிகளைப் போல;வல்ல பத்தா லென்பாரு முளர். |
| 87. உறுகணுளரின் 10:48 | துன்பமுறும் பாவமுடையார் போல; மிடியாளரைப் போல வென்றுமாம். | தீவினை யாளரைப் போல; மிடியாள ரென்பாருமுளர். |
| 88. அடியில் தன்னளவு அரசர்க் குணர்த்தி 11:17 | கடலினளவை அடியாலே இன்ன அளவினது இது வென்று அரசர்க்குக் காட்டி; அன்றி அடியினாலே தன் பெருமையை அரசர்க்கு அறிவித் தென்பாரு முளர். | தனது பெருமையின தளவை அரசர்க்குக் காலான் மிதித்துணர்த்தி; தன்னள வென்றதனைக் கடன்மே லேற்றலு மொன்று. |
| 89. இட்டுத்தலை யெண்ணும் எயினரல்லது சுட்டுத்தலை போகா 12:20-21 | தலையறுத் திட்டு எண்ணப் படும் எயின ரல்லது நோயாற் செத்துச் சுட்டுப் போகாத; என்றது மறங் கூறியதாம். அன்றியும், மாற்றார் தலையைத் தாங்கள் வெட்டியிட்டு எண்ணுமதல்லது பிறராற் கருதலான விடத்தைப் போகாத வென்றுமாம். | தாம் சுட்டிய பகைஞர் தலையைத் தாமே யறுத்திட்டு எண்ணுமதல்லது பகைஞர் சுட்டி எண்ணுதல் அவரிடத்து முடிவு போகாமைக்குக் காரணமாகிய எயினர் தொல்குடி; இனித் தலைகளை அரிந்து வைக்க வைக்கப் பிறர் எண்ணப் படுமதல்லது ஈமத்திற் சுடப்பட்டு அவம் போகாக் குடி யென்றுமாம்; இன்னும் அரசன் சுட்டிய மாற்றரசர் தலையைப் பிறரிடத்துப் போகவிடா வென்றுமாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அன்றியும் மறத்திற்கு முற்பட விட்டெண்ணும் எயினர், தாங் கொள்ளச் சுட்டினல்லது பிறர் கொள்ளச் சுட்டு முடிவு போகாத தொல்குடி. | |
| 90. | நெடுமொழி | 14:49 | -பெருவார்த்தை; பழையதாகப் போதுகின்ற வார்த்தை. | - புராணக்கதை; புகழுமாம். |
| 91. | தாழ்நீர்க் குவளை | 14:76 | -தங்கின நீரையுடைய குவளை. ஆழ்ந்த நீர்க்குவளை யென்றுமாம். | - தாழ்ந்த நீரிற் பூத்த குவளை; தாணீர்க் குவளை பாடமாயின், தாளையுடைய நீர்மைக் குவளை யென்க. |
| 92. | அரியா யோகம் | 14:170 | -விசாதி (வியாதி) கட்குக் கொடுக்கும் மருந்து. சன்னுகமு மென்ப. அரித்தல்-கெடுத்தல்; பிணியைக் கெடுத்தலை யுடைய ஆராயப்பட்ட ஔடத மென்றுமாம். | - கருவி விலக்காகப் புனைந்த அரைப் பட்டிகை. அரிதல் செய்யாத யோக மென்க. வியாதிகளைக் கெடுக்கும் மருந்தென்றுமாம். |
| 93. | தன்றெறல் வாழ்க்கை | 15:193 | -தன் மனத்துக்குள்ளானோர்க் கெல்லாம் பொதுப்பட்ட வாழ்க்கை. பொதுநலப் பட்டோராகிய (சாவகர்). | - தவத்தினர்க் கெல்லாம் பொதுப்பட்ட வாழ்க்கையை யுடைய (சாவக மாக்கள்). தனதென்னும் தன்மை யில்லாத வாழ்க்கை. |
| 94. | பாகடு குழிசி | 15:195 | -செம்புருக்கும் மிடா; சாணகங் கரைத்துக் காய்கிற மிடாக்களுமாம். | - செம்புருக்கு மிடா; அன்றி அங்ஙன மிறைத்தற்குப் பாகு காயும் குழிசிகளுமாம். |

| | அரும் | அடியார் |
|---|---|---|
| 95. ஐயவித் துலாம் 15:213 | -கதவை அணுகாதபடி கற்கவி தொடங்கி நாற்றும் துலாம். அப்புப் பற்ருக்கை தூக்கிற்றென் பாரு முளர்; சிற்றம்புகளை வைத்து எய்யும் இயந்திரமுமாம். | - பற்ருக்கை தூக்கிப் போகட்ட விட்டம். அன்றிக் கதவை யணுகாதபடி கற்கவி தொடங்கி நாற்றும் துலாமுமாம்; சாணம்புக் கூடென்பாரும், சிற்றம்புகள் வைத்தெய்யும் இயந்திர மென்பாரு முளர். |
| 96. கைபெயரூசி 15:213 | -கையின்கட் பொதுக்கும் ஊசி; பொய்யூசி யென்று பாடமோதி மாற்ருரைக் கையைப் பொய்யாக்கும் ஊசியென்பாரு முளர். | - மதிற்றலையைப் பற்றுவாரைக் கையைப் பொதுக்கும் ஊசிப் பொறிகள். இனிக் கதவொடு சேராதபடி வைத்த நிரைக் கழுவெனினும் அமையும். |
| 97. எல்லா (நம்) 7:[28]:5 | -தோழி; அன்றி நாமெல்லா மென்றுமாம். | - நாமெல்லாம். எல்லா-ஏடி; தோழி யென்றுமாம். |
| 98. சாயலாள் — வந்தாள் 18:2,7 | -ஐயை; வந்தாள் என்றது ஐயையை. வேருருத்தி யென்றுங் கூறுவர். | - சாயலாள் வேருருத்தி. முதுமகள் போயினளுடைய சாயலாள் அரவங் கேட்டு வந்து அவ்விடத்து நின்ருளளென ஐயை மேலேற்று வாருமுளர். போயினள் வந்தாளுள ளெனப் பொருண்மை சுட்டலாக்கி மாதரி மேலேற்றலு மொன்று. |
| 99. சொல்லாடாள் சொல்லாடாள் நின்ரு ளந் நங்கைக்குச் சொல்லாடுஞ்சொல் லாடுந் தான் 18:9-10 | -சொல்லாடாமல் நின்ருள் (ஐயை), அந்தக் கண்ணகிக்குச் சொல்லுதலைச் செய்யும். அன்றிச் சொல்லாடாளாய் நின்ற அந்தநங்கைக்குக் கண்ணகி தான் சொல்லாடு மென்றுமாம். | - அங்ஙனம் கேட்டு வந்து கண்ணகிக்குத் தன் வாக்காற் சொல்லாளாய்க் குரவை முடித்து நீராடி வந்து நின்ற ஆயர் மகளிர்க்கு மறையிற் கூறி அவரோடு தானும் விம்முற்று நின்றவள் அவளழகும் இளமையும் தனிமையுங் கண்டு ஆற்ருளாய் நெஞ்சழிந்து சொல்ல நாவெழாது தான் நிற்கு மென்க. இனி வாக்காற் சொல்லாதவள் தன் மெய்ப்பாட்டால் சொல்லு மென்றுமாம். இனி அங்ஙனம் நின்ருளாகிய அந் நங்கைக்குக் கண்ணகிதான் சொல்லாடு மெனினும் அமையும். |

அ-25

# பின்னிணைப்பு-II

## பாடபேதம்

| அடியார் | அரும் |
|---|---|
| 1. நிலைஇய (1:17) -நிலைபெற்றன | -நிலீஇயர் - நிற்பதாக. |
| 2. நன்னுதான் (2:55) | -நன்னுதல் - முன்னிலைப் பெயர். |
| 3. பேரியற் கிழத்தி (2:84) -கோவலன் மாதா | -பேரிற் கிழத்தி - கோவலன் மாதா. |
| 4. அறப்பரி சாரமும் (2:85) -துறவறத்திற்குச் செய்யும் பரிசாரம். | -அறப்பரிகாரம் - துறந்தாரைப் பூசித்து அறத்தைப் பரிகரித்தல். |
| 5. வார நிலத்தைக் கேடின்று வளர்த்து (3:67) | -வார நிலத்தைக் கேடின்று பார்த்து. |
| 6. வழாமை (3:160) | -வழாஅது. |
| 7. சேக்கைப் பள்ளி (4:28) -சேரும் சயனம் | -சேர்க்கைப் பள்ளி - சேருமிடம். |
| 8. சிறுவியர் பிரிய (4:52) -வியர்வு நீங்க | -வியர்ப்பு இரிய - கூட்டமில்லாமையின் வியர்வு நீங்க. |
| 9. செம்பு செய்குநரும் (5:28) -செம்பு கொட்டிகள் | -செம்பு செய்ஞ்ஞர் - செம்பு கொட்டுவார். |
| 10. பொன்செய் கொல்லர் (5:31) -உருக்குத் தட்டார் | -பொன்செய் புலவர் - உருக்குத் தட்டார்; அரிப் பாருமாம். |
| 11. அலவற் பெண்டிர் (5:129) -பொய்யொழுக்கத்தின் மறைந்து நின்று ஒழுகும் அலவற் பெண்டிர். | -அலவைப் பெண்டிர் -மறைந்து அவமே யொழுகும் அலவைப் பெண்டிர். |
| 12. குயிற்றி (5:147) -அழுத்தி | -குயிற்றிய - செய்த. |
| 13. விருந்தாட் டயரும் (6:4) | -விருந்தாட்டமரும் - விழாக் கொண்டாடிப் போதும். |
| 14. மன்னன் (6:9) -சோழ மன்னன் | -அண்ணல் - சோழன். |

| | அடியார் | அரும் |
|---|---|---|
| 15. | குறங்கு செறிதிரள் (6:86) | -குறங்கு செறியணி - கவான் செறி யாபரணம். |
| 16. | பூண் ஞான் புனைவினை (6:99) -பூணப்படும் ஞாண் | -நுழைவினை நுண்ஞாண் - நுண்ணிய தொழிலை யுடைய ஞாண். |
| 17. | மொழிபெயர் தேத்தோர் (6:143) | -மொழிபெயர் தேஎத்தோர் - பரதேசிகள். |
| 18. | ஆடல் மகளே யாதலின் (8:109) | -ஆடல் மகளை யாதலின் - ஐ- இடைச்சொல். |
| 19. | மேலோர் நாள் (9:4) | -மேலைநாள் - முன்னோர் நாள். |
| 20. | பறித்தவள் (9:19) | -பறித்தாள் - பறித்து. |
| 21. | திரியும் (10:6) | -திரிதரும். |
| 22. | புலவூண் (10:15) -புலாலாகிய ஊன்; புலாலோடே உண்ணும் ஊனுமாம். | -புலையூன் - மச்ச மாங்கிசம். |
| 23. | போதா (10:117) -பெருநாரை | -புதா - பெருநாரை. |
| 24. | படர்குவ மெனினே (10:67) | -படர்குவ மாயின். |
| 25. | ஆவுதி நறும்புகை (10:144) | -வானவ ருணா - சோற்றுவி; அவியிடுகிற ஆவி. |
| 26. | அருக ரறவன் (10:202) -அருகர்க்கு அறத்தைக் கூறுவோன் அருகன்-இருடிகள். | -அருகனறவோர் - இருடிகள். |
| 27. | யாழின் ளெகுதி (புகார்க்.கட்:13) | -யாழின் பகுதி. |
| 28. | இடநிலைப் பாலை (புகார்க்.கட்:14) | -இடைநிலைப் பாலை. |
| 29. | துணைமலர்த் தாளிணை (11:137) | -துணைமலர்த் தாமரை - திருவடி. |
| 30. | இயங்குநர்த் தாங்கும் (11:146) -போவார் போக்கைத் தடுக்கும். | -இயங்குநர்த் தடுக்கும் - வழிப் போவாரைப் போக்கு விலக்கும். |
| 31. | நாறு நரந்தை (12:[2]) | -நாறு நரந்தம் - நாரத்து. |
| 32. | உண்குவாய் (12:[21]) | -உண்குவை - உண்பாயாக. |

| | |
|---|---|
| 33. பெருமனைக் கிழத்தி (13:57) | -பெருமனைக் கிழாள் - கோவலன் மாதா. |
| 34. அளைஇ (13:113) | -அளவி - கலந்து. |
| 35. விளங்கிய (13:163) | -விலங்கிய. |
| 36. பனிப்ப ஏந்துவாள்(14:5)-நடுங்க விதிர்த்தேந்திய வாள் | -பனித்தவாள் - பனித்தற்குக் காரணமான வாள்- |
| 37. இறந்தோர் (14:44) | -இறந்தனர் - முற்காலத்திற் கழிந்தார். |
| 38. மலயகச் செழுஞ்சேறு (14:81) | -மலயச் செழுஞ்சேறு - சந்தனக் குழம்பு. |
| 39. மயங்கிய (14:178) -மயங்கி யிருக்கின்ற | -மயங்கி - மயங்கப் பட்டு. |
| 40. பூவிற் புனைந (14:177) -பூவாற் புனையப்படும் மாலை விசேடங்கள். | -பூவிற் புனைஞ - மாலை விகற்பங்கள். |
| 41. கூஉய் (15:63) | -கூவி - அழைத்து. |
| 42. திருவிலிட்டு (15:156) -திருவிற்போல ஒளிவிட்டு | -திருவில் விட்டு - நல்ல ஒளியை விட்டு. |
| 43. புகலிட மில்லை (16:189) -புகன்று முடியாது; ஓடி ஒளிக்கலா மிடமில்லை யென்றுமாம். | -பரவிட மில்லை - புகழ்ந்து முடிய வொண்ணுதென்க. |
| 44. தொழுனைத் துறைவன் (17:[22]) | -தொழுனைக் கணவன். |
| 45. எங்கணைஅ (18:33) -எவ்விடத்தாய் | -எங்கணுய் - எங்குற்ருய். |
| 46. காணிகா (18:46) -காண்பாயாக | -காணிகா காணிகா - இக என்பது ஈறு திரிந்தது. இரண்டும் விரைவின்கண் வந்தன. |
| 47. கேட்டைக்க (18:49) -கேட்பீராக | -கேட்டைக்க கேட்டைக்க - கேட்க கேட்க. இரட்டித்தார் எல்லாரும் கேட்டற்கு. |
| 48. மன்றப் பொதியிலில் வெள்ளியம்பலம் (பதி:10-41) மன்றப் பொதியில்களில் இறைவன் உறைகின்ற வெள்ளியம்பலம். | -மன்றப் பொதியில் வெள்ளியம்பலம் - மன்றத்தின்கட் பொதியிலாகிய வெள்ளியம்பலம். |
| 49. காவியங் கண்ணல் (4:46) -[கொழுநர் மார்பிடத்துக்] காவிபோலும் கண்மலர்களைப் பொருந்த வைத்து. | -காவியங் கண்ணுர். |

| | அடியார் | அரும் |
|---|---|---|
| 50. | சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென (5:64) -சித்திரை மாதத்துச் சித்திரை நாளிலே நிறைமதி சேர்ந்ததாக. | -சித்திரைச் சித்திரைத் திங்கள் சிறந்தென - சித்திரை மாதத்துச் சித்திரைநாள் சிறந்ததென்கையால்; சித்திரா பூரணை யென்க. |
| 51. | வரிகோலம் (5:226)-எழுதிய தொய்யில் வினைத்தொகை. | -வரிக்கோலம் - தொய்யில். |
| 52. | நறுந்தா துறைப்ப (5:235) -தாதுகள் மதுவையூறிப் பிலிற்ற. | -நறுந்தா தெறிப்ப -தாது ஒளிவிட. |
